PP_200001

"வருகிறவர் ... கொஞ்சக் காலத்தில் வருவார்"

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 2000 - ஆம் ஆண்டைக் காண கர்த்தர் உதவி செய்தார். கர்த்தருடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக.

2000 -ஆம் வருஷம் என்று சொல்லும்போதே, அது உலகிலுள்ள எல்லா ஜனங்களுக்கும், முக்கியமாகக் கிறிஸ்தவர்களுக்குப் பரபரப்பூட்டக்கூடியதாயிருக்கிறது. ஏனென்றால் 2000 - ஆம் வருஷத்தில் இந்தப் பூமியில் பல நாசங்கள் சம்பவிக்குமென்றும் இயேசுகிறிஸ்துவாகிய மீட்பர் தம் பரிசுத்தவான்களைச் சேர்க்க வானில் வெளிப்படுவாரென்றும் பலரும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் 2000 -ஆம் வருஷம் பிறந்தும் இயேசுகிறிஸ்து இன்னும் வரவில்லையே என்று குழப்பம் அடைந்தவர்களாய், தேவபிள்ளைகளில் சிலர் அவிசுவாசமான வார்த்தைகளைப் பேசிவருகிறார்கள். வேதாகமத்தில் சொல்லப்பட்டபடியே இந்தக் கடைசி நாட்களில் உலகத்தில் பரியாசம் பண்ணுகிற ஒரு கூட்டத்தார் தங்கள் சுயஇச்சைகளின்படி நடந்து, "அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே ?" (II பேதுரு 3 : 3, 4) என்று பரியாசம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் பிரியமானவர்களே ! சத்திய வேதத்திலுள்ள தீர்க்கதரிசன வார்த்தைகள் யாவும் நிறைவேறி வருகின்றன. ஆகாயத்திலும் பூமியிலும், வேதாகமத்தில் சொல்லப்பட்ட காரியங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. நாம் கொடிய காலத்தில் வந்திருக்கிறோம். அழிவுக்குரிய சம்பவங்களை நாம் கண்கூடாகக் காண்கிறோம்; கேள்விப்படுகிறோம்; செய்தித்தாள்களின் மூலமாக அறிகிறோம். கடைசி நாட்களில் மனுஷர் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள் என்று வேதாகமத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகள் நிறைவேறி வருகின்றன (II தீமோ. 3 : 1 - 5). கொலைகளும் கொள்ளைகளும் களவுகளும் வெறியாட்டங்களும் கலவரங்களும் சூறையாடல்களும் தொடர்ந்து நடைபெற்று, அழிவுகள் சம்பவித்துவருகின்றன. பல தேசங்களில், உள்நாட்டுக் கலவரங்களும், நாடுகளுக்கிடையே யுத்தங்களும் நடந்துவருகின்றன. பூமியின் பல பகுதிகளிலும் பூமியதிர்ச்சிகளும், பஞ்சங்களும், வெள்ளச்சேதங்களும், புயற்சேதங்களும், தீ விபத்துக்களும் தொடர்ந்து உண்டாகி இலட்சக்கணக்கான மனிதர் மரித்துப் போகிறார்கள் ; மிருக ஜீவன்களும் மாண்டுபோகின்றன.

"ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சி களும் பல இடங்களில் உண்டாகும். இவைக ளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்" (மத். 24 : 7, 8) என்றும், "யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள். ... ஆனாலும் முடிவு உடனே வராது" (வச. 6) என்றும் கர்த்தராகிய இயேசுதாமே இந்த உலகத்தில் இருந்தபோது சொல்லியிருக்கிறார்.

நிச்சயமாகவே இந்தப் பூமிக்கு அழிவு சீக்கிரத்தில் சம்பவிக்கப்போகிறது. அது அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கிறதென்று சத்திய வேதம் சொல்லுகிறது (II பேதுரு 3 : 7). அதற்கு முன் தம் பரிசுத்தவான்களைத் தம்மிடத்தில் சேர்க்கும் படியாக மின்னல் பிரகாசிக்கிறது போல இயேசு கிறிஸ்து சீக்கிரமாக வானில் வெளிப்படுவார் (மத். 24 : 27).

கர்த்தராகிய இயேசுவின் வருகையைக் குறித்துப் பரியாசம் பண்ணிக்கொண்டிருக்கிற கூட்டத்தாரைப் போல அவிசுவாசமான பரியாச வார்த்தைகளைப் பேசாதபடிக்கும், அவர் வரத் தாமதிக்கிறார் என்று எண்ணிக்கொண்டு நம் சொந்த விருப்பத்தின்படி நடவாதபடிக்கும் நாம் எச்சரிக்கையாய் இருப்போமாக.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரத் தாமதிப் பதின் காரணங்கள் யாவை? அதைப் பற்றி சத்திய வேதாகமம் மூன்று காரணங்களைச் சொல்லுகிறது.

1. "கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல் ; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (II பேதுரு 3 : 9).

ஒரு தகப்பன்தான் தன் பிள்ளைகளின் அருமையை, விலைமதிப்பை அறிய முடியும். மனுஷ ஜாதியான எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற பரம பிதாவானவர் (அப். 17 : 25), பூமியிலுள்ள சகல ஆத்துமாக்களின் விலைமதிப்பையும் அறிந்திருக்கிறார். தேவன் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல் துன்மார்க்கன் தன் வழியை விட்டு திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறார் (எசே. 33 : 11). எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார் (I தீமோ. 2 : 4). இந்த உலகத்தில் மனுஷராகப் பிறந்த ஒவ்வொருவரும் பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், மரணத்திலிருந்தும், பிசாசின்

பிடியிலிருந்தும் விடுதலையாக்கப்பட்டு, நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படியாகக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார்; ஜீவனைக் கொடுத்தார் (எபி. 2 : 9 ; யோவான் 3 : 16). இதுதான் மெய்யான தேவனின் அன்பாகும். எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படும்படியாக இயேசுகிறிஸ்து தாம் வருவதற்குத் தாமதித்துக்கொண்டிருக்கிறார்.

இந்தப் புதிய ஆண்டிலே தேவ அன்பினால் நிறைந்து, ஆத்தும பாரம் உடையவர்களாய், பிசாசினால் கட்டப்பட்டிருக்கிற எல்லா ஆத்துமாக் களுடைய இரட்சிப்பிற்காகவும் நாம் விசுவாசத்துடன் போராடி ஜெபித்து, எல்லா மனுஷரையும் பூரண இரட்சிப்புக்கு நேரே வழிநடத்தப் பிரயாசப்படுவோமாக. அப்படியென்றால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சீக்கிரம் வருவார்.

2. "பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்" (யாக். 5 : 7).

புதிய ஏற்பாட்டுச் சபையானது பயிரிடப்படுகிற ஒரு நல்ல தோட்டமாயிருக்கிறது. கர்த்த ராகிய இயேசுகிறிஸ்து சபையாகிய தோட்டத்தில் பயிரிடுகிறவராயிருக்கிறார். சபையாகிய தோட்டத்தில் நாட்டப்பட்ட நல்ல பயிராயிருக்கிற நாமெல்லாரும் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்குப் பரிசுத்தஆவியின் முன்மாரியும், நாம் பூரணமான பயிராகி நற்பலனைக் கொடுப்பதற்குப் பரிசுத்தஆவியின் பின்மாரியும் நம் மீது பொழிந்தருளப்பட வேண்டும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து புதிய ஏற்பாட்டுச் சபை பூரணப்பட்டு, புதிய எருசலேமாக, நற்பலனாக மாறும்படியாக எதிர்பார்த்து நீடிய பொறுமையுள்ளவராயிருந்து தாம் வருவதற்குத் தாமதிக்கிறார்.

பின்மாரி காலத்து மழைக்காக நாம் வேண்டிக்கொள்ள வேண்டும் (சக. 10 : 1). இந்த நாட்களில் பரிசுத்தஆவியானவர் பின்மாரியாய் சபையில் வல்லமையாய்க் கிரியை செய்வாராயின் சபையில் சுத்திகரிப்பும் எழுப்புதலும் உண்டாகி, அது பூரணமாக்கப்பட்ட மணவாட்டி சபையாய் மாறி, கர்த்தருடைய வருகைக்காக ஆவலோடு காத்திருக்கும் அனுபவத்தை அடையும். இந்தப் புதிய வருடத்தின் ஆரம்பத்தில்தானே நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தஆவியின் வல்லமையினால் உள்ளான மனுஷனில் புதிதாக்கப்பட்டு, கர்த்தராகிய இயேசுவின் திவ்ய சுபாவத்தில் பூரணமடைவோமாக. அப்படியென்றால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சீக்கிரம் வருவார்.

3. "கர்த்தர் சீயோனைக் கட்டி, தமது மகிமையில் வெளிப்படுவார்" (சங். 102 : 15).

சீயோனின் பூரணத்திற்கு ஒரு எண்ணிக்கை உண்டு. ஆட்டுக்குட்டியானவரும் அவரோடே கூட அவருடைய நாமமும் பிதாவின் நாமமும் (Amplified Bible) தங்கள் நெற்றிகளில் தரித்த 1,44,000 பேரும் சீயோனில் நிற்பதாக திவ்ய வாசகனாகிய யோவான் பத்மு தீவில் தரிசனம் கண்டார் (வெளி. 14 : 1). சீயோனுக்கென்று முன்குறிக்கப்பட்டவர்கள் இந்த மேன்மையான பிரதிஷ்டையுள்ள அப்போஸ்தல ஊழியத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுத்தவர்களாய், சீயோனாய் பிதாவின் சுபாவத்தில் பூரணப்பட வேண்டும். 1,44,000 பேர் என்ற அவர்களின் எண்ணிக்கையும் நிறைவாக வேண்டும். அந்த எண்ணிக்கை இன்னும் பூரணமாகாதபடியினால் இயேசுகிறிஸ்து வர தாமதித்துக் கொண்டிருக்கிறார்.

சீயோனில் பிறந்தவர்கள் (சங். 87 : 5), கனமான ஊழியத்திற்கென்று பிரதிஷ்டையுள்ளவர் களாய்த் தங்களை ஒப்புக்கொடுக்கவும், பிதாவின் சுபாவமுடையவர்களாய் ஊழியஞ் செய்து பூரணப்படவும், சீயோனின் எண்ணிக்கை பூரணமாகவும் நாம் ஜெபிப்போமாக. சகோதரனே, சகோதரியே, ஒருவேளை இதை வாசிக்கிற நீ சீயோனுக்கென்று முன்குறிக்கப்பட்டிருந்தால் உன் நிமித்தமாக ஆண் டவராகிய இயேசுவின் வருகை தாமதிக்க வேண்டாம். சீயோனின் 1, 44, 000 பேரில் நீ ஒருவராக மாற, இந்தக் கனமான ஊழியத்திற்கு இந்தப் புதிய ஆண்டில் உன்னை அர்ப்பணித்து, பிதாவின் பூரண சற்குணத்தை அடைந்துகொள்ளும்படி உன் ஜீவியத்தை அவருக்கு ஒப்புக்கொடுப்பாயாக. சீயோனின் எண்ணிக்கை பூரணமானவுடன், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படுவார்.

நாம், 'கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வர தாமதிக்கிறார்' என்ற சிந்தையுடன் நம் ஆவிக்குரிய ஜீவி யத்தைக் குறித்துக் கவலையீனமாய் இருப்போமானால், நாளடைவில் அந்தச் சிந்தை நம்மைப் பொல்லாத வர்களாய் மாற்றிவிடும். "அந்த ஊழியக்காரனோ பொல்லாதவனாயிருந்து: என் ஆண்டவன் வர நாள் செல்லும் என்று தன் உள்ளத்திலே சொல்லிக் கொண்டு, தன் உடன்வேலைக்காரரை அடிக்கத் தொடங்கி, வெறியரோடே புசிக்கவும் குடிக்கவும் தலைப்பட்டால், அந்த ஊழியக்காரன் நினையாத நாளிலும், அறியாத நாழிகையிலும், அவனுடைய எஜமான் வந்து, அவனைக் கடினமாய்த் தண்டித்து, மாயக்காரரோடே அவனுக்குப் பங்கை நியமிப்பான்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்" (மத். 24 : 48 - 51). நாம் இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நான சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, பரிசுத்தஆவியின் அபிஷேகம் பெற்றிருந்தாலும், 'கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வர தாமதிக்கிறார்' என்ற சிந்தை நம்மைத் தேவ சித்தம் செய்யக் கூடாதபடிக்குத் தடைபண்ணி, நம் சொந்த விருப்பங்களை நிறைவேற்றவும், நம் சுய சித்தம் செய்யவும் வழி நடத்தி, முடிவில் நம்மைப் பின்மாற்றத்திற்கு இழுத்துச் செல்லும். ஆகவே இந்தப் புதிய வருடத்தில் கர்த்தரின் வருகையின் நம்பிக்கையைப் புதுப்பித்துக்கொண்டு, அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு (I யோவான் 3 : 3), அவருக்கொப்பாய் மாறுவோமாக.

தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு சிறிய கூட்டத் தார் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களு மாய்ச் சமாதானத்தோடே கர்த்தருடைய வருகையில் காணப்படும்படியாய்த் தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டுவருகிறார்கள் (II பேதுரு 3 : 14).

கர்த்தருக்குள் பிரியமானவர்களே! பரிசுத்த மும் சமாதானமும் நாம் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ந்து கர்த்தரைச் சந்திப்பதற்கு மிகவும் முக்கியமான இரண்டு அம்சங்களாய் இருக்கின்றன.

நமக்கு இரண்டு கண்கள் எவ்வளவு முக்கியமோ அதேவிதமாய் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் இவை இரண்டும் அவ்வளவு முக்கியமானவையாய் இருக்கின்றன. யாவரோடும் சமாதானமாய் இருந்து, பரிசுத்தமுள்ளவர்களாயிருப்பவர்கள் மட்டுமே கர்த்தரைத் தரிசிக்க முடியும் என திருவசனம் நம்மை எச்சரிக்கிறது (எபி. 12 : 14).

இந்தப் புதிய வருஷத்திலே புதிய தீர் மானம் செய்து நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தில் கறையற்றவர்களும் பிழையில்லாதவர் களுமாய் ஜீவிக்க நாம் பிரயாசப்படுவோமாக. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வருகிற பெரிய குற்றங்களைக் கறைகளென்றும் சிறிய தவறுகளைப் பிழைகளென்றும் நாம் வகைப் படுத்தலாம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலும், அவருடைய வசனத்தினாலும், பரிசுத்தஆவியின் புதிதாக்குதலினாலும் நம் முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தில் சுத்திகரிக்கப் பட்டு, கறையற்ற பிழையற்ற பரிசுத்தமும் மகிமை யுமுள்ள சபையாக நாம் மாற்றப்படுவோமாக.

இந்தப் புதிய ஆண்டிலே தேவனோடுள்ள சமாதானத்தையும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அவயவங்களாய் இருக்கிற ஊழியரோ டும், விசுவாசிகள் அனைவரோடும் உள்ள சமாதானத்தையும், மற்றெல்லா மனுஷரோடுமுள்ள சமாதானத்தையும் நாம் பாதுகாத்து, சமாதானத்தில் பூரணமடைவோமாக. சமாதானத்தின் தேவன் தாமே நம்மை முற்றிலும் பரிசுத்தமாக்கும்படியாக நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை இப்புதிய வருஷத்திலே அவருடைய கரத்திலே ஒப்படைப்போமாக.

பிரியமானவர்களே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகத் தங்களைப் பரிசுத்தத் திலும் சமாதானத்திலும் பாதுகாத்து, மகிமையுள்ள மணவாட்டி சபையாக ஆயத்தமாகிற கூட்டத்தா ரோடு நாம் இணைந்துகொள்வோமாக. “இதோ, சீக்கிரமாய் வருகிறேன்” என்று வாக்குரைத்த நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வாக்குத் தத்தத்தை விசுவாசித்து, பரிசுத்தத்தோடும், சமாதானத் தோடும் அவர் சந்நிதியில் காணப்படும்படியாக நாம் ஜாக்கிரதையாயிருப்போமாக. நினையாத நேரத் திலே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரப்போகிறபடியால் நாம் எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருந்து (லூக்கா 21 : 36), “ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்” என்று கூறிக்கொண்டே ஆவலுடன் அவர் வருகைக்காகக் காத்திருப்போமாக.

யேஹோவாயீரே

வருடம் இரண்டாயிரத்துக்குள் பிரவேசிப்பது என்பது தேவனுடைய பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, உலகிலுள்ள எல்லா மனிதருக்குமே பரவசமூட்டுவதாயிருக்கிறது. ஏனெனில் ஒரு நூற்றாண்டு அல்ல, ஒரு ஆயிரமாண்டு கூட முடிவுறப் போகிறது என்பது மனுஷருக்கு ஒருவித நூதன உணர்வை அளிப்பதே. எனினும், “உமது பார் வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள்போலவும் இராச்சாமம்போலவும் இருக்கிறது” என்று மோசே கூறுவது போல (சங். 90 : 4), தேவனுடைய பார்வையில் இவை ஒன்றுமில்லா தவை போல இருக்கிறது. ஏனெனில் அவர் பர்வ தங்கள் தோன்றுமுன்னும் பூமியும் உலகமும் உருவாகுமுன்னும் அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறார். இந்தத் தேவனைப் பற்றி, மோசே, “ஆண்டவரே, தேவரீர் தலைமுறை தலை முறையாக எங்களுக்கு அடைக்கலமானவர்” (வச. 1) என்றும், சங்கீதக்காரன், “இந்தத் தேவன் என்றென் றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்” (சங். 48 : 14) என்றும் கூறுகின்றனர். ஆம்! இந்தத் தேவன் நம்முடைய தேவன் என்பதே நம்முடைய தைரியம். அது நமக்கு எவ்வளவு பெரிய ஆறுதல்!

புது வருடம் எப்படியிருக்குமோ என்பது எல்லா உள்ளங்களிலும் ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் எழும்பும் எண்ணமாயிருப்பினும், 2000 - ஆம் வருடம் எல்லா உள்ளங்களிலும் விசேஷமாகத் தேவபிள்ளைகளின் உள்ளங்களில் கவலையுடன் கூடிய கேள்வியாக எழும்புகிறது. தேவனுடைய ஜனங்களுக்கு இனிவரும் காலம் கொடிதானதாயிருக்கிறது. தெரிந்துகொள்ளப்பட்ட வர்களையுங்கூட வஞ்சிக்கும்படியாகப் பிசாசு தந்திரமாகக் கிரியை செய்யும் காலங்களில் நாம் வந்திருக்கிறோம். பலவித இன்னல்களையும் இடறல் களையும் நாம் மேற்கொண்டு முன்னே செல்ல வேண்டியதாயிருக்கும். எனினும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்முடனே இருந்து நம்மை நடத்துவார். எந்தப் பிரச்சினைகள், போராட்டங்கள், தனிமைகளை நாம் சந்திக்க நேரிடினும் நம் பாதையை அறிந்தவர், நமக்கு முன் சென்று நம்மை நடத்துவார். கடந்த காலங்களில் நாம் அவரைப் பலவிதங்களில் ருசித்திருக்கிறோம். பலவித பாதைகள் நம் தேவனை நாம் பல்வேறு விதங்களில் ருசிக்க நமக்கு உதவி செய்கின்றன.

சென்ற வருடங்களில் எல்லாம் தேவன் நம்மைப் பலவித பாதைகளின் வழியாக நடத்தி வந்தார்.

“இன்று போனதோர் பாதை நாளையுமல்ல அவர் நாளை நடத்தும் வழி நாளை சென்றல்ல என்றும் ஒரே வதில்லை நம்மில் பூரணம் காணும் வரை Xய்வதுமில்லை”

என்று ஒரு பாட்டுக்காரன் பாடியிருப்பது போல, அவர் நடத்துதலில் அதிசயமுண்டு. அவர் நம்மை நடத்திய ஒவ்வொரு பாதையிலும் அவரைப் பலவிதங்களில் ருசிபார்க்க தேவன் நமக்கு அருள் செய்தார் என்பதில் சந்தேகமேயில்லை.

தேவனைப் பலவிதங்களில் பழைய ஏற் பாட்டுப் பரிசுத்தவான்களுங்கூட ருசித்தறிந்திருக் கிறார்கள். விசேஷமாக ஆபிரகாமுடைய ஜீவியத் தில் அவன் தேவனை முதலாவதாக மகிமையின் தேவனாயும் (அப்.7 : 2), பின்பு சர்வ வல்லமை யுள்ள தேவனாயும் (ஆதி. 17 : 1), சதாகாலமுமுள்ள தேவனாயும் (ஆதி. 21 : 33) ருசித்தறிந்தான். அவன் இன்னும் ஒரு புதிய விதத்தில் தேவனை அனுபவித்தறியும்படியாக தேவன் அவனை ஒரு விநோதமான பாதையின் வழியாக நடத்தச் சித்தங்கொண்டார். அந்தப் பாதையில் அவன் தேவனை "யேகோவாயீரே"யாக அனுபவித்தான். "யேகோவாயீரே" என்பதன் அர்த்தம், "கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும்" என்பதா கும். பலவிதமான கலக்கங்களுடன், இப்புதிய வருடத்தில் என்ன சம்பவிக்குமோ என்ற பயத்துடன், ஒருமுறைகூட கர்த்தருக்குள் பல தீர்மானங்கள், பிரதிஷ்டைகளுடன் ஒப்புவித்திருக்கும் உனக்கு அவர், "யேகோவாயீரே"யாக வெளிப்படுவார். உன் ஆவிக்குரிய, சரீரப்பிரகாரமான எல்லாம் கர்த்தருடைய பர்வதத்தில் பார்த்துக்கொள்ளப்படும். உன் பிரச்சினைகள், தேவைகள் யாவும் "கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும்."

ஆபிரகாம் தேவனைச் சதாகாலமுமுள்ள தேவனாக அனுபவித்தபின், அவர் அவனைச் சோதித்தார் (ஆதி. 21 : 33 ; 22 : 1). ஈசாக்கு ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தின் குமாரன். எத்தனையோ வருடங் கள் தேவனுடைய வாக்குத்தத்தத்தை நம்பிக் காத்திருந்து, அவ்வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கு முற்றும் விபரீதமான சூழ்நிலைகள் மத்தியிலும் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட குமாரன் ஈசாக்கு ஆவான். ஆயினும் ஒரு நாள் தேவன் ஆபிரகாமிடம், "உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்" (ஆதி. 22 : 2). ஆபிரகாமுடைய உள்ளத்தை நன்றாய் அறிந்திருந்த தேவன், 'அவன் என் நேச குமாரன், அவன் எனக்கு ஏக சுதன் என்பதை நீர் அறியீரோ?' என்று ஆபிரகாம் கேள்வி கேட்கக் கூடாதவண்ணம், அவனை நோக்கி, "உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை ... தகனபலியாகப் பலியிடு" என்று அவன் குமாரனைப் பற்றி எல்லா அடைமொழிகளையும் சேர்த்துச் சொல்லிவிட்டார். அதற்கு அடுத்த வசனத்தில், "ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, ... புறப்பட்டுப்போனான்" என்று நாம் வாசிப்பது நமக்கு ஆச்சரியத்தைத் தருகிறதல்லவோ! அன்று இரவு முழுவதும் ஆபிரகாமுடைய இருதயத்தில் எவ்விதமான போராட்டங்கள், கலக்கங்கள் எழுந்திருக்கக் கூடும்! 'ஆபிரகாமே! உன் நேசகுமாரன் மேல் உனக்கு எவ்வளவு உரிமையிருக்கிறதோ, அவ்வளவு சம உரிமை சாராளுக்கும் உண்டு என்பதை மறந்துவிடாதே' என்று அவன் உள்ளம் அவனிடம் பேசியிருக்காதோ! 'நீ போய் பலிசலுத்தி வந்தபின் அவளுக்கு என்ன பதில் சொல்
வாய்? நீ தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டியது எல்லாம் உண்மைதான். ஆனால் இதுவரை கீழ்ப்படிந்தது போல அல்ல; இது முற்றிலும் வேறான சூழ்நிலை! ஆபிரகாமே! நீ என்ன செய்ய வேண்டும் என்பதை நன்றாய் யோசித்து முடிவுக்கு வா!' என்று அவனுக்குள் போராட்டங்கள் எழுந்திருக்கக்கூடும். தூங்கிக்கொண்டிருந்த தன் வாக்குத்தத்தத்தின் குமாரனை, ஏகசுதனைப் பார்த்துப் பார்த்து அவன் தன்னை அடக்கக்கூடாமல் அழுதிருந்திருக்கக் கூடும்! ஆனால் தேவன் பேசியபோதெல்லாம் கீழ்ப்படிந்து பழகின ஆபிரகாம் இந்த விசையும் கீழ்ப்படிவதற்குத் தயங்கவில்லை. தேவ சத்தத்தைக் கேட்டுப் பழகியிருந்த அவன், அது தேவசத்தமா என்று சந்தேகிக்கவேயில்லை; அது தேவசத்தம் தானா என்று அடையாளத்தின் மூலம் உறுதிப்படுத்தவும் விரும்பவில்லை. "ஆபிரகாமே" என்று தன்னை அழைத்தவரிடம், அவன், "இதோ அடியேன்" என்று சொல்லிவிட்டான்.

தேவனுடைய பிள்ளையே! இவ்வருடத்தில் உனக்கு வெளிப்படும் தேவ சத்தம், நீ கீழ்ப்படி வதற்கு உனக்குக் கடினமாகத் தோன்றலாம். ஆனால் தேவனுக்கு உடனடியாகக் கீழ்ப்படிந்த ஆபிரகாமைப் போல நீ தேவனை விசுவாசித்து அடியெடுத்து வைப்பாயாக. கர்த்தர் ஆபிரகாமைச் சோதித்தார் என்று சொல்வதைப் பார்க்கிலும் கர்த்தர் ஆபிரகாமின் கீழ்ப்படிதலையும், தேவ பயத்தையும், அவன் தேவன்மேல் வைத்திருந்த அன்பையும் நிரூபிக்க விரும்பினார் என்றே சொல்லலாம். தேவனில் அன்புகூருகிறவர்களுக்கு அவருடைய கட்டளைகள் பாரமானவைகள் அல்ல. மேலும் தேவனில் அன்புகூருகிறவர்கள் தங்களுக்குச் சம்பவிப்பதெல்லாம் நன்மைக்கே என்று அறிவார்கள். ஆபிரகாமைப் போல் நிபந்தனையில்லாமல், தேவனைச் சந்தேகிக்காமல், தேவன் உனக்குக் கொடுத்திருக்கும் வாக்குத்தத் தங்கள் நிறைவேறுவதற்கு முற்றும் விபரீதமான சந்தர்ப்பங்களிலும் முற்றிலுமாகத் தேவனுக்குக் கீழ்ப்படியத் தீர்மானித்துவிடு. "ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும்" என்று சொன்ன தேவன் இப்போது அதை மறந்து விட்டாரோ என்று கூட ஆபிரகாம் சிந்திக்க நியாயமுண்டு! நீயுங்கூட, 'தேவன் இப்போது சொல்லுகிற இந்தக் காரியத்துக்கு நான் கீழ்ப்படிந்தால், இதில் ஏதும் நன்மை உண்டாக நியாயமில்லையே; அதற்கு மாறாக, என் எதிர்காலத்தில் எனக்குக் கஷ்டங் களும் நஷ்டங்களுந்தானே உண்டாகும்' என்று சிந்திக்கக் கூடிய சூழ்நிலைகள் இருப்பினும், நீ தேவனுக்குக் கீழ்ப்படிய மாத்திரம் தீர்மானித்துவிடு.

தேவனுக்குக் கீழ்ப்படியத் தீர்மானிப்பது மட்டுமல்ல, தேவன் சொல்லுகிறபடியே செய்ய முழுமையானதொரு கீழ்ப்படிதலைத் தேவன் உன்னிடம் எதிர்பார்க்கிறார். "மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு" என்பது அவனுக்குச் சொல்லப்பட்ட தேவ கட்டளை. அந்த மலையை நோக்கி அவன் தன் குமாரனுடன் மூன்று நாட்கள் பிரயாணம் செய்து, மூன்றாம் நாளிலும் அந்த இடத்தைத் தூரத்திலேதான் கண்டான். எப்படியும் என் ஒரே பேறான நேச குமாரனை நான் பலி செலுத்த வேண்டும்! இந்த மனப்போராட்டங்கள், கஷ்டங்கள் மத்தியில் என் மனதின் அங்கலாய்ப்பைப் பகிர்ந்துகொள்ளவும் யாருமில்லாத சூழ்நிலை! என்னோடு பிரயாணம் செய்பவர்கள் - பலிப்பொரு ளான நேச குமாரனும்; அவனைத் தவிர வேலைக் காரருமே. இந்த மூன்று நாட்கள் இப்படிப் பிரயாணம் செய்வது இப்படியொரு காரியத்தைச் செய்யும்படியாகத் தானே! ஏன்? அருகாமையிலுள்ள இடத்தில் நான் பலிசெலுத்தித் திரும்பினால்தான் என்ன? தேவனுக்கு வேண்டியதெல்லாம் என் குமாரனைப் பலி செலுத்த வேண்டும் என்பது தானே! போன்ற எண்ணங்கள் அவன் மனதில் தோன்றி மறைந்திருக்கக்கூடும். ஆபிரகாம் தேவன் குறித்திருந்த அந்த மலைக்குப்

போகாமல் தன் சொந்த விருப்பத்தின்படி, தன் சொந்த வழிகளின் படி அதைச் செய்திருந்தால் படுதோல்வி அடைந்தி ருப்பான்! இங்கேயும் அவனுடைய பூரண கீழ்ப்படிதலை நாம் பார்க்கிறோம்.

வேலைக்காரரையும் ஒரு குறிப்பிட்ட இடம் வரை கூட்டிக்கொண்டு போனவன், தன் குமாரனை மட்டும் கூட்டிக்கொண்டு பலி செலுத்தும் இடம் வரைக்கும் விரைகிறான். அப்போதுதான் அவனை இன்னும் அதிகமாகச் சோதிக்கும் வகையில் நேசகுமாரனாகிய ஈசாக்கு, (இம்மூன்று நாள் பிரயாணத்திலும் அதுவரை அவன் ஏதாயினும் தகப்பனிடம் பேசியதாக நாம் வாசிக்கிறதில்லை) "என் தகப்பனே" என்று கூப்பிட்டு, "இதோ, நெருப்பும் கட்டையும் இருக்கிறது, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே" என்று கேட்கிறான். இந்தக் கேள்வியினால், ஏற்கனவே நொறுங்கியிருந்த அந்தத் தகப்பனுடைய இருதயம் எவ்வளவாய் நொறுங்கியிருக்கும்! ஆயினும் தன் எல்லா உள்ளு ணர்வுகளையும் தனக்குள் அடக்கிக் கொண்டவ னாக, அவன், "என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொள்வார்" என்று கூறினான் (ஆதி. 22 : 8).

அருமையான தேவனுடைய பிள்ளையே! இப்புதிய வருடத்தில் நீ மாம்சத்தோடும் இரத்தத் தோடும் ஆலோசனைபண்ணாமல் மிகக் கடினமான சூழ்நிலையிலும் தேவன் சொல்லுகிறது போல, அவருக்குப் பூரணமாய்க் கீழ்ப்படிய ஒப்படைப்பா யாயின், ஆபிரகாமின் தேவனாக அவர் உனக்கு வெளிப்படுவார். தேவன் குறித்திருந்த மலையில் ஒரு பலிபீடத்தையும் உண்டாக்கி, தன் குமாரனைக் கட்டி அப்பலிபீடத்தில் வைத்து, அவனை வெட்டும்படி துணிந்து தன் கையை நீட்டி ஆபிரகாம் கத்தியை எடுத்தபோது, "ஆபிரகாமே, ஆபிரகாமே" என்று பரலோகத்திலிருந்து ஒரு அவசரமான சத்தம், பரலோகம் பரபரப்படைந்து அதிர்ந்து முழங்குவது போல ஆபிரகாமின் செவிகளில் முழங்கிற்று.

அருமையான தேவபிள்ளையே! தேவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து நடந்துவந்த நீ மிக இக்கட்டான சூழ்நிலையில், இனி நம்பிக்கைக்கு வழி இல்லை, தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருக்கு ஒப்புக்கொடுத்து அவருடைய ஆலோசனையின்படி ஜீவித்த எனக்குக் கிடைத்த பிரதிபலன் இதுவே என்று சிந்தித்துக் கலங்கவேண்டிய சந்தர்ப்பங்கள் உனக்கு வரலாம். ஆனால் ஒரு நொடிப்பொழுதும் பிசகாதவராய் ஆபிரகாமுக்காகக் கிரியை செய்தவர், இனி நம்பிக்கைக்கு வழி இல்லை என்று நீ சிந்திக்கும் அந்த நேரத்தில்தானே உனக்கு வெளிப்படுவார். "ஆபிரகாமே, ஆபிரகாமே" என்ற துடிதுடிப்பின் சத்தம் பரலோகத்திலிருந்து எழுந்தது போல, நீ கடைசி நிமிஷம் என்று சிந்திக்கும் நேரத்தில் உனக்காக தேவன் கிரியை செய்வார்! இஸ்ரவேலர் கரையோரம் வந்து திகைத்து நிற்கையில் கடலைப் பிரித்தவர், கரை புரண்டோடும் யோர்தானின் தண்ணீரில் ஆசாரியரின் கால்கள் படும்வரை காத்திருந்து, பின்பு அற்புதம் செய்தவர், யோசேப்பின் விஷயத்தில் நீடிய பொறுமையாயிருந்து, ஏற்றவேளை வந்த போது சீக்கிரத்தில் நியாயம் செய்தவர், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ இவர்களை அக்கினிச் சூளையில் போடும்வரை காத்திருந்து - தானியேலைச் சிங்கங்களின் கெபியில் போடும்வரை காத்திருந்து - பின்பு செயல்பட்டவர், இரவு முழுவதும் சீஷருக்கு உதவி செய்யாதவராய், நாலாம் ஜாமத்தில் (அதிகாலை 3 மணி முதல் 6 மணி வரை) நடுக்கடலில் நடந்து வந்து உதவி செய்தவர், திராட்சரசம் இல்லை என்ற சத்தத்திற்கு, "என் வேளை இன்னும் வரவில்லை" என்று சொல்லி, பின்பு ருசி மிகுந்த ரசத்தைக் கொடுத்தவர், லாசரு மரிக்குமட்டும் காத்திருந்து நாலாம் நாளில் செயல்பட்டவர் — உனக்காகச் செயல்பட தக்க சமயத்தில் விரைந்து வருவார்!

ஆபிரகாம் தேவன் குறித்திருந்த மலைக்குப் போனான். தேவன் குறித்திருந்த மலையில்தானே அவனை, "ஆபிரகாமே, ஆபிரகாமே" என்று கூப்பிடும்படி தேவன் காத்திருந்தார். ஆபிரகாம் ஈசாக்கிடம், "தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார்" என்று சொன்னது போல ஆபிரகாம் தன் கண்களை ஏறிட்டுப் பார்த்தபோது, அந்தப் பர்வதத்திலே தேவன் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொண்டார். "கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும்" என்று சொல்லி, அவன் அந்த இடத்துக்கு "யேகோவாயீரே" என்று பேரிட் டான் (ஆதி. 22 : 14).

தேவன் சொல்லுவது போல அவருக்கு முற்றிலும் கீழ்ப்படிவது மட்டுமல்ல, நீ கர்த்தரின் பர்வதத்திலே நிலைத்திருந்தால் 'கர்த்தர் பார்த்துக் கொள்வார்' என்பது உனக்கு உண்மையாகும்.

கர்த்தருடைய பர்வதத்தில் வாசம்பண்ணும் மனுஷனுடைய குணாதிசயங்களைப் பற்றி 15 - ஆம் சங்கீதத்தில் சொல்லப்பட்டுள்ளது போல உத்தமராய் நடந்து, நீதியை நடப்பித்து, சத்தியத்தையே பேச தீர்மானிப்போமாக. கர்த்தரின் பர்வதத்திலிருந்து வேதம் வெளிப்படும் (ஏசாயா 2 : 3). வெளிப்படுத்தப் படும் வேத சத்தியங்களுக்கு அப்படியே கீழ்ப்படிய நாம் தீர்மானிப்போமாக! கர்த்தரின் பர்வதம் பரிசுத்த பர்வதமாயிருப்பதால், கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தை நாமும் சிநேகித்து, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடு பூரணப்படுத்துவோமாக. நமக்கு ஒத்தாசை வரும் பர்வதத்திற்கு நேராக மாத்திரம் நம் கண்களை ஏறெடுத்து, வானத்தையும் பூமியையும் உண்டாக்கின அவரிடத்திலிருந்து சகாயம் பெற்றுக் கொள்வோமாக.

இந்த வருடம் எப்படியிருக்குமோ என்ற கலக்கத்துடன் புதிய ஆண்டுக்குள் அடியெடுத்து வைத்திருக்கும் தேவ பிள்ளையே! இவ்வருடத்தில் தேவனுக்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்து, அவர் விரும்புகிறபடி அவர் சித்தத்தை நிறைவேற்றத் தீர்மானிப்பாயானால், உன் ஆவிக்குரிய, சரீரப்பிர காரமான யாவையும் கர்த்தர் பார்த்துக்கொள்வார். உன் காரியங்கள் யாவும் கர்த்தரின் பர்வதத்தில் பார்த்துக்கொள்ளப்படும். தேவனில் அன்புகூரு வதிலும், அவருக்குக் கீழ்ப்படிவதிலும் தனக்கு வந்த சோதனையில் தன்னை உண்மையுள்ளவனாய் நிரூபித்த ஆபிரகாமுக்குக் கூறப்பட்ட ஆசீர்வாதங் கள் உன் சொந்தமாகும் (ஆதி. 22 : 15 - 18).

கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர் வதிப்பார். வானத்திற்குரிய (ஆவிக்குரிய) ஆசீர்வா தங்களினாலும், பூமிக்குரிய (கடற்கரை மணலத்தனை) ஆசீர்வாதங்களினாலும் அவர் உன்னை ஆசீர்வதிப்பார். நீ சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்வாய். பாதாளத்தின் வாசல்கள் உன்னை

மேற்கொள்ளாது. உன் சத்துருக்களின் மேடுகளை நீ மிதிப்பாய். உன் மூலம் உன் குடும்பமும் உன் சபையும் உன்னைச் சூழ்ந்திருக்கும் புறஜாதியாரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். வருடம் 2000 - த்தின் ஒவ்வொரு நாளும் கர்த்தரின் பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும். அவர் உனக்காக யாவையும் செய்து முடிப்பார். நம்பிக்கையில்லாத இடத்தில் அவர் நம்பிக்கையை உண்டாக்குவார். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் தம்முடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பாராக!

புத்தாண்டுப் பரிசு

அருமையான வாலிபர்களே! இளைஞர் களே! உங்கள் அனைவருக்கும் எங்கள் புதுவருட வாழ்த்துக்கள்.

சாதாரணமாக மனுஷர் புத்தாண்டின் ஆரம் பத்தில் ஒருவருக்கொருவர் வெகுமதிகளையும், வாழ்த்து அட்டைகளையும் அனுப்பி சந்தோஷத் தைப் பகிர்ந்துகொள்வதுண்டு. ஒருவேளை வாலிபர்களாகிய நீங்களும் இந்நாட்களில் மற்றவர் களுக்கு வெகுமதிகளைக் கொடுப்பதில் மிகவும் உற்சாகமாய் இருக்கக்கூடும்.

இங்கிலாந்திலே மிகுந்த ஆஸ்திக்காரர் ஒருவர் இருந்தார். அவர் மிகவும் வயதானவர். அவர் நல்ல தேவபக்தியுள்ள மனிதனாயிருந்தார். அவர் வேதாக மத்தை மிகவும் நேசித்தவர். பிறர் உள்ளத்திலும் வேதத்தின் மேல் வாஞ்சையை உருவாக்க அவர் பிரயாசப்பட்டார். அவர் இப்படியொரு புத்தாண் டிலே தன்னுடைய வேலையாட்கள் அனைவருக் கும் பரிசு அளிக்கும்படி விரும்பினார். நூறு பவுண்டு நோட்டுகளை அவர் தனது மேஜையின் ஒருபுறத்திலும், சில வேதாகமங்களை அதன் மறுபக்கத்திலும் அடுக்கிவைத்தார். தங்கள் பரிசுப் பொருட்களைத் தெரிந்தெடுக்கும் உரிமையை அவர்தன் வேலையாட்களுக்கே கொடுத்துவிட்டார். அவர் தன் வேலையாட்களிடம், அவர்கள் ஒரு வேதாகமத்தையோ அல்லது நூறுபவுண்டு நோட்டுகளில் ஒன்றையோ எடுத்துக்கொள்ளலாம் என்று கூறினார்.

முதலாவது குதிரைக்காரன் வந்தான். அவன் தன் எஜமானிடம், ‘துரையே, எனக்கு வேதாகமம் மிகவும் பிரியம்தான்; ஆயினும் தற்சமயம் எனக்குப் பணமே அதிகம் தேவைப்படுகிறது’ என்று சொல்லி விட்டு, பணத்தை எடுத்துக்கொண்டான்.

இரண்டாவதாக, தோட்டக்காரன் கை, கால் நடுக்கத்துடன் அந்த மேஜையின் பக்கமாய் வந்து, ‘துரை அவர்களே! எனக்குச் சரியாக வாசிக்கத் தெரியாது. ஆதலால் எனக்கும் பணம்தான் வேண்டும்’ என்று சொல்லி, நூறு பவுண்டு பணத்தை வாங்கிக்கொண்டான். பின்பு காவல் காரன் எஜமானின் அருகில் வந்து, ‘எஜமானே, என் கண் பார்வை மங்கிக்கொண்டே போகிறது. ஆதலால் நானும் பணத்தையே விரும்புகிறேன்’ என்று சொல்லி, நூறு பவுண்டு நோட்டை வாங்கிக் கொண்டான்.

பின்பு சமையல்காரி மிகவும் பயத்தோடு எஜமானின் அருகில் வந்து, ‘துரையே, எனக்குப் படிக்கத் தெரியும். ஆனால் எனக்குப் படிக்க நேரமில்லை என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆதலால் பணம் இருந்தால் புது உடுப்பாவது வாங்கிக்கொள்வேன்’ என்று சொல்லி நூறு பவுண்டு நோட்டு ஒன்றைத் துரையிடமிருந்து வாங்கிக் கொண்டாள். அடுத்தபடியாக அந்த வீட்டிற்குத் தண்ணீர் சுமப்பவன் வந்தான். முதலாளியிடம் அவன் பணிவோடு வந்து, ‘என் நண்பனிடம் ஒரு வேதபுத்தகம் இருக்கிறது. அது போதும். எப்போதாவது எனக்கு வாசிக்க வேண்டுமெனத் தோன்றினால் அதை வாங்கி நான் வாசித்துக்கொள்வேன். ஆனால் இப்போது பணம் எனக்கு அவசியமாகத் தேவை’ என்று சொல்லி, அவனும் ஒரு நூறு பவுண்டு நோட்டை வாங்கிக்கொண்டான்.

அந்த வீட்டிலே குழந்தைகளைக் கவனிக்கிற பெண் எஜமானின் அருகிலே பணிவோடு வந்து நின்று, ‘நான் ஞாயிறு பள்ளியில் வேதாகமக் கதைகளை எல்லாம் கேட்டுவிட்டேன். எனவே எனக்கு வேதாகமம் வேண்டாம். எனக்கும் பணம் தான் வேண்டும்’ என்று கூறி, அவளும் ஒரு நோட்டையே வாங்கிக்கொண்டாள். இப்படியாக அங்கிருந்த ஒவ்வொருவரும் நூறு பவுண்டு நோட்டுகளையே விரும்பித் தெரிந்துகொண்டனர். பரிசுத்த வேதாகமங்களோ மேஜையில் யாராலும் விரும்பப்படாமல் அப்படியே இருந்தன.

கடைசியாக அந்தச் சீமானுக்குத் தினமும் பத்திரிகை போடும் சிறுவன் வந்தான். அவனுக்கும் பரிசு கொடுக்க முதலாளி விரும்பினார். கந்தல் உடைகளையே அணிந்திருந்தான் அந்தச் சிறுவன். அவன் ஏழ்மையைக் கண்ட சீமான், ‘தம்பி, புதிய வருடம் பிறந்து விட்டதல்லவா! இந்தப் புத்தாண் டிலே நான் உனக்கும் ஒரு பரிசு தர விரும்புகிறேன். இதோ, இந்த வேதாகமம் உனக்கு வேண்டுமா? அல்லது 100 பவுண்டு நோட்டு உனக்கு வேண் டுமா? உனக்கு விருப்பமானதைத் தெரிந்துகொள்’ என்றார்.

வேதாகமம் என்று சொன்னவுடனே இளைஞ னுடைய கண்கள் பிரகாசித்தன. தனக்குச் சொந்த மாக ஒரு வேதாகமம் வேண்டுமென்று அவன் வெகு காலமாய்க் காத்திருந்தான். அவன் தாய் பரம ஏழை. ஆயினும் அவள் நல்லதொரு கிறிஸ்தவப் பெண். அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும், வேதமே நலம் என்றும் (சங். 119 : 72), அதுவே மிகவும் விலையேறப்பெற்றது என்றும் அவனுடைய தாய் அவனுக்கு அடிக்கடி சொல்லிக் கொடுத்திருந்தாள். ஆகவே கொஞ்சமும் தயக்கமின்றி அவன், ‘பெரியவரே! உங்களுக்கு மிகவும் நன்றி, வேதாகமம்தான் எனக்கு வேண்டும்’ என்று மிகவும் விருப்பத்தோடே கேட்டான். செல்வந்தர் மிகவும் களிப்படைந்தார். அவர் சிறுவனைப் பார்த்து, ‘தம்பி, நீ நல்ல பங்கினைத் தெரிந்துகொண்டாய்’ என்று அவனைப் பாராட்டி, ஒரு வேதாகமத்தை அவன் கையில் கொடுத்தார். சுற்றியிருந்த வேலையாட்கள் சிறுவன் மதியீனமாய் அப்படிச் செய்துவிட்டான் என்று கூறி, அவனைப்

பரியாசம் செய்தார்கள். 'பணத்தை வாங்கி அதைக்கொண்டு தேவையான புத்தாடைகளை வாங்கிக்கொண்டு, மீதியான தொகைக்கு ஒரு வேதபுத்தகமும் வாங்கத் தெரியாத முட்டாள். இவனுக்குப் புத்தியும் விவேகமும் போதாது' என்று அவர்கள் அவனை இகழ்ந்து பேசினார்கள். எனினும் சிறிது நேரத்தில் அவர்களுடைய பரியாசம் நின்றுபோயிற்று. ஏனெனில் சிறுவன் ஆசையுடன் அந்த வேதாகமத்தைத் திறந்தபோது, அதின் ஒவ்வொரு பக்கத்திலும் விலையேறப்பெற்ற பவுண்டு நோட்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. அதைக் கண்ணுற்ற வேலையாட்கள் தங்கள் புத்தியீனத்தை உணர்ந்து துக்கமடைந்தனர். சிறுவனோ அளவில்லா மகிழ்ச்சியடைந்தான்.

அருமையான வாலிப நண்பர்களே! இந்தப் புத்தாண்டிலே நீங்கள் எதைத் தெரிந்துகொள்வீர் கள்? சற்று சிந்தித்துப் பாருங்கள். தற்கால வாலிபர் பலர் வேதாகமத்தைவிட உலகப்பொருட்கள், பணம், கதைப் புத்தகங்கள் இவைகளையே அதிகமாக நேசிக்கிறார்கள். ஆகவேதான் அப். பவுல் கட்டுக்கதைகளையும் முடிவில்லாத வம்சவரலாறுகளையும் கவனிக்க வேண்டாம் என்றும், கட்டுக் கதைகளுக்கு விலக வேண்டும் என்றும் வாலிபனான தீமோத்தேயுவுக்கும் (I தீமோ. 1 : 3 ; 4 : 7), வம்ச வரலாறுகளுக்கு விலக வேண்டும் என்று உத்தம குமாரனாகிய தீத்துவுக்கும் எழுதுகிறார் (தீத்து 3 : 9).

கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது (சங். 19 : 7). ஆகவே தாவீது ராஜா, "நானோ, உம்முடைய வேதத்தில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன்" (சங். 119 : 70); "உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி" (வச. 77); "உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன்" (வச. 92) என்கிறான். "கர்த்தருடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு" (வச. 165). இதை அறிந்த சங்கீதக்காரன், "உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்!" (வச. 97); "வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன்" (வச. 113); "உம்முடைய வேதத்தையோ நேசிக்கிறேன்" (வச. 163) என்கிறான்.

மேலும் தாவீது, கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கிய வான் (சங். 1 : 2) என்பதை அறிந்திருந்தபடியால் நாள் முழுதும் கர்த்தருடைய வேதமே தன்னு டைய தியானம் (சங். 119 : 97) என்றும், கர்த்தரு டைய வசனத்தைத் தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்கு முன்னே தன் கண்கள் விழித்துக் கொள்ளும் (வச. 148) என்றும் கூறுகிறான். கர்த்தருடைய வசனம் நம் கால்களுக்குத் தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது (வச. 105). "வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால்தானே" (வச. 9) என்றும் நாம் வாசிக்கிறோம்.

ஆகையால் வாலிபர்களே! கர்த்தருடைய வேதத்தை நேசியுங்கள்! அதை வாசியுங்கள்! அதின் மேல் பிரியமாயிருங்கள்! இரவும் பகலும் அதையே தியானியுங்கள். இப்படி இரவும் பகலும் கர்த்தருடைய வேதத்தில் உள்ள பிரமாணங்களைத் தியானித்துக் கொண்டிருப்பீர்களானால் கர்த்தர் உங்கள் வழியை வாய்க்கப்பண்ணுவார்; நீங்கள் புத்திமான்களாய் நடந்துகொள்வீர்கள் (யோசுவா 1 : 8). கர்த்தர் உங்களுக்கு நல்ல புத்தியும் ஞானமும் தந்து உங்கள் படிப்பை ஆசீர்வதிப்பார். யோபுகூட, கர்த்தருடைய வாயின் வார்த்தைகளைத் தனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாகக் காத்துக்கொண்டதாகக் கூறுகிறான் (யோபு 23 : 12). எஸ்றா என்னும் வேதபாரகனும் வேதத்தை ஆராய்ந்து பார்க்க தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான் என்று நாம் பார்க்கிறோம் (எஸ்றா 7 : 10).

அருமையான வாலிபர்களே, வேதமே சத்தியம் (சங். 119 : 142); வேதமே வெளிச்சம் (நீதி. 6 : 23). கர்த்தருடைய வேதத்தை நேசித்து, வாசித்து, தியானித்து அதன்படி ஜீவிப்பீர்களாக ! செழிப் புள்ள வருஷங்களில் யோசேப்பு எகிப்தின் களஞ் சியங்களைத் தானியத்தால் நிரப்பி, பஞ்ச காலத்தில் சகல தேசத்தாரையும் தன் குடும்பத்தினரையும் போஷித்தது போல (ஆதி. 45 : 7), நாமும் வேத வசனங்களை நம்முடைய இருதயங்களில் பத்திர மாய்ப் பாதுகாத்து வைத்தால், பின் நாட்களில் நம் சோதனை வேளைகளிலும், வேத வசனத்தை வாசிக்கவோ கேட்கவோ கூடாத சமயம் வரும் போதும், அவை நமக்கும் பிறருக்கும் மிகுந்த பயன் தரும். ஆகவே அனுதினமும் கர்த்தருடைய வேதத்தை வாசிக்கத் தீர்மானிப்போமாக!

****

உற்ற தந்தையிலும் சிறந்தவர்

நான் பக்தி வைராக்கியமுள்ள கத்தோலிக்கக் குடும்பம் ஒன்றில் பிறந்து வளர்க்கப் பட்டேன். சிறுபிராயத்திலிருந்தே தினமும் ஆலயத் திற்குச் சென்று திருப்பலி பூசையில் பங்கு பெறு வது, ஜெபமாலை சொல்லுவது போன்ற ஒழுங்கு முறைகளில் நான் கண்டிப்புடன் வளர்க்கப்பட் டேன். என் தகப்பனாரின் சகோதரர் இருவர் கத்தோலிக்கக் குருக்களாயிருந்தனர். கர்த்தராகிய இயேசுவே மெய்யான தேவன் என்ற அறிவு எனக்கு இருந்ததேயல்லாமல், அவருடைய அன்பைப் பற்றி நான் அறியாதவளாக இருந்தேன்.

இப்படியாக எங்கள் குடும்பம் உலகத்தார் பார்வையில் பக்தியுள்ள குடும்பமாகக் காட்சியளித் தது. ஆனால் தேவன் எதிர்பார்க்கிற சமாதானம் குடும்பத்தில் காணப்படவில்லை. இச்சமயத்தில் என் தகப்பனார் தன் நண்பர் ஒருவர் மூலம் ஒரு ஆவிக்குரிய கூட்டத்திற்குச் சென்று பெரிதான இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டார். என் தகப்பனார் மிகவும் கோப சுபாவமுள்ளவர். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பிறகு அவர் மிகவும் சாந்தகுணமுள்ளவராக மாறினார். என் தகப்பனாரின் ஜீவியத்தில் ஏற்பட்ட இம்மாற்றம் மிகவும் ஆச்சரியமாகவும், சந்தோஷ மாகவும் இருந்தது. அதே சமயத்தில் அது என்னைச் சிந்திக்க வைத்தது.

நான் வளரவளர என் பெற்றோர்களின் கண்டிப்பு எனக்கு ஒரு கட்டுப்பாடு போல் தோன்றி யது. எனவே இவைகளிலிருந்து விடுபட்டு நான் என் மனதும் மாம்சமும் விரும்பினபடி ஜீவிக்கலா னேன். உலகம் எனக்குள் பிரவேசித்தது. உலக வழக்கத்தின்படி நடப்பது, நவநாகரீக ஆடைகளை அணிவது, டி. வி. பார்ப்பது போன்ற காரியங்களில் நான் மிகவும் ஆசையுடையவளாக இருந்தேன். குடும்பத்தில் இளைய மகளாக இருந்தபடியால் நான் விரும்பியதைப் பெற்றுக்கொள்ள எனக்கு எந்தத் தடையுமிருக்கவில்லை. நான் ஒரு நாளின் பெரும்பான்மையான நேரத்தை என் சிநேகிதி களுடன் கழிப்பேன். அது எனக்கு இன்பமா யிருக்கும்.

இவையனைத்தும் பாவம் என்று எனக்குத் தெரியாதிருந்தது. ஆனால் ஒரு நாளின் முடிவில் ஏதோ ஒரு குற்ற உணர்வு எனக்குள் ஏற்படும். நான் கர்த்தராகிய இயேசுவிடமிருந்து வெகு தூரத்தில் இருப்பது போன்ற எண்ணம் எனக்கு உண்டாகும். இந்தக் குற்ற மனச்சாட்சியிலிருந்து விடுபடும் படியாகப் பலவிதமான பக்தி முயற்சிகளை நான் மேற்கொள்ளலானேன். இவை ஒன்றும் எனக்குப் பலனளிக்கவில்லை.

கடைசியாக என் தகப்பனாரின் ஜீவியத்தை மாற்றின ஆண்டவராகிய இயேசுவுக்கு நான் என் வாழ்க்கையில் ஒரு சந்தர்ப்பம் கொடுத்தேன். அப்போது அவர் என் பாவங்களை மன்னித்து, என்னைத் தம்முடைய சொந்தப் பிள்ளையாக ஏற்றுக் கொண்டார். அதுவரை உலகம் எனக்குத் தந்த அற்ப சந்தோஷத்தைக் காட்டிலும் பலமடங்கு அதிக சந்தோஷத்தையும் சமாதானத்தையும் நான் அவரில் கண்டடைந்தேன். ஆண்டவராகிய இயேசுவின் அன்பு என் உள்ளத்தில் வந்தவுடன் அதுவரை எனக்குப் பெரிதாகத் தோன்றிய மற்ற எல்லா உலக அன்பையும் அது மேற்கொண்டது. கர்த்தர் என்னைப் பூமிக்குரிய ஆசீர்வாதங்களாலும் ஆசீர்வதித்தார். ஆண்டவராகிய இயேசுவே எனக்கு ஞானமாயிருந்து நன்றாகப் படித்துத் தேர்ச்சி பெறவும், அதற்குப்பின் ஆசிரியையாகப் பணிபுரிய வும் உதவி செய்தார்.

அதன்பின்பு என் வீட்டின் அருகாமையிலிருந்த வேறொரு சபைக்கு நாங்கள் சென்று வந்தோம். அங்குதானே சுமார் ஏழு பேர் கூடி யிருந்த ஒரு சிறு கூட்டத்தில் கர்த்தர் என்னைப் பரிசுத்தஆவியின் அபிஷேகத்தினால் நிறைத்தார். பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற அன்றிலிருந்து என் ஆத்துமா ஒரு ஆழமான ஆவிக்குரிய அனுபவத்திற்காக வாஞ்சிப்பதை நான் உணர்ந்தேன். ஆனால் அச்சபையில் அதற்கு மேல் ஆவிக்குரிய ஆகாரத்தை அவர்களால் அளிக்க முடியவில்லை. அதன் பின்னர் தற்செய லாக என் தகப்பனாரோடு வேலை செய்பவர் ஒருவர் மூலமாக பெந்தெகொஸ்தே சபைக்கு நாங்கள் அறிமுகப்படுத்தப்பட்டோம். இவர்களின் ஆராதனை ஒழுங்குகளையும் ஆடை அணியும் முறைமையையும் பார்க்கும்போதே ஒரு தேவபயம் என்னில் உண்டானது. கர்த்தர் ஆவிக்குரிய ஆழமான சத்தியங்களை எங்களுக்கு வெளிப்படுத்தினார். அவைகளுக்குக் கீழ்ப்படிவது சற்றுக் கடினமாக இருந்தபோதிலும் தேவ கிருபையினால் அப்போஸ்தல உபதேசத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிய தேவன் எங்களுக்கு உதவி செய்தார். முக்கியமாக உலகத்திலிருந்தும், உலக வேஷத்திலிருந்தும் வேறுபிரிய தேவன் எங்களுக்கு உதவி செய்தார்.

இச்சூழ்நிலையில் என் தகப்பனார் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இதனால் பலவிதமான நிந்தைகள் வழியாக நாங்கள் செல்ல நேரிட்டது. உறவினர்கள் அனைவரும் நாங்கள் பெந்தெகொஸ்தே மார்க்கத்தில் சென்றதால்தான் தேவன் இதை அனுமதித்தார் என்று சொல்லி எங்களைவிட்டுப் போய்விட்டார்கள். எங்கள் வீட்டில் நான்கு பேரும் பெண்பிள்ளைகளாக இருந்தபடியால், உதவியற்ற இந்நிலையில் நாங்கள் திரும்பக் கத்தோலிக்க மார்க்கத்திற்கு வந்துவிடுவோம் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால் யோர்தானின் கற்கள் நின்றது போல் சத்தியத்திற்காகத் தைரியமாகப் பரிசுத்தவான்களோடு சேர்ந்து நிற்கத் தேவன் எங்களுக்கு உதவி செய்தார். யார் எங்களைக் கைவிட்டாலும் கர்த்தர் எங்களைச் சேர்த்துக்கொண் டார். ஒன்றும் குறைவுபடாமல் எங்கள் தேவைகள் அனைத்தையும் தேவன் சந்தித்தார். ஒரு உலகப் பிரகாரமான தகப்பன் எங்களை நடத்தியதைக் காட்டிலும், பலமடங்கு அதிகமாய் எங்கள் பரம தகப்பன் எங்களைப் போஷித்து, வழிநடத்தி, பாது காத்ததை எங்களால் உணர முடிந்தது. தேவனுக்கு மகிமையுண்டாவதாக.

அதன்பின் கர்த்தர் என் அழைப்பைக் குறித்து என்னோடு பேச ஆரம்பித்தார். நீ உலகத் திற்குரியவள் அல்ல, நீ எனக்குரியவள் என்று எப்போதும் அவர் என்னை உணர்த்திக்கொண்டே யிருந்தார். ஆபிரகாமைப்போல நான் என் தகப்பன் வீட்டை விட்டுப் புறப்பட்டால், கர்த்தர் என்னை ஆசீர்வதிப்பதாக வாக்குப்பண்ணினார் (ஆதி. 12 : 1, 2). கர்த்தரை மாத்திரம் பிரியப்படுத்த வேண்டும் என்ற பெரிதான வாஞ்சை எனக்கிருந்தது. அப்போது, “விவாகமில்லாதவன் கர்த்தருக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்” (I கொரி. 7 : 32) என்ற வசனத்தைத் தேவன் எனக்கு உணர்த்தினார். மற்றும் பல சொப்பனங்கள், தரி சனங்கள் மூலம் என் அழைப்பை அவர் உறுதிப் படுத்தினார். என்னைச் சிநேகித்ததினிமித்தம் தம் ஜீவனைக் கொடுத்த ஆண்டவராகிய இயேசுவின் அன்பிற்கு முற்றிலும் என்னை ஒப்புக்கொடுப் பதற்கு எதுவும் என்னைத் தடைசெய்ய முடிய வில்லை. அவருடைய பரம அழைப்பிற்குக் கீழ்ப் படிந்து 1995 - ஆம் ஆண்டு இந்தக் கனமான ஊழியத்திற்கு நான் என்னை ஒப்புக்கொடுத்தேன். அந்நாள் முதல் கர்த்தர் எனக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமுமாக இருந்து வழிநடத்தி வருகிறார். கர்த்தருடைய வீட்டில் பரிசுத்தவான்களோடு சேர்ந்து சந்தோஷமாக அவருக்கு ஊழியம் செய்ய தேவன் எனக்கு உதவி செய்கிறார். நமக்கு இவ்வுலகத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஒரே ஒரு ஜீவியத்தை கர்த்தராகிய இயேசுவோடு, அவருக் காக, அவருடைய வீட்டில் செலவழிப்பதைக் காட்டிலும் மேலான பாக்கியம் வேறில்லை. இங்கு மாத்திரமல்ல, விண்வீட்டிலும் நித்திய நித்தியமாக ராஜாதிராஜாவாகிய இயேசுவோடு ஆளுகை செய்யும் சிலாக்கியத்தையும் அளிக்கும் தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

சகோதரி ஜெனட் ப்ளோரா,

அடையாறு.

****

எருசலேமின் அலங்கமும் வாசல்களும்

1. **ஆட்டு வாசல்** (SHEEP GATE)

பிரதான ஆசாரியனாகிய எலியாசீபும், அவன் சகோதரராகிய ஆசாரியர்களும் எழுந்து, ஆட்டுவாசலைக் கட்டினார்கள்" (நெகே. 3 : 1).

எருசலேம் நகரத்தின் அலங்கத்திலிருந்த பன்னிரண்டு வாசல்களைக் குறித்து நெகேமியா வின் புஸ்தகத்தில் நாம் வாசிக்கிறோம். நகரத்தின் ஒவ்வொரு வாசலும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகக் கட்டப்பட்டு, உபயோகிக்கப்பட்டுவந்தது. பாபிலோன் ராஜா நகரத்தைக் கைப்பற்றியபோது, அவை அவனுடைய சேனையினால் சுட்டெரிக்கப்பட்டுப்போயின. என்றாலும், தேவன் தம் ஜனங்களைச் சந்திக்கும் வேளை வந்தபோது, சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த நெகேமியாவும் யூத ஜனங்களும் சேர்ந்து அவற்றைப் பழுதுபார்த்துக் கட்டினார்கள். அவற்றுள் முதலாவதாகக் கட்டப்பட்ட வாசல், 'ஆட்டுவாசல்' ஆகும். இது பட்டணத்தின் வடகிழக்கு முனையிலுள்ளது. இவ்வாசலிலிருந்துதான் நெகேமியா நகரத்தின் அலங்கத்தைப் பழுதுபார்த்துக் கட்டத் துவங்கினான். தேசத்தின் பல பகுதிகளிலிருந்தும் பலி செலுத்தும்படி கொண்டுவரப்படும் ஆடுகள், இவ்வாசலின் வழியாகவே எருசலேமிலிருந்த தேவாலயத்திற்குக் கொண்டு வரப்பட்டன. இவ்வாசலினருகே பெதஸ்தா என்னும் ஒரு குளம் இருந்தது (யோவான் 5 : 2). இக்குளம் முன்னாட்களில் ஆடுகளைக் குளிப்பாட்டுவதற்கு உபயோகிக்கப்பட்டு வந்தது. பின்னாட்களில், கர்த்தராகிய இயேசுவின் நாட்களிலுங்கூட இக்குளம் அற்புத சுகமளிக்கும் இடமாகக் கருதப்பட்டது. இதற்கு ஐந்து மண்டபங்கள் இருந்தன. அவற்றில் குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் முதலான வியாதிக்காரர் அநேகர் படுத்திருந்து, தண்ணீர் எப்போது கலங்கும் என்று ஆவலோடு காத்துக்கொண்டிருப்பார்கள். ஏனெனில் சில சமயங்களிலே தேவதூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி, தண்ணீரைக் கலக்குவான். தண்ணீர் கலங்கின பின்பு அதிலே முதலாவதாக இறங்குகிறவன், எப்படிப்பட்ட வியாதியுள்ளவனாயிருந்தாலும் சொஸ்தமாவான்.

(i) **சாந்தகுணம்:**

ஆட்டுவாசல், தேவாட்டுக்குட்டியாகிய இயேசுவின் சாந்தகுணத்தை நமக்கு நினைவூட்டு கிறது. அவர், "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்" என்றார் (மத். 11 : 29). சாந்தம் ஒரு ஆட்டுக்குட்டியின் சுபாவமாகும். பலி செலுத்தப் படும்படி ஆட்டு வாசலின் வழியே அது கொண்டு செல்லப்படும்போது, தன் மேய்ப்பனை அது எதிர்ப்பதுமில்லை, பின்வாங்குவதுமில்லை. தன்னை நடத்திச் செல்லுகிறவனின் சித்தத்திற்கு அது தன்னை முற்றிலும் ஒப்படைத்துச் செல்லுகிறது. சுய விருப்பங்களும், தெரிந்துகொள்ளும் உரிமை யும் அதற்கு இல்லை. "அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார்; ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்" என்று கர்த்தராகிய இயேசுவைக் குறித்துத் தீர்க்க தரிசி கூறுகிறான் (ஏசாயா 53 : 7 ; அப். 8 : 32, 35). பிதாவானவர் தம் ஒரேபேறான குமாரனை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட் படுத்தினபோது, அவர் 'ஏன்' என்று கேள்வி கேட்கவில்லை. "தேவனே, உம்முடைய சித்தத்தின் படி செய்ய, இதோ, வருகிறேன்" என்று அவர் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார் (எபி. 10 : 7). பலியாக்கப்படும்படி ஆட்டு வாசலினூடே கொண்டு செல்லப்படும் ஒரு ஆட்டைப்போல அவர் அமைதியாகத் தம்மைப் பிதாவின் சித்தத்திற்கு அர்ப்பணித்தார். பல எதிர்ப்புகளையும் உபத்திர வங்களையும் சந்தித்த எரேமியாவும், "நான் அடிக்கப்படுவதற்குக் கொண்டுபோகப்படும் சாது வான ஆட்டுக்குட்டியைப்போல இருந்தேன்" என்று கூறுகிறான் (எரே. 11 : 19).

தேவபிள்ளையே ! உன் வாழ்க்கையில் இந்த ஆட்டு வாசல் சுட்டெரிக்கப்பட்டுப் போயிருக்கி றதோ ? தேவன் உன்னைப் பலவிதமான பாடுக ளின் பாதைகள் வழியாக நடத்திச் செல்லும்போது, எவ்விதக் கேள்வியும் நிபந்தனையுமின்றி அப்பாதை களுக்கெல்லாம் உன்னை ஒப்புக்கொடுக்க முடி கிறதா ? "கர்த்தராகிய ஆண்டவர் என் செவியைத் திறந்தார்; நான் எதிர்க்கவுமில்லை, நான் பின் வாங்கவுமில்லை. அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்; அவ மானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை" (ஏசாயா 50 : 5, 6) என ஏசாயா தன் தீர்க்கதரிசன வாக்கியங்களில் எடுத்துரைக்கிறான். இவை ஆட்டுக்குட்டியானவரைக் குறித்து உரைக்கப்பட்ட வார்த்தைகளாகும். இப்படிப்பட்ட தாங்கொணா வேதனைகளினூடே நடத்தப்படும்போது இத்தகைய சாந்தகுணத்தை வெளிப்படுத்துவது எப்படி ? இச்சந்தர்ப்பங்களில் மனுஷர் பதறிப் பேசுவதும், பிறரைக் குறைகூறுவதும், ஆத்திரமடைவதும் இயல்பு. என்றாலும் ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றிச் செல்லுகிற தேவபிள்ளைகளுக்கு அவர், "என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" எனக் கற்பிக் கிறார். அவர் இத்தகைய தாங்கொணா வேதனைகளினூடே கடந்து சென்றபோது எவ்விதம் ஜெயம் பெற்று, சாந்தகுணத்தை வெளிப்படுத்தினார் என்பதை இவ்வசனத்தின் ஆரம்பத்தில் கூறுகிறார் - **"கர்த்தரா கிய ஆண்டவர் என் செவியைத் திறந்தார்".** நம்முடைய செவிகள் தேவனுடை.ய சத்தத்திற்குத் திறந்திருக்குமானால் நாமும் இப்பாதைகளில் எளி தாக ஜெயம் பெறலாம். நண்பனே ! நீ கடுமையான சோதனைகளினூடே செல்லும்போது, மனுஷரு டைய ஆலோசனையை, ஆதரவை, ஆறுதலை, உதவியை நாடிச் செல்லாதே. அவை உன்னைத் தவறான திசையில் வழிநடத்திவிடக் கூடும். நீ தேவ சமுகத்திற்குச் சென்று, அவருடைய சத்தம் கேட்கும் படி

அவர் பாதத்தில் காத்திரு. அவர் பேசும்போது உன் மனதில் இளைப்பாறுதல் உண்டாகும். நீ எளிதாக உன் சோதனைகளில் ஜெயம் பெறுவாய். உன் செவிகள் கர்த்தரின் சத்தத்திற்கு எப்போதும் திறந்திருக்கட்டும். அவர் உன்னைச் செம்மையான வழியில் நடத்துவார். இளைஞனான யோசேப்பு தன் தகப்பனை நேசித்து, தன்னை முழுவதுமாக அவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்திருந்தான். ஆகவே தான், தன் சகோதரர் தன்னைப் பகைக்கிற வர்கள் என்றும், தன்மேல் பொறாமைகொள்ளுகிறவர்கள் என்றும் அவன் நன்கு அறிந்திருந்தும், “உன்னை அவர்களிடத்துக்கு அனுப்பப்போகிறேன், வா” என்று தகப்பன் அவனை அழைத்தபோது, அவன் யாதொரு மறுப்பும் தெரிவிக்காமல். “இதோ, போகிறேன்” என்று தன்னை ஒப்புக்கொடுத்தான் (ஆதி. 37 : 4, 5, 8, 11, 13). அதினிமித்தம் அவன் தன் இளவயதில் அதிகமான பாடுகளினூடே செல்ல வேண்டியதாயிருந்தது. என்றாலும் முடிவிலே அவன் எகிப்தின் அதிபதியாக உயர்த்தப்பட்டான். “கர்த்தர் சாந்தகுணமுள்ளவர்களை உயர்த்துகிறார்” (சங். 147 : 6). “சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான் கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளு வார்கள்” (மத். 5 : 5).

நாம் சாந்தமும் அமைதலுமாயிருக்கும் போது கர்த்தர் நமக்காக யுத்தம்பண்ணுவார். மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான் (எண். 12 : 3). அவன் இப்படிப்பட்ட சாட்சியைத் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளக் காரணம் என்ன ? மிரியாமும் ஆரோனும் மோசேக்கு விரோதமாகப் பேசியபோது, ‘மோசே அதைக் கேட்டான்’ என்றோ, ‘மோசே அதற்குப் பதிலாகத் தன் பட்சத்தில் நியாயங்களை எடுத்துரைத்தான்’ என்றோ அங்கு கூறப்படவில்லை. “கர்த்தர் அதைக் கேட்டார்” என்றே வசனம் கூறுகிறது. தனக்காக மோசே போராடவோ, வாக்குவாதம் பண்ணவோ செல்லவில்லை. அவன் அமைதியா யிருந்ததைக் கண்ணுற்ற தேவன்தாமே மேகத் தூணில் இறங்கி, ஆரோனையும் மிரியாமையும் கூப்பிட்டு, அவர்களைக் கடிந்துகொண்டார். மிரியாம் தேவனிடத்திலிருந்து சிட்சையையும் பெற்றாள். ஆகவே நாமும் நமக்கு நியாயஞ்செய்கிற தேவ னிடத்திலேயே நம் காரியங்களைச் சாட்டிவிட்டு, அவருடைய வேளைக்காக நாம் காத்திருப்போமாக. சாந்தகுணமுள்ளவர்களைக் கர்த்தர் நியாயத்திலே நடத்தி, அவர்களுக்குத் தமது வழியைப் போதிக் கிறார். அவர்கள் மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள் (சங். 25 : 9 ; 37 : 11).

அருமையானவர்களே ! “உங்கள் சாந்த குணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார்” (பிலி. 4 : 5) என்றும், “எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்” என்றும் வேதாகமம் சொல்லுகிறது (I தெச. 5 : 14). எல்லாரிடத்திலும் _ முரட்டுக்குணமுள்ளவர்களிடத்திலும், அடங்காதவர்களிடத்திலுங்கூட _ சாந்தகுணத்தை வெளிப்படுத்தக் கர்த்தர் தாமே நமக்கு உதவி புரிவாராக. இந்த சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. அதுவே ஒரு தேவபிள்ளையின் அழியாத அலங் கரிப்பாயிருக்கிறது (I பேதுரு 3 : 4). ஆகவே, ஆரம்பத்தில் உன்னிலிருந்த சாந்த குணத்தை நாளடைவில் நீ இழந்து போயிருப்பாயென்றால், உன் வாழ்க்கையில் சுட்டெரிக்கப்பட்டுப்போயி ருக்கும் இந்த ஆட்டு வாசலை மீண்டும் கட்டி யெழுப்பும்படி இன்றே எழும்பிக் கிரியை செய்வாயாக.

ரோமருக்கு எழுதிய நிருபத்தின் விளக்கவுரை

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

“இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப் படுவதில்லை” (3 : 20).

பாவத்தை அறியும் அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறது. நியாயப்பிரமாணம் வருவதற்கு முன் எவை பாவம், எவை பாவமல்ல என்பதை ஜனங்கள் அறியாமலிருந்தார்கள். அவர்கள் மனச்சாட்சியில் எவை நன்மையாய்த் தோன்றியதோ அவைகளைச் செய்தும், எவை தீமையாய்த் தோன்றியதோ அவைகளைச் செய்யாமலிருந்தும் வந்தார்கள். உதாரணமாக, களவு செய்வது, பொய்ச்சாட்சி சொல்வது, இச்சிப்பது போன்ற பாவங்களை நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன், பெரும்பான்மையான ஜனங்கள் பாவங்களாகக் கருதவில்லை. ஆனாலும் நீதியின் தேவனுக்கு முன்பாக அவைகள் பாவங்களே. நியாயப்பிரமாணம் வந்தபோதோ அது களவு செய்வதையும் பொய்ச்சாட்சி சொல்வதையும், இச்சிப்பதையும் பாவங்கள் என்று சுட்டிக் காட்டினது. ஆகையால் களவு செய்வதும், பொய்ச்சாட்சி சொல்வதும், இச்சிப்பதும் பாவங்கள் என அவர்கள் அறியலாயிற்று.

நியாயப்பிரமாணத்தைப் பெற்றவர்கள் இப்படிப்பட்ட பாவங்களைச் செய்தால் மரணதண்டனை உண்டு என்று பயந்தபடியால் இப்பாவங்களைச் செய்யாமலிருந்தார்களேயொழிய இப்பாவங்களைச் செய்யாதபடிக்கு அவர்கள் உள்ளான மனுஷனில் வல்லமையுடையவர்களாயிருக்கவில்லை.

“இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது” (3 : 21).

நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிற ஒருவன் பாவம் செய்யாதபடிக்குப் பயந்து நடக்கிறான். இதனால் உண்டாகும் நீதி, பிரமாணத்தின் நீதி (Legal Righteousness) என்று சொல்லப்படுகிறது. இந்தப் பிரமாணம், கீழ்ப்படியாதவர்கள், பாவிகள், தாய்தகப்பன்மாரை அடிக்கிறவர்கள் ஆகியோருக்கு தண்டனையை விதிக்கிறது. ஆனால், நியாயப்பிரமாணம் இல்லாமல் உண்டாகும் நீதியோ தேவநீதியாகும்.

இது பெரிய நீதி (Great Righteousness) என அழைக்கப்படுகிறது. நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் இதைக் குறித்துச் சாட்சியிடுகிறது.

அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை” (3 : 22).

இந்த நீதி, இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே. அதாவது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அநீதியுள்ளவர்களுக்கு ஈவாக அளிக்கும் நீதியாகும்.

நாம் அவருக்குள் தேவநீதியாகும்படிக்குப் பாவம் அறியாத அவரைப் பாவநிவாரண பலியாக்கினார் (II கொரி. 5 : 21) என்பதின் கருத்து என்ன? பாவம் செய்கிற ஆத்துமா சாகும் என்பது தேவநீதியாகும். இதினிமித்தம் பாவம் செய்கிற எந்த மனுஷனும் கோபாக்கினைக்குப் பாத்திரவானாயிருக்கிறான். கர்த்தராகிய இயேசு நம்மேல் வரும் இந்த கோபாக்கினையை தம்மேல் எடுத்து நமது ஸ்தானத்தில் மரித்து நமக்காகத் தேவநீதியை ஈவாக சம்பாதித்து வைத்திருக்கிறார். இந்த ஈவை நாம் அனுபவத்தில் பெற்றுக்கொள்ளாமல், சரித்திரத்தில் நடந்த ஒரு காரியம் என்று எடுத்துக்கொண்டால், நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களைப் போல இது நமக்கும் பிரயோஜனமற்றதாகிவிடும்.

தம்முடைய பாடுகளால், நமக்கு ஈவாக சம்பாதித்து வைத்திருக்கிற நீதியை அவரைப் பற்றும் விசுவாசத்தினாலேயன்றி வேறு எவ்விதத்தினாலும் நாம் அடைந்துகொள்ள முடியாது. யூதராயினும், கிரேக்கராயினும் யாதொரு வித்தியாசமும் இல்லாமல், யார் யார் இதை விசுவாசிக்கிறார்களோ அவர்கள் மேல் பலிக்கும் நீதியே தேவநீதி என்று எழுதப்பட்டிருக்கிறது.

“எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்”(3 : 23, 24).

இவ்விரு வசனங்களிலும் அப். பவுல் இதையே விளக்குகிறார். பாவம் என்பது கற்பனையை மீறுகிறது என்ற கருத்தும், குறிக்கோளை விட்டு விலகுதல் (missing the mark) என்ற கருத்தும் கொண்டதாயிருக்கிறது. தேவசாயலாக உண்டாக்கப்பட்ட மனிதன் அவருடைய மகிமையினால் நிறைந்தவனாயிருந்தான். அவன் தேவகட்டளையை மீறினபோது, அந்த தேவமகிமையை இழந்து, தானும் தன் மனைவியும் நிர்வாணிகள் என்பதை உணர்ந்துகொண்டான். அவர்கள் தங்களுடைய நிர்வாணத்தை மறைக்க அத்தி இலைகளினால் ஒரு அரைக்கச்சையை உண்டாக்கிக்கொண்டார்கள்.

தேவன் ஒரு மிருகத்தைக் கொன்று, அம்மிருகத்தின் தோலினால் அவர்களுக்கு உடைகளை உண்டாக்கி, அவர்களை உடுத்துவித்தார். ஆதாமும் ஏவாளும் இந்த உடைகளைப் பார்க்கும்போது தங்களுடைய பாவத்திற்காகக் கொல்லப்பட்ட மிருகத்தினுடைய மரணத்தைத் தாங்கள் தரித்திருப்பதாக உணர்ந்துகொள்ள வேண்டியிருந்தது. மேலும், தங்களுடைய நீதிகள் அழுக்கான கந்தைகளைப் போலவும், அத்தி இலைகளினால் உண்டான அரைக்கச்சையைப் போலவும் இருந்ததாக அவர்கள் உணர்ந்தது மாத்திரமல்ல, வேறு ஒருவருடைய நீதியினால் தாங்கள் தரிப்பிக்கப்பட்டதாக அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டியிருந்தது. மனிதன் தன் சுயநீதியினால், அல்லது நியாயப்பிரமாணத்தின் நீதியினால் தன்னை மறைத்துக் கொள்ளும்போது அது அழுக்கான கந்தையைப் போல இருக்கிறதென்றே வேதாகமம் சொல்லுகிறது (ஏசாயா 64 : 6).

மனிதனின் மீறுதலுக்காக ஒரு மிருகம் கொல்லப்பட்டது போல மனுக்குலத்தின் பாவத்திற்காக இயேசு கிருபாதார பலியானார். ஒருவன் கர்த்தராகிய இயேசு சிந்திய இரத்தத்தினால் தனக்குப் பாவமன்னிப்பு கிடைக்கிறது என்பதை விசுவாசித்து அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது அவருடைய மரணத்தைத் தரித்துக்கொள்ளுகிறான் (கலா. 3 : 27).

ஞானஸ்நானத்தில் நம்முடைய சுயநீதியாகிய அழுக்கான கந்தை நீக்கப்பட்டு நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய நீதியினால் தரிப்பிக்கப்படுகிறோம் என்ற சத்தியத்தின் உட்கருத்தைக் காணலாம். இந்தச் சத்தியங்களை விளங்கிக்கொள்ளாமல் ஞானஸ்நானம், வெறும் சடங்காச்சாரம் என்பதாகவோ, அல்லது மார்க்கத்தில் சேர்த்துக்கொள்ளப்படுதலுக்காகப் பெற்றுக்கொள்ளுவது என்பதாகவோ எடுத்தால், அது அர்த்தமற்ற சடங்காச்சாரமாகிவிடுமேயன்றி, ஆவிக்குரிய மேலான நன்மைகளைப் பயக்காது. பிரமாணத்தின் கிரியைகளினால் அல்ல, தேவன் இலவசமாய் இயேசுகிறிஸ்துவின் கிருபாதார பலியின் மூலம் நமக்கு அருளும் இரட்சிப்பே கிருபை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பிதாவாகிய தேவன் தமது குமாரனாகிய கிறிஸ்துவின் மூலம் வெளிப்படுத்தியிருக்கும் இந்த நீதியே அவரை விசுவாசித்ததினால் உண்டாகும் தேவநீதியாகிறது.

****

PP_200002

கர்த்தர் உன்னைக் காப்பார்!

“**த**ன் வழியைச் சிந்தித்துக்கொள்வது விவேகியின் ஞானம்” (நீதி. 14 : 8). நாம் கடந்து வந்ததும் கடக்கப் போகிறதுமான பாதையைப் பற்றிச் சிந்தித்து, அதை உற்றுக் கவனிக்குங்கால், அதில் ஆங்காங்கே சில இடறுதற்கேதுவான கற்களும், சறுக்கலான இடங்களும், மறைவான கண்ணிகளும் உள்ளன என்று நாம் அறிந்துகொள்ளலாம். இடறல்கள் வராமற்போவது கூடாத காரியம் என்று கர்த்தராகிய இயேசுதாமே கூறியிருக்கிறார் (லூக்கா 17 : 1). “என் கால்கள் தள்ளாடுதலுக்கும், என் அடிகள் சறுக்குதலுக்கும் சற்றே தப்பிற்று” என்று தேவ

பக்தனாகிய ஆசாப் எழுதுகிறான் (சங். 73 : 2). வலைகளும் கண்ணிகளும் தன் பாதையில் இருந்ததாக தாவீது கூறுகிறான் (சங். 25 : 15 ; 57 : 6). இப்படிப்பட்டதொரு பாதையைத் தேவன் தம்மிடத்தில் அன்புகூருகிற தம் ஜனங்களுக்கு அனுமதிக்கிறார். இவற்றின் மத்தியில் நாம் இடறாமல், சறுக்காமல், மறைவான கண்ணிகளில் சிக்கிக்கொள்ளாமல், தள்ளாடாமல், கால் பிசகாமல் செம்மையாய் நடக்க வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அவ்விதம் நடப்பதற்குத் தேவையான ஏதுக்களைத் தேவன் நமக்கு அருளிச் செய்திருக்கிறார். ஒரு புத்தாண்டிற்குள் அடியெடுத்து வைத்திருக்கும் நாம், நமக்குமுன் வைக்கப்பட்டுள்ள பாதைகளில் செம்மையாய் நடக்கும்படி இவற்றைக் குறித்துச் சற்று தியானிப்போமாக.

"உத்தமமாய் நடக்கிறவன் பத்திரமாய் நடக்கிறான்" (நீதி. 10 : 9). எனவே நமக்கு நியமிக்கப் பட்டுள்ள பாதைகளில் நாம் தவறிப் போவோமாகில், தவறு அப்பாதையைச் சார்ந்தது அல்ல, அதில் நடக்கிற நம் ஒவ்வொருவரையுமே சார்ந்தது என்பது தெளிவு. ஏனெனில், நம் முன் வைக்கப்பட்டுள்ள பாதை எப்படிப்பட்டதாயிருப்பினும், அதில் நாம் உத்தமமாய் நடப்போமானால் பத்திரமாகவே பாதுகாக்கப்பட்டிருப்போம் என வசனம் கூறுகிறதே! இதனாலேயே, "விவேகியோ தன் நடையின்மேல் கவனமாயிருக்கிறான்" என்று எழுதப்பட்டுள்ளது (நீதி. 14 : 15).

கர்த்தரின் வழி உத்தமர்களுக்கு அரண்; ஆனால் அதே வழி அக்கிரமக்காரருக்கோ கலக்கம் என்றும் நாம் வாசிக்கிறோம் (நீதி. 10 : 29). செங்கடலினூடே நடத்தப்பட்ட மீட்கப்பட்ட தேவ ஜனங்களுக்கு அவ்வழியானது சத்துருக்களுக்கு எதிரான மாபெரும் அரணாயிருந்தது. ஆனால் தேவ ஜனங்களை அழிக்கும் நோக்கத்துடன் அவர்களைப் பின்தொடர்ந்த எகிப்தியருக்கோ, அதே வழி அவர்களைக் கலங்கச் செய்வதாகவும், வருத்தமடையச் செய்வதாகவும், முடிவில் அழிவுக்கேதுவானதாகவும் இருந்தது (யாத். 14 : 22, 24, 25). அருமையானவர்களே! நாம் உத்தமராய் இருந்தால் நாம் நடக்க வேண்டிய வழி தண்ணீர்களினூடே இருப்பினும், அல்லது அக்கினியினூடேயிருப்பினும், நாம் வெற்றியுடன் அதைக் கடந்து வெளிவருவோம். அவற்றின் மத்தியில் நம் தேவன் நம்மோடு இருப்பார் (ஏசாயா 43 : 2).

இடறல்கள்:

"மெய்ஞ் ஞானத்தையும் நல்லாலோசனையையும் காத்துக்கொள். … அப்பொழுது நீ பயமின்றி உன் வழியில் நடப்பாய், உன் கால் இடறாது" என ஞானி கூறுகிறான் (நீதி. 3 : 21, 23). அனுதினமும் கர்த்தருடைய ஆலோசனையைக் கேட்டு, அவர் அருளிய வேதத்தின்படி ஜீவிப்பதின் மூலமாக நமக்கு வைக்கப்பட்டிருக்கிற பாதையில் நாம் இடறலின்றி நடக்க இயலும். இதையறிந்த ஆசாப், "உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்" (சங். 73 : 24) என்றும், ராஜாவாகிய தாவீது, "உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், … உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக" (சங். 143 : 10) என்றும் வேண்டுகின்றனர்.

"ஒருவன் பகலிலே நடந்தால் … இடறமாட்டான்" என்று நமதாண்டவர் உரைத்திருக்கிறார் (யோவான் 11 : 9). இரவிலே நடக்கிறவன் தன்னிடத்தில் வெளிச்சம் இல்லாதபடியினாலே இடறுகிறான் என்று அவர் தொடர்ந்து கூறுகிறார் (வச. 10). அந்தகாரத்தின் கிரியைகளைத் தள்ளிவிட்டுப் பகலில் நடக்கிறவர்கள் போல நாம் சீராய் நடக்க வேண்டும் (ரோமர் 13 : 12, 13). பகலில் நடக்கிறவர்கள் தங்கள் வழிகளில் தாறுமாறாய் நடக்கிறதில்லை. அவர்கள் தங்கள் சுயவிருப்பப்படி அல்ல, ஆவியானவரால் நடத்தப்பட்டு, கர்த்தருடைய வசனத்தின் வெளிச்சத்தில் நடக்கிறபடியால் இடறிப்போகிறதில்லை. ஆம்! அவருடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு இடறலில்லை (சங். 119 : 165). தேவன் அருளிய வேதம் அவர்கள் உள்ளத்தில் இருக்குமாயின் அவர்கள் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை (சங். 37 : 31). வழியில் இடறுதற்கேதுவான கற்கள் இருப்பினும், அவர்கள் அவைகளுக்கு விலகிப் போகிறார்கள். அவர்கள் கர்த்தருக்குப் பயப்படுகிறபடியினால் தங்கள் வழியில் நிதானமாய் நடக்கிறார்கள் (நீதி. 14 : 2). ஆனால் கால் துரிதமானவன் தப்பி நடக்கிறான். இப்படிப்பட்டவர்களைக் கர்த்தர், "தாறுமாறாய் ஓடுகிற வேகமான பெண்ணொட்டகம் நீ" எனக் கடிந்துகொள்கிறார் (எரே. 2 : 23). நாமோ கர்த்தருடைய ஆவியானவரால் நடத்தப்படுவோமாயின், ஒரு குதிரை வனாந்தர வெளியிலே நடக்கிறதுபோல, அவர் நம்மை இடறாமல் நடக்கச் செய்வார் (ஏசாயா 63 : 13, 14). தன்னிச்சையாக நடக்கிறவர்களுக்கும் தேவனால் நடத்தப்படுகிறவர்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை இதிலே நாம் காணலாம். கடிந்துகொள்ளுதலை வெறுக்கிறவர்களும் இப்பாதையில் இடறி விழ நேரிடும் (ஓசியா 4 : 4, 5). "கடிந்துகொள்ளுதலைக் கவனித்து நடக்கிறவனோ விவேகி" என ஞானி கூறுகிறான் (நீதி. 15 : 5).

மேலும், "இருண்ட மலைகளில் உங்கள் கால்கள் இடறுவதற்கு முன் … உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு மகிமையைச் செலுத்துங்கள்" என்று மேட்டிமைச் சிந்தையாயிருந்த ஒரு கூட்டத்தாரை தேவன் எச்சரிக்கிறார் (எரே. 13 : 15, 16). கர்த்தருடைய நாமத்திற்கேற்ற மகிமையை அவருக்குச் செலுத்தாதவர்களும், மேட்டிமைச் சிந்தையுள்ளவர்களும் இப்பாதையில் இடறுண்டு போவார்கள் என இவ்வசனம் நம்மை எச்சரிக்கிறது. எனவே மனத்தாழ்மையுடன், கர்த்தருக்கு மகிமையைச் செலுத்திக் கொண்டு இப்பாதையில் நாம் கடந்து செல்வோமாக.

சறுக்கல்கள்:

"என் கால் சறுக்குகிறது என்று நான் சொல்லும்போது, கர்த்தாவே, உமது கிருபை என்னைத் தாங்குகிறது" என்று சங்கீதக்காரன் கூறுகிறான் (சங். 94 : 18). ஒரு தேவபிள்ளையின் பாதங்கள் தேவ கிருபையிலே தங்கியிருக்க வேண்டும். தங்கள் சுய பெலத்தைச் சார்ந்துகொள்கிறவர்கள் இப்படிப்பட்ட சறுக்கலான வழிகளில் சரிந்து போவார்கள். ஆகவே, கர்த்தர் வீரனுடைய கால்களில் பிரியப்படார் என்றும், தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் அவர் பிரியமாயிருக்கிறார் என்றும் கூறப்பட்டுள்ளது (சங். 147 : 10, 11). முற்றிலுமாகக் கர்த்தருடைய கிருபையைச் சார்ந்து ஜீவிக்கிறவர்கள் மாத்திரமே வழுக்கலான பாதைகளில் வழுவிப் போகாமல், அசைவில்லாதவர்களாய், கிருபையைப் பற்றிக்கொண்டு முன்செல்ல இயலும். வானத்திலே பெரிய அடையாளமாகக் காணப்பட்ட ஒரு ஸ்திரீயைக் குறித்து வெளிப்படுத்தின விசேஷம் 12 : 1 - இல் நாம் காண்கிறோம். அவள் பாதங்களின் கீழே சந்திரன் இருந்தது. சபையானது உன்னத ஜீவியத்தில் நிலைத்திருக்க வேண்டுமானால் அது கிறிஸ்துவின் கிருபையின்மேல் நிற்க வேண்டும். தேவ கிருபையைச் சார்ந்து, தேவ கிருபையினால்

ஆட்கொள்ளப்பட்டு ஜீவிக்கிறவர்கள் மாத்திரமே பாவத்தின் வஞ்சனையினால் மேற்கொள்ளப்படாமல் தங்களைக் காத்துக்கொள்ள இயலும் (ரோமர் 6 : 14). தாவீதும் அவனுடைய மனிதரும் சீயோன் கோட்டையைப் பிடிக்கும்படி வழுக்கலான ஒரு பாதையினூடாகவே ஏறிச் செல்ல வேண்டியதாயிருந்தது. தேவனுடைய மிக உன்னதமான அனுபவங்களைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிற நாம் கடந்து செல்லும்படி நியமிக்கப்பட்டுள்ள வழியில் சில வழுக்கலான, சறுக்கலான இடங்கள் உண்டு. அவற்றைக் கண்டு நாம் அதைரியப்பட்டுப் பின்வாங்க வேண்டியதில்லை. எப்படிப்பட்டப் பாதையையும் நாம் வெற்றியுடன் கடந்து செல்ல கிருபை நமக்குப் போதுமானதாயிருக்கிறது. ஆகவே, 'கிருபை உண்டாவதாக', 'கிருபை உண்டாவதாக' என்று கூறிக்கொண்டே நாம் கவனமாய் அடியெடுத்து வைப்போமாக. அப்போது நிச்சயமாகவே அவரது அளவற்ற கிருபை நம்மைத் தாங்கி, நம் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, நம் அடிகளை அந்த உன்னத ஸ்தலங்களில் உறுதிப்படுத்தும்.

"ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன்; அவர் என் கால்களை மான்கால்களைப்போலாக்கி, உயர மான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார்" என ஆபகூக் பாடுகிறான் (ஆப. 3 : 19). உயர்தலங் களில்தான் அதிகமான சறுக்கல்களும் சரிவுகளும் காணப்படும். கன்மலைகளில் ஓடித்திரியும் மான்கள் வழுக்கலான குன்றுகளையும், செங்குத்தான பாறைகளையும் எளிதாகத் தாண்டிச் செல்லுகின்றன. ஒரு மானுக்கு அவற்றைக் கடப்பது ஒரு பொருட்டல்ல. மணவாட்டி மணவாளனை, குன்றும் பிளப்புமான கன்மலைகளில் குதித்துவரும் மானுக்கும், மரைகளின் குட்டிக்கும் ஒப்பிடுகிறாள் (உன். 2 : 17). நாம் நம் மணவாளனோடு சேர்ந்து இருக்கும்போது, அவர் நம்முடைய கால்களையும் மான்கால்களைப் போலாக்கி, தம்மைப் போல நம்மையும் உயர்தலங்களில் நடக்கவும், குதித்துச் செல்லவும் பழக்குவார். நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் உன்னத நிலவரத்திற்கு வளர்ந்து வரும்போது, ஒருகாலத்தில் மலைபோல் தோன்றின சோதனைகள், நம்மை பயமடையச் செய்த சந்தர்ப்பங்கள், தேவகிருபையினால் நம் பாதங்களின் கீழாக்கப்பட்டு, நாம் துள்ளிக் குதித்துத் தாண்டிச் செல்வதற்கேற்றவையாய் மாறிப் போகும். முன்பு நம்மைத் தடுமாற்றமடையச் செய்த சறுக்கலான சந்தர்ப்பங்கள், இப்போது நாம் நகைக்கத்தக்கவையாய் மாறிப் போகும் (சங். 126 : 1, 2). கிருபை ஒரு சாதாரண மனுஷனில் நடப்பிக்கிற மகத்தான கிரியையைப் பாருங்கள்! தேவனுடைய கிருபையின் மகா மேன்மையான இந்த ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்யும்படியாகவே தேவன் நம்மை உன்னதங்களில் வைத்திருக்கிறார் (எபே. 2 : 6, 7). அல்லேலூயா!

கண்ணிகள்:

"அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கு ... தப்புவிப்பார்" (சங். 91 : 3). 91 - ஆம் சங்கீதத்தில் உன்னதமானவரின் மறைவிலும் சர்வ வல்லவரின் நிழலிலும் தங்கியிருக்கிற ஒருவனுக்குரிய ஆசீர்வாதங்கள் கூறப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட மனுஷனின் பாதையிலும் சாத்தானால் ஆங்காங்கே சில கண்ணிகள் வைக்கப்படுகின்றன. கண்ணி என்பது மறைவாக வைக்கப்படுவதாகும். "எவ்வகையான பட்சியானாலும் சரி, அதின் கண்களுக்கு முன்பாக வலையை விரிப்பது விருதா" (நீதி. 1 : 17). இதையறிந்த நம் சத்துருவானவன் நாம் செல்லும் பாதையில் மறைவாகக் கண்ணிகளை வைத்துப் பதிவிருக்கிறான். என்றாலும் உறங்காமலும் தூங்காமலும் நம்மைக் காக்கும் கர்த்தரோ, அவருடைய நிழலில் தங்கியிருக்கும் நம்மை அக்கண்ணிகளுக்குத் தப்புவிக்கிறார். சில சந்தர்ப்பங்களில், நாம் அறியாமலேயே அப்படிப்பட்ட மறைவான கண்ணிகளுக்குத் தேவன் நம்மைத் தப்புவிக்கிறதுமுண்டு. யாரை அவர் அவ்விதம் தப்புவிப்பார்? அவருடைய செட்டைகளுக்குள் மறைந்திருக்கிறவர்களை மட்டுமே. "உத்தமமான வழியிலே விவேகமாய் நடப்பேன்" என தாவீது பாடுகிறான் (சங். 101 : 2). கர்த்தருக்குள் மறைந்துகொள்வதே இந்த விவேகமாகும். இதனையே, "விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்துகொள்ளுகிறான்; பேதைகளோ நெடுகப் போய்த் தண்டிக்கப்படுகிறார்கள்" என்று நீதிமொழிகள் 27 : 12 - இல் நாம் வாசிக்கிறோம். இதனாலேயே சங்கீதக்காரன், "விக்கினங்கள் கடந்துபோகுமட்டும் உமது செட்டைகளின் நிழலிலே வந்து அடைவேன்" என்கிறான் (சங். 57 : 1). மேலும், சடிதியான ஆபத்து நேரிடும்போது, "கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து, உன் கால் சிக்கிக்கொள்ளாதபடி காப்பார்" என நாம் வாசிக்கிறோம் (நீதி. 3 : 25, 26). கர்த்தரையே நம் நம்பிக்கையாகக் கொண்டிருப்போமாயின், நாம் எவ்வித சத்துவமுமற்ற ஜெந்துவைப் போல இருப்பினும், எவ்வளவு பேதையான பட்சியைப் போல இருப்பினும், நமக்கு விரோதமாக வைக்கப்படும் சத்துருவின் எப்படிப்பட்ட பலத்த கண்ணிகளும் விருதாவாகும். "வேடருடைய கண்ணிக்குத் தப்பின குருவியைப்போல நம்முடைய ஆத்துமா தப்பிற்று, கண்ணி தெறித்தது, நாம் தப்பினோம். (ஏனெனில்) நம்முடைய சகாயம் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது" என நாம் சாட்சி பகருவோம் (சங். 124 : 7, 8). மேலும், தேவ பயத்துடன், ஞானவான்களின் (பரிசுத்தவான்களின்) போதகத்தைக் காத்து நடக்கிறவர்கள் நிச்சயமாகவே மரணக் கண்ணிகளுக்குத் தப்புவிக்கப்படுவர் (நீதி. 13 : 14 ; 14 : 27). "என் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிக்கொண்டிருக்கிறது; அவரே என் கால்களை வலைக்கு நீங்கலாக்கிவிடுவார்" என்று தேவ பயத்துடன், தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்த தாவீது அறிக்கையிடுகிறான் (சங். 25 : 15). நண்பனே! உன் கண்கள் எப்போதும் கர்த்தரையே நோக்கிக் கொண்டிருக்குமாகில், உன் கால் சிக்கிக்கொள்ளாமல் உன்னைக் காக்கும்படி இரவும்பகலும் கர்த்தருடைய கண்கள் எப்போதும் உன்மேலேயே நோக்கமாயிருக்கும் என்பதை மறவாதே!

தள்ளாடுதல்:

மனுஷர் தாங்கள் வயது சென்று பெலன் குன்றிப் போகும்போதும், மிக அதிகமான பாரத்தைச் சுமக்கும்போதும் தள்ளாடுவது இயல்பு. ஆனாலும் தேவ பிள்ளைகளோ தங்களுடைய பாதையின் முடிவு வரை இளைப்படையவோ, பெலன் குன்றித் தள்ளாடவோ அவசியமில்லை. ஏனெனில் என்றும் மாறாத தேவனே அவர்களுடைய பெலனாயிருக்கிறார். வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தரிடத்திலிருந்தே அவர்களுக்கு என்றென்றும் ஒத்தாசை வருகிறது. கர்த்தரையே உன் பெலனாகக் கொண்டிருக்கிற நண்பனே! அவர் "உன் காலைத் தள்ளாடவொட்டார்" (சங். 121 : 3). நீ முதிர்வயதிலும் கனி தந்து புஷ்டியும் பசுமையுமாயிருப்பாய். "இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்" (ஏசாயா 40 : 30, 31). கழுகுக்குச் சமானமாய் அவர்கள் வயது திரும்ப வால வயது போலாகும்!

மேலும், தேவன் "நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்". இந்த நீதிமான், கர்த்தர்மேல் தன் பாரத்தை வைத்துவிட்டு, அவரில் இளைப்பாறுகிறவன் ஆவான் (சங். 55 : 22). எனவே பூமிக்குரிய எந்தப் பாரமும் அவனைத் தள்ளாடச் செய்கிறதில்லை. தேவ பிள்ளைகளாகிய நாம் கர்த்தருடைய நுகத்தை மாத்திரமே சுமக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். அவருடைய நுகம் மெதுவாயும், அவருடைய சுமை இலகுவாயும் இருக்கிறது (மத். 11 : 30). அன்பினால் கீழ்ப்படிகிறவர்களுக்கு அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல (I யோவான் 5 : 3). ஆகையால் இப்பாதை நம்மை இளைப்படையச் செய்கிறதில்லை. காலேப் இஸ்ரவேல் புத்திரருடன் நாற்பது வருடங்கள் பெரிய வனாந்தரத்தினூடே நடந்துவந்து, கானானைச் சுதந்தரித்தபின், தன் பின்னாட்களில், "இதோ, இன்று நான் எண்பத்தைந்து வயதுள்ளவன். மோசே என்னை அனுப்புகிற நாளில், எனக்கு இருந்த அந்தப் பெலன் இந்நாள்வரைக்கும் எனக்கு இருக்கிறது" என்று சாட்சி பகருகிறான் (யோசுவா 14 : 10, 11). அவன் உத்தமனும் நீதிமானுமாயிருந்தபடியால் தேவன் அவனைத் தள்ளாடவிடவில்லை. எசேக்கியேல் 1 : 7 - இல், குறிப்பிடப்பட்டுள்ள ஜீவன்களின் கால்கள் நிமிர்ந்த கால்களாயிருந்தன என்றும், அவை துலக்கப்பட்ட வெண்கலம் போல மின்னிக் கொண்டிருந்தன என்றும் நாம் வாசிக்கிறோம். இது, தேவனுக்கு முன்பாக உத்தமமான ஜீவியம் செய்கிறவர்கள் உள்ளான பெலனுள்ளவர்களாய் விளங்குவார்கள் என்பதைக் காட்டுகிறது. அவர்கள் எந்தச் சோதனையிலும், எந்தச் சூழ்நிலையிலும் தள்ளாடுவதில்லை. உத்தம ஜீவியத்தை இழந்து போகிறவர்களோ சிறிய சோதனையிலும் தள்ளாடிப் போவார்கள். நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற பாதையில் நாம் தள்ளாடாதபடிக்கு, நம்முடைய உத்தமத்தைக் காத்துக்கொண்டு. நம்மை விசாரிக்கிறவரான கர்த்தர்மேல் நம் கவலைகள், பாரங்கள் யாவற்றையும் வைத்துவிட்டு முன் செல்லுவோமாக.

அருமையானவர்களே! தேவன் நமக்கு நியமித்திருக்கிற இப்பாதையில் பல இன்னல்களும் இடர்களும் உண்டு. என்றாலும் நம்மைக் காக்கிறவர் நம் முன் செல்லுகிறார். வழியில் நம்மைக் காக்கிறதற்கும், தாம் ஆயத்தம்பண்ணின ஸ்தானத்துக்கு நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறதற்கும் அவர் நமக்கு முன்னே செல்லுகிறார் (யாத். 23 : 20). அவருடைய அடிச்சுவடுகளில் நடக்கும்படி மாத்திரம் நாம் கவனமாயிருந்து, உத்தமமாய் அவரைப் பின்செல்லுவோமாகில் இப்பாதையின் முடிவிலிருக்கிற ஒளிமயமான மகிமையின் நகரத்தை விரைவில் நாம் சென்றடையலாம். தாபரிக்கும் ஊருக்குப் போய்ச் சேர, அவர் நம்மைச் செவ்வையான வழியிலே நடத்துவார் (சங். 107 : 7). அல்லேலூயா!

****

ஞருன□ □ஏ□த□□ன□ஷ தூரீஅ

நம்முடைய தேவன் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட தம்முடைய சொந்த ஜனங்களாகிய நம்முடைய ஜீவியத்தில் உலகத்தோற்றத்திற்கு முன்னதாகவே நமக்காக முன்நியமித்தவைகளை நிறைவேற்றும்படியாக மிக வைராக்கியமாகவும் துரிதமாகவும், தம்முடைய அநாதி தீர்மானத்தின்படியும் திட்டத்தின்படியும் எல்லாவற்றையும் நடப்பித்துக் கிரியை செய்துகொண்டிருக்கிறார். எனவே கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டு, பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெற்று இந்த மேன்மையான அப்போஸ்தல பிரதிஷ்டையுள்ள பரிசுத்தவான்களின் ஐக்கியத்தில் இருக்கிற நாம் ஒவ்வொருவரும் தேவகுமாரனுடைய சாயலை அடைவதும் (ரோமர் 8 : 29), அவருடைய சுதந்தரமாவதும் (எபே. 1 : 12) தேவனால் கிறிஸ்து இயேசுவுக்குள் அநாதியாய் முன்குறிக்கப்பட்டவைகளே. அதற்காக நம் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட ஜீவியத்தில் தேவன் அனுமதிக்கும் பாதைகளும் அவற்றின் மூலம் அவர் நம்மில் நடப்பிக்கும் கிரியைகளும் உண்டு. அவை யாவும் தம்முடைய சித்தத்தின் ஆலோசனையின்படி தீர்மானிக்கப்பட்டவைகளும், முன் நியமிக்கப்பட்டவைகளுமாகும். இப்படியாக நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்து அவர் நமக்கு நியமித்த பாதையில் ஓடுவோமென்றால், அவர் நம்மேல் கொண்ட நித்திய நோக்கத்தை நிறைவேற்றுவார்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் ஒரு ஓட்டத்திற்கு ஒப்பனையாகக் கூறப்பட்டிருக்கிறது. எபிரெயர் 12 : 1 - இல், "ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" என நாம் வாசிக்கிறோம். எப்படி உலகத்தில் ஒரு பந்தயப்பொருளைப் பெற்றுக்கொள்ளும்படியாக ஒரு ஓட்டக்களம் நியமிக்கப்படுகிறதோ அப்படியே நம்முடைய ஜீவியத்திலும் நாம் அழிவில்லாத கிரீடத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படியாகத் தேவனால் நம் ஒவ்வொருவருக்கும் முன் நியமிக்கப்பட்டதான ஓட்டக்களமாகிய ஒரு பாதை உண்டு. நமக்கு நியமிக்கப்பட்ட பாதையைத் தவறவிட்டு நாம் ஓடுவோமென்றால் நம் பந்தயப்பொருளை நாம் அடைய முடியாது. கடந்த சில வருடங்களுக்கு முன்பு ஓட்டப்பந்தயம் ஒன்றில் பங்குபெற்ற இந்தியாவைச் சேர்ந்த ஒரு வீராங்கனை மிக வேகமாக ஓடி முதலாவதாக வந்து சேர்ந்தாள். எனினும் அவள் பதக்கம் ஒன்றும் பெற்றுக்கொள்ளாமல் ஏமாற்றத்துடனும் துக்கத்துடனும் திரும்பினாள். ஏனெனில் அவள் தனக்கு நியமிக்கப்பட்ட பாதையில் (track) ஓடாமல் தன் பாதையைத் தவறவிட்டு வேறு பாதையில் ஓடினாள். ஒருவன் மல்லயுத்தம் பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான் (II தீமோ. 2 : 5). ஆகவேதான் அப். பவுல், "கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன். ... கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக் காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" எனக் கூறுகிறார் (பிலி. 3 : 12 - 14).

பழைய ஏற்பாட்டில் ஆபிரகாமுடைய ஜீவியத்தைக் கவனிக்கும்போது, அவன் தேவனுடைய அழைப்பிற்கிணங்கி, தன் தேசத்தையும் இனத்தையும் விட்டு, கர்த்தர் வாக்குத்தத்தம்பண்ணின தேசத்தை நோக்கித் தன்னுடைய பிரயாணத்தைத் தொடர்ந்தான். அவன் புறப்பட்டு தெற்கே பிரயாணம் பண்ணிக்கொண்டு போனபோது அந்தத் தேசத்தில் பஞ்சம் உண்டாயிற்று. தேசத்தில் பஞ்சம் கொடிதாயிருந்ததினால், பஞ்சத்துக்குத் தப்பும்படி அவன் தன்னுடைய பிரயாணத்தின் பாதையைத் தவறவிட்டு, எகிப்து தேசத்திற்குப் போனான் (ஆதி. 12 : 9, 10). இதினிமித்தமாக அவன் பார்வோனுக்குப் பயந்து தன்னுடைய மனைவி சாராளைத் தன் சகோதரி என்று சொல்லி,

உண்மையை மறைக்க வேண்டியதாயிற்று (ஆதி. 12 : 18, 19 ; 20 : 12). மேலும் அவன் எகிப்துக்குப் போனதினிமித்தம் ஒருவிதத்தில் லோத்தினுடைய பின்மாற்றத்திற்கும் அவன் காரணமாகிவிட்டான் எனக் கூறலாம். [ஏனெனில் ஆபிரகாமோடு சேர்ந்து லோத்தும் எகிப்துக்குப் போனபடியினால் அதன்பின்பு லோத்து ஆபிரகாமை விட்டுப் பிரிந்து தனக்கு இடத்தைத் தெரிந்துகொண்டபோது அந்த இடம் எகிப்துதேசத்தைப் போல இருந்தது என அவன் கண்டான் (ஆதி. 13 : 10). தான் முன்பு கண்ட செழிப்பான எகிப்து தேசம் அவனுக்கு ஞாபகத்தில் வந்திருக்கக்கூடும்]. மேலும் எகிப்து தேசத்தாளாகிய ஆகார் என்னும் அடிமைப்பெண், அவள் மூலமாக மாம்சத்தின்படி பிறந்த ஒரு இஸ்மவேல் இவைகள் எல்லாவற்றிற்கும் ஆபிரகாம் காரணனாகி விட்டான். இந்த இஸ்மவேலின் சந்ததியின் மூலம் அரேபிய - இஸ்ரேல் போராட்டங்கள் இன்றையதினம் வரைக்கும் நீடித்திருப்பதையும் நாம் அறிவோம். ஆபிரகாம், தேசத்தில் உண்டான பஞ்சத்தினிமித்தம் தனக்கு வந்த சோதனையில், கஷ்டத்தைப் பொறுமையாய்ச் சகிக்கக்கூடாமல் தன் பாதையைத் தவறவிட்டபடியினால் ஏற்பட்ட விளைவுகள் எத்தனை! ஆகவே அவன் தான் தவறவிட்ட இடத்தை மறுபடியும் திரும்பி வந்து சேர்ந்தடைந்து தன்னுடையப் பிரயாணத்தைத் தொடரவேண்டியதாயிற்று (ஆதி. 13 : 3, 4). பிரியமானவர்களே! நீங்களும் ஒருவேளை கடந்த நாட்களில் உங்களுடைய ஜீவியத்தில் வந்ததான சோதனைகளையும் கஷ்டங்களையும் பொறுமையாய்ச் சகிக்கக்கூடாமல், மனுஷ பெலனையும் உதவியையும் நிழலையும் நாடி, தேவன் உங்களுக்கென்று நியமித்த பாதையை விட்டு விலகி ஜீவித்ததினிமித்தமாக உங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் பல வீழ்ச்சிகளும் தோல்விகளும் பின்மாற்றங்களும் அடிமைத்தனங்களும் வந்திருக்கக்கூடும். மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண் டாக்குவார் (I கொரி. 10 : 13). ஆகையால் நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக என வெளிப்படுத்தின விசேஷம் 2 : 5 - இல் நாம் வாசிக்கிறோம். தேவன் நமக்கு நியமித்த பாதையில் சோதனைகளும் கஷ்டங்களும் உண்டு. ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருப்பினும், தேவன் நம்மை அழைத்துச் செல்லுகிற அப்பாதையின் முடிவு பரம கானானேயாகும். ஆகவே நாம் விட்டுவிட்ட பாதையாகிய அவர் நியமித்த பாதையைத் திரும்ப வந்தடைந்து நம்முடைய ஓட்டத்தை நாம் தொடருவோமாக.

யோசேப்புக்கும் ஒரு பாதை நியமிக்கப்பட்டிருந்தது. சங்கீதம் 105 : 19 - இல், கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் அவருடைய வசனம் அவனைப் புடமிட்டது என நாம் வாசிக்கிறோம். யோசேப்பின் சகோதரர்கள் அவன்மேல் பொறாமை கொண்டு, பகைத்து அவனைக் குழியில் போட்டனர்; அவனை அடிமையாக விற்றுப்போட்டனர். அவன் பொய்யாய்க் குற்றஞ்சாட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்டான். இவையெல்லாம் மனுஷராலல்ல, தேவன் தனக்கு நியமித்தவைகள் என அறிந்த யோசேப்பு கர்த்தர் தன்னோடு இருக்கிறதை உணர்ந்து அந்தக் கடினமான பாதையையும் கடந்து சென்று தன் பரிசுத்தத்தையும் காத்துக்கொண்டான். அவன் எகிப்து தேசத்திற்கு அதிபதியாய் உயர்த்தப்பட்ட பின்பு தன் சகோதரரைப் பார்த்து, அவர்களல்ல, தேவனே தன்னை அவ்விடத்திற்கு அனுப்பினார் என்று சொல்லுகிறதை நாம் காண்கிறோம் (ஆதி. 45 : 5, 7, 8). ஆகவேதான் அவன் தன் சகோதரரைப் பழிவாங்காது, அவர்களோடு பட்சமாய்ப் பேசி, அவர்களுக்கு ஆகாரம் கொடுத்து அவர்களைப் பராமரித்தான். அருமையானவர்களே! நம்மில் எத்தனைபேர் இப்படிப்பட்டப் பாதைகளில் கடந்து செல்லும்போது மனுஷரல்ல, தேவன் நமக்கு நியமித்த பாதை இது என்று எண்ணி சந்தோஷமாகக் கடந்து செல்லுகிறோம்? மனுஷர்தான் எனக்கு இப்படி வேண்டுமென்றே செய்கிறார்கள், பகைக்கிறார்கள், உபத்திரவப்படுத்துகிறார்கள் என்று நாம் எண்ணுவோமாயின் நம்மால் இந்தப் பாதையில் சந்தோஷமாக ஓட முடியாது. ஒருவேளை உங்களுடைய குடும்பத்தினரோ, உறவினரோ, அயல்வீட்டாரோ, அலுவலகத்திலுள்ளவர்களோ உங்களைப் பகைக்கலாம். இவைகளெல்லாம் தேவன் நமக்கு அனுமதித்த பாதைகள் என்று அறிந்து சந்தோஷமாக ஆண்டவராகிய இயேசுவை நோக்கி நாம் ஓடுவோமாக. ஒருவேளை நாம் தப்பித்துக்கொள்ளும்படியாகவோ தவிர்க்கும்படியாகவோ நினைத்தாலும் பிரயாசப்பட்டாலும், தப்ப முடியாதபடி நம்மை வலையில் அகப்படுத்தி, நம் இடுப்புகளின்மேல் வருத்தமான பாரத்தை ஏற்றி, மனுஷரை நம் தலையின்மேல் ஏறிப் போக தேவன் அனுமதிக்கலாம். ஆயினும் முடிவில் அவர் நம்மை செழிப்பான இடத்தில் கொண்டுவந்துவிடுவார் (சங். 66 : 11, 12).

உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்த யோபினுடைய ஜீவியத்தில், அவனுக்குண்டான எல்லாம் நஷ்டமாயின. அவனுடைய பத்து பிள்ளைகளும் இறந்து போயினர். அதுவுமல்லாமல் சாத்தான் யோபின் உள்ளங்கால் தொடங்கி அவன் உச்சந்தலைமட்டும் கொடிய பருக்களால் அவனை வாதித்தான். இவைகளெல்லாம் கர்த்தருடைய அனுமதியின் பேரில் அவனுக்கு எதிரான சாத்தானின் கொடிய தாக்குதல்களாயிருந்தன. இத்தனை சொல்லொண்ணா துயரங்களையும் நஷ்டங்களையும் உபத்திரவங்களையும் சகித்த யோபு தன்னுடைய நாவினால் பாவஞ்செய்யவுமில்லை; தேவனைப் பற்றிக் குறைசொல்லவுமில்லை. தன்னுடைய உத்தமத்தில் அவன் உறுதியாயிருந்தான். ஏனெனில் தேவன் தன்னைச் சோதித்தறியும்படியாய் அவை அவர் தனக்குக் குறித்தவைகள், அனுமதித்தவைகள் என அவன் அறிந்திருந்தான். ஆகவேதான் அவன், அவர் என்னைச் சோதித்த பின் நான் பொன்னாக விளங்குவேன். அவர் தம்முடைய சித்தத்தின்படியெல்லாம் செய்வார்; எனக்குக் குறித்திருக்கிறதை அவர் நிறைவேற்றுவார் எனக் கூறுகிறான் (யோபு 23 : 10,13, 14). கர்த்தர் கொடுத்த பிரமாணங்கள், கற்பனைகளின் பாதையில் அவற்றின்படி உத்தமமாய் ஜீவிக்கும்போது உபத்திரவங்கள், சோதனைகள் வழியாய்க் கடந்து செல்ல வேண்டும் என்பதை அறிந்தவனாக அவன், "என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்" என்று சொல்லி, அவற்றைப் பொறுமையோடு சகித்திருக்கிறான். அருமையானவர்களே! உங்களுடைய ஜீவியத்திலும் விசுவாசத்தின் பரிசோதனையாக தேவனுடைய அனுமதியின் பேரில் சாத்தான் உங்களைச் சோதிக்கலாம். உங்களுக்கு உண்டான பணம், பொருள் நஷ்டமடையலாம்; வியாதிகள் உங்களைத் தாக்கலாம். ஆகிலும் பொன்னைப் பார்க்கிலும் அதிகவிலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம்சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும் என அறிந்தவர்களாய் (I பேதுரு 1 : 7), கர்த்தர் குறித்ததான விசுவாசப் பாதையில் அவரை மாத்திரம் நோக்கிப் பார்த்து ஓடுவீர்களாக.

பிதாவின் சித்தம் செய்யும்படியாய் வந்த நமது ஆண்டவராகிய இயேசுவின் ஜீவியமும் ஊழியமும் பிதாவினால் முன்நியமிக்கப்பட்டவைகளே. அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து நமக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார். ஆகவே அவர் பிதாவிடத்தில் ஜெபிக்கும்போது யோவான் சுவிசேஷம்

17 : 4 - இல், "பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்" என்றார். "அந்தப்படி உம்முடைய கரமும் உம்முடைய ஆலோசனையும் முன்குறித்தவைகள் யாவையும் செய்யும்படி, ஏரோதும் பொந்தியுபிலாத்தும், புறஜாதிகளோடும் இஸ்ரவேல் ஜனங்களோடுங்கூட, நீர் அபிஷேகம்பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு விரோதமாய், மெய்யாகவே கூட்டங்கூடினார்கள்" என்ற வசனத்திற்கேற்ப (அப். 4 : 27, 28), தம்முடைய சிலுவைப் பாடுகளும், மரணமும் பிதாவினால் முன்குறிக்கப்பட்டவைகள் என்று அறிந்தவராய் அவர், தீர்மானிக்கப்பட்டபடியே மனுஷகுமாரன் போகிறார் என்று கூறி (லூக்கா 22 : 22), பிதா தமக்கு நியமித்த பாதைக்குத் தம்மை ஒப்புக்கொடுத்து, கீழ்ப்படிந்து, தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். அப். பவுலும், "கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்தஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன். ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், ... ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்" என்று கூறுகிறார் (அப். 20 : 23, 24).

நமக்கு முன்னோடினவராகிய கர்த்தராகிய இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்து ஓடும்படியாய் அழைக்கப்பட்டதான நம் ஒவ்வொருவருக்கும் தேவன் முன்குறித்த பாதை உண்டு. அந்தப் பாதையில் நாம் அசைக்கப்படாமலும் இளைப்படையாமலும் ஓடும்படிக்கு நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோம் என்று அறிந்தவர்களாயும், பரிசுத்தஆவியினால் பெலப்படுத்தப்பட்டவர்களாயும் (I தெச. 3 : 2, 3 ; ஏசாயா 40 : 31), நம் தேவன் நமக்கு வைத்திருக்கிறதான பிரதிபலனைப் பெற்றுக்கொள்ளும்படியாக நம்முடைய இலக்கைத் தவறவிடாமல் விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடி முடிக்கத் தேவன்தாமே நமக்குக் கிருபை புரிவாராக!

****

மகிமைக்குள் பிரவேசித்த தலைமைப் பாஸ்டர், பாஸ்டர் C. K. லாசரஸ் அவர்களின் வாழ்க்கையைப் பற்றிய மேலும் சில குறிப்புகள்

(இது நவம்பர் '99 - இதழில் வெளியிடப்பட்ட அவரது வாழ்க்கைக் குறிப்பின் தொடர்ச்சியாகும்).

பாஸ்டர் லாசரஸ் அவர்கள் நம்முடைய சபையின் ஊழியத்தில் சேருமுன்னர் வேறொரு சபையில் ஊழியஞ்செய்து வந்தார் என நாம் ஏற்கனவே கண்டோம். அந்நாட்களில் அவர் அப். பவுலின் ஊழியம், ஜீவியம், உபதேசம் ஆகியவற்றை ஆராய்ந்து அறிந்து, விவாகம் செய்யாமலிருந்து ஊழியஞ் செய்வதையே தெரிந்துகொண்டார். சில சகோதரரிடம் அவர் தன்னுடைய வாஞ்சையைத் தெரியப்படுத்தினபோது, அவர்கள், "சிலோன் பெந்தெகொஸ்தே சபையின் (நமது சபையின் பழைய பெயர்) சுவிசேஷ ஊழியர்கள் இப்படிப்பட்டப் பிரதிஷ்டையுள்ள தேவனுடைய ஊழியக்காரர்களாவர். நீர் அவர்களோடு சேர்ந்து ஊழியம் செய்யலாம்" என்று சொன்னார்கள்.

அதற்கிணங்க 1943 - இல், அப்போது கோட்டயத்தில் கர்த்தருக்கு ஊழியஞ் செய்துகொண்டிருந்த பாஸ்டர் A. K. பிலிப்போஸ் அவர்களிடம் சகோதரன் லாசரஸ் தொடர்புகொண்டு, சுவிசேஷ வேலை செய்ய வேண்டும் என்ற தன்னுடைய வாஞ்சையை வெளிப்படுத்தினார். பாஸ்டர் பிலிப் போஸ் அவர்கள் அதைப் பற்றி, நமது சபையின் ஸ்தாபகரான பாஸ்டர் பால் அவர்களுக்குக் கடிதம் எழுதினார். அதற்கு மறுமொழியாக அவர், 'லாசரஸ் ஊழியத்திற்கென்று தெரிந்துகொள்ளப்பட்ட ஒருவர். அவர் உடனடியாக விசுவாச வீட்டிற்கு வர வேண்டும்' என்று எழுதினார். சகோதரன் லாசரஸ் தாமதமின்றி தன்னுடைய எல்லா ஆஸ்திகளையும் விற்று விட்டு பயிற்சி முகாமில் சேர்ந்தார். பின்பு ஒருநாள் நீண்ட அங்கி தரித்த ஒருவர் தன் அருகில் வந்து நின்று தன்னை முழங்காற்படியிடும்படி கட்டளையிட்டு, தன்னுடைய சிரசின்மீது கரத்தை வைத்து தன்னை ஆசீர்வதிப்பதாக சகோதரன் லாசரஸ் ஒரு சொப்பனம் கண்டார். இதைப் பாஸ்டர் A. C.தாமஸ் அவர்களிடம் அவர் சொன்னபோது அவர், 'நீண்ட அங்கி தரித்திருந்தவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே. சந்தேகப்பட வேண்டாம். கர்த்தர் உன்னை ஆசீர்வதித்திருக்கிறார்' என்று கூறினார். இந்த வார்த்தையினால் சகோதரன் லாசரஸ் இன்னும் அதிக உற்சாகமடைந்தார். அடுத்த வருடத்தில் அவர் ஊழியத்திற்கென்று வேறுபிரிக்கப்பட்டார். அந்நாள் முதல் முடிவுபரியந்தம் தேவனுடைய வீட்டில் அவர் உண்மையுடன் ஊழியம் செய்துவந்தார்.

அவருடைய ஊழியத்தின் ஆரம்ப வருடங்களில், விசுவாச வீடுகளில் வறுமை, வியாதி, பட்டினி போன்றவை வழக்கமான அனுபவங்களாயிருந்தன. அவர்கள் அநேக நாட்களை ஆகாரமில்லாமல் கழிக்க வேண்டியதாயிருந்தது. நீண்ட காலம் ஒரு கைப்பிடியளவு அரிசியோ கோதுமையோ மாத்திரம் ஒருநாள் முழுவதும் ஆகாரத்துக்காக அவர்களுக்குக் கிடைக்கும். அந்நாட்களில் அவர்கள் நல்ல கொழுமையான ஆகாரம் புசிப்பது போல் சொப்பனம் கண்டு, சரீரத்தில் பெலப்படுத்தப்பட்டும் புத்துணர்ச்சி பெற்றும் தூக்கத்திலிருந்து விழித்த சமயங்களும் உண்டு. அந்தக் கஷ்டமான சமயங்களில் சகோதரன் லாசரஸ் அவர்கள் மற்றவர்களுக்குப் பெரிய ஆறுதலும் ஊக்கமும் அளிப்பவராக விளங்கினார். அவர் பல மணி நேரம் முழங்காலில் நின்று ஜெபம்பண்ணுவதில் செலவழித்து தன் உடன் ஊழியரை விசுவாசத்தில் பலப்படுத்தினார். ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணும் தேவனைக் கிட்டிச்சேர ஒருவருக்கு பரிசுத்தம் எவ்வளவு இன்றியமையாதது என்பதை விவரித்து, அவர் எப்போதும் பரிசுத்தத்தை வலியுறுத்திவந்தார்.

அவருடைய காலத்தில்தான் தற்போது திருச்சூர் சென்டர் விசுவாச வீடு அமைந்திருக்கும் நிலம் வாங்கப்பட்டது. அந்நாட்களில் அவ்விடத்தின் சுற்றுப்புறங்களில் சாராயம் காய்ச்சுதல், கொள்ளையடித்தல் போன்றவை அதிகமிருந்தது. ஆனால் அவருடைய ஊக்கமான ஜெபங்களினிமித்தமாக இன்று அந்த இடத்தில் இப்படிப்பட்ட தீச்செயல்கள் ஒன்றும் காணப்படுகிறதில்லை.

மேலும் பாஸ்டர் லாசரஸ் அவர்கள் மேச்சாலில் ஊழியம் செய்துகொண்டிருந்த நாட்களில் குடிகாரர்கள் விசுவாச வீட்டின் மீதும், பாஸ்டர் உட்பட, பல தேவ ஊழியர்கள் மீதும் கல்லெறிவது வழக்க

மாக இருந்தது. ஒரு முறை விசுவாச வீட்டின் ஒரு பகுதி இவ்வன்முறை சம்பவங்களின் மூலம் இடிந்து விழுந்து விட்டது. ஆனால் கர்த்தர் தம்முடைய ஊழியக்காரரை எல்லாத் தீங்குகளுக்கும் விலக்கிப் பாதுகாத்தார். இப்படிப்பட்ட மற்றொரு சந்தர்ப்பத்தில் பாஸ்டர் அவர்களும் சில விசுவாசிகளும் காயமடைந்தனர். ஆனால், கல்லெறிந்தவர்களில் சிலர் பாம்புகளால் கடிக்கப்பட்டும், மற்றவர்கள் இடி மின்னல்களினால் தாக்கப்பட்டும் மரித்தார்கள்.

ஒருமுறை பாஸ்டர் அவர்கள் திருவெல்லாவிலிருந்து மேச்சாலுக்கு திரும்பி நடந்து வந்து கொண்டிருந்தபோது, அவர் தன் வழியைத் தவற விட்டார். அப்பொழுது யாரோ ஒருவர் அவர்மேல் இரக்கப்பட்டு அவர் வழிக்கு விளக்காக உபயோகிக்கும்படி காய்ந்த இலைகளை ஒரு பந்தம்போல சேர்த்துக் கட்டிக் கொடுத்தார். அது எரிந்து முடிந்து போகும் சமயம் அவர் ஒரு குடிசையின் அருகே இராத்தங்கும்படியாக நின்றார். ஆனால் அங்கே அவரை ஒரு பாம்பு எதிர்த்தது. உடனே அங்கிருந்து அவர் ஓடி காரிருளான ஒரு இடத்தில் அசையாமல் நின்றுகொண்டு தேவனைத் துதிக்க ஆரம்பித்தார். அந்த நேரத்தில் தன் கையில் விளக்குடன் ஒரு மனிதனை அற்புதமாகக் கர்த்தர் கொண்டுவந்தார். அவன் அவரைப் பத்திரமாக பாஸ்டர் மேச்சால் பாப்பச்சன் வீட்டிற்கு கொண்டுவந்துவிட்டான்.

மற்றும் ஒரு சமயத்தில் தொற்றுநோயாகிய அம்மைநோய் எங்கும் பரவிக்கொண்டிருந்தது. அநேகர் அதினால் மரித்தார்கள். இந்நோயினால் தாக்கப்பட்ட விசுவாசிகளின் வீடுகளை பாஸ்டர் லாசரஸ் அவர்கள் சந்தித்து அவர்களுக்காக ஜெபித்தார். இந்த வாதை ஒரு பலத்த காற்றினால் கடலில் தள்ளப்பட வேண்டும் என்று ஒரு தாளில் எழுதி அவர் உபவாசித்து ஜெபம்பண்ணினார். கர்த்தர் அவருடைய ஜெபத்திற்கு அற்புதமான விதத்தில் பதிலளித்தார். அவர் ஜெபித்தவண்ணமாகவே ஒரு பலத்த காற்று அடித்து ஒரு பெரிய பள்ளிக்கூடத்தின் கட்டடம் விழுந்தது. அதில் யாருக்கும் மரணம் சம்பவிக்கவில்லை. ஆனால் அத்துடன் அந்த வாதையும் நின்றுபோனது.

கொட்டாரக்கரா, புனலூர், உம்மனூர் இன்னும் பல இடங்களில் பாஸ்டர் அவர்கள் ஊழியம் செய்துவந்த காலங்களில் பல போராட்டங்களைச் சந்தித்தார். ஆனால் அவர், தேவனுடைய பலத்த கரத்தின் கீழிருந்து கிருபை பெற்று ஜெயத்தை உரிமையுடன் பெற்றுக்கொண்டார். சரீரப்பிரகாரமாக அவர் பெலவீனமடைந்து களைப்புற்றிருந்தாலும் தேவனுக்கு ஸ்தோத்திரங்கள் ஏறெடுத்து உள்ளான மனுஷனில் பெலனடைந்தார்.

மற்றும் ஒரு தடவை பாஸ்டர் அவர்கள் திருச்சூரிலிருந்தபோது மஞ்சள் காமாலை நோயினால் மரிக்கும் தருவாயிலிருந்த ஒரு விசுவாசி, விசுவாச வீட்டில் வைத்துப் பராமரிக்கப்பட்டார். வியாதியாயிருந்த அச்சகோதரனின் உறவினர் அவருக்கு மருத்துவ சிகிச்சை கொடுக்கப்படாததினால் பாஸ்டர் அவர்களை அடிக்க முயற்சித்தபோது அவர் வேறொன்றும் செய்யாமல் முழங்காற்படியிட்டு ஜெபித்தார். மூர்க்கரான அவ்வுறவினர் பிரமிப்படைந்து சற்று நேரம் நின்றுவிட்டு, பின்பு அமைதியாகப் போய்விட்டனர்.

தொலைவான இடங்களுக்கும் நடந்து செல்வது பாஸ்டர் அவர்களின் வழக்கமாயிருந்தது. அவர் தன் சரீரத்தில் எவ்வளவு களைப்புற்று சோர்வுற்றிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாது எப்போதும் போல நீண்டமணிநேரம் ஜெபத்தில் செலவழித்தார். ஒருநாள் அவர் அதிகாலையில் புறப்பட்டு 30 கி. மீ. தூரம் அந்நாள் முழுவதும் நடந்து சென்று 20 இடங்களில் வெளிக் கூட்டம் நடத்தினார். கடைசியாக அவர் இரவு 8. 30 மணிக்கு ஒரு விசுவாசியின் வீட்டைச் சென்றடைந்தபோது பசியினால் மயங்கினார். அவருடைய கால்கள் அதிகமாக வீக்கங்கண்டிருந்தது, அப்படியிருந்தும் அவர் அந்த இரவு முழுவதையும் ஜெபத்தில் செலவழித்தார்.

மற்றும் ஒருமுறை பாஸ்டர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட சகோதரனைச் சந்திக்கச் சென்றிருந்த போது அவ்வீட்டிலிருந்த ஸ்திரீ கத்தியைக் காட்டி பயமுறுத்திக்கொண்டு பாஸ்டரை நோக்கி ஓடிவந் தாள். அந்தச் சமயத்தில், ஒரு தூதன் வந்து பாஸ்டர் அவர்களைத் தூக்கி எடுத்துச் சென்றதாக அவர் உணர்ந்தார். இவ்வாறு வரவிருந்த ஆபத்திலிருந்து அவர் பாதுகாக்கப்பட்டார்.

பாஸ்டர் லாசரஸ் அவர்கள் 1962 - இல் கோழிக்கோடு சென்டர் பாஸ்டராக நியமிக்கப்பட்டார். அந்த நாட்களில் நம் சபை பல கொடுங்காற்றுகளைச் சந்திக்க நேரிட்டது. இச்சமயங்களில் பாஸ்டர் அவர்கள் அதைரியப்பட்டுப் போன பலரையும் சந்தித்து அவர்களைச் சத்தியத்தில் நிலைநிறுத்தினார். பின்பு அவர் திருவனந்தபுரத்திற்கு மாற்றப்பட்டார். அங்கே அவர் சில நிந்தைகளையும் அவமானங்களையும் சந்திக்க வேண்டியதாயிருந்தது. ஆனால் கர்த்தர் அவரது கண்ணீரின் ஜெபத்தைக் கேட்டு அவரை ஆசீர் வதித்தார்.

இப்படி கேரளாவில் பல இடங்களில் ஊழியங்களை நிறைவேற்றிய பின்பு நமது பாஸ்டர் அவர்கள் தமிழ் நாட்டிலுள்ள கோயம்புத்தூருக்கு அனுப்பப்பட்டார் கோயம்புத்தூரில் ஊழியஞ்செய்து கொண்டிருந்தபோது தமிழ் கற்றுக்கொள்ள கர்த்தர் அவருக்கு உதவி செய்தார். பின்பு அவர் சென்னையில் புரசைவாக்கம் சபைக்குப் பொறுப்பாக அனுப்பப்பட்டார். அங்கே அவர் மிகவும் நோய்வாய்ப்பட்டார். ஆனால் கர்த்தர் அவருக்கு இரங்கி அவரைக் குணமாக்கினார். அங்கிருந்து அவர் ராயபுரத்துக்கு அனுப்பப்பட்டார். அங்கே அவர் ஞாயிறு பள்ளி, உத்தரவாதமான ஊழியர்களின் ஜெபம், பணவிஷயங்கள் ஆகியவற்றின் முழு பொறுப்பும் வகித்தார். கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் போன்ற பல இடங்களை விஜயம் செய்யும் வாய்ப்பும் அவர் பெற்றார்.

நமது சபையின் பெயர் மாற்றத்தினால் உண்டான பிரச்சினையின்போது பாஸ்டர் லாசரஸ் அவர்கள் கோட்டயம் சென்டர் பாஸ்டராக இருந்தார். அந்நாட்களில் அவர் அதிகப் பாடுகளினூடாகக் கடந்து சென்றார். ஆனால் பிரச்சினை உண்டாக்கியவர்கள் மேலும், பரியாசம்பண்ணினவர்கள் மேலும் அவர் எந்தவித வெறுப்புணர்வும் கொள்ளவில்லை. அவர்களுக்காக அவர் ஜெபம் மாத்திரம் செய்தார். 'நாம் பேசிய ஒரு வார்த்தைக்காக அவர்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியது வராதபடி நாம் ஒரு வார்த்தைகூட பேசக்கூடாது' என்று கூறி, நம்முடைய ஐக்கியத்தை விட்டுப் பிரிந்து போனவர்களிடம் பொறுமையாயிருக்க வேண்டும் என்று அவர் உடன் ஊழியருக்கு அறிவுரை கூறினார்.

இப்படி பாஸ்டர் லாசரஸ் அவர்களைப் பற்றி கூறுவதற்கு இன்னும் பல காரியங்கள் உண்டு. ஆனால் ஒரு காரியம் வெளிப்படையானது. அவர் ஒரு பரிசுத்தவானாயிருந்தார். அவருடைய ஜீவன் கிறிஸ்துவுடன் தேவனுக்குள் மறைந்திருந்தது. நாமும் அவரது ஜீவியத்தைப் பின்பற்றி நம் ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது அவரோடுகூட மகிமை யில் காணப்படும்படி ஆயத்தப்படுவோமாக.

****

கிறிஸ்துவின் அன்பை விட்டு என்னைப் பிரிப்பவன் யார்?

உத்தரப்பிரதேசத்தில் ஒரு கிராமத்தில் ராகவன் என்ற ஒரு வாலிபன் வசித்துவந்தான். அவனுடைய பெற்றோர் கிறிஸ்துவை அறியாதவர்கள். அவன் தன் வாலிபப் பிராயத்தில் குடிப்பழக்கத்திற்கும், எல்லாவிதத் தீய செயல்களுக்கும் அடிமைப்பட்டிருந்தான். ஒருசமயம் அவன் தன்னுடைய வியாபார விஷயமாக வெளியூர் செல்ல வேண்டியதிருந்தது. அச்சமயத்தில் அவன் கிறிஸ்தவனான ஒரு நண்பனுடன் சிலகாலம் தங்கியிருந்தான். அந்த நண்பனுடைய உண்மையான கிறிஸ்தவ ஜீவியம் ராகவனின் தீய வாழ்க்கையை முற்றிலும் மாற்றிவிட்டது. அவன் தன் குடிப்பழக்கத்தை விட்டு விட்டான். கர்த்தராகிய இயேசுவை அவன் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, விக்கிரக வழிபாட்டை நிறுத்தி விட்டான். ஜீவியம் மாற்றப்பட்டவனாக அவன் தன் கிராமத்துக்குத் திரும்பினான். இதனை அறிந்த அவனது பெற்றோரும், உற்றாரும் கோபமுற்று, அவனை உபத்திரவப் படுத்தினர். அவர்களுடைய மதத்தை அவன் விட்டு விட்டதினால் தன்னையே தீட்டுப்படுத்திக்கொண்டான் என அவர்கள் அவனைப் பலவாறு வசைமொழிந்தனர். இதனைக் குறித்து வியப்படைந்த ராகவன் அவர்களை நோக்கி, ‘இதுவரை நான் குடிகாரனாக ஜீவித்து என்னையே நான் தீட்டுப்படுத்திக்கொண்டிருந்தேன். அப்போது நீங்கள் என்னை ஒன்றும் சொல்லவில்லை. இப்போது நான் மனந்திரும்பி, எனது பொல்லாத ஜீவியத்திலிருந்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டுள்ளேன். இப்போது நான் தீட்டுப்பட்டுள்ளேன் என்று கூறுகிறீர்களே’ எனப் பதில் அளித்தான். ராகவனின் மனதை மாற்றுவது அவர்களுக்கு அசாத்தியமான காரியமாயிற்று. தங்களால் ராக வனை மாற்ற முடியாமற் போனபடியால், கடைசியாக அவர்கள் அவனை வீட்டை விட்டு விரட்டினர். அவன் தன் வீட்டை விட்டுத் துரத்தப்பட்டு, இந்தப் பரந்த உலகத்திலே தனித்தவனானான். ஆனாலும் அவன் சிறிதும் மனந்தளரவில்லை.

‘என் பெற்றோரும் குடும்பத்தினரும் தங்கள் அன்பினின்றும் பாசத்தினின்றும் என்னைப் பிரித்து விட்டாலும், பாவியாக, குடிகாரனாக இருந்த என்னை நேசித்து எனக்காகத் தம்முடைய சொந்த இரத்தத் தையே சிந்திய ஆண்டவராகிய இயேசுவின் அன்பை விட்டு என்னை ஒன்றும் பிரிக்க முடியாது’ என்று தைரியமாய்ச் சொல்லிக்கொண்டு, தன் பிரயாணத்தைத் தொடர்ந்தான் அவ்வாலிபன். அவனுக்கு ஒரு நல்ல வேலை கிடைத்தது. ஓர் உண்மைக் கிறிஸ்தவனாக, அவன் அநேகருக்குச் சாட்சியாக ஜீவித்தான். அவனுடைய ஜீவியத்தைக் கண்ட பெற்றோரும் பின்பு, கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள்.

ராகவனைக் கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்தியது அவனது நண்பனின் முன்மாதிரியான கிறிஸ்தவ ஜீவியமே. ராகவனின் குடும்பத்தார் கிறிஸ்தவர்களாக மாற்றப்பட்டது, ராகவனுடைய நல்ல கிறிஸ்தவ வாழ்க்கையே. வாலிபரே, உங்களுடைய ஜீவியம் எப்படிக் காணப்படுகிறது? உங்களுடைய ஜீவியம் அநேக வாலிபரைக் கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்தக் கூடியதாய்க் காணப்படுகிறதா? சிந்தித்துப் பாருங்கள்! அப். பவுல், “நீங்கள் … கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்கள்” என்று கூறுகிறார் (II கொரி. 3 : 3). நம்முடைய ஜீவியம் சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டிருக்கிற நிருபமாய்க் காணப்பட வேண்டும். நாமும் அப். பவுலைப் போல, எந்தச் சூழ்நிலையிலும் கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மை எந்த வல்லமையும் பிரிக்க முடியாது என்ற நிச்சயம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். அப்படியென்றால் மாத்திரமே எந்தச் சூழ்நிலையையும் நாம் ஜெயிக்கலாம்; அநேகருக்குச் சாட்சியாகவும் ஜீவிக்கலாம். “நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர் களாயிருக்கிறோமே” (ரோமர் 8 : 37).

வாலிபரே, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அன்பிலே நிலைத்திருந்து, உங்கள் வாலிபப் பருவத்திலே உங்களை வஞ்சிக்கிற உலகம், பிசாசு, மாம்சம் யாவற்றையும் ஜெயிப்பீர்களாக! உங்களுக்காகத் தம்முடைய வாலிப இரத்தத்தைச் சிந்திய கர்த்தராகிய இயேசுவை நேசித்து அவருக்காக ஜீவிப்பீர்களாக. கர்த்தராகிய இயேசுவின் அன்பினால் நிரப்பப்பட்டு, வாலிபத்தில் போராடுகிற சகல வல்லமைகளையும் ஜெயித்து, அழிவை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் அநேக வாலிபரை தம்மண்டைத் திருப்பக் கர்த்தர்தாமே உங்களுக்கு உதவி செய்வாராக!

****

எருசலேமின் அலங்கமும் வாசல்களும்

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

1. ஆட்டு வாசல் (SHEEP GATE)

[ஆட்டுவாசல், ஆட்டுக்குட்டியானவரின் சாந்தகுணத்தை வெளிப்படுத்துகிறது என்று சென்ற இதழில் நாம் தியானித்தோம்]

(ii) பலியின் சிந்தை:

மேலும், ஆட்டுவாசல் பலியின் சிந்தையையும் நமக்கு நினைவூட்டுகிறது. பலிசெலுத்தப்படும்படி கொண்டுவரப்படும் ஆடுகள் இவ்வாசலின் வழியே தேவாலயத்திற்குள் நடத்திச் செல்லப்பட்டன. ஒரு பலி மிருகமானது, சுகமாக வாழ்வதற்காக அல்ல, தன் ஜீவனை இழப்பதற்காகவும் தான் ஒன்றுமில்லாமற் போவதற்காகவுமே குறிக்கப்பட்ட ஒன்றாகும். “நான் அநுதினமும் சாகிறேன்” (I கொரி. 15 : 31) என்று அப். பவுல் கூறுகிறார். “தன்ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான்” (மாற்கு 8 : 35) என்பவை நமதாண்டவரின் வார்த்தைகள். பொதுவாக இவ்வுலக மனிதர்கள் லாபமடையவும், பலவற்றை ஆதாயப்படுத்திக்கொள்ளவும், ஆஸ்திகளைப் பெருக்கிக்கொள்ளவும், உலக இன்பங்களை அனுபவிக்கவுமே வாழ்கின்றனர். இப்படிப்பட்டவர்களைக் குறித்து,“கொடிய

பலவந்தனான ஒரு துன்மார்க்கனைக் கண்டேன். அவன் தனக்கேற்ற நிலத்தில் முளைத்திருக்கிற பச்சை மரத்தைப்போல் தழைத்தவனாயிருந்தான்" என்று சங்கீதக்காரன் கூறுகிறான் (சங். 37 : 35). அட்டையைப்போல, 'வேண்டும், வேண்டும்' என்பதே அவர்களுடைய இடைவிடாத ஏக்கமாயிருக்கிறது. அவர்கள் எவ்வளவு சேகரித்து வைத்தாலும் திருப்தியடைவதில்லை. "அவர்கள் செல்வவான்களாய்த் தங்கள் நாட்களைப் போக்கி, ஒரு க்ஷணப்பொழுதிலே பாதாளத்தில் இறங்குகிறார்கள்" (யோபு 21 : 13). ஆனால் ஒரு உண்மையான தேவபிள்ளையோ, கிறிஸ்துவினிமித்தம் லாபமாயிருக்கிறவைகளை நஷ்டமென்று விடவும், கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படி எல்லாவற்றையும் இழந்துபோகவும், குறைவுபடவும், செலவுபண்ணவும், தன் ஆத்தும நேசருக்காகத் துன்பங்களை அனுபவிக்கவுமே தன் வாழ்நாட்களைப் பிரயோஜனப்படுத்திக்கொள்கிறான். ஏனெனில், உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் பழுதற்ற பலியாகத் தம்மை அர்ப்பணித்த மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவையே அவன் தனக்கு முன்மாதிரியாகக் கொண்டிருக்கிறான். அநேகருக்கு இரட்சிப்பாகவும், ஜாதிகளுக்கு ஒளியாகவும் திகழும்படியாக, நம் அருமை இரட்சகர் தம்மைத்தாமே அநேகரை மீட்கும் பொருளாகவும், காணிக்கையாகவும் பலியாகவும் அன்பினால் ஒப்புக்கொடுத்தது, அவரது இணையற்ற தியாக மனப்பான்மையை அல்லது பலியின் சிந்தையை நமக்கு எடுத்துக்காட்டுகிறது. நாம் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கவும், பூமிக்கு உப்பாயிருக்கவும் அழைக்கப்பட்டிருக்கிறோம் (மத். 5 : 13, 14). எரிந்து பிரகாசிக்கிற ஒரு மெழுகுவர்த்தியைப் போல, உணவில் கரைந்து போய் மறைந்து நிற்கும் உப்பைப் போல, நாம் கரைந்து, குறைந்து, மறைந்து போவதின் மூலம் மட்டுமே கிறிஸ்துவின் வெளிச்சத்தையும் அவரது ருசியையும் உலகிற்கு வெளிப்படுத்த இயலும். "அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்" என்று கூறிய யோவான் ஸ்நானன் மெய்யாகவே எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான் (யோவான் 3 : 30 ; 5 : 35). அவ்வாறே நாமும் உலகிற்கு வெளிச்சமாய்த் திகழும்படி நம் பலியின் சிந்தையைப் புதுப்பித்துக்கொள்வோமாக. ஒரு விதையானது மரிப்பதின் மூலமாகவே தன்னைப் போன்ற அநேகம் மணிகளைக்கொண்ட கதிர்களைப் பிறப்பிக்கிறது. கிறிஸ்துவின் மரணமே நாம் பரிபூரண ஜீவன் அடைவதற்கு வித்திட்டது ! அவ்வாறே நாம் கிறிஸ்துவின் நிமித்தம் நஷ்டமடைவதும், குறைவுபடுவதும், இல்லாமற்போவதும் நமக்கு ஓர் இழப்பல்ல, நித்திய நித்தியமான ஆதாயமே !எனவே பலியின் சிந்தையோடும் சாந்த குணத்தோடும் நாம் நம் பாதையைத் தொடருவோமாக.

ஆட்டு வாசலைக் கட்டியவர்கள்:

ஆட்டுவாசலைப் பழுதுபார்த்துக் கட்டியவர்கள் ஆசாரியர்களே. "பிரதான ஆசாரியனாகிய எலியாசீபும், அவன் சகோதரராகிய ஆசாரியர்களும் எழுந்து, ஆட்டுவாசலைக் கட்டினார்கள்" (நெகே. 3 : 1). எருசலேமின் அலங்கத்தைக் கட்டும்படி தேவன், தன் மனதில் வைத்த பாரத்தை நெகேமியா மற்றவர்களோடுபகிர்ந்துகொண்டபோது, முதலாவதாக, ஆசாரியர்களே மன உற்சாகமடைந்து, செயல்படும்படி முன்வந்தனர். இதனையே இவ்வசனத்திலுள்ள "எழுந்து" (rose up) என்ற பதம் சுட்டிக்காட்டுகிறது. பிரதிஷ்டையுள்ள ஊழியர்களும் அபிஷேகம் பெற்றவிசுவாசிகளும் சேர்ந்து சபையின் ஆட்டுவாசலைப் பழுதுபார்க்க முன் வரவேண்டும். ஏற்கனவே செருபாபேலினால் தேவாலயம் கட்டப்பட்டிருந்தது. என்றாலும் அதின் பலிபீடத்தின்மேல் பலி செலுத்துவதற்கான பலி மிருகங்கள் கொண்டு வரப்படுவதற்கான வழியாக, முன்பு உபயோகிக்கப்பட்டுவந்த இவ்வாசல் எரிக்கப்பட்டுப் போயிருந்தது. எனவே பட்டணத்தின் மற்ற எந்த வாசலையும் செப்பனிடுமுன்னதாக, ஆசாரியர்கள் முதலாவதாக ஆட்டுவாசலைச் செப்பனிடுவதின் அத்தியாவசியத்தை உணர்ந்தவர்களாய், அதில் கவனம் செலுத்தினர். அபிஷேகம் பெற்ற நாம் ஒவ்வொருவரும் தேவனுக்கு முன்பாக ஆசாரியர்களாயிருக்கிறோம் (வெளி. 1 : 6). நம்முடைய ஜீவியத்தில் நாம் பலியின் சிந்தையை அல்லது தியாக மனப்பான்மையை இழந்து, சுயநலமுள்ளவர்களாக மாறியிருப்போமானால், மீண்டும் அந்தத் தெய்வீக குணசீலத்தைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கர்த்தரின் உதவியை நாடுவோமாக. எலியாசீப் என்னும் பதத்திற்கு, 'தேவன் திரும்பத் தருகிறார்' என்று அர்த்தமாம். நம்மில் குறைவுபட்டிருக்கிற தியாக சிந்தை, சாந்தம் போன்ற திவ்ய சுபாவங்களை மீண்டும் பெற்றுக்கொள்ளும்படி, 'தேவன் அவற்றைத் திரும்பத் தருவார்' என்ற விசுவாசத்துடன் நாம் கிரியை செய்ய வேண்டும். நாம் இழந்துபோன எந்த ஆவிக்குரிய அனுபவங்களையும், நம்முடைய சொந்த முயற்சிகளினால் அல்ல, தேவனுடைய இரக்கத்தினாலும் ஒத்தாசையினாலும் மாத்திரமே நாம் திரும்பப் பெற்றுக் கொள்ளக் கூடும். இதனாலேதான், "விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம்" என எழுதப்பட்டுள்ளது (ரோமர் 9 : 16). தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் நம்மில் உண்டாக்குகிறவராயிருக்கிறார் (பிலி. 2 : 13). நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்ற நல்ல விருப்பத்தை நம்மில் உண்டாக்குவதும், அவ்விருப்பத்தை நம்மில் செயல்படுத்துவதும் அவரே. "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" என்று நமதாண்டவர் கேட்கிறார் (மத். 7 : 11). "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" (வச. 7, 8). "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" (யாக். 1 : 17). ஆகவே, நம் ஜீவியத்தின் ஆட்டுவாசல் பழுதடைந்திருக்குமாயின், நாம் இழந்திருப்பவைகளைத் தேவன் நிச்சயமாகத் 'திரும்பத் தருவார்' என்ற விசுவாசத்துடன், அதைக் கட்டியெழுப்பும்படி எழுந்து செயல்படுவோமாக.

****

ரோமருக்கு எழுதிய நிருபத்தின் விளக்கவுரை

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

"தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக் கொண்டதைக்குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், கிறிஸ்து

இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்" (3 : 25, 26).

'ஏற்படுத்தினார்' என்ற பதம் பழைய ஏற்பாட்டில் சமுகத்தப்பத்தை அடுக்கிவைத்தல் (வெளிப்படுத்துவது or exhibit) என்பதற்கும் உபயோகிக்கப்பட்டுள்ளது (யாத். 25 : 30). எனவே, தேவன் கிறிஸ்துவை கிருபாதாரபலியாக வெளிப்படுத்தினார் (ஏற்படுத்தினார்) என்பது பொருள்.

பிராயச்சித்தம் (HILAS MOS- HILEOS) மூலபாஷையில் கிருபாசனம் (Cover) என்றும் பொருள்படும் (எபி. 9 : 5). கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமது பாவத்தை நீக்கும் பிராயச்சித்தம் அல்லது பலி அல்லது பாவத்தைப் போக்கப் பலி செலுத்தப்படும் பலிபீடமானார் அல்லது அவரே கிருபாதார பலியானார் என்பது இதன் பொருளாகும்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பிரதான ஆசாரியன் வருடத்திற்கு ஒரு நாள் வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளின் இரத்தத்தினால் தனக்காகவும் ஜனங்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்ததாக நாம் காண்கிறோம். பிராயச்சித்தம் (propitiation) என்ற பதத்தின் உண்மையான கருத்து, தேவ கோபாக்கினையைப் பலியின் மூலம் நிவிர்த்திசெய்வது (the appeasement of divine wrath by a sacrificial offering) என்பதே.

அன்பின் தேவன் பாவியின்மேல் கோபாக்கினை செலுத்துவாரா என்ற கேள்விக்கு ஏற்ற பதிலை இந்தப் பதத்தின் உட்கருத்தின் மூலம் நாம் அறிந்துகொள்ளலாம். தேவன் நீதியுள்ளவர். அவர் பாவத்திற்கு ஏற்ற தீர்ப்பை முகதாட்சணியம் இல்லாமல் செலுத்தியே தீரவேண்டும். அந்தத் தீர்ப்பை அல்லது கோபாக்கினையைக் கர்த்தராகிய இயேசு தம்மேல் ஏற்று, கிருபாதார பலியானார்.

பழைய ஏற்பாட்டு காலத்துப் பரிசுத்தவான்கள் எவ்வளவு பெரிய பரிசுத்தவான்களாயிருந்தாலும் அவர்கள் அடைந்துகொள்ளும் மேலான அனுபவம் பாவநிவிர்த்தி (ATONEMENT) என்பதாகும். அவர்கள் ஆண்டுதோறும் பாவ நிவாரணபலி செலுத்தியே தீரவேண்டும், ஆனால் இயேசுகிறிஸ்து நமது கிருபாதார பலியாக சிலுவையில் மரித்தபோது, அவருடைய இரத்தத்தினால் நமக்கு பாவநிவிர்த்தி - மீட்பு அல்லது பாவமன்னிப்பாகிய மீட்பு உண்டாயிற்று என்று நாம் காணலாம் (கொலோ. 1 : 14).

முதலாம் உடன்படிக்கையின் காலத்தில் நடந்த அக்கிரமங்களை நிவிர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்தார் என்று எழுதப்பட்டிருக்கிறது (எபி. 9 : 15). இயேசுகிறிஸ்து தம் மரணத்தில் முற்காலத்தில் நடந்த பாவங்களுக்கு ஏற்ற தீர்ப்பை தம்மேல் ஏற்றபோதிலும், அவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனை மாத்திரமே தேவன் நீதிமானாக்குகிறார்.

மேலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மெல்கிசேதேக்கின் முறைமையின்படி தம்முடைய சொந்த இரத்தத்தினாலே பரலோகத்திலுள்ள மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து நமக்காகப் பரிந்து பேசுகிறார் என்றும் நித்திய மீட்பை உண்டாக்கியிருக்கிறார் என்றும் எழுதப்பட்டிருக்கிறது (எபி. 9 : 12 ; I யோவான் 2 : 1). இங்கு பாவநிவிர்த்தியல்ல, நித்திய மீட்பு என்பதைக் காண்க. நித்திய மீட்பு என்பது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பூரணத்தை வெளிப்படுத்துவதாகும். I யோவான் 2 : 1 - இல் கூறப்பட்டிருக்கும் பாவம் என்பது கறை திரை பிழை போன்ற குறைகளாகும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இப்போது நமக்காக மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்திருப்பது நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்வதற்காக மட்டுமல்ல, கறை திரை பிழை யாவும் நீக்கப்பட்டு, பரிசுத்தமும் மகிமையுமுள்ளவர்களாய் நாம் காணப்படும் படியாகவும் ஆகும். ஆனபடியால் பிராயச்சித்தம் (propitiation) என்ற பதத்தின் ஒரு பொருளாகிய பாவத்தை மூடிவைத்தல் (cover) அல்லது நிவிர்த்தி செய்வது என்ற கருத்துடன் அல்ல, பாவம் சாபம் முற்றிலும் நீக்கப்பட்டு நித்திய மீட்பைக் கொடுக்கும் கிருபாதாரபலியாக அவரைப் பிதாவானவர் ஏற்படுத்தினார் என்றும் நாம் அறிகிறோம்.

இந்த அனுபவம் வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளின் இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினால் அல்ல, தமது சொந்த இரத்தத்தினாலே மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து கிருபாதாரபலியான கிறிஸ்து இயேசுவை விசுவாசிப்பதினால் உண்டாகிறது.

"இப்படியிருக்க, மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே. எந்தப் பிரமாணத் தினாலே? கிரியாப்பிரமாணத்தினாலேயா? அல்ல; விசுவாசப்பிரமாணத்தினாலேயே. ஆதலால், மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்" (3 : 27, 28).

இப்படியிருக்க மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே. எந்தப் பிரமாணத்திலே? கிரியாப்பிரமாணமாகிய நியாயப்பிரமாணத்தினாலேயோ? அல்ல: விசுவாசப்பிரமாணத்தினாலேயே; அதாவது, மேற்கூறிய கிருபாதாரபலியின் பிரமாணமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலேயே என்று அவர் விளங்கப்பண்ணுகிறார். இதிலிருந்து உண்டாயிருக்கிற தீர்ப்பு யாதெனில், மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்பதே.

"தேவன் யூதருக்குமாத்திரமா தேவன்? புறஜாதிகளுக்கும் தேவனல்லவா? ஆம் புறஜாதி களுக்கும் அவர் தேவன்தான் " (3 : 29).

தேவன் யூதர்களுக்கு மாத்திரம் சொந்தமானவர் என்றும், இரட்சிப்பும் வாக்குத்தத்தங்கள் யாவும் அவர்களுக்கே உரியன என்றும், புறஜாதிகளுக்கு தேவன் சொந்தமானவரல்ல என்றும், அவர்களுக்கு இரட்சிப்போ, தேவனுடைய வாக்குத்தத்தங்களோ உரியவை அல்ல என்றும் யூதர்கள் கூறி வந்தனர். மேற்கூறிய காரணங்களைக்கொண்டே தேவன் யூதருக்கு மாத்திரமல்ல, புறஜாதிகளுக்கும் தேவனாயிருக்கிறார் என்று அப். பவுல் முழு நிச்சயத்தோடு இங்கு கூறுகிறார்.

" விருத்தசேதனமுள்ளவர்களை விசுவாசத்தினாலும், விருத்தசேதனமில்லாதவர்களை விசுவா சத்தின் மூலமாயும் நீதிமான்களாக்குகிற தேவன் ஒருவரே. அப்படியானால், விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா? அப்படியல்ல; நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்து கிறோமே" (3 : 30, 31).

விருத்தசேதனம் உள்ளவர்கள் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட வேண்டும் என்றும், விருத்தசேதனமில்லாதவர்கள் விசுவாசத்தின் மூலமாய் நீதிமான்களாக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இப்படிக் கூறப்பட்டிருப்பதினால் விசுவாசத்தினால் நியாயப்பிரமாணம் அவமாய்ப் போனதாய் நாம் நினைத்து விடக்கூடாது. அதற்குப் பதிலாக விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தின் சத்தியங்களை நாம் நிலைநிறுத்துகிறோம் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். அதெப்படியெனில் நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டவைகள் யாவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நிழலாட்டமாயிருக்கின்றன. விசுவாசத்தினால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் இந்த நிழலாட்டமான காரியங்கள் உண்மையான சத்தியங்களாய் நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இதற்கு ஒரு உதாரணம், பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கும் நிழலாட்டமான பலி கள் யாவும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவாகிய பலியில் நிறைவேறியிருப்பதாகும்.

****

PP_200003

செழிப்பான இடத்தில் எங்களைக் கொண்டுவந்தீர்

“மனுஷரை எங்கள் தலையின்மேல் ஏறிப்போகப்பண்ணினீர்; தீயையும் தண்ணீரையும் கடந்து வந்தோம்; செழிப்பான இடத்தில் எங்களைக் கொண்டுவந்து விட்டீர்” என்று சங்கீதம் 66 : 12 - இல் நாம் வாசிக்கிறோம். தேவஜனங்கள் சோதிக்கப்பட்டு, புடமிடப்பட்டு, பலவிதமான பாதைகளைக் கடந்து வந்த பின்னர், செழிப்பான அனுபவத்திற்குள் வழிநடத்தப்பட்டதாக இவ்வசனம் கூறுகிறது. இங்கு, “மனுஷரை எங்கள் தலையின்மேல் ஏறிப்போகப்பண்ணினீர்” என்று பன்மையில் கூறப்பட்டிருப்பது, அநேகர் நம் தலையின்மேல் ஏறிச் செல்லும்படி தேவன் அனுமதிக்கிறார் என்பதைக் காண்பிக்கிறது. பொதுவாக தேவஜனங்கள் யாவருக்கும் பல கஷ்டங்களும் துன்பங்களும் தேவனால் அனுமதிக்கப்படுகின்றன. இப்பாடுகளின் மூலம் ஒரு முக்கியமான காரியம் நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் நிறைவேறாவிட்டால் நாம் அப்பாதைகளினூடாகக் கடந்து சென்றதினால் யாதொரு பயனுமிராது. அது என்ன? அது நம் தலை, அதாவது, நம் சுய சித்தம் பலியாக்கப்பட்டு, நொறுக்கப்படுவதேயாகும். நமக்குள் இருக்கிற சுயசித்தம் முழுவதும் அழிக்கப்பட வேண்டுமென்றே தேவன் வாஞ்சிக்கிறார். கர்த்தராகிய இயேசுவைக் குறித்து, “கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக் குட்படுத்தினார்” என்று நாம் வாசிக்கிறோம் (ஏசாயா 53 : 10). மனுஷர் நம் தலையின்மேல் ஏறிச் செல்லு வது நம் சித்தம் நொறுக்கப்படுவதைக் காண்பிக்கிறது. அடுத்தபடியாக அவர்கள் தீயைக் கடந்து வந்தார்கள். தீயைக் கடந்தவர்களுக்கே தீயின் உக்கிரம் தெரியும். இங்கே, ‘தீ’ என்பது அக்கினி பரீட்சைகளைக் காண்பிக்கிறது (I பேதுரு 1 : 7). மேலும், அவர்கள் தண்ணீரையும் கடந்துவந்தார்கள். ‘தண்ணீர்’ என்பது, ஒரு தேவபிள்ளையின் ஜீவியத்தில் நேரிடுகிற நிந்தைகளையும் அவமானங்களையும் குறிக்கிறது (சங். 69 : 1, 2, 7). இவற்றையெல்லாம் கடந்து வந்த பின்னர், “செழிப்பான இடத்தில் எங்களைக் கொண்டுவந்து விட்டீர்” என்ற அனுபவம் நமக்குஉண்டாகும். தேவ ஜனங்களாகிய நாம் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் எப்படி இந்தச் செழிப்பை அனுபவிக்கலாம் என்பதை அறிந்து, அதன்படி செயல்படுவது நலமாயிருக்கும்.

கர்த்தர்மேல் உள்ள நம்பிக்கையினால் செழிப்பு:

“கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான்” (நீதி. 28 : 25). தேவ ஜனங்களின் நம்பிக்கை தம்மேல் மாத்திரமேயிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். மேலும் கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் தண்ணீரண்டையில் நாட்டப்பட்டு, தப்பாமல் கனி கொடுக்கிற மரத்தைப்போலிருப்பான் (எரே. 17 : 7, 8). எல்லாச் சூழ்நிலைகளிலும் இஸ்ரவேலின் நம்பிக்கையும் ஆபத்துக்காலத்தில் அதின் இரட்சகருமாயிருக்கிற கர்த்தரையே நாம் சார்ந்துகொள்ளுவோமாக. அப்போது, “அவர்களுடைய ஆத்துமா நீர்ப்பாய்ச்சலான தோட்டம்போலி ருக்கும்; அவர்கள் இனித் தொய்ந்துபோவதில்லை” (எரே. 31 : 12) என்பது நம் அனுபவமாயிருக்கும்.

அபிஷேகத்தினால் செழிப்பு:

“தேவரீர் பூமியை விசாரித்து அதற்கு நீர்ப்பாய்ச்சுகிறீர்; தண்ணீர் நிறைந்த தேவநதியினால் அதை மிகவும் செழிப்பாக்குகிறீர்” என தாவீது கூறுகிறான் (சங். 65 : 9). நம்முடைய ஜீவியம் செழிப்பாக இருக்க வேண்டுமானால் நமக்குள்ளே பரிசுத்தஆவியின் நிறைவும், சந்தோஷமும் தேவை (யோவான் 7 : 38). எல்லாம் சுமூகமாக இருக்கும் போது மாத்திரமல்ல, விகற்பமான சூழ்நிலைகளிலும் நாம் பரிசுத்தஆவியின் நிறைவிலும் சந்தோஷத்திலும் நிலைத்திருக்க வேண்டும். ஆதிச் சபையில், “சீஷர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள்” என்று நாம் வாசிக்கிறோம் (அப். 13 : 52). அப்போது அவர்களுக்கிருந்த சூழ்நிலை யாது? கிறிஸ்துவினிமித்தம் அவர்கள் விரோதிக்கப்பட்டு, தூஷிக்கப்பட்டு, துன்பப்படுத்தப்பட்டதாக முந்தின வசனங்கள் கூறுகின்றன (வச. 45, 50). ஆம்! அவற்றின் மத்தியிலும் அவர்கள் பரிசுத்தஆவியினாலுண்டாகிற சந்தோஷத்தைக் காத்துக்கொண்டனர். இதுவே அவர்கள் சோதனைகளில் வாடிப்போகாமல் தழைத்தோங்கி விருத்தியடைவதற்கு அடிகோலியது. பாய்ந்தோடும் நதியைப் போன்ற நிறைவானதொரு அபிஷேகமே நம்மைச் சோதனைகளின் மத்தியிலும் மிகவும் செழிப்புள்ளவர்களாக்கும்.

அப்போஸ்தல உபதேசத்தினால் செழிப்பு:

“ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்; நீங்கள் எருசலே மிலே தேற்றப்படுவீர்கள். நீங்கள் அதைக் காணும்போது, உங்கள் இருதயம் மகிழ்ந்து, உங்கள் எலும்புகள் பசும்புல்லைப்போலச் செழிக்கும்” (ஏசாயா 66 : 13, 14). அபிஷேகம் பெற்ற தேவஜனங்கள், எருசலேமில், அதாவது தேவனுடைய சபையில், அப்போஸ்தலர்களின் தூதுகளினாலும் ஆரோக்கியமான உபதேசங்களினாலும் தேற்றப்படுகிறார்கள் (I தெச. 2 : 7, 8 ; I கொரி. 3 : 2). இவர்கள் தேவனுடைய வசனத்தைப் புசித்து உள்ளான

மனுஷனிலே பெலப்படுகிறார்கள். அப்போஸ்தல உபதேசங்களும் தூதுகளும் ஆத்துமாவை நிணமுள்ளதாக்குகின்றன. இவ்விதமாகத் தேவசபையில் தேற்றப்படும் தேவஜனங்கள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் செழித்து வளருகிறார்கள். இவர்களைக் குறித்து, "நீதிமான் பனையைப்போல் செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான்" என்று வேதாகமம் கூறுகிறது (சங். 92 : 12). "நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; ... இதோ, சீக்கிரமாய் வருகிறேன்" என்று கர்த்தர் உரைக்கிறார் (வெளி. 22 : 11, 12). நீதிமானுக்குரிய ஓர் செழிப்புண்டு. "உங்களுக்கு நன்மையுண்டாகும் என்று நீதிமான்களுக்குச் சொல்லுங்கள்; அவர்கள் தங்கள் கிரியைகளின் பலனை அநுபவிப்பார்கள்" என்று தீர்க்கதரிசி உரைக்கிறான் (ஏசாயா 3 : 10). அபிஷேகம் பெற்ற தேவஜனங்கள் நீதியில் வளருகிறவர்களாயிருந்து, எல்லா தேவ நீதியையும் நிறைவேற்றுவார்களாயின், அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியம் செழித்தோங்குவது மாத்திரமல்ல, அவர்களுடைய நீதிக் கிரியைகள் முடிவிலே சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரமாக, அல்லது மகிமையின் வஸ்திரமாக அவர்களுக்கு மாறும் (வெளி. 19 : 7, 8). அவர்கள் உள்ளாகப் பூரண மகிமையுள்ளவர்களாய், மகிமையின் நாளிலே மணவாளனைச் சந்திப்பார்கள். ஆகையால் அருமையானவர்களே, நாம் அப்போஸ்தல உபதேசத்தில் நிலைத்திருந்து தேவ நீதியில் வளருவோமாக.

நித்திய நம்பிக்கையினால் செழிப்பு:

"என் நேசருக்கு மகா செழிப்பான மேட்டிலே ஒரு திராட்சத்தோட்டம் உண்டு" (ஏசாயா 5 : 1). இந்தத் திராட்சத்தோட்டம் பரிசுத்தஆவியின் அபிஷேகம் பெற்ற தேவசபையைக் குறிக்கிறது. இவர்கள் கிறிஸ்துவுடனேகூட எழுப்பப்பட்டவர்களாய் உன்னதங்களிலே அவருடனே இருக்கின்றனர் (எபே. 2 : 7). இப்படிப்பட்டவர்களுக்கு, "பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்" (கொலோ. 3 : 2) என்று அப். பவுல் எழுதி, அந்த உன்னதங்களிலே தங்கியிருக்கிற அனுபவத்தில் நிலைத்திருக்க வேண்டுமென்று அறிவுறுத்துகிறார். இவர்களுக்கு மேலான ஒரு நம்பிக்கை உண்டு. "நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம்" என்று எபிரெய நிருபக்காரன் கூறுகிறார் (எபி. 13 : 14). இதுவே அந்த நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கையிலே நாம் சந்தோஷமாயிருக்கவேண்டும் (ரோமர் 12 : 12). மணவாட்டி வருங்காலத்தைப் பற்றி மகிழுகிறாள் (நீதி. 31 : 25). இந்த நம்பிக்கையில் நாம் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் இருக்க வேண்டும் (எபி. 6 : 12). அதிசீக்கிரத்தில் நம் கர்த்தராகிய இயேசு வெளிப்படும்போது, நாம் தேவ மகிமையை அடைவோம் என்ற நம்பிக்கையே நம் ஜீவியத்தை எப்போதும் செழிப்புள்ளதாகவும் ஆயத்தமுள்ளதாகவும் பாதுகாக்கும்.

கிருபையினால் செழிப்பு:

"கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிராகாரங்களில் செழித்திருப்பார்கள்" (சங். 92 : 13). ஒவ்வொரு தேவபிள்ளையையும் தேவன் அபிஷேகம்பண்ணி, தம்முடைய சபையிலே ஒரு குறிப்பிட்ட இடத்திலே நாட்டியிருக்கிறார். இவர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள். தேவன் தங்களை நாட்டியிருக்கிற ஸ்தானத்திலே உண்மையாயிருந்து, தேவகிருபையையே என்றென்றும் சார்ந்திருக்கிறவர்கள் தேவனுடைய சபையில் செழிப்பாயிருப்பார்கள். "நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவ மரத்தைப்போலிருக்கிறேன், தேவனுடைய கிருபையை என்றென்றைக்கும் நம்பியிருக்கிறேன்" என தாவீது பாடுகிறான் (சங். 52 : 8). இப்படிப் பாடும்போது அவன் ராஜாவாகிய சவுலோடு அரண்மனையிலோ, தன் தகப்பனோடுகூட தன் வீட்டிலோ அல்ல, தனிமையாக்கப்பட்டவனாய் வனாந்தரங்களிலும் காடுகளிலும் அலைந்துகொண்டிருந்தான். என்றாலும் அவனுடைய ஆத்துமா தேவனுடைய கிருபையைப் பற்றிக்கொண்டிருந்தமையால் அவன் பச்சையான ஒலிவ மரத்தைப் போல செழிப்பாயிருந்தான். தேவ கிருபையினால் இப்பாதைகளை வெற்றியுடன் கடந்தபின் அவன் முடிவிலே தேவனால் சிங்காசனத்தில் ஸ்திரப்படுத்தப்பட்டான். அருமையானவர்களே! நாமும் தேவகிருபையைச் சார்ந்திருப்போமாகில் இப்பூமியில் நமக்கு நியமிக்கப்பட்டுள்ள துன்பங்களின் மத்தியில் ஆத்துமாவில் செழித்திருப்பது மட்டுமல்ல, முடிவிலே நித்தியத்திலும் தேவ சிங்காசனத்தைச் சுதந்தரித்துக்கொண்டு, புதிய எருசலேமில் நாட்டப்பட்டு, தேவசந்நிதியில் என்றென்றும் செழித்திருப்போம். அல்லேலூயா!

பிரியமானவர்களே! "தீயையும் தண்ணீரையும் கடந்துவந்தோம்; செழிப்பான இடத்தில் எங்களைக் கொண்டுவந்து விட்டீர்" என்று சொல்லக் கூடியவர்களாகும்படி நாம் மேற்கூறிய அனுபவங்களைப் பெற்று, அவற்றைப் பாதுகாத்துக் கொள்வோமாக. பரிசுத்தஆவியின் நிறைவுள்ளவர்களாய், கர்த்தரையே நம் நம்பிக்கையாகக் கொண்டு, அப்போஸ்தல உபதேசத்தில் நிலைத்திருந்து நீதியின் படிகளில் வளர்ந்து, மேலானவைகளையே சிந்தித்து, எப்போதும் தேவ கிருபையையே நாம் பற்றிக் கொண்டிருக்கக்கடவோம். அப்படியாயின் நம் ஆத்துமா நீர்ப்பாய்ச்சலான தோட்டம் போல செழித்தோங்கி, நம்முடைய ஜீவியத்தினாலும் ஊழியத்தினாலும் நாம் அநேக ஆயிரங்களுக்கு ஆசீர்வாதமாகத் திகழ்வோம்.

****

தேவனுடைய ஆலயம் மகிமையாயிருக்கிறது

அண்ட சராசரங்களையும் படைத்த ஆண்டவராகிய தேவன், தாம் சிருஷ்டித்த ஆதிமனுஷனாகிய ஆதாமுக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களில் ஒன்று, மகிமையாகும். "மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்" என்று சங்கீதக்காரன் கூறுகிறான் (சங். 8 : 5). ஆனால் அவன் தன்னுடைய கீழ்ப்படியாமையினால் தேவன் தனக்குக் கொடுத்திருந்த அந்த மகிமையை இழந்துபோனான். "எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி" என்று நாம் வாசிக்கிறோம் (ரோமர் 3 : 23). எனினும் அன்புள்ள தேவன் அவனை அப்படியே விட்டுவிட விரும்பாமல், தம்முடைய திட்டத்தில் மாறாதவராய், மனுஷன் இழந்துபோன மகிமையைத் திரும்பவும் அவனுக்குக் கொடுக்கும்படி வாஞ்சித்தார். அதற்காக, வானத்தைத் தமக்கு சிங்காசனமாகவும், பூமியைத் தமக்கு பாதபடியுமாகக் கொண்டிருக்கும் தேவாதி தேவன் மனுஷர் மத்தியிலே வாசம்பண்ணும்படி வாஞ்சித்தார். இந்த

நோக்கத்தோடு தான், "அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக" (யாத். 25 : 8) என்று மோசேயின் மூலம் அவர் இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கட்டளையிட்டார். மோசே மலையிலே தேவன் தனக்குக் காண்பித்த மாதிரியின்படியே, இஸ்ரவேல் ஜனங்களின் மனப்பூர்வமான காணிக்கைகளைக் கொண்டு ஆசரிப்புக் கூடாரத்தை உண்டுபண்ணினான். தேவன் தனக்குக் கற்பித்தபடியே அவன் வேலையை முடித்தான். அப்பொழுது ஒரு மேகம் ஆசரிப்புக் கூடாரத்தை மூடினது. கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று (யாத். 40 : 33, 34). இது தான் முதலாவது உண்டாக்கப்பட்ட ஆலயம்.

அதற்குப் பின்னர் சாலொமோன் கர்த்தருக்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டினான். அதைக் கட்டுவதற்கான மாதிரி அவனுடைய தகப்பனாகிய தாவீதுக்குக் கர்த்தருடைய கரத்தினால் எழுதிக் கொடுக்கப்பட்டது (I நாளா. 28 : 19). அந்த மாதிரியின்படியே சாலொமோன் அதைக் கட்டி முடித்தான். இந்த ஆலயத்தையும் கர்த்தருடைய மகிமை நிரப்பிற்று (II நாளா. 5 : 14). தேவாலயம் மேகத்தினால் நிறையப்பட்டது. அந்த மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியஞ் செய்து நிற்கக்கூடாமற் போயிற்று (வச. 13, 14). பின்நாட்களில் இஸ்ரவேலர் கர்த்தருக்குத் துரோகம்பண்ணி ஆலயத்தைத் தீட்டுப்படுத்தினபடியால் அந்த ஆலயம் சத்துருக்களால் அழிக்கப்பட்டுப்போயிற்று (II நாளா. 36 : 14, 19). அதன் பின்பு செருபாபேலினால் ஒரு ஆலயம் கட்டப்பட்டது (எஸ்றா 5 : 2 ; 6 : 15). அந்த நாட்களில் ஆகாய் தீர்க்கதரிசி தீர்க்கதரிசனமாக, "இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" என்று கூறினான் (ஆகாய் 2 : 7).

கைகளினால் செய்யப்பட்ட மேற்கூறப்பட்ட ஆலயங்களில் தேவமகிமை தங்கியிருந்த போதிலும், என்றென்றுமாகத் தேவன் அவற்றில் வாசஞ்செய்ய முடியவில்லை. தேவஜனங்கள் பின்மாற்றமடைந்த போது, தேவமகிமை அந்த ஆலயங்களை விட்டுப் போயிற்று. உன்னதமானவர் கைகளினால் கட்டப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார் (அப். 7 : 48). ஆகவே, தற்போது அவர் ஆவிக்குரிய ஒரு வாசஸ்தலத்தைக் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறார். முந்தின ஆலயங்களெல்லாம் இதற்கு நிழலாட்டமாயிருக்கின்றன. புதிய ஏற்பாட்டில் பரிசுத்தஆவியினாலே நாம் தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறோம் (எபே. 2 : 22). "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ... தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்" என்று நாம் வாசிக்கிறோம் (I கொரி. 3 : 16, 17). தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருப்பது மட்டுமல்ல. அது மகிமையாயுமிருக்கிறது (ஏசாயா 60 : 7). ஆதலால் தேவனுடைய ஆலயமாய் மாறியிருக்கும் நாம் அவருடைய மகிமையினால் நிரப்பப்பட்டவர்களாய் இருக்க வேண்டும். புதிய ஏற்பாட்டின் மகிமை என்பது மகிமையின் ஆவியாகிய பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைக் காட்டுகிறது (I பேதுரு 4 : 14). கர்த்தராகிய இயேசு இந்த உலகத்தில் ஜீவித்துக்கொண்டிருந்தபோது அவர் தேவனுடைய ஆலயமாகவே இருந்தார். "தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்" என்று அப். யோவான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்துக் குறிப்பிடுகிறார் (யோவான் 3 : 34). தேவனுடைய ஆலயம் என்று அழைக்கப்படும் நமக்கு, எலிசா பெற்றிருந்ததைப் போல இரட்டிப்பான அபிஷேகம் மாத்திரம் அல்ல, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவில் இருந்தது போன்ற அளவில்லாத அபிஷேகம் தேவை. நம்முடைய இருதயமாகிய பாத்திரம் அவருடைய அபிஷேகத்தினால் நிறைந்து வழிய வேண்டும். நாம் மெய்யாகவே தேவனுடைய ஆலயமாயிருந்தால் நம்மிலிருந்து தேவனுடைய வல்லமை வெளிப்பட வேண்டும். தேவமகிமையால் நிறைந்த ஆலயமாய் ஜீவித்த அப்போஸ்தலர்களாகிய பேதுரு, பவுல் போன்றோர் மூலம் தேவவல்லமை பலமாய் வெளிப்பட்டது. நாமும் தேவவல்லமையை உலகிற்கு வெளிப்படுத்தும்படி தேவமகிமையால் நிறைந்த ஆலயமாக நம்மைக் காத்துக்கொள்ளவேண்டியது அவசியம்.

இந்த நிறைவான அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ள நம்மில் காணப்பட வேண்டியவை யாவை?

சுத்திகரிப்பு:

புதிதான அபிஷேகம் எப்போதும் நம்மில் நிலைத்திருக்க வேண்டுமாயின், நாம் புதிய துருத்திகளாய் இருக்க வேண்டியது அவசியம். "ஒருவனும் புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்துவைக்கமாட்டான்; வார்த்துவைத்தால் புதுரசம் துருத்திகளைக் கிழித்துப்போடும், இரசமும் சிந்திப்போம், துருத்திகளும் கெட்டுப்போம். புது ரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைக்கவேண்டும், அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்கும்" (லூக்கா 5 : 37, 38). பழைய மனுஷனின் சுபாவங்கள் நம்மைப் பழைய துருத்திகளாய் மாற்றிவிடும். இருதயத்தில் கசப்பு, வைராக்கியம், பகை, முறுமுறுப்பு, பெருமை, பொறாமை, மாம்சீக சிந்தை போன்றவற்றிற்கு நாம் இடமளிப்போமானால் அவை நம்மைப் பழைய துருத்திகளாக மாற்றும். துருத்தி பழையதாகி விட்டால், அதில் புதிய ரசம் வார்க்கப்பட முடியாது. ஆதலால் பழைய மனுஷனின் சுபாவங்கள் நம்மில் பிரவேசிக்குமாயின் நாம் உடனுக்குடன் நம்மைச் சுத்திகரித்துக்கொள்ள வேண்டியது அவசியம். நாம் சுத்திகரிக்கப்பட்ட பாத்திரமாகக் காணப்பட்டால் மட்டுமே நாம் எஜமானுக்கு உபயோகமான பாத்திரமாக மாறுவோம் (II தீமோ. 2 : 20, 21). அவ்வப்போது நாம் தவறுவதும் பின்பு சுத்திகரிக்கப்படுவதும் அல்ல, சுத்திகரிக்கப்பட்ட நிலவரத்தைக் காத்துக்கொள்வதே மேன்மையான அனுபவமாகும். ஆதலால் நம் ஜீவியத்தின் பரிசுத்தமாகுதலைக் குறித்து எப்போதும் நாம் ஜாக்கிரதையாயிருப்போமாக! நாம் கர்த்தருடையவர்களாக இருக்கும்படிக்கு அவர் நம்மைப் புடமிட்டுச் சுத்திகரிக்கிறார் (மல். 3 : 3).

விசுவாசம்:

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்று கர்த்தராகிய இயேசு சொன்னார் (யோவான் 7 : 38). தேவன் நமக்கு நிறைவான அபிஷேகத்தைத் தருவார் என்று நாம் சற்றேனும் சந்தேகப்படாமல் விசுவாசிக்க வேண்டும். விசுவாசமில்லாமல் நாம் தேவனிடத்திலிருந்து எதையும் பெற்றுக்கொள்ள முடியாது. "ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக" என்று யாக்கோபு அப்போஸ்தலன் கூறுகிறார் (யாக். 1 : 6, 7). "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்" (I யோவான் 5 : 14). "மேலும், நீங்கள்

விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்" (மத். 21 : 22). விசுவாசத்துடன் நிறைவான அபிஷேகத்தை நாம் தேவனிடம் கேட்டுப் பெற்றுக்கொள்வோமாக.

தாகம்:

எவ்வளவுக்கதிகமாக நமக்குத் தாகம் இருக்கிறதோ அவ்வளவுக்கதிகமாக நாம் நிறைவான அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். "தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்" என்பது வாக்குத்தத்தம் (ஏசாயா 44 : 3). அன்னாள் தாகத்தோடு வந்து கர்த்தருடைய சமுகத்தில் தன் இருதயத்தை ஊற்றி விட்டாள். அவளுடைய ஒரே தாகம், தனக்கு எப்படியாயினும் ஒரு ஆண்பிள்ளை வேண்டுமென்பதே. கர்த்தர் அவளுடைய தாகத்தைத் தீர்த்தார். அவ்வாறே ஜெயஜீவியம் செய்வதற்கான ஒரு நிறைவான அபிஷேகத்திற்காக நாம் தாகமுடன் தேவசமுகத்தில் காத்திருந்தால், நம் வாஞ்சையை நிறைவேற்ற அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது" என்று தாவீது கூறுகிறான் (சங். 42 : 1). இந்தக் கடைசி நாட்களில் பிசாசு அநேகரில் லௌகிக தாகத்தை எழுப்பிவிட்டு, ஆவிக்குரிய மேலான தாகத்தைத் தணித்துவிடுகிறான். ஆதலால் அவர்களுக்கு தேவ சமுகத்துக்கு வரவேண்டும், ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற வாஞ்சை இல்லை; மாறாக, சாக்குப்போக்கு சொல்லத் துவங்கு கிறார்கள். நாமோ மேலானவைகளையே நாடித் தேடுவோமாக. ஒரு வறண்ட நிலத்தின்மேல் எவ்வளவு தண்ணீரை ஊற்றினாலும் அது அதை ஏற்றுக்கொள்ளும். அப்படிப்பட்ட ஆவிக்குரிய ஒரு தாகம் நமக்கு அவசியம். "ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; ... நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்" (ஏசாயா 55 : 1) என்ற அழைப்பிற்கிணங்க தாகத்தோடு அவரண்டை நாம் நெருங்குவோமாக!

கீழ்ப்படிதல்:

"தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்தஆவி" என்று நாம் வாசிக்கி றோம் (அப். 5 : 32). ஆவியானவரின் நடத்திப்புக்குக் கீழ்ப்படிவேன் என்று நாம் தீர்மானித்து ஒப்புக் கொடுக்கும்போது நிறைவான அபிஷேகத்தை நாம் பெற்றுக்கொள்ளலாம். கர்த்தராகிய இயேசு இந்த உலகத்தில் பிரவேசித்தபோது புஸ்தகச் சுருளில் தம்மைப்பற்றி எழுதப்பட்ட பிரகாரம் தம்மை ஒப்புக்கொடுக்கத் தீர்மானித்தார். அவர், "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன்" என்றார் (எபி. 10 : 7). இதனாலேயே பிதா தம்முடைய குமாரனை அளவில்லாத அபிஷேகத்தினால் நிறைத்தார். சந்தோஷமான வேளைகளிலும் கஷ்டமான வேளைகளிலும் அவர் பிதாவின் சித்தத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிகிறவராய் இருந்தார். அற்புதங்களைச் செய்யும் வேளைகளிலும் சிலுவைப் பாதையிலும் அவர் ஒன்றுபோல் பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தார். 'கீழ்ப்படிவேன்' என்று தீர்மானித்து ஒப்புக்கொடுத்தவர் சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தார் (பிலி. 2 : 8). இதினிமித்தம் அவர் உயிரோடெழுப்பப்பட்டு சீயோனில் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டார் (சங். 2 : 6). நாமும் இவ்விதம் கீழ்ப்படியும் தீர்மானத்தோடு ஒப்புக்கொடுப்போமாகில் தேவன் நம்மை நிறைவான அபிஷேகத்தினால் நிறைக்க உண்மையுள்ளவராயிருக்கிறார்.

வேண்டிக்கொள்ளுதல்:

ஒரு நிறைவான அபிஷேகத்தைப் பெற நாம் நம் வாயை விரிவாய்த் திறந்து அவரிடத்தில் வேண்டிக்கொள்ள வேண்டும் (சங். 81 : 10). கர்த்தரிடத்திலிருந்து பதில் கிடைக்கும்வரை நாம் அவரிடத்தில் வேண்டிக்கொண்டே இருக்க வேண்டும். பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் வேண்டிக்கொள்ளும்போது நிச்சயமாய் நாம் பதிலைப் பெற்றுக்கொள்வோம், நிறைவான அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்வோம். "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்"; "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்தஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா" என்று நம் ஆண்டவராகிய இயேசுதாமே சொல்லியிருக்கிறார் (லூக்கா 11 : 9, 10, 13). வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள நமக்கு நீடிய பொறுமை அவசியம் (எபி. 6 : 11). விசுவாசத்தோடு கூடிய நீடிய பொறுமையோடு தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளுவோமானால் நிறைவான அபிஷேகத்தை நாம் பெற்றுக்கொள்வது நிச்சயமே.

அருமை நண்பரே! தேவமகிமையினால் நிறைந்த ஆலயமாக மாற்றப்படும்படி மேற்கூறப்பட்டுள்ள தகுதிகளுடன் ஒரு நிறைவான அபிஷேகத்திற்காக நாம் மன்றாடுவோமாக! "பின்மாரிகாலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்ளுங்கள்; அப்பொழுது கர்த்தர் மின்னல்களை உண்டாக்கி, வயல்வெளியில் அவரவருக்குப் பயிருண்டாக அவர்களுக்கு மழையைக் கட்டளையிடுவார்" என்பது வாக்குத்தத்தம் (சக. 10 : 1). ஆம்! "முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும், இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும்" (ஆகாய் 2 : 9). அவர் தமது மகிமையின் ஆலயத்தை மகிமைப்படுத்தும் நாள் நெருங்கியிருக்கிறது. அந்த மகிமையின் நாளில் நம் ராஜாவாகிய இயேசுவை மகிமை பொருந்தினவராய்த் தரிசிக்கும்படி துரிதமாய் நாம் ஆயத்தப்படுவோமாக!

****

விசுவாச துரோகம்

அப்போஸ்தலனாகிய. பவுல், தெசலோனிக்கேயருக்கு எழுதிய தன் இரண்டாம் நிருபம் இரண்டாம் அதிகாரம் மூன்றாம் வசனத்தில் இவ்விதம் கூறுகிறார்: "எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை

மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது".

முழு உலகத்திலும் இன்று ஆயிரக்கணக்கான சபைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் புதுப்புது சபைகள் தோன்றிக்கொண்டும் வருகின்றன. கம்யூனிஸத்தின் விழுகையும் அழிவும் அநேக தேசங்களிலும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதற்கான வழியை வகுத்திருக்கிறது. சபை ஆராதனைகளுக்காக ஆண்களும் பெண்களும் வேதாகமத்தைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு தெருக்களில் நடந்து செல்வது உண்மையாகவே பார்ப்பதற்கு அழகான காட்சியாக இருக்கிறது. காலையிலும் மாலையிலும் கிறிஸ்தவ வீடுகளில் எழும்பும் பாடல்களின் சத்தத்தைக் கேட்பது இனிமையாக இருக்கிறது. இவையெல்லாம் எழுப்புதலுக்கான அடையாளங்களன்றோ? ஆம், மெய்யாகவே இவை எழுப்புதலுக்கான அடையாளங்களே ! ஆனால் இந்த உண்மையோடுகூட, கர்த்தருடைய வசனம் இன்னொரு விநோதமான உண்மையையும் வெளிப்படுத்துகிறது. அது சபைகளுக்குள்ளேயும் சபைகளுக்கிடையேயும் ஒரு வஞ்சகமான சிறிய மெல்லிய மயிரிழை அளவான பிளவு உருவாகியிருப்பதை தெளிவாகக் கூறுகிறது. இந்தப் பிளவு அல்லது வெடிப்பு செய்வது தான் என்ன? அது ஒவ்வொரு சபையிலுமுள்ள ஜனங்களெல்லாரையும் இரண்டு வகுப்பினராகப் பிரிக்கிறது.

இன்று நாம் முழு உலகத்திலும் ஆயிரக்கணக்கான சபைகளைப் பார்க்கிறோம். ஆனால் வேதாகமம் இரண்டு சபைகளைப் பற்றி மட்டுமே கூறுகிறது. ஒன்று, வெளிப்படுத்தின விசேஷம் 12 - ஆம் அதிகாரத்தில் அடையாளமாகக் கூறப்பட்டிருக்கும் ஸ்திரீ; இன்னொன்று, 17 - ஆம் அதிகாரத்தில் அடையாளமாகக் கூறப்பட்டிருக்கும் ஸ்திரீ. சபையை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கிற இந்தப் பிளவை உண்டாக்குவதில் வலுசர்ப்பத்தின் வால் முக்கியமான பங்கை வகிக்கிறது. அது தன் வாலினாலே வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றில் ஒரு பங்கை கீழே விழத் தள்ளுகிறது என வெளிப்படுத்தின விசேஷம் 12 - ஆம் அதிகாரம் 4 - ஆம் வசனத்தில் நாம் வாசிக்கிறோம். இவ்வலுசர்ப்பமாகிய பிசாசானவன் இவ்வதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் ஸ்திரீயாகிய பரிசுத்தவான்களை வஞ்சித்து, அவர்களை வெளிப்படுத்தின விசேஷம் 17 - ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் ஸ்திரீக்குப் பங்குள்ளவர்களாக மாற்ற முயற்சிக்கிறான். அவன் அதில் ஓரளவு வெற்றியைக் கண்டிருக்கிறான். இவ்விதம் 12 - ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் ஸ்திரீயின் அங்கத்தினரில் சிலர் 17 - ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் ஸ்திரீயின் அங்கத்தினராக மாறும் மாற்றத்திற்குத் தான் 'விசுவாச துரோகம்' என்று பெயர். 'விசுவாச துரோகம்' என்று தமிழில் கூறப்பட்டிருப்பது, ஆங்கிலத்தில், 'falling away' என்று சொல்லப் பட்டிருக்கிறது. இதன் அர்த்தம், 'விழுகை' என்பது தான். இந்த விசுவாச துரோகம் கடைசி நாட்களின் அடையாளங்களில் ஒன்றாகும் என்பதை II தெசலோனிக்கேயர் 2 - ஆம் அதிகாரம் 3 - ஆம் வசனத்தின் மூலம் நாம் அறிகிறோம்.

இந்த நிர்ப்பந்தமான நிலையில் நாம் சரியாக விளங்கிக்கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான காரியம் உண்டு. தூதர்களின் காலம் முதலே இந்த விழுகை என்பது உண்டு என்பது மறுக்க முடியாத உண்மை. ஆதாமின் விழுகையிலிருந்து பரிசுத்தவான்கள் விழுந்து போவதைப் பார்க்கும்போது விழுகை என்று சொல்வது காலங்கள் செல்லச் செல்ல ஒரு சாதாரண காரியம் போலாகிவிட்டது. ஆவிக்குரிய உன்னத நிலவரத்திலிருந்து படிப்படியாகக் குறைவுபடுவது என்பது இக்கடைசி நாட்களில் கிறிஸ்தவர்கள் மத்தியிலும் சபையிலிருக்கும் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மத்தியிலும், நாம் கூர்ந்து நோக்காமலேயே வெளியரங்கமாகத் தெரிகிறது.

இப்போது நம்முடைய ஜீவியத்தைத் தனித்தனியாகவும், சபையாகவும் நாம் பார்ப்போம். நம்மில் அநேகர் கடந்த காலத்தைக் குறித்தே மேன்மை பாராட்டுகின்றனர். 'உனக்குத் தெரியுமா, நாங்கள் அந்த நாட்களில் கர்த்தருக்காக எவ்வளவு பாடுபட்டோம்? ஆதி நாட்களில் நாங்கள் அப்படியிருந்தோம், இப்படியிருந்தோம்' என்று அவர்கள் சொல்லிக் கொண்டே போகின்றனர். இந்த மேன்மைபாராட்டுதல்தானே இப்போது, தற்காலத்தில் தங்கள் நிலையைப் பற்றிமேன்மைபாராட்டுவதற்கு அவர்களுக்கு ஒன்றுமேயில்லை என்ற வருந்தத்தக்க, மறுக்க முடியாத உண்மையை வெளிப்படுத்துகிறது. அருமை நண்பனே, உன் பழைய பாடுகளின் ஜீவியம், ஆதிப் பிரதிஷ்டை, ஆதி அன்பு, ஆதி வைராக்கியம், ஆதியிலிருந்த ஜெப ஜீவியம் இவைகள் இன்று எங்கே?

ஒரு கடிகாரத்தின் 'மணியை'க் காட்டும் முள்ளைப் பாருங்கள். அது நகர்ந்து செல்வதை உங்களால் பார்க்க முடியாது. விழுந்துபோவதுங்கூட இதற்குச் சமமானதே. விழுகை என்பது மெதுவாக, படிப்படியாக, தவறு செய்யும் ஒரு பரிசுத்தவான், தான் செய்வது தவறு என்று அறிந்துகொள்ளக் கூடாத விதத்தில் சம்பவிக்கிறது. இதில் என்ன இருக்கிறது? இதே காரியத்தைத்தான் மற்றவர்களும் செய்கிறார்கள் என்று பாவத்தைக் கண்சாடையாக விட்டுவிடத்தக்க விதத்தில் அந்த வலுசர்ப்பமாகிய பிசாசு காதில் வந்து தந்திரமாக, இரகசியமாக ஓதுவான். வலுசர்ப்பத்தின் வாலுக்குள் 'இதில் என்ன இருக்கிறது' என்று சொல்லக் கூடிய சில பாவங்கள் இருக்கின்றன. அவர்களுக்குப் பாவங்கள் பாவங்களைப் போல தோன்றுவதில்லை.

தானியேலின் தீர்க்கதரிசனத்தில் இக்கடைசி நாட்களில் விசுவாச துரோகம் சம்பவிக்கும் என்பதைப் பற்றித் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. "அறிவாளிகளைப் புடமிடுகிறதற்கும், சுத்திகரிக்கிறதற்கும், வெண்மையாக்குகிறதற்கும் அவர்களில் சிலர் விழுவார்கள்" என தானியேல் 11 : 35 - இல் நாம் வாசிக்கிறோம். ஆம். இப்படிப்பட்ட விழுகைகளை நாம் காணும்போது அதைரியப்படத் தேவையில்லை. தங்கள் தேவனை அறிகிற அறிவினால் அறிவாளிகளானவர்கள், அதைக் கண்டு தங்களைச் சுத்திகரித்து வெண்மையாக்கிக்கொள்ள வேண்டும். அவ்வதிகாரத்தின் 32 - ஆம் வசனத்தில், "உடன்படிக்கைக்குத் துரோகிகளாயிருக்கிறவர்களை இச்சகப் பேச்சுகளினால் கள்ளமார்க்கத்தாராக்குவான்; தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டு, அதற்கேற்றபடி செய்வார்கள்" என நாம் வாசிக்கிறோம். தேவனோடு நாம் செய்த உடன்படிக்கைக்குத் துரோகம் செய்யாமல், உடன்படிக்கையைக் காக்கிற உண்மையுள்ள கர்த்தருடைய கரங்களில் நம்மை ஒப்படைப்போமாக. அநேகர் உடன்படிக்கைக்குத் துரோகம் செய்யும் இந்நாட்களில் தேவனை அறிந்தவர்களாகிய நாம் திடன்கொண்டு நிற்போமாக. சத்தியம் என அறிந்த ஒன்றை நாம் கைக்கொள்ள முடியாதவர்களாய்ப் போவதினால், அதற்கு விரோதமான நியாயங்களைக் கொண்டுவரும் வலுசர்ப்பத்தின் வாலாகிய வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் உபதேசங்களுக்கும் நாம் செவிசாய்க்காதிருப்போமாக. பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தை தேவன் தாமே ஒரு கூட்டத்தார்மேல் அனுப்புவார் என நாம்

வாசிக்கிறோம். சத்தியத்தின் மேலுள்ள அன்பை அங்கிகரியாமற் போனவர்களுக்கு அது சம்பவிக்கும் (II தெச. 2 : 10 - 12).

தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு ஜாக்கிரதையாயிருக்கக்கடவன். அபிஷேகத்தின் மூலமாய்க் கிறிஸ்து இயேசுவோடு உன்னதங்களில் வீற்றிருக்கும் நீ விழுந்துபோவாயானால் உன் விழுகை பயங்கரமாயிருக்கும். ஆகையால் மிகுந்த பயத்தோடும் மனத்தாழ்மையோடும் ஜெபத்தோடும் உன் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படு. வழுவாதபடி உன்னைக் காக்கவும் தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உன்னை மாசற்றவனாய் நிறுத்தவும் வல்லவருமாயிருக்கிறவருடைய கரங்களிலே உன்னை ஒப்புக்கொடு (யூதா 24). "உன் பக்கத்தில் ஆயிரம் பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது". அதற்காக நீ உன்னதமானவருடைய மறைவிலே, சர்வ வல்லவருடைய நிழலிலே தங்கித் தாபரிப்பாயாக (சங். 91 : 1, 7).

இப்போது நாம் வந்திருக்கும் காலத்தின் அவசியம் ஜெபமே. திறப்பின் வாயிலிலே நின்று விண்ணப்பம் செய்யக் கூடிய ஜனங்களைக் கர்த்தர் தேடிக் கொண்டே இருக்கிறார். ஆனால் ஐயோ பரிதாபம் ! 'செய்கிறதற்கு எங்களுக்கு ஏராளம் வேலைகள் இருக்கின்றன. ஆதலால் ஜெபிப்பதற்குச் சமயமே இல்லை' என்று சாக்குப்போக்குச் சொல்லி நம்மை அறியாமலேயே, நம் இருதயங்கள் கடினப்பட்டிருக்கின்றன. சபை வெறும் ஒரு நிறுவனமாக அல்லது ஒரு அமைப்பாக மாறிவிட நாம் இடங்கொடுக்க வேண்டாம் ! உலகத்திலிருந்து தம்முடைய சபையை எடுத்துக்கொள்ளும்படியாகக் கர்த்தர் வருகிறார் என்று நாம் சொல்லுகிறோம். ஆனால் சபையில் இருக்கும் 'உலகத்தை' எடுத்துப்போடுவதில் நாம் கவனமாயிருப்போமாக.

'விழுகை' என்பது ஒரு தீர்க்கதரிசனமாயிருக்கிறது. அதைத் தடை செய்ய முடியாது. ஆனால் நீ ஜெபித்தால் நீ அதற்கு இரையாக மாட்டாய்; மற்றவர்களையும் நீ பாதுகாப்பாய் என்பது நிச்சயம்.

நீரல்லால் யாருமில்லை

அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு மிஷனரி அம்மாள் (அருட்பணி ஆற்றுபவர்) ஆப்பிரிக்காவின் கிராமப் பகுதிகளில் சுவிசேஷ ஊழியம் செய்துவந்தார்கள். ஆப்பிரிக்காவில் அவர்கள் தங்கும்படியாக அனுமதிக்கப்பட்ட நாட்கள் முடிவடைந்தபோது, அவர்கள் தன் தாய்நாடு திரும்ப வேண்டியதாயிருந்தது. அதற்கு முன்பாக அந்த அம்மாள் அக்கிராமத்திலிருந்த சிறுவர் சிறுமிகளைக் கூட்டிச் சேர்த்து, அவர்களை மகிழ்விக்கும்படியாக, அவர்களுக்குப் பாடல்களைக் கற்றுக்கொடுத்து, இனிப்புகளையும் வெகுமதிகளையும் வழங்கினார்கள். அப்பிள்ளைகளனைவரும் களிப்போடும் மகிழ்ச்சியோடும் வந்து அம்மிஷனரியிடமிருந்து வெகுமதிகளையும் இனிப்புகளையும் பெற்றுக்கொண்டனர். ஆனால் அக்கூட்டத்தின் மத்தியில் சிறுவன் ஒருவன் ஏதோ ஒன்றை எதிர்பார்ப்பதுபோல அவ்வம்மையாரை நோக்கிப் பார்த்துக்கொண்டேயிருந்தான். அவ்வம்மையாரின் கண்களும் அச்சிறுவன்மேல் பட்டது. உடனே அவர்கள் அச்சிறுவனை அழைத்து அவனுக்கும் இனிப்புகளையும் வெகுமதிகளையும் வழங்கினார்கள். அவனோ அவை தனக்கு வேண்டாம் என மறுத்துவிட்டான். மிஷனரி அம்மாள் அதிர்ச்சியுற்று, "ஏன் ? உனக்கு என்ன வேண்டும் ? உனக்கு விருப்பமானதை நீயே எடுத்துக்கொள்" என்று கூறி, தன் கையிலிருந்தவற்றை நீட்டினார்கள். அச்சிறுவனோ கண்ணீர் ததும்ப மெல்லிய குரலில், "இவ்வுலகில் எனக்கு அப்பாவோ அம்மாவோ உற்றார் உறவினரோ ஒருவருமே இல்லை. என்னிடத்தில் அன்புகூரவோ, என்னை ஆதரிக்கவோ, அரவணைக்கவோ ஒருவருமில்லை. நான் ஓர் அநாதை. நீர் எனக்குத் தாயாராக இருப்பீரா ? என்னை உம்மோடுகூட உமது நாட்டிற்கு அழைத்துச் செல்வீரா?" என்று தழுதழுத்த குரலில் கேட்டான். மிஷனரி அம்மாவின் உள்ளம் நொறுங்கிவிட்டது. அவர்கள் சிந்திக்கலானார்கள். இந்த அநாதைச் சிறுவனுக்கு நான் அளிக்கும் வெகுமதிகளும் இனிப்புகளும் அவசியமில்லை. அவனுக்கு அவசியமானது அன்பே. அந்த அன்புக்காகவே அவன் ஏங்கித் தவிக்கிறான் என்று அவர்கள் தன் மனதில் எண்ணிக்கொண்டு, அச்சிறுவனை நோக்கி, "நீ என்னோடுகூட வரும்படி ஆயத்தப்படு" என்று கூறிவிட்டு, அவனுடைய பயணத்திற்கான ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்து, அவனைத் தன்னோடுகூட அழைத்துக்கொண்டுபோய், அவனைத் தனக்குப் புத்திரனாக்கிக் கொண்டார்கள். அதன் பின்பு அச்சிறுவனுக்கு அவர்கள் கொடுக்கும் இனிப்புகளும் வெகுமதிகளும் மாத்திரமல்ல, அவர்களுடையவைகள் யாவுமே முற்றிலும் அவனுக்குரியவையாகிவிட்டன.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, அம்மையாரை அணுகிய பெரும்பாலான சிறுவர்களைப்போல இன்று நாமும் தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதில் மாத்திரம் சந்தோஷமும் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்துவிடுகிறோம். வெகு சிலரே, "ஆண்டவரே, நீரே எனக்குத் தேவை; நான் எப்போதும் உம்முடனேயே இருக்க விரும்புகிறேன்; என் நேசர் தன் முக ஜோதியதேயல்லால் இன்பம் தரும்பொருள் ஏதுமில்லை" என்று ஆண்டவராகிய இயேசுவுக்காகவும் அவருடைய அன்புக்காகவுமே ஏங்கித் தவிக்கின்றனர். அவர்களை அவர் சொந்தம் பாராட்டி, தம் கரங்களில் அணைத்துக்கொள்வதுடன், "நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" என்று அவர்களுக்கு வாக்குப்பண்ணுகிறார் (யோவான் 14 : 3). இவ்வாறு கர்த்தர் தருகிறவைகளில் அல்ல, கர்த்தரிலேயே முழுவாஞ்சையும் பிரியமும் வைத்திருக்கிறவர்களுக்கு, இப்பூமியில் தம்மோடு நிலைத்திருக்கிற அனுபவத்தையும், மறுமையில் தம்முடையவை எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளும் உரிமையையும் அவர் அளிக்கிறார் (I யோவான் 4 : 16 ; I கொரி. 2 : 9 ; வெளி. 21 : 7). இப்பூமியில் அவர்களுக்குக் கர்த்தரைத் தவிர வேறு யாரும் இல்லாவிடினும், ஆதரிப்பார் யாருமின்றி, தனிமையும் துயரமும் அவர்களுடைய பங்காயிருப்பினும், அவர்கள் கர்த்தரையே தங்கள் சுதந்தரமாகத் தெரிந்துகொண்டபடியினால், "மகனே, நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது" (லூக்கா 15 : 31) என்ற அவர்தம் பாசக்குரல் அவர்களைத் தேற்றும்.

தேவையானது ஒன்றே (லூக்கா 10 : 42). அது நம் கர்த்தராகிய இயேசுவே. அவரை நீ ஆதாயப் படுத்திக்கொள்ள வேண்டும். அதற்காக உனக்கு ஆதாயமாகத் தோன்றும் மற்றெல்லாவற்றையும் குப்பையாக எண்ணி உதறித் தள்ளிவிட்டு ஆண்டவராகிய இயேசுவைப் பின்பற்றுவாயா? கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று தனக்கிருந்த ஒரே தீராவாஞ்சையினால், தனக்கு இவ்வுலகில் லாபமாய் இருந்த அனைத்தையுமே உதறித்தள்ளிவிட்டான் சவுல் என்னும் வாலிபன்! (பிலி. 3 : 7 - 9). இவ்வுலகில் உன்னதமான தேவனுக்கு ஊழியஞ்செய்வதைக் காட்டிலும் மேன்மையானது ஒன்றுமில்லை. அப்படிப்பட்டவர்களைக் குறித்தே அவர், "நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்" என்று சொல்லியிருக்கிறார் (யோவான் 12 : 26). ஆண்டவருக்கு ஊழியம் செய்ய அவர் மேலுள்ள அன்பே பிரதானம். அழைப்பைப் பெற்ற சீஷர்களும் கர்த்தராகிய இயேசுவின் சிலுவைப் பாதையில் அவரில் அன்புகூர்ந்து அவரோடு சேர்ந்து நிற்கத் தைரியமில்லாமல் ஓடிப்போனார்கள் (மாற்கு 14 : 50). அன்பினால் கர்த்தராகிய இயேசுவுக்குப் பின்சென்ற மரியாளோ, அவர் சிலுவையைச் சுமந்துகொண்டு போகும் போதும் அழுதுகொண்டே அவருக்குப் பின்சென்றாள். மரித்து அடக்கம்பண்ணப்பட்ட பின்பும், யூதருக்கோ ரோமப் போர்ச்சேவகருக்கோ பயப்படாமல், அதிகாலையில் இருட்டோடே அவள் எழுந்து கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தைப் பார்க்கும்படி கல்லறைக்குச் சென்றாள் (யோவான் 20 : 1). என்னே அவளுடைய அன்பு! அவளுடைய அன்பை அறிந்த ஆண்டவர், தாம் உயிர்த்தெழுந்த பின் முதலாவது அவளுக்குத் தரிசனமானார்.

தேவனுடைய பிள்ளையே! நாம் நேசிக்கிறவரும் சேவிக்கிறவருமான கர்த்தராகிய இயேசு வெகு சீக்கிரத்தில் வெளிப்படுவார். அன்பினால் அவரைப் பின்பற்றுகிறவர்கள் - அவருக்காகவே ஏங்கித் தவிப்பவர்கள் - அவரைக் காண்பார்கள். நித்தியநித்தியமாய் அவர்கள் தம்மோடுகூட இருக்கும்படிக்கு அவர் அவர்களுக்கு அருள்செய்வார். நீயும் அன்பினால் உன் ஆண்டவரைப் பின்பற்ற முன்வருவாயா?

ஜ்ஜ்ஜ்ஜ்ஜ்ஜ்

யுவுத ஞூஓருஸ ஞஏஸலுழ

நான் ஒரு கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்டேன். ஞாயிற்றுக் கிழமை மட்டும் கோவிலுக்குச் செல்வது எனது வழக்கமாகக் காணப்பட்டது. இந்நிலையில் 1987 - ஆம் வருடம் பெந்தெகொஸ்தே சபையைச் சேர்ந்த ஒருவருக்கு என் பெற்றோர் என்னைத் திருமணம் செய்து வைத்தார்கள். அதன்பிறகு என் கணவரோடு நான் அச்சபையின் கூட்டங்களுக்குச் சென்றுவந்தேன். அதுமுதல் கர்த்தர் என்னோடு அதிகமாக இடைபட்டார். ஒருநாள் என் உள்ளான நிலவரத்தைக் குறித்தும் ஞானஸ்நான சத்தியத்தைக் குறித்தும் தேவன் திட்டவட்டமாக என்னோடு பேசினார். உடன்தானே நான் என் பாவங்களை அறிக்கை செய்து, அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து முழுக்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டேன். சில நாட்களுக்குள் நான் அந்நிய பாஷை அடையாளத்துடன் பரிசுத்தஆவியையும் பெற்றுக்கொண்டேன். பரிசுத்தஆவியின் வரங்களையும் கர்த்தர் எனக்குத் தந்து என்னைப் பெலப்படுத்தினார்.

1988 - ஆம் வருடம் எனக்குப் பிரசவகாலம் நேரிட்டு மிக ஆபத்தான நிலவரத்தில் நான் மரணத்தோடு போராடிக்கொண்டிருந்தேன். அந்நிலையில் 'ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்' என்ற வார்த்தையைத் தவிர வேறு எந்த வார்த்தையும் என் வாயிலிருந்து வரவில்லை. என் பெற்றோர் மற்றும் யாவரும் கண்ணீரோடு போராடி ஜெபித்ததின் பலனாக பெரிதான ஓர் ஆபத்திலிருந்து என்னையும் என் குழந்தையையும் தேவன் காப்பாற்றினார். தேவன் எனக்கு ஒரு குமாரனைத் தந்தபடியினால் அவனுக்குச் 'சாமுவேல்' என பரிசுத்தவான்கள் பெயரிட்டார்கள். அவனுக்கு ஒன்றரை வயதான போது ஒருநாள் அவன் ஒரு ஆழமான சேற்றில் விழுந்து அமிழ்ந்து போனான். வெகுநேரம் கழித்து அவனைச் சேற்றிலிருந்து வெளியே கொண்டுவந்தபோது அவனது உயிர் கொஞ்சம் கொஞ்சமாக அவனை விட்டுப் பிரிந்து போய்க்கொண்டிருந்தது. இந்நிலவரத்தில் அவனை விசுவாச வீட்டிற்குக் கொண்டுபோனோம். அங்கிருந்த யாவரும் அவனுக்காகக் கண்ணீரோடு போராடி ஜெபித்தனர். அதிகாலையில் கர்த்தர் அவனுக்கு அற்புதமாக உயிர் கொடுத்துப் பாதுகாத்தார். நாங்கள் வேண்டிக்கொண்டதினிமித்தம் 1992 - ஆம் வருடம் கர்த்தர் எனக்கு ஒரு பெண் குழந்தையைத் தந்தார். அந்தக் குழந்தை பிறந்து வளர்ந்தபோது அவளது பாதங்கள் இரண்டும் கீழே ஊன்றாத நிலவரத்தில் காணப்பட்டன. பரிசுத்தவான்களும் விசுவாசிகளும் அவளுக்காகப் போராடி ஜெபித்தார்கள். நாங்களும், 'கர்த்தாவே, குழந்தை நொண்டியாயிராதபடி பூரண சுகத்தைக் கட்டளையிடுவீராக' என வேண்டினோம். எங்கள் அழுகையின் கண்ணீரைக் கர்த்தர்தாமே துடைத்து, குழந்தை காலூன்றி நடக்கும்படி செய்தார். இவ்வாறு கர்த்தர் எங்கள் ஜீவியத்தில் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் எங்கள் ஜீவிய காலமுழுவதும் அவருக்கு நன்றியுள்ளவர்களாய் ஜீவிக்கக் கர்த்தர் தாமே எங்களுக்குக் கிருபையளிப்பாராக.

சகோதரி மேரி பால்ராஜ்

சிவகாசி.

****

எருசலேமின் அலங்கமும் வாசல்களும்

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

2. மீன் வாசல் (FISH GATE)

“மீன்வாசலை அசெனாவின் குமாரர் கட்டினார்கள்; அதற்கு உத்தரம்பாவி, அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்டார்கள்ணி (நெகே. 3 : 3).

எருசலேமின் அலங்கத்தில் இரண்டாவதாகப் பழுதுபார்த்துக் கட்டப்பட்ட வாசல், ‘மீன் வாசல்’ ஆகும். இது அலங்கத்தின் வடபகுதியில் இருந்தது. கலிலேயாக் கடலிலும் மத்தியதரைக் கடலிலும் பிடிக்கப்பட்ட மீன்களை நகரத்தினுள் கொண்டு வருவதற்கு இவ்வாசல் உபயோகிக்கப்பட்டு வந்தது. இதினிமித்தம் இவ்வாசல் மீன்வாசல் என்று அழைக்கப்பட்டுவந்ததாகக் கருதப்படுகிறது. இவ்வாசல், கர்த்தருக்காக ஆத்துமாக்களை ஆழ்ாயப் படுத்துவதைக் காண்பிக்கிறது. கர்த்தராகிய இயேசு மீன் பிடிக்கிறவர்களாயிருந்த பேதுருவையும் அந்திரேயாவையும் பார்த்து, “என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்” என்றார் (மாற்கு 1 : 17). தேவனுடைய ஊழியர்களுக்கு மாத்திரமல்ல, விசுவாசிகள் யாவருக்கும் ஆத்தும ஆதாயம் செய்யும் கடமையைத் தேவன் நியமித்திருக்கிறார். கர்த்தராகிய இயேசுவின் அன்பை அறியாத மக்களுக்கு அவரை அறிவிப்பதும், பாவ வழியில் சமாதானமின்றி உழலும் ஆத்துமாக்களைக் கல்வாரியண்டை வழிநடத்துவதும், அழிந்துபோகிற ஆத்துமாக்களுக்காகப் போராடி ஜெபிப்பதும், வியாதிப்படுக்கைகளிலும் சிறைச்சாலைகளிலும் கட்டுண்டிருக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதும் நம் ஒவ்வொருவரின் மேலும் விழுந்த கடமையாயிருக்கிறது.

“பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது” என்று கர்த்தராகிய இயேசு தேவனுடைய ராஜ்யத்தை ஒரு மீன்பிடிக்கும் வலைக்கு ஒப்பிட்டுக் கூறியிருக்கிறார் (மத். 13 : 47). ராஜ்யத்தின் சுவிசேஷம் உலகம் முழுவதிலும், மனுஷர் யாவருக்கும் அறிவிக்கப்பட வேண்டும். அதை ஏற்றுக்கொள்பவர்கள் நீதிமான்களாகக் கணிக்கப்பட்டு, உலகத்தின் முடிவிலே பரலோக ராஜ்யத்தில் பங்கடைவர். அதை விசுவாசியாதவர்களோ பொல்லாதவர்களாயிருந்து, நித்திய நரகத்தில் பங்கடைவர் (வச. 49, 50). மனந்திரும்ப வேண்டுமென்ற தேவனுடைய கட்டளை உலகமெங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் அறிவிக்கப்பட வேண்டும் (அப். 17 : 30). “அவர்கள் கேட்டாலும் சரி, கேளாவிட்டாலும் சரி, நீ என் வார்த்தைகளை அவர்களுக்குச் சொல்லு” என்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார் (எசே. 2 : 7). அப். பவுலும், “சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு” என்று தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார் (II தீமோ. 4 : 2).

நற்செய்தி அறிவித்தல்:

சீரியரின் இராணுவம் சமாரியாவை முற்றிகை போட்டிருக்கையில், தேசத்தில் கொடும் பஞ்சம் உண்டாயிற்று. அப்போது தேவன் அற்புதமாகக் கிரியை செய்து, சீரிய இராணுவத்திற்கு மகா இரைச்சலைக் கேட்கப்பண்ணி, அவர்களைச் சமாரியாவை விட்டுத் துரத்திவிட்டார். சமாரியாவின் ஒலிமுக வாசலிலிருந்த நான்கு குஷ்டரோகிகள் நடந்ததை அறியாமல், பசியாற்ற வழி தேடி, சீரியரின் பாளயத்துக்குச் சென்றபோது, அவர்கள் ஓடிப் போய்விட்டதைக் கண்டு, அவர்களுடைய கூடாரங்களுக்குள் பிரவேசித்து, தாங்கள் திருப்தியாகப் புசித்துக் குடித்து, தங்களுக்குக் கொள்ளைப் பொருட்களையும் சேகரித்துக் கொண்டனர். தேசத்திலிருந்த மக்களோ இன்னும் கொடிய பஞ்சத்தினால் தவித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி: “நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்; இப்போதும் நாம் போய் ராஜாவின் அரமனையாருக்கு இதை அறிவிப்போம் வாருங்கள்” என்றார்கள் (II இராஜா. 7 : 9). அப்படியே அவர்கள் அந்நற்செய்தியைத் தங்கள் தேசத்திற்கு அறிவித்ததினால் தேசம் பஞ்சத்தினின்று காக்கப்பட்டது. மக்கள் பெரும் அழிவினின்று தப்பினர். அருமையானவர்களே ! இன்று நற்செய்தியாம் சுவிசேஷத்தை அறிந்து, அனுபவித்துக்கொண்டிருக்கிற நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் ? நாம் அறிந்த நற்செய்தியைப் பிறருக்கு அறிவிக்கிறோமா ? அல்லது சுய நலமுள்ளவர்களாக, நமக்காகவும் நம்முடைய குடும்பத்திற்காகவுமே நாம் ஜீவிக்கிறோமா ? தேவபிள்ளையே, முன் நாட்களில் உனக்கிருந்த ஆத்தும பாரம் இப்போது உனக்கு உண்டா ? நாம் மவுனமாயிருந்து பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும் ! கர்த்தரின் இரகசிய வருகையில் குற்றமற்றவர்களாய் அவர்முன் நிறுத்தப்பட வேண்டிய நாம், இந்நாட்களில் கர்த்தருக்காகக் கிரியை செய்யாமல் மவுனமாயிருப்போமானால், அன்று நாம் குற்றவாளிகளாய்த் தீர்க்கப்படுவோம். பிதாவுக்கடுத்தவைகளில் நாம் அலுவலாயிருக்கும்படியாகவே நமக்கு நாட்கள் தவணையாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பம் செய்தல்:

எஸ்தர் ராஜாத்திக்குச் சொல்லப்பட்டது என்ன? “நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்” என்பதே (எஸ்தர் 4 : 14). அவள் இந்த எச்சரிப்பை ஏற்றுக்கொண்டு, தன் ஜனங்களுக்காக உபவாசித்து, ராஜாவினிடத்தில் அவர்களுக்காகப் பரிந்துபேசினதினிமித்தம் அவளுடைய ஜனங்கள் மாபெரும் அழிவினின்று காக்கப்பட்டார்கள்; அவளும் காக்கப்பட்டாள். நம்முடைய தேசத்திற்காகவும் அழிவிற்கு நேராக விரைந்துகொண்டிருக்கிற ஆத்துமாக்களுக்காகவும் நாம் தேவசந்நிதியில் திறப்பின் வாயிலே நிற்போமாக. “என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்” (II நாளா. 7 : 14) என்று கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிறார். மறுபக்கத்திலே, நாம் அவ்வாறு விண்ணப்பம்பண்ணாமற் போவோமாகில், தேசத்திற்கு ஆபத்தும் அழிவும் நேரிடும் என்பதே இவ்வசனத்தின் கருத்து.

மணவாட்டியின் கண்களை எஸ்போனின் மீன் குளங்களுக்கு மணவாளன் ஒப்பிடுகிறார். “உன் கண்கள் எஸ்போனிலே பத்ரபீம் வாசலண்டையிலிருக்கும் குளங்களைப்போல (Fish pools - Eng.) .... இருக்கிறது” (உன். 7 : 4). எஸ்போனில் பத்ரபீம் வாசலின் இரு பக்கத்திலும் இரு மீன் குளங்கள் இருந்தன. மணவாட்டியும், அக்

குளங்களைப் போன்ற நீர் ததும்பும் கண்களுடையவளாய், ஆத்துமபாரத்துடன் ஆத்துமாக்களுக்காக ஜெபிக்கிறவளாயிருப்பதாக அவர் குறிப்பிடுகிறார். "ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீ ரூற்றுமானால் நலமாயிருக்கும்; அப்பொழுது என் ஜனமாகிய குமாரத்தி கொலையுண்ணக் கொடுத்தவர்கள் நிமித்தம் நான் இரவும்பகலும் அழுவேன்" (எரே. 9 : 1). இப்படி ஜெபிக்கிறவர்கள் ஆத்துமாக்களைத் தேடி அலையத் தேவையில்லை. மாறாக, ஆத்துமாக்கள் அவர்களைத் தேடி வந்தடைவார்கள். "என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்" (சங். 2 : 8) என்றுரைத்த தேவன் உண்மையுள்ளவரன்றோ !

அருமையானவர்களே ! எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது (I தீமோ. 2 : 4). நாம் எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும் (I தீமோ. 2 : 1). நாம் மற்றவர்களுடைய இரட்சிப்புக்காக ஜெபிக்காதவாறு பிசாசானவன் நம்முடைய பிரச்சினைகளையும் பெலவீனங்களையுமே நம் ஜெபவேளைகளில் நம் முன் கொண்டு வருவான். நம் காரியங்களை நாம் கர்த்தரின் கரத்தில் ஒப்படைத்துவிட்டு, அவனை மேற்கொண்டு, மற்றவர்களுக்காக வேண்டுதல் செய்வோமாக. யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது கர்த்தர் அவனுடைய சிறையிருப்பை மாற்றி, இரட்டிப்பான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளச் செய்தாரே !

கீழ்ப்படிதல்:

பேதுரு ஒருமுறை மீன்பிடிக்கச் சென்றான். அவன் அக்கலையில் கைதேர்ந்தவன். மீன்பிடிக்கும் குடும்பத்திலேயே பிறந்து வளர்ந்த அவன் வாழ்க்கையில், கடலும் படவும் வலையும் அவனது வாழ்வின் ஒரு பகுதியாகவே அமைந்து விட்டிருந்தன. என்றாலும் இச்சந்தர்ப்பத்தில், இரவுமுழுவதும் பிரயாசப்பட்டும் அவனுக்கு ஒன்றும் அகப்படவில்லை. அதினிமித்தம் அவன் சோர்ந்துபோய், தன் பிரயாசங்களின் முடிவுக்கு வந்துவிட்ட கட்டத்தில்தான் கர்த்தராகிய இயேசு அவனைச் சந்தித்தார். அவர் அவனை நோக்கி, "ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள்" என்றார் (லூக்கா 5 : 4). அவன், "உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன்" என்று கூறி, அவருக்குக் கீழ்ப்படிந்தபோது, வலை கிழிந்துபோகத்தக்கதாகத் திரளான மீன்களைப் பிடித்தார்கள் (வச. 5, 6). இதிலிருந்து நாம் விளங்கிக்கொள்வது என்ன ? நம்முடைய வருடக்கணக்கான அனுபவங்களிலோ, திறமைகளிலோ சார்ந்து நாம் ஆத்தும ஆதாயம் செய்ய முற்படுவோமாயின், நம் பிரயாசங்களின் முடிவில் தோல்வியையே சந்திப்போம். மாறாக, கர்த்தரின் வார்த்தையின்படி அவருடைய ஊழியத்தைச் செய்வோமாகில், நம் ஊழியத்தில் மகத்தான ஜெயத்தை நாம் கண்டடைவோம்.

நினிவே பட்டணத்திற்கு வரவிருந்த நியாயத்தீர்ப்பைக் குறித்து அவர்களை எச்சரிக்கும்படி தேவன் யோனாவை அங்கு அனுப்பச் சித்தமாயிருந்தார். அவனோ, அதற்கு மாறாகத் தர்ஷீசுக்குப் போகப் பிரயாசப்பட்டான். தேவசித்தத்திற்கு மாறாக அவன் சென்றதினிமித்தம் அவன் வழியில் பட்ட பாடுகளை நாம் அறிவோம் ! அவன் நிமித்தமாகக் கப்பலும் அதிலிருந்த அனைவரும் ஆபத்தான நிலைக்குள்ளாயினர். இறுதியில் அவன் மீனின் வயிற்றிலிருந்துகொண்டு தன் தவற்றை அறிக்கையிட வேண்டியதாயிற்று. எனவே தேவனுக்குக் கீழ்ப்படிந்து, அவர் சித்தப்படி இவ்வூழியம் செய்வோமாகில் நாம் பாதுகாக்கப்படுவோம்; மற்றவர்களையும் ஆதாயப்படுத்திக் கொள்ளுவோம். கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி: "நீ எழுந்து, தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தரமார்க்கமாய்ப் போ" என்றான் (அப். 8 : 26). யோனாவுக்குச் சொல்லப்பட்டது போல, ஏன், எதற்காக, யாரிடம் போக வேண்டும் போன்ற விவரங்கள் எதுவும் அவனுக்கு அறிவிக்கப்படவில்லை. மனித சஞ்சாரமற்ற வனாந்தர வழியாய்ச் செல்லும்படி அவனுக்குச் சொல்லப்பட்டபோது, அவன் எவ்விதக் கேள்வியுமின்றிக் கீழ்ப்படிந்து போனான். இதினிமித்தம் அவன் ஒரு விலையேறப்பெற்ற ஆத்துமாவைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்த முடிந்தது. அவனுடைய சந்திப்பின் மூலம் எத்தியோப்பியா தேசத்து மந்திரி இரட்சிக்கப்பட்டு, தண்ணீர் ஞானஸ்நானமும் பெற்றுக்கொண்டான். அவன் ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறினபோது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான் (வச. 39). அவன் தன் தேசத்துக்குத் திரும்பிய பின்னர், கர்த்தராகிய இயேசுவே மெய்யான தேவன் என்று, தான் வழியில் அடைந்த அனுபவங்களைக் கொண்டு தன் தேசத்தாருக்குப் பிரசித்தப்படுத்தியிருப்பானல்லவா! பிலிப்பு அவனில் ஏற்றிய ஒரு தீபம் அவன் மூலமாக முழு எத்தியோப்பியாவையும் பிரகாசிக்கச் செய்தது என்ற உண்மை நம்மையும் ஊக்குவிக்கும் ஒரு சரித்திரமாய்த் திகழ்கின்றது. நாமும் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய வழிநடத்துதலின்படியே ஆத்தும ஆதாயம் செய்வோமாக.

****

ரோமருக்கு எழுதிய நிருபத்தின் விளக்கவுரை

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

அப்படியானால், நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் மாம்சத்தின்படி என்னத்தைக் கண்டடைந்தான் என்று சொல்லுவோம்?" (4 : 1).

3 - ஆம் அதிகாரம் கடைசி வசனத்தில், "அப்படியானால், விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா? அப்படியல்ல; நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோமே" என்று அப். பவுல் வாதித்து, அந்த வாதத்தின் அடிப்படையில், 4 - ஆம் அதிகாரம் முதலாவது வசனத்தை "அப்படியானால்" என்று துவங்குகிறார்.

அவரது கேள்வி 'அப்படியானால்' பிரமாணத்தின் கிரியைகளினால் ஆபிரகாம் என்னத்தைக் கண்டடைந்திருக்கக் கூடும் என்பதே. யாக்கோபு தனது நிருபத்தில், "ஆபிரகாம் ... கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்?" என்று கூறுகிறார் (யாக். 2 : 21). ஆனால் அப். பவுலோ, ஆபிரகாம் கிரியைகளினாலே நீதிமானாக்கப்படவில்லை என்று பதிலளிக்கிறார். இதினிமித்தம், இவ்விரு அப்போஸ்தலருடைய வசனங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாயுள்ளதென்று சிலர் கூறுகிறார்கள்.

முதலாவது இவ்விரு அப்போஸ்தலரின் வார்த்தைகளின்படி விசுவாசம் என்பதின் உட்கருத்து என்ன என்று அறிய வேண்டும்.

பவுலின் கருத்து: 'விசுவாசம் என்பது மறுபிறப்பின் அனுபவமில்லாத பிரமாணத்தின் கிரியைகள் அல்ல' என்பதாகும். யாக்கோபின் கருத்து, 'விசுவாசம் என்பது கிரியைகளில்லாத மறுபிறப்பின் அனுபவம் அல்ல' என்பதாகும். சுருங்கச் சொல்லின், 'கிரியைகளினால் உறுதிப்படாத விசுவாசப் பிரமாணத்தை' இவ்விருவரும் அங்கிகரிக்கவில்லை என்பதே மெய்யான விளக்கம்.

"ஆபிரகாம் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டானாகில் மேன்மைபாராட்ட அவனுக்கு ஏதுவுண்டு; ஆகிலும் தேவனுக்குமுன்பாக மேன்மைபாராட்ட ஏதுவில்லை" (4 : 2).

இந்த வசனத்தை 'ELLIPTICAL' வசனம் என்று கூறலாம். அதாவது, முழுக்கருத்து விளங்க முடியாத அளவு சில வார்த்தைகள் விடப்பட்டிருக்கிற வசனம் என்பதாகும். ஆபிரகாம் பிரமாணத்தின் கிரியைகளினால் நீதிமானாக்கப்பட்டான் என்று மேன்மைபாராட்ட யாதொரு நியாயமும் இல்லை என்பதே முடிவு.

"வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது? ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது" (4 : 3).

ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று அப். பவுல் மறுபடியும் எழுதுகிறார். 'IMPUTED' என்ற ஆங்கில பதம், ஒருவரின் கணக்கில் சேர்க்கப்பட்டது (set to the account of one) என்ற கருத்துடன் எபிரெய, கிரேக்க மொழிகளில் அறியப்படுகிறது. இது தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார் அல்லது அவற்றின்படியே செய்வார் என்ற விசுவாசம் அல்ல. ஆனால் தேவன் வாக்குத்தத்தம்பண்ணினபோதே தனக்கு ஒரு குமாரன் உண்டாயிருந்ததாகவும், அவன் மூலமாய் ஜாதிகளும் ராஜாக்களும் எழுப்பப்பட்டிருப்பதாகவும் அவன் தன் விசுவாசக் கண்களால் கண்டு தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலை அடைந்துவிட்டதாக தேவனை மகிமைப்படுத்தி விசுவாசத்தில் வல்லவனானான். இப்படிப்பட்ட ஒரு விசுவாசத்தையே தேவன் அவனுக்கு நீதியாக எண்ணினார். ஆபிரகாமின் இந்த விசுவாசம் மேன்மையானது. ஏனென்றால் ஆபிரகாமுக்கு முன் இருந்த ஆபேல், ஏனோக்கு, நோவா என்பவர்கள் தேவ பக்தியுள்ளவர்களாயிருந்து, அவர்கள் விசுவாசவீரர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தாலும், ஆபிரகாமின் விசுவாசத்தைக் குறித்து மாத்திரமே 'அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது' என்று சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

" கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்றெண்ணப்படாமல், கடனென்றெண்ணப்படும்" (4 : 4).

அப்படியானால் அந்த விசுவாசம் என்ன? கிருபை என்ற பதமும் கடன் என்ற பதமும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை. ஒருவன் தான் செய்யும் புண்ணியக் கிரியைகளை நம்பி, நீதி கிடைக்கும் என்று எதிர்பார்த்தால், கிருபையால் நீதிமானாக்கப்பட்டான் என்ற அனுபவத்தை அது அவமாக்குகிறது. ஆபிரகாமும், 'நான் தேவனை விசுவாசித்தேன், அதினிமித்தம் தேவன் எனக்குக் கடனாளி, அவர் தமது நீதியை எனக்குக் கணக்கிடுவார்' என்று எதிர்பார்த்தால், அது விசுவாசம் அல்ல. அப்படிப்பட்ட விசுவாசம் கிருபையினால் அல்ல, கடன் அல்லது கூலியினால் உண்டானது என்றே கூறலாம்.

மெய்யான விசுவாசம், கிரியைகளினால் உண்டாகும் கடனுக்கு, அல்லது கிரியைகளுக்கு ஏற்ற கூலியாகக் கணக்கிடப்படும் நீதியல்ல. கிரியைகளில்லாதபடி, கிருபையால் மாத்திரம் கிடைக்கும் நீதியை எதிர்பார்க்கும் விசுவாசமே மெய்யானது.

"ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்" (4 : 5).

ஒருவன் தன் பாவத்தினின்று விடுதலை அடையும்படிக்கு நியாயப்பிரமாணத்தின் கிரியைகளை நாடாமல், பாவியை நீதிமானாக்குகிற தேவன்மேல் விசுவாசம் வைப்பானேயாகில் அதுவே அவனுக்கு நீதி என்று எண்ணப்படும்.

****

PP_200004

"உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன?"

வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், வேறு சில ஸ்திரீகளோடுங்கூடக் கந்தவர்க்கங்களை எடுத்துக்கொண்டு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அடக்கம்பண்ணப்பட்ட கல்லறையினிடத்தில் வந்தார்கள். கல்லறையை அடைத்திருந்த கல் புரட்டித் தள்ளப்பட்டிருப்பதை அவர்கள் கண்டு, உள்ளே பிரவேசித்துக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைக் காணாமல், அதைக் குறித்து மிகுந்த கலக்கமடைந்திருக்கையில், பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த இரண்டு பேர் அவர்கள் அருகே நின்றார்கள். அந்த ஸ்திரீகள் பயப்பட்டுத் தலைகவிழ்ந்து தரையை நோக்கி நிற்கையில்,

அந்த இரண்டுபேரும் அவர்களை நோக்கி: “உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்” என்று சொன்னார்கள் (லூக்கா 24 : 5,6).

பிரியமானவர்களே! கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மனிதனாய் இந்த உலகத்திலே அவதரித்ததினால் அல்ல, வேதவாக்கியங்களின்படியே முழு மனிதகுலத்தின் பாவங்களையும் சுமந்து கல்வாரிச் சிலுவையிலே அறையப்பட்டு, இரத்தம் சிந்தி மரித்து அடக்கம்பண்ணப்பட்டு, மரணத்தைப் பரிகரித்து கல்லறையை ஜெயித்து, ஜீவனும் அழியாமையும் உள்ளவராக மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தபடியினாலேயே அவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனென்று நிரூபிக்கப்பட்டார். ஜீவனுள்ள தேவ குமாரன் மரித்தவர்கள் அடக்கம்பண்ணப்படுகிற கல்லறையில் வாசஞ்செய்ய மாட்டார். அவரைக் கல்லறை அடக்கி வைக்க முடியாது. மரித்தோர் மத்தியில் அவரைத் தேடுவதும் வீண்.

ஆவிக்குரிய ஜீவியத்திலே மரித்த நிலவரத்தில் காணப்படுகிறவர்களில் ஜீவனுள்ள தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து வாசஞ்செய்யமாட்டார். இன்று சிலர் இரட்சிக்கப்பட்டு, தண்ணீர் ஞானஸ்நானமும் பரிசுத்தஆவியின் அபிஷேகமும் பெற்றிருந்தும், அவ்வனுபவங்களை இழந்து ஆவிக்குரிய ஜீவியத்தில் மரித்தவர்களாகக் காணப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்கள் நிலையை உணர்ந்து, மீண்டும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையைத் தரித்துக்கொண்டு தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு எதிராகப் போராடுகிற மரணத்தின் வல்லமைகளை ஜெயித்து, கிறிஸ்துவோடுகூட உயிர்த்தெழுந்த மேலான ஜீவியம் செய்வார்களாயின் அதுவே மெய்யான ஈஸ்டர் பண்டிகையாயிருக்கும்.

உண்மையான ஈஸ்டரை ஆசரிக்கும்படி, நாம் ஒவ்வொருவரும் நமக்கு எந்தெந்தவிதங்களில் ஆவிக்குரிய மரணம் சம்பவிக்கக் கூடும் என்பதைக் குறித்தும், அவ்விதம் நம்முடனேகூட போராடுகிற மரணத்தின் வல்லமைகளை எப்படி மேற்கொள்ள வேண்டும் என்பதைக் குறித்தும் கீழே காண்போமாக.

1. மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள் (சங். 115 : 17) **:**

தேவனைத் துதியாத ஒரு ஜீவியம் மரணத்தின் வல்லமைக்கு அடிமைப்பட்ட ஒரு ஜீவியமாகும். மரித்து அடக்கம்பண்ணப்பட்டவர்கள் தங்கள் கல்லறைகளில் தேவனைத் துதிக்கமாட்டார்கள். ஏனெனில் அவர்களுடைய சரீரம் ஜீவனிழந்து மவுனமாகிக் கல்லறையில் காணப்படுகிறதே. நம்முடைய தேவன் துதிகளின் மத்தியில் வாசம் செய்கிறவர். உள்ளான ஜீவனுள்ளவர்களாய், உண்மையாகத் தேவனைத் துதிக்கிறவர்கள் மத்தியிலே அவர் வாசம் செய்கிறார் (சங். 22 : 3). எழுத்துக்குரிய இஸ்ரவேலர் தேவனை அறிந்தும் அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தவில்லை, ஸ்தோத்திரிக்கவுமில்லை. எனவே அவர்கள் தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது (ரோமர் 1 : 21).

நாமுங்கூட நம்முடைய தேவன் இன்னாரென்று அறிந்திருக்கிறோம். அவர் நமக்குச் செய்த எல்லா நன்மைகளையும் நாம் அறிந்திருக்கிறோம். ஆகிலும் சிலர் தேவனைத் துதிப்பதிலும் அவரைக் கனப்படுத்துவதிலும் அவரைத் தேவனென்று மகிமைப்படுத்துவதிலும் மிகவும் குறைவுள்ளவர்களாய் இருக்கிறார்கள். “தேவனுடைய நாமத்தைப் பாட்டினால் துதித்து, அவரை ஸ்தோத்திரத்தினால் மகிமைப்படுத்துவேன். கொம்பும் விரிகுளம்புமுள்ள காளையெருதைப்பார்க்கிலும், இதுவே கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும்” என்று சங்கீதம் 69 : 30, 31-இல் தாவீது கூறுகிறான். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தேவஜனங்கள் பலவிதமான பலிகளைச் செலுத்தி தேவனைப் பிரியப்படுத்திவந்தார்கள். ஆனால் இந்தப் புதிய ஏற்பாட்டின் காலத்தில் நொறுங்குண்ட இருதயத்துடன் தேவனைத் துதிப்பதுதான் தேவனுக்கு ஏற்ற மேன்மையான பலியாயிருக்கிறது. அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம் என்று அப். பவுல் சொல்லுகிறார் (எபி. 13 : 15).

அருமையானவர்களே! நம்மில் சிலர் ஒழுங்காகத் தனி ஜெபம் செய்யத் தவறிவிடுகிறோம். தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படும் சிலருடைய வீடுகளில் குடும்ப ஜெபம் நடைபெறுவதில்லை. தேவனை உயர்த்தும் பாடலின் சத்தம் அவ்வீடுகளிலிருந்து கேட்கப்படுவதில்லை. இப்படிப்பட்டவர்கள் மரித்தவர்களாய் மவுனத்தில் இறங்கிக்கொண்டிருக்கின்றனர். உயிரோடிருக்கிற ஆண்டவராகிய இயேசு மரித்தவர்கள் மத்தியில் வாசம்பண்ணமாட்டார். ஆகவே நாம் மரித்த அனுபவங்களை விட்டு எழுவோமாக. ஆண்டவரின் சமுகத்தில் நாம் ஜெபம்பண்ணி அவரைத் துதித்துப் பாடி உயர்த்துவோமாக. நம்முடைய வீடுகளில் இரட்சிப்பின் கெம்பீர சத்தம் முழங்குவதாக (சங். 118 : 15). உயிர்ப்பிக்கும் வல்லமையாகிய பரிசுத்த ஆவியினால் நிறைந்து நம்முடைய வீடுகளில் உள்ள மரணத்தின் அந்தகார வல்லமைகளை நாம் அகற்றுவோமாக. நம்முடைய ஆராதனைகளிலும் நாம் மரித்தவர்கள் போல மவுனமாய்க் காணப்படாதபடி, ஜீவனுள்ளவர்களாய் உயிர்த்தெழுதலின் வல்லமையாகிய பரிசுத்தஆவியால் நிறைந்து தேவனைத் துதித்துப் பாடி அவர் நாமத்தை உயர்த்துவோமாக. கர்த்தரைத் துதிக்கும் துதி எப்போதும் நம் வாயில் காணப்படுவதாக (சங். 34 : 1). உயிர்ப்பிக்கும் வல்லமையினால் நிறைந்து அவரைத் துதித்து நாம் முன் செல்வோமாக. இதுவே நம் ஈஸ்டர் பண்டிகையாகும்.

2. சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்தில் நிலைகொண்டிருக்கிறான் (I யோவான் 3 : 14) **:**

பிறரிடத்தில் அன்புகூராத ஜீவியம் மரணத்தின் வல்லமைகளில் ஒன்றாகும். அன்பு இல்லாதவன் தேவனை அறியான் (I யோவான் 4 : 8). பழைய ஏற்பாட்டின் பத்துக்கற்பனைகள் புதிய ஏற்பாட்டில் இரண்டு கற்பனைகளாகக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் மாற்றப்பட்டுள்ளன. பரிசுத்தஆவியின் அபிஷேகத்தின் மூலம் நம் இருதயத்தில் ஊற்றப்பட்ட தேவ அன்பினால் முதலாவது தேவனிடத்திலும் பின்பு பிறரிடத்திலும் நாம் அன்புகூரவேண்டும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த இரண்டு கற்பனைகளையும் தம் ஜீவியத்தில் கடைபிடித்தார். அவர் தம் சத்துருக்களை நேசித்தார்; சபிக்கிறவர்களை ஆசீர்வதித்தார்; நிந்திக்கிறவர்களுக்காகவும்

துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணினார். அவர் தம் ஜீவியத்தையே மற்றவர்களுக்குப் போதித்தார் (மத். 5 : 44). அவர் கல்வாரியில் மரிக்கும் வரைக்கும் தம்மை விரோதித்தவர்களிடத்தும் அன்பை வெளிப்படுத்தினார்.

இப்படியிருக்க, சிலர் சத்தியத்தை அறிந்து பல வருடங்களாகியும் பரிசுத்தஆவியின் அபிஷேகம் பெற்றும், சகோதரரிடத்திலும் அன்புகூராமலும், குற்றங்குறைகளை மன்னிக்க முடியாமலும், கசப்பு, கோபம், மூர்க்கம், கூக்குரல், தூஷணம் போன்ற தூர்க்குணங்களை இருதயத்தில் வைத்தவர்களாக, பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தி வருகிறார்கள். இவ்விதமான இருதயமுள்ளவர்கள் மரணத்தில் நிலைகொண்டிருக்கிறவர்கள் ஆவர். அன்பு சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும் என்று அன்பின் தன்மைகளை அப். பவுல் I கொரிந்தியர் 13-ஆம் அதிகாரத்தில் வர்ணித்துக் கொண்டுபோகிறார். சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது என்று எபிரெயருக்கும் அவர் சொல்கிறார் (எபி. 13 : 1). சிலர் ஒரே சத்தியத்தைக் கேட்டும் ஒரே ஆவியைப் பெற்றும், கிறிஸ்துவின் ஒரே சரீரமாகிய சபை என்று அழைக்கப்பட்டும் சகோதர சிநேகத்தை வெளிப்படுத்த முடியாதவர்களாயிருக்கின்றனர். சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருக்கிறான் என்று வசனம் கூறுகிறது (I யோவான் 2 : 9). இப்படிப்பட்ட மரித்த நிலவரத்திலுள்ளவர்கள் மத்தியில் ஜீவனுள்ள தேவன் வாசம்பண்ணமாட்டார்.

நம்முடைய தேவன் அன்பில் வாசம்பண்ணுகிறார். ஜீவனுள்ள தேவன் நம் மத்தியில் வாசம் பண்ணும்படியாக உயிர்த்தெழுதலின் வல்லமையை நாம் தரித்துக்கொண்டு, சகோதரரிடத்திலும், பிறரிடத்திலும் நம்முடைய வார்த்தையிலும் பார்வையிலும் கிரியைகளிலும் நடக்கைகளிலும் தெய்வீக அன்பை நாம் வெளிப்படுத்துவோமாக. தேவபிள்ளைகளாகிய நாம் ஒருவர் குற்றங்களை மற்றவர்களிடம் சொல்லித் திரியாமல், குற்றங்களை மன்னித்தும் மறந்தும் மரணத்தின் வல்லமையை ஜெயித்து அன்பை வெளிப்படுத்துவோமாக. சகலத்தையும் சகிக்கவும் தாங்கவும் பொறுக்கவும், தீமையை நன்மையினால் வெல்லவும் பரிசுத்தஆவியின் அபிஷேகத்தினால் புதுப்பிக்கப்பட்டு, ஜீவனுள்ளவர்களாய் நம் ஆவிக்குரிய ஜீவியத்தை நாம் தொடருவோமாக. இதுவே நம் ஈஸ்டர் பண்டிகையாகும்.

3. சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள் (I தீமோ. 5 : 6)**:**

கிறிஸ்தவ ஜீவியத்தில் சுகபோகமான வாழ்வும் மரணத்தின் ஒரு வல்லமையாகும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய சிலுவைப் பாடுகளைக் கற்றும் அறிந்தும் கேட்டும் சுகபோகமாய் வாழுகிற தேவ ஜனங்கள் உயிரோடு இருந்தாலும் மரணத்தில் வாசம்பண்ணுகிறவர்களே ஆவர்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தேவ குமாரனாய் இருந்தபோதிலும் தலை சாய்க்க இடமற்றவராய் இந்தப் பூமியிலே சுற்றித்திரிந்தார். பூமியிலே ஜீவித்த காலமெல்லாம் அவர் பாடுகளையும் நிந்தைகளையும் அவமானங்களையும் சகித்தார். கடைசியிலே கல்வாரிச் சிலுவையிலே அவர் மரணபரியந்தமும் காயப்பட்டு நொறுக்கப்பட்டார் (ஏசாயா 53 : 5); அவர் தம் முழு ஜீவனையும் கொடுத்தார். நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படி அவர் நமக்கு மாதிரியைப் பின் வைத்துப் போயிருக்கிறார் (I பேதுரு 2 : 21).

இன்று சத்தியத்தை அறிந்த பிற்பாடும் சிலர் சுகபோகமான விசாலமான பாதையையே தெரிந்து கொள்கின்றனர். அத்தியாவசியமற்ற சுகபோகமான சில வசதிகளை, பொருட்களை, கருவிகளை அவர்களால் விடமுடிவதில்லை. இப்படிப்பட்டவர்கள் வெளிப்படையாக சிலவற்றைப் பிரதிஷ்டை செய்துவிட்டதாக மேன்மையாக மற்றவர்களிடம் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் தங்கள் ஜீவியத்தில் எவ்வளவோ சுகபோகங்களுக்கு அவர்கள் அடிமைப்பட்டிருக்கிறார்கள். "எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; … நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்" என்று அப். பவுல் சொல்கிறார் (I கொரி. 6 : 12). சிலர் போஜனப்பிரியராயும் சிற்றின்பப்பிரியராயுமிருந்து போஜனம், பானம் போன்ற மிகவும் அற்பமான காரியங்களுக்கும் அடிமைப்பட்டிருக்கிறார்கள். ஒருவன் எதினால் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அடிமையாயிருக்கிறான். இவ்விதம் ஜீவிக்கிறவர்கள் உயிரோடே செத்தவர்களாயிருக்கிறார்கள். ஜீவனுள்ள கிறிஸ்து இப்படிப்பட்டவர்களில் வாசம் செய்வாரோ?

நம்முடைய ஆகாரத்திலும், வஸ்திரங்களிலும், நாம் உபயோகிக்கும் பொருட்களிலும் பிரதிஷ்டையுள்ளவர்களாக சுகபோகவாழ்வை நாம் வெறுத்துத் தள்ளி, பாடுபடும் சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்வோமாக (I பேதுரு 4 : 1). நாம் நம்முடைய சிலுவையை அனுதினமும் சுமந்து அவர் பின் செல்வோமாக. தற்போது நாம் சகிக்கிற உபத்திரவங்களும் பாடுகளும் நித்திய கனமகிமையை நமக்கு உண்டாக்கும். ஆகவே உயிர்த்தெழுதலின் வல்லமையால் நிறைந்து சுகபோக வாழ்வை வெறுத்து, நம்முடைய இயேசுகிறிஸ்துவும், பரிசுத்த அப்போஸ்தலரும் சென்றதான பாடுகளின் பாதையில் சந்தோஷமாகச் செல்ல நம்மை நாம் ஒப்படைப்போம். இதுவே நம் ஈஸ்டர் பண்டிகையாகும்.

4. வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை (மத். 23 : 27) **:**

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மாயக்காரராகிய வேதபாரகரையும் பரிசேயரையும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைக்கு ஒப்பிட்டுப் பேசினார். கல்லறைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும். உள்ளேயோ, மரித்தோரின் எலும்புகளினாலும் சகல அசுத்தங்களினாலும் நிறைந்திருக்கும். நாம் மாய்மாலமான ஜீவியம் செய்வோமென்றால் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையைப் போன்றவர்களே. கல்லறை அழகாக வெள்ளையடிக்கப்பட்டிருக்கும். பல வர்ணங்களும் பூசப்பட்டிருக்கும். பல நல்ல வசனங்களும் கல்லறையின் மேல் எழுதப்பட்டிருக்கும். ஆனால் அதன் உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளும், அசுத்தங்களும் நிறைந்திருக்கும்.

ஆவிக்குரிய உலகத்தில் சிலர் பரிசுத்தவான்கள், நீதிமான்கள், விசுவாசிகள் என்று வெளிப்படையாக அழைக்கப்பட்டாலும், பிறர் அறியாத ஒரு மாய்மால ஜீவியம் அவர்களுடைய இருதயங்களின் ஆழத்தில் மறைந்து கிடக்கிறதன்றோ? ஞானஸ்நானத்தில் ஜாதி பாஷை நிறம் போன்ற வித்தியாசங்கள் யாவும் ஒழிந்து, நாம் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்கிறோமென்றும், விசுவாசத்தினாலே தேவபுத்திரராக மாறுகிறோமென்றும்

(கலா. 3 : 26, 27) உபதேசத்தில் நாம் படிக்கிறோம். ஆனால் ஆவிக்குரிய ஜீவியத்தில் சில சந்தர்ப்பங்களில் சில கட்டங்களில் சிலர் தங்களுடைய ஜாதியை வெளிப்படுத்த முற்படுகின்றனர்; தங்களுடைய பாஷைக்காரரோடு இணைந்துகொள்கின்றனர்; தங்கள் நிறத்தாரோடு ஒட்டிக்கொள்கின்றனர்; இருதயத்தின் ஆழத்தில் அனைவரோடும் ஐக்கியமாயிருப்பதற்கு மாறாக மாய்மாலமாக ஜீவிக்கிறார்கள். இதுவும் ஒரு மரித்த அனுபவமே. நாமோவென்றால் பரிசுத்தஆவியினால் புதிதாக்கப்பட்டு மெய்யான நீதிமான்களாக்கப் படுவோமாக.

வெளிப்படையாக வெண்ணுடையினை அணிந்துகொண்டாலும் சிலருடைய உள்ளங்கள் வெண்மையாயிருப்பதில்லை. அவர்கள் அறிந்த சத்தியத்திற்கும் விசுவாசத்திற்கும் மாறாகத் தந்திரமான சில காரியங்களை செய்துவிட்டு, தேவஜனங்களோடு ஐக்கியமாயிருப்பது போல காட்டிக்கொள்வதும், ஆராதிப்பதும் மாய்மால ஜீவியமே. கசப்பையும் வைராக்கியத்தையும் கோபத்தையும் பிரிவினைகளையும் உள்ளத்தில் வைத்துக்கொண்டு கர்த்தராகிய இயேசுவின் மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணுவதும், சில ஆவிக்குரிய ஊழியங்களைத் துணிந்து செய்வதும் எவ்வளவு அபாயகரமான மாய்மால ஜீவியம்! சிலர் அத்தியாவசியத்திற்கு மேலாக வீடுகளைக் கட்டி, பல இடங்களில் நிலங்களை வாங்குகிறார்கள்; சொத்துக்களைச் சேர்க்கிறார்கள்; ஆடம்பர ஜீவியத்தை மேற்கொள்கிறார்கள். இவையெல்லாம் மாய்மால ஜீவியமாகிய மரித்த ஜீவியமே. வெளிப்படையாகக் கர்த்தருடைய வருகைக்காகக் காத்திருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டாலும், அவர்களுடைய இருதயத்தின் அடித்தளம் மாயையான அழிந்து போகிற காரியங்களில் சிக்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே உயிர்த்தெழுதலின் வல்லமையை நாம் தரித்துக்கொண்டு மாய்மால ஜீவியமாகிய மரித்த நிலவரத்திலிருந்தும், கல்லறை யிலிருந்தும் வெளியே வருவோமாக. மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை நாம் தரித்துக்கொள்வோமாக (எபே. 4 : 24). இதுவே நம் ஈஸ்டர் பண்டிகையாகும்.

5. பின்மாற்ற ஜீவியம் மரித்த ஜீவியமே (யாக். 5 : 19, 20) :

ஒரு தேவனுடைய மனுஷன் சத்தியத்தை விட்டு விலகி ஆதி அன்பிலிருந்தும் ஆதி விசுவாசத்திலி ருந்தும் ஆதிக்கிரியைகளிலிருந்தும் விழுந்து பின்மாற்ற ஜீவியம் செய்தால் அது ஜீவனை இழந்த அனுபவமாகும். ஆதாம் தேவ அன்பிலிருந்தும், விசுவாசத்திலிருந்தும் தேவனை விட்டு விலகிப்போன வேளையிலே அவன் ஆத்துமாவிலே மரணம் சம்பவித்தது. அதினிமித்தமாக தேவமகிமையையும், ஆளுகையையும், நித்திய ஜீவனையும் இழந்தவனாய் அவன் தேவ சமுகத்தை விட்டு விலகிப் போனான். ஆழ்ம் பயப்பட்டவனாய், வேதனைப்பட்டவனாய், நிர்வாணியாய், ஜீவன் இழந்து மரணத்தின் வல்லமையிலே காணப்பட்டான். எனவே நாம் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் ஏற்படும் பின்மாற்ற வல்லமைகளாகிய பாவம், உலகம், மாம்சம், பிசாசு இவைகளெல்லாவற்றையும் ஜெயித்துப் பூரணமடைய உயிர்த்தெழுதலின் வல்லமையைத் தரித்துக்கொள்வோமாக. இதுவே நம் ஈஸ்டர் பண்டிகையாகும்.ஆகையால் பிரியமானவர்களே! நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நமக்கு விரோதமாய்ப் போராடுகிற மரணத்தின் வல்லமைகளை ஜெயிக்கும்படியாகக் கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பின பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைத் தரித்துக்கொண்டு அனுதினமும் உயிர்த்தெழுந்த அனுபவம் உடையவர்களாக, மேலானவைகளை நாடித் தேடுகிறவர்களாக, கர்த்தருடைய வருகைக்கு நாம் ஆயத்தப்படுவோமாக (ரோமர் 8 : 11 ; கொலோ. 3 : 1, 2). உண்மையான ஈஸ்டரின் அனுபவமுடையவர்களாய் நம் நேசர் இயேசுவைச் சந்திக்க ஆவியானவர் தாமே நமக்கு உதவி செய்வாராக.

தேவனோடு ஒன்றாக்கப்படுதல்

தமக்கு முன்பாக நாம் அன்பிலே பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாய் இருப்பதற்குத் தேவன் உலகத்தோற்றத்திற்குமுன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டார் (எபே. 1 : 4). ஆதி மனிதன் பாவஞ்செய்தபடியால் தேவ நோக்கம் மனுஷனுக்குள்ளே நிறைவேறக்கூடாமல் அவனுடைய ஆத்துமாவிலே மரணம் சம்பவித்து, அவன் தேவனுக்குத் தூரமானவனாகவும், தேவனுடைய ஜீவனுக்கு அந்நியனாகவும், துர்க்கிரியைகளினாலே தன் மனதிலே தேவனுக்குச் சத்துருவாகவும் மாறிப்போனான். அவனுடைய அக்கிரமங்களே அவனுக்கும் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்கி, அவனுடைய பாவங்களே அவர் அவனுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை அவனுக்கு மறைக்கிறது என்பதை அவன் அறியாதவனாயிருந்தான் (ஏசாயா 59 : 2). ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்து, எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால் மரணம் எல்லாரையும் ஆண்டுகொண்டது (ரோமர் 5 : 12). இந்நிலையிலுள்ள மனுஷனைத் தேவன் தம்மோடு ஒப்புரவாக்கிக்கொண்டு, தம்முடைய நோக்கத்தை அவனில் நிறைவேற்ற விரும்பி, காலாகாலங்களாய்க் கிரியை செய்துவந்தார்.

தேவன் தமது சொந்த ஜனமாக ஒரு கூட்டத்தாரைப் பிரித்தெடுத்து, அவர்களுக்குக் கட்டளைகளையும் நியாயப்பிரமாணத்தையும் கொடுத்தார். பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணம் மனிதனுக்குச் சுட்டிக் காண்பித்ததேயன்றி, அது அவனைப் பாவத்திலிருந்து விடுதலையாக்கித் தேவனோடு ஒப்புரவாக்கக் கூடியதாய் இருக்கவில்லை. தேவன் தமது சொந்தக் குமாரனை தந்தருளி, அவரைக்கொண்டு மனுஷனைத் தம்மோடு ஒப்புரவாக்கிக்கொள்ள சித்தமுள்ளவராய் இருந்தார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் பிதாவின் சித்தத்தை அறிந்தவராய் அவருடைய நோக்கத்தை நிறைவேற்றும்படியாக இவ்வுலகத்தில் வந்தபோது, “ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்; ... தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன்” என்று சொன்னார். பிதா குமாரனை நொறுக்கச் சித்தமாகி, அவரைப்

பாடுகளுக்குட்படுத்தினபடியால், குமாரன் கல்வாரிச் சிலுவையிலே அறையப்பட்டு, தம்முடைய பரிசுத்த இரத்தத்தைச் சிந்தி, நம்மெல்லாருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார்.

இதை மனதிற்கொண்டே அப். பவுலும் கொலோசெயர் 1 : 20, 21 – இல், "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று. முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" என்று எழுதியிருக்கிறார்.

மனுஷனுடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டு வரும் என நாம் வாசிக்கிறோம் (மாற்கு 7 : 21,22). நம்முடைய பாவங்களை நாம் மனஸ்தாபத்தோடு அறிக்கை செய்யும்போது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, நம்முடைய இருதயத்தைச் சுத்திகரிக்கிறது. தேவன் நம்முடைய பாவங்களை மன்னித்து நம்மைத் தம்முடைய பிள்ளைகளாக்கிக் கொள்கிறார். இதைக் குறித்தே, "முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்" (எபே. 2 : 13) என்றும், "(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" (கொலோ 1 : 14) என்றும் கூறப்பட்டுள்ளது. கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆரம்பமே பாவமன்னிப்பாகிய மீட்பு அல்லது பாவநிவிர்த்தி என்பதுதான். கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட நாம் அவருடைய குடும்பத்திற்கு உட்பட்டவர்களாகிறோம். இதுவே இரட்சிப்பில் உண்டாகும் ஒப்புரவாகுதல் ஆகும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் நோக்கங்களில் ஒன்று, நம்மைத் தேவனோடு ஒப்புரவாக்குவதேயாகும். தேவனுடைய ஜனங்கள் இந்தப் பூமியிலிருக்கும்போதே தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டு ஒன்றாக்கப்படாவிட்டால் இனி வரும் நித்தியத்தில் அவரோடு ஒன்றாயிருக்க முடியாது. கிறிஸ்து நமக்காக மரித்தார் என்ற விசுவாசத்துடன் நம் பாவங்களை நாம் அறிக்கை செய்யும்போது நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. கிறிஸ்து தம்முடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கியிருக்கிறார் என்று நாம் மேலே கண்டோம். கிறிஸ்துவுக்குள்ளாக நாம் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டு விசுவாசத்தினால் தேவ புத்திரராகிறோம். அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட நாம் அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறோம் (கலா. 3 : 26,27; ரோமர் 6 : 4). ஞானஸ்நானம் என்பது பிதாவின் மனதிலிருந்த ஆலோசனையாக இருந்தபடியினால் பிதாவின் சித்தத்தைப் பூரணமாய் நிறைவேற்ற வந்த கர்த்தராகிய இயேசுவும், "இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" (மத். 3 : 15) என்று சொல்லி, யோவான்ஸ்நானனால் யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். தண்ணீர் ஞானஸ்நான சத்தியத்திற்கு நாம் கீழ்ப்படியும்போது, வசனத்தினால் உண்டாகும் பரிசுத்தமாகுதல் நம் ஜீவியத்தில் துவங்குகிறது, மேலும் தண்ணீர் ஞானஸ்நானம் தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, தேவசித்தம் செய்யும்படியாய் நம்மைத் தேவனோடு ஒப்புரவாக்குகிறது (I பேதுரு 3 : 21).

பரிசுத்தஆவியின் ஞானஸ்நானத்தினால் ஒரே சரீரமாகத் தேவன் நம்மைத் தம்மோடு ஒப்புர வாக்கிக்கொள்ளுகிறார் (I கொரி. 12 : 13). பூலோகத்தில் உள்ளவைகள், பரலோகத்தில் உள்ளவைகள் யாவையும் குமாரன் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று (கொலோ.1 : 20). தேவன், பரலோகத்தில் பிதா, குமாரன், பரிசுத்தஆவி ஆகிய மூன்று ஆள் தத்துவங்களுடையவராய், இணை பிரிக்கமுடியாத ஒருவராய், ஒரு குடும்பமாய் காணப்படுகிறார். பூமியிலும் ஒரு பெரிய குடும்பம் தேவனுக்கு உண்டு. அது இயேசுகிறிஸ்துவின் சரீரமாகிய சபை என்று அழைக்கப்படுகிறது. இதுவே தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட சபை என்று அப்போஸ்தலருடைய நடபடிகள் 20 : 28-இல் சொல்லப்பட்டிருக்கிறது. பரிசுத்தஆவியின் அபிஷேகத்தின் மூலமாய் நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சரீரமாய் மாற்றப்படுகிறோம். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையோடு நாம் ஒன்றாக்கப்படாவிட்டால் பரலோகத்தில் உள்ள குடும்பத்தோடு இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் இணைக்கப்பட முடியாது. பரலோகத்திலிருக்கிற பிதாவோடும், பரிசுத்த ஆவியானவரோடும் குமாரன் ஒன்றாய், ஒரு குடும்பமாய் இணைந்திருப்பது போல், பூமியில் அதே குமாரனோடு சபையும் ஒரு சரீரமாகப் பரிசுத்தஆவியின் அபிஷேகத்தினால் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தான் பரலோகத்தில் உள்ள குடும்பத்தையும் பூலோகத்திலுள்ள குடும்பத்தையும் இணைக்கும் நாமகாரணராய் அல்லது மத்தியஸ்தராய் இயேசுகிறிஸ்து விளங்குகிறார். தாங்கள் தேவனுக்குச் சொந்தமானவர்கள் என்று கூறிக்கொள்ளும் யூதரும் கிறிஸ்துவுக்குள் தேவன் ஒழுங்குபடுத்தி வைத்திருக்கிற இந்த இரட்சிப்புக்குள் வர வேண்டியது அவசியம். அப்போது மாத்திரமே அவர்களும் நாமும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக்கப்பட முடியும். இதைக் குறித்தே, "இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி" என்று எபேசியர் 2 : 15 – இல் அப். பவுல் கூறுகிறார். இது பரிசுத்தஆவியின் அபிஷேகத்தினால் உண்டாகும் ஒப்புரவாகுதலேயாகும். இந்த அனுபவம் நம்மைப் பூரணத்திற்கு வழிநடத்துகிறது. இதனாலேயே "பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" என்று எபிரெய நிருபக்காரன் கூறுகிறார் (எபி. 10 : 14).

இந்த ஒப்புரவாகுதலின் வேலை இயேசு கிறிஸ்து சிலுவையிலே சிந்தின இரத்தத்தினாலும், தம்முடைய மாம்சசரீரத்தில் அடைந்த மரணத்தினாலும் மாத்திரம் பூர்த்தியாகிறதில்லை. அப்போஸ்தல உபதேசத்தினாலும் ஊழியத்தினாலும் இது பூரணமடைய வேண்டியது தேவனுடைய ஒழுங்காய் இருக்கிறபடியால், கர்த்தராகிய இயேசு இந்த மகா பெரிய உபதேசத்தையும் ஊழியத்தையும் தம்முடைய அப்போஸ்தலருடைய கைகளில் ஒப்புக்கொடுத்துச் சென்றிருக்கிறார் என்று அப். பவுல் கூறுகிறார் (II கொரி. 5 : 18-20). கிறிஸ்து வைத்துவிட்டுப்

போயிருக்கும் இந்த மீதியான வேலையை அப்போஸ்தலப் பிரதிஷ்டையுள்ள ஊழியர்கள் செய்து நிறைவேற்ற வேண்டும். அவர்கள் இப்பூமியில் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாயிருந்து ஒப்புரவாக்குதலின் உபதேசத்தைச் சபைக்குப் போதித்து, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தைச் செய்கிறவர்களாய் இருக்கிறார்கள். இவ்வூழியத்தினிமித்தம் பிரதிஷ்டையுள்ள தேவ ஊழியர்கள் பல பாடுகளைச் சந்தோஷமாய்ச் சகிக்கிறார்கள். தேவனுடைய ஊழியக்காரர் கிறிஸ்துவின் பாடுகளைத் தங்கள் சரீரங்களில் சுமக்க வேண்டுமேயாகில், கிறிஸ்துவைப் போலவே பிரதிஷ்டை செய்யப்பட்ட சரீரங்கள் அவர்களுக்கு அவசியம். இக்காரணத்தைக் கொண்டே கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் தம்முடைய சீஷர்களை அழைத்தபோது எல்லாவற்றையும் விட்டுவிட்டுத் தம்மைப் பின்பற்றும்படி கூறினார். அப். பவுலும் இவ்வூழியத்தைச் செய்யும்படியாய் மிகுந்த பாடுகளைத் தன் சரீரத்தில் அனுபவித்ததாகக் கூறுகிறார்: "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" (கொலோ. 1 : 24). இந்த நூற்றாண்டிலும் இப்படிப்பட்ட அப்போஸ்தலப் பிரதிஷ்டையுள்ள ஊழியர் தேவனுடைய சபையில் உபதேசித்து ஊழியம் செய்து வருகின்றனர். பிதாவின்சித்தம் செய்யும்படியாய்க் கிறிஸ்துவின் மனது பிதாவின் மனதோடு ஒன்றாக்கப்பட்டு அல்லது ஒப்புரவாக்கப்பட்டிருந்தது போல, நாமும் தேவசித்தம் செய்யும்போது நம்முடைய மனதும் இயேசுகிறிஸ்துவின் மனதோடு ஒன்றாக்கப்பட்டு இவ்விதமாய் நாம் தேவனோடு ஒன்றாக்கப்படுகிறோம். இதுவே, தேவனோடு ஒப்புரவாக்கப்பட வேண்டுமென்றும், சமாதானத்தோடு அவரைச் சந்திக்கவேண்டுமென்றும் (II பேதுரு 3 : 14) இவ்விதமாகப் பலவிதங்களில் கூறப்பட்டிருக்கிறது.

கர்த்தராகிய இயேசுவும் தம் ஊழியத்தின் முடிவில், "நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி...ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும்" என்று தம் சீஷருக்காகப் பிதாவை நோக்கி வேண்டிக்கொண்டார் (யோவான் 17 : 22, 23). நாம் பாவமில்லாத பரிசுத்தராக மாறுவதற்கு - கிறிஸ்து தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அநேகருடைய பாவங்களைத் தாமே சுமந்து தீர்க்கிறவராகவும், நாம் தேவனுடைய நீதியாகும்படிக்கு - நமக்காகப் பாவமாக்கப்பட்டு தம்மைப் பாவ நிவாரணபலியாகவும் (ஏசாயா 53 : 12 ; II கொரி. 5 : 21), நாம் குற்றமற்றவர்களாக மாறுவதற்கு - தம்முடைய ஆத்துமாவைக் குற்றநிவாரணபலியாகவும் (ஏசாயா 53 : 10), நாம் நம்முடைய சரீரத்தில் ஒரு இடறலற்ற ஜீவியம் செய்து கண்டிக்கப்படாதவர்களாக மாறுவதற்கு-தம்முடைய சரீரத்தைத் தேவசித்தப்படி பாடுகளுக்கும், நொறுக்கப்படுதலுக்கும் ,அடிபட்டு வாதிக்கப்படுவதற்கும்-கல்வாரிச்சிலுவையிலே ஒப்புக்கொடுத்தார்.

கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் நினைவுகூர்ந்து, கல்வாரி அன்பைத் தியானித்து, அப்போஸ்தல உபதேசத்தினால் நம் ஜீவியத்தைக் கட்டியெழுப்பிக்கொண்டு, நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்தில் முறையே பரிசுத்தராகவும், குற்றமற்றவர்களாகவும், கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தப்படும்படி தேவன்தாமே நமக்கு உதவி செய்வாராக.

உனக்காகவே அவர் காயப்பட்டார்!

முதலாம் உலக மகா யுத்தத்தில் இங்கிலாந்து தேசத்துக்காகத் தங்கள் ஜீவனையும் பணையம் வைத்துப் போர் முனையில் நின்று கடும்போர் புரிந்து உயிர்நீத்த வீரர்கள் பலர்; கடுமையாகக் காயமடைந்தவர்கள் பலர். இப்படிக் காயமடைந்த வீரர்கள் லண்டனிலிருந்த மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்தனர். தன்னுடைய நாட்டிற்காகப் போர்புரிந்து காயமுற்ற வீரர்களைக் காணும்படியாக வேல்ஸ் இளவரசன் அம்மருத்துவமனையை விஜயம் செய்தார். போரில் கடுமையாகக் காயப்பட்டவர்கள் முப்பத்தாறு பேர் என்று அம்மருத்துவமனையின் மேலதிகாரியின் மூலம் அறிந்த அவர், அவர்களனைவரையும் தான் காண விரும்புவதாகக் கூறினார். மேலதிகாரி அப்போர்வீரர்கள் சிகிச்சை பெற்றுவந்த அறைக்கு அவரை அழைத்துச் சென்றார். இளவரசன் அவர்களைச் சந்தித்து, விசாரித்து, உற்சாகப்படுத்தி அவர்களுக்கு நம்பிக்கையின் வார்த்தைகளைக் கூறி, அவர்களை ஆறுதல்படுத்தினார். முப்பது பேர் மாத்திரமே அந்த சிகிச்சைப் பிரிவில் இருந்ததைக் கண்ட இளவரசன் அம்மேலதிகாரியிடம், 'காயமடைந்த போர்வீரர்கள் முப்பத்தாறு பேர் என்றல்லவா கூறினீர்? மற்ற ஆறு பேர் எங்கே?' என்று கேட்டார். 'அவர்கள் மிகவும் மோசமான நிலவரத்திலிருப்பதால், தாங்கள் அவர்களைக் காண சிரமப்பட வேண்டாம் என்று நினைத்தேன்' என்றார் மேலதிகாரி. இளவரசனோ, 'இல்லை, இல்லை! அவர்களையும் நான் காண வேண்டும்' என்றார். எனவே அவர்களிருவரும் மற்றொரு சிகிச்சைப் பிரிவுக்குச் சென்று, அங்கு தங்கள் கைகால்களை இழந்து பரிதாபமான நிலவரத்திலிருந்த ஐந்து பேரைக் கண்டனர். இளவரசன் அவர்கள்மேல் மனதுருகி, அன்போடும் பரிவோடும் அவர்களுடன் பேசி அவர்களை ஆறுதல்படுத்தினார். பின்பு, 'அந்த முப்பத்தாறாவது ஆள் எங்கே? அவரையும் நான் பார்க்க வேண்டும்' என்றார் இளவரசன் துடிப்புடன். மேலதிகாரி இளவரசனைச் சற்று தொலைவிலிருந்த அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அழைத்துச் சென்றார். அங்கு கண்ட காட்சி இளவரசனின் உள்ளத்தை உருக்கியது! அங்கே, போர்க்களத்து முனையிலே மரணத்துக்குத் துணிந்து நின்று போர்செய்தபோது, சத்துருக்களால் தாக்கப்பட்டு, தன் கண்களை இழந்து, கை கால்களையும் இழந்து, முழுச்சரீரமும் காயமடைந்து உருக்குலைந்து, அந்தக்கேடடைந்தவனாய்க் கடும் வேதனையால் துடித்துக் கொண்டிருந்த ஒரு வாலிபனையே அவர்கள் கண்டனர். மிகவும் பரிதாபமான நிலையில் கிடத்தப்பட்டிருந்த அவ்வாலிபனைக் கண்டு, உள்ளம் உடைந்த இளவரசன் குனிந்து அம்மாவீரனின் நெற்றியை முத்தஞ்செய்து, தன்னுடைய கன்னங்களில் கண்ணீர் வடிய மேலதிகாரியை நோக்கி, 'மருத்துவரே, இவன் எனக்காகக் காயப்பட்டவன்! எனக்காகவே காயப்பட்டவன்!' என்றார்.

அருமையான தேவனுடைய பிள்ளையே! இம்மாவீரனைக் காட்டிலும் கொடூரமாகக் காயப் பட்ட ஒருவர் - உனக்காகவே காயப்பட்ட ஒரு வாலிபன் உண்டு என்பதை நீ அறிவாயா? நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார் (ஏசாயா 53 : 5). அவர் யார்? எங்கே, எப்படிக் காயப்பட்டார் என்ற கேள்வி உன் மனதில் எழும்புகிறதா? ஆம். பாவமில்லாத, பாவஞ்செய்யாத, பாவமே அறியாத அந்த வாலிபன் உன்னுடைய பாவங்களுக்காக

அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநியாயமாய் அடிக்கப்பட்டார். அவர் குற்றவாளியைப்போல், மரத்திலே கட்டப்பட்டு, மேலாடை அகற்றப்பட்ட வெறும் முதுகில், இரக்கமில்லாத போர்ச்சேவகரால் வாரினால் அடிக்கப்பட்டார். அந்த வாரில், தோலினால் செய்யப்பட்ட பன்னிரண்டு சாட்டைகளும் அவற்றின் நுனியில் எலும்புத் துண்டுகளும் இரும்புக் குண்டுகளும் கூரிய முட்களும் காணப்பட்டன. ஒவ்வொரு முறை அடிக்கப்படும்போதும் அக்கூரிய முட்களும் எலும்புத் துண்டுகளும் இரும்புக் குண்டுகளும் அவருடைய சரீரத்தில் பதிந்து தசையைக் கிழித்தெடுத்தது. இதனால் இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. பன்னிரண்டு சாட்டைகள் கொண்ட வாரினால் மேலும் மேலும் அந்த வாலிபன் தன் முதுகில் அடிக்கப்பட்டதால் அவரது காயம் ஆழமானதாகவும் கொடியதாகவும் எலும்புகள் புறம்பே காணப்படக் கூடியதாகவுமிருந்தது. இதையே "உழுகிறவர்கள் என் முதுகின்மேல் உழுது, தங்கள் படைச்சால்களை நீளமாக்கினார்கள்" (சங். 129 : 3) என்றும், "என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணலாம்" (சங். 22 : 17) என்றும் நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம். குற்றவாளிகள் சில சமயங்களில் வாரினால் அடிக்கப்படும்போதே மயங்கிவிடுவார்கள்; சிலர் மரித்தும் விடுவார்கள். உனக்காகக் காயப்பட்ட அந்த வாலிபன் இக்குரூர வேதனைகளனைத்தையும் அமைதி யாகச் சகித்தார். ஏன்? உன்மேல் வைத்த அன்பினால் அல்லவா? பாவத்தினால் தேவனை விட்டுப் பிரிந்து போய், பிசாசின் வலையில் அகப்பட்டிருக்கும் உன்னை விடுதலையாக்கி, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, என்றென்றுமாய்த் தம்மோடு கூட இருக்கும்படியாக உன்னைத் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்ளும்படியாக அல்லவா?

அதுமட்டுமல்ல, "முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து, ... பரியாசம் பண்ணி, அவர்மேல் துப்பி, ... கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள்" (மத். 27 : 29, 30). பாலஸ்தினா தேசத்தில் பினா கிறிஸ்டி (Spina - christy) என்னும் ஒருவகை முட்செடி காணப்படுவதாகவும், அதின் முட்கள் 2 முதல் 6 அங்குலம் வரை நீளமுள்ளவை எனவும், அவை தேள் கொட்டினால் உண்டாகும் வேதனையைப் போன்ற கடும் வேதனையை உண்டாக்கும் விஷமுட்கள் எனவும் கூறப்படுகிறது. அந்த வாலிபனின் தலையில் சூட்டப்பட்ட முள்முடி இவ்வகை முட்களாலானது என்று கூறப்படுகிறது. கோலினால் அடிக்கப்பட்டதால் அவற்றுள் பல முட்கள் அவரது சிரசில் ஊடுருவிப் பாயவே, அவரது சிரசிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்தது. பின்பு அவரது கைகளிலும் கால்களிலும் ஆணிகள் கடாவப்பட்டு, அவர் சிலுவையிலறையப்பட்டார். அவரது சரீரமெல்லாம் காயமும் இரத்தமும் வேதனையுமே.

அருமையான தேவனுடைய பிள்ளையே, உன்மேல் வைத்த அன்பினாலே தேகமெல்லாம் வருந்தி, காயமடைந்தவராய் சிரசிலும் முதுகிலும் கைகளிலும் கால்களிலும் விலாவிலும் முழுசரீரத்திலுமே காயங்களடைந்தவராய்க் குருதி சிந்தி, கல்வாரிச் சிலுவையில் அவ்வாலிபன் தொங்கிக்கொண்டிருக்கிறார்! அவர்பால் உனக்கு நன்றியும் அன்பும் பெருகவில்லையா? கண்ணீரோடு அவர் பாதங்களையும் அவர் காயங்களையும் முத்தஞ்செய்வாயாக. **உனக்காகக் காயப்பட்ட அவரே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.** அவருடைய காயப்பட்ட கரங்களில் தஞ்சம் புகுவாயானால் அவர் துக்கம் நிறைந்த உன் வாழ்க்கையைச் சந்தோஷம் நிறைந்ததாக மாற்றி அமைப்பார். இதுவரை அர்த்தமற்றதாயிருந்த உன் வாழ்க்கை பயனுள்ளதொரு வாழ்க்கையாக மாறிவிடும். அவர் உன்னை நேசித்து இத்தனை பாடுகளையும் சகித்திருக்கிறாரே! நீ உன் ஆண்டவராகிய இயேசுவை நேசிக்கிறாயா? உனக்காக மரித்தவருக்காக நீ என்ன செய்யப் போகிறாய்?

ேநேஓ□அ ஞர□ருன□ பு□லு□டுக □ரே□ஷலுழ

நான் ஒரு இந்துக் குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்டேன். என் தாய் கிறிஸ்தவர்களாக இருந்தார்கள். ஆனாலும்நான் இந்துமுறைப்படியே வளர்க்கப்பட்டேன். எனது ஆறாம்வகுப்பு படிப்புக்காகக் கிறிஸ்தவ பாடசாலையில் நான் சேர்க்கப்பட்டேன். அங்கு வேதபாட வகுப்புகள் நடத்துவார்கள். நான் அதில் பங்கு பெற்றேன். அப்போது, 'கர்த்தராகிய இயேசு உங்கள் பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டு மரித்தார்' என்று சொன்னார்கள். அந்த வார்த்தை என் இருதயத்தைத் தொட்டது. எனக்காக ஏன் அவர் மரிக்க வேண்டும், அவர் யார் என்று அறிய நான் மிக ஆசையாக இருந்தேன். நான் அதைக் குறித்து ஒருவரிடமும் கேட்கவும் இல்லை. படிப்பு முடிந்தவுடன் நான் அதை மறந்துவிட்டேன். எனினும் ஆண்டவராகிய என் இயேசு என்னை மறக்கவில்லை.

இரண்டு வருடங்களுக்குப் பிறகு டி.பி.எம். சபையைச் சேர்ந்த ஊழியக்கார சகோதரிகள் இருவர் என் வீட்டின் பக்கத்து வீட்டுக்கு வந்தார்கள். அவர்களைப் பார்த்தவுடன் என் இருதயத்தில் இயேசு யார் என்ற கேள்வி மறுபடியும் எழுந்தது. அவர்கள் பேசுவதை நான் மிகக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். அவர்கள்,'ஆண்டவராகிய இயேசு உனக்காக மரித்தார். அவர் உன்னை நேசிக்கிறார். நீ அவரை ஏற்றுக்கொள்' என்று சொன்னார்கள். இதைக் கேட்டவுடன் என் இருதயம் 'இயேசுவே, இயேசுவே' என்று சொல்லிக் கூப்பிட்டுக்கொண்டிருந்தது. நான் சந்தோஷம் அடைந்தேன். ஆண்டவராகிய இயேசு அன்று என்னைச் சந்தித்தார். நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவருடைய பிள்ளையாக மாறினேன். பின்புநான்முழுக்குஞானஸ்நானமும்பெற்றுக்கொண்டேன்.படிப்படியாக என் முழுக் குடும்பமும் கர்த்தராகிய இயேசுவிடம் நடத்தப்பட்டது. அந்த ஊரிலே நாங்கள் ஒரு குடும்பம் மாத்திரம் கிறிஸ்தவர்களாக இருந்தபடியால் எங்களுக்கு அதிகமான எதிர்ப்பு வந்தது. கர்த்தராகிய இயேசு எங்களுக்குத் துணை நின்று சகாயம் செய்தார்.

எனக்குத் திருமணம் ஆகி நாற்பதாவது நாள் என் வலது கை பிரிண்டிங் மிஷினில் அகப்பட்டு நசுங்கிப் போனது. அன்று இரவு முழுவதும் எனக்காக அங்கு இருந்த சபை ஊழியர் அதிக ஊக்கமாகப்

போராடி ஜெபித்தார்கள். கர்த்தர் அதிலிருந்து பரிபூரண சுகம் தந்தார். சில வருடங்களுக்குப் பிறகு மஞ்சள் காமாலை வியாதியினால் நான் மிகவும் தாக்கப்பட்டேன். அப்பொழுதும் தேவனுடைய பிள்ளைகள் எனக்காக ஜெபம்பண்ணினார்கள். இரக்கமுள்ள ஆண்டவராகிய இயேசு எனக்கு இரங்கி சுகம் தந்தார். எனக்கும் என் மனைவி மக்களுக்கும் எத்தனையோ வியாதிகளிலிருந்து கர்த்தர் சுகம் தந்தார். என் மகள் தன் பதினைந்தாவது வயதிலே வியாதிப்பட்டாள். பத்து நாட்கள் மாத்திரம் பாடுபட்டாள். என் மகளை நான் மிகவும் நேசித்தேன். எனக்கு மேலாக என் தேவன் அவளை நேசித்திருந்தார். சபை விசுவாசிகளுக்கும் ஊழியர்களுக்கும் சொப்பனங்கள், தரிசனங்கள் மூலமாக தேவன் வெளிப்படுத்தி அவளைத் தமது மகிமைக்குள் சேர்த்துக்கொண்டார். ஊரார் மூலமாக எங்களுக்கு அதிகப் போராட்டம் வந்தது. என் தேவன் பரிசுத்தவான்களின் ஜெபத்தினாலும், ஆறுதலினாலும் நாங்கள் சோர்ந்துபோகாமல் எங்களை அவருக்குள் நிலைநிறுத்தினார். பின்பு என் மனைவி மூன்று மாதம் வியாதிப்பட்டாள். அந்த வியாதியிலிருந்தும் கர்த்தர் சுகம் தந்தார். என் இடது கையில் ஒரு வலி வந்து கை தூக்க முடியாமல் நான் மிகவும் கஷ்டப்பட்டேன். என் சாட்சியைப் பேரொலிக்கு எழுதுவதாகத் தீர்மானித்து நான் ஜெபித்தேன். கர்த்தர் சுகம் தந்தார். எங்கள் ஜீவியத்தில் சகலமும் நன்மைக்கு ஏதுவாகச் செய்து முடிக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

சகோ. J. பூராஜா தீமோத்தேயு, தூத்துக்குடி.

எருசலேமின் அலங்கமும் வாசல்களும்

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

2. மீன் வாசல் (FISH GATE)

[மீன் வாசல், கர்த்தருக்காக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துதலைக் குறிக்கிறதென்று சென்ற இதழில் நாம் தியானித்தோம். அதற்காக நாம் எவ்விதம் பிரயாசப்பட வேண்டுமென்பதைத் தொடர்ந்து கீழே காண்போம்.]

'கர்த்தருக்குள்' பிரயாசப்படுதல்:

"காற்றைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான்" என்று பிரசங்கி கூறுகிறான் (பிர. 11 : 4). ராஜ்யத்தின் சுவிசேஷம் நல்ல விதைகளுக்கு ஒப்பாயிருக்கிறது. அதை மனுஷருடைய இருதயங்களில் விதைப்பது தேவ ராஜ்யத்தின் பிரஜைகள் ஒவ்வொருவரின் மேலும் விழுந்த கடமையாகும் (I கொரி. 9 : 16). இவ்வேலையைச் செய்வதில் பல இன்னல்களும் இடையூறுகளும் உண்டு. சாத்தானுடைய ராஜ்யத்தின் ஒரு பிரஜையைத் தேவனுடைய ராஜ்யத்தின் பிரஜையாக மாற்றுவதில், ஒருவன் சத்துருவின் தாக்குதல்களையும் எதிர்ப்புகளையும் சந்திக்க நேரிடும். இத்துன்பங்களையே 'காற்றுகள்' என மேற்கூறிய வசனம் குறிப்பிடுகிறது. அவற்றை மேற்கொண்டு, நம் உத்தரவாதத்தை நிறைவேற்ற வேண்டுமென தேவன் நம்மில் எதிர்பார்க்கிறார். அவை அமர்ந்தபின் கர்த்தருக்காகக் கிரியை செய்யலாம் என நினைக்கிறவர்கள், அலைகள் ஓய்ந்தபின் மீன்பிடிக்கச் செல்லலாம் என எண்ணுபவனுக்குச் சமம். அலைகள் ஒருக்காலும் ஓய்வதும் இல்லை; அவன் மீன்பிடிக்கப்போகிறதும் இல்லை ! எருசலேமில் உண்டான உபத்திரவத்தினிமித்தம் சிதறிப்போன ஆதிநூற்றாண்டின் கிறிஸ்தவர்கள், அத்துடன் அமைதியாயிருந்துவிடாமல், தாங்கள் சென்ற இடங்களிலெல்லாம் சுவிசேஷத்தை அறிவித்ததினாலன்றோ ஆசியாவின் பல இடங்களிலும் சபைகள் உருவாயின?

'விதைத்தல்' விடுதலையின் ஊழியத்தைக் குறிக்கும். விதைக்கிறவன் நிலத்தில் விதைகளை விதைக்குமுன் எடுத்துக்கொள்ள வேண்டிய பிரயாசங்கள் அநேகம் உண்டு. முதலாவதாக, அந்நிலம் விதையை முளைக்கச் செய்வதற்கேற்றவாறு பண்படுத்தப்பட வேண்டும். "முள்ளுகளுக்குள்ளே விதையாதிருங்கள்"; "தரிசுநிலத்தைப் பண்படுத்துங்கள்" என்றும், "விதையானது மண்கட்டிகளின் கீழ் மக்கிப்போயிற்று" என்றும் நாம் வாசிக்கிறோம் (எரே. 4 : 3 ; யோவேல் 1 : 17). ஆகவே விதைக்குமுன் நிலம் செவ்வனே பண்படுத்தப்பட வேண்டியது அவசியம்.பண்படுத்தப்பட்ட நல்ல நிலத்தில் விதைக்கும் விதைகளே முப்பதும் அறுபதும் நூறுமாகப் பலன் தரும். கர்த்தர் தம்முடைய வசனத்தைக் குறித்து, "அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்" என்று கூறுகிறார் (ஏசாயா 55 : 11). பிரயாசப்பட்டு நிலத்தைப் பண்படுத்தி விதைக்கிற ஒருவன், விதைத்தவுடன்தானே பலனைக் காணும்படி எதிர்பார்க்கிறதில்லை. அது ஏற்ற வேளையில் பலன் தரும்படி அவன் நம்பிக்கையோடு காத்திருக்கிறான். அவ்வாறே, நாமும் நம் கிரியைகளுக்கு நிச்சயமாகவே பலன் உண்டு என்ற விசுவாசத்துடன் பொறுமையாகக் காத்திருப்போமாக. "உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய்" என சாலொமோன் கூறுகிறான் (பிர. 11 : 1). நாம் சோர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம். ஆத்தும பாரத்துடனும் ஜெபத்துடனும் கர்த்தருக்குள் நாம் படுகிற பிரயாசங்கள் ஒக்காலும் வீணாய்ப் போவதில்லை. "கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான்" (சங். 126 : 5, 6). பயிரிடுகிறவன் அறுவடையைக் குறித்த தூரதரிசனமுள்ளவனாயிருந்தால் மட்டுமே, அவன் இளைப்படையாமல் விடாமுயற்சியுடன் தொடர்ந்து பிரயாசப்படவும், பொறுமையுடன் காத்திருக்கவும் கூடும். இவ்விதம் விசுவாசத்துடனும் ஜெபத்துடனும் பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவர்கள் மெய்யாகவே பலனில் முந்திப்

பங்கடைவார்கள் (II தீமோ. 2 : 6). பலனுள்ள ஊழியம் செய்ய விரும்பும் நண்பனே ! நீ அதற்கேற்ற கிரயம் செலுத்த முன்வருவாயா? 'கர்த்தருக்குள்'படுகிற பிரயாசங்கள் மாத்திரமே விருதாவாயிராது என்பதை நீ அறிந்துகொள்வாயாக. "பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, ... கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (I கொரி. 15 : 58). பேதுரு தன் சுய முயற்சிகளினால்இராமுழுதும் பிரயாசப்பட்டும், அது வீணும் வியர்த்தமுமாயிருந்தது போல, கர்த்தருடைய ஆலோசனைகளின்படியும் வழிநடத்துதலின்படியும் அல்லாது நீ படுகிற பிரயாசங்களின் முடிவு, ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணுவதைப் போன்றே இருக்கும் ! அவற்றினால் ஒரு பலனுமிராது. உன் பிரயாசங்களின் முடிவில் நீயும்விடாய்த்துப் போவாய். ஆனால், கர்த்தருடைய ஆலோசனையின்படி, கர்த்தருடன் சேர்ந்து பிரயாசப்படுகிறவர்களோ மிகுந்த பலனை அடைவார்கள். ஆகையால் பலனுள்ளதொரு சேவையைச் செய்யும்படி 'கர்த்தருக்குள்' பிரயாசப்படுவாயாக.

மீன் வாசலைக் கட்டியவர்கள்:

மீன் வாசலைக் கட்ட அசெனாவின் குமாரர் முன்வந்தனர் (நெகே. 3 : 3). ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதில் நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. நம்முடைய சுயவிருப்பத்தின்படி, மனதின் எழுச்சிக்கேற்ப நாம் ஊழியம் செய்வோமாகில் நம்முடைய தனிப்பட்ட ஜீவியத்திற்கு நஷ்டத்தை வருவித்துக்கொள்வோம். 'அசெனா' ஒருவித முள் மரத்தைக் குறிக்கும். முட்கள் அம்மரத்தின் தற்காப்புக்காக அமைக்கப்பட்டிருக்கின்றன. அதுபோல ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும்போது, நம் தனிப்பட்ட ஜீவியத்தையும் நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். தான் செத்து மீன் பிடிப்பதினால் பயன் யாது? ஆகவே தேவனுடைய ஆலோசனையின்படியும், பரிசுத்தவான்களின் ஐக்கியத்திற்குட்பட்டும் மட்டுமே நாம் இவ்வேலையைச் செய்யக் கவனமாயிருக்க வேண்டும். முட்களையுடைய ஒரு மரமானது எவரையும் தன்பால் கவர்ந்திழுத்துக் கொள்கிறதில்லை. அவ்வாறே நாம் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தும் ஆத்துமாக்களை நாம் நம் மீது சாரப்பண்ணாமல், கிறிஸ்துவின் அன்புக்கும் அப்போஸ்தல ஐக்கியத்துக்கும் நேராக வழிநடத்தக் கவனமாயிருக்க வேண்டும். மேலும், அம்மரத்தின் பட்டையை உரித்தால் பிசின் வரும். அந்த மரப்பட்டையினுள் உள்ள பிசின், "மனதுருக்கத்தைக்" குறிக்கிறது. ஆத்துமாக்களுக்காகப் பரிதபித்து, மனதுருகுகிறவர்கள் மட்டுமே ஆத்துமாக்களைக் கர்த்தருக்கென்று ஆதாயம் செய்ய முடியும். கர்த்தராகிய இயேசு வியாதியஸ்தரைக் கண்டபோது அவர்கள் மேல் மனதுருகினார். அவ்வாறே அவர், திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலிருந்தபடியால் 'அவர்கள்மேல் மனதுருகி' அநேக காரியங்களை அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார் (மாற்கு 6 : 34 ; 8 : 2). பிசினானது அந்த முள் மரத்தின் பட்டையினுள் மறைந்திருப்பதுபோல, நாம் கிறிஸ்துவுக்குள் மறைந்திருந்து விவேகத்துடன் நம் மனதுருக்கத்தை வெளிப்படுத்தி இந்த ஊழியத்தைச் செய்ய வேண்டும். ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறவர்கள் தாங்கள் பாதுகாக்கப்படும்படி மறைந்திருத்தல் மிகவும் அவசியமாகும்.

'ஆத்மா ஒன்றும் இரட்சிக்காமல் வெட்கத்தோடே ஆண்டவா ! வெறுங்கையனாக உம்மைக் கண்டு கொள்ளல் ஆகுமோ ?' என ஒரு பக்தன் பாடுகிறான். "அநீதியான உலகப்பொருளால் (பரலோகத்தில்) உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்" என்று கர்த்தர் கூறியிருக்கிறார் (லூக்கா 16 : 9). "ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்" (நீதி. 11 : 30). எனவே நம் ஜீவியத்தில் 'மீன்வாசல்' சுட்டெரிக்கப்பட்டிருக்குமாயின் அதைக் கட்டியெழுப்பிக்கொண்டு, ஆதியில் செய்த நற்கிரியைகளை நாம் திரும்பச் செய்வோமாக. மற்றவர்களுக்குச் சுவிசேஷம் அறிவிப்பதின் மூலமும், அவர்களுடைய பிரச்சினைளுக்காக வேண்டுதல் செய்வதின் மூலமும், பிறருக்குஉதவி செய்வதின் மூலமும் அநேகரைக் கர்த்தருக்கென்று நாம் ஆதாயப்படுத்துவோமாக ! "பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்". ஆகவே கர்த்தருக்குள் சகல நற்கிரியைகளிலும் நாம் பெருகுவோமாக (II கொரி. 9 : 6, 8). "விதைக்கிறவனுக்கு விதையை .... அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச்செய்வார்" (வச. 10). "நீ என் பார்வைக்கு அருமையானபடியினால் கனம்பெற்றாய்; நானும் உன்னைச் சிநேகித்தேன், ஆதலால் உனக்குப் பதிலாக மனுஷர்களையும், உன் ஜீவனுக்கு ஈடாக ஜனங்களையும் கொடுப்பேன்" (ஏசாயா 43 : 4) என்ற வாக்குத்தத்தத்தை நாம் சொந்தமாக்கிக் கொள்ளுவோம் !

ரோமருக்கு எழுதிய நிருபத்தின் விளக்கவுரை

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

" ***அந்தப்படி, கிரியைகளில்லாமல் தேவனாலே நீதிமானென்றெண்ணப்படுகிற மனுஷனுடைய பாக்கியத்தைக் காண்பிக்கும்பொருட்டு: எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள். எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான்***" (4 : 6 - 8).

இப்படி விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுகிறவர்களுடைய பாக்கியத்தைக் குறித்து இவ் வசனங்களில் கூறியிருக்கும் சத்தியங்களை அப். பவுல் சங்கீதம் 32 : 1, 2 வசனங்களிலிருந்து மேற்கோளாகக் காட்டுகிறார்.

"***இந்தப் பாக்கியம் விருத்தசேதனமுள்ளவனுக்கு மாத்திரம் வருமோ, விருத்தசேதனமில்லாதவனுக்கும் வருமோ? ஆபிரகாமுக்கு விசுவாசம் நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறோமே***" (4 : 9).

விசுவாசத்தினால் ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டான் என்று சொல்லியிருக்க, இந்தப் பாக்கியம் விருத்தசேதனமுள்ள யூதருக்கு மாத்திரம் வருமோ அல்லது விருத்தசேதனம் இல்லாதவர்களுக்கும் வருமோ

என்கிற ஐயம் ஏற்படத் தேவையில்லை. ஆபிரகாம் விசுவாசித்தது போல விசுவாசிக்கிற யாவருக்கும் இந்தப் பாக்கியம் உண்டாயிருக்கும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

“ அது எப்பொழுது அவனுக்கு அப்படி எண்ணப்பட்டது? அவன் விருத்தசேதனமுள்ளவனாயிருந்தபோதோ, விருத்தசேதனமில்லாதவனாயிருந்தபோதோ?விருத்தசேதனமுள்ளவனாயிருந்தபோதல்ல, விருத்தசேதனமில்லாதவனாயிருந்த போதே” (4 : 10).

விருத்தசேதனம் என்ற முத்திரை, ஆபிரகாம் விசுவாசித்து (ஆதி. 15 : 5, 6) ஏறக்குறைய பதிமூன்று அல்லது பதினான்கு ஆண்டுகளுக்குப் பின்பே கொடுக்கப்பட்டது (ஆதி. 17 : 24). அப்போது ஆபிரகாம் தொண்ணூற்றொன்பது வயதுள்ளவனாயிருந்தான். ஆகவே விசுவாசம் முந்தின அனுபவமாகவும் விருத்தசேதனம் பிந்தின அனுபவமாகவும் இருந்தது. ஆனால் யூதர்கள், விருத்தசேதனம் தேவ ஒழுங்கு (Divine Institution) என்று விசுவாசித்து, இந்த ஒழுங்கில் (Institution) பங்கு பெற்றவர் ஒருவராவது கெட்டுப்போவதில்லை என்பதாகப் போதித்தனர். இதினிமித்தம் விசுவாசம் பின்னாகவும் விருத்தசேதனம் முன்னாகவும் வந்தது.

அப். பவுலோ, ஆபிரகாம் விருத்தசேதனத்தினால் அல்ல, விசுவாசத்தினாலே நீதிமானாக்கப் பட்டான் என்று விளக்குகிறார். புதிய ஏற்பாட்டில் இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனம், பாவமாகிய நுனித்தோல், வேதனையுடன் உத்தம மனஸ்தாபத்துடன் அறுக்கப்பட்டு நம் இருதயம் கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்படும்போது உண்டாகிறது. இதன் பலனாகிய நல்மனச்சாட்சி நம்மில் உண்டாகும்போது நாம் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறோம். இந்த அனுபவங்களே முத்திரை போன்றது. இதுவே மெய்யான விருத்தசேதனம் ஆகும் (ரோமர் 2 : 28, 29).

குறிப்பு: மீட்கப்பட்டவர்கள் மீட்கப்படும் நாளுக்கென்று பெற்றுக்கொள்ளும் பரிசுத்தஆவியாகிய முத்திரை வேறு அனுபவம் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

“மேலும், விருத்தசேதனமில்லாத காலத்தில் அவன் விசுவாசத்தினாலே அடைந்த நீதிக்கு முத்திரையாக விருத்தசேதனமாகிய அடையாளத்தைப் பெற்றான். விருத்தசேதனமில்லாதவர்களாய் விசுவாசிக்கிற யாவருக்கும் நீதி எண்ணப்படும்பொருட்டாக அவர்களுக்கு அவன் தகப்பனாயிருக்கும்படிக்கும், விருத்தசேதனத்தைப் பெற்றவர்களாய்மாத்திரமல்ல, நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் விருத்தசேதனமில்லாத காலத்தில் அடைந்த விசுவாசமாகிய அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களாயுமிருக்கிறவர்களுக்குத் தகப்பனாயிருக்கும்படிக்கும், அந்த அடையாளத்தைப் பெற்றான்” (4 : 11, 12).

இந்த வசனத்திலும் மேற்கூறிய விஷயத்தையே நாம் காண்கிறோம். விருத்தசேதனம் இல்லாமல் விசுவாசத்தினாலே இவ்விதமாய் நீதிமான்களாக்கப்படுகிறவர்களுக்கு ஆபிரகாம் தகப்பனாயிருக்கிறான் என்றும் அல்லது காரணகர்த்தாவாய் இருக்கிறான் என்றும் விருத்தசேதனம் பெற்றிருந்தாலும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறவர்களுக்குத் தகப்பனாயிருக்கிறான் என்றும் அவனுடைய அதே விசுவாசத்தின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவர்களுக்கும் அவன் தகப்பனாயிருக்கிறான் என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

“ அன்றியும், உலகத்தைச் சுதந்தரிப்பான் என்கிற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்காவது அவன் சந்ததிக்காவது நியாயப்பிரமாணத்தினால் கிடையாமல் விசுவாசத்தினால் வருகிற நீதியினால் கிடைத்தது. நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்கள் சுதந்தரவாளிகளானால் விசுவாசம் வீணாய்ப்போம், வாக்குத்தத்தமும் அவமாகும்” (4 : 13, 14).

உலகத்தைச் சுதந்தரிப்பான் என்ற வாக்குத்தத்தத்தை நியாயப்பிரமாணத்தினால் அவன் பெற்றுக்கொள்ளவில்லை. ஆனால் உலகத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுவான், ஜாதிகளும் இராஜாக்களும் அவனிடமிருந்து தோன்றுவார்கள் போன்ற வாக்குத்தத்தங்களை விசுவாசத்தினாலேயே அவன் சுதந்தரித்துக்கொண்டான். இக்காரணத்தைக்கொண்டே நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்கள் சுதந்தரவாளி களானால் விசுவாசம் வீணாய்ப்போம், வாக்குத்தத்தமும் அவமாகும் என்று எழுதப்பட்டிருக்கிறது.

“ மேலும் நியாயப்பிரமாணம் கோபாக்கினையை உண்டாக்குகிறது, நியாயப்பிரமாணமில்லாவிட்டால் மீறுதலுமில்லை” (4 : 15).

நியாயப்பிரமாணம் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதில்லை. ஆனால் நியாயப்பிரமாணம் கோபாக்கினையைத்தான் பிறப்பிக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த நியாயப்பிரமாணம் கொடுக்கப்படாவிட்டால் நன்மை தீமை இன்னதென்று ஜனங்கள் அறியாதிருப்பதினால் மீறுதல் என்பது கணக்கிடப்படுவதுமில்லை; மீறுதலினால் உண்டாகும் பாவமுமில்லை.

“ ஆதலால், சுதந்தரமானது கிருபையினால் உண்டாகிறதாயிருக்கும்படிக்கு அது விசுவாசத்தினாலே வருகிறது; நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்களாகிய சந்ததியாருக்குமாத்திரமல்ல, நம்மெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாமுடைய விசுவாசத்தைச் சார்ந்தவர்களான எல்லாச் சந்ததியாருக்கும் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கும்படிக்கு அப்படி வருகிறது” (4 : 16).

ஆகையால் ஆபிரகாமுக்குத் தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களைச் சுதந்தரித்துக்கொள்வது நியாயப்பிரமாணத்தினால் உண்டாகாமல் ஆபிரகாமின் விசுவாசத்தைப் பின்பற்றும் யாவருக்கும் கிருபையினால் உண்டாயிருக்கிறது. ஏனெனில் ஆபிரகாமே அவனுடைய விசுவாசத்தைப் பின்பற்றும் யாவருக்கும் தகப்பனாகும்படி அப்படியாயிற்று.

“ அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான்” (4 : 17).

இந்த வசனத்தில் ஆபிரகாம் நம்மெல்லாருக்கும் தகப்பனானான் என்று மாத்திரமல்ல, அவனுடைய விசுவாசம் எத்தன்மையுடையதாயிருந்தது என்பதையும் நாம் காணலாம். முதலாவது அவன் ஒன்றுமில்லாமையிலிருந்து எல்லாவற்றையும் உண்டாக்க வல்லமையுள்ள தேவனிடத்திலேயே விசுவாசம் வைத்தான் என்று எழுதப்பட்டிருக்கிறது. தேவன் வெறுமையிலிருந்தும் சூன்யத்திலிருந்தும் காணப்படுகிறவைகள் காணப்படாதவைகள் யாவையும் சிருஷ்டித்தார் என்று நாம் காண்கிறோம். இந்த சத்தியத்தை ஆபிரகாம் முழு நிச்சயமாய் நம்பியிருந்தபடியால் ஈசாக்கு சாம்பலாக்கப்பட்டாலும் அதே சாம்பலி லிருந்து தேவன் அவனை எழுப்பக்கூடும் என்று அவன் முழு நிச்சயமாய் நம்பியிருந்தான்.

‘முடிந்தது’

தலை சாய்க்க உலகில் ஸ்தலமற்றவராய், நன்மை செய்கிறவராய்ச் சுற்றித்திரிந்த தேவகுமாரன், இப்பூமியில் தம் ஊழியத்தை நிறைவேற்றி, கடைசியாகத் தம் ஆவியைப் பிதாவிடம் ஒப்படைத்தபோது, அவர்தம் தலைசாய்க்க அவருக்குக் கிடைத்த இடம் கோரச் சிலுவையே ! அப்போது அவர் அதரங்களினின்று பிறந்த வார்த்தை, “முடிந்தது” என்பதே (யோவான் 19 : 30). இவ்வார்த்தை நாம் சிந்திக்கத்தக்கதே !

‘முடிந்தது’ என்று எதைக் குறித்து அவர் சொன்னார்? அதற்குச் சற்று முன்பாக அவர் தம் சீஷரிடம், “என்னைப் பற்றிய காரியங்கள் முடிவு பெறுங்காலம் வந்திருக்கிறது” (லூக்கா 22 : 37) என்று சொன்னாரன்றோ! மனித வர்க்கத்திற்காக உலகத்தோற்றத்திற்கு முன்பு முன்குறிக்கப்பட்டவர், உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்டவர், இவ்வுலகத்திற்கு வந்து மனுக்குலத்திற்காக மரிக்க வேண்டும் என்னும் நோக்கம் முடிந்தது என்பது அதன் ஒரு அம்சமாகும். அத்துடன் அவர் அவ்விதம் கல்வாரிச் சிலுவையில் மரித்ததினால் மனிதனைப் பற்றிய நோக்கம் பூரணமாய் நிறைவேற்றப்படும்படியாக, செய்யப்பட வேண்டிய யாவும் முடிந்தது என்பது அவ்வார்த்தையின் முக்கியமான அம்சமன்றோ! பாவத்தில் பிறந்து பாவக்கிரியைகள் செய்து பாவியாக இருக்கும் மனுஷனைத் தம்மைப் போல் மாற்றும்படியாக, அவனை அன்பில் பரிசுத்தமுள்ளவனும் குற்றமில்லாதவனுமாய் மாற்றும் நோக்கத்திற்காக - அதற்குத் தேவையான யாவையும் ‘நான் செய்து முடித்தேன்’ என்பதையே தேவகுமாரன் அக்கூற்றில் கருதினார். எபிரெய நிருபக்காரன், “இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச்சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்”; “ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்” (எபி. 10 : 10,14) என்று கூறுவது இதைக் குறித்தேயாகும்.

எனவே, கல்வாரியண்டை மெய்மனஸ்தாபத்தோடு வருகிற ஒவ்வொருவரும் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பை அடைந்துகொள்வது மாத்திரமல்ல, அவர்களுடைய பூரணத்திற்குத் தேவையான யாவும் கல்வாரி மரணத்திலே நிறைவேற்றப்பட்டு முடிந்தாயிற்று என்பதை விசுவாசிக்கவும் வேண்டும். ‘முடிந்தது’ என்ற வார்த்தையை விசுவாசித்து, தேவனுடைய பிள்ளையே, நீ சற்றும் சந்தேகமின்றி அவரிடம் உன்னை அர்ப்பணிப்பாயாக.

தேவன் ஒன்றையும் அரைகுறையாய் செய்பவரல்ல. ஆதியிலே வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவன், தூதர்களின் விழுகையினால் ஒழுங்கின்மையும் வெறுமையுமான பூமியைத் திரும்பவும் சிருஷ்டித்த விவரங்களை நாம் அறிவோம். “தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்” (ஆதி. 2 : 2) என்று எழுதப்பட்டிருப்பது நமக்குத் தைரியமூட்டுகிறதல்லவா? அவர் தம்முடைய கிரியைகளையெல்லாம் நிறைவேற்றி முடிக்கும் வரை இளைப்பாறவில்லையே! அவர் உன்னில் ஆரம்பித்திருக்கும் நல்ல வேலையைக் குறித்தும் அப்படியே! தம் வார்த்தையினால் சகலத்தையும் சிருஷ்டித்தவர், உன்னிலும் தம் கிரியைகளை நிறைவேற்றும்படி அவருடைய வார்த்தைக்கு அவ்வப்போது முழுமையாக உன்னை ஒப்புக்கொடுப்பாயானால், அந்த வார்த்தை உனக்குள்ளே ஒரு சிருஷ்டிப்பின் வேலையைச் செய்துகொண்டேயிருக்கும். தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்து அது நல்லது என்று கண்டது போல, முடிவிலே உன்னிலே நிறைவேற்றப்பட்டு முடிக்கப்படும் வேலையை அவர் நல்லது என்று கண்டு, உன்னில் பூரித்து ஓய்ந்திருப்பார். நீ அவருடைய தாபர ஸ்தலமாய், இளைப்பாறும் இடமாய் மாற்றப்பட்டிருப்பாய்.

இஸ்ரவேல் ஜனங்கள் ஒன்றுமற்ற வனாந்தரத்திற்கு வந்தபோது ஆசரிப்புக் கூடாரத்தை உண்டாக்க வேண்டுமென்ற ஒரு கட்டளையைத் தேவன் மோசேக்குக் கொடுத்தார் (யாத். 25 : 8). அந்தக் கட்டளையைப் பெற்ற அவன் தேவ ஆலோசனைக்குக் கீழ்ப்படிந்தபோது, அதைச் செய்து நிறைவேற்றத் தேவையான பலவித பொருட்களையும் தேவன் தந்தார்; அவ்வேலையைச் செய்வதற்கான ஞானஇருதயமுள்ளவர்களையும் தேவன்தாமே எழுப்பினார். “இப்படியே ஆசரிப்புக்கூடாரமாகிய வாசஸ்தலத்தின் வேலையெல்லாம் முடிந்தது; கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்தார்கள்” (யாத். 39 : 32). வனாந்தரத்தில் அவர்கள் ஆரம்பித்த அந்த வேலையை வெற்றிகரமாக முடிவுறச் செய்தவர் தேவனே! “இவ்விதமாய் மோசே வேலையை முடித்தான். அப்பொழுது ஒரு மேகம் ஆசரிப்புக்கூடாரத்தை மூடினது; கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று” (யாத். 40 : 33, 34). கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் சகல வேலைகளையும் செய்தார்கள். “கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே” என்ற சொற்றொடரை யாத்திராகமம் 39, 40 அதிகாரங்களில் மட்டும் பதினெட்டு இடங்களில் நாம் பார்க்கிறோம். மோசே ஒரு அம்சத்தில் அப்போஸ்தலப் பிரதிஷ்டையுள்ள ஊழியக்காரருக்கு அடையாளமானவன். கர்த்தர் கற்பித்தபடியே நமக்குக் கற்பிக்கிற தேவ ஊழியரின் ஆலோசனைப்படியே நம் ஜீவியம் கட்டி எழுப்பப்படுமாயின், நம் ஜீவியத்தின் முடிவு மகிமையாயிருக்கும்.

தாவீது தேவனுக்கென்று ஆலயத்தைக் கட்ட வாஞ்சித்தபோதிலும், தேவன் அவனுடைய குமாரனாகிய சாலொமோனைக் கொண்டு அந்த வேலையைச் செய்யத் தீர்மானித்திருந்தார் (I நாளா. 28 : 6). தாவீது தனக்குத் தேவனால் எழுதிக் கொடுக்கப்பட்ட ஆலயத்திற்கான மாதிரியை சாலொமோனுக்குக் கொடுத்தான். மேலும் அவன், "பரிசுத்த ஸ்தலமாக ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்குக் கர்த்தர் உன்னைத் தெரிந்துகொண்டார்; நீ திடன்கொண்டு அதை நடப்பி" என்று கூறி, அக்காரியத்தைச் செய்யும்படி சாலொமோனைத் தைரியப்படுத்தினான் (I நாளா. 28 : 10). தேவாதி தேவனுக்கு ஆலயம் கட்டுகிறதற்கு இளைஞனாகிய சாலொமோன் எம்மாத்திரம்! பின்னும் தாவீது சாலொமோனை நோக்கி: "நீ பலங்கொண்டு தைரியமாயிருந்து, இதை நடப்பி; நீ பயப்படாமலும் கலங்காமலும் இரு; தேவனாகிய கர்த்தர் என்னும் என் தேவன் உன்னோடே இருப்பார்; கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கடுத்த சகல கிரியைகளையும் நீ முடித்துத் தீருமட்டும், அவர் உன்னைவிட்டு விலகவுமாட்டார், உன்னைக் கைவிடவுமாட்டார்" (I நாளா. 28 : 20) என்றான். ஆம்! கர்த்தருடைய ஆலயத்திற்கடுத்த சகல கிரியைகளையும் முடித்துத் தீருமட்டும் தேவனாகிய கர்த்தர் என்னும் தாவீதின் தேவன் அவனோடே இருந்தார். அந்த ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு, தேவனுடைய மகிமை அதை நிரப்பினதை நாம் அறிவோமே! (II நாளா. 5 : 13,14). எனவே தேவன் நம்மில் ஆரம்பித்த நல்ல வேலையைப் பூரணப்படுத்தும்படியாய், பரிசுத்த ஸ்தலமான ஒரு ஆலயமாக நாம் கட்டியெழுப்பப் படும்படியாய், நாம் எச்சரிக்கையுள்ளவர்களாய் நடந்துகொண்டு, அதே சமயத்தில் அந்த வேலையை நடப்பிக்கிற தேவன் நம்மை விட்டு விலகாதவராய், கைவிடாதவராய் நம்மோடுகூட இருப்பதால் திடமனதுடன் அவரது கிரியைகளுக்கு நம்மை ஒப்புக்கொடுத்து அமர்ந்திருப்போமாக!

செருபாபேலுக்குச் சொல்லப்பட்ட கர்த்தருடைய வார்த்தை என்ன? "செருபாபேலின் கைகள் இந்த ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட்டது; அவன் கைகளே இதை முடித்துத் தீர்க்கும்" என்பதே (சக. 4 : 9). அப்படியே அந்த வேலையை அவன் கைகளே முடிக்கும்படி கர்த்தர் உதவி செய்தார். செருபாபேலுக்கு சொல்லப்பட்டது போல உன்னில் ஆரம்பித்த வேலையை முடிப்பேன் என்று உனக்கும் தேவனாகிய கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும்" என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறபடியால் (வச. 6), தேவ ஆவியானவருக்கு உன்னை முற்றும் ஒப்புக்கொடுத்து, அவருடைய மெல்லிய சத்தத்திற்கு நீ செவி சாய்ப்பதினால் அவ்வேலையானது உன்னில் நிறைவேறும். அந்த ஆவியானவர் உன்னைச் செம்மையான வழிகளில் நடத்தி, முடிவிலே மகிமையில் சேர்ப்பார். ஆவியினாலே மாம்சத்தின் கிரியைகளை நாள்தோறும் அழித்து, பரிசுத்தஆவியானவர் உன்னை முற்றிலும் பரிசுத்தமாக்கும்படி அவருக்கு உன்னை ஒப்புவி. ஆவியானவர் உன்னில் நிலைகொண்டிருக்கும்படியாக நீ ஒருபோதும் அவரைத் துக்கப்படுத்தாதிருக்கும்படி எச்சரிக்கையாயிருப்பாயாக. நீ மீட்கப்படும்நாளுக்கென்று அவரே உன்னை முத்திரித்திருக்கிறார் (ஆகாய் 2 : 5 ; எபே. 4 : 30). உன் ஜீவியத்தில் இவ்வேலை முற்றுப்பெறுவதற்கு எதிரிடையாகப் பெரிய பர்வதம் போல நிற்கும் தடைகளை நீ பார்க்க வேண்டாம். அந்தப்பெரிய பர்வதம் உனக்கு முன்பாகச் சமபூமியாக்கப்படும். நீ தேவனுடைய கிருபையை விசுவாசித்து, அந்தக் கிருபையையே சார்ந்துகொள். 'கிருபையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக' என்ற சத்தம் உன்னிலிருந்து எழும்புவதாக! அப்படியானால், "இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன்" என்று செருபாபேலுக்குச் சொல்லப்பட்ட கர்த்தருடைய வார்த்தை, தேவனுடைய ஆலயமாகக் கட்டிமுடிக்கப்படும்போது உன்னில் நிறைவேறும் (ஆகாய் 2 : 2,7).

தேவனுடைய மகிமையை அடைந்த புதிய எருசலேமாக நீ கட்டி முடிக்கப்படும்வரை, உன்னில் ஆரம்பித்த வேலையைப் பூரணப்படுத்தும்படியாக, அவர் உனக்காகக் கிரியை செய்துகொண்டிருப்பார். "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி" (பிலி. 1 : 5) என்று அப்போஸ்தலன் கூறுவது நம் நம்பிக்கையாகவும் இருக்கட்டும். போவாஸைக் குறித்து நகோமி சொன்னது போல் (ரூத் 3 : 18) நம்மில் தம்முடைய கிரியைகளை முடிக்குமட்டும் அவர் ஓயவேமாட்டார். எனவே தேவனுடைய பிள்ளையே! இடையில் உன் ஜீவியத்தில் ஏற்படும் சிற்சில போராட்டங்களையும் தோல்விகளையும் பெலவீனங்களையும் கண்டு நீ சோர்ந்துபோகாதே! நீ அவருக்காகக் காத்திருந்து, அவரிலே அமர்ந்திரு. அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாய்ச் செய்கிறவர், தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைநிற்கும் (பிர. 3 : 11, 14).

கல்வாரிச் சிலுவையில் 'முடிந்தது' என்ற சத்தம் எழுந்தது போல, நித்தியத்தில் தேவ சிங்காசனத்திலிருந்து ஒரு சத்தம் எழும்புகிறது. அது "ஆயிற்று" என்னும் சத்தமே (வெளி. 21 : 6). ஆம்! கர்த்தராகிய இயேசு சிலுவையில் 'முடிந்தது' என்று கூறிய தொனியின் முழு நிறைவேறுதலாக, பரலோகத்தில் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவர் ஜெயத்துடன் 'ஆயிற்று' என்று எதிரொலிப்பதை விசுவாசத்தினால் கேட்டு, அந்த நாளைக் குறித்த நம்பிக்கையுடனும் களிப்புடனும் யாவையும் கல்வாரியில் நிறைவேற்றி முடித்த அவருக்கு ஒருமுறைகூட உன்னை ஒப்படைப்பாயாக! அவருடைய கிரியைக்குத் தங்களை முற்றிலும் ஒப்புக்கொடுத்து, அவர் கற்பிக்கிறபடியே நடக்கிறவர்களில் அவர் தொடங்கிய வேலை முற்றுப்பெறுவது திண்ணம். ஆம்! அவர் அல்பாவும் ஓமெகாவும் ஆதியும் அந்தமுமானவர். "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" என்பது நமது அறிக்கையாகவும் இருக்கட்டும். நமது விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற - 'முடிந்தது' என்று கூறி தம்மைப் பிதாவிடம் ஒப்புவித்தவருக்கு - நம்மையும் ஒப்புவிப்போமாக. அவர் நமக்காக யாவையும் செய்து முடித்தாரன்றோ!

ஞூஅ□□ீர □வுகஎகு□

ஏபிரெய பாஷையிலே "பெதஸ்தா" என்னப்பட்ட ஒரு குளம் எருசலேமிலே உள்ளது. பெதஸ்தா என்றால் 'இரக்கத்தின் வீடு' என்று பொருள்படும். முற்காலங்களில் அந்தப் பெதஸ்தா குளத்திற்கு ஐந்து மண்டபங்கள் இருந்தன. அவைகளிலே குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் முதலான வியாதிக்காரர் அநேகர் படுத்திருப்பார்கள். சிலசமயங்களிலே தேவதூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி அதன் தண்ணீரைக் கலக்குவான். தண்ணீர் கலங்கின பின்பு, யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதியஸ்தனாயிருந்தாலும் சொஸ்தமாவான் (யோவான் 5 : 2 - 4).

மருத்துவம் வெகுவாக வளர்ச்சியடைந்திருக்கும் இந்த நாட்களில், வியாதிகள் நீங்கி சுகமாக அநேக ஏதுக்கள் உலகில் காணப்படுகின்றன. என்றாலும் எல்லாரும் தங்கள் வியாதிகளிலிருந்து சுகத்தைப் பெற்றுக்கொள்வதில்லை. மருத்துவர்களால் சுகமாக்கப்பட முடியாத பல வியாதிகள் இன்றும் இருக்கின்றன. அப்படிப்பட்ட வியாதிகளையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சுகமாக்குகிறார். அவர் நம்முடைய 'இரக்கத்தின் வீடாக' அல்லது பெதஸ்தாவாக இருக்கிறார். பெதஸ்தா குளத்தின் மண்டபங்கள் ஒன்றில் முப்பத்தெட்டு வருடங்களாக வியாதி கொண்டிருந்தவனாகப் படுத்திருந்த ஒரு மனுஷனை இயேசுகிறிஸ்து எவ்வாறு சுகமாக்கினார் என்பதைக் குறித்து நாம் தியானிக்கலாம்.

பெதஸ்தா குளத்தின் அருகே படுத்திருந்த அந்த வியாதிக்காரன் அநேக மருத்துவர்களிடம் கொண்டு செல்லப்பட்டிருக்கக் கூடும். ஆனால் பலன் ஏதுமில்லை. அவன் நாளுக்கு நாள் மிகவும் பெலவீனமடைந்து, தனக்குத் தானே எதுவும் செய்துகொள்ளக் கூடாதவனானான். அவன் உதவியற்றவன். குளம் கலக்கப்படும்போது கரிசனையோடு அவனைக் குளத்தில் கொண்டுபோய்விடவும் ஆள் இல்லை. உதவியற்ற நிலையில் அவன் முப்பத்தெட்டு வருடங்களாக வியாதியால் வேதனைப்பட்டுக்கொண்டிருந்தான். குளத்தின் அருகே அவன் வெகு நாட்களாக சுகமாக வேண்டும் என்ற விருப்பத்தோடு காத்திருந்தான். ஒருவேளை நீங்களுங்கூட இன்று இந்தநிலவரத்தில் இருக்கலாம். மருத்துவர்கள் உங்கள் உடலை வருத்தி, உங்கள் ஆஸ்தியைக் கரைத்தும் உங்களுக்குச் சற்றேனும் குணமாகவில்லையா? பெலவீனப்பட்டு, மற்றவர்களுடைய உதவியையே எதிர்நோக்கியிருக்கிறீர்களா? உங்களுக்குக் கரிசனையோடு உதவி செய்ய யாரும் இல்லையே என்று அங்கலாய்க்கிறீர்களா? இயேசுகிறிஸ்து உங்களைப் பார்த்து, 'சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா? உன் பாவங்களை மன்னித்து உன்னை ஆசீர்வதிக்க விரும்புகிறேன். பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறாயா?' என்று கேட்கிறார். உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படவும் சுகத்தைப் பெற்றுக்கொள்ளவும் விரும்புகிறீர்களா? இப்போதே அவரை விசுவாசித்து உங்கள் விருப்பத்தை அவரிடம் கூறுங்கள். அவர் உங்களைச் சுகமாக்குவார்.

"சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா" என்ற கிறிஸ்துவின் அன்பான கேள்விக்கு, அந்த வியாதியஸ்தன், "ஆண்டவரே, தண்ணீர் கலக்கப்படும்போது என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவருமில்லை, நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான்" என்று தன் இயலாமையையும், ஆதரவும் உதவியுமற்ற தன் சூழ்நிலையையும் குறித்து அதிக வேதனையோடு கூறுகிறான் (யோவான் 5 : 7). அவனுடைய எதிர்பார்ப்பு எல்லாம் தன்னோடு கரிசனையோடு பேசுகிற அவர், குளம் கலக்கப்படும்போது, தன்னைத் தூக்கிக் கொண்டுபோய்க் குளத்தில் விடவேண்டுமென்பதாகவே இருந்தது. கர்த்தராகிய இயேசு, 'சுகமாகு' என்று ஒரு வார்த்தை கூறுவாரானால் அந்த வினாடியே சுகம் உண்டாகும், குளம் கலக்கப்படும்வரை காத்திருக்க வேண்டியதில்லை என்று அவன் அறியவில்லை.

பிரியமானவர்களே, உங்களுடைய விருப்பமும் எதிர்பார்ப்பும் இதைப் போன்று, குறைவான அளவில் இருக்கலாம். ஆனால் தேவனுடைய வல்லமையோ, நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிறது (எபே. 3 : 20). நீங்கள் அவருடைய வல்லமையை விசுவாசித்தால் உங்கள் வியாதியிலிருந்தும், பிரச்சினைகளிலிருந்தும், உங்களால் நினைத்துப் பார்க்க முடியாத விதத்தில் விடுதலையை மட்டுமல்ல, அவருடைய பரிபூரண ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வீர்கள்.

கர்த்தராகிய இயேசு அவனை நோக்கி, "எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார்.உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, நடந்துபோனான்" (யோவான் 5 : 8, 9). கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டவுடனே அவனுடைய சரீரத்திலிருந்த வியாதி அவனை விட்டு நீங்கி, ஆரோக்கியமான புதிய சரீரத்தை அவன் பெற்றுக்கொண்டான். முன்பு இருந்த இயலாமை, பெலவீனம், வியாதி இப்பொழுது அவனில் இல்லை. அவன் முற்றிலும் குணமானான். கர்த்தருடைய சத்தம் வல்லமையுள்ளது. அவர் தமது வசனத்தை அனுப்பிக் குணமாக்குகிறார் (சங். 29 : 4 ; 107 : 20).

பெதஸ்தா குளம் **'இரக்கத்தின் வீடாக'** இருப்பதால், **அதின் ஐந்து மண்டபங்களும் இரக்கத்தின் ஐந்து அம்சங்களை** வெளிப்படுத்துகின்றன. அவையாவன:

பாவ மன்னிப்பு:

"அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபே. 1 : 7). பிதாவாகிய தேவனுடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே கிறிஸ்துவினுடைய இரத்தத்தினாலே, பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. அவர் தமது மிகுந்த இரக்கங்களின்படி நம் மீறுதல்கள் நீங்க நம்மைச் சுத்திகரிக்கிறார் (சங். 51 : 1). "அவர், … தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்" என்று அப். பேதுரு எழுதுகிறார் (I பேதுரு 1 : 4). ஒரு மனிதன் கிறிஸ்துவிடம் வரும்போது முதலாவது

பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதம் "பாவ மன்னிப்பும்", அதனால் உண்டாகும் "நித்திய ஜீவனும்" ஆகும். சரீரப்பிரகாரம் வியாதியிலிருந்து விடுதலையைப் பெற்றுக்கொண்ட அந்த முப்பத்தெட்டு வருட வியாதிக்காரன் நன்றியுள்ள இருதயத்தோடு தேவாலயத்திற்குச் சென்றான். கர்த்தராகிய இயேசு அவனைத் தேவாலயத்திலே கண்டு, "இதோ, நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ் செய்யாதே" என்றார் (யோவான் 5 : 14). அதுவரை அவன் செய்த பாவங்கள் மன்னிக்கப்பட்டதுடன், பாவத்தால் ஏற்பட்ட வியாதியும் சுகமாயிற்று. பாவ மன்னிப்பு உண்டாகும்படி கிறிஸ்து தம்மையே பலியாகக் கொடுத்ததால், பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் அவருக்கு மட்டுமே உண்டு (மத். 9 : 6 ; 26 : 28). எனவே தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே, கிறிஸ்துவுக்குள் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பின் (லூக்கா 1 : 77) ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக்கொள்கிறோம். நாம் நம்முடைய பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடும்போது தேவனிடத்தில் பாவமன்னிப்பாகிய இரக்கத்தைப் பெற்றுக்கொள்கிறோம் (நீதி. 28 : 13). ஆம்! நம் ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு (தானி. 9 : 10).

"அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும், நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது" (லூக்கா 1 : 78, 79). கிறிஸ்துவையும், அவருடைய இரட்சிப்பின் வழியையும் அறியாமல் வாழ்வது மரண இருளில் உட்கார்ந்திருப்பதற்கு ஒப்பாகும். கிறிஸ்துவினிடத்தில் வரும்போது, அவருடைய வார்த்தைகள் மூலமாக அறியாமை என்னும் இருளிலிருந்து நாம் விடுவிக்கப்படுகிறோம்; இவ்வுலகத்தில் நடக்க வேண்டிய வழியையும் அறிகிறோம். "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" என்றும் (சங். 119 : 105), "உம்முடைய வசனத்தின் பிரசித்தம் (entrance) வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்" என்றும் எழுதப்பட்டுள்ளது (வச. 130). "என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்" என்று உரைத்த கிறிஸ்து உலகத்தால் கொடுக்க முடியாத சமாதானத்தை நமக்குத் தருகிறார் (யோவான் 14 : 27).

தண்ணீர் ஞானஸ்நானமும், பரிசுத்தஆவியின் அபிஷேகமும்:

தேவனுடைய இரக்கம் ஒரு மனுஷனைச் சந்திக்கும்போது அது அவனுக்குப் பாவ மன்னிப்பின் சந்தோஷத்தைத் தந்து அவனை அப்படியே விட்டு விடுவதில்லை. தேவனுடைய முடிவில்லாத இரக்கம் அவனைத் தேவனைப் போல் மாற்றும்படி கிரியை செய்கிறது. "நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்; நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன்" என்று தேவன் கூறுகிறார் (ஓசியா 2 : 19). பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலமாக நாம் நித்திய விவாகத்திற்கென்று அல்லது கிறிஸ்துவின் மணவாட்டியாகும்படி நியமிக்கப்படுகிறோம். தேவனுடைய இரக்கம் மனுஷனை எவ்வித ஸ்தானத்திற்கு உயர்த்துகிறது! எனவே தீத்துவுக்கு எழுதின நிருபத்தில், "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்" என்று அப். பவுல் எழுதுகிறார் (தீத்து 3 : 5). இவ்விதம் தேவனுடைய இரக்கத்தினால் பாவ மன்னிப்பாகிய மீட்பைப் பெற்ற மனுஷன், அவ்விரக்கத்தினால் தண்ணீர் ஞானஸ்நான சத்தியத்திற்கு வழிநடத்தப்பட்டு, பின்பு, மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பரிசுத்தஆவியையும் பெற்றுக்கொள்கிறான். பரிசுத்தஆவியின் அபிஷேகத்தினால் கர்த்தர் நம்மைத் தமக்கு நித்திய விவாகத்திற்கென்று நியமித்துக் கொள்கிறார். அது அவருடைய பெரிதான இரக்கமே! ஆம், அவருடைய மணவாட்டியாகும்படி கற்புள்ள கன்னிகையாக அவருக்கென்று நியமிக்கப்படுவது தேவனுடைய உருக்கமான இரக்கமே!

அப்போஸ்தல ஊழியர்:

இவ்விதம் தேவனுடைய இரக்கத்தினால் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்கப்படும்படி நியமிக்கப்பட்டுள்ள நமக்காகத் தேவ வைராக்கியத்துடன் உத்தரவாதம்பண்ணும் அப்போஸ்தலரை இரக்கமுள்ள தேவன் சபைக்கு ஈவாகக் கொடுத்திருக்கிறார்.

பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட இஸ்ரவேலரைத் தேவன் கானானுக்கு வழிநடத்தும்படி மோசேயையும் ஆரோனையும் எழுப்பினார். இதைக் குறித்து, "நான் உன்னை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணி, அடிமைத்தன வீட்டிலிருந்த உன்னை மீட்டுக்கொண்டு, மோசே ஆரோன் மீரியாம் என்பவர்களை உனக்கு முன்பாக அனுப்பினேன்" (மீகா 6 : 4) என்று நாம் வாசிக்கிறோம். மோசே மரித்த பின்பு தம் ஜனங்களுக்கு முன் செல்லும்படி கர்த்தர் யோசுவாவை எழுப்பினார் (உபா. 31 : 3). அவர்கள் கானானுக்குள் பிரவேசித்த பின்பும் அடிக்கடி அவர்கள் தேவனை விட்டுப் பின்வாங்குகிற இருதயமுள்ளவர்களாயிருந்தனர். எனினும் அவர்களை வழிநடத்தும்படி தேவன் தமது மிகுந்த இரக்கத்தினாலே அவர்களுக்கு இரட்சகர்களை, அதாவது நடத்திப்புக்காரரை எழுப்பித் தந்ததாக நாம் பார்க்கிறோம். இதைக் குறித்து நெகேமியா, "அவர்கள் நெருக்கம் அநுபவிக்கிற காலத்தில் அவர்கள் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறபோதோ, நீர் பரலோகத்திலிருந்து கேட்டு, உம்முடைய மிகுந்த இரக்கத்தினால் அவர்களை அவர்கள் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கிவிடுகிற இரட்சகர்களை அவர்களுக்குக் கொடுத்தீர்" என்று எழுதுகிறான் (நெகே. 9 : 27). இளைப்பாறுதல் உண்டானபோது அவர்கள் மறுபடியும் பொல்லாப்புச் செய்யத் தொடங்கினார்கள். ஆகையால் அவர்களைச் சத்துருக்களின் கையிலே ஒப்புவித்த தேவன், அவர்கள் மனந்திரும்பினபோது, தம்முடைய "இரக்கங்களின்படியே அநேகந்தரம்" அவர்களை விடுதலையாக்கினார் (வச. 28).

புதிய ஏற்பாட்டின் இஸ்ரவேலராகிய நம்மைப் பூரணத்தின் பாதையிலே வழிநடத்தும்படி தேவன் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஐந்து வித உத்தியோகஸ்தரைச் சபைக்கு ஈவாகக் கொடுத்திருக்கிறார். தேவனுடைய ஈவு என்பது தகுதியில்லாத மனிதனுக்குத் தேவன் இலவசமாய் தம் இரக்கத்தினால் ஈயும் நன்மையாகும். அதைக் குறித்து, "கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது" (எபே. 4 : 7) என்று கூறப்பட்டுள்ளது. நாம் அனைவரும் கிறிஸ்துவினுடைய

நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்படியாக தேவனானவர் சபையிலே அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர் ஆகிய ஊழியக்காரர்களை ஏற்படுத்தியுள்ளார் (எபே. 4 : 11 - 13).

தெய்வீக சுகம்:

“என்மேல் இரக்கமாயிரும் கர்த்தாவே, நான் பெலனற்றுப் போனேன்; என்னைக் குணமாக்கும்” என்று தாவீது தான் சுமாகும்படி தேவனுடைய இரக்கத்திற்காக வேண்டிக்கொள்வதை சங்கீதம் 6 : 2 - இல் நாம் வாசிக்கிறோம். தேவன் தம்முடைய மிகுந்த இரக்கத்தினாலே நமக்குப் பரிகாரியாக இருந்து, தெய்வீக சுகத்தை நாம் அனுபவிக்கும்படி செய்கிறார். கர்த்தராகிய இயேசு இவ்வுலகத்திலிருந்தபோது ‘தாவீதின் குமாரனே இரங்கும்’ என்று தம்மை நோக்கிக் கூப்பிட்ட எவருக்கும் இரங்கி சுகத்தையும் விடுதலையையும் அருளிச் செய்தார். தேவனுடையபிள்ளைகள் சரீரசுகத்திற்காக அவருக்குக் காத்திருக்கும்போது அவர் தமது இரக்கத்தினால் அவர்களுக்குச் சுகத்தை அருளுகிறார். அப். பவுல் எப்பாப்பிரோதீத்துவைக் குறித்து, “அவன் வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்தது மெய்தான். ஆகிலும், தேவன் அவனுக்கு இரங்கினார்; அவனுக்கு இரங்கினதுமல்லாமல் ,துக்கத்தின்மேல் துக்கம் எனக்கு உண்டாகாதபடிக்கு, எனக்கும் இரங்கினார்” (பிலி. 2 : 27) என்று கூறுகிறார். தேவனுடைய பிள்ளைகள் தெய்வீக சுகத்திற்காகக் காத்திருக்கும்போது அவர் அவர்களுக்கு இரங்கி அவர்களுடைய ஆத்துமாவைக் குணமாக்கி, சரீர சுகத்தையும் ஆரோக்கியத்தையும் கட்டளையிடுகிறார்.

எடுத்துக்கொள்ளப்படுதல்:

தேவனுடைய இரக்கத்தினால் பாவமன்னிப்பைப் பெற்று, சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, பரிசுத்தஆவியைப் பெற்று, அவருடைய இரக்கத்தினால் அவருக்கென்று நியமிக்கப்பட்டவர்களை அவர் தம்முடைய ஈவாகிய அப்போஸ்தலர் மூலம் வழிநடத்துவதுடன், முற்றுமுடிய அவர்களை இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். “நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்” (எபி. 4 : 15, 16). அவர் இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கிறார். அவர் தமக்கென்று நியமிக்கப்பட்டவர்களைத் தம்முடைய இரக்கத்தினாலே தம்மிடம் சேர்த்துக்கொள்ளும்படி கிரியை செய்துகொண்டிருக்கிறார். அவருடைய இரகசிய வருகையில் அவரோடேகூட எடுத்துக்கொள்ளப்படும்படியாக நாம் மகா பரிசுத்த விசுவாசத்தின்மேல் நம்மை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்தஆவிக்குள் ஜெபம்பண்ணி, தேவனுடைய அன்பிலே நம்மைக் காத்துக்கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருக்க வேண்டும் (யூதா 20, 21). ஆம். அவருடைய வருகையிலே அவர் நம்மைத் தம்மோடு சேர்த்துக் கொள்வது அவரது மாபெரும் உருக்கமான இரக்கத்தினால் மாத்திரமே.அதுஅவருடையகிருபையின்செயலே!எனவேஅப்போஸ்தலனாகிய பேதுரு, “இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்” (I பேதுரு 1 : 13) என்று கூறியிருக்கிறார்.

அருமை நண்பரே! நம்முடைய ‘இரக்கத்தின் வீடாகிய’ கிறிஸ்துவினிடத்தில் தஞ்சம் புகுந்தது முதல் அனுதினமும் பலவிதங்களில் அவருடைய இரக்கங்களை அனுபவித்து வருகிற நாம், கிறிஸ்துவின் பூரணத்திற்குப் படிப்படியாக உருவாக்கப்பட்டு வருகிறோம். இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராகிய அவர் நம்மில் தொடங்கிய இந்த நற்கிரியை நிறைவு பெறும்போது, நாம் அவருடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் நித்திய நித்தியமாக விளங்கச் செய்கிறவர்களாய் என்றென்றும் அவரோடு அரசாளுவோம்.அல்லேலூயா! (எபே. 2 : 4 - 6). இவை யாவும் அவருடைய அளவற்ற இரக்கமே! இரக்கங்களின் பிதாவுக்கே ஸ்தோத்திரம்! (II கொரி. 1 : 3).

விசுவாசத்துடன் முன்னேறுதல்

நாம் விசுவாசத்தில் உறுதியாயிருக்க வேண்டும் என்றும் (I பேதுரு 5 : 9), விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும் என்றும் (I கொரி. 16 : 13), விசுவாசத்தில் வல்லவர்களாக வேண்டும் என்றும் (ரோமர் 4 : 21) அறிவுறுத்தப்படுகிறோம். நாம் விசுவாசத்தில் வளரும்போது, எல்லாச் சூழ்நிலைகளிலும் கர்த்தரை மாத்திரம் சார்ந்திருக்கும் நிலவரத்திற்கு வருகிறோம். எல்லாம் நிறைவாய், திருப்தியாய் இருக்கும்போது மாத்திரமல்ல, எல்லாம் குறைவுபட்டு, வாழ்க்கையின் கடினமான கட்டத்தில் செல்லும்போதும் நாம் கர்த்தரைச் சந்தோஷத்துடன் பின்பற்ற விசுவாசம் இன்றியமையாதது ஆகும்.

எல்லாம் நமக்கு விரோதமாய் இருக்கும்போதும், நமக்கு அருமையானவர்களும் மிகவும் நெருங்கிய உறவினர்களும் நண்பர்களும் நம்மைக் கைவிடும்போதும், தேவஊழியருங்கூட நமக்குத் தூரமாயிருப்பது போலக் காணப்படும்போதும், சில சமயங்களில் தேவனுங்கூட தம்முடைய முகத்தை நமக்கு மறைப்பது போல தோன்றும்போதும், நம்முடைய தேவன்மேல் நாம் வைத்திருக்கும் விசுவாசம் பரீட்சிக்கப்படுகிறது என்று அறிந்துகொள்ள வேண்டும். தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு இவை யாவும் அவரால் அனுமதிக்கப்பட்டவைகளே என்ற வெளிப்படுத்தலுடன், இவைகளின் மத்தியில் நமக்குத் தேவனில் இளைப்பாற முடிகிறதா

அல்லது நம்முடைய விசுவாசம் நாணலைப் போல் அசைகிறதா என்று நம்மை நாமே நிதானித்தறிந்து, தேவன்மேல் நம் விசுவாசத்தை நாம் கட்டி எழுப்பிக்கொள்ள வேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்குக் கர்த்தர் செய்த அற்புதங்களைக் கண்கூடாகக் கண்டார்கள். தேவன் அவர்களுடைய தேவைகளை எல்லாம் தந்து அவர்களுடைய வாஞ்சைகளை நிறைவேற்றினார். தேவனுடைய உதவியால் அவர்கள் தங்களுடைய சத்துருக்களை ஜெயித்தார்கள். அவர்கள் யுத்தங்களிலே தேவனை நோக்கிக் கூப்பிட்டு, அவர்மேல் நம்பிக்கை வைத்தபடியினால் அவர்கள் விண்ணப்பங்களை அவர் கேட்டருளினார். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர் அவர்களுக்குத் தம்மை சர்வ வல்லமையுள்ளவராய் விளங்கப்பண்ணினார். ஆனால், அவர்களோ இந்தத் தேவனை விட்டுப் பிரிந்து, முறுமுறுத்து, அவரைத் துக்கப்படுத்தினார்கள்.

அருமையான தேவபிள்ளையே, இன்றைக்கு உன் நிலவரம் என்ன? சென்ற நாட்களில் நீ கர்த்தரைப் பலவிதங்களில் ருசித்தறிந்திருக்கக் கூடும். என்றாலும் அவர் வரும் நாளில் உன்னில் அவர் விசுவாசத்தைக் காணமுடியுமோ?“மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ”? (லூக்கா 18 : 8) என்று கர்த்தராகிய இயேசு கேட்கிறார். பலவிதமான சூழ்நிலைகளின் மத்தியிலும் நாம் தேவனை மாத்திரம் விசுவாசித்து, அவருக்குள் இளைப்பாறுகிறோமா? அல்லது அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அவிசுவாசத்துக்கு இடங்கொடுக்கிறோமா?அவிசுவாசம்என்பதுதேவனுடைய பிள்ளைகளுடைய ஆவிக்குரிய முன்னேற்றத்தைத் தடைசெய்யும்பிசாசின் வல்லமையுள்ள ஓர் ஆயுதமாக இருக்கிறது. அது நமக்குள்ளே கிரியை செய்யுமானால் அதுநம்முடையஇருதயத்தைப் பொல்லாததாக மாற்றி, நம்மைத் தேவனை விட்டு விலக்கி விழுந்துபோகச் செய்யும்.

“ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது” என்று நீதிமொழிகள் 24 : 10 - இல் நாம் வாசிக்கிறோம். நாம் நம்முடைய கஷ்டங்களில் விசுவாசத்தை இழந்து, தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்து, அவரைத் துக்கப்படுத்துகிறோமா? முற்பிதாவாகிய ஆபிரகாமை நாம் கவனிப்போமானால் அவன் தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான் (ரோமர் 4 : 20, 21). தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்றும்படி அவன் பொறுமையோடே காத்திருந்தான். அவன் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும்அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான் (வச. 18). அவன் சோர்ந்துபோகாமல்காத்திருந்தபடியினால் விவாசத்தில் வல்லவனாகி, வாக்குத்தத்தத்தைச் சுதந்தரித்துக்கொண்டான். எல்லாச் சூழ்நிலைகளிலும் தேவனை மாத்திரம் விசுவாசித்து, அவருக்குள் இளைப்பாறுவது உள்ளான மனுஷனில் நம்மைப் பலவான்களாக்குகிறது. இதனையே, “அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும்” (ஏசாயா 30 : 15) என்று நாம் வாசிக்கிறோம்.

நம்மால் ஒன்றுமே செய்ய முடியாது என்ற சூழ்நிலைக்குள் நாம் வரும்போது மாத்திரமே தேவன் நமக்காகக் கிரியை செய்யத் தொடங்குகிறார். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை (லூக்கா 1 : 37). நம்முடைய சூழ்நிலைகளைப் பார்த்து நாம் சோர்ந்துபோகாமல், அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நம்மைத் தப்புவிக்கும்படிநம்முடைய தேவன் நம்மோடு கூட இருக்கிறார் என்றும், நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் அவர் நமக்குள்ளே கிரியை செய்ய வல்லவர் (எபே. 3 : 20) என்றும் நாம் விசுவாசிக்க வேண்டும். சில சமயங்களில், தேவன் நம்முடைய கஷ்டங்களையும் பிரச்சினைகளையும் கவனியாதிருப்பது போலவும், நம்முடைய ஜெபத்துக்குச் செவிசாயாதிருப்பது போலவும் நமக்குத் தோன்றக்கூடும். ஆனால், “விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது” (எபி. 11 : 1). எந்தச் சூழ்நிலையிலும் கர்த்தரை உறுதியாய்ப் பற்றிப் பிடித்துக்கொள்வதே விசுவாசம். ஆபத்துக் காலத்தில் நாம் சோர்ந்து போவோமானால் நம்முடைய பெலன் குறுகினது என்று நாம் நிரூபிக்கிறோம். மாறாக, நாம் சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணுவோமாகில், தேவன் நமக்கு ஏற்றவேளையில் நீதி செய்கிறதை நாம் காண்போம் (லூக்கா 18 : 1, 7). நாம் நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமலிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம் (கலா. 6 : 9). இக்கட்டான சமயங்களில் தனிமையாய்க் கர்த்தருடைய சமுகத்தில் காத்திருப்பதன் மூலம் நாம் சோர்வினை மேற்கொள்ளலாம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கல்வாரிப் பாதைக்கு முன்னதாக கெத்செமனேக்குச் சென்று தனிமையாக ஜெபம்பண்ணினதின் மூலம், அப்பாதையை வெற்றிகரமாகக் கடந்து செல்லும்படி தேவதூதனால் பெலப்படுத்தப்பட்டார் (லூக்கா 22 : 43, 44).

பழைய ஏற்பாட்டில் யோபு தான் போகும் பாதையில் தேவன் இருக்கிறாரா என்பதை அறியக் கூடாதவனாய், “இதோ, நான் முன்னாகப்போனாலும் அவர் இல்லை; பின்னாகப்போனாலும் அவரைக் காணேன். இடதுபுறத்தில் அவர் கிரியை செய்தும் அவரைக் காணேன்; வலது புறத்திலும் நான் அவரைக் காணாதபடிக்கு ஒளித்திருக்கிறார்” என்று அங்கலாய்த்தபோதிலும், அதைத் தொடர்ந்து, “ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார்; அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்” என்று தன் விசுவாசத்தை அறிக்கை செய்கிறான் (யோபு 23 : 8 - 10). மேலும், “என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்” என்றும் அவன் நம்பிக்கையோடே கூறுகிறான் (யோபு 19 : 25, 26). நம் முடைய கர்த்தராகிய இயேசு, நம்முடைய பாடுகள், கஷ்டங்கள் ஆகியவற்றை அறியாதவரல்ல. அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய அவர் வல்லவராயிருக்கிறார் (எபி. 2 : 18). அல்லேலூயா! நம்முடைய ஜீவியத்தில் ஏதோ ஒரு நோக்கத்திற்காகவே தேவன் பாடுகளையும் கஷ்டங்களை யும் அனுமதிக்கிறார். நாம் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, நம்முடைய விசுவாசத்தின்

பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து அதை மிகுந்த சந்தோஷமாக எண்ண வேண்டும் (யாக். 1 : 2,3). கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே நம்முடைய பெலன் (நெகே. 8 : 10). நாம் சுதந்தரிக்கப்போகிற நித்திய கன மகிமையைப் பற்றிய நம்பிக்கையினால், அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவங்களைப் பொறுமையோடும் சந்தோஷத்தோடும் நாம் சகிப்போமாக. நாம் உபத்திரவப்படும் நேரங்களில் தேவன் கிரியை செய்யாதிருப்பது போல் தோன்றினாலும், "கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள்" (யாத். 14 : 14) என்றுரைத்தவர் நமக்காகக் கிரியை செய்வதை விசுவாசக் கண்களால் நாம் காண்போமாக. அப். பவுலைப் போல "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்" என்ற நிச்சயத்துடன் நாம் முன் செல்வோமாக (II தீமோ. 1 : 12).

நம்முடைய தேவன் சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய்ச் செய்கிறவர். நாம் அவருடைய அதிசயக் கிரியைகளைக் காணும்படி அவருடைய சமுகத்தில் காத்திருக்க வேண்டும் என்றே அவர் விரும்புகிறார். "நீங்கள் தரித்துநின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்" (II நாளா. 20 : 17). 'நீங்கள் தரித்துநின்று' என்பது கர்த்தருக்காகக் காத்திருப்பதையே குறிக்கிறது. "அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்" (ஏசாயா 30 : 18) என்றும், கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புதுப்பெலன் அடைவார்கள் (ஏசாயா 40 : 31) என்றும் நாம் வாசிக்கிறோம். இவ்விதமாய் நாம் கர்த்தருக்குக் காத்திருந்து, புதுப் பெலனைப் பெற்றுக்கொண்டு, விசுவாசத்தில் வல்லவர்களாவோமாக. அப்போது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் செழிக்கும். நாம் உயர்ந்த அடைக்கலத்திலே பத்திரமாய் வைக்கப்படுவோம் (நீதி. 28 : 25 ; 29 : 25).

கர்த்தர் தம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசையும் கேடகமுமானவர் (நீதி. 30 : 5). கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்து கொள்ளும் (சங். 32 :10). தேவனாகிய கர்த்தர் நம்முடைய நித்திய கன்மலையாயிருந்து, நமக்காக வல்லமையான கிரியைகளைச் செய்கிறவராய் நம்மோடுகூட இருக்கிறார். ஆகவே எல்லாச் சூழ்நிலைகளிலும் அவரை மாத்திரம் விசுவாசித்து, அவரில் அமர்ந்திருந்து, நம்முடைய பெலனைப் புதுப்பித்துக்கொண்டு அவருடைய அதிசீக்கிரமான வருகையிலே அவரைச் சந்திக்க நாம் ஆயத்தப்படுவோமாக!

F]dLôLúY @Yo @¥dLlThPôo

நான் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்து தேவ பயத்தில் வளர்க்கப்பட்டேன். எனக்கு ஆன்மீக காரி யங்களில் விருப்பமில்லாதிருந்தபடியால் என் பெற்றோருடைய கட்டாயத்தின்பேரில் நான் ஆராதனைகளில் பங்கு பெற்றுவந்தேன். நான் உலக சிற்றின்பங்களில் ஈடுபட்டு, சினிமா பார்த்தல், கதை புத்தகங்கள் வாசித்தல் போன்றவற்றிலேயே என் நாட்களைச் செலவுசெய்தேன். சிறிது நாட்கள் கழித்து, நான் என் உறவினர் ஒருவருடைய வீட்டில் தங்கிப் படிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவர்கள் பெந்தெகொஸ்தே சபையின் விசுவாசிகளாக இருந்தார்கள். எனவே நானும் அவர்களுடன் சேர்ந்து ஆராதனைகளுக்குச் சென்று வந்தேன். ஞாயிறு பள்ளியில் எல்லாவற்றிலும் நான் முதல் மாணவியாகத் திகழ்ந்தபோதிலும் என் இருதயமோ தேவனுக்கு அடைக்கப்பட்டதாகவே இருந்தது.

அதிகமாகக் கதைப் புத்தகம் படிப்பதில் தவறு ஒன்றும் இல்லை; அவற்றில் கூறப்பட்டுள்ள நல்லவை களை எடுத்துக்கொண்டு தீமையானவற்றை விட்டு விட வேண்டும் என்கிற எண்ணம் என் இருதயத்தில் மாறாததாக இருந்தது. ஆனால் நல்ல காரியங்களை விட தீய காரியங்களே என்னை அதிகமாக ஆட்கொண்டன. சிறிது நாட்கள் கழித்து நான் மேல்நிலை வகுப்பு படிக்கும்போது வீணான கற்பனைகளை வடிவமைத்து, பொய்களைப் பிணைத்து, அநேக கதாசிரியர்களைப் போல நானும் கதை எழுத ஆரம்பித்தேன். என் வகுப்பு ஆசிரியர்களும், உடன் மாணவிகளும் இதற்கு என்னை ஊக்குவித்தார்கள். இவ்விதமாக நான் தேவனை விட்டு வெகுதூரமாயிருப்பதை அறியாமல் சந்தோஷமாகக் காலங்கழித்து வந்தேன்.

நான் என் படிப்பை முடித்து, விடுமுறைக்காக என் பெற்றோரிடம் சென்றபோது என் தாயார் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்று பெந்தெகொஸ்தே சபையில் ஐக்கியப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தேன். என் தாயாருடன் நானும் அச்சபையின் ஆராதனைகளுக்குச் சென்றேன். ஒரு கூட்டத்தில் அங்கிருந்த ஊழியர், உலகத்தை வெறுத்து, பாவஞ் செய்யாமல் ஜீவிப்பது எப்படி என்று விளக்கினார். அவை என் அறிவுக்கெட்டாதவையாக இருந்தன. அதுமுதல், 'இது எவ்வாறு சாத்தியமாகும்?' என்கிற ஒரு பெரிதான கேள்வி எனக்குள் தோன்றி வளர்ந்தது. அன்று இரவு நான் ஒரு சொப்பனம் கண்டேன்: "நான் ஓரிடத்திலிருந்து கதை எழுதிக் கொண்டிருந்தேன். அப்போது என்னை விட்டுச் சிறிது தூரத்தில் ஒரு மனிதரை அநேகர் சேர்ந்து அடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு அடி அடிக்கும்போதும் அவர் என் பெயரைச் சொல்லி க்கொண்டே சகித்தார். அதைக் கேட்டு நான் அதிர்ந்து எழுந்து, அவரிடம் சென்றேன். கூட்டத்தை விலக்கி, அவரருகில் சென்று, 'ஐயா! இவர்கள் உம்மை அடிக்கும்போது ஏன் என் பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிறீர்?' என்றேன். அவர் ஒன்றுமே பேசவில்லை; கருணையும் அன்பும் நிறைந்தவராய் இரக்கத்துடன் அவர் என்னைக் கூர்ந்து பார்த்தார். உடனே நான் அவருடைய கரங்களைப் பற்றிக்கொண்டு அழுதேன். அவர் என்னை அந்த நகரத்திற்குப் புறம்பே அழைத்துக் கொண்டுவந்து விட்டுவிட்டு, என்னைத் திரும்பி ஒருமுறை பார்த்து விட்டுச் சென்று விட்டார்."

நான் எழுந்தபோது இரவு இரண்டு மணி. நான் எழுந்து ஒன்றுமே பேசமுடியாமல் அழ ஆரம்பித்தேன். அப்போது என் பாவங்களையெல்லாம் தேவன் எனக்கு வெளிப்படுத்தினார். நான் அவற்றை ஒவ்வொன்றாக அறிக்கை செய்து முடித்தபோது, என் இருதயத்தில் பெரிய சமாதானமும் சந்தோஷமும் பிறந்தது. என் அறியாமையாகிய இருளைத் தேவன் நீக்கினார். தேவன் என் மனக்கண்களைத் திறந்து, "இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும்,

பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது” என்று என்னோடு பேசினார் (யாக். 3 : 15). காலையில் நான் எழுந்து, நான் எழுதி வைத்திருந்த கதைகள், கவிதைகள் எல்லாவற்றையும் எடுத்து நெருப்பில் போட்டு எரித்துவிட்டேன்.

அதன் பின்பு தேவன் ஒவ்வொரு வேத வாக்கியத்தையும் ஒரு சிறு குழந்தைக்குக் கற்றுத் தருவது போல் எனக்குக் கற்றுத் தந்து, எபேசியர் 3 : 17 - 21 வசனங்களின்படி இந்தப் பரிசுத்தவான்களுடைய ஐக்கியத்தையும் எனக்கு வெளிப்படுத்தித் தந்தார். நான் தேவனுடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்
கொண்டேன். அவர் என்னைப் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்பண்ணினார். எங்கும், எந்தச் சூழ்நிலை யிலும் தேவனுக்காகப் பரிசுத்தமாக ஜீவிக்கும்படியான புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை எனக்காகத் திறந்து, அதை இந்தக் கடைசி நாட்களில் நான் விளங்கிக் கொள்ளும்படியான கிருபை ஈந்த அன்பரை ஸ்தோத்திரிக்கிறேன். தமது மகா பெரிதான கிருபையால் தேவன் என்னை 1993 - ஆம் ஆண்டு இந்தக் கனமான ஊழியத்திற்குக் கொண்டு வந்தார். நான் இம்மட்டும் தேவனுடைய வீட்டில் நிலைநிற்பது அவரது பெரிதான கிருபையே. கர்த்தருடைய வருகையில் காணப்பட வேண்டும் என்பதே என் உள்ளத்தின் ஆர்வமும் ஆவலுமாயிருக்கிறது. தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தில் உண்மையுள்ளவராயிருக்கிறபடியால் அந்த நாளுக்கென்று என்னை ஆயத்தப்படுத்துவார் என நான் விசுவாசிக்கிறேன்.

சகோதரி செல்வா,

டெல்லி.

TôÓLû[j ùRôPokÕ YÚm U¡ûU

மாமன்னன் ஒருவன் தன்னுடைய நாட்டின் நலனைக் கருதி சீர்திருத்தங்கள் பலவற்றைச் செய்தான். தேசம் செழிப்பாகவும் அமரிக்கையாகவுமிருந்தது. பிரஜைகளும் மன்னனை வாழ்த்தினார்கள். ஒருநாள் மன்னன் மாறுவேடம் பூண்டு தன் நாட்டைப் பார்வையிடச் சென்றான். தங்கள் பல கஷ்டங்களும் நீக்கப்பட்டதை எண்ணி, மக்கள் ஆங்காங்கே மன்னனைப் புகழ்ந்து பேசிக்கொள்வதை அவன் கேட்டான். அப்போது, சிரமங்கள் வந்தால் அவற்றை மேற்கொள்ளத்தக்க மனப்பக்குவம் தன் குடிமக்களுக்கு உண்டா என்று அவன் சோதித்தறிய விரும்பினான். ஆகையால் அவன் தான் போகும் வழியில் சாலையின் நடுவே ஒரு பெரிய கற்பாறையை உருட்டி வைத்துவிட்டு, அருகிலிருந்த புதர் ஒன்றில் தன்னை ஒளித்துக் கொண்டு யார் இந்தக் கல்லைப் புரட்டித்தள்ளுவார்கள் என்று கவனித்துக்கொண்டிருந்தான். அவ்வழியே கடந்து சென்ற பலரும் பக்கமாக விலகிச் சென்றனர். சிலர், சாலையின் நடுவே இப்படிப்பட்ட பெரிய கல் கிடக்கிறதே என்று ராஜாவைத் தூஷித்தனர். ஒரு ஏழை மனிதன் அவ்வழியே வந்தான். வழியிலிருந்த அந்தக் கல் அனைவருக்கும் இடையூறாக இருப்பதை அவன் கண்டான். தான் சுமந்து கொண்டு வந்த பாரத்தை அவன் கீழே இறக்கி வைத்து விட்டு, மிகவும் பிரயாசப்பட்டு மெதுவாக அந்தக் கல்லைப் புரட்டித் தள்ளினான். கல் புரட்டப்பட்டபோது அதனடியில் தங்கக் காசுகளுடன் மின்னிக்கொண்டிருக்கும் ஒரு பணப்பையை அவன் கண்டான். அதிலே ராஜாவின் முத்திரையோடுகூடிய ஒரு கடிதமும் காணப்பட்டது. அவன், அவசரமாக அக்கடிதத்தைத் திறந்து வாசித்தான். ‘இந்தக் கல்லைப் புரட்டித் தள்ளுகிறவனுக்கு இந்தத் தங்கக் காசுகள் ராஜாவினால் பரிசாக வழங்கப்படுகிறது’ என்று அதிலே எழுதப்பட்டிருந்தது. என்ன சந்தோஷம்! ஏழை மனிதன் அப்பணப்பையை எடுத்துக்கொண்டு பேரானந்தத்தோடு தன் வீட்டிற்குப் போனான். ஒளித்துக்கொண்டிருந்த ராஜாவும் அவனைப் பின்தொடர்ந்து, அவனைப் பாராட்டி, தன்னுடைய அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு போனான்.

பரம கானானை நோக்கிப் பிரயாணம் செய்யும் பரலோகப் பிரயாணிகளே! பரலோக மன்ன னும், நம் பாதையில் பல பாடுகளையும் சோதனைகளையும் இன்னல் இடர்களையும் அனுமதித்துவிட்டு நம்முடைய பிரதிக்கிரியை என்னவென்று நுட்பமாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார். உனக்கு நேரிடும் பாடுகளில், சோதனைகளில் நீ என்ன செய்கிறாய்? பக்கமாக விலகிச் செல்கிறாயா? பரலோக மன்னனைத் தூஷிக்கிறாயா? அல்லது சந்தோஷமாக அவற்றை மேற்கொள்கிறாயா? உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்த யோபுக்கும் சோதனைகள் அனுமதிக்கப்பட்டன. “அவன் ... உம்மைத் தூஷிக்கானோ பாரும்” (யோபு 1 : 11) என்று சாத்தானும் சவால் விடுத்தான். தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்று யோபுவின் மனைவியும் கூறினாள். ஆனாலும் யோபு தன் உத்தமத்தை விட்டு விலகவில்லை; தன் உதடுகளினால் பாவஞ் செய்யவுமில்லை. முடிவில் அவன் இரட்டிப்பான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டான்.

கார்மேகத்துக்குப் பின்னாகக் கதிரவனுடைய ஒளி மறைந்திருப்பது போல, ஒவ்வொரு கஷ்டத்தின் பின்னும் பெரிய ஆசீர்வாதம் மறைந்திருக்கிறது. அவற்றைச் சந்தோஷத்துடன் நாம் மேற்கொள்வோமாகில், இம்மையில் மாத்திரமல்ல, மறுமையிலும் ஆசீர்வதிக்கப்படுவோம். “சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கினபின்பு ... ஜீவகிரீடத்தைப் பெறுவான்” (யாக். 1 : 12). எனவே, சோதனையின்றி கிரீடமில்லை; சிலுவையின்றி சிங்காசனமுமில்லை. நாம் அநேக உபத்திரவங்களின் வழியாகவே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் (அப். 14 : 22).

அருமையான தேவனுடைய பிள்ளையே, நீ கடந்து செல்லும் பாதை எப்படிப்பட்டதாயிருந்தாலும் சரி, பாடுகளையும் கஷ்டங்களையும் உபத்திரவங்களையும் நோக்கிப் பாராமல் முடிவில் நீ பெறப்போகும் சந்தோஷத்தையும், ஆசீர்வாதத்தையும், மகிமையையும் பந்தயப்பொருளாகிய இயேசுவையும் நோக்கிக் கொண்டு நம்பிக்கையோடு உன் ஓட்டத்தைத் தொடருவாயாக.

எருசலேமின் அலங்கமும் வாசல்களும்

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

3. பழைய வாசல் (OLD GATE)

"பழைய வாசலைப் பசெயாகின் குமாரனாகிய யோய்தாவும், பேசோதியாவின் குமார னாகிய மெசுல்லாமும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்; அவர்கள் அதற்கு உத்தரம்பாவி, அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்டார்கள்" (நெகே. 3 : 6).

பழைய வாசல், பழங்கால எருசலேமின் முக்கியமானதொரு நுழைவாயிலாகக் கருதப்பட்டு வந்தது. இது அலங்கத்தின் வடமேற்குப் பகுதியில் அமையப்பெற்றிருந்தது. சத்துருக்கள் இந்த நுழை வாயிலையும் தீக்கிரையாக்கினர். நெகேமியாவின் நாட்களில் இவ்வாசலும் பழுதுபார்த்துக் கட்டப் பட்டது. 'பழைய வாசல்', பூர்வ உபதேசங்களைக் குறிக்கிறது. "வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே. 6 : 16). இவ் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'பூர்வ பாதைகள்' என்பது, நம்முடைய இரட்சகராகிய இயேசுவும், அவருடைய அப்போஸ்தலராகிய பரிசுத்தவான்களும் போதித்ததும் கடந்துசென்றதுமான பூர்வ வழியாகும். அது இடுக்கமும் நெருக்கமுமான ஒரு பாதையே. "ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" என்று நமதாண்டவர் உரைத்திருக்கிறார் (மத். 7 : 14).

ஜீவ பாதை:

இன்று கிறிஸ்தவ உலகில் பல நவீன உபதேசங்கள் நுழைந்திருக்கின்றன. இதைக் குறித்து, "அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், ... தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங் காலம் வரும்" என்று அப். பவுல் இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னரே தீர்க்கதரிசனமாக உரைத்து வைத்திருக்கிறார் (II தீமோ. 4 : 3, 4). இன்றைய கிறிஸ்தவ உலகம், ஒரு சொகுசான, இலகுவான மார்க்கத்தையே போதிக்கிறது. சிலுவையில் அறையப்பட்ட கர்த்தராகிய இயேசுவின் உபதேசங்களையும், கிறிஸ்துவின் நிமித்தம் வரும் நிந்தைகளையும், அவரோடுகூட பாடுகளைச் சகிப்பதையும், தன் சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்றுவதையும் அவர்களால் ஏற்றுக்கொள்ள முடிகிறதில்லை. நாமோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவர்களாயிருந்து, பூர்வ பாதைகளிலேயே நம் காலடிகளை வைத்து நடக்கக் கவனமாயிருப்போமாக. பூர்வ பாதையை விட்டு வழி விலகுவதினால் உண்டாகும் அபாயத்தை ஜாண் பனியன் தன் 'மோட்சப் பிரயாணம்' என்னும் நூலில் கீழ்க்கண்டவாறு சித்தரிக்கிறார்: 'பூர்வ பாதைகளிலேயே நடந்துவந்துகொண்டிருந்த கிறிஸ்தியான் மோட்ச நகரத்தைச் சமீபித்தபோது, அப்பாதையை ஒட்டி வேறொரு பாதை போடப்பட்டிருப்பதைக் கண்டான். அப்பாதை அழகானதாகவும், நடப்பதற்கு எளிதானதாகவும், கவர்ச்சிகரமாகவும் தென்பட்டது. ஆனால் இவன் நடந்து வந்துகொண்டிருந்த பழைய பாதையோ, கரடுமுரடானதாகவும், கல்லும் முள்ளும் நிறைந்ததாகவும், ஒவ்வொரு அடியையும் அதிகக் கவனத்தோடே எடுத்துவைக்க வேண்டிய பாதையாகவும், தனிமையாக நடக்க வேண்டிய குறுகலான இடுக்கமான வழியாகவும் இருந்தது. அவனுடைய கண்ணுக்கெட்டிய தூரம் வரை மற்றப் பாதையும் இப்பாதைக்கு இணையாகவே செல்வதாகத் தோன்றவே, கிறிஸ்தியான் சற்று நேரம் இலகுவாக, வசதியாக நடக்கலாம் என்று எண்ணி, அந்தப் பாதையில் நடக்கலானான். அப்பாதையோ வரவர திசை மாறி, அவனை அகோர இராட்சதனின் எல்லைக்குள் கொண்டுசென்று விட்டது. அகோர இராட்சதன் அவனை நையப் புடைத்து, விலங்கிட்டுத் தன் சிறைச்சாலையில் அடைத்து விட்டான். நெடுநாட்கள் பட்டினியாகச் சிறையிலடைபட்டுக் கிடந்தபோது, அவன், தான் இழைத்த பெரும் தவற்றை எண்ணி அங்கலாய்த்தான். முடிவில் தேவனின் மகா இரக்கத்தினால் அவன் அவ்விடத்தினின்று தப்பினான். பூர்வ பாதைக்கு மீண்டும் வந்து, அதன்பின் அவன் அப்பாதையிலேயே மிகவும் கவனமாக நடக்கலானான்.' "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்"; "ஆதலால் நீ நல்லவர்களின் வழியிலே நடந்து, நீதிமான்களின் பாதைகளைக் காத்துக்கொள்வாயாக" (நீதி. 14 : 12 ; 2 : 20); "கீழான பாதாளத்தை விட்டு விலகும்படி, விவேகிக்கு ஜீவவழியானது உன்னதத்தை நோக்கும் வழியாம்" (நீதி. 15 : 24). எனவே உன்னதத்தை நோக்கிச் செல்லும் ஜீவ வழியிலேயே கவனமாய் நடப்பாயாக.

'வழிகளிலே நின்று' என்பதின் கருத்து யாது? பல வழிகள் நம்மைக் குறுக்கிடும்போது, அவற்றுள் சரியான 'பூர்வ வழி' எது என்று நாம் பகுத்தறியும்படி சற்றுத் தரித்து நின்று, நிதானத்துடன் செயல்பட வேண்டும். "ஆத்துமா அறிவில்லாமலிருப்பது நல்லதல்ல; கால் துரிதமானவன் தப்பி நடக்கிறான்" என்றும், "விவேகத்தின் வழியை விட்டுத் தப்பி நடக்கிற மனுஷன் செத்தவர்களின் கூட்டத்தில் தாபரிப்பான்" என்றும் ஞானியாகிய சாலொமோன் கூறுகிறான் (நீதி. 19 : 2 ; 21 : 16). விவேகி தன் நடையின்மேல் கவனமாயிருக்கிறான்; தன் வழியைச் சிந்தித்துக்கொள்வது விவேகியின் ஞானம் (நீதி. 14 : 15, 8). ஆகையால் நாம் பூர்வ பாதை எது என்று கேட்டு விசாரித்து, நல்ல வழியிலே நடப்போமாக.

ராஜ பாதை:

"நீதிமானுடைய வழியோ ராஜபாதை" (நீதி. 15 : 19). கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் கடந்து செல்லும் ஒரு ராஜபாதை உண்டு. இது ஒரு பெரும்பாதை (High way) ஆகும். இப்பாதையில் இடறல் இல்லை. இது பரிசுத்த வழி என்னப்படும். இது, கேட்டுக்குப் போகிற விரிவும் விசாலமுமான வழியினின்று முற்றிலும் வேறுபட்டதாகும். "அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்;

தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை" (ஏசாயா 35 : 8). "உம்மிலே பெலன்கொள்ளுகிற மனுஷனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் (high ways of Zion) கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள் ... அவர்கள் ... தேவசந்நிதியில் வந்து காணப்படுவார்கள்" (சங். 84 : 5 - 7). ஒரு பெரும்பாதையில் கடந்து செல்பவர்களின் கவனத்திற்குப் பல அறிவிப்புப் பலகைகள் (Sign-boards) ஆங்காங்கே பொருத்தப்பட்டிருக்கும். அவர்களுக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள பாதையின் விவரங்களை அது முன்னறிவிக்கிறது. இதனால் இப்பாதையில் செல்பவர்கள் பாதுகாப்புடன் செல்வார்கள். அவ்வாறே தேவன் நமக்கு நியமித்திருக்கிற பூர்வ பாதையில் பல எச்சரிப்புகளையும், கவனத்திற்கான குறிப்புகளையும் ஆங்காங்கே நாட்டியிருக்கிறார். "நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படிப் பலகைகளிலே தீர்க்கமாக வரை" (ஆப. 2 : 2) என்று தீர்க்க தரிசிக்குக் கட்டளையிடப்பட்டது. வேத வசனங்களே அந்த அறிவிப்புப் பலகைகளாகும். அவைகளைக் கவனித்து, அவைகளின்படி நடக்கிறவர்களுக்கு இடறல் இல்லை, அபாயமும் இல்லை. "அவனுடைய தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது; அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை" (சங். 37 : 31). "புத்திமதிகளைக் காத்துக்கொள்ளுகிறவன் ஜீவவழியில் இருக்கிறான்" (நீதி. 10 : 17). "நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்" (ஏசாயா 30 : 21). நீதிமான்களின் பாதையில் பாவமாகிய இருள் இல்லை. அது நடுப்பகல் வரை அதிகமதிகமாகப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும் (நீதி. 4 : 18). நாம் ஒளியில் நடக்கிறபடியினால் நமக்கு இடறுதல் இல்லை (யோவான் 11 : 9).

"பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே" (ஏசாயா 48 : 17) என்றுரைத்தவர் இப்பாதையில் நம்முடனேகூட இருக்கிறார். தன் ஆடுகளுக்கு முன் செல்லுகிற ஒரு மேய்ப்பனைப் போல அவர் நம் முன் செல்லுவதால் நாம் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. அவருடைய அடிச்சுவடுகளில் நடப்பதற்கு மாத்திரம் நாம் கவனமாயிருப்போமாக. நண்பனே ! நீ இரட்சிக்கப்பட்ட ஆரம்ப நாட்களில் பூர்வ பாதைகளாகிய அப்போஸ்தல உபதேசத்தில் கவனமாக நடந்து வந்தாய். ஆனாலும் நாட்கள் செல்லச் செல்ல, மனுஷருடைய ஆலோசனைகளுக்கும் சுயவிருப்பங்களுக்கும் இடங்கொடுத்து, மனுஷரையும் மாம்சத்தையும் நீ பிரியப்படுத்தத் துணிந்திருப்பாயாகில், உன் ஜீவியத்தின் 'பழைய வாசல்' நிர்மூலமாக்கப்பட்டுள்ளது என்பதை உணருவாயாக. பூர்வ பாதைகளில் பாதி தூரமோ, பெரும்பான்மையான தூரமோ கடந்துவிட்டபடியினால் நாம் புதிய எருசலேமைச் சென்றடைய முடியாது. தங்கள் ஜீவிய காலத்தின் முழு தூரமும் அப்பாதைகளிலேயே தவறாமல் நடந்தவர்களே அதற்குள் பிரவேசிப்பார்கள். "ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்" (வெளி. 22 : 14). பின்மாற்றக்காரரோ புறம்பேயிருப்பார்கள் ! ஆகவே உன் ஜீவியத்தின் 'பழைய வாசல்' எந்த நிலவரத்திலுள்ளது என்பதை உணர்ந்து, அதைச் செப்பனிடத் துரிதப்படுவாயாக.

ரோமருக்கு எழுதிய நிருபத்தின் விளக்கவுரை

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

"உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்" (4 : 18).

உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னபோது அவன் பிள்ளையற்றவனும், தன் சரீரம் செத்தவனுமாயிருந்தான். அதுமாத்திரமல்ல, சாராளுங்கூட தனக்கு ஒரு பிள்ளையுண்டாகக் கூடும் என்று நினைப்பதற்கு ஏதுவில்லாதவளாயிருந்தாள். ஆயினும் பிள்ளை பிறவாததற்கு முன்னே உன் சந்ததி வானத்தின் நடசத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப்போலவும் இருக்குமென்று கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணினது நிறைவேறிவிட்டதாகவே தன் விசுவாசக்கண்களால் ஆபிரகாம் கண்டான். இதைக் குறித்து முன் சில வசனங்களிலும் நாம் கண்டோம்.

" அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறு வயதுள்ளவனாயிருக்கும்போது, தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான்" (4 : 19).

ஆபிரகாமின் விசுவாசம் பெலனுள்ளதும் அசையாததாகவும் இருந்தது. அவன், தான் கண்ட காரியங்களில் அல்ல, தேவனுடைய வாக்குத்தத்தத்தில் நம்பிக்கை வைத்து, அதை விசுவாசித்தான். சாராள் பிள்ளைபெறும் வயதைக் கடந்தவளாகவும், ஆபிரகாம் நூறு வயதுள்ளவனாய் சரீரம் செத்துப்போன நிலையிலும் இருந்தான். அவன் விசுவாசத்தில் பெலவீனனாக இருக்கவில்லை. அதாவது, தேவன் வாக்கு செய்ததை நிறைவேற்றுவாரா என்ற சந்தேகமுள்ளவனாகவும் உறுதியற்றவனாகவும் அவன் இருக்கவில்லை.

வேதாகமத்தில் கூறப்பட்ட தேவகுமாரனின் விசுவாசம் இப்படிப்பட்டது. 'உண்டாகக்கடவது' என்ற ஒரே வார்த்தையில் எல்லாவற்றையும் தேவன் சிருஷ்டித்தார். அவரது வார்த்தையின் வல்லமை எத்தனை அதிசயமானது ! மரித்து நான்கு நாட்களாக நாறிக்கொண்டிருந்த லாசருவை, லாசருவே, வெளியே வா என்று கூறி அவர் உயிருடன் எழுப்பினார்.

அப்போஸ்தலரும் இப்படிப்பட்ட விசுவாசத்தினாலே அற்புதங்களைச் செய்தார்கள். தாயின் வயிற்றில் சப்பாணியாக பிறந்தவனை "இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் எழுந்து நட" என்று கூறியதும், மரித்த தபீத்தாளை, 'தபீத்தாளே எழுந்திரு' என்ற வார்த்தைகள் கூறி எழுப்பியதும் இந்த விசுவாசத்தின்

அடிப்படையில்தான் (அப். 3 : 6 - 8 ; 9 : 40). வைத்தியர்களால் கைவிடப்பட்ட எத்தகையக் கொடிய வியாதிகளாயிருந்தாலும், தேவனுடைய வார்த்தையின்படி, அந்த வியாதிகள் குணமாக்கப்பட்டன என்று விசுவாசக் கண்களால் கண்டு, அதிகாரத்துடன், கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் சுகமாகும்படி கட்டளைக் கொடுப்போமாக.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள் என்று கூறியிருக்கிறார் (மாற்கு 11 : 24). தமிழ் மொழிபெயர்ப்பில் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள் என்றுதான் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் NIV மொழி பெயர்ப்பில் நீங்கள் ஏற்கனவே பெற்றுக்கொண்டீர்கள் என்று விசுவாசிக்க வேண்டும் (Believe that you have received) என்றும், AMPLIFIED BIBLE - இல் ஏற்கனவே உங்களுக்கு அளிக்கப்பட்டாயிற்று என்று விசுவாசிக்க வேண்டும் (Believe that it is granted to you) என்றும், மலையாள மொழி பெயர்ப்பில் ஏற்கனவே கிடைத்தாயிற்று (லெபிச்சு) என்று விசுவாசிக்க வேண்டும் என்றும் எழுதியிருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

" தேவனுடைய வாக்குத்தத்தத்தைக்குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்" (4 : 20, 21).

"அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல்" என்று எழுதியிருப்பதின் கருத்து, தேவன் வாக்குத்தத்தம் பண்ணினவைகள் யாவும் நிறைவேற்றப்பட்டு முடிந்தாயிற்று என்று அவன் விசுவாசித்தான் என்பதே. இதுவே தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று அவன் முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான் என்பதின் பொருள். "அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல்" என்பதற்கு ஆங்கிலத்தில், "He Staggered not" என்று கூறப்பட்டுள்ளது. 'staggering' என்ற பதம் பொதுவாக, சந்தேகித்தல், அலைவுபடுதல், தர்க்கித்தல் போன்ற பொருளுடையது ஆகும். இங்கு, ஆபிரகாம் தேவனை அவிசுவாசிக்கவோ சந்தேகிக்கவோ இல்லை என்பது உறுதி.

நாம் ஒரு காரியத்தைப் பெற்றுக்கொள்ளும் முன்பு நன்றி சொல்லுவதில்லை; பெற்றுக்கொண்ட பின்பே நன்றி சொல்வது வழக்கம். ஆனால் ஆபிரகாம் தேவன் வாக்குத்தத்தம் பண்ணினவுடனேயே தேவனை மகிமைப்படுத்தினான் என்பதின் கருத்து, தேவன் வாக்குத்தத்தம் பண்ணின எல்லாவற்றையும் உறுதியாய் நம்பினான் என்பதே. அதுமாத்திரமல்ல, அவன் எவ்வளவு அதிகமாய் தேவனை மகிமைப்படுத்தினானோ அவ்வளவுக்கதிகமாய் அவனுடைய விசுவாசம் உறுதியடைந்தது அல்லது விசுவாசத்தில் அவன் வல்லவனானான் என்று எழுதப்பட்டிருக்கிறது.

" ஆகையால் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்பது, அவனுக்காக மாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும்" (4 : 22 - 24).

இவ்வசனங்களில் இப்படிப்பட்ட விசுவாசம் நீதியாக எண்ணப்பட்டதென்று அவனுக்காக மாத்திரமல்ல, அவனுடைய விசுவாசத்தைப் பின்பற்றும் யாவருக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது என்றும் நாம் காண்கிறோம். சாம்பலாக்கப்பட்டாலும் தன்னுடைய குமாரனை மரித்தோரிலிருந்து எழுப்ப வல்லமையுடைய தேவனை ஆபிரகாம் விசுவாசித்தது போல, புதிய ஏற்பாட்டின் காலத்திலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவனை நாம் விசுவாசிப்பதினால் ஆபிரகாமுக்கு நீதியாய் எண்ணப்பட்டது போல, இது நமக்கும் நீதியாய் எண்ணப்படும் என்று நாம் வாசிக்கிறோம்.

" அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்" (4 : 25).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும் நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார். அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக் கொடுக்கப்பட்டார் என்று நாம் விசுவாசிப்பது மாத்திரமல்ல, நம்முடைய விசுவாசம் ஜீவனுள்ள விசுவாசமாயிருப்பதற்கு அவர் உயிரோடெழுப்பப்பட்டார் என்றும் விசுவாசிக்க வேண்டும். அவர் மரித்ததை யாவரும் விசுவாசிக்கலாம். ஆனால் அவர் உயிர்த்தெழுந்தார் என்ற சத்தியத்தை விசுவாசிப்பது கடினமான காரியம். இக்காலங்களிலுங்கூட கிறிஸ்தவர்கள் அல்லாத மற்றவர்கள் மட்டுமல்ல, தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் சிலரும் இந்தச் சத்தியத்தை விசுவாசிப்பதில்லை. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற சத்தியத்தை விசுவாசிப்பதற்கு ஆபிரகாமுக்கு உண்டாயிருந்த அதே விசுவாசம் நமக்கு இராவிட்டால் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை விசுவாசிப்பது கடினமான காரியம். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பது வெறும் ஒரு கதையல்ல. அவர் உயிர்த்தெழுந்தார் என்ற சத்தியம் நம்முடைய ஆத்துமாவில் ஒரு உறுதியான சாட்சியை ஏற்படுத்தியிருக்க வேண்டும் அல்லது நாம் நம் ஆத்துமாவில் இப்படிப்பட்ட சாட்சி உடையவர்களாயிருக்க வேண்டும். இப்படிப்பட்ட விசுவாசத்தையே நமக்கும் தேவன் நீதியாய்க் கணக்கிடுகிறார்.

PP_200006

அரசாளப் புறப்படும் ராஜா

"**நீ**ங்களோ, ... தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், ... இருக்கிறீர்கள்" என பேதுரு அப்போஸ்தலன் கூறுகிறார் (I பேதுரு 2 : 9). நாம் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்பண்ணப்படும் நாளில் ராஜவம்சத்தில் ராஜாக்களாகப் பிறக்கிறோம். ஒருவன் ராஜாவாக அரசாள வேண்டுமானால் அதற்குரிய முறைமைவேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது. சவுல் இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்ட பிற்பாடு சாமுவேல் தீர்க்கதரிசி ராஜாங்கத்தின் முறையை ஜனங்களுக்குத் தெரிவித்தான் என I சாமுவேல் 10 : 25 - இல் நாம் வாசிக்கிறோம். இந்த ராஜாங்க முறைமை மோசேக்குக் கர்த்தர் சொல்லிக் கொடுத்த ஒன்றாகும். இஸ்ரவேலின் ராஜா தன் விருப்பம் போல் ஜீவிக்க முடியாது. அவனைக் குறித்துத் தேவனுக்குச் சில திட்டங்கள் உள்ளன. உபாகமம் 17 : 14 - 20 வசனங்களில் இஸ்ரவேலின் ராஜாவாக ஏற்படுத்தப்படும் ஒருவனில் இருக்க வேண்டிய முக்கியமான ஏழு அம்சங்களை நாம் காண்கிறோம். இந்தப் பூமியில் ஜீவிக்கும்போதே ஜெயங்கொண்டவர்களாய், அல்லது இராஜாக்களாக இராதவர்கள் வரப்போகிற நித்தியத்தின் புதிய எருசலேமில் இராஜாக்களாக இருக்க முடியாது. நாம் வரப்போகிற ஆயிர வருஷ அரசாட்சியில் இந்தப் பூமியிலே இராஜாக்களாய் அரசாளப் போகிறோம். வரப்போகும் நித்தியத்திலும் நாம் ஆளுகை செய்வோம். இந்தப் பூமியிலே ஆவிக்குரிய பிரகாரமாக இராஜாக்களாய் இருக்க வேண்டுமானால் நாம் எப்படிப்பட்டவர்களாய் இருக்க வேண்டும்?

கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட வேண்டும் :

"உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொள்பவனையே உனக்கு ராஜாவாக வைக்கக்கடவாய்" (உபா. 17 : 15). தேவன் தெரிந்துகொள்ளுகிற மனுஷன் முதலாவதாக, உண்மையுள்ளவனாய் இருப்பான். ஈசாயின் குமாரரில் ஒருவனை இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகம்பண்ணும்படி தீர்க்கதரிசியாகிய சாமுவேல் அனுப்பப்பட்டான். ஈசாய், நல்ல சரீர வளர்ச்சியும் திடகாத்தரமுமான தன் முதல் ஏழு குமாரரையும் அவன் முன்பாக கடந்துபோகப் பண்ணினபோது, கர்த்தர் அவர்களில் ஒருவரையும் தெரிந்துகொள்ளவில்லை. எல்லாருக்கும் இளையவனாயிருந்த தாவீதைத் தம்முடைய சுதந்தரமாகிய இஸ்ரவேலை மேய்க்கும்படி தேவன் தெரிந்துகொண்டார். அவனுடைய "இருதயத்தின் உண்மை"யைக் கர்த்தர் கண்டார் (I சாமு. 16 : 10 ; சங். 78 : 70 - 72). அவ்வாறே, தேவன் ஆபிரகாமின் இருதயத்தை உண்மையுள்ளதாகக் கண்டு, அவனை விசுவாசிகள் அனைவருக்கும் பிதாவாகத் தெரிந்துகொண்டார் (நெகே. 9 : 7,8). 'நான் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறேன்' என்று கூறிக்கொள்கிற தேவஜனங்கள் ஆவிக்குரிய, சரீரத்துக்குரிய எல்லாக் காரியங்களிலும் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். இந்த உலகத்திலுள்ள எந்தப் பொருளானாலும் அது "அநீதியான உலகப்பொருள்" என்றே கர்த்தராகிய இயேசுவின் வார்த்தைகள் புலப்படுத்துகின்றன (லூக்கா 16 : 11). அவற்றிலேயே உண்மையாயிராதவர்களை நித்தியத்தில் அழிவில்லாதவைகளின் மீது தேவன் எப்படி அதிகாரிகளாக வைக்க முடியும்? இரண்டாவதாக, தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் இரவும் பகலும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருப்பார்கள் (லூக்கா 18 : 7). இவர்கள் எப்போதும் கர்த்தரோடுகூட இருப்பார்கள் (வெளி. 17 : 14). மூன்றாவதாக, அவர்களில் விசுவாசத்தின் கிரியையும், அன்பின் பிரயாசமும், நம்பிக்கையின் பொறுமையும் உண்டாயிருக்கும். தெசலோனிக்கேயரில் அப். பவுல் இவற்றைக் கண்டபோது அவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என அறிந்துகொண்டார் (I தெச. 1 : 2, 3). அவ்வாறு தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் கூட்டத்தில் நாமும் காணப்படுவோமாக.

சகோதரருக்குள் ஒருவனாயிருக்க வேண்டும் :

"உன் சகோதரருக்குள்ளிருக்கிற ஒருவனையே உன்மேல் ராஜாவாக ஏற்படுத்தக்கடவாய்; உன் சகோதரன் அல்லாத அந்நியனை ராஜாவாக ஏற்படுத்தக்கூடாது" (வச. 15). 'சகோதரர்' என்பவர்கள் யாவர்? இயேசுவானவர், "என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி, ... பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்" (மத். 12 : 48 - 50). தேவசித்தம் செய்கிறவர்களை அவர் தம் சகோதரர் என அழைக்கிறார். "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (I தெச. 4 : 3). ஒருவன் பரிசுத்தஜீவியம் செய்யாமல் தேவனுக்காக எவ்வளவு நற்கிரியைகளைச் செய்தாலும் பரலோகம் அவனை அங்கிகரிக்காது. நாம் தேவசித்தம் செய்வதினாலே தேவகுமாரனாகிய கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாகிறோம். "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி : கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத். 7 : 21) என்று கர்த்தராகிய இயேசு கூறினார். மேலும் அவர், "உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று ஜெபிக்கும்படி சீஷர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். இப்போது பரலோகத்தில் தேவசித்தம் செய்கிறவர்கள் தேவதூதர்கள் ஆவர். இவர்கள் பலத்த சவுரியவான்களாயிருந்தும், தங்கள் சுயவிருப்பத்தின்படி ஒன்றும் செய்யாமல் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின்படி மாத்திரம் செய்கிறார்கள். இப்படிப் பரலோகத்திலுள்ள தேவதூதர்கள் தேவசித்தம் செய்யும்போது வரப்போகிற உலகத்தை ஆளுகை செய்ய வேண்டிய தேவஜனங்கள் தேவசித்தம் செய்ய வேண்டியது எவ்வளவு அவசியம்! 'ஆண்டவரே, உமக்குப் பிரியமில்லாத ஒன்றையும் நான் செய்துவிடாதபடி என்னைக் காத்தருளும்' என்று ஒவ்வொரு தேவபிள்ளையும் அனுதினமும் ஜெபிக்க வேண்டும். 'இவர்களே என்னுடைய சகோதர சகோதரிகள்' என்றும், 'இவர்களே என்னோடு ஆளுகை செய்யப்போகிறவர்கள்' என்றும் நம்மைக் குறித்து ஆண்டவர் சாட்சி சொல்லத்தக்கதாக நாம் நாடோறும் கவனமாய் தேவசித்தம் செய்வோமாக.

அநேக குதிரைகளைச் சம்பாதிக்க வேண்டாம் :

“அவன் அநேக குதிரைகளைச் சம்பாதியாமலும், அநேக குதிரைகளைத் தனக்குச் சம்பாதிக்கும்படிக்கு ஜனங்களைத் திரும்ப எகிப்திற்குப் போகப்பண்ணாமலும் இருக்கக்கடவன்; இனி அந்த வழியாய் நீங்கள் திரும்பிப்போகவேண்டாம் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லியிருக்கிறாரே” (வச. 16). இங்கே ‘குதிரை’ எதைக் குறிக்கிறது? “அவர் குதிரையின் பலத்தில் விருப்பமாயிரார், வீரனுடைய கால்களில் பிரியப்படார்” (சங். 147 : 10). குதிரை மனுஷனுடைய சொந்தப் பெலத்தைக் காண்பிக்கிறது. தேவஜனங்கள் தேவனை முற்றிலும் சார்ந்திருக்க வேண்டும். ஆகையால் தான் தாவீது, “என் பெலனாகிய கர்த்தாவே” என்றும், “கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர்” என்றும் சொல்கிறான் (சங். 18 : 1 ; 27 : 1). புதிய ஏற்பாட்டின் காலத்திலும் பரிசுத்தவான்கள் கர்த்தருடைய பெலத்தில் மாத்திரம் சார்ந்திருந்தார்கள். அப். பவுல் சரீரத்தில் மிகவும் பெலவீனமாயிருந்தபோதிலும் கர்த்தருடைய பெலத்தில் சார்ந்திருந்தார். ஒரு தேவபிள்ளை மனுஷனுடைய பெலத்தில் சார்ந்திருந்தால் அவன் வரப்போகும் நித்தியத்தில் ஆளுகை செய்ய முடியாது. தேவ ஜனமாகிய நாம் எதில் சார்ந்திருக்கிறோம்? உலகத்திலுள்ளவைகளில் சார்ந்திருக்கிறோமோ அல்லது தேவனில் சார்ந்திருக்கிறோமோ? பழைய ஏற்பாட்டின் ராஜா அநேக குதிரைகளைச் சம்பாதிக்கும்படி எகிப்துக்குப் போகக் கூடாது. “இனி அந்த வழியாய்” திரும்பிப் போகக் கூடாதென்று ஆண்டவர் அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். முற்காலங்களில் நாம் கர்த்தரைத் தவிர ஏனைய பல காரியங்களில் நம்பிக்கை வைத்திருக்கக் கூடும். ஆனால் கர்த்தரை அறிந்துகொண்ட பிறகு நாம் மீண்டும் பழைய சார்பிடங்களில் சார்ந்துவிடாமல், கர்த்தரில் மட்டும் சார்ந்து, அவரில் பெலன் கொண்டு முன் செல்ல வேண்டும். அப். பவுல், “கிறிஸ்து எனக்கு ஜீவன்” என அறிக்கை செய்து ஜீவித்ததுபோல, நாமும் அவரில் சார்ந்து ஜெயங்கொள்ளுவோமாக. இந்த உலகத்தில் நாம் தேவனில் சார்ந்திருப்போமானால், வரப் போகும் நித்தியத்தில் அவரோடு கூட நித்திய நித்தியமாக அரசாளுவோம்.

அநேகம் ஸ்திரீகளைப் படைக்க வேண்டாம் :

“அவன் இருதயம் பின்வாங்கிப் போகாதபடி அவன் அநேகம் ஸ்திரீகளைப் படைக்கவேண்டாம்” (வச. 17). சாலோமோன் ராஜா இதற்கு மாறாகச் செய்து அதினிமித்தம் கர்த்தரை விட்டு வழுவிப் போனான். நித்தியத்தில் ராஜாவாக அரசாளப் போகிறவர்கள் மாம்ச இச்சைக்கு விலகி ஜீவிக்க வேண்டும். இச்சையினால் உலகத்தில் உண்டான கேட்டுக்குத் தப்ப வேண்டுமென்று பேதுரு அப்போஸ்தலன் கூறுகிறார் (II பேதுரு 1 : 4). ஏனெனில், “இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்” (யாக். 1 : 15). “மாம்சசிந்தை மரணம்” (ரோமர் 8 : 6). இங்கே மரணம் என்பது மனிதன் தேவனை விட்டுப் பிரிவதைக் காண்பிக்கிறது. தேவனை விட்டுப் பிரிந்து இந்த உலகத்தில் மனுஷன் ஜீவிப்பதினால் யாது பயன்? கர்த்தரோடு இசைந்திருக்கிறவன் அவரோடு ஒரே ஆவியாயிருக்கிறான். கிறிஸ்துவை மகிமையில் சந்திக்கப் போகும் தேவஜனமாகிய நாம், மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்தவர்களாக ஜீவிக்கிறோமா? மாம்சத்தின்படி ஜீவிக்கிறவர்கள் தேவனுக்குப் பிரியமாய் இருக்கமாட்டார்கள், “யாக்கோபை நான் சிநேகித்தேன். ஏசாவையோ நான் வெறுத்தேன்” என்று கர்த்தர் உரைக்கக் காரணம் என்ன? (மல். 1 : 2, 3). ஏசாவின் சிந்தை மாம்சத்திற்குரியதாயிருந்தது. நாம் எந்தச் சிந்தையுள்ளவர்களாயிருக்கிறோம்? தேவபிள்ளைகளே, மாம்ச சிந்தையை வெறுத்துத் தள்ளுங்கள். இந்த உலகத்தின் வேஷம் கடந்து போகிறது. இந்த உலகத்தை நாம் தகாதவிதமாய் அனுபவிக்கக்கூடாது. எல்லாரும் உலகத்தை அனுபவிக்கிறது போல, அபிஷேகம் பெற்ற தேவபிள்ளைகள் உலகத்தை அனுபவிக்கக் கூடாது. எல்லாவற்றையும் அனுபவிக்க நமக்கு அதிகாரமிருக்கலாம். ஆனால் எல்லாம் நமக்குத் தகுதியல்ல. ஆதலால், மாம்ச இச்சைகளை விட்டு தேவஜனம் வெளியே வர வேண்டும். மேலும், அந்நிய ஸ்திரீகள் சாலொமோனின் இருதயத்தை வழுவிப்போகப் பண்ணினார்கள். மாம்ச இச்சை ஒருவனுக்குள்ளிருந்தால் அவன் கர்த்தருக்குள் உறுதியாக நிலைத்திருக்க முடியாது. ஆகவே மாம்ச சிந்தையை ஜெயித்து, ஆவியின் சிந்தையுள்ளவர்களாய் நித்திய ஆளுகைக்கென்று நாம் ஆயத்தப்படுவோமாக.

வெள்ளியும் பொன்னும் பெருகப் பண்ண வேண்டாம் :

“வெள்ளியும் பொன்னும் தனக்கு மிகுதியாய்ப் பெருகப்பண்ணவும் வேண்டாம்” (வச. 17). இஸ்ரவேலில் ராஜாவாயிருக்க வேண்டியவனுக்குத் தேவனால் கொடுக்கப்படும் கட்டளைகளில் இதுவும் ஒன்றாகும். இது பொருளாசை, பணஆசை ஆகியவற்றைக் குறிக்கிறது. நாம் நமக்கு உள்ளவைகள் போதுமென்றிருக்கக்கடவோம். போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் (I தீமோ. 6 :6). நம் வாழ்க்கையின் மிகுந்த ஆதாயம் நம்முடைய திருப்திகரமான இருதயத்தோடுகூடிய தேவபக்தியேயாகும். இந்த உலகத்தின் மாயை நம்மைப் பற்றிக்கொள்ளாதிருப்பதே தேவபக்தியின் விசேஷம். தேவ ஜனங்களாகிய நாம் பலவிதமான சோதனையிலும் கண்ணியிலும் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்தப்படாதபடிக்கு பண ஆசைக்கு விலகி நம்மைக் காத்துக்கொள்வோமாக. இம்மைக்குரிய யாதொன்றின் மேலும் பற்று இல்லாதவர்களாய், கர்த்தரின் பாதத்தையே நாம் ஆசையுடன் பற்றிக்கொள்வோமாக.

மேட்டிமைகொள்ளக் கூடாது :

“அவன் தன் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, அவனுடைய இருதயம் அவன் சகோதரர்பேரில் மேட்டிமைகொள்ளாமல்” இருக்க வேண்டும் (வச. 18). “புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரஞ்செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது” என்று கர்த்தராகிய இயேசு கூறியிருக்கிறார் (மத். 20 : 25, 26). ரெகொபெயாம் மனமேட்டிமையுடையவனாய், தன்னை நாடி வந்த இஸ்ரவேலருக்குக் கடினமான உத்தரவு கொடுத்தான். இதினிமித்தம் அவனுடைய ராஜ்யபாரம் பிரிக்கப்பட்டுப் போயிற்று (II நாளா. 10 : 13, 16). எந்த பாவிக்கும் கர்த்தர் இரங்குகிறார். ஆனால்,

பெருமையுள்ளவனுக்கோ அவர் எதிர்த்து நிற்கிறார். ஒரு கூட்டம் தேவதூதர்கள் தங்கள் மனமேட்டிமையினால் விழுந்து போயினர் என்பதை நாம் அறிவோம். அவர்கள் இருதயம் மேட்டிமையாயிற்று (எசே. 28 : 17). நாமோ, கிறிஸ்துவின் தாழ்மையை நம் ஆத்துமாவில் தரித்துக்கொள்ளுவோமாக! அப்படியானால் ஆட்டுக்குட்டியானவரோடு நாம் ஆளுகையும் செய்யலாம்.

நியாயப்பிரமாணத்தை வாசிக்க வேண்டும் :

"அவன் ..... கற்பனையைவிட்டு வலதுபுறம் இடதுபுறம் சாயாமலும், ... தன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருக்கும்படி கற்றுக்கொள்ளும்பொருட்டு, அவன் லேவியராகிய ஆசாரியரிடத்திலிருக்கிற நியாயப்பிரமாண நூலைப் பார்த்து, தனக்காக ஒரு பிரதியை எழுதி, தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, தன் ஜீவனுள்ள நாளெல்லாம் அதை வாசிக்கக்கடவன்" (வச. 18 - 20). ஒவ்வொரு நாளும் நாம் கர்த்தருடைய வசனத்தை வாசித்துக் தியானிக்க வேண்டும். தேவஜனமாகிய நாம் அனுதினமும் வேதம் வாசிக்கிறோமோ? நாம் கர்த்தருக்குப் பயப்படுவதைக் கற்றுக்கொண்டு, ராஜாக்களாக நீடித்து வாழும்படி ஒழுங்காக வேதத்தை வாசிக்க வேண்டும். "அவனுடைய தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது; அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை" (சங். 37 : 31) என நாம் வாசிக்கிறோம். அவருடைய வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால் ஒருவன் தன் வழிகளைச் சுத்தமாய்ப் பாதுகாத்துக்கொள்ளக் கூடும். அவன் தன்னுடைய நடைகளில் ஒன்றிலாகிலும் தவறிப்போகாதபடி அது அவனைக் காத்துக்கொள்ளும்.

மேற்கூறப்பட்டுள்ளவை 'ராஜாங்க முறைமை' என அழைக்கப்படுகின்றன. ஆவிக்குரிய பிரகாரமாக ராஜாக்களாயிருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிற நாம் நம்முடைய வாழ்நாளெல்லாம் அவற்றைக் கைக்கொள்ளும்படி ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். அப்படியானால் நாம் ஆயிரவருஷ அரசாட்சியிலும் நித்தியத்திலும் கிறிஸ்துவோடு கூட அரசாளுவோம். "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன்" என்று நம்முடைய கர்த்தர் நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிறார் (வெளி. 3 : 21). நாம் அவரோடுகூட பாடுகளைச் சகித்தோமானால், அவரோடு கூட ஆளுகையும் செய்வோம். அவரோடு கூட ஆளுகை செய்யும் நாள் மிகவும் நெருங்கியிருக்கிறது. அந்நாளுக்காக நாம் துரிதமாக ஆயத்தப்படுவோமாக.

சர்வதேசீய கன்வென்ஷன், சென்னை - 2000.

புதிய ஆண்டிற்குள் பிரவேசித்தவுடன்தானே சென்னை சர்வதேசீய கன்வென்ஷனுக்கான உபவாச ஜெபங்கள், இரும்புலியூர் கன்வென்ஷன் வளாகத்தின் ஆயத்த வேலைகள் யாவும் விறுவிறுப்புடன் துவங்கின. இது ஜனவரி 5 - ஆம் தேதி பந்தல் ஜெபத்துடன் ஆரம்பித்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் வந்த எதிர்பாராத மழை, வேலைகளில் உற்சாகமாக ஈடுபட்டிருந்தவர்களின் ஆவியை அவித்துப்போடும்படி முயற்சித்தது. ஆனால் உலகத்தையும் தம் உள்ளங்கைகளில் வைத்திருப்பவரும், மிகவும் துதிக்கப்படத்தக்கவரும், சர்வ சிருஷ்டிகளின் தேவனுமானவருக்கு ஸ்தோத்திரம். அவர் இப்புதிய நூற்றாண்டிலும் ஒரு கன்வென்ஷன் நடத்தும்படி ஆச்சரியமாக இயற்கையை நமக்கு அனுகூலமாக மாற்றினார்.

இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, சுவிட்சர்லாந்து, ஸிராலியோன், கென்யா, ஸேஷெல்ஸ், ஆஸ்திரேலியா, பாப்புவா நியூகினி, சிங்கப்பூர், மலேசியா, வளைகுடா பகுதிகள், அரபு நாடுகள், இலங்கை, நேபாளம் போன்ற உலகின்பல பாகங்களிலிருந்தும், மற்றும் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் தேவ ஜனங்கள் திரண்டு வந்திருந்தனர். உலகெங்கும் நமக்கிருக்கும் இந்தப் பெரிய அழகான தேவனுடைய குடும்பத்துக்காக அவருக்கே ஸ்தோத்திரம்.

இவ்வாண்டு ஜனவரியில் ஆரம்பித்த உபவாச ஜெப சத்தம், நமக்காக யாவற்றையும் செய்து முடிக்கிறவரும், அற்புதங்களைச் செய்கிறவருமான தேவனுடைய செவிகளில் எட்டிற்று. கன்வென்ஷனுக்கு முந்தின இரு ஞாயிற்றுக் கிழமைகளில் முறையே அடையாறிலிருந்தும் தாம்பரத்திலிருந்தும் துவங்கிய இரு மாபெரும் பவனிகள் மார்ச் 8 முதல் 12 வரை நடைபெறவிருந்த ஐந்து நாள் ஆவிக்குரிய பண்டிகையை முன்னறிவிக்கும் நோக்கத்தை நிறைவேற்றியது.

கன்வென்ஷன் நாட்களிலெல்லாம் பிள்ளைகளின் நிகழ்ச்சிகளை யெகோவா நிசியாகிய தேவன் தாமே பொறுப்பெடுத்து நடத்தினார். பிள்ளைகள் வயதுவாரியாக பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். அவர்களுக்கு உதவி செய்து ஆலோசனை அளித்து வழிநடத்தும்படி நியமிக்கப்பட்ட ஞாயிறு பள்ளி ஆசிரியர்களால் ஆர்வமூட்டும் நிகழ்ச்சிகள் அவர்களுக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. பிள்ளைகளின் அன்பரான இயேசுவினால் அவர்களது இளம் உள்ளங்கள் தொடப்படுவதைக் காண்பது ஊக்கமளிப்பதாயிருந்தது. அநேகர் தங்கள்மேல் பலமாய் இறங்கின தேவஆவியினால் ஆட்கொள்ளப்பட்டனர். பிள்ளைகளுடைய பவனி ஒவ்வொரு நாளும் காலை 4 மணி ஸ்தோத்திர ஜெபத்தைத் தொடர்ந்து நடைபெற்றது.

24 மணி நேரமும் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு நாளும் காலை 7 மணிக்கு, வயது, ஆவிக்குரிய நிலவரங்கள், ஜனங்களுடைய தேவைகள் இவற்றிற்கேற்ப அவர்களுடைய பக்திவிருத்திக்காக 9 பிரிவுகளாக வேதபாடங்கள் நடத்தப்பட்டன. இரவு 10 மணிக்கு வாலிப சகோதர சகோதரிகளுக்குப்பிரத்தியேகமான காத்திருப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இக்கூட்டங்களில் ஸிராலியோனிலிருந்தும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்தும் வந்திருந்த தேவஊழியர்களை ஆசீர்வாதத்தின் வாய்க்கால்களாகக் கர்த்தர் பிரயோஜனப்படுத்தினார். பரிசுத்தஆவியானவர் பலமாய் இறங்கினதையும், வாலிபரின் இருதயங்களில் அறிவுக்கெட்டாத தேவ அன்பு பொழிந்தருளப்பட்டதையும், அவர்களில் சிலர்

தங்களுடைய ஜீவியங்களைக் கர்த்தருக்கென்று முழுநேர ஊழியம் செய்யும்படி அர்ப்பணிக்கத்தக்கதாக அது அவர்களை நெருக்கி ஏவிக்கொண்டிருந்ததையும் உணரக் கூடியதாயிருந்தது.

ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு வாலிபருக்கென நடத்தப்பட்ட விசேஷமான கூட்டத்தில் வாலிபர்மேல் ஆசீர்வாதங்கள் அளவில்லாமல் பொழிந்தருளப்பட்டன. தூரதேசங்களிலிருந்து வந்த தேவ ஊழியர், விசுவாசிகளால் பாடப்பட்ட பாடல்கள் வாலிபரை உற்சாகமூட்டி எழுப்பின. தேவஆவியின் அக்கினி வாலிபர் மேல் அளவில்லாமல் இறங்கினது. அவர்கள் கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூர்ந்தார்கள். அவர்கள் தங்களைப்பரிசுத்தத்தில் பாதுகாத்துக்கொண்டு, தேவஅன்பினால் நிறைந்தவர்களாயிருக்க வேண்டும் என எச்சரிக்கப்பட்டனர். அநேகர் கர்த்தருடைய வார்த்தைக்குத் தங்களை உத்தம இருதயத்துடன் அர்ப்பணித்தனர்.

இந்தியாவிலும் தூரதேசங்களிலும் 22 மொழிகளில் வெளியிடப்படும் நமது சபையின் 27 பத்திரிகைகளின் முன்னேற்றத்தைக் குறித்து அறிவிக்கும் வகையில் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நமது பத்திரிகையின் பிரதிநிதிகளுக்கு (தேவஊழியர், விசுவாசிகள்) ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. ஒரு வருடத்துக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட துண்டுப்பிரதி ஊழியத்தைப் பற்றிய அறிக்கையும் கூறப்பட்டது. இதுவரை தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி, கன்னடம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் 45 இலட்சம் துண்டுப் பிரதிகள் அச்சிடப்பட்டிருக்கின்றன. தேவன் தம்முடைய மகிமைக்காக இந்த ஊழியத்தை ஆசீர்வதித்து விருத்தியடையச் செய்திருக்கிறார். நமது உதவித் தலைமைப் பாஸ்டர் அவர்கள் இலக்கிய ஊழியத்தின் முக்கியத்துவத்தை எடுத்தியம்பினார். இது முதலாவது தேவனால் ஆரம்பிக்கப்பட்டு, பழைய ஏற்பாட்டில் மோசே, புதிய ஏற்பாட்டில் பரி. யோவான், அப். பவுல் போன்ற தேவ மனுஷராலும், அதன் பின் பல நூற்றாண்டுகளாக மற்ற பல தேவபிள்ளைகளாலும் தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது என்று அவர் குறிப்பிட்டு, பத்திரிகை, இலக்கிய வெளியீடு ஊழியங்களில் சம்பந்தப்பட்ட யாவரையும் தொடர்ந்து உண்மையுடன் அவற்றைச் செய்யும்படியாய் ஊக்குவித்தார்.

புதன் மாலைத் தூது வெளிப்படுத்தின விசேஷம் 1 : 8 - ஐ மையமாகக் கொண்டிருந்தது. இயேசு கிறிஸ்து அல்பாவும் ஓமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறார். “அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே” என்று வெளிப்படுத்தின விசேஷம் 19 : 13 கூறுகிறது. ‘தேவனுடைய வார்த்தை’ என்னும் பதத்துக்கு உபயோகிக்கப்பட்டுள்ள கிரேக்க பதம் ‘லோகோஸ்’ (Logos) என்பதாகும். தேவனுடைய வார்த்தை ஆதியாயிருந்தது. ரான திரித்துவ தேவன், சகலத்தையும் தமது வார்த்தையினால் சிருஷ்டித்தார். சிருஷ்டிப்புக்கு முன்பு, தேவனுடைய வார்த்தை தேவனுடைய இருதயத்திலிருந்தது (யோவான் 1 : 18). தேவன் தமது வாயைத் திறந்து அந்த வார்த்தையை வசனித்தார். தேவனுடைய வார்த்தை நேற்றும் இன்றும் என்றும் மாறாததாயிருக்கிறது. தேவன் எல்லாவற்றையும் தமது வார்த்தையினால் செய்கிறார். அதே வார்த்தையினால் அவர் நம்மையும் ஒன்றாகக் கூட்டிச் சேர்த்துக்கொண்டிருக்கிறார். ‘தேவனுடைய வார்த்தை’யாகிய இயேசுகிறிஸ்து தமக்குச் சொந்தமானதிலே வந்தார். ஆனால் அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. தேவனுடைய வார்த்தை நம்மோடு வாசம்பண்ணி, நமக்காக மரித்தது. ஆனால் கல்லறை தேவனுடைய வார்த்தையை அடக்கி வைக்க முடியவில்லை. தேவனுடைய வார்த்தை ஜீவிக்கிறதும் என்றென்றும் நிலைத்திருக்கிறதுமாயிருக்கிறது.

வியாழன் காலைத் தூதின் அடிப்படை வசனம் II நாளாகமம் 7 : 12 ஆகும். கர்த்தர் சாலொமோனின் விண்ணப்பத்தைக் கேட்டதாக அவனிடம் கூறினார். நாம் நம் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தோமானால், நம் ஜெபம் தேவனுக்கு அருவருப்பாயிருக்கும். தாவீது கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட விரும்பினான். ஆனால் அவன் யுத்தபுருஷனாயிருந்தபடியால் தேவன் அதற்குச் சம்மதிக்கவில்லை. சமாதான புருஷன் மாத்திரமே, இளைப்பாறுதலுள்ளவனே தேவனுக்கு ஆலயத்தைக் கட்ட முடியும். ஆலயம் பலிகள் செலுத்தப்படும் இடமாகும். நாம் ஆவிக்குரிய பலிகளைச் செலுத்த வேண்டும். பரிபூரணமான தேவசித்தம் செய்வதின் மூலம் நாம் நம் சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் (ரோமர் 12 : 1, 2). நாம் ஸ்தோத்திர பலிகளை ஏறெடுக்க வேண்டும் (ஓசியா 14 : 2). நாம் புறஜாதியாராகிய பலியாயிருக்கிறோம். நாம் தேவனுக்குப் பிரியமானவர்களாகும்படி பரிசுத்தஆவியினால் பரிசுத்தமாக்கப்பட வேண்டும் (ரோமர் 15 : 15, 16).

வியாழன் மாலைத் தூது ஆதியாகமம் 1 : 1 - 4 - இன் அடிப்படையில் அமைந்திருந்தது. சில தூதர்கள் விழுந்துபோனார்கள். பூமியை இருள் சூழ்ந்தது. பின்பு தேவன் தமது வார்த்தையினால் வெளிச்சத்தை உண்டாக்கினார். வெளிச்சத்தை உண்டாக்கிய தேவனுடைய வார்த்தையானது மனுஷனை இருளிலிருந்து வெளிச்சத்துக்குக் கொண்டுவரும்படியாக மாம்ச சாயலாய் வந்தது. அவர் நம்மை ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரத்தில் பங்குள்ளவர்களாக்கியிருக்கிறார். எனவே அன்பின் குமாரனுடைய ராஜ்யத்துக்குட்படுத்தப்பட்ட நாம் ஒரு வேறுபிரிதலின் ஜீவியம் செய்ய வேண்டும் (அப். 2 : 40 ; II கொரி. 6 : 14, 18).

வெள்ளி காலைத் தூது கொலோசெயர் 1 : 28 - ஐ ஆதாரமாகக் கொண்டிருந்தது. சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதன் முக்கிய நோக்கம், எந்த மனுஷனையும் கிறிஸ்துவுக்குள் தேறினவனாக நிறுத்த வேண்டும் என்பதே. சுவிசேஷம் இரட்சிப்பை உண்டாக்குகிறது. தேவன் தம்முடைய சுவிசேஷத்தின் மூலமாக எல்லா மனுஷரையும் தம்முடைய ராஜ்யத்துக்குள் கொண்டு வரும்படியாக விரும்புகிறார். கர்த்தராகிய இயேசு மரணத்தின் வல்லமையிலிருந்து நம்மை விடுதலையாக்கி, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார் (II தீமோ. 1 : 10). அவருடைய வருகையில் சபையைத் தேறினதாக நிறுத்தும்படி தேவனானவர் சபையிலே ஐந்துவிதமான உத்தியோகங்களையுடைய தேவ ஊழியரை நியமித்திருக்கிறார். பூரணத்தின் பல்வேறு அம்சங்களைத் தேவனுடைய வார்த்தை கூறுகிறது. அதாவது தேவனுக்கு முன்பாக உத்தமமாக நடந்துகொள்ளுதல் (ஆதி. 17 : 1), பூரண பரிசுத்தம் (II கொரி. 7 : 1), பூரண சமாதானம் (ஏசாயா 26 : 3), ஒருமைப்பாட்டில் பூரணம் (எபே. 4 : 11), பூரண விசுவாசம் (யாக். 2 : 22), பூரணமான உணர்வும் அறிவும் (கொலோ. 2 : 2) போன்றவைகளே. இந்தப் பூரணமே நமது நோக்கமாயிருக்க வேண்டும்.

நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி சுத்திகரித்து, நம்முடைய ஜீவியத்தையும் சுபாவத்தையும் மறுரூபமாக்கி, நம்முடைய நோய்களையெல்லாம் குணமாக்கக்கூடிய கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தின் வல்லமை வெள்ளிக்கிழமை மாலைத் தூதில் எடுத்தியம்பப்பட்டது. கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் தேவனுடைய இரத்தம் என்றழைக்கப்படுகிறது (அப். 20 : 28). தேவன் நித்தியராயிருக்கிறபடியால் கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் நித்தியமானதாகும். நாம் பளிங்குக்கு ஒப்பான தூய்மையான கிறிஸ்தவ ஜீவியம் செய்வதற்குக் கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் நமக்கு உதவி செய்கிறது. கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தின் வல்லமையினால் நாம் குறிப்பாக ஏழு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுகிறோம்: (i) அவரது இரத்தத்தினால் நன்க்கு மீட்பு உண்டாயிருக்கிறது ; இதில் பாவத்தின் விளைவுங்கூட பரிகரிக்கப்படுகிறது (எபே. 1 : 7); (ii) அவருடைய இரத்தத்தினால் நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் (ரோமர் 5 : 9); (iii) அவருடைய இரத்தத்தினால் நாம் தேவனுக்குச் சமீபமாக்கப்படுகிறோம் (எபே. 2 : 13); (iv) அவர் தமது இரத்தத்தினால் நமக்குச் சமாதானத்தை உண்டாக்கியிருக்கிறார் (கொலோ. 1 : 20); (v) அவரது இரத்தத்தினால் மகாபரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிக்கும் தைரியத்தை நாம் பெற்றுக் கொள்ளுகிறோம் (எபி. 10 : 19, 20); (vi) ஆட்டுக்குட்டியானவரின் இரத்தமானது, சாந்தம், பொறுமை, தாழ்மை போன்ற சுபாவங்களை நமக்கு அளிக்கிறது (I பேதுரு 1 : 18, 19); (vii) சாத்தானை ஜெயிக்க அவரது இரத்தம் நமக்கு உதவி செய்கிறது (வெளி. 12 : 11).

சனிக்கிழமை காலைத் தூது நாம் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் நம்மில் காணப்பட வேண்டிய தன்மைகள் யாவை என்பதை எடுத்துக்காட்டியது. “பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்” (லூக்கா 12 : 32). மனிதன் தம்மோடும் தாம் மனிதனோடும் வாசம்பண்ண வேண்டுமென்பதே தேவனுடைய வாஞ்சையாயிருக்கிறது. நாம் பலவித பாடுகள், சோதனைகளினூடாகக் கடந்து சென்று தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ள சகல கிருபையும் பொருந்தின தேவன் தாமே நம்மைக் கிருபையினால் நிறைத்து நமக்கு உதவி செய்வார் (I பேதுரு 5 : 10).

சனிக்கிழமை மாலைத் தூது, யோவான்4 : 34 -36 - க்கு நம்முடைய கவனத்தைக் கவர்ந்திழுத்தது. நாம் கடைசிக்காலத்தில் வந்திருக்கிறோம் .தேவன் தாம் ஆரம்பித்திருக்கிற தம்முடைய கிரியையை நம்முடைய நாட்களில் நிறைவேற்றி முடிக்கப் போகிறார். அறுப்புக்கு எஜமானாகிய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்து சந்தோஷப்படத்தக்கதாக, நாம் அனைவரும் அறுவடைப்பணியில் பிரயாசப்படும்படியாக விரும்புகிறார் (யோவான் 4 : 36). வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறது. எனவே அறுப்புக்கு விளைந்திருக்கிற ஆண்டவருடைய வயல் நிலங்களில் நாம் பிரயாசப்படுவோமாக.

ஞாயிறு காலைத் தூது யோவான் 6 : 27 - இன் அடிப்படையிலிருந்தது. மனுஷன் அழிந்துபோகிற சரீரப்பிரகாரமான போஜனத்துக்காக அல்ல, நித்தியஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்துக் காகவே கிரியை நடப்பிக்க வேண்டும். களங்கமில்லாத ஞானப்பால் என்று குறிப்பிடப்படுகிற அவருடைய வார்த்தையை, அதாவது கிறிஸ்துவின் மூல உபதேசங்களைத் தேவன் நமக்குத் தருகிறார். இது குழந்தைகளுக்குரியது. பின்பு நாம் திரைக்குள்ளாகப் பிரவேசிப்பதற்கு நம்மைத் தகுதிப்படுத்தும் பலமான ஆகாரத்தை அவர் அளிக்கிறார். பலமான ஆகாரமானது, (i) பிதாவின் சித்தம் (யோவான் 4 : 34), (ii) பிள்ளைகளின் அப்பமாகிய தெய்வீக சுகம் (மத். 15 : 26), (iii) துன்பத்தின் அப்பமும் உபத்திரவத்தின் தண்ணீரும் (ஏசாயா 30 : 20) வெளிப்படுத்தும் பாடுகளின் ஜீவியம் போன்றவற்றைக் குறிக்கிறது.

ஞாயிறு மாலைத் தூது, எபிரெயர் 12 : 28 - இன் அடிப்படையில் அமைந்திருந்தது. அசைக்கப் படாத ராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ளும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். எனவே நாம் பயத் தோடு தேவனுக்கு ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ள வேண்டும். இந்த அசைவில்லாத ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ள நாம் பரிசுத்தஆவியினால் நம்மைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு, யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாயிருக்க வேண்டும். நாம் மகா பரிசுத்தமான விசுவாசத்தை அடைந்துகொண்டு, கர்த்தராகிய இயேசுவைப்போல சாந்தமும் மனத்தாழ்மையுமுள்ளவர்களாயிருந்து, தேவனோடும் எல்லா மனுஷரோடும் ஒப்புரவாக்கப்பட்டவர்களாயிருக்க வேண்டும். தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றுகளினால் நாம் அசைக்கப்படாதிருக்க வேண்டும். .நம்முடைய அல்பாவும் ஓமெகாவுமான இயேசு, கிருபையாக நமது கன்வென்ஷனை ஆரம்பித்து, அதை வெற்றிகரமாக முடித்துத் தந்தார். அந்நாட்களில் நாம் அனுபவித்த அவரது சிறிதும் பெரிதுமான அனைத்து இரக்கங்களுக்காகவும் அவருக்கு ஸ்தோத்திரம். 328 பேர் தண்ணீர் ஞானஸ்நான சத்தியத்துக்குக் கீழ்ப்படிந்தனர். பலர் பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டனர். அநேகர் சுகமாக்கப்பட்டனர். தங்க ளுடைய ஆதி நிலவரத்துக்குக் கொண்டுவரப்பட்டவர்களும் பலர் உண்டு. 39 சகோதரரும் 126 சகோதரிகளும் கைகளை வைக்குதலின் மூலமாக முழுநேரஊழியத்துக்கென்று தெரிந்துகொள்ளப்பட்டனர். 21 சகோதரர் மூப்பராக அபிஷேகம்பண்ணப்பட்டனர்.

யெகோவாயீரேயாகிய நம் தேவன் நம்முடைய கன்வென்ஷனின் ஆவிக்குரியதும் சரீரப்பிரகாரமானதும் பொருளாதார சம்பந்தமானதுமான அனைத்து தேவைகளையும் வற்றாத ஊற்றாகிய தமது மகிமையின் ஐசுவரியத்திலிருந்து ஆச்சரியமாகத்தந்தருளினார். சீயோனில் பெரியவராயிருக்கிற கர்த்தர் தமது ஜனங்கள் மத்தியிலும், தமது ஜனங்களுக்குள்ளும் பெரிய காரியங்களைச் செய்தார். அவர் மாத்திரமே உயர்த்தப்படுவாராக! மகிமைப்படுவாராக! அல்லேலூயா!!!

டு□ஏநடு□ஜ யுவ□□ஷலுழ

நான் ஒரு ரோமன் கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்டேன். என்னுடைய நாற்பத்தேழாவது வயது வரைக்கும் நான் வேதாகமம் வாசித்ததில்லை. நான் என் சிறுவயது முதல் மதுபானப் பிரியனாயிருந்தேன். முப்பது வருடங்கள் நான் குடிப்பழக்கத்திற்கு அடிமையாயிருந்தேன். குடிப்பழக்கத்தினால் என் கண் பார்வை மங்கலாகி விட்டது. கண்ணாடி உபயோகிக்காமல் எதையும் என்னால் வாசிக்க முடியாதிருந்தது.

என்னுடைய வேலை ஸ்தலத்தில் பெந்தெகொஸ்தே சபையின் விசுவாசி ஒருவர் புதிதாக என்னிடம் பழகலானார். "நான் எவ்வளவு முயற்சி செய்தாலும் குடிப்பழக்கத்தை என்னால் விட்டுவிடமுடியவில்லை. குடிப்பழக்கத்திலிருந்து எனக்கு விடுதலை கிடைக்க எனக்காக ஜெபியுங்கள்" என்று நான் அவரிடம் சொன்னேன். அப்பொழுது அவர், "உங்களுக்காக உபவாசித்து ஜெபிக்கிறோம். ஆலயத்திற்கு வாருங்கள்" என்றார். நான் சில மாதங்களாக சபை ஆராதனைகளுக்குச் சென்றுகொண்டிருந்தேன். ஒரு இரவு நான் ஒரு சொப்பனங் கண்டேன். அதில் தேவன் எனக்குத் தரிசனமானார். நான் அவருடைய பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, 'கர்த்தாவே, நான் பெரிய பாவி' என்று சொல்லிக்கொண்டே சத்தமாக அழுதுகொண்டிருந்தேன். அப்பொழுது தேவன் தம்முடைய இருகரங்களால் என்னுடைய இரு தோள்களையும் பிடித்துத் தூக்கி என்னை நிற்க வைத்தார். பின்பு நான் விழித்துக்கொண்டேன். அதன்பின்பு என் குடிப்பழக்கத்திலிருந்தும் என் பாவங்களிலிருந்தும் அற்புதமான விடுதலை எனக்குக் கிடைத்தது. 1985 - ஆம் ஆண்டு நான் இரட்சிக்கப்பட்டேன். 1986 - ஆம் ஆண்டு பத்ராவதியில் பெந்தெகொஸ்தே சபையில் நான் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டேன்.

"கர்த்தாவே, இனிமேல் நான் வாசிப்பதற்குக் கண்ணாடி உபயோகிப்பதில்லை; வேதாகமத்தை நான் நன்றாக வாசிக்கத்தக்கதாக எனக்கு நல்ல பார்வை தர வேண்டும்" என்று நான் ஜெபித்தேன். கர்த்தர் எனக்குத் தெளிவான பார்வையைத் தந்தார். இப்பொழுது எனக்கு வயது 62. கண்ணாடி உபயோகிக்காமலேயே நான் நன்றாக வாசிக்கிறேன்! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

நான் பத்ராவதியிலிருக்கிற பெரிய இரும்புத் தொழிற்சாலையில் (S.A.I.P.) வேலை செய்து கொண்டிருந்தேன். ஒருசமயம் அங்கு வேலை செய்துகொண்டிருந்த ஒருவருக்குக் கைவிரலில் அடிபட்டது. அது விஷமுள்ள ஒரு இரும்புக் கம்பியாயிருந்தது. அந்த விரல் அழுகி அவர் மூன்றே நாட்களில் மரித்து விட்டார். எனக்கு ஒரு சமயம் இடதுகை விரலில் அடிபட்டு, நகம் ஒன்று பெயர்ந்து போய் விட்டது. நான் விசுவாச வீட்டிற்குச் சென்றபோது தேவ ஊழியர்கள் எனக்காக ஜெபித்தார்கள். அதற்குப் பின்னர் நான் தினமும் ஜெபித்து எண்ணெய் பூசி வந்தேன். கர்த்தர் அற்புதமாய் என்னைச் சுகப்படுத்தினார்! அல்லேலூயா! நான்கு வருடங்கள் கழித்து, தொழிற்சாலையில் இரும்பு உருக்கு நிலையத்தில் (furnace) காய்ந்துகொண்டிருந்த விஷம் வாய்ந்த இரும்புத் தண்டு ஒன்று எனது இடது காலில் பட்டு சுட்டு விட்டது. 4"x3" அளவில் பெரிய ஒரு காயம் ஏற்பட்டு, சதையெல்லாம் வெந்துவிட்டது. அங்கிருந்த பெரிய மருத்துவர் கட்டாயமாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொல்லி என்னை அனுப்பி விட்டார்.

மறுநாள் நான் விசுவாச வீட்டிற்குச் சென்று அங்கிருந்த தேவ ஊழியரிடம் மருத்துவரின் கூற்றைத் தெரிவித்தேன். நான் அரசாங்க வேலை செய்துவந்ததினால் அதற்கு அடுத்த வாரம் நான் கண்டிப்பாக மருத்துவரிடம் காண்பிக்க வேண்டும்; இல்லையென்றால் வேலையை இழக்க நேரிடும் என்ற இக்கட்டான சூழ்நிலைக்குள்ளானேன். நான் தினமும் கண்ணீரோடு ஜெபித்துவந்தேன். ஊழியக்காரரும் எனக்காக ஜெபம்பண்ணினார்கள். அடுத்த வாரம் அந்த மருத்துவர் என் காலைப் பார்த்துவிட்டு மிகவும் ஆச்சரியத்தோடு "காயம் குணமாகியிருக்கிறது! அறுவை சிகிச்சை தேவையில்லை" என்று சொல்லிவிட்டார். கர்த்தர் இப்படியாக என்னுடைய பெரிய சுட்டகாயத்தை அற்புதமாக சுகப்படுத்தியதற்காக எல்லாத் துதி கனம் மகிமையையும் அவருக்கே செலுத்துகிறேன். என் ஆத்துமாவையும் சரீரத்தையும் குணமாக்கிப் பாதுகாத்து வருகிற தேவாதி தேவனுக்கே ஸ்தோத்திரம். அல்லேலூயா!

சகோ.

ஏசுதாஸ்,

பெங்களூர்.

புறாக்களின் புதிய நண்பன்

இந்தியாவில் நாம் எங்கும் சாதாரணமாகக் காணக் கூடிய ஒரு பறவை காகம் ஆகும். அதன் சத்தத்தை நாம் எங்கும் கேட்கிறோம். இக்காகங்களில் ஒன்று ஒருநாள், ஒரு கூட்டம் புறாக்கள் சந்தோஷமாக இரை தின்றுகொண்டு இருப்பதையும், பூரணமான ஒற்றுமையுடனும் அன்புடனும் உறவாடிக் கொண்டிருப்பதையும் பார்த்தது. இக்காட்சி அதனைக் கவர்ந்துகொள்ளவே, அது அப்புறாக் கூட்டத்துடன் சேர்ந்துகொள்ள விரும்பியது. தான் அவைகளோடு சேர்ந்துகொள்ள வேண்டுமாயின், தானும் அவைகளைப் போல் தோற்றமளிக்க வேண்டுமே என அது சற்று நேரம் யோசித்தது. தன்னுடைய இறகுகள், வெண்மை அல்லது இளம் சாம்பல் நிறமான அப்புறாக்களின் இறகுகளின் நிறத்தினின்று முற்றிலும் வேறுபட்டு, கருமை நிறமாயிருப்பதை அது முதலாவது கண்டுபிடித்தது. ஆதலால் அது ஒரு வெண்ணிற சாம்பற்குவியலைக் கண்டுபிடித்து தன் இறகுகளும் மேற்புறம் முழுவதும் சாம்பல் நிறமாகக் காணப்படும்படி அச்சாம்பற்குவியலில் படுத்து உருண்டது. அதன்பின் அது அந்தப் புறாக்கூட்டத்துடன் போய்ச் சேர்ந்தது. அவைகளின் உடனடியான பிரதிக்கிரியை என்ன தெரியுமா? தாங்கள் அழைக்காமல் தங்கள் கூட்டத்துடன் வந்து சேர்ந்திருக்கும் அந்தப் புதியநபரை விட்டுவிட்டு எல்லாப் புறாக்களும் சேர்ந்து மொத்தமாகப் பறந்து விட்டன.

தன் முயற்சியில் தோல்வியுற்ற காகம் மனந்தளரவில்லை. அது அப்புறாக்களின் நடையை உற்றுக் கவனித்தது. தன்னுடைய நடை புறாக்களின் நடையிலிருந்து வித்தியாசமாயிருப்பதை அது உணர்ந்தது. தான் தனது இரு கால்களையும் ஒன்றாகச் சேர்த்து வைத்துக் குதித்துக் குதித்து நடப்பதையும் புறாக்களோ ஒன்றன்பின் ஒன்றாக அடியெடுத்து வைத்து நடப்பதையும் அது கவனித்தது. இந்தப் புதிய நடையை ஓரளவிற்குப் பயிற்சித்த பின்பு அந்தக் காகமானது ஒருநாள் புறாக்கள் நடப்பதுபோல போலியாக, கவனமாக நடந்து, அந்தப் புறாக்கள் இருந்த கூட்டத்திற்கு வந்தது. அது தன் முயற்சியில் ஓரளவு வெற்றியடைந்து, அந்தப் புறாக்களுடன் சேர்ந்துகொண்டது. அப்புறாக்கள் தனக்குப் பகிர்ந்து கொடுத்த தானியத்தை அவற்றுடன் சேர்ந்து அது தின்று கொண்டிருக்கையில், கொஞ்சம் தூரத்திலிருந்த ஒரு பிணத்தின் வாசனை அதற்கு எட்டியது. உடனே அது சற்றும் தரித்திருக்கக் கூடாமல், அந்தப் புறாக்கள் தனக்குப் பகிர்ந்து கொடுத்திருந்த தானியத்தையும் விட்டுவிட்டு, பறந்துபோய் அந்தப் பிணத்தின் மேல் உட்கார்ந்து அதைத் தின்பதில் அதிக சந்தோஷம் அடைந்தது. அடுத்த நாள் அது தன் புதிய நண்பர்களைச் சேர்ந்துகொள்ள விரும்பி, அவை இருந்த இடத்திற்கு விரைந்தது. அது தன் மேற்புறமெங்கும் சாம்பல் நிறத்துடன் வந்திருந்தும், ஏறக்குறைய புறாக்களைப் போலவே நடக்கக் கூடியதாயிருந்தும், புறாக்கள் தன்னைச் சேர்த்துக் கொள்ள ஐயப்பட்டதை நன்கு உணர்ந்தது. தன்னுடைய ஆகாரப் பழக்கம் அவைகளுக்கு வெறுப்புண்டாக்கியிருக்கிறது என்பதை உணர்ந்த அந்தக் காகம், அந்த நாளில், தான் புறாக்கூட்டத்தோடு சேர்ந்து மகிழ்வதை விட்டு எந்த ஒரு பிணமும் தன் மனதைத் திருப்ப இனி இடமளிப்பதில்லை என்று உறுதியாகத் தீர்மானித்தது. அதன் பின் அது மீண்டும் நாளடைவில் புறாக்களுடன் நட்புகொண்டு அவற்றுடன் சேர்ந்துகொண்டது.

ஒருநாள் புறாக்களும் புதிய நண்பனும் ஒருமித்து ஒரு மரத்தினடியில் கூடி, தங்கள் ஆகாரத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, அவற்றின் தலைக்கு மேலே உள்ள மரக்கிளையில் மிகவும் கருமையான ஒரு காகம் வந்தமர்ந்தது. அது கீழே பார்த்தபோது, அங்கே உணவருந்திக் கொண்டிருப்பது தன்னுடைய சகோதரன் என்பதைக் கண்டு கொண்டு, ‘கா, கா’ என்று தொடர்ச்சியாகக் கரைய ஆரம்பித்தது. அப்போது புறாக்களின் கூட்டத்திலிருந்த புதிய நண்பன் தன்னையே மறந்து ‘கா, கா, கா’ என்று கரைந்து அதற்கு மறுமொழி கொடுத்து விட்டது. அவ்வளவுதான்! அதன் மாய்மாலம் கண்டுபிடிக்கப்படவே அது என்றென்றைக்குமாகப் புறாக்கூட்டத்தினால் துரத்தி விடப்பட்டது. புறாக்களோடு நட்புகொள்ள விரும்பிய காகம் மிகப் பாடுபட்டு முயற்சி செய்து புறம்பான தன் நிறத்தையும், நடையையும், ஆகாரத்தையும் போலியாக மாற்றிக்கொண்டபோதிலும், தன் உள்ளான சுபாவத்தை மாற்றிக்கொள்ளாதபடியினால் ஒருநாள் அதன் உண்மை ரூபம் அது யார் என்பதைக் காட்டிக் கொடுத்துவிட்டது. அந்தோ பரிதாபம்!

அருமைச் சிறுவரே, வாலிபரே! இச்சிறு கதை நமக்குக் கற்பிப்பது யாது? ஒரு உண்மையான கிறிஸ்தவனை நாம் குறிப்பாக நான்கு விஷயங்களில் இனங்கண்டு கொள்ளலாம்.

முதலாவதாக, புறாச்சிறகுகள் தேவ சமுகத்தில் இளைப்பாறும் அனுபவத்தைக் காட்டுகிறது. தாவீது, “ஆ, எனக்குப் புறாவைப்போல் சிறகுகள் இருந்தால், நான் பறந்துபோய் இளைப்பாறுவேன்” என்கிறான் (சங். 55 : 6). ஒரு மெய்க் கிறிஸ்தவன் பலவிதமான பாடுகளின் மத்தியில் தேவனுடைய சமுகத்தில் இளைப்பாறக் கற்றுக்கொள்ளுகிறான். மேலும் புறாவின் வெண்ணிறச் சிறகுகள், ஆவியில் கபடமில்லாத, துப்புரவான ஒரு ஜீவியத்தை வெளிப்படுத்துகின்றன. “எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கியவான்” (சங். 32 : 2). புறாக்களைப்போலக் கபடற்றவர்களாயிருங்கள் (மத். 10 : 16) என்று நமதாண்டவர் நமக்குக் கற்பித்திருக்கிறார்.

இரண்டாவதாக, புறாக்கள் அடிமேல் அடிவைத்துக் கவனமாய் நடக்கின்றன. விவேகி தன் நடையின்மேல் கவனமாயிருக்கிறான் (நீதி. 14 : 15). “கால் துரிதமானவன் தப்பி நடக்கிறான்”; “நிதானமாய் நடக்கிறவன் கர்த்தருக்குப் பயப்படுகிறான்” (நீதி. 19 : 2 ; 14 : 2). “உத்தமமாய் நடக்கிறவன் பத்திரமாய் நடக்கிறான்; கோணலான வழிகளில் நடக்கிறவனோ கண்டுபிடிக்கப்படுவான்” (நீதி. 10 : 9).

மூன்றாவதாக, புறாக்கள் அசுத்தமான இடத்தில் நிற்பதுமில்லை; அசுத்தமான யாதொன்றையும் புசிப்பதுமில்லை. அவை அசுத்தத்தைச் சகிக்கமாட்டா. அவ்வாறே ஒரு மெய்க்கிறிஸ்தவனும் பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகி, தன்னைச் சுத்தவானாகக் காத்துக் கொள்கிறான் (I தெச. 5 : 22 ; I தீமோ. 5 : 22). பூமியில் ஜலம் குறைந்ததோ என்றறியும்படி நோவாவின் பேழையினின்று அனுப்பப்பட்ட காகம், போகிறதும் வருகிறதுமாயிருந்தது. ஜலத்தில் மிதந்து கொண்டிருந்த ஏராளமான சடலங்கள் அது தன் கால் வைத்து இளைப்பாறுவதற்கும், பசியாற்றுவதற்கும் ஏற்ற இடமாயிருந்தது. அதே சூழ்நிலையில் அதற்குச் சற்று பின்னர் அனுப்பப்பட்ட புறாவோ, தன் உள்ளங்கால் வைத்து இளைப்பாற இடங்காணாமல், நோவாவினிடத்திற்கே திரும்பி வந்தது என நாம் வாசிக்கிறோம் (ஆதி. 8 : 7 - 9). ஆத்தும நேசர் கன்மலை வெடிப்புகளிலும் சிகரங்களின் மறைவிடங்களிலும் தங்குகிற புறாவுக்குத் தம் மணவாட்டியை ஒப்பிடுகிறார். நாம் பரிசுத்தத்தை வாஞ்சித்து, உன்னதமான ஆவிக்குரிய ஜீவியம் செய்கிறவர்களாயிருக்க வேண்டும். “சுத்தமுள்ளவனோ தன் கிரியையில் செம்மையானவன்” (நீதி. 21 : 8).

கடைசியாக, புறாக்களின் சத்தம் காகங்களின் சத்தத்தினின்று முற்றிலும் வேறுபட்டது. “துக்கித்துக் கூப்பிடுகிற பள்ளத்தாக்குகளின் புறாக்கள்” (எசே. 7 : 16) என்று புறாக்களின் சத்தத்தைக் குறித்து வேதாகமம் கூறுகிறது. இது, நொறுங்குண்ட உள்ளத்துடன் ஜெபிக்கும் அனுபவத்தைக் குறிக்கும். மணவாளனாகிய இயேசு இந்தச் சத்தத்தில் மிகவும் பிரியங்கொள்கிறார். ஆகவே தான் மணவாளன், “காட்டுப்புறாவின் சத்தம் ... கேட்கப்படுகிறது” என்றும், “என் புறாவே! ... உன் சத்தத்தை நான் கேட்கட்டும்; உன் சத்தம் இன்ப”மாயிருக்கிறது என்றும் கூறி, மணவாட்டியின் ஜெப ஜீவியத்தின் அழகை வருணிக்கிறார் (உன். 2 : 12, 14). ஆனால் காகத்தின் சத்தமோ பக்தி விருத்திக்கேதுவல்லாத, வீணான, பிரயோஜனமற்ற வார்த்தைகளைக் குறிக்கிறது. அலப்புகிற மூடன் விழுவான். தன் உதடுகளை அடக்குகிறவன் புத்திமான்; சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற் போகாது (நீதி. 10 : 10, 19). மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் (மத். 12 : 36). ஆம்! இக்கதையிலும்

காகத்தின் சத்தமே முடிவிலே அதைக் காட்டிக் கொடுத்துவிட்டது. பிள்ளைகளே! கர்த்தர் விரும்புகிற ஜெப சத்தம் உங்களில் பிறக்கிறதா? அல்லது வம்பு, புத்தியீனமான பேச்சு, பரியாசம், குறை கூறுதல், முறுமுறுப்பு போன்ற அந்நிய சத்தங்கள் உங்களிலிருந்து பிறக்கிறதா? சிந்திப்பீர்!

நண்பனே! தங்கள் பலகணித் துவாரங்களுக்குத் தீவிரிக்கிற புறாக்களைப் போல பரிசுத்தவான்கள் சடிதியாக மேகங்கள்மேல் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் (ஏசாயா 60 : 8). அப்பொழுது நீயும் அக்கூட்டத்தில் காணப்படுவாயா? 'நான் உன்னை அறியேன்' என்று கூறி, அந்நாளில் கர்த்தர் உன்னைப் புறக்கணித்து விடாதபடிக்கு, உன் மாய்மால வாழ்க்கையை விட்டுவிட்டு, துப்புரவான ஜீவியம் செய்ய இன்றே தீர்மானிப்பாயாக.

எருசலேமின் அலங்கமும் வாசல்களும்

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

3. பழைய வாசல் (OLD GATE)

ஆதி அனுபவங்கள்:

பழைய வாசல், அப்போஸ்தல உபதேசங்களாகிய பூர்வ பாதையைக் குறிக்கிறது என சென்ற இதழில் நாம் கண்டோம். மேலும் அது, நம் தனிப்பட்ட ஜீவியத்தில் ஆதியில் நாம் தேவன்பேரில் கொண்டிருந்த அன்பு, விசுவாசம், நம்பிக்கை போன்றவற்றையும் குறிக்கும். "நீ வாழ்க்கைப்பட்டபோது உனக்கிருந்த நேசத்தையும் நினைத்திருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே. 2 : 2). எபேசு சபையார் கர்த்தருக்காக அதிகமான கிரியைகளைச் செய்துவந்த போதிலும், "ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு" என ஆவியானவர் அவர்களிலிருந்த ஒரு குறையைச் சுட்டிக்காட்டுகிறார் (வெளி. 2 : 4). மற்ற எல்லா நற்பண்புகளும் நற்கிரியைகளும் அவர்களில் இருந்ததில் அவர் திருப்தியடைந்து விடவில்லை. மேலும், "நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்" (எபி. 3 : 14) என்றும், "அவர்கள் ...முதலில் கொண்டிருந்த விசுவாசத்தை விடுவதினாலே, ஆக்கினைக்குட்படுவார்கள்" (I தீமோ. 5 : 11, 12) என்றும் எழுதப்பட்டுள்ளது. நாம் நமது ஆவிக்குரிய ஜீவியத்தைக் கட்டத் துவங்கிப் பல வருடங்கள் ஆகிவிட்டமையால் நம்முடைய ஆதி அனல் குன்றி, நம் ஆதி அனுபவங்களாகிய 'பழைய வாசல்' பாழடைந்து போயிருக்குமென்றால், அதைத் தீவிரமாகச் செப்பனிடுவோமாக. கிறிஸ்து என்னும் அஸ்திபாரத்தின் மேல் நாம் ஒரு மாளிகையாகக் கட்டியெழுப்பப்பட்டு வருகிறோம். ஒரு கட்டடத்தில் ஏற்கனவே கட்டப்பட்ட சில பகுதிகள் பாழடைந்து போயிருக்க, அவற்றைப் பொருட்படுத்தாமல், அவற்றின் மேல் புதியவைகளைச் சேர்த்து இணைத்துக் கட்ட முற்பட்டால் முழுக் கட்டடமும் விழுந்துபோகும். முதலாவதாக நாம் பழையவைகளைச் சீர்ப்படுத்திக் கொண்டு, புதியவைகளை அவற்றின்
மேல் சேர்த்துக் கட்டியெழுப்ப வேண்டும். அவ்வாறே நம் ஜீவியத்திலும் ஆதி அனுபவங்களைப் புதுப்பித்துக்கொண்டு, அவற்றின்மேல் புதிய ஆவிக்குரிய அனுபவங்களையும் நாம் கூட்டிக் கட்டி யெழுப்பிக்கொண்டு வளருவோமாக ! "அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (எபே. 2 : 22).

பழைய வாசலைக் கட்டியவர்கள்:

பழைய வாசலை யோய்தாவும் மெசுல்லாமும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

யோய்தா ___ 'யோய்தா' என்னும் பதத்திற்கு, 'தேவன் அறிகிறார்' என்று அர்த்தமாம். கர்த்தர் தம்முடையவர்களை அறிவார் (II தீமோ. 2 : 19). "நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்" என்று நம்முடைய நல்ல மேய்ப்பர் கூறுகிறார் (யோவான் 10 : 15). தேவனால் அறியப்பட்டவர்கள் அல்லது தேவனுக்குச் சொந்தமானவர்கள் மட்டுமே பூர்வ பாதைகளில் வழிநடக்க இயலும். மற்றவர்களுக்கோ இப்பாதையும் இந்த அப்போஸ்தல உபதேசங்களும் மறைபொருளாயிருக்கும். மேலும், கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார் என்று நாம் வாசிக்கிறோம் (சங். 11 : 5). கர்த்தரால் சோதித்தறியப்பட்டவர்களான நீதிமான்களே இப்பூர்வ பாதையில் வழிநடக்க இயலும். ஆபிரகாமைத் தேவன் சோதித்து, "நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்" என்றார் (ஆதி. 22 : 12). அவனுடைய வாழ்நாளெல்லாம் தேவன் அவனை விசுவாசப் பாதையில் வழிநடத்தினார். கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்கு அவர் தம் வழியைப் போதிக்கிறார் (சங். 25 : 12). "நான் நடக்க வேண்டிய வழியை எனக்குக் காண்பியும்;... உமக்குப் பிரியமானதைச்செய்ய எனக்குப் போதித்தருளும், ... உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக" என்று தாவீது உத்தம இருதயத்தோடு ஜெபிக்கிறான் (சங். 143 : 8, 10); "நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்" என தேவன் அவனுக்கு வாக்குப் பண்ணியிருந்தபடியே முடிவுபரியந்தம் அவனை வழி நடத்தினார் (சங். 32 : 8). அவர் தாவீதின் உத்தம இருதயத்தையும் உண்மையான வாஞ்சையையும் அறிந்திருந்தபடியினால் அவனை முடிவுபரியந்தம் செம்மையான பாதையில் வழி நடத்தினார். தன் வாழ்நாளெல்லாம் அவன் தேவனுடைய சித்தம் செய்கிறவனாயிருந்தான். நாம் பூர்வ

பாதைகளில் தேவனால் வழிநடத்தப்படும்படி தேவனால் அறியப்பட்டவர்களாயும் அவருக்குச் சொந்தமானவர்களாயும் இருப்போமாக. "இந்தத் தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்" (சங். 48 : 14).

மெசுல்லாம் ___ 'மெசுல்லாம்' என்றால் 'சிநேகிதன்' என்று பொருள். நாம் தேவனுக்குச் சிநேகிதராய் இருந்தால் மட்டுமே நம் ஜீவியத்தின் பழைய வாசலைக் கட்டியெழுப்பிப் பாதுகாக்க முடியும். சிநேகிதர் ஒருவரோடொருவர் நெருங்கிய ஐக்கியமுள்ளவர்கள்; திறந்த மனமுள்ளவர்கள்; ஒருவர்மேல் ஒருவர் நம்பிக்கையுள்ளவர்கள். எல்லா சந்தர்ப்பங்களிலும் தேவனை விசுவாசித்த ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதன் என்னப்பட்டான் (யாக். 2 : 23; ஏசாயா 41 : 8). "நான் செய்யப் போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?" என்று கர்த்தர் கேட்கிறார். மேலும், "சுத்த இருதயத்தை விரும்புகிறவனுடைய உதடுகள் இனிமையானவைகள்; ராஜா அவனுக்குச் சிநேகிதனாவான்" என நாம் வாசிக்கிறோம் (நீதி. 22 : 11). தேவன் சிநேகிக்கிற பரிசுத்தத்தை நாமும் சிநேகிப்போமானால், சுத்த இருதயமுள்ளவர்களாயிருந்து ராஜாதிராஜாவாகிய அவருக்குச் சிநேகிதராகலாம். இவ்விதம் தேவனுக்குச் சிநேகிதராயிருக்கும்படி, அவர் விரும்புகிற மேன்மையான சுபாவங்களை நாமும் பெற்றுக்கொள்ள வாஞ்சிப்போமாக. கர்த்தராகிய இயேசு தம் சீஷர்களை நோக்கி: "நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்" என்கிறார் (யோவான் 15 : 15). தேவன் தமது ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார் (ஆமோஸ் 3 : 7). ஆதிமுதல் மறைக்கப்பட்டிருந்த தேவ இரகசியங்களைத் தேவன் தமது பரிசுத்த அப்போஸ்தலருக்கும் அவர்கள் மூலமாகச் சபைக்கும் வெளிப்படுத்துகிறார் (எபே. 3 : 11). எல்லாவற்றையும் வெறுத்துவிட்டு, கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றும் ஊழியர்களைக் கர்த்தர் தம் சிநேகிதர் என உரிமைபாராட்டுகிறார் (லூக்கா 12 : 1, 4). நாம் அவர்களோடு ஐக்கியம் வைத்துக்கொள்ளும்போது, அவர்கள் மூலமாகத் தேவன் நம்மைப் பூர்வ பாதைகளில் நடத்துவார் (I யோவான் 1 : 3).

சிநேகிதர் இருவர் வழிநடந்து போகும்போது அவர்கள் ஒருவரோடொருவர் திறந்த மனதுடன் உரையாடிக் கொண்டுபோவது போல, நாமும் இவ்வனாந்தரப் பாதையில் நம் கர்த்தரோடு உரையாடிக்கொண்டும், அவர் சத்தம் கேட்டுக் கொண்டும் செல்ல வேண்டும். ஆபிரகாமைத் தேவன் அழைத்தது முதல் அவன் பரதேசியாய் நடந்துகொண்டிருந்த அவனுடைய வாழ்நாளெல் லாம் அவனுக்கு இந்த அனுபவமிருந்தது. உன் சந்ததி வானத்து நட்சத்திரங்களைப்போல் திரளாயிருக்கும் என்றுரைத்துப் பல ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், தன் சிநேகிதரான கர்த்தரின் வார்த்தைகளின் மேல் அவனுக்குச் சந்தேகம் வரவில்லை. அவனுக்குச் சொந்தமென்று வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தில் அவன் தன் ஜீவிய காலமெல்லாம் பரதேசியாகவே சஞ்சரித்தான். என்றாலும், கர்த்தரின் வார்த்தைகள் அவனுக்கு உண்மைப்பொருளாகவே இருந்தன. ஈசாக்கைப் பலியிடும்படி கர்த்தர் அவனிடம் சொன்னபோது, அவன் நினைத்திராத கஷ்டமான காரியத்தைச் செய்யும்படி தேவன் அவனிடத்தில் எதிர்பார்த்த அவ்வேளையிலுங்கூட அவனுடைய முகம் மாறவில்லை; அதுவரை கர்த்தருக்கும் அவனுக்குமிடையே இருந்துவந்த உறவும் மாறிப்போகவில்லை. எப்போதும் கர்த்தரோடு அவனுடைய மனம் இசைந்திருந்தது. தன் சிநேகிதரான கர்த்தரின் சொல் கேட்டு, தன் ஒரேபேறான நேசகுமாரனை வெட்டவும் அவன் கத்தியை ஓங்கி விட்டான் ! ஆகவே தேவன் அவனைத் தம் சிநேகிதன் என்று உரிமைபாராட்டத் தயங்கவில்லை. ஒரு சிநேகிதன் போல நம்மோடு நடக்கிற கர்த்தரை நாம் எத்தனை முறை சந்தேகித்து, கேள்வி கேட்டு, முறுமுறுத்து, அவரோடுள்ள இனிய உறவை முறித்துக் கொண்டிருக்கிறோம்! பூர்வ பாதைகளில் அவர் நம்மை நடத்த விரும்பும்போது, இவ்வழி வேண்டாம் எனக் கூறி, எத்தனை முறை நாம் நமக்கு இலகுவானதாய்த் தோன்றுகிற சுயவழிகளைத் தெரிந்துகொண்டிருக்கிறோம் ! "சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்" என்று ஞானி கூறுகிறான் (நீதி. 17 : 17). அருமையானவர்களே ! நமக்கு விருப்பமான பாதைகளில் அவர் நம்மை நடத்தும்போது அவரை நண்பராகவும், நம் விருப்பத்திற்கு மாறான பாதைகளில் அவர் நம்மை நடத்தும்போது அவரை நம் விரோதிபோலவும் பாவித்து நடந்துகொண்ட சந்தர்ப்பங்கள் எத்தனை ! இவற்றுக்காக மனஸ்தாபப்பட்டு, கர்த்தரோடு நல்மனம் பொருந்தி, பூர்வ வழிகளில் அவரோடு நடக்க நாம் தீர்மானிப்போமாக. நாம் பிரியமான பிள்ளைகளைப் போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காகத் தம்மை ஒப்புக்கொடுத்து, நம்மில் அன்புகூர்ந்தது போல, நாமும் அன்பிலே நடந்துகொள்ளுவோமாக (எபே. 5 : 1, 2). நம்முடைய ஜீவியத்தில் 'பழைய வாசல்' பாழாக்கப்பட்டுக் கிடக்குமாயின், அதை மீண்டும் கட்டியெழுப்பும்படி நாம் விழித்தெழும்புவோமாக.

ரோமருக்கு எழுதிய நிருபத்தின் விளக்கவுரை

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

" இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்" (5 : 1).

முந்தின அதிகாரத்தின் தொடர்ச்சியாக இந்த வசனம் எழுதப்பட்டிருப்பதை நாம் காணலாம். முன்புஆபிரகாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்ட விஷயத்தை நாம் கண்டது போல, இப்போது புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் விசுவாசத்தைப் பின்பற்றுவதினால் நாம் தேவ நீதியைப் பெற்றுக்கொள்கிறோம். நாம் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தேவ நீதியை அடைந்துகொள்ளுவதைக் காண்பிக்கும்படியாக, II கொரிந்தியர் 5 : 21 - இல், "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு" என்று எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நாமும் தேவ நீதியை அடைந்து, தேவனுடைய நீதியோடு ஒப்புரவாக்கப்படுகிறோம் என்பதே இதன் கருத்து. பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்ட பிறகும், மனதில், தேவன் தன்னைச் சத்துருவாக எண்ணுவாரோ, அல்லது, தான் செய்த பாவத்திற்கு ஏற்ற நியாயத்தீர்ப்பைச் செலுத்துவாரோ என்ற பயமும் கலக்கமும் ஒருவரது மனச்சாட்சியில் உண்டாவது இயல்பாகும். தேவதூதர்கள் குற்றமில்லா (innocent) நிலையில் சமாதானத்தை அனுபவிக்கிறார்கள். ஆனால்

நாமோ, கர்த்தராகிய இயேசு நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினைத்தீர்ப்பை தம்மேல் ஏற்று பாவ நிவாரணபலியானார் என்பதை விசுவாசித்து, கலக்கமில்லா சமாதானத்தை நம் மனச்சாட்சியில் அனுபவிக்கிறோம். விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் என்ற அனுபவத்தின் முதற்பலன் இவ்விதமான உள்ளான இளைப்பாறுதலே ஆகும். இதுவே தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் என்பதின் கருத்தாகும்.

“ அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டுகிறோம்” (5 : 2).

தேவனுடைய நீதியை நாம் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் விசுவாசத்தினால் அடைந்துகொள்வ தினாலே தேவனுடைய மகிமையையும் அடைந்துகொள்வோம் என்ற விசுவாசம் நமக்கு உண்டாயிருக்கிறது. ‘மேன்மைபாராட்டுகிறோம்’ என்று இங்கு அப். பவுல் எழுதியிருப்பதன் கருத்து, நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே அல்ல, கிறிஸ்து இயேசுவின் மூலமாய் தேவநீதியில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கும் நாம் ஏற்ற காலத்தில், அதிசீக்கிரமாய் பரலோகத்தின் சகல மகிமையையும், ஆசீர்வாதங்களையும் அனுபவிக்கப்போகிறோம் என்ற நம்பிக்கையில் சந்தோஷப்படுகிறோம் என்பதே ஆகும்.

“ அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மைபாராட்டுகிறோம். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்தஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது” (5 : 3 - 5).

நாம் இவ்வசனங்களைத் தெளிவாய் விளங்கிக்கொள்வதற்காக, முதலாவது 5 - ஆம் வசனத்தை விளங்கிக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. நம்முடைய ஜீவியத்தின் நோக்கம், தேவமகிமையை அடைந்துகொள்ள வேண்டும் என்பதேயாகும். தேவனுடைய மகிமைக்கு இன்னும் ஒரு சிறு விளக்கத்தை நாம் கொடுக்கலாம். தேவமகிமை என்பது நம்மைப் பற்றி தேவனுக்கு அவருடைய மனதிலிருக்கும் பூரண சித்தமேயாகும். நாம் அவரைப்போல மாற்றப்பட வேண்டுமென்பதே இந்தச் சித்தமாகும். இதைப் பற்றிக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், “பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரணசற்குணராயிருக்கக்கடவீர்கள்” என்று கூறியிருக்கிறார் (மத். 5 : 48). அப். பவுலும் I தெசலோனிக்கேயர் 4 : 3 - இல், “நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது” என்று எழுதியிருக்கிறார். “நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்” என்று பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களோடு சொன்னதை பேதுரு அப்போஸ்தலனும் தன்னுடைய நிருபத்தில் குறிப்பிட்டிருக்கிறார் (I பேதுரு 1 : 16). இதைப் போன்ற எத்தனையோ வசனங்களைப் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் நாம் காணக் கூடும். நாம் மகிமையின் மேல் மகிமையடைந்து தேவமகிமைக்கொப்பாய் அல்லது தேவனுடைய சாயலுக்கொப்பாய் மறுரூபமாக்கப்படுகிறோம் என்று II கொரிந்தியர் 3 : 18 - இல் அப். பவுல் கூறுகிறார். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் தேவனுடைய மகிமைக்கொப்பாய் நாம் மாற்றப்படுவதே அல்லது அந்த நிலைமையை அடைந்துகொள்ளும்படி வாஞ்சிப்பதே ‘நம்பிக்கை’ என்ற வார்த்தையினால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நம்பிக்கை என்பது, நாம் பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ளும்போதே தேவ அன்பினால் நிரப்பப்படுவது மாத்திரமல்ல, தேவனுடைய மகிமையை அடைந்துகொள்வோம் என்கிற ஓர் பெரிய எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் நம்முடைய உள்ளத்தில் சிருஷ்டிக்கப்படுவதுமேயாகும். இந்த நம்பிக்கையில் நாம் வளர்ந்து நம்பிக்கையின் முடிவாகிய தேவமகிமையை அடைந்துகொள்ள வேண்டும். பரிசுத்தஆவியின் அபிஷேகத்தினால் இந்த நம்பிக்கையை நாம் பெற்றுக்கொள்கிறோம். “அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது” என்று எழுதியிருப்பதின் நோக்கம், இவ்விதமாய் நம்முடைய உள்ளத்தில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் நம்பிக்கை நம்மை ஏமாற்றமடையச் செய்யாது என்பதே. ஏனெனில் தேவ மகிமையை அடைந்துகொள்வோம் என்ற நம்பிக்கைக்கு நமது உள்ளத்தில் பரிசுத்த ஆவியின் மூலமாய் ஊற்றப்பட்டிருக்கும் தேவ அன்பே சாட்சியாயிருக்கிறது.

இந்த நம்பிக்கை வளர்ந்து பெருகுவதற்கு பரிசுத்தஆவியின் அபிஷேகமும், உபதேசங்களும் மிகவும் முக்கியமானவையென்றாலும் ஒரு சில ஆவிக்குரிய அனுபவங்களும் நமக்கு அவசியமாயிருக் கின்றன. ஆகவே தேவன் சில அனுபவங்கள் வழியாய் நம்மை நடத்துவதை நாம் காணலாம். பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெற்றவுடனே அதை ஒரு ரோஜா பூ மெத்தையென்றும், இனி தங்களுடைய ஜீவியத்தில் அனுபவிப்பதற்கு ஒன்றுமில்லை, எல்லாம் முடிந்துவிட்டது என்றும் நினைத்து, பரிசுத்தஆவியினுடைய அபிஷேகத்தை வெறும் எழுப்புதலும் சந்தோஷமும் மாத்திரமே என அநேகர் கருதி வருகின்றனர். ஆனால் நம்முடைய வளர்ச்சிக்கென தேவன் நம்மை முதலாவது உபத்திரவம் என்னும் குகையில் கொண்டுவந்து வைக்கிறார். இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டவுடனே சிலர் தாங்கள் அபிஷேகம் பெறுவதற்கு முன்னே சந்தோஷமாயும் சுயாதீனமாயும் நடந்ததாகவும், இப்போது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற பின்புதான் தங்களுக்கு இப்படிப்பட்ட உபத்திரவங்களும் கஷ்டங்களும் நேரிடலாயின எனவும் கூறி, இவ்வித உபதேசங்களும், இவ்வித சபையும், பரிசுத்தஆவியின் அபிஷேகமும், இப்படிப்பட்டவர்களுடைய ஐக்கியமும் சரியல்ல என்று சொல்லி, தங்களுடைய பழைய சபைக்கும் பழைய அனுபவத்திற்கும் திரும்பி விடுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் ஆபிரகாமின் விசுவாசத்தைப் பின்பற்றாதவர்கள். இவர்கள் ஆபிரகாமை விட்டுப் பிரிந்துபோன லோத்தைப் போன்ற தரிசனமற்றவர்களே. தேவன் நம்மை உபத்திரவத்தின் குகையில் வைப்பதின் நோக்கம், நம்முடைய விசுவாசம் பரிசோதிக்கப்பட்டு பசும் பொன்னைப்போல மகா பரிசுத்தமான விசுவாசமாய்த் துலங்க வேண்டும் என்பதே. இந்தச் சத்தியத்தை வெளிப்படுத்தும்படி, “அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக

விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" என்று அப். பேதுரு கூறுகிறார் (I பேதுரு 1 : 7). நம்முடைய விசுவாசம் உபத்திரவமாகிய அக்கினியினாலே சோதிக்கப்பட வேண்டுமென்று எழுதியிருப்பதினால், நம்முடைய விசுவாசம் சாதாரண விசுவாசமல்ல என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். ஆபிரகாமின் விசுவாசமும் இவ்விதமாகவே பரிசோதிக்கப்பட்டதாக நாம் காணலாம்..

கு□டகு~ர □ஷ□□டு

உலகம் ஒரு முடிவை நோக்கி விரைந்துகொண்டிருக்கிறது என்பதை தேவஜனங்களாகிய நாம் நன்கறிவோம். விஞ்ஞானிகளும் வானசாஸ்திரிகளுங்கூட இவ்வுண்மையை உறுதிப்படுத்தி வருகிறார்கள். இனிவரும் நித்திய ராஜ்யத்திற்காக நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ளும்படி மிக சொற்ப நாட்களே நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறிருக்க, கிருபையின் காலத்தின் கடைமுனையை வந்தெட்டியிருக்கும் தேவஜனங்களாகிய நம் இன்றைய அவசரத் தேவை யாது? சபையில் அநேகரின் அனல் குன்றி, அன்பு தணிந்து, ஒளிமங்கி வரும் இந்நாட்களில், நம் அவசரத் தேவை 'ஒரு மாபெரும் எழுப்புதலே' என நாம் விடை பகரக்கூடும். அது உண்மையே. ஆயினும், அந்த எழுப்புதலுக்கு வழிவகுப்பது யாது?

இஸ்ரவேலர் தேவனுடைய வழிகளை விட்டு விலகி, அவருக்குக் கோபமூட்டினபோது, அவர்கள் அந்நிய தேசங்களில்சிறைப்பட்டுப்போய் துயரத்தை அனுபவித்துவந்தனர். அவர்களுடைய தேவாலயம் முற்றிலும் தீக்கிரையாக்கப்பட்டுப் போயிற்று! எருசலேமின் அலங்கம் இடிக்கப்பட்டு, மாளிகைகளெல்லாம் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டு, அதின் திவ்வியமான பணிமுட்டுகளெல்லாம் அழிக்கப்பட்டன. பாலும் தேனும் ஓடுகிற தேசம் பாழும் வறண்ட நிலமுமாயிற்று! சிங்காரமான தேசம் உருக்குலைந்து போயிற்று ! சிறைப்பட்டுப்போன தேவஜனங்கள் மீண்டும் தங்கள் தேசத்தைக் காணக்கூடும் என்றோ, மீண்டும் ஒரு ராஜ்யமாகத் தாங்கள் எழும்பக்கூடும் என்றோ, மீண்டும் தங்களுக்கு ஒரு மகிமையான ஆலயம் உண்டாயிருக்கக் கூடுமென்றோ கற்பனை செய்துகூட பார்க்க முடியாத கட்டம் அது! ஆண்டுகள் பல கடந்துவிட்டன. அவர்களுடைய நம்பிக்கை முற்றிலும் அற்றுப்போயிற்று. அவர்கள் பாழடைந்து கிடக்கிற தங்கள் தேசத்தைப் பற்றி, அவ்வப்போது அங்கிருந்து வந்தவர்களிடமிருந்து சில தகவல்களை மட்டும் கேள்வியுற்று மனம் நொந்துகொண்டனர் (நெகே. 1 : 3, 4).

இந்நிலையில், சிறையிருப்பிலிருந்த தேவபிள்ளைகளில் சிலர் தங்கள் மன வேதனையை அடக்கிக்கொள்ளக்கூடாதவர்களாய் ஆங்காங்கே தேவனை நோக்கி அந்தரங்கத்தில் புலம்பிக்கொண்டிருந்தனர். பாபிலோனிலிருந்த தானியேல் தன் மேலறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, தினம் மூன்று வேளையும் தவறாமல் பரலோகத்தின் தேவனை நோக்கி முழங்காற்படியிட்டு ஜெபித்துக்கொண்டிருந்தான். எருசலேமின் மீட்புக்காக அவன் உபவாசம்பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேவனைத் தேடிக்கொண்டிருந்தான் (தானி. 6 : 10 ; 9 : 3). எரேமியா, எசேக்கியேல் போன்ற தீர்க்கதரிசிகளும்மற்றும் பலரும் தேவனை நோக்கித் தனித்தனியே புலம்பிக்கொண்டிருந்தனர். சூசான் அரமனையில் ராஜாவின் பானபாத்திரக்காரனாயிருந்த நெகேமியா உபவாசத்தோடும் கண்ணீரோடும் தேவனை நோக்கி மன்றாடிக்கொண்டிருந்தான். "உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?" (சங். 85 : 6) என்பதே இவர்கள் அனைவரின் ஏகமான அங்கலாய்ப்பும் ஏக்கமுமாயிருந்தது. "சகாயங்கிடைக்குங் காலத்தில் பக்தியுள்ளவனெவனும் உம்மை நோக்கி விண்ணப்பஞ்செய்வான்" (சங். 32 : 6). இவர்களின் உபவாசங்களும் மன்றாட்டுகளும் பரலோகத்தை எட்டின! தேவன் தம் ஜனத்தைச் சந்திக்கும் காலம் வந்தது! அவர்கள் விண்ணப்பத்தை அவர் கேட்டருளினார்.

சிறைப்பட்டவர்கள் மத்தியிலிருந்துகொண்டு, தன் ஜனத்தின் அவல நிலையை எண்ணி ஏங்கிக்கொண்டிருந்த எசேக்கியேலுக்குச் சடுதியிலே ஒரு தரிசனம் உண்டாயிற்று. அவன் ஆவிக்குள்ளாகி, எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கைக் கண்டான். "இதோ, பள்ளத்தாக்கின் வெட்டவெளியிலே அந்த எலும்புகள் மகா திரளாய்க் கிடந்தது ; அவைகள் மிகவும் உலர்ந்ததுமாயிருந்தது" (எசே. 37 : 2). அவன் இந்த உபயோகமற்ற, உலர்ந்த எலும்புகளைக் கண்டு வியந்து நிற்கையில், அவன் சற்றும் எதிர்பார்த்திராத ஒரு கேள்வியை ஆண்டவர் அவனிடத்தில் கேட்டார்: 'இந்த எலும்புகள் உயிரடையுமா?' என்பதே அக்கேள்வி. "தேவரீர் அதை அறிவீர்" என்று பதிலளித்துவிட்டு அமைதலாயிருந்த அவனுக்குத் தேவன் தம் மனதிற்கொண்ட திட்டத்தை வெளிப்படுத்தி, அதை அவன் விசுவாசிக்கச் செய்து, பின்பு அவனைக்கொண்டே அதைச் செயல்படுத்துகிறார்: "நான் தீர்க்கதரிசனம் உரைக்கையில் ஒரு இரைச்சல் உண்டாயிற்று ; இதோ, அசைவுண்டாகி, ஒவ்வொரு எலும்பும் தன்தன் எலும்போடே சேர்ந்துகொண்டது. . . அவைகள்மேல் நரம்புகளும் மாம்சமும் உண்டாயிற்று, மேற்புறமெங்கும் தோலினால் மூடப்பட்டது." மீண்டும் அவன் தனக்குக் கற்பிக்கப்பட்டபடியே தீர்க்கதரிசனம் உரைத்தபோது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள்! மனுஷனுடைய நம்பிக்கையற்றுப் போன நிலவரத்தில் தேவன் கிரியை செய்கிறார்! மீண்டும் அவர்களைத் தங்கள் தேசத்துக்கு வரப்பண்ணுவதையே தேவன் அவனுக்கு இவ்வாறு வெளிப்படுத்திக் கொடுத்தார் (வச. 12-14).

இன்றைய கிறிஸ்தவ உலகின் நிலவரமும் உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கைப் போன்றே உள்ளது! பல கிறிஸ்தவ சபைகளில் கிறிஸ்துவின் உபதேசங்களும் நற்போதனைகளும் உண்டு ; என்றாலும் அவை ஜீவியத்தின் அனுபவமாயிராமல், மரித்த மனிதரின் உயிரற்ற எலும்புகளைப் போல வெறும் உபதேசங்களாக மாத்திரம் உள்ளன. தெய்வீக சுகம், பரிசுத்தமாகுதல், ஜெய ஜீவியம் போன்றவை போதிக்கப்பட்டாலும், அவை தங்கள் அனுபவமாகும்படி அர்ப்பணிப்போர் அபூர்வம்! தவிர, இன்று தாங்கள் பேசுகிறவைகளைத் தங்கள் ஜீவியமாக்க அக்கறைப்படாத பிரசங்கிகள் கிறிஸ்தவ உலகில் பெருகி வருகின்றனர். இப்படிப்பட்ட

வர்கள் உன்னதமான உபதேசங்களை எடுத்துரைத்தாலும், அவற்றில் வல்லமையும் ஜீவனும் இல்லா ததால் கேட்பவர்களில் அவை யாதொரு கிரியையும் செய்வதில்லை. ஐக்கியம் பற்றிய அழகான உபதேசங்கள் உண்டு ; ஆனால் எங்கும் பிரிவினைகள்! ஆம், அந்த எலும்புகள் தனித்தனியே சிதறிக் கிடக்கின்றன! தேவபிள்ளைகளின் நம்பிக்கையற்ற இந்நிலவரத்தில் தானியேலைப் போல தேவனை நோக்கி முழங்கால் முடக்குகிற மனிதர் தேவை! எசேக்கியேலைப் போல எருசலேமின் அருவருப்புகளினிமித்தம் பெருமூச்சு விட்டழுகிற பரிசுத்தவான்கள் தேவை! தேவன் உரைப்பதை அப்படியே விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிகிற தேவமைந்தர்கள் தேவை! அவர்களைக் கொண்டே தேவன் ஒரு மகா பெரிய எழுப்புதலை அனுப்புவார்.

சலனமற்றுக் கிடந்த பள்ளத்தாக்கில் ஓர் இரைச்சலும், அதைத் தொடர்ந்து எலும்புகளுக் கிடையே ஒரு அசைவும் உண்டாயின. இதுவே ஒரு மகா பெரிய எழுப்புதலின் ஆரம்பம்! மகா பெரிய சேனையாய் அவைகள் எழுந்து நிற்குமுன், முதலாவதாக அவைகளில் தேவன் ஒரு அசைவை உண்டாக்கினார். உணர்வற்றுக் கிடக்கும் தேவ பிள்ளைகளின் உள்ளத்தில் பரிசுத்தவான்களின் உருக்கமான ஜெபத்தின் மூலமும், விசுவாசம் நிறைந்த ஜீவனுள்ள வார்த்தைகளின் வாயிலாகவும் தேவன் ஒரு ஆழமான உணர்வை அனுப்புகிறார். அந்த உணர்வினால், அவர்களில் பாவத்திற்கு விரோதமான ஒரு இரைச்சலும், பரிசுத்தத்திற்கான ஒரு உள்ளான அசைவும் ஒருங்கே உண்டாகின்றன. இத்தகைய ஒரு உணர்வைக் குறித்தே அப்.பவுல், "அது உங்களிடத்தில் (பாவத்துக்கு விரோதமாக) எவ்வளவு ஜாக்கிரதையையும், குற்றந்தீர எவ்வளவு நியாயஞ்சொல்லுதலையும், எவ்வளவு வெறுப்பையும், எவ்வளவு பயத்தையும், (பரிசுத்தத்தை அடைந்து கொள்வதற்காக) எவ்வளவு ஆவலையும், எவ்வளவு பக்திவைராக்கியத்தையும், எவ்வளவு கண்டிப்பையும் உண்டாக்கிற்று" என்கிறார் (II கொரி. 7 : 11). உலர்ந்து கிடக்கும் தேவஜனத்தில் அசைவுண்டாக்கும்படி, தங்கள் உருக்கமான ஜெபத்தினால் பரத்தை அசைக்கும் பரிசுத்தவான்களை இக்கடைசி நாட்களில் தேவன் எழுப்புவாராக!

எலியாவின் நாட்களில் தேவஜனத்தின் பின்மாற்றத்தினிமித்தம் தேசம் மழையற்று வறண்டு போயிருந்தது. அவர்களின் உள்ளங்கள் எவ்வாறு தேவன்பேரில் அன்பின்றி வறண்டு போயிருந் தனவோ, அவ்வாறே அவர்கள் தேசமும் மழையின்றி, எங்கும் புல்லைக் கூட காண வகையின்றி, வறண்டு போயிருந்தது. உள்ளும் புறம்பும் எங்கும் வறட்சி! எலியா தேவஜனங்களின் உள்ளத்தைக் கர்த்தருக்கு நேராக்கி, கர்மேல் பர்வதத்தின் சிகரத்தின்மேல் ஏறிச் சென்று, தரையிலே பணிந்து, தன் முகம் தன் முழங் காலில் படக் குனிந்து, மழைக்காக மன்றாடுகிறான். அதற்கு முன்னதாகவே பெரு மழையின் இரைச் சலை அவன் விசுவாசத்தினால் கேட்கிறான் (I இராஜா. 18 : 41, 42). இந்தத் தேவமனுஷனின் ஊக்க மான ஜெபம் மிகுந்த பலனைக் கொண்டுவந்தது. சமுத்திரத்திலிருந்து உள்ளங்கை அளவான மிகச் சிறிய மேகம் எழும்பிற்று. ஆம்! இதுவே ஒரு கனத்த மழையின் ஆரம்பம்! அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணலாம்? சற்று நேரத்திற்குள்ளாக "வானம் மேகங்களினாலும் காற்றினாலும் கறுத்து பெருமழை உண்டாயிற்று" (வச. 45). "பின்மாரிகாலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்ளுங்கள் ; அப்பொழுது கர்த்தர் மின்னல்களை உண்டாக்கி, வயல்வெளியில் அவரவருக்குப் பயிருண்டாக அவர்களுக்கு மழையைக் கட்டளையிடுவார்" (சக. 10:1).

நாயீன் ஊரில் வாலிபனான ஒரே மகனைப் பறிகொடுத்து விட்டாள் ஓர் ஏழை விதவை (லூக்கா 7 : 11-16). அவ்வூரார் அவனை அடக்கம்பண்ணும்படி கொண்டு செல்லும் வழியில், கர்த்தராகிய இயேசு அவர்களைக் கண்டார். தாயாரின் கண்ணீர் கர்த்தரின் உள்ளத்தை அசைத்து விட்டது! மற்ற அனை வரின் துக்கத்திற்கும், இந்தத் தாயின் கண்ணீருக்கும் இடையே நிச்சயமாகவே ஒரு பெரிய வித்தியாச மிருந்தது! அவர் அவள்மேல் மனதுருகி, கிட்ட வந்து, பாடையைத் தொட்டு, "வாலிபனே, எழுந் திரு" என்றார். பாடையில் கிடந்த வாலிபன் எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கிவிட்டான்! உலர்ந்த எலும்புகளை உயிர்ப்பித்து, மகா பெரிய சேனையாய் மாற்றும் அதே தேவவல்லமை, பாடையில் கிடத்தப்பட்டிருந்த சடலத்தை எழுந்து உட்கார்ந்து பேசச் செய்தது! பாடையைச் சுமந்து சென்றவர்கள் மலைத்து நின்றனர்! அருமை நண்பனே! உன் வாழ்வில் மரித்துப் போயிருக்கும் ஜெய ஜீவியம், பரிசுத்தத்திற்கான வாஞ்சை, வருகையின் நம்பிக்கை இவற்றுக்காக தேவசமுகத்தில் நீ மெய்யாகக் கண்ணீர் சிந்துவாயானால் அவர் மீண்டும் அவற்றை உயிர்ப்பிப்பார். "சீயோன் குமாரத்தியின் மதிலே, இரவும் பகலும் நதியவ்வளவு கண்ணீர் விடு, ஓய்ந்திராதே, உன் கண்ணின் கறுப்புவிழி சும்மாயிருக்க வொட்டாதே. எழுந்திரு, இராத்திரியிலே முதற் சாமத்தில் கூப்பிடு ; ஆண்டவரின் சமுகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப் போல ஊற்றிவிடு ; ... உன் குழந்தைகளின் பிராணனுக்காக உன் கைகளை அவரிடத்திற்கு ஏறெடு" (புல. 2 : 18, 19). அப்பொழுது ஒரு பெரிதான உயிர்மீட்சியை தேவ ஜனங்களில் நீ காண்பாய்!

மெய்யான எழுப்புதலைப் பரத்தினின்று இறங்கச் செய்ய, மெய்யான கண்ணீருடன் கூடிய ஜெபம் நம் உள்ளத்தினின்று பரத்திற்குச் செல்ல வேண்டும். கர்த்தரை அமர்ந்திருக்க விடாமல் விசுவாசமுள்ள ஜெபத்தினால் அவரை ஓயாமல் அலட்டிக்கொண்டிருக்கும் தேவ மக்களே ஒரு மெய்யான எழுப்புதலின் உயிர் நாடி! இக்கடைசி நாட்களில், எலியா, எரேமியா, தானியேல் போன்றோரைப் போல தேவ ஜனங்களுக்காகத் திறப்பின் வாயிலில் நிற்க நம்மை நாம் அர்ப்பணிப்போமா?

"எழும்பு, எழும்பு, ... கர்த்தரின் புயமே, முந்தினநாட்களிலும் பூர்வ தலைமுறைகளிலும் எழும்பினபடி எழும்பு" என்று தேவ சமுகத்தில் கதறித் துடிக்கும் தேவமக்கள் இந்நாட்களில் எழும்ப வேண்டும்! அருமையானவர்களே, "அவர் எருசலேமை ஸ்திரப்படுத்தி, பூமியிலே அதைப் புகழ்ச்சி யாக்கும்வரைக்கும் அவரை அமர்ந்திருக்க விடாதிருங்கள்" (ஏசாயா 62 : 7). அப்படியானால் நிச்சயமா கவே இதுவரை நாம் கண்டிராத பரிசுத்தஆவியின் மகத்தான எழுப்புதலை நாம் பெற்றனுபவிப்போம்.

✌➚✠ 👍★▪✞ ✡✂⇗❄🕐 🕒☹✂☆

- 🗎🗀🗀🗀

☹ ✌✡⮰✉⚐✞ 🔔❄🕐✞ ➶⮰✉❄🕐☸✂⮪ 👌✞❍☼⌖❄⚐ 🕒⌘🕗☆ ☝←ॐ ◘★✉☼
🕗⚐← ✡✂⮫❄🕓 '✞✂⌖💧✂☼✂' ('💧☆ ☹🕓❍☼🕓 ✡⮰➶ॐ✂🕓✏') ☝←➶ॐ ✡✂🙰❍⮝☼🕮✠✂
✿ ☺⮰✡✉⌖ ⌘⮹✿ ☺⮰✡🕓 ✧🕓★☼☸🕓.📪

"பெரிதானவைகளை நீர் செய்தீர்"

நான் சி. எஸ். ஐ. சபையைச் சேர்ந்த தேவபக்தியுள்ள ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்டேன். நான் பிறந்தபோதே பிசாசு என்மேல் நோக்கமாயிருந்து, என்னை உயிரோடே விழுங்கப் பார்த்தான். ஆனால், "நீரே என்னைக் கர்ப்பத்திலிருந்து எடுத்தவர்; ... கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டபோதே உமது சார்பில் விழுந்தேன்; நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதல் நீர் என் தேவனாயிருக்கிறீர்" என்று சங்கீதக்காரன் சொன்னதுபோல (சங். 22 : 9, 10), என்னைச் சிருஷ்டித்த என் தேவன், என்மேல் வைத்த தமது மிகுந்த இரக்கத்தினாலே, பிசாசின் பிடியிலிருந்து என்னை மீட்டுக்கொண்டார்.

நான் பிறந்த நாளிலிருந்து ஒவ்வொரு வாரமும் தவறாமல் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் நள்ளிரவு 12 மணியளவில், நான் தூங்கிக்கொண்டிருந்தாலும் அலறி, அழுதுகொண்டு எழும்பி சில மணி நேரங்கள் தொடர்ந்து அழுதுகொண்டே இருப்பேனாம். அதோடு 'வலிப்பு' (fits) என்ற பிசாசின் தொந்தரவினாலும் நான் கஷ்டப்பட்டு, என் சுயநினைவை இழந்தவளாகக் காணப்படுவேன். உடனடியாக என் பெற்றோர் என்னை மருத்துவ மனைக்கு எடுத்துச்செல்வார்கள். ஆனாலும் எனக்குச் சற்றாகிலும் விடுதலை கிடைக்கவில்லை. என் தாயார் இந்தப் பெந்தெகொஸ்தே சபையைப் பற்றி சிறிதளவு அறிந்திருந்தபடியால், எப்படியாவது எனக்கு விடுதலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், ஓரிரவு என்னை எங்கள் ஊரிலிருந்த விசுவாச வீட்டிற்கு எடுத்துச் சென்றார்களாம். அந்த நள்ளிரவிலே அங்கிருந்த ஊழியர் யாவரும் சேர்ந்து எனக்காக ஊக்கமாக ஜெபித்தனர். அப்போதுதான் இது வியாதி அல்ல; பிசாசின் தொந்தரவு என்பது தெரியவந்தது. ஜெபத்தினாலேயேயன்றி மற்ற எவ்விதத்தினாலும் இதினின்று விடுதலை பெற முடியாது என்பதை அந்த ஊழியர்கள் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்கள். அப்படியே தொடர்ந்து அங்கே என்னைக் கொண்டு சென்று ஜெபித்து, அதன் பலனாக நான் பரிபூரண விடுதலையைப் பெற்றுக்கொள்ள கர்த்தர் உதவி செய்தார். விடுதலை கிடைத்ததும் மீண்டுமாக முன்பு சென்றுவந்த ஆலயத்திற்கே நாங்கள் சென்று வந்தோம். நான் வளரவளர உலக சிற்றின்பங்களுக்கு அடிமைப்பட்டேன். ஆனாலும் என் இருதயத்திற்குள்ளேயோ மெய்யான சமாதானம் இல்லாமலிருந்தது.

என்னுடைய 15 - ஆவது வயதில் தேவன் என்னை மீண்டுமாகச் சந்தித்தார். ஒருநாள் ஒரு தேவபிள்ளையின் வற்புறுத்துதலால் நான் பெந்தெகொஸ்தே சபைக்குச் சென்றேன். அது ஒரு சனிக் கிழமை இரவாக இருந்தது. அன்றுதானே, ஆண்டவராகிய இயேசு ஈனக்கோலமாக, கைகளிலும் கால்களிலும் ஆணிகள் கடாவப்பட்டவராய், இரத்தம் சொரிந்தவராய்க் கல்வாரிச் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் காட்சியைத் தரிசனத்தில் கண்டு நான் அதிர்ச்சியடைந்தேன். அதுவரைக்கும் நான் கிறிஸ்தவளாக இருந்தபோதிலும் கர்த்தராகிய இயேசுவைத் தனிப்பட்ட விதத்தில் அறியாதவளாய் இருந்தேன். அக்காட்சி, என் இருதயத்தை நொறுக்கி விட்டது. என்னை அறியாமலேயே நான் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தேன். அதுவரை நான் பாவம் என்று நினைத்திராத பல பாவங்களும் ஒரு திரைப் படக் காட்சியைப்போல் என் கண்முன் வந்து நின்றன. ஒவ்வொன்றாக மனஸ்தாபத்தோடு அறிக்கை செய்து, கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, நான் சொல்லி முடியாத சந்தோஷத்தால் நிரப்பப் பட்டேன். அன்றிலிருந்து தொடர்ந்து இந்தச் சபையில் நான் ஐக்கியப்பட்டேன்.

பின்பு, நாளடைவில் சத்தியத்திற்கு என்னை ஒப்புக்கொடுத்து, முழுக்கு ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ளவும், அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ளவும் கர்த்தர் எனக்கு உதவி செய்தார். அன்றிலிருந்து பாவத்தையும், உலகத்தையும், ஆடம்பரங்களையும் வெறுத்து ஜீவிக்கப் பரிசுத்தஆவியானவர் என்னைப் பெலப்படுத்தினார். நான் அணிந்துகொண்டிருந்த நகைகள் மீதும் எனக்கு வெறுப்பு ஏற்பட்டது. 'அது வெறும் புறம்பான அலங்கரிப்புதானே. நான் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு இந்த நகைகள் எவ்விதத்தில் உதவி செய்யக் கூடும்' என்று எண்ணி மனப்பூர்வமாக அவற்றை நான் கழற்றிவிட்டேன்.

இவ்வாறு சத்தியத்தை ஆழமாக அறிய அறிய ஒரு பக்கத்தில் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் பெருகின. மறுபக்கத்தில் விசுவாசத்தின் பரீட்சையும் உண்டாயிற்று. ஒருநாள் திடீரென என் தொண்டைக்குள் ஒரு கட்டி வந்து, மிகவும் பெரிதாகி, என்னை அடையாளம் கண்டுகொள்ள முடியாத அளவிற்கு என் முகம் வீங்கி, விகாரமாகி விட்டது. சாப்பிடவோ தூங்கவோ முடியாமல், உமிழ்நீரைக் கூட விழுங்க முடியாமல் நான் கஷ்டப்பட்டேன். என்னைப் பார்த்தவர்கள், அறுவை சிகிச்சை செய்யாவிட்டால் உயிருக்கே ஆபத்து உண்டாகும் என்று பயமுறுத்தினார்கள். என்னால் பேச முடியாதபடியினால், 'என்னை விசுவாச வீட்டிற்கு எடுத்துச் செல்லுங்கள்' என்று ஒரு தாளில் எழுதி நான் என் பெற்றோருக்குக் கொடுத்தேன். அப்படியே அவர்கள் விசுவாச வீட்டிற்கு என்னைக் கொண்டு போனார்கள். அங்கிருந்த ஊழியர்களும் மற்றும் விசுவாசிகள் யாவரும் உபவாசம்பண்ணி இரவு பகலாக எனக்காகப் போராடி ஜெபித்தார்கள். இரண்டு நாட்களுக்குள்ளாக அற்புதமாக அது உடைந்து, பூரண சுகம் பெற தேவன் எனக்கு உதவி செய்தார்.

என் கல்லூரிப் படிப்பின் நாட்களில் ஒருமுறை என் கவலையீனத்தினிமித்தமாக, வீரியம் மிகுந்த ஹைட்ரோ குளோரிக் அமிலம் (Hydro Chloric Acid) என் வாய்க்குள் போய்விட்டது. உடன்தானே என் வாய் முழுவதும் வெந்து, தோலுரிந்து, வீங்கி விட்டது. என்னுடைய பேராசிரியர் உடனடியாக முதலுதவி செய்ய வேண்டும் என்று என்னை வற்புறுத்தினார். நான் மறுத்துவிட்டு, விசுவாச வீட்டிற்குச் சென்றேன். பரிசுத்தவான்கள் என்மேல் கை வைத்து, கர்த்தருடைய நாமத்தினால் எண்ணெய் பூசி ஜெபம்பண்ணினார்கள். கர்த்தர் பூரண சுகம் தந்தார். கல்லூரியில் யாவரும் ஆச்சரியப்பட்டு, ஜெபத்தின் வல்லமையை அறிந்துகொள்ளவும், கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்படவும் அது ஏதுவாயிற்று.

என் 20 - ஆவது வயதில், நான் ஆண்டவருக்காக ஊழியஞ்செய்யும்படியாக வேறுபிரிந்து வரவேண்டும் என்று கர்த்தர் என்னோடு ஆணித்தரமாகப் பேசினார். ஆகவே அவர் அன்பின் சத்தத்திற்கு உடனடியாகக் கீழ்ப்படிந்து, 1989 - ஆம் வருடம் இந்தக் கனமான ஊழியத்திற்கென்று நான் சந்தோஷமாகக் கடந்து வரும்படி கர்த்தர் எனக்கு உதவி செய்தார். அன்றிலிருந்து இன்றுவரை கர்த்தருடைய கிருபையால் நான் சந்தோஷமாய் ஊழியஞ்செய்து வருகிறேன். கடந்த வருடம் நான் வியாதிப்பட்டேன். அதினால் என் இரண்டு காதுகளும் எவ்வளவேனும் கேட்கக் கூடாதபடிக்கு மந்தமாகி விட்டது. ஆராதனைகளுக்குப் போனாலும் ஒலிபெருக்கியின் மூலம்கூட ஜெப சத்தமோ, பாடலின் சத்தமோ, பிரசங்க வாக்கியங்களோ எதுவும் என் காதுகளில் கேட்காத படிக்கு அடைத்திருந்தது. சுமார் பதினெட்டு நாட்களாக நான் இந்த நிலவரத்தில் இருந்தேன். ஒருநாள் இரவு அதிக பாரத்தோடும் கண்ணீரோடும் நான் ஜெபித்துக்கொண்டிருந்தேன். அப்போது இரண்டு புறாக்கள் உன்னதத்திலிருந்து பறந்து வந்து என் இரு காதுகளுக்குள்ளும் வந்து அமர்ந்ததாக நான் தரிசனம் பார்த்தேன். அதோடு, "கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்" (நாகூம் 1 : 7) என்ற வசனமும் தந்து தேவன் என்னைத் தைரியப்படுத்தினார். மறுநாள் அதிகாலமே பரிபூரண விடுதலையை அனுபவிக்கக் கர்த்தர் எனக்கு உதவி செய்தார்.

என் தாயின் கர்ப்பத்திலிருந்து நான் வெளிப்பட்டபோதே என் பட்சத்திலிருந்த என் அருமை இயேசு, இன்றுவரை நிமிஷந்தோறும் என்மேல் நினைவாயிருந்து என்னைக் காத்து நடத்தி வருகிறார். கர்த்தர் நல்லவர் என்பதை என் ஜீவியத்தில் ஒவ்வொரு நாளும் நான் ருசித்து வருகிறேன். அவரின்றி ஒரு இமைப்பொழுதுங்கூட என்னால் தனிமையாக இருக்க முடியாது. அவரே என் புகழ்ச்சியும் கீர்த்தியும் துதியும் மகிமையுமாயிருக்கிறார். அல்லேலூயா!

சகோதரி ஜாஸ்மின்,
அடையாறு.

சென்றுபோன நாட்கள்

ஒருநாள் மாலை மயங்கும் நேரத்தில் சிறுவன் ஒருவன் பொழுதுபோக்கிற்காக ஆற்றங்கரைக்குச் சென்றான். ஆற்றங்கரையில் சிதறிக் கிடந்த கற்களைத் தன் கைகளால் பொறுக்கி எடுத்து, ஒவ்வொன்றாக அவற்றை அவன் அந்த ஆற்றினுள் எறிந்தான். ஒவ்வொரு கல்லும் ஆற்றின் மையத்தில் போய் விழும் தூரத்தைக் கணித்து, அடுத்த கல்லை அதைவிட அதிக தூரம் சென்று விழும்படி அவன் வேகமாக எறிந்தான். இவ்வாறு ஆற்றங்கரையில் சிறிது தூரம் நடந்து சென்று கற்கள் ஒன்றன்பின் ஒன்றாக சென்று விழும் தூரத்தைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தான் அச்சிறுவன். நேரம் விரைவாகக் கடந்துகொண்டிருந்தது. இருள் கவ்வும் நேரம் ஆகிவிட்டமையால், அவன் தன் கைகளில் எஞ்சியிருந்த ஓரிரு கற்களுடன் தன் வீடு திரும்பலானான். ஊரினுள் வந்து, விளக்கொளியில் அவன் தன் கைகளிலிருந்த கற்களை உற்று நோக்கும்போது அவை பல நிறங்களில் மின்னிப் பிரகாசிப்பதைக் கண்டு வியப்புற்றான். ஆனால் ஆற்றங்கரையின் மங்கின ஒளியில் அவை சாதாரண கற்களைப் போலவே தென்பட்டன. தன் வீட்டிற்கு ஓடோடிச் சென்ற சிறுவன், அவற்றைத் தன் பெற்றோரிடம் காண்பித்தபோது, அவை பல ஆயிரக்கணக்கான ரூபாய் விலைமதிப்புள்ள இரத்தினக் கற்கள் என்று அறிந்து கொண்டான். புதையலைப் போல தனக்குக் கிடைத்த ஏராளமான விலையுயர்ந்த கற்களை ஆற்றினுள் வீசியெறிந்து, சற்று நேரத்திற்குள்ளாக விரயமாக்கி விட்டதை எண்ணி எண்ணி அவன் மனம் வருந்தினான். ஆற்றுவேகத்தில் அடித்துச் செல்லப்பட்ட கற்கள் மீண்டும் வருமோ?

சிறுவனின் கைகளில் மீந்திருந்த கற்கள் ஒரு சில மாத்திரமே. அதுபோன்று நம் வாழ்வில் நமக்கு மீந்திருக்கும் நாட்கள் எத்தனை என்று நமக்குத் தெரியாது. நம் வாழ்வில் சென்றுபோன நாட்களுக்கு மீண்டும் செல்ல எத்தனைதான் பிரயாசப்பட்டாலும் நம்மால் செல்ல முடியாது. அவற்றை மீண்டும் நாம் பெற்றுக்கொள்ளவே முடியாது. மனிதன் மிக விரைவான ஊர்திகள் பலவற்றைக் கண்டுபிடித்து, உலகத்தை மிகச் சிறிதாக்கிக் கொண்டுள்ளான். நொடிப்பொழுதில் உலகின் ஒரு முனையிலிருந்து மறுமுனைக்குச் செய்தித் தொடர்பு கொள்வதற்கான அநேக வழிமுறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனினும் எந்த விஞ்ஞானியும், எந்தத் தொழில் நுட்ப வல்லுநரும் வாழ்வில் கடந்து போன நாளுக்குத் திரும்பிச் செல்ல வழிகாட்டக் கூடுமோ? கடந்துபோன நாட்கள் கடந்து போனவையே. நம்முடைய நேற்றைய தினம் - நேற்றையது தானே! சென்றுபோன நாள் இனி என்றென்றும் சென்று போனதே!

மனுஷஜாதியான நாம் இப்பூவுலகில் ஜீவிக்கும்படியாக, நம் ஒவ்வொருவருக்கும் நமதாண்டவர் அருமையான, விலையேறப்பெற்ற வருஷங்களையும் நாட்களையும் அருள் செய்திருக்கிறார். அநாதி தேவனுடைய முன் நிர்ணயத்தின்படியே, அவர் ஒவ்வொருவருக்கும் காலங்களைக் குறித்து வைத்தி

ருக்கிறார் (அப். 17 : 26). அநந்த ஞானமுள்ள தேவன், உன்னதமான நோக்கத்தோடுதான் நமக்கு நாட்களைத் தந்திருக்கிறார். அதை நாம் விளங்கிக்கொண்டு, அவற்றைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றே அவர் விரும்புகிறார். இதையே தேவ மனுஷனாகிய மோசே, "நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்" (சங். 90 : 12) என்று சொல்கிறான். மாதங் களையோ வருஷங்களையோ அல்ல, "எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்" என்று அவன் கூறுகிறான். தேவன் நமக்குத் தந்திருக்கும் ஒவ்வொரு நாளும் நமக்கு மிகமிக விலையேறப்பெற்றவையே. இவற்றை விலையேறப்பெற்றவையாக எண்ணும் அறிவு இல்லாதவர்களே ஞானமில்லாதவர்களாயும் மதிகேடராயும் ஜீவிக்கிறவர்கள். கர்த்தராகிய இயேசு சொன்ன ஒரு உவமையில், ஐசுவரியவானான ஒரு மனுஷன், "ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லி க்கொண்டான்" (லூக்கா 12 : 19) என்று நாம் வாசிக்கிறோம். தான் அநேகம் வருஷங்கள் ஜீவிக்கப்போவதாக எண்ணி, தன் சரீரப் பிரகாரமான தேவை களுக்காக மட்டும் அவன் பிரயாசப்பட்டான். "தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்த வைகள் யாருடையதாகும்" என்று கேட்கிறார். தேவன் அவனுக்குக் கொடுத்திருந்த நாட்களில் அவன் தன் ஆத்துமாவைக் குறித்து எவ்வளவேனும் சிந்தியாமல், மாயையான உலகக் காரியங் களுக்காகவே அவற்றைச் செலவழித்து விட்டான். "ஆத்துமா அறிவில்லாமலிருப்பது நல்லதல்ல; ... மனுஷனுடைய மதியீனம் அவன் வழியைத் தாறுமாறாக்கும்" (நீதி. 19 : 2, 3).

இன்றும் சிலர் தேவன் தங்களுக்குத் தந்திருக்கும் நாட்களையெல்லாம் ஒரு கதையைப் போலக் கழித்துப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதைக் குறித்தே ஞானி, மாயையின் நாட்கள் (பிர. 7 : 15) என்றும், தேவமனுஷனாகிய மோசே, "ஒரு கதையைப்போல் எங்கள் வருஷங்களைக் கழித்துப் போட்டோம்" (சங். 90 : 9) என்றும் கூறுகிறார்கள். தங்கள் சுயபுத்தியின்மேல் சாய்ந்து, தங்கள் இருதயத்தை நம்பி, தங்களுக்குச் செம்மையாய்த் தோன்றுகிறபடியெல்லாம் நாட்களை வீணாகச் செலவழித்து, தங்கள் மாம்சமும் மனதும் விரும்பினவைகளைச் செய்து, தங்கள் ஆத்துமாவை மரணத்துக்கு ஒப்புக் கொடுத்துக்கொண்டிருக்கும் வாலிபரும் உண்டு. "தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்; ஞானமாய் நடக்கிறவனோ இரட்சிக்கப்படுவான்" (நீதி. 28 : 26).

அருமையான தேவபிள்ளையே, இதுவரைக்கும் நீ உன் வருஷங்களையும், நாட்களையும் ஒரு பொருட்டாக எண்ணாமல், அவற்றின் விலைமதிப்பை அறியாமல், பிரயோஜனமற்ற விதத்தில் உன் நாட்களைக் கழித்து, அவற்றைப் பாவத்திலும், உலக சிற்றின்பத்திலும், ஆடம்பரத்திலும், தீய நண்ப ருடைய சிநேகத்திலுமாக நஷ்டப்படுத்தியிருக்கலாம். ஒருவேளை உன் ஞானக் குறைவினாலும், அறியாமையினாலும் நீ இப்படிப்பட்ட பாவத்திற்குள் சிக்குண்டு காணப்படலாம். "அறியாமை யுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்" (அப். 17 : 30). ஆகவே நீ ஞானமடைந்து, உன் சொந்த வழிகளை விட்டுவிட்டு, ஆண்டவராகிய இயேசுவினிடம் திரும்பி வரும்படி ஆவியானவர் உன்னை எச்சரிக்கிறார்.

"என் மகனே, நீ செவிகொடுத்து ஞானமடைந்து, உன் இருதயத்தை நல்வழியிலே நடத்து" (நீதி. 23 : 19). உன் இருதயத்தை நீ நல்வழியில் நடத்த உனக்கு விசேஷித்த ஞானம் தேவை. இதையே அப். பவுல் எபேசு சபையாருக்கு எழுதுகிறார்: "நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்" (எபே. 5 : 15 - 17). அதாவது உன்னைக் குறித்த தேவ னுடைய நோக்கம் என்ன என்பதைத் தனிப்பட்ட விதத்தில் நீ அறிந்து உணர்ந்துகொள்வதே ஞான மாகும். "தன் வழியைச் சிந்தித்துக்கொள்வது விவேகியின் ஞானம்" (நீதி. 14 : 8). "என் மகனே, ... நீ ஞானவானாகி, என் இருதயத்தைச் சந்தோஷப்படுத்து" (நீதி. 27 : 11). என்ன நோக்கத்தோடு விலை யேறப்பெற்ற நாட்களை உன் தேவன் உனக்குத் தந்திருக்கிறார் என்பதை நீ சரியாக விளங்கிக் கொண்டு, இனி இருக்கப்போகிற மிகக் குறைந்த நாட்களையாவது நல்ல விதத்தில் பிரயோஜனப் படுத்திக்கொண்டால் மாத்திரமே, உன் ஆண்டவரின் இருதயம் உன்னிமித்தம் சந்தோஷப்படும். "ஞானியின் இருதயம் காலத்தையும் நியாயத்தையும் அறியும்" (பிர. 8 : 5).

ஒவ்வொரு நாளும் நீ அதிகாலையில் எழும்பும்போது, இந்த நாள் ஒருவேளை என் வாழ்வின் கடைசி நாளாயிருக்கலாம்; மத்திய ஆகாயத்தில் வெளிப்படும் கர்த்தராகிய இயேசுவை நான் சந்திக்க வேண்டிய நாள் இதுவாயிருக்கலாம் என்ற சிந்தனையுடன் உன்னைத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து ஜீவிப்பாயானால் அந்த நாள் உனக்கு மிகச் சிறந்த நாளாயிருக்கும். அப்போது நீ ஒவ்வொரு நாளையும் மிகமிகச் சிறந்த விதத்தில் பயன்படுத்துவாய். உன் வாயின் வார்த்தைகளும் இருதயத்தின் தியானமும் செய்கைகளும் நடக்கையும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும். நீ கர்த்தருக்காக மிகச் சிறந்த ஊழியத்தைச் செய்து, அநேகரை அவருக்கென்று ஆதாயப்படுத்திக் கொள்வாய். உன் ஜீவியம் உனக்கும் உன்னோடு சம்பந்தங்கொள்கிற யாவ ருக்கும் ஆசீர்வாதமாயிருக்கும்! இனி என் ஜீவியத்தின் ஒவ்வொரு அடியையும், ஆண்டவருடைய ஆலோசனையின்படி மாத்திரம் எடுத்துவைப்பேன் என்று உன் இருதயத்தில் தீர்மானம்பண்ணி, கர்த்த ரண்டை திரும்புவாயாக. 'என் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதிலும் தேவசித்தம் மாத்திரம் செய் வேன்' என்று உன்னை ஒப்படைப்பாயாக. நீ உன் நாட்கள் ஒவ்வொன்றையும் விலையேறப்பெற்றதாய் எண்ணி ஜீவித்தால், உன் ஜீவியம் தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றதாய் விளங்கும். உன்னுடைய முடிவும் அவரது பார்வையில் விலையேறப்பெற்றதாயிருக்கும்.

போட்டி

கீழ்க்காணும் வினாக்களுக்கு 25 - 7 - '00 - க்குள் எம்மொழியிலும் பதில் எழுதி அனுப்பவும்.
வயது, வசன ஆதாரம் குறிப்பிடுக.

வேத வாசிப்புப் பகுதி : II **இராஜாக்கள், I நாளாகமம், சங்கீதம் 51 - 150, நீதிமொழிகள்.**

1. உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன் என்று எந்த இராஜாவுக்குக் கூறப்பட்டது? ராஜாவின் நாட்களோடே நாட்களைக் கூட்டுவீர் என்று எங்கு எழுதப்பட்டுள்ளது?
2. சமாதானத்தைப் பற்றி உனக்கு என்ன என்று கேட்டது யார்? நான் சமாதானத்தை நாடுகிறேன் என்றது யார்?
3. அவர்களுடைய ருசியுள்ள பதார்த்தங்களில் ஒன்றையும் நான் சாப்பிடாமல் இருப்பேனாக என்றது யார்? அவனுடைய ருசியுள்ள பதார்த்தங்களை இச்சியாதே என்று யாரைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது?
4. பலகாரம் சுடுகிற வேலையின் விசாரிப்பு யாருக்கு ஒப்புவிக்கப்பட்டிருந்தது? அடுப்பினடியில் கிடந்தவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருப்பார்கள்?
5. உருவின பட்டயத்தை தன் கையிலே பிடித்திருந்தது யார்? அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயம் இருக்கும்ணி என்று எங்கே எழுதப்பட்டுள்ளது?
6. எப்பொழுது விடியும் என்று விடியற்காலத்துக்குக் காத்திருப்பது யார்? எப்பொழுது உன் தூக்கத்தை விட்டு எழுந்திருப்பாய் என்று யாரிடம் கேட்கப்பட்டுள்ளது?
7. ஒரு காட்டு மிருகம் ஓடி எதை மிதித்து போட்டது? வெளியின் மிருகங்கள் அதை மேய்ந்து போடுகிறது என்று எதைக் குறித்து எழுதப்பட்டுள்ளது?
8. யாருடைய மாம்சத்தை நாய்கள் தின்னும் என்று சொல்லப்பட்டது? யாருடைய கண்ணை நதியின் காகங்கள் பிடுங்கும் என்று எழுதப்பட்டுள்ளது?
9. மனுஷருக்கேற்ற புத்தி எனக்கு இல்லை என்றது யார்? எவைகளின்படி செய்கிறவர்களுக்கு நற்புத்தியுண்டு?
10. எனக்குத் தயவு செய்ததுபோல, நானும் ... இவனுக்குத் தயவுசெய்வேன்ணி என்றது யார்? மனுஷர் பெரும்பாலும் தங்கள் தயாளத்தைப் பிரசித்தப்படுத்துவார்கள் என்று எங்கே எழுதப்பட்டுள்ளது?

பதில் அனுப்ப வேண்டிய முகவரி :

பெந்தெகொஸ்தின் பேரொலி (இளைஞர் பகுதி), பெந்தெகொஸ்தே மிஷன்,
45 - A, 5 -ஆம் தெரு, பத்மநாப நகர், அடையாறு, சென்னை - 600 020.
போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குப் பரிசுகள் அனுப்பப்படும்.

ஜூன் மாதப் போட்டிக்கான பதில்கள் :

1. I சாமு. 2 : 4 ; சங். 18 : 32
2. II சாமு. 5 : 21 ; I இராஜா. 15 : 13
3. சங். 42 : 4 ; பிர. 5 : 1
4. I இராஜா. 21 : 1 ; உன். 8 : 11
5. I இராஜா. 4 : 25 ; உன். 2 : 3
6. I இராஜா. 19 : 4 ; சங். 41 : 4
7. II சாமு. 24 : 13 ; உன். 5 : 6
8. I சாமு. 8 : 7 ; I இராஜா. 14 : 7, 9
9. I சாமு. 17 : 42 ; சங். 45 : 2
10. சங். 42 : 7 ; பிர. 7 : 24.

கைப்பிரதி ஊழியம்

நமது பத்திரிகையின் ஜனவரி 2000 வெளியீட்டில் கைப்பிரதி ஊழியம் துவக்கப்பட்டிருப்பது குறித்த சில செய்திகள் வெளியிட்டிருந்தோம். தேவன்தாமே இவ்வூழியத்தை ஆசீர்வதித்து, இதுவரை ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி, கன்னடம் ஆகிய ஆறு மொழிகளில் 60 இலட்சம் கைப்பிரதிகள் அச்சிட உதவிசெய்தபடியால் அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். இம்மொழிகளில் உங்களுக்குக் கைப்பிரதிகள் அவசியமாயிருந்தால், கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

கைப்பிரதி அலுவலகம், த பெந்தெகொஸ்தே சபை,
45A, 5 - ஆம் தெரு, பத்மநாபநகர், அடையாறு, சென்னை - 600 020.

இவ்வூழியத்தின் முன்னேற்றத்திற்காக பண உதவி செய்ய முன்வருவோர், பென்டிகாஸ்ட் ப்ரஸ் ட்ரஸ்ட் (கைப்பிரதி ஊழியம்) என்ற பெயருக்கு மேற்கூறப்பட்ட விலாசத்திற்கு பணவிடை (M. O.), D. D. **அல்லது காசோலை** (Cheque) **மூலமாக அனுப்பலாம்.**

இந்தக் கைப்பிரதி ஊழியம் அநேக ஆத்துமாக்களுக்கு இரட்சிப்பையும் சுகமாக்குதலையும் ஆசீர்வாதங்களையும் கொண்டுவரும்படி ஜெபிக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

எருசலேமின் அலங்கமும் வாசல்களும்

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

4. எப்பிராயீம் வாசல் (GATE OF EPHRAIM)

“துதிசெய்கிற இரண்டாம் கூட்டத்தார்... எப்பிராயீம் வாசலையும், பழைய வாசலையும், மீன் வாசலையும்,... கடந்து, ஆட்டுவாசல்மட்டும் புறப்பட்டுக் காவல்வீட்டு வாசலிலே நின்றார்கள்” (நெகே. 12 : 38, 39).

எப்பிராயீம் வாசல், அலங்கத்தின் வடமேற்குப் பகுதியில் இருந்தது. எருசலேமிலிருந்து எப்பிராயீமின் எல்லைகளுக்கு அல்லது சமாரியாவுக்குச் செல்வதற்கான வழியாக இவ்வாசல் கட்டப்பட்டிருந்தது. இது நான்காவதாகப் பழுதுபார்த்துக் கட்டப்பட்ட வாசலாகும். இது 'நடுவாசல்' என்றும் அழைக்கப்பட்டது (எரே. 39 : 3). சூளைகளின் கொம்மையை அடுத்து, அலங்கத்தின் வட மேற்கு முனையில், கோடி வாசல் அல்லது மூலைவாசல் (Corner gate) என்ற ஒரு வாசல் இருந்திருக்கிறது (சக. 14 : 10). மூலைவாசலுக்கும் பழைய வாசலுக்குமிடையே, மூலைவாசலிலிருந்து நானூறு முழ தூரத்தில் எப்பிராயீம் வாசல் கட்டப்பட்டிருந்தது. இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் எருசலேமின் அலங்கத்திலே எப்பிராயீம் வாசல் தொடங்கி, மூலைவாசல் மட்டும் நானூறு முழ நீளம் இடித்துப் போட்டு, அதன் வழியாக நகரத்தினுள் பிரவேசித்து, கர்த்தருடைய ஆலயத்திலும் அரமனைப் பொக்கிஷங்களிலும் அகப்பட்ட யாவையும் எடுத்துக் கொண்டு போனான் என்று இராஜாக்களின் புஸ்தகத்தில் நாம் வாசிக்கிறோம் (II இராஜா. 14 : 13, 14). இந்த மூலை வாசலைக் குறித்து நெகேமியாவின் புஸ்தகத்தில் யாதொரு விவரமும் இல்லை. அதை யொட்டியிருந்த சூளைகளின் கொம்மையைப் பழுது பார்த்துக் கட்டினவர்கள் இப்பகுதியையும் கட்டியிருக்கக் கூடும் (நெகே. 3 : 11). பழைய வாசலுக்கும் பள்ளத்தாக்கின் வாசலுக்குமிடையே இருந்த நீண்ட பகுதியை எட்டுப் பிரிவினர் தனித்தனியே பழுதுபார்த்துக் கட்டியிருக்கின்றனர். எனவே நான்காவது வாசலாகிய எப்பிராயீம் வாசலைப் பழுதுபார்த்துக் கட்டியவர்கள் இன்னாரென்று குறிப்பாகக் கூற இயலாது. இருப்பினும், எப்பிராயீம் வாசலின் ஆவிக்குரிய கருத்தினை மாத்திரம் நாம் இங்கு தியானிப்போமாக.

எப்பிராயீம்:

யோசேப்புக்கு எகிப்திலே இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் இளையவனே எப்பிராயீம் ஆவான். யோசேப்பு, "நான் சிறுமைப்பட்டிருந்த தேசத்தில் தேவன் என்னைப் பலுகப்பண்ணினார் என்று சொல்லி, இளையவனுக்கு எப்பிராயீம் என்று பேரிட்டான்" (ஆதி. 41 : 52). யோசேப்பு அந்நிய தேசமாகிய எகிப்திலிருந்த ஆரம்ப நாட்களில் அனுபவித்த சிறுமையை நாம் அறிவோம். அங்கே தன்னை அறிந்திருந்தவர்களாலும் அவன் பிழையாக விளங்கிக்கொள்ளப்பட்டு, சிறைச்சாலையில் அடைக்கப்பட்டான். அவனுடைய நியாயத்திற்காக அவன் சார்பில் நின்று பரிந்துரை செய்ய ஒருவரும் இருக்கவில்லை. தனிமையும் சிறுமையும் எளிமையுமே அவனுடைய பங்காயிருந்தன. என்றாலும் கர்த்தர் அவனுக்குத் துணை நின்றார். கர்த்தருடைய குறித்தவேளை வந்தபோது, அவர் அவனை மகா மேன்மையாய் உயர்த்தி விட்டார் ! "எளியவனையோ சிறுமையினின்று எடுத்து, உயர்ந்த அடைக்கலத்திலே வைத்து, அவன் வம்சங்களை மந்தையைப்போலாக்குகிறார். உத்தமர்கள் அதைக்கண்டு மகிழுவார்கள்; நியாயக்கேடெல்லாம் தன் வாயை மூடும்" (சங். 107 : 41, 42); "சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர்; நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர்" (சங். 9 : 9); அவர் "சிறுமைப்பட்டவர்களுடைய கூப்பிடுதலை மறவார்" (வச. 12) போன்ற வசனங்கள் அவனில் நிறைவேறின. "என்மேல் நோக்கமாகி, எனக்கு இரங்கும்; நான் தனித்தவனும் சிறுமைப்படுகிறவனுமாயிருக்கிறேன்" (சங். 25 : 16) என்றும், "நான் சிறுமையும் எளிமையுமானவன், கர்த்தரோ என்மேல் நினைவாயிருக்கிறார்;.... என் தேவனே, தாமதியாதேயும்" (சங். 40 : 17) என்றும் தாவீது தான் சிறுமைப்பட்டிருந்த காலத்தில் தேவனை நோக்கி மன்றாடுகிறான். ஆம் ! உயர்ந்தவரும் உன்னதத்தில் வாசம்பண்ணுகிறவருமான நம் தேவன், சிறுமைப்பட்டவர்கள் மேல் எப்போதும் சிந்தையுள்ளவராயிருக்கிறார். அவர்களுக்காக, அவர்களுடைய சத்துருக்களோடு அவர் வழக்காடுகிறார். "மனுஷர் நமக்கு விரோதமாய் எழும்பினபோது, கர்த்தர் நமது பக்கத்திலிராவிட்டால், கர்த்தர் தாமே நமது பக்கத்திலிராவிட்டால், அவர்கள்.... நம்மை உயிரோடே விழுங்கியிருப்பார்கள்... நம்மை அவர்களுடைய பற்களுக்கு இரையாக ஒப்புக்கொடாதிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம்... நம்முடைய சகாயம் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது" (சங். 124 : 1 - 3, 6, 8). அல்லேலூயா !

'சிறுமைப்பட்டிருந்த தேசத்தில்' யோசேப்பைத் தேவன் பலுகப்பண்ணினார். அவர் அவனை மேன்மையாய் உயர்த்திவிட்டார். அவனுடைய முந்தின சிறுமையும் தாழ்வுகளுமெல்லாம் முற்றிலும் மறக்கப்பட்டுப் போயின. எகிப்து தேசம் முழுவதும், கானான் தேசம் உட்பட, சுற்றிலுமிருந்த தேசங்களைச் சேர்ந்த பலரும், தாங்கள் உயிர்பிழைக்கும்படியாக அவன் உதவியை நாடி, அவன் முன் வந்து பணியும்படி தேவன் செய்தார். "அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்; அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும்பண்ணுகிறார்" (I சாமு. 2 : 8).

யோசேப்பின் குமாரனாகிய எப்பிராயீம் இளையவனாயிருந்தும், யாக்கோபு அவனை மனாசேக்கு முந்தினவனாக வைத்து ஆசீர்வதித்தான். "தேவன் உன்னை எப்பிராயீமைப்போலவும் மனாசேயைப்போலவும் ஆக்குவாராக என்று இஸ்ரவேலர் உன்னை முன்னிட்டு வாழ்த்துவார்கள் என்று சொல்லி, எப்பிராயீமை மனாசேக்கு முன்னே வைத்தான்" (ஆதி. 48 : 20). எப்பிராயீமின் தகப்பனாகிய யோசேப்பு அதை மாற்ற முற்பட்டபோதிலும், அது தேவனுடைய உறுதியான தீர்மானமாக, அவனுக்குரிய மாறாத ஆசீர்வாதமாக அமைந்தது. இவ்விதம் எப்பிராயீம் சேஷ்டபுத்திரனாகி, இரட்டிப்பான ஆசீர்வாதத்திற்குச் சுதந்தரவாளியானான்.

மேலும், "எப்பிராயீம் என் சேஷ்டபுத்திரனாயிருக்கிறான்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே. 31 : 9). எப்பிராயீம் என்ற பதம் வேதாகமத்தில் சில இடங்களில் எப்பிராயீமின் சந்ததியாரான ஒரே ஒரு கோத்திரத்தைக் குறிப்பதற்கும், வேறு சில இடங்களில் இஸ்ரவேல் வம்சம் முழுவதையும் குறிப்பதற்கும் உபயோகிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய வசனத்தில் தேவன் சமஸ்த இஸ்ரவேலரையும் 'எப்பிராயீம்' என அழைக்கிறார். "இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன்" என்று கர்த்தர் பார்வோனுக்குச் சொல்லியனுப்புவதை யாத்திராகமம் 4 : 22 - இல் நாம் காண்கிறோம். யாக்கோபின் குடும்பத்தைக் குறிப்பிடும்படி, அவனுடைய பேரனும் இளையவனுமான எப்பிராயீமின் பெயரைத் தேவன் தெரிந்துகொண்டது கவனிக்கத்தக்கதே.

மிகுந்த கனி கொடுத்தல்:

யோசேப்பு, "தேவன் என்னைப் பலுகப்பண்ணினார்" என்று கூறி, தன் இளைய குமாரனுக்கு எப்பிராயீம் என்று பேரிட்டான். யாக்கோபு எப்பிராயீமை ஆசீர்வதிக்கையிலும், இவன் அதிகமாய்ப் பெருகுவான் என்றும், இவனுடைய சந்ததியார் திரளான ஜனங்களாவார்கள் என்றும் கூறினான் (ஆதி. 48 : 19). எப்பிராயீம் என்றால், 'இரட்டிப்பாகக் கனிகொடுத்தல்' (doubly fruitful) என்று பொருள். நாம் இரட்சிக்கப்பட்டது முதல் ஜெயங்கொண்ட ஆண்பிள்ளையாக வெளிப்படும் வரை கனிகொடுக்கிற ஜீவியத்தில் பெருகிக்கொண்டேயிருக்க வேண்டும். நம்முடைய கனிகொடுத்தலின் ஜீவியம் எவ்வாறிருக்கிறது என்று நாம் சற்று ஆராய்ந்து பார்ப்போமாக. "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; ... நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது" என நம் கர்த்தர் கூறுகிறார் (மத். 7 : 16 - 18).

யோவான் 15 - ஆம் அதிகாரத்தில், மூன்று நிலவரங்களிலுள்ள திராட்சக் கொடிகளைக் குறித்துக் கர்த்தர் கூறுகிறார். அவை, கனிகொடாதிருக்கிற கொடி, கனிகொடுக்கிற கொடி, மிகுந்த கனிகளைக் கொடுக்கிற கொடி என்பவையாகும். இவற்றுள் கனிகொடாதிருக்கிற கொடி அறுப்புண்டு, அக்கினியிலே போடப்படும். கனி கொடுக்கிற கொடியானது, எஜமான் எதிர்பார்க்கிற அளவுக்குக் கனி கொடாமல், தன்னிலுள்ள ஒருசில கனிகளில் மாத்திரம் திருப்தியுற்று, கனிகொடுத்தலில் பெருகாமல் இருக்குமாயின், நாளடைவில் அது கனியற்ற கொடியாக மாறிப்போகும். எனவே அது அதிக கனிகளைக் கொடுக்கத்தக்கதாகத் தேவன் அதைக் கிளை நறுக்கிச் சுத்தம் பண்ணுகிறார். கிறிஸ்தவ ஜீவியத்தில், நாம் அனுதினமும் முன் நோக்கிச் சென்றுகொண்டிருக்க வேண்டும். மாறாக, நாம் வளர்ச்சியற்றவர்களாய் இடையில் நின்று விடுவோமாகில், நாளடைவில் பின்நோக்கிச் செல்லுகிறவர்களாய் மாறிவிடுவோம். இந்நிலவரம் உண்டாகாதிருக்கும்படி தேவனுடைய சுத்திகரிப்பின் கிரியைக்கு நம்மை நாம் ஒப்புக்கொடுப்போமாக. மூன்றாவது வகையான கொடியோ மிகுந்த கனிகளைக் கொடுக்கிறது. "ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்" (யோவான் 15 : 5). கிறிஸ்துவினிமித்தம் நமக்கு வருகிற எல்லா சோதனைகளின் மத்தியிலும், நாம் அவரில் உறுதியாக நிலைத்திருப்போமாகில், மிகுந்த கனிகளைக் கொடுக்கிறவர்களாயிருப்போம். நாம் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் பிதா மகிமைப்படுவார் (வச. 8). அப்போது, "எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடேகூட நிலைத்திருந்தவர்கள் நீங்களே" என்று கர்த்தர் நம்மைக் குறித்துச் சாட்சியுங் கொடுப்பார் (லூக்கா 22 : 28).

ரோமருக்கு எழுதிய நிருபத்தின் விளக்கவுரை

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

ரோமர் 5 : 3 - 5 - இன் விளக்கத்தின் தொடர்ச்சி:

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய விசுவாசம் சாதாரணமான விசுவாசமாயிருந்திருந்தால், அவர்களைப் பரிசோதிப்பதற்குச் சூளையைச் சாதாரணமாய்ச் சூடாக்கினால் போதுமானதாயிருந்திருக்கும். ஆனால் அவர்களுடைய விசுவாசம் மிகவும் விலையேறப்பெற்றதாயிருந்தபடியால், அந்த அக்கினிச் சூளை ஏழு மடங்கு அதிகமாய்ச் சூடாக்கப்பட்டதாக நாம் காண்கிறோம். இந்த உபத்திரவமாகிய அக்கினிச் சூளையில் அவர்கள் கைகளிலும் கால்களிலும் கட்டப்பட்டிருந்த கயிறுகள் அறுந்து அவர்கள் விடுதலையாக்கப்பட்டதுமன்றி, நான்காவது ஆளின் சாயலும் காணப்பட்டதாக எழுதப்பட்டிருக்கிறது. இந்த நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது என்று நேபுகாத்நேச்சார் கூறுவதாக நாம் காணலாம். அவர்களுக்கிருந்த விசுவாசம் அக்கினியால் பரிசோதிக்கப்பட்டபோதுதான் இவ்வித மேன்மையை அவர்கள் அடைந்துகொண்டனர். அப். பேதுருவும் இதைக் கருத்திற் கொண்டே, "உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" என்று எழுதியிருக்கிறார்.

அதுமாத்திரமல்ல, உபத்திரவத்தின் மேல் உபத்திரவமுண்டாகும்போது, அவ்வுபத்திரவங்கள் நம்முடைய சுபாவத்தையும் உருவாக்குகின்றன. தாவீதும், "நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன்" என்று சொல்லுகிறான் (சங். 119 : 71). இங்கு பொறுமை என்று கூறப்பட்டிருப்பது வெறும் பொறுத்துக்கொள்வது என்ற கருத்துடையதல்ல. பொறுமை என்ற வார்த்தையினுடைய ஆழ்ந்த கருத்து, அசைக்கப்படாத தளராத உறுதியான தீர்மானத்துடன் காத்திருப்பது என்பதே (Constancy, unflinching endurance and resolution). மணவாட்டியின் வஸ்திரம் மெல்லியதாயிருந்தது (வெளி. 19 : 8) என்பதின் கருத்து, உபத்திரவங்கள் அவளுடைய ஜீவியத்தை மிகவும் தாழ்மையும் பொறுமையுமுடையதாய் மாற்றியிருக்கிறது என்பதே. சிலர் தாங்கள் எவ்வளவு பொறுமையுள்ளவர்களாயிருந்தாலும் உபத்திரவங்கள் தொடர்ந்து வந்துகொண்டேயிருப்பதைக் குறித்து அதைரியமடைந்து, சோர்ந்துபோகின்றனர். ஆனால் வெறும் பொறுமையாயிருப்பதினால் மாத்திரம் நாம் மேற்கூறிய அனுபவங்களை அடைந்துகொள்ள முடியாது என்பதை விளங்கிக்கொள்கிறோம். ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் விசேஷித்த அனுபவமுடையவர்களாய்க் காணப்பட வேண்டுமென்று தேவன் வாஞ்சிக்கிறார். இதற்காகவே உபத்திரவங்களைத் தேவன் தொடர்ந்து அனுமதித்துக்கொண்டிருக்கிறார்.

நோவாவின் பேழை ஓரளவிற்கு உயர்ந்த பின்பு பெய்துகொண்டிருந்த மழையும் நின்று, பூமியின் ஊற்றுக்கண்களும் மூடப்பட்டிருந்தால் அந்தப் பேழை அரராத் மலையில் போய் நின்றிருந்திருக்க முடியாது. தண்ணீர் வற்றியவுடன் அந்தப் பேழை வேறெங்கேயாவது ஒரு தவறான இடத்தில் தரைதட்டி நின்றிருக்கக்கூடும். ஆனால் மூடப்பட்ட மலைகளுக்கும் மேலாய் பதினைந்து முழ உயரத்திற்கு ஜலம் பெருகியிருந்ததாக நாம் காண்கிறோம். கடைசியாக ஜலம் வற்றினபின்பு இந்தப் பேழை அரராத் என்னும் மலைகளின்மேல் தங்கிற்று. இதைப்போலவே உபத்திரவங்களும் கஷ்டங்களும் நம்முடைய ஜீவியத்தில் வராவிட்டால் நம்முடைய விசுவாசமாகிய பேழை உயர்த்தப்பட்டு நாம் தேவமகிமையை வந்து அடைய முடியாது.

பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுடைய ஜீவியத்திலும் இப்படிப்பட்ட உபத்திரவங்கள் உண்டாயிராவிட்டால் அவர்கள் மேன்மையான அனுபவங்களை அடைந்திருக்க மாட்டார்கள். ஆரம்ப நாட்களில் அவர்கள் இவ்வித அனுபவங்களை உடையவர்களாயிராவிட்டாலும், அவர்கள் கடந்து சென்ற உபத்திரவமாகிய பாதைகள் அவர்களை மேன்மையான அனுபவமுடைய மனுஷராய் மாற்றிவிட்டன. இதற்கு உதாரணம், யோசேப்பும் யோபும் ஆவர். தமிழ் வேதாகமத்தில் 'உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும் உண்டாக்குகிறதென்று' தவறாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆங்கிலத்திலும், மூல பாஷையிலும் 'பொறுமையானது' 'அனுபவத்தை' (experience) உண்டாக்குகிறதென்றே மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த அனுபவம் 'நாம் தேவ மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையில்' நம்மை உறுதிப்படுத்துகிறது.

"அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக் காரருக்காக மரித்தார்" (5 : 6).

இவ்வசனத்தில் 'பெலனற்றவர்களாயிருக்கும்போது' என்று குறிப்பிடப்பட்டிருப்பது சரீரத்தில் காணப்படும் சாதாரண பெலவீனமல்ல, ஆனால் நம்முடைய உள்ளான மனுஷனில் காணப்படும் பெலவீனமாகும். ஆனபடியினால் தான் ஒரு பாவத்திலேயோ அல்லது கெட்ட பழக்கங்களிலேயோ ஒருவன் வெகு இலேசாக இறங்கி விடுகிறான். ஆனால் இப்பாவங்களினின்று அவன் தன் சொந்த முயற்சிகளைக் கொண்டோ, பிரயாசங்களைக் கொண்டோ, தீர்மானங்களைக் கொண்டோ விடுதலை பெற முடியாது. மிகப் பெரிய கல்விமான்களும் தலைவர்களும், தத்துவஞானிகளும் புகைப்பிடிப்பதற்கும், மதுபானம் அருந்துவதற்கும், இழிவான செயல்களை நடப்பிப்பதற்கும் பொருளாசைக்கும் அடிமைப்பட்டிருப்பதை நாம் சாதாரணமாய்க் காணலாம். அவர்கள் தங்களுடைய ஞானத்தினாலேயோ, கல்வியினாலேயோ, தங்களுக்கிருக்கும் அதிகாரங்களினாலேயோ இப்படித் தங்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் காரியங்களிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள முடியாதவர்களாயிருக்கிறார்கள். இது அவர்களை மேற்கொள்ளும் பெலவீனமாயிருக்கிறது. அவர்கள் எவ்வாறு இவ்வித பெலவீனங்களுக்கு அடிமைகளானார்களென்று ஆராய்ந்தால் தேவனுடைய பிரமாணங்களை மீறினதினாலேயே என்று நாம் அறிந்துகொள்ளலாம். பிரமாணத்தை மீறுவதே பாவம் என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆகையினால் மீறுதல், ஒருவன் பாவம் செய்யக்கூடிய அளவிற்கு அவனைப் பெலவீனனாக்கிவிடுகிறது. இக்காரணத்தைக்கொண்டே மனுஷன், ஆவி ஆத்துமா சரீரம் இம்மூன்றிலும் பெலவீனமும், தோல்வியுமுடையவனாகவே காணப்படுகிறான். மனுஷனை இவ்வித பெலவீனங்களினின்று விடுதலையாக்கும்படி கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒரு பெலவீனனைப்போல சிலுவையில் மரித்தார். அவர் சிலுவையில் மரித்தபோது நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, நம்முடைய பெலவீனங்களையும் ஏற்றுக்கொண்டுதான் மரித்தார். அநேகர் தங்களை அடிமைப்படுத்தும் பாவங்களையும், தீய பழக்கவழக்கங்களையும் மேற்கொள்ள முடியாமல் தாங்கள் தோல்வியடைந்தவர்களாயும் பெலவீனர்களாயுமிருப்பதை உணர்ந்து கவலைப்படுகிறார்கள். கிறிஸ்து பெலவீனருக்காக மரித்தார் என்று எழுதப்பட்டிருந்தாலும், நம்மை இப்படிப் பெலவீனப்படுத்தும் நம்முடைய மீறுதல்களினின்று நம்மை விடுதலையாக்கும்படியாகவே அவர் மரித்தார் என்ற சத்தியத்தை நாம் மறந்துவிடுகிறோம். சத்தியம் இப்படியிருந்தாலும் நாம் இதை முழு இருதயத்தோடும் விசுவாசியாவிட்டால் இந்தச் சத்தியம் நமக்கு நன்மை பயக்காது. இந்தச் சத்தியத்தை முழு இருதயத்தோடும் விசுவாசித்து அங்கீகரித்துக்கொண்ட எத்தனையோ பேர் இவ்வித பெலவீனங்களினின்றும் தோல்விகளினின்றும் விடுவிக்கப்பட்டு இன்றும் பரிசுத்த ஜீவியம் செய்து வருகிறார்களென்பது அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு சாட்சியாகும்.

'குறித்த காலம்' (time that was due or set or appointed) என்பது செருபாபேலின் ஆலயத்திற்குப் பின் கட்டப்பட்ட ஏரோதின் ஆலய காலத்தில், யூதர்களின் சுய ஆளுகையை முற்றிலும் ரோமர் எடுக்கும் முன்பாகவும், தானியேலின் வாரங்களின் கடைசியிலும் கிறிஸ்து வெளிப்பட்ட காலத்தைக் குறிக்கிறது. ஆகையால் குறித்த காலம் என்பது சரித்திர சம்பந்தமாக மேற்கூறப்பட்ட காலமும், காலங்களின் (Dispensations) அட்டவணையில் மனச்சாட்சி, நியாயப்பிரமாணம் என்ற காலங்களின் முடிவும் என்று நாம் காண்கிறோம்.

******

😐⌖⌑🕚← ☼ℯ☹☆

இந்நாட்களில் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றி எல்லா இடங்களிலும் சாதாரண மாகப் பிரசங்கிக்கப்பட்டுவருகிறது. உலகில் நடக்கும் சம்பவங்கள் கர்த்தருடைய வருகை மிக சமீபம் என்பதை வெளிப்படுத்துகின்றன. கர்த்தருடைய வருகையில் யார் எடுத்துக்கொள்ளப்படுவார்கள், அவர்களுடைய தகுதிகள் யாவை என்பன போன்ற பல கேள்விகள் அநேகருடைய மனதில் காணப் படுகின்றன. அதே சமயத்தில் பிசாசானவன் அநேகரை - தெரிந்துகொள்ளப்பட்டவர்களிலும் சிலரை - கர்த்தருடைய வருகையைக் குறித்த சிந்தையற்றவர்களாக்கிக்கொண்டிருக்கிறான். கர்த்தருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு ஒருவன் அடைந்திருக்க வேண்டிய ஆவிக்குரிய நில வரத்தை, "ராஜஸ்திரீ ஓப்பீரின் தங்கம் அணிந்தவளாய் உமது வலதுபாரிசத்தில் நிற்கிறாள்" என்று சங்கீதக்காரன் 45 - ஆம் சங்கீதத்தில் வெளிப்படுத்துகிறான் (வச. 9). இதுவே கர்த்தருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு இப்பூமியில் தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டு ஜீவிக்கிற ராஜஸ்திரீ அல்லது புதிய ஏற்பாட்டுச் சபையின் ஆவிக்குரிய நிலவரமாகும். சங்கீதம் 45 கர்த்தராகிய இயேசுவை ராஜாவாக வெளிப்படுத்துகிறது. ஆம்! நம்முடைய ஆண்டவராகிய இயேசு ராஜாதி ராஜாவாக, கர்த்தாதி கர்த்தாவாக,

எல்லா நாமத்திற்கும் மேலான நாமமுடையவராக, எல்லா வானங்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டு, பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவருக்கே மகிமையுண்டாவதாக.

கர்த்தராகிய இயேசு இப்பூமியில் ஜீவித்த நாட்களில், "ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். ... நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்" (யோவான் 14 : 2, 3) என்று தம் சீஷர்களிடம் கூறினார். அவர் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணினபோதும், "பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்" என்றார் (யோவான் 17 : 24). இதுவே கர்த்தருடைய நோக்கமும் வாஞ்சையுமாயிருந்தது. நித்தியத்தில் கர்த்தர் தம்மோடுகூட சிங்காசனத்தில் வீற்றிருக்கச் செய்யும்படியாக பூமியில் விசேஷமாக ஒரு கூட்டத்தாரைத் தெரிந்தெடுத்து அவர்களை அதற்கென்று ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறார். கர்த்தராகிய இயேசு சிலுவையில் தம்மை ஒப்புக்கொடுத்ததின் நோக்கம், மனுக்குலத்தின் இரட்சிப்பு மாத்திரமல்ல, பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள ஒரு சபையைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதுமே ஆகும் (எபே. 5 : 27). அவர்களே ராஜஸ்திரீயாய் ராஜாவாகிய இயேசுவின் வலதுபாரிசத்தில் நிற்கிறவர்கள். அந்த ராஜஸ்திரீயைக் குறித்து, "ராஜகுமாரத்தி உள்ளாகப் பூரண மகிமையுள்ளவள்" எனக் கூறப்பட்டுள்ளது (சங். 45 : 13).

தேவனுடைய ஜனங்களின் மத்தியில் பல ஆவிக்குரிய நிலவரங்களில் ஜீவிக்கிற கூட்டத்தாரைக் குறித்து ராஜஸ்திரீகள், மறுமனையாட்டிகள், கன்னியர்கள் என உன்னதப்பாட்டு 6 : 8 - இல் நாம் வாசிக்கிறோம். இங்கே 'ராஜஸ்திரீகள்' என்று பன்மையில் குறிப்பிடப்பட்டிருப்பது, 'ராஜஸ்திரீ' அல்லது ராஜகுமாரத்தியாகிய மணவாட்டியைக் குறிக்கிறதில்லை. 'ராஜஸ்திரீகள்' என்பது பரிசுத்தஆவியின் அபிஷேகம் பெற்ற கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது. இவர்கள் ஆவிக்குரிய வரங்கள், தாலந்துகள் உடையவர்களாயிருந்தாலும் தேவனுடைய நோக்கம் நிறைவேறும்படி தங்களுடைய ஜீவியத்தைப் பூரணமாய் ஒப்புக்கொடாமலிருக்கிறபடியால், தேவனுடைய பரிபூரண சித்தத்தை நிறைவேற்ற முடியாதவர்களாய், ராஜாவின் வலதுபாரிசத்தில் நிற்கத் தகுதியற்றவர்களாயிருக்கிறார்கள். எனவே இவர்கள் ராஜகுமாரத்தியாகிய, ராஜாவின் வலதுபாரிசத்தில் நிற்கும் 'ராஜஸ்திரீ' அல்லது மணவாட்டி அல்ல. மறுமனையாட்டிகள் என்று குறிப்பிடப்பட்டிருப்பவர்கள் ராஜாவோடு சம்பந்தப்பட்டவர்களாயிருப்பினும் அவருக்கு விவாகம்பண்ணப்பட்டவர்களல்ல. யோவான்ஸ்நானன் தன்னைக் குறித்து, தான் மணவாளனுடைய தோழன் என்று சொல்லுகிறான். இவர்கள் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களாவர். 'கன்னியர்கள்', பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெற்றிருப்பினும் தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தைக் குறித்துக் கவலையற்றவர்களாய், பரிசுத்தவான்களின் ஐக்கியத்தில் நிலைத்திருந்து அப்போஸ்தல உபதேசத்தின்படி ஜீவித்துப் பரிசுத்தமாக்கப்பட்டு உத்தமியாக, ஒரே கற்புள்ள கன்னிகையாக மாற்றப்படுவதற்குப் பிரயாசப்படாமல், அசதியாய் ஜீவிப்பவர்கள். இவர்கள் கர்த்தருடைய வருகையில் கைவிடப்பட்டு, உபத்திரவ காலத்தின் முதல் பகுதியின் இறுதியில் மணவாளனையும் மணவாட்டியையும் எதிர்கொண்டு செல்லும் புத்தியுள்ள கன்னியர்கள் ஆவர் (மத். 25 : 1, 6 - 10). இவர்கள் உபத்திரவ காலத்து இரத்த சாட்சிகள் ஆவர்.

உன்னதப்பாட்டு 6 : 9 - இல், "என் புறாவோ, என் உத்தமியோ ஒருத்தியே; அவள் தன் தாய்க்கு ஒரே பிள்ளை; அவள் தன்னைப் பெற்றவளுக்கு அருமையானவள்" என நாம் வாசிக்கிறோம். ஆம்! அவளே ஓப்பீரின் தங்கத்தினால் அலங்கரிக்கப்பட்டவளாய், ராஜாவாகிய இயேசுவின் வலதுபாரிசத்தில் நிற்கும் மணவாட்டியாவாள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டு, தண்ணீர் ஞானஸ்நான சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற தேவஜனங்களாகிய நாம் ஒவ்வொருவரும் ஆவிக்குரிய பிரகாரமாக உன்னதங்களில் கிறிஸ்துவுடன்கூட உட்காரும் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம் (எபே. 2 : 7). இருப்பினும் நாம் இன்னும் தேவன் நமக்கு வைத்திருக்கிறதான ஆவிக்குரிய, உன்னதமான, பரிபூரண ஆசீர்வாதங்களை அடைந்து கொள்ளும்படி வாஞ்சிக்க வேண்டும். ஆகவே அப். பவுல், "நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்" (கொலோ. 3 : 1, 2) என்று கூறுகிறார். அதற்காக நாம் பாவத்திற்கும் உலகத்திற்கும் மாம்சத்திற்கும் அதின் ஆசை இச்சைகளுக்கும் சுயத்திற்கும் முற்றிலும் மரித்தவர்களாய் (வச. 3), பழைய மனுஷனையும் அவனுடைய செய்கைகளையும் களைந்து போட்டு (வச. 5 - 9), பரிசுத்தஆவியின் அபிஷேகத்தின் மூலமாக தேவனுடைய திவ்ய சுபாவங்களைத் தரித்துக்கொண்டவர்களாய் (வச. 12 - 15) ஜீவிக்க வேண்டும். இந்தக் கடைசி நாட்களில் பிசாசானவன் அநேகருடைய ஜீவியத்தில் தந்திரமாகக் கிரியை செய்து, ஆவிக்குரிய உன்னத ஜீவியம் செய்யக் கூடாதபடி பலவித உலகக் கவலைகளையும் சிற்றின்பங்களையும் கொண்டுவந்து, அழிந்துபோகிற பூமிக்குரிய காரியங்களின் மேல் அவர்கள் தங்கள் மனதையும் இருதயத்தையும் செலுத்தச் செய்து, ஆவிக்குரிய மேலான சிந்தையையும் தரிசனத்தையும் இழந்து

போகும்படி அவர்களுடைய மனக்கண்களைக் குருடாக்கிக்கொண்டிருக்கிறான். ஆகையால் பிரிய மானவர்களே! கர்த்தருடைய உன்னத அழைப்பை உணர்ந்து தேவஆவியினால் பெலப்படுத்தப்பட்ட வர்களாய் நம்முடைய ஆவிக்குரிய மேலான தரிசனத்தைப் புதுப்பித்து, கிறிஸ்துவுடன்கூட பிதா வின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிற மேலான அனுபவத்தைக் காத்துக்கொள்ள நாம் வாஞ்சிப்போமாக.

சங்கீதம் 45 : 9 - இல் ராஜஸ்திரீ ராஜாவின் வலதுபாரிசத்தில் நிற்கிறாள் என நாம் காண்கிறோம். அவள் ராஜாவின் மனைவியாவாள். ஏனெனில் மனைவிதான் புருஷனுடைய வலதுபாரிசத்தில் நிற்கத் தகுதியுள்ளவள் ஆவாள். உலக வழக்கின்படி, மணவாட்டியே மனைவியாக மாற்றப்படுகிறாள். ஆனால் சபையைப் பொறுத்த வரையில் அது பரிசுத்தஆவியின் அபிஷேகத்தினால் கிறிஸ்து வுக்கு மனைவியாய் மாற்றப்பட்டு, பின்னர் அவருடைய வருகையில் அவரது மணவாட்டியாகிறது. கிறிஸ்துவின் மணவாட்டியாய் மாற்றப்படுவதற்கு இந்த மனைவி ஓப்பீரின் தங்கம் அணிந்தவளாய் இருக்க வேண்டும். இந்த ஓப்பீர் ஆவிலா தேசத்தின் அருகிலுள்ள ஒரு இடமாகும். ஆவிலா என்ற வார்த்தைக்கு, ‘உபத்திரவம்’ அல்லது ‘பாடுகள்’ என்றும், ஓப்பீர் என்ற வார்த்தைக்கு ‘சாம்பல்’ என்றும் அர்த்தமாகும். ஆதியாகமம் 2 : 11, 12 - இல், “முதலாம் ஆற்றுக்குப் பைசோன் என்று பேர், அது ஆவிலா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும்; அவ்விடத்திலே பொன் விளையும். அந்தத் தேசத் தின் பொன் நல்லது” என நாம் வாசிக்கிறோம். இந்த ஓப்பீர் சிவந்த சமுத்திரத்தின் தென்முனையிலுள்ள ஒரு இடமாயிருந்தது. இவ்விடத்தின் பொன்னும் வாசனைமரங்களும் இரத்தினங்களும் மிகவும் விலையேறப்பெற்றவையாயும் பிரசித்திப் பெற்றவையாயுமிருந்தன (I இராஜா. 9 : 28 ; 10 : 11). இந்தப் பொன்னை எடுப்பதற்கு ஒருவன் ஆவிலா தேசத்தின் வழியாகப் பிரயாணம்பண்ணி, ஓப்பீர் என்ற இடத்தை அடைய வேண்டும். அதாவது, ஒருவன் தன்னுடைய ஆவிக்குரிய பிரயாணத்தில் பலவித மான உபத்திரவங்கள், பாடுகள், சோதனைகள் வழியாய்க் கடந்து சென்று, கடைசியில் சாம்பலைத் தவிர மீதியாக ஒன்றுமில்லை என்கிற அனுபவத்தை - சுயம் முற்றிலும் சுட்டெரிக்கப்பட்ட அனுபவத்தை அடைய வேண்டும். அப்படிப்பட்டவர்களுடைய ஜீவியமே தேவனுடைய பார்வையில் ஓப்பீரின் தங்கத்தைப் போன்ற விலையேறப்பெற்றதாய்க் காணப்படும்.

ராஜாதி ராஜாவாகிய இயேசுவோடுகூட நாம் நித்தியத்தில் அவருடைய சிங்காசனத்தில் வீற்றி ருக்க வேண்டுமென்றால், அதற்கேற்ற விலைக்கிரயத்தை நாம் செலுத்த வேண்டும். கர்த்தராகிய இயேசு இவ்வுலகில் ஜீவித்தபோது, “உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்” (யோவான் 16 : 33) என்றார். அவர் இவ்வுலகில் பிர வேசித்த நாளிலிருந்தே பலவித கஷ்டங்களை அனுபவித்தார். கடைசியில் அவர் சொல்லொண்ணாத் துயரங்களையும் அவமானங்களையும் பாடுகளையும் சகித்தவராய்ச் சிலுவையில் தம் ஜீவனை விட்டார். இப்போது அவர் தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் (எபி. 12 : 2). தேவனுடைய பிள்ளையே! கர்த்தராகிய இயேசுவோடு கூட வீற்றிருக்கும்படியாக அழைக்கப்பட்ட நீ அவர் சென்ற பாதையில் கடந்துசெல்லத்தான் வேண்டும். ஒருமுறை யாக்கோபு, யோவான் என்பவர் களுடைய தாயார் கர்த்தராகிய இயேசுவிடத்தில் வந்து, தன்னுடைய குமாரர்கள் இருவரும் அவரு டைய ராஜ்யத்தில் அவருடைய வலதுபாரிசத்திலும் இடதுபாரிசத்திலும் உட்காரும்படியாக விரும்பி விண்ணப்பித்தபோது, அவர் பிரதியுத்தரமாக, “நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார். அதற்கு அவர்கள்: கூடும் என்றார் கள்” (மத். 20 : 20 - 22). ஆம்! அவர்கள் கிறிஸ்துவுக்காகப் பாடுகளையும் உபத்திரவங்களையும் அனு பவித்து மரித்தனர். ஸ்தேவான் கிறிஸ்துவுக்காகக் கல்லெறியுண்டு இரத்தசாட்சியாக மரிக்கும் வேளை யில், தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் தரிசித்தவனாய் மரித்தான். இன்னும் அநேக பரிசுத்தவான்கள் கிறிஸ்துவுக்காகவும் சத்தியத்தினிமித்த மாகவும் வந்த உபத்திரவங்களையும் பாடுகளையும் சந்தோஷத்தோடு சகித்தவர்களாகத் தங்களுடைய முழு ஜீவனையும் பானபலியாக வார்த்து நித்தியத்தில் அவருடைய சிங்காசனத்தில் அவரோடுகூட வீற்றிருப்போம் என்ற மகிமையான நம்பிக்கையோடே இவ்வுலகத்தை விட்டுக் கடந்துபோயிருக்கின்றனர். II கொரிந்தியர் 11 : 23 - 27 - இல் கூறப்பட்டுள்ள அத்தனைக் கஷ்டங்களையும் அனுபவித்த அப். பவுல் அவற்றை அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான உபத் திரவம் என்று குறிப்பிடுகிறார் (II கொரி. 4 : 17). தேவ பிள்ளையே! நித்தியத்தில் நாம் ஆண்டவராகிய இயேசுவோடுகூட வீற்றிருப்போம் என்பதை எண்ணும்போது இவ்வுலகில் நாம் அனுபவிக்கிற எந்தப் பாடுகளும் உபத்திரவங்களும் இலேசானவையே.

மேலும், சர்வவல்லவரிடத்தில் நல்மனம் பொருந்தி, அவருடைய பிரமாணங்களைக் கைக் கொண்டு, அவரோடு பழகிச் சமாதானமாய் ஜீவிப்பவர்கள் ஆற்றுக்கற்களைப் போல் மிகுதியாக ஓப்பீரின் தங்கத்தைச் சேர்த்து வைக்கிறவர்களாயிருப்பார்கள் என நாம் யோபு 22 : 21 - 24 - இல் வாசிக்கிறோம். நமக்குக் கடினமாய்த் தோன்றும் சில பாதைகளில் தேவன் நம்மை நடத்தும்போது, நாம் முறுமுறுக்காமல், அவரிடம் கேள்வி கேட்காமல், அவருக்கு முற்றிலும் இசைந்து கொடுத்து, கர்த்தரோடுள்ள ஐக்கியத்தை காத்துக்கொள்வோமாகில், ஓப்பீரின் தங்கத்தைப் போன்ற விலையேறப்பெற்ற சுபாவங்களை நாம் நம்மில் மிகுதியாய்ச் சேர்த்துக்கொள்கிறவர்களாயிருப்போம். “சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே ... தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது” (I பேதுரு 3 : 4). நாம் சந்தோஷத்துடன் சகிக்கும் பாடுகள் நம்மை

விலையேறப்பெற்றவர்களாய் உருவாக்குகின்றன. பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலுக்கு நம்மை மனப்பூர்வமாக ஒப்புக்கொடுக்கும்போது அவர் நம்மை ஓப்பீரின் தங்கத்தைப் போல விலையேறப் பெற்றவர்களாய் மாற்றுவார். நம்முடைய கர்த்தராகிய இயேசு மனுஷரால் அசட்டைபண்ணப்பட்ட, புறக்கணித்துத் தள்ளப்பட்ட கல்லாயிருந்தார். இப்போதோ அவர் சீயோனிலே விலையேறப் பெற்ற மூலைக்கல்லாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறார். தேவனுடைய பிள்ளைகளுடைய ஜீவி யத்திலும் இவ்விதமே சம்பவிக்கிறது. கர்த்தர் நம்மை உலகத்திலிருந்து தெரிந்தெடுத்தபடியினால் உலகம் நம்மைப் பகைக்கிறது. யோசேப்பு தன்னுடைய சகோதரரால் பகைக்கப்பட்டு, தள்ளப்பட்டான். அவன் கடந்து சென்ற பாதை கரடுமுரடானதாயிருந்தாலும் தேவனிடத்தில் தன்னை ஒப்புக்கொடுத்து அதனூ டாகக் கடந்து சென்றபடியினால் முடிவில் அவன் ஒரு விலையேறப்பெற்றவனாய் மாறினான். மனு ஷருடைய உதவியற்ற, ஆறுதலற்ற சில சந்தர்ப்பங்களினூடாக தேவன் நம்மை நடத்தக் கூடும். அவை களெல்லாம் நம்மை உருவாக்கும்படியாகவே. “சிறுமைப்பட்டவளே, பெருங்காற்றில் அடிபட்டவளே, தேற்றரவற்றவளே, இதோ, நான் உன் கல்லுகளைப் பிரகாசிக்கும்படி வைத்து, ... உன் மதில்களையெல்லாம் உச்சிதமான கற்களுமாக்குவேன்” என நாம் வாசிக்கிறோம் (ஏசாயா 54 : 11, 12). இதுவே ஆட்டுக்குட்டியானவருடைய மனைவி, மணவாட்டியாக - தேவனுடைய மகிமையை அடைந்த புதிய எருசலேமாக - மாற்றப்படுகிற அனுபவமாகும் (வெளி. 21 : 9 - 11).

ஒருவன் ஆவிலா தேசத்தின் வழியாய்ப் பிரயாணம் செய்து ஓப்பீர் என்ற இடத்தை அடைவது போல, நம்முடைய ஜீவியத்தில் வருகிற பாடுகளைக் கண்டு நாம் பயந்து பின்னிட்டுத் திரும்பாமல் ‘முற்றிலும் சாம்பலாக்கப்படுகிற’ அனுபவத்திற்கு வர வேண்டும். இது, பாடுகளில் பின்னிடையாமல், முடிவுபரியந்தம் நிலைத்திருக்கிற ஜீவியத்தைக் காட்டுகிறது. ஆகவேதான் வெளிப் படுத்தின விசேஷம் 2 : 10 - இல், “ பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்” என கர்த்தர் சொல்லுகிறார். ராஜஸ்திரீக்கே கிரீடம் தரிப்பிக்கப்படுகிறது. முற்றிலும் சாம்பலாக்கப்படும் அனுபவத்தைச் சர்வாங்க தகனபலி யில் நாம் காண்கிறோம். “சர்வாங்க தகனபலியானது இராமுழுவதும் விடியற்காலமட்டும் பலிபீடத்தின்மேல் எரியவேண்டும்; ... ஆசாரியன் ... சாம்பலை எடுத்து, பலிபீடத்துப் பக்கத்தில் கொட்டி, ... வேறு வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, அந்தச் சாம்பலைப் பாளயத்துக்குப் புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொண்டுபோய்க் கொட்டக்கடவன்” (லேவி. 6 : 9 - 11). நம்முடைய ஜீவியத்தில் வருகிற உபத்திரவங்கள், பாடுகள் ஆகியவற்றைக் கண்டு நாம் பின்னிடையாமல் நம்முடைய சுயசித்தமும் விருப்பங்களும் முற்றிலும் சாம்பலாக்கப்படும்படி பரிசுத்தஆவியானவருக்கு நம்மை ஒப்புக்கொடுத்து, பலிபீடத்தின் மீது வைக்கப்பட்டுள்ள ஒரு பலிப்பொருளைப் போல நாம் அமர்ந்திருப்போமாகில், பரிசுத்தஆவியானவராகிய அக்கினி நம்மில் தொடர்ந்து கிரியை செய்து, நம் சுயத்தை முற்றிலும் சாம்பலாக மாற்றிவிடுவார். பலி பீடத்தின் மீது வைக்கப்பட்ட சர்வாங்க தகனபலி முற்றிலும் எரிந்து, சாம்பலைத் தவிர வேறு ஒன்றும் அதில் மீதியாயிராது. இது பூரணமாக பலியாக்கப்படுகிற அனு பவத்தைக் காட்டுகிறது. இப்படிப்பட்டவர்கள் இரண்டுவித சாட்சியுடையவர்களாயிருப்பர்: (1) சபை யில் தேவ ஜனங்களின் மத்தியில் - சாம்பலைப் பலிபீடத்திலிருந்து எடுத்துப் பலிபீடத்துப் பக்கத் தில் கொட்டுவது; (2) வெளி உலகத்தில் - சாம்பலை எடுத்து பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோய்க் கொட்டுவது. இப்படியாக முற்றிலுமாய் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுடைய ஜீவியமே தேவனுடைய பார்வையில் ஓப்பீரின் தங்கத்தைப்போல் விலையேறப்பெற்றதாய் மாற்றப்படும். அவர்கள் கர்த்த ருடைய வருகையில் அவருக்கு மணவாட்டியாகக் காணப்படுவார்கள்.

“நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்தது போல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்” (வெளி. 3 : 21) என ஆண்டவர் வாக்களித்திருக்கிறார். ஆகவே நம்முடைய ஜீவியத்தில் வருகிற சோதனைகள், பாடுகளில், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக் கிறோமே என்று முழங்கிக்கொண்டு, தேவ அன்பினால் நிறைந்தவர்களாய், முன்செல்லுவோ மாக. அவரோடேகூட பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம் (II தீமோ. 2 : 12) என்கிற நம்பிக்கையோடு நாம் ஜீவித்து, கிறிஸ்துவின் நாளில் அவரைச் சந்திக்க ஆயத்தப்படுவோமாக.

வு□லுருர□டஅ ே□று□டு□அ

இயேசுகிறிஸ்து இந்தப் பூமியிலே ஜீவித்த நாட்களில் அநேக அற்புதங்களையும் அடையாளங் களையும் செய்தார்; வியாதியஸ்தரைச் சுகமாக்கினார்; அசுத்த ஆவிகளைத் துரத்தினார்; மரித் தோரை எழுப்பினார். இருப்பினும் அவர் பல பாடுகள் பட்டு, அவமதிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு மரித்தார். “மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; ... நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங் களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்

மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். ... கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்" (ஏசாயா 53 : 4 - 6) என்று அவருடைய பாடுகளும் சிலுவை மரணமும் தீர்க்கதரிசனமாக முன்னுரைக்கப்பட்டுள்ளது.

நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் நமக்கு வரவேண்டிய தண்டனையை இயேசுகிறிஸ்து அடைந்ததால், அதை விசுவாசிப்பவர்கள் பாவ மன்னிப்பையும், சரீர சுகத்தையும் பெற்றுக்கொள்கின்றனர். அதைக் குறித்தே ஏசாயா, "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?" என்று வினவுகிறான் (ஏசாயா 53 : 1). கர்த்தருடைய புயம் அல்லது வல்லமை வெளிப்படும்படியாக விசுவாசம் நமக்குத் தேவை. நாம் பூமிக்குரிய, ஆவிக்குரிய நன்மைகளைத் தேவனிடமிருந்து எதிர்பார்த்துக்கொண்டிருக்கலாம்; சரீர சுகத்திற்காகவோ, ஒரு பிரச்சினையிலிருந்து விடுதலை பெறும்படியாகவோ எதிர்நோக்கிக்கொண்டிருக்கலாம். தேவனுடைய வல்லமை வெளிப்படும்படியாக, அதிசயமான காரியங்களை இன்று கண்டோம் என்று நாம் சொல்லும்படியாக, தேவனை விசுவாசிக்க வேண்டும். கிறிஸ்துவினிடத்தில் கொண்டுவரப்பட்ட திமிர்வாதக்காரன் ஒருவன் பாவ மன்னிப்பையும் சரீர சுகத்தையும் பெற்றுக்கொண்ட ஒரு சம்பவத்தை நாம் இங்கு தியானிக்கலாம். இச்சம்பவம் மத்தேயு 9 : 2 - 8, மாற்கு 2 : 2 - 12, லூக்கா 5 : 17 - 26 ஆகிய வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பாத்திரமாக நாம் தியானிக்கலாம்.

திமிர்வாதக்காரன்:

திமிர்வாதக்காரன் படுத்த படுக்கையாயிருந்தான். தனக்குத்தானே அவனால் எதுவும் செய்துகொள்ள முடியாது. புசிக்கவோ குடிக்கவோ நடக்கவோ கை கால்களை அசைக்கவோ முடியாதவனாய், படுத்த படுக்கையாய்க் கிடந்து, சரீர வேதனையை அனுபவித்துக்கொண்டு, மற்றவர்களுக்குப் பாரமாயிருக்கிறேனே என்றும், தன் நிலைமை இப்படியாயிற்றே என்றும் அவன் தன் மனதிலும் வேதனையுடையவனாயிருந்தான். ஒருவேளை அவன் மரணத்தையுங்கூட விரும்பியிருக்கக் கூடும். கர்த்தராகிய இயேசுவின் சுகமாக்கும் வல்லமையைக் குறித்துத் தன் நண்பர்கள் மூலம் கேள்விப்பட்ட அவன், அவர்கள் அவரிடம் தன்னைக் கொண்டு செல்ல விரும்பியபோது அதற்குச் சம்மதித்ததிலிருந்து அவனிலும் விசுவாசம் இருந்தது என நாம் நிதானிக்கலாம். இதே போன்று வேதனை நிறைந்த சூழ்நிலையில் நீங்கள் இருக்கிறீர்களா? "தீராவியாதி அவனைப் பிடித்துக்கொண்டது; படுக்கையில் கிடக்கிற அவன் இனி எழுந்திருப்பதில்லை" என்று உங்கள் பகைவர்களும், பிராணசிநேகிதர்களும் கூறுகிறார்களா? தாவீது என்னும் இராஜா இப்படி வியாதிப்படுக்கையில் இருந்தபோது, தன் பாவத்தை அறிக்கை செய்து, "என் ஆத்துமாவைக் குணமாக்கும்" என்று ஜெபித்து, கர்த்தர் மேல் விசுவாசமாயிருந்தான். எனவே தேவன் அவனைத் தாங்கி வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப் போட்டார் (சங். 41 : 3 - 9).

மனிதனுக்கு வியாதி உண்டாக ஒரு முக்கிய காரணம் பாவமாகும். இயேசுகிறிஸ்து ஒரு வியாதியஸ்தனைச் சொஸ்தமாக்கியபோது, "அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ் செய்யாதே" என்று கூறியதாக நாம் யோவான் எழுதிய சுவிசேஷம் 5 : 14 - இல் வாசிக்கிறோம். பல சந்தர்ப்பங்களிலும் அவர் முதலாவது பாவங்களை மன்னித்து, பின்பு வியாதியஸ்தரைச் சுகமாக்கினார். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவ மன்னிப்பைப் பெறுவான் (அப். 10 : 43). இயேசுகிறிஸ்துவின் நாமத்தை விசுவாசிக்கும்போது, பாவமன்னிப்பு மட்டுமல்ல, சரீர சுகமும் உண்டாகிறது. அப். பேதுரு, தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனிதனைக் குணமாக்கினபோது, "அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது" என்று கூறியதுடன், "உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்" என்றும் கூறுகிறார் (அப். 3 : 2, 16, 20). பிரியமானவர்களே, உங்களுக்குச் சரீர சுகம் எவ்வளவு அவசியமாக உள்ளதோ, அதைவிட அதிகமாகப் பாவமன்னிப்பு உங்களுக்குத் தேவையாயிருக்கிறது. பாவமன்னிப்பையும், சரீர சுகத்தையும் இயேசுகிறிஸ்து இலவசமாகத் தருகிறார். எனவே, "நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" என்ற வேதவாக்கியத்தை விசுவாசித்து, விலையேறப்பெற்ற ஆத்தும இரட்சிப்பையும், சரீர சுகத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள். பாவத்தின் மேலும், வியாதிகளின் மேலும் இயேசுகிறிஸ்து அதிகாரமுடையவர். எனவே பாவங்களை மன்னிப்பதும், வியாதிகளைச் சுகமாக்குவதும் ஒன்றுபோல அவருக்கு எளிது. இதற்காக நீங்கள் அவரை விசுவாசித்தால் மட்டும் போதும். அந்தத் திமிர்வாதக்காரன் மேல் மனதுருகி அவனை நோக்கிப் பார்த்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்களுக்கும் பாவமன்னிப்பும் சரீர சுகமும் கட்டளையிட உங்களை நோக்கிப் பார்க்கிறார்.

வியாதியஸ்தனைச் சுமந்துவந்தவர்கள்:

'சில மனுஷர்' அந்தத் திமிர்வாதக்காரனைப் படுக்கையோடே எடுத்துக்கொண்டு வந்தனர் என்று லூக்கா எழுதின சுவிசேஷத்தில் நாம் வாசிக்கிறோம் (லூக்கா 5 : 18). அவர்கள் 'நான்குபேர்' என்று மாற்கு எழுதின சுவிசேஷத்தில் கூறப்பட்டுள்ளது (மாற்கு 2 : 3). அந்த நான்கு பேரிடமும், நாம் பின்பற்ற வேண்டிய நல்ல சுபாவங்கள் காணப்படுகின்றன. அவர்கள் விசுவாசம் உள்ளவர்களாகக் காணப்பட்டனர். மூன்று சுவிசேஷங்களிலும் 'இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு' என்று எழுதப்பட்டுள்ளது. அவர்களுடைய விசுவாசம் கிரியைகளில் வெளிப்பட்டது. கர்த்தராகிய இயேசு சுகமாக்குகிறார் என்று அவனுக்கு அறிவித்துவிட்டு, அவர்கள் தங்கள் வழியே சென்றுவிடவில்லை. அந்த வியாதியஸ்தனுக்குச் சுகத்தைப் பெற்றுத் தர வேண்டுமென்ற ஒருமனமும் வைராக்கியமும் அன்பும் உடையவர்களாக அவர்கள் செயல்பட்டனர். அவர்களுக்கு இது கடினமான ஒரு வேலையாயிருந்தாலும் அவர்கள் அவனைச் சுமந்து கொண்டு வந்தார்கள், அவனை உள்ளே கொண்டு போகவும், அவர் முன்பாக வைக்கவும் அவர்கள் "வகைதேடினார்கள்". வகை காணாமல், வீட்டின் மேல் தாங்களும் ஏறி, படுக்கையோடு அந்த வியாதியஸ்தனை மிகுந்த சிரமத்தின் மத்தியில் சிரத்தையோடு ஏற்றி, தட்டோடுகள் வழியாக ஜாக்கிரதையாகவும், சிரமத்தோடும் அவர்கள் அவனை இறக்கிவிட்டார்கள். இதில் நாம் கற்றுக்கொள்ளவும், கைக்கொள்ளவும் வேண்டிய முக்கியமான பாடமுண்டு. நம்மில் பலர் கர்த்தராகிய இயேசுவை அறிவிப்பதோடு நின்று விடுகிறோம். ஆனால் ஜனங்கள் ஆத்துமாவிலே விடுதலையையும், சரீரத்திலே சுகத்தையும் பெற்றுக்கொள்ளும்படி நாம் ஜெபத்தில் கர்ப்ப வேதனைப்படுவதுமில்லை; சரீரத்தில் பிரயாசப்படுவதுமில்லை. சிறிது முயற்சி எடுப்பவர்களுங்கூட ஏதாவது ஒரு தடையோ எதிர்ப்போ வரும்போது தங்கள் முயற்சியைக் கைவிட்டு விடுகின்றனர். ஆனால் இந்த நான்கு பேரைக் கவனித்துப் பாருங்கள். வீட்டினுள்ளே கொண்டுபோக வகையில்லையெனினும் தங்கள் முயற்சியை அவர்கள் கைவிடாமல், மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ, என்ன சொல்வார்களோ என்று தயங்கி நிற்காமல் வீட்டின்மேல் ஏறி, அவனையும் ஏற்றி, தடைகள் மத்தியில் விடாமுயற்சியுடன் தளராமல் கிரியை செய்து அவனுக்குச் சுகத்தைப் பெற்றுத் தந்தார்கள். தேவனுடைய பிள்ளைகளே, ஆவிக்குரிய பிரகாரமாகவும், சரீரப் பிரகாரமாகவும் மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் கடினமாய்த் தோன்றும்போதும், எதிர்ப்புகள் உண்டாகும்போதும், ஒருமனதை இழந்துவிடாதீர்கள். உங்கள் பிரயாசத்தையும் விட்டுவிடாதீர்கள். அப்.பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, "நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்" என்று நாம் செய்ய வேண்டிய நான்கு காரியங்களை வலியுறுத்துகிறார் (I தீமோ. 2 : 1). எனவே தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், ஜனங்களுடைய இரட்சிப்புக்காகவும், சரீர சுகத்திற்காகவும், தனிமையில், இரகசியமாக ஜெபத்தில் போராடவும், வெளியரங்கமாக ஐக்கியமும் ஒருமனமும் உடையவர்களாய் எதிர்ப்புகளின் மத்தியிலும், தடைகளின் மத்தியிலும், அன்போடு வைராக்கியமாய்ப் பிரயாசப்படவும் வேண்டும்.

ஜனக்கூட்டம்:

கர்த்தராகிய இயேசு வீட்டிலிருக்கிறாரென்று ஜனங்கள் கேள்விப்பட்டு, உடனே வாசலுக்கு முன்னும் நிற்க இடம் போதாதபடிக்கு அநேகர் கூடி வந்தார்கள் (மாற்கு 2 : 1, 2). அவர் செய்த அற்புதங்களைக் கண்டும், கேள்விப்பட்டும், திரளான ஜனங்கள் அவர் இருந்த வீட்டிற்கு அவரைத் தேடி வந்தார்கள். அவர்களுக்கு அவர் வசனத்தைப் போதித்தார். கர்த்தராகிய இயேசு வியாதியஸ்தர்களைச் சுகமாக்குகிறார், பிசாசு பிடித்தவர்களை விடுதலையாக்குகிறார் என்று கேள்விப்பட்ட ஜனங்கள் அது உண்மைதானா என்று அறியும்படியும் கூடிவந்திருக்கக் கூடும். மேலும் அவரிடமிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும்படியும் அவர்கள் வந்திருக்கக் கூடும். கர்த்தராகிய இயேசு வியாதியஸ்தர்களை வெறுமனே சுகமாக்கி அனுப்பி விடவில்லை. அவர்களுக்கு அவர் வசனத்தைப் போதித்தார். எனவே திரளான ஜனங்கள் இம்மைக்குரிய தேவைகளுக்காக மாத்திரமே தேவனைத் தேடுவது போல நாமிருக்கக் கூடாது. இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை உள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம் (I கொரி. 15 : 19). எனவே நம் தேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக மாத்திரமே தேவனைப் பின்பற்றாமல் பேதுருவைப் போல, "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே" என்று கூறி, அவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்ற விசுவாசத்தினால் நாம் அவரைப் பின்பற்ற வேண்டும் (யோவான் 6 : 68, 69).

வியாதியஸ்தன் சுகமானபோது, அந்த ஜனங்கள் ஆச்சரியப்பட்டு, "தேவனை மகிமைப்படுத்தினார்கள்" (லூக்கா 5 : 26). தாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டதின் நிமித்தம் அல்ல, தங்களுக்கு அறிமுகம் இல்லாத வேறொருவன் சுகமடைந்ததற்காகவே அவர்கள் தேவனை மகிமைப்படுத்தினர். தேவன் நமக்கு நன்மை செய்யும்போது அவரை நாம் மகிமைப்படுத்துவது இயல்பு. ஆனால் நமக்கு அறிமுகமே இல்லாத ஒருவனுக்குச் சரீர சுகமோ பிசாசிடமிருந்து விடுதலையோ உண்டாகும்போது தேவனை மகிமைப்படுத்துவது மேன்மையானது. அடுத்ததாக, அந்த வியாதியஸ்தனைச் சுமந்து வந்த அந்த நான்கு பேருக்கு அவர்கள் மகிமையைக் கொடுக்கவில்லை; 'தேவனையே' மகிமைப்படுத்தினார்கள். நாம் சரீர சுகத்தைப் பெற்றுக்கொள்ளவும், மேன்மையான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப்

பெற்றுக்கொள்ளவும் தேவ ஊழியரோ மற்றவர்களோ நம்மை வழிநடத்தலாம். ஆயினும் நாம் சகல மகிமையையும் தேவனுக்கே செலுத்த வேண்டும்.

வேதபாரகரும் பரிசேயரும்:

வேதபாரகர் வேதத்தைக் கற்றுத் தேறினவர்கள் ஆவர். எனினும் வேதத்தின் உள்ளான கருத்தை அவர்கள் அறிந்திருக்கவில்லை. அவர்களுக்கு வேத அறிவு இருந்ததேயன்றி அதன்மேல் விசுவாசம் இருக்கவில்லை. வேத அறிவைப் பெற்றிருந்தும், தேவனை அறியாதவர்களை இந்த வேதபாரகருக்கு நாம் ஒப்பிடலாம். அவர்களுக்கு, தேவன் ஒருவரேயன்றி பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார்? என்ற வெளிப்படுத்தல் இருந்தது. ஆனால் இவர்தான் தேவன் என்ற அறிவு இல்லை. பாவங்களை மன்னிக்கிறதற்கு அதிகாரமுள்ளவராகிய ஆண்டவராகிய இயேசுவை, "தேவதூஷணம் சொல்லுகிற இவன் யார்?" என்று அவர்கள் கேட்டார்கள் (லூக்கா 5 : 21). வேதத்தைக் குறித்த சரியான அறிவற்ற ஒருவன் தேவனை விசுவாசித்து பாவமன்னிப்பையும் சரீர சுகத்தையும் பெற்றுக்கொண்டு தேவனை மகிமைப்படுத்தும்போது, இவர்கள் வேதத்தை நன்கு அறிந்திருந்தும் தேவனை விசுவாசியாமலும் தேவனிடமிருந்து எந்த நன்மையையும் பெற்றுக் கொள்ளாமலும் தங்கள் வேத அறிவைக் குறித்துப் பெருமைபாராட்டிக் கொண்டிருந்தனர்.

பிரியமானவர்களே, நீங்கள் வேதத்தைக் குறித்து மிகுந்த அறிவுடையவர்களாக இருக்கலாம். மற்றவர்களுங்கூட உங்கள் வேத அறிவைப் பாராட்டலாம். ஆனால் விசுவாசம் இல்லாத பட்சத்தில் நீங்கள் தேவனிடமிருந்து எந்த நன்மையையும் பெற்றுக்கொள்ள முடியாது. நீங்கள் விசுவாசமில்லாமல் கேட்பீர்களானால், "விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததியே" என்று தேவன் உங்களைக் கடிந்து கொள்வார். தேவன் நமக்கு உதவி செய்ய வேண்டுமானால் நம்மிடம் அவர் எதிர்பார்ப்பது விசுவாசமே. ஊமையான ஆவி பிடித்த ஒருவனின் தகப்பன் மன்றாடியது போல, "விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும்" என்று கண்ணீரோடே ஜெபித்து, நன்மையைப் பெற்றுக்கொள்ளுங்கள் (மாற்கு 9 : 23, 24).

அடுத்ததாக இந்த வேதபாரகரும் பரிசேயரும் குற்றம் கண்டுபிடிக்கும் சுபாவமுடையவர்களாக இருந்தனர் (லூக்கா 11 : 53). நாம் மற்றவர்களுடைய குற்றங்களை ஆராயாமல் நம்மை நாமே ஆராய்ந்து பார்க்க வேண்டும். வேதபாரகரையும் பரிசேயரையும் தேவன், "மாயக்காரர்" என்று அழைக்கிறார் (மத். 23 : 13 - 15). தன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், தன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறவனைத் தேவன், 'மாயக்காரனே' என்று அழைக்கிறார். எனவே நாம் வேதத்தை அறிந்திருக்கிறவர்கள் என்று உரிமைபாராட்டிக் கொள்வோமாகில், முதலாவதாக தேவனை விசுவாசிக்கிறவர்களாகவும், நம்முடைய குறைகளைக் கண்டுணர்கிறவர்களாகவும் இருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து:

இச்சம்பவத்தில் கர்த்தராகிய இயேசுவின் வல்லமையும் அன்பும் வெளியரங்கமாக உள்ளது. "அவர் உபதேசித்துக் கொண்டிருக்கிறபோது, ... பிணியாளிகளைக் குணமாக்கத்தக்கதாகக் கர்த்தருடைய வல்லமை விளங்கிற்று" (லூக்கா 5 : 17). அக்கிரமத்தால் நோய்கொண்டு ஒடுங்கிப்போனவர்கள், தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிடும்போது அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார் (சங். 107 : 17 - 20). ஆனால் அவ்வாறு சுகமாக்கும் முன் "விசுவாசத்தையே" அவர் அவர்களிடம் எதிர்பார்க்கிறார். "இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா" என்று அவர் கேட்கிறார் (மத். 9 : 28). வேதாகமத்தில் கர்த்தராகிய இயேசு சுகமாக்கின ஒவ்வொரு சம்பவத்தையும் வாசித்துப் பாருங்கள்! விசுவாசமே சுகத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நிபந்தனையாக இருந்தது. தன் வேலைக்காரனின் சுகத்திற்காகக் கர்த்தராகிய இயேசுவை அணுகிய நூற்றுக்கதிபதி (மத். 8 : 13), பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஸ்திரீ (மத். 9 : 20 - 22), தன் மகளின் சுகத்திற்காக இயேசுவிடம் மன்றாடிய கானானிய ஸ்திரீ (மத். 15 : 28), இன்னும் பலர் விசுவாசத்தினால் நற்சாட்சியையும் தாங்கள் கோரிய சுகத்தையும் பெற்றுக்கொண்டனர்.

அடுத்ததாக, கர்த்தராகிய இயேசு அன்புடையவராகத் தம்மை வெளிப்படுத்தினார். திமிர்வாதக்காரனை அவர், "மகனே" என்று அன்பாக அழைத்து, அவனுடைய பாவங்களை மன்னித்தார் (மாற்கு 2 : 5). நம்மேல் கொண்ட அன்பின் நிமித்தம் நம் எல்லாருடைய பாவங்களையும் தம்மேல் ஏற்றுக்கொண்டு, நமக்குப் பதிலாகத் தண்டனை அடைந்து, நம் பாவங்களை அவர் மன்னித்தார். அவருடைய வல்லமையையும் அன்பையும் ருசித்தறிந்திருக்கிற நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்குப் பயனுள்ளவர்களாக வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். சகல பிசாசுகளையும் துரத்தவும் வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர் நமக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து, ஜனங்கள் ஆத்தும, சரீர சுகத்தைப் பெற்றுக்கொள்ளும்படி சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் அவர் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார் (லூக்கா 9 : 1, 2). பூமியின் கடைசிபரியந்தமும் நாம் அவருக்குச் சாட்சிகளாயிருக்கும்படி பரிசுத்தஆவியாகிய உன்னத பெலனையும் அவர் நமக்களித்திருக்கிறார்.

தேவனுடைய பிள்ளைகளே, கிறிஸ்து நமக்காகப் பாடுபட்டு நாம் அவருடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி நமக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார் (I பேதுரு 2 : 21). அவருடைய பாதங்கள் பட்டணங்கள் தோறும் கிராமங்கள்தோறும் சுற்றி நடந்தன. ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களை அவர் சொஸ்தமாக்கினார் (மத். 9 : 35). எழுதியிருக்கிறபடி கிறிஸ்து பாடுபட்டு, மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்த அவர் கட்டளையிட்ட யாவையும் சகல தேசத்தாருக்கும், அவருடைய நாமத்தில் நாம் பிரசங்கிப்போமாக (மத். 28 : 20).

சிறுவர், வாலிபர் பகுதி ☞

ஏன் என்று கேட்காதே!

திடீரென கார்மேகம் சூழ்ந்தது. கண்கள் குருடாக்கப்படுமாப்போல் இடையிடையே மின்னல் தோன்றி மறைந்தது. எதிர்பாராத நேரத்தில் இடியுடன் பலத்த மழை பெய்தது. சிறிது நேரத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓட ஆரம்பித்தது. இவற்றினிடையில் வழிப்போக்கர் ஒருவர் ஒதுங்குவதற்காக ஓர் இடந்தேடி ஒரு வீட்டின் கதவைத் தட்டினார். வீட்டெஜமான் கதவைத் திறந்து பார்த்து, மழையில் நனைந்து நிற்கும் மனிதன்மேல் மனமிரங்கி அவரைத் தன்னுடைய வீட்டில் ஏற்றுக்கொண்டார். அன்றிரவு அவருக்கு உண்ண உணவும் இளைப்பாற இடமும் அவர் அளித்தார். அந்த வீட்டெஜமான் ஆஸ்தியும் ஐசுவரியமும் மிக்க ஒரு பெரிய செல்வந்தனாயிருந்தார். அந்தப் பெரிய வீட்டில் அவரும் அவரது மனைவியும் மட்டுமே வசித்து வந்தனர். குழந்தைச் செல்வமோ அவர்களுக்கு அருளப்படவில்லை. அவர்களுடைய அந்திய நாட்களில் அவர்களை ஆதரிக்கவோ அவர்களுடைய ஆஸ்திகளை அனுபவிக்கவோ அவர்களுக்கு யாருமிருக்கவில்லை. ஆனால் அவர்கள் தங்களுடைய ஐம்பது வருட இல்லற வாழ்க்கையை இனிமையாகக் கழித்துவிட்டார்கள். அடுத்த நாள் அவர்களுடைய 50 - ஆவது திருமணநாள். அதற்காக அவருடைய நெருங்கின உறவினன் ஒருவன் வெள்ளித்தட்டு ஒன்றை அவர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருந்தான். தன்னுடைய வீட்டிற்கு வந்திருந்தவரிடம் அந்தத் தம்பதியினர் தங்களுக்கு அளிக்கப்பட்ட வெள்ளித் தட்டைக் காண்பித்து, அடுத்த நாள் அந்த வெள்ளித் தட்டிலே தாங்கள் இருவரும் ஆகாரம் புசிக்கப்போவதாகக் கூறி மகிழ்ந்தனர். பின்பு அவரவர் தங்கள் படுக்கைக்குச் சென்றனர். நள்ளிரவில், இன்னும் பலத்த மழை பெய்துகொண்டிருக்க, அடைக்கலம் தேடிவந்தவர் அவ்வீட்டிலிருந்து அந்த வெள்ளித்தட்டைத் திருடிக் கொண்டு, ஒருவருக்கும் தெரியாமல் அவ்வீட்டை விட்டுச் சென்றார். சிறிது தூரம் சென்ற பின்பு அவர் ஒரு பாலத்தைக் கடக்க வேண்டியதாயிருந்தது. இருள் சூழ்ந்திருந்தபடியினாலும், பாலம் கண்ணுக்குத் தெரியாத அளவிற்கு ஆற்றில் தண்ணீர் நிரம்பியிருந்தபடியினாலும், அருகிலிருந்த மற்றொரு வீட்டிற்கு அவர் சென்று, தான் அப்பாலத்தைக் கடக்கும்படி தனக்குச் சற்று வெளிச்சங் காட்டும்படி வேண்டினார். அவர்கள் தங்களுடைய ஒரே குமாரனாகிய சிறுபையனை வெளிச்சங் காட்டவும், வழிகாட்டவும் அவரோடு அனுப்பினார்கள். இருவரும் பாலத்தின்மேல் நடந்து சென்றுகொண்டிருந்தனர். பாதி வழி சென்றபோது, அவர் அச்சிறுவனைப் பாலத்திலிருந்து தண்ணீரினுள் தள்ளிவிட்டு, தன் வழியே போய்விட்டார். சிறுவன் மரித்துப்போனான்.

இவற்றையெல்லாம் ஒரு வாலிபன் தன் சொப்பனத்தில் கண்டுகொண்டிருந்தான். அதுவரை சொப்பனம் கண்டுகொண்டிருந்தவன் விழித்துக்கொண்டான். அவனுடைய உள்ளம் குழம்பியது. அடைக்கலம் தேடிவந்தவர் செய்த அநியாயத்தை அவனால் சகிக்க முடியவில்லை. ஆண்டவரிடத்தில் அவன் கேள்விகள் பல கேட்டான். அவர் அவனுக்கு உண்மையைத் தெளிவுபடுத்தினார். வழிப்போக்கனாக வந்தவர் தமது தூதன் என்றும் வயதான தம்பதிகளுக்கு வெள்ளித் தட்டை அன்பளிப்பாகக் கொடுத்தவன், அவர்கள் மேலிருந்த உண்மையான அன்பினால் கொடாமல், அவர்களுடைய மரணத்திற்குப் பின் அவர்களுடைய ஆஸ்தியைப் பெறக் கூடிய உரிமையாளனாயிருந்தபடியினால் அவர்கள் இருவரையும் ஒரே நாளில் கொன்றுவிட்டு ஆஸ்தியை அபகரித்துக்கொள்ளும் நோக்கத்துடன் அந்த வெள்ளித்தட்டில் விஷம் பூசிக் கொடுத்ததாகவும், அந்தக் காரியத்தை அத்தம்பதியினரிடம் கூறினால் அவர்களுக்குள் பகையும் கசப்பும் உண்டாகுமென்றறிந்து அவ்வெள்ளித்தட்டை அவர் எடுத்துக்கொண்டு போய்விட்டார் என்றும் கர்த்தர் விளக்கிக் கூறினார். மேலும் வழிப்போக்கருக்கு வழிகாட்டும்படியாக அனுப்பப்பட்ட சிறுவன் தேவசித்தமில்லாமல் அப்பெற்றோருக்குக் கொடுக்கப்பட்டவன் என்றும், பெற்றோரின் பலவந்தத்தினால் தேவன் அவர்களுக்கு ஒரு குமாரனைக் கொடுத்ததாகவும், அவன் வளர்ந்து பின்னாட்களில் ஒரு துஷ்டனாகக் காணப்படுவான், அவனுடைய முடிவு அக்கினிக்கடலில் இருக்குமென்றறிந்து, இதுவே அவனை எடுத்துக்கொள்ள வேண்டிய சரியான சந்தர்ப்பமாகையால் அவனை வெள்ளத்தில் தள்ளிவிட்டதாகவும் அவர் கூறினார். அப்போது பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்த அவனுடைய கொந்தளிப்பு அடங்கியது. சகலமும் நன்மைக்கேதுவாகச் செய்யும் தேவனை அவன் துதித்தான்.

அருமையான தேவபிள்ளையே! எத்தனை முறை நீ உன் ஆண்டவரைக் கேள்வி கேட்டிருக்கிறாய்? ஏன் இப்படி? ஏன் அப்படி? ஏன் எனக்கு இந்தத் துன்பம்? எவ்வளவு நாட்கள் நான் இப்படி கஷ்டப்பட வேண்டும்? தேவன் இதைக் காண்கிறதில்லையோ? நல்லவர்கள் தீமையை அனுபவிக்கிறார்கள். துன்மார்க்கர் செழித்தோங்குகிறார்களே! ஏன்? - இப்படிப் பல கேள்விகள் உன் மனதிலும்

எழும்பியிருக்கின்றன அல்லவா? ஆண்டவருடைய அறிவுக்கெட்டாத அன்பையும் அவருடைய அநந்த ஞானத்தையும் நம்முடைய சிறிய மூளையினால் இப்போது அறிந்துகொள்ள முடியாது. நம்முடைய அறிவு குறைவுள்ளது. ஆனால் பின்னர் நித்தியத்திலேயே நாம் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவோம் (I கொரி. 13 : 12). அவர் சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய்ச் செய்கிறவர். நம்முடைய நன்மைக்காகவே அவர் அனைத்தையும் செய்கிறார்.

சில சமயங்களில் நம்முடைய விண்ணப்பங்களுக்குப் பதில் கிடைக்கவில்லையே என்றும் நாம் அங்கலாய்க்கலாம். உங்களுக்கு இன்னது தேவை என்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார். அவர் சமயத்துக்கேற்ற சகாயர். நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் அவர் கிரியை செய்ய வல்லவர். ஆனால் எல்லாவற்றுக்கும் அல்ல. நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச் செவிகொடுக்கிறார். கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவிகள் மந்தமாகவில்லை. கிரியை செய்யக் கூடாதபடிக்கு அவருடைய கரம் குறுகிப் போகவுமில்லை. “கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்” என்று சொன்னவர், “கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்” (யோவான் 16 : 24) என்றும் சொல்லியிருக்கிறார். பின்நாட்களில் நமக்கு நிறைவான சந்தோஷமளிக்கக் கூடியவற்றையே நம் பரமபிதா நமக்குத் தருவார். நம்முடைய சந்தோஷத்தையே விரும்பும் நம் தேவன் நம்முடைய சில ஜெபங்களுக்குப் பதிலளிப்பதில்லை. முடிவில் நமக்கு நிறைவான சந்தோஷமளிக்காது என்று தாம் அறிந்திருக்கிறவைகளை நாம் எவ்வளவு வருந்திக் கேட்டாலும் அவர் நமக்குக் கொடுப்பதில்லை. ஆகவே பதிலளிக்கப்பட்ட ஜெபங்களைக் காட்டிலும் பதில் அளிக்கப்படாத ஜெபங்களுக்காகவே நாம் தேவனை அதிகமாய் ஸ்தோத்திரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனென்றால் ஏதோ ஒரு நன்மையைக் கருதியே அவர் அப்படிச் செய்திருக்கிறார். அவர் ஒருபோதும் தீமை செய்யாதவர்.

ஒரு தகப்பன் தன் பிள்ளையை அதிகமாக நேசிக்கிறான். ஆனால் அந்தப் பிள்ளை கேட்பதையெல்லாம் அவன் கொடுப்பதில்லை. அந்தப் பிள்ளைக்குத் தீமை விளைவிப்பவைகளை அவன் அந்தப் பிள்ளைக்குக் கொடாமல் தவிர்க்கிறான். இதனால் அவனுக்குத் தன் பிள்ளையின்மேல் அன்பில்லை என்று அர்த்தமல்ல. மாறாக அதை அதிகமாக நேசிப்பதினாலேயே அவன் அப்படிச் செய்கிறான். தேவனும் நாம் கேட்ட யாவற்றையும் நமக்குத் தந்திருப்பாரென்றால், அதன் விளைவாக நாம் இன்று எவ்வளவு தீமைகளை அனுபவித்துக் கொண்டிருப்போமோ! தேவன் மாத்திரமே அதை அறிவார்! ஆகவே, தேவசித்தத்துக்கு மாறாக நாம் ஜெபம்பண்ணாதிருப்போமாக. இவ்வுலகில் நமக்குள் எழும் எல்லாக் கேள்விகளுக்கும் தக்க பதிலைப் பரலோகத்திற்குச் செல்லும்போது நாம் பெற்றுக்கொள்வோம். ஆகையால், அமர்ந்திருந்து, அவரே தேவனென்று நாம் அறிந்துகொள்வோமாக.

நான் ஒரு இந்துக் குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்டேன். நானும் என் சகோதர சகோதரிகளும் ரோமன் கத்தோலிக்கப் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தபடியால் அச்சபையில் நாங்கள் சேர்ந்துகொண்டோம். அதன்பிறகு நாங்கள் அச்சபையின் எல்லாச் சடங்காச்சாரங்களையும் ஆசரித்துவந்தோம். இந்நிலையில் என் தந்தையார் திடீரென மாரடைப்பினால் இறந்துவிட்டார்.

அதற்கு பின்பு என்னுடைய 20 - வது வயதில் சி. எஸ். ஐ. முறைமையின்படி எனக்குத் திருமணம் நடந்தது. என் கணவரோ ஒரு பயங்கரமான குடிகாரராகவும், சூதாட்டம், மற்றும் அநேக தீய பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகவும் காணப்பட்டார். இதினிமித்தம் என்னுடைய துக்கத்திற்கு அளவே இல்லை. எனக்குச் சமாதானமே இல்லை. ஏன் இனி உலகத்தில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் நான் ஏதாவது விஷம் சாப்பிட்டு மரித்துவிடத் தீர்மானித்தேன். என்றாலும் என் சிறுபருவத்திலிருந்தே எனக்குத் தெய்வபயம் இருந்தது. கண்ணீரோடு நான் கர்த்தரிடம் என் பிரச்சினைகளைச் சொன்னேன். அவர் என் வேண்டுதலைக் கேட்டார். நாங்கள் குடியிருந்த இடத்திற்கு அருகில் இருந்த ஒரு சபையில் நடந்த முழு இரவு ஜெபம் ஒன்றில் என் கணவர் பங்கு பெற்று, தன் பாவங்களிலிருந்து விடுதலை பெற்றவராய் இரட்சிக்கப்பட்டுத் திரும்பி வந்தார். அவருடைய பழைய தீய பழக்கங்கள், ஆடம்பர ஜீவியம் இவை எல்லாம் நீங்கிப் போயின. பரிசுத்த வேதாகமத்தை அவர் அதிக வாஞ்சையுடன் வாசித்தார். அது அவரது ஜீவியத்தை மாற்றியது. கர்த்தர் எனக்குச் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் தந்தார்.

பின்பு என் கணவருடன் பணியாற்றி வந்த ஒரு சகோதரன் மூலம் இந்த பெந்தெகொஸ்தே சபையில் நாங்கள் ஐக்கியம் கொண்டோம். அங்கு என் கணவர் முழுக்கு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். நான் கர்த்தராகிய இயேசுவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டபோதிலும் நான் என் ஆடம்பர ஜீவியத்திலிருந்து விடுதலை பெற விருப்பமற்றவளாக இருந்தேன். நான் என் முதல் குழந்தையின் பிரசவத்திற்காக என் தாய் வீட்டுக்குச் சென்றிருந்தபோது எனக்குத் தொடர்ச்சியாக வலிப்பு உண்டாகி, மிகவும் ஆபத்தான நிலையில், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். மருத்துவர்கள் பத்து மணிநேரம் தாண்டிய பிறகுதான் உயிருக்கு உத்தரவாதம் கொடுக்க முடியும் எனக் கூறிவிட்டனர். அவர்கள் கூறின நேரம் கடந்தவுடன், நான் மரித்துவிட்டதாகக் கூறி அவர்கள் என்னைக் கைவிட்டனர்.

அந்நேரத்தில் தேவஊழியர்கள் வந்து எனக்காக ஜெபித்தபோது, கர்த்தரின் உயிர்ப்பிக்கும் வல்லமை என்னில் பாய்ந்து, மீண்டும் என்னில் உயிர் வந்தது. மரித்து வயிற்றில் கிடந்த குழந்தை தானாகப் பிறந்துவிட்டது. மருத்துவர்களும் அதிசயிக்கும்படி கர்த்தர் என் சரீரத்தில் அதிசயம் செய்தார். நானோவென்றால் கர்த்தர் என்னை நேசித்து அதிசயம் செய்த பின்பும் ஆடம்பர வாழ்க்கையை நேசித்து, அவர் அன்புக்குக்

கீழ்ப்படியாதவளாய் இருந்துவந்தேன். என்றாலும் கர்த்தர் தமது இரக்கத்தினால் பிள்ளைகளின் காத்திருப்புக் கூட்டம் ஒன்றில் நான் பங்கு பெற்றபோது என்னை அந்நிய பாஷை அடையாளத்துடன் அபிஷேகித்தார். அதற்குப் பின்பு நான் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு என் ஆடம்பர ஜீவியத்திலிருந்தும் விடுதலை பெற்றேன்.

எனக்கு வரும் நோய்களுக்கெல்லாம் கர்த்தர்தாமே பரிகாரியாய் இருந்துவருகிறார். கடந்த வருடம் ஆகஸ்டு மாதம் மரணத்துக்கேதுவான ஒரு பயங்கர வியாதியிலிருந்தும் கர்த்தர் விடுதலை தந்தார். என்னுடைய முதுகில் ராஜபிளவை ஏற்பட்டு நான் மிகவும் வேதனைப்பட்டேன். சரியாக இரண்டு மாதங்கள் தூக்கமே இல்லை. அது உடைந்து அதிகமான சீழ் வந்து கொண்டேயிருந்தது. அதைத் தொடர்ந்து என் உடலின் பல பகுதிகளிலும் கட்டிகள் வந்து நான் அதிகக் கஷ்டப்பட்டேன். அந்நேரங்களில் கர்த்தர் எனக்குக் கிருபை தந்து என்னைத் தாங்கினார். அவர் எனக்கு உறுதியான விசுவாசத்தையும் நம்பிக்கையையும் தந்தார். அனைவருடைய ஜெபத்திற்கும் இரங்கி அவர் எனக்கு தெய்வீக சுகத்தை அளித்தார்.

இப்படியாக பல முறை மரணத்தோடு போராடின என்னை மீண்டும் உயிர்ப்பித்து ஜீவனைத் தந்து, அவருக்குச் சாட்சியாக ஜீவிக்கக் கிருபை செய்துவருகிற தேவனுக்கே எல்லா மகிமையையும் நான் செலுத்துகிறேன்.

சகோதரி இராஜம் ஐயாதுரை,
மார்த்தாண்டம்.

எருசலேமின் அலங்கமும் வாசல்களும்

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

4. எப்பிராயீம் வாசல் (GATE OF EPHRAIM)

எப்பிராயீம் வாசல், மிகுதியாகக் கனிகொடுக்கிற ஜீவியத்தைக் குறிக்கிறது என நாம் சென்ற இதழில் கண்டோம். ஆவிக்குரிய ஜனங்களாகிய நம்மிடத்திலிருந்து தேவன் எதிர்பார்க்கிற சில நல்ல கனிகளைக் குறித்து நாம் கீழே காண்போம்:

(i) மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகள்:

"மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்" என்று யோவான்ஸ்நானன் தன்னிடத்தில் வந்தவர்களை நோக்கிக் கூறுகிறான் (மத். 3 : 8). மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்ட தேவபிள்ளைகள் ஒவ்வொருவரினின்றும் இக்கனிகள் எதிர்பார்க்கப்படுகின்றன. நாம் ஒருகாலத்தில் காட்டொலிவ மரக் கிளைகளாயிருந்து, கசப்பான, கெட்ட கனிகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தோம். சுட்டெரிக்கப்படுவதற்கு ஏதுவாயிருந்த நம்மேல் தேவன் இரக்கம் வைத்து, நல்ல ஒலிவ மரமாகிய இயேசுவோடு நம்மை இணைத்திருக்கிறார். நல்ல ஒலிவ மரத்துடன் ஒட்ட வைக்கப்பட்டுள்ள நாம் அதன் வேருக்கும் சாரத்துக்கும் பங்குள்ளவர்களாயிருக்கிறோம் (ரோமர் 11 : 17). இதுமுதல், கர்த்தராகிய இயேசுவின் சுபாவங்களும் வல்லமையுமே நம்மூலம் வெளிப்பட வேண்டுமேயன்றி, காட்டொலிவ மரத்தின் கனிகள் நம்மிலிருந்து வெளிப்படலாகாது. ஒருவன் மனந்திரும்பியது முதல் படிப்படியாகக் கர்த்தருக்காகக் கனிகொடுத்தலில் வளர்ந்துவருகிறான். மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகள் யாவை? இரண்டு அங்கிகளை உடையவன் இல்லாதவனுக்குக் கொடுத்தலும், ஆகாரத்தை உடையவன் பசித்திருக்கிறவனுக்கு அதைப் பகிர்ந்தளித்தலும், பரிதானம் வாங்காதிருத்தலும், இடுக்கண் செய்தலை வெறுத்தலும், பொய்க் குற்றஞ் சாட்டாதிருத்தலும் போன்ற இவைகளை மனந்திரும்புதலுக்கேற்ற கனிகள் என யோவான் ஸ்நானன் குறிப்பிடுகிறான் (லூக்கா 3 : 10 - 14). மேலும், மனந்திரும்பிய ஒருவனில் காணப்படும் அடையாளங்களைக் குறித்து அப். பவுல், "தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; .... பாருங்கள், நீங்கள் தேவனுக்கேற்ற துக்கமடைந்ததுண்டே; அது உங்களிடத்தில் எவ்வளவு ஜாக்கிரதையையும், குற்றந்தீர எவ்வளவு நியாயஞ்சொல்லுதலையும், எவ்வளவு வெறுப்பையும், எவ்வளவு பயத்தையும், எவ்வளவு ஆவலையும், எவ்வளவு பக்திவைராக்கியத்தையும், எவ்வளவு கண்டிப்பையும் உண்டாக்கிற்று" (II கொரி. 7 : 10, 11) என்று எழுதுகிறார். இவைகள் இல்லாதவர்கள் தங்களை மனந்திரும்பியவர்கள் என்றோ, இரட்சிக்கப்பட்டவர்கள் என்றோ உரிமைபாராட்ட இயலாது. உலகம் நம்முடைய கனிகளினாலே நம்மை அறிந்துகொள்ளும். மனந்திரும்பிய ஒருவன், தன் முந்தின ஜீவியத்தினின்று திசைதிருப்பப்பட்டவனாய், இருளினின்று வெளிச்சத்திற்குள் பிரவேசித்தவனாய் இருப்பதால், பழைய இருளின் கிரியைகள், பழைய பாவப் பழக்கங்கள் போன்றவற்றின் ஒரு சுவடும் அற்றவனாய், அவற்றினின்று முற்றிலும் எதிர்த்திசை நோக்கித் தன் பிரயாணத்தை மேற்கொள்ளுகிறான். பாவத்தின்மேல் வெறுப்பும், பரிசுத்தத்தின்மேல் பேராவலும் அவனில் உண்டாகியிருப்பதால், "நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது" என்ற வசனத்திற்கிணங்க, அவனில் அந்தகாரத்தின் கிரியைகள் அல்லது மாம்சத்தின் கிரியைகள் வெளிப்பட முடியாது (ரோமர் 13 : 12 ; கலா. 5 : 19 - 21).

(ii) நீதியின் கனிகள்:

ஞானஸ்நானத்தில் நாம் தேவநீதியை நிறைவேற்ற ஆரம்பிக்கிறோம். அதைத் தொடர்ந்து இரட்சிப்பின் ஒவ்வொரு படிக்கும் நம்மை ஒப்புக்கொடுப்பதின் மூலமாக நாம் படிப்படியாகத் தேவ நீதியை நிறைவேற்றுகிறோம். கர்த்தராகிய இயேசு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படி தம்மை ஒப்புக்

கொடுத்த வேளையில், "இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" (மத். 3 : 15) என்று இதனையே குறிப்பிட்டார். மேலும், "தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி" என்று அப். பவுல் எழுதுகிறார் (பிலி. 1 : 10). இந்த நீதியின் கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது (யாக். 3 : 18). சமாதானத்தில் நம் ஜீவியத்தை நாம் காத்துக்கொள்வதினாலும், சமாதானத்தின் சுவிசேஷத்தைப் பிறருக்கு அறிவிப்பதினாலும் நீதியின் கனிகள் நம்மில் உண்டாகின்றன. அதினிமித்தம் தேவனுடைய நாமம் நம் மூலமாக மகிமைப்படுகிறது. இங்ஙனம் தேவனுடைய மகிமைக்கென்று ஜீவிப்பதே நீதியின் கனிகளால் நிறைந்ததொரு ஜீவியமாகும். இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும் கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும் நாம் கிறிஸ்துவின் நற்கந்தமாய்த் திகழ வேண்டும். நம் நிமித்தமாக அநேகர் கர்த்தரை நன்றியுடன் துதிக்கத்தக்கதாக, நாம் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாகவும், பிறருக்கு ஆசீர்வாதமாகவும் துலங்க வேண்டும். நம் இருதயத்தினின்று புறப்படுகிற உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியும் தேவனுடைய மகிமைக்கேதுவாயிருப்பதால், எல்லா வேளைகளிலும் கர்த்தரை உயர்த்தும் துதி நம்மிடத்தினின்று புறப்படட்டும் (எபி. 13 : 15). நாம் அவரில் மறைந்திருந்து, அவரையே உலகிற்கு உயர்த்திக் காட்டுவோமாக.

(iii) தேவனுக்கென்று கனிகொடுத்தல்:

"நீங்கள் .... கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்" (ரோமர் 7 : 4). நாம் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவின் மரணத்தோடு நம்மை இணைத்துக்கொள்வதின் மூலம் நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவர்களாகிறோம். அதுமுதல் நாம் கிறிஸ்து என்னும் வேறொருவருக்குச் சொந்தமாகும்படி விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். இவ்விதம் ஞானஸ்நானத்தில் பாவத்திற்கு மரித்த நாம் அபிஷேகத்தின் மூலம் அவருடையவர்களாகி, அவருக்கென்று கனிகொடுக்கிறவர்களாகிறோம். நம் மூலமாக ஒரு ஆவிக்குரிய சந்ததியும் உருவாக்கப்படுகிறது. இவ்வாறு நாம் தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி, முதலாவதாகப் பாவத்திற்கு மரித்தவர்களாக வேண்டும். ஞானஸ்நானத்தில் நம்முடைய அவயவங்களை நாம் நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுத்திருக்கிறோம் (ரோமர் 6 : 13, 18). இவ்விதம் நாம் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால் பரிசுத்தமாகுதல் என்னும் பலன் அல்லது கனி நம்மில் உண்டாகிறது (வச. 22). "இஸ்ரவேல் பலனற்ற திராட்சச்செடி, அது தனக்குத்தானே கனிகொடுக்கிறது" (ஓசியா 10 : 1) என்று நாம் வாசிக்கிறோம். தேவன் அதை மகா செழிப்பான மேட்டிலே, நற்கனி தரும் உயர்குலத் திராட்சச்செடியாக நட்டு, கனிகளை எதிர்பார்த்துக் காத்திருந்தார். அதுவோ அவருக்குக் கசப்பான கனிகளைத் தந்தது (ஏசாயா 5 : 1 - 4). கர்த்தருடையவர்களாய் மாறியிருக்கிற நாம், அவரில் நிலைத்திராவிடில் அவருக்கென்று கனிகொடுக்க இயலாது. நீரூற்றண்டையில் நாட்டப்பட்ட மரம் தன் காலத்தில் தன் கனியைத் தரும். அவரில் நாட்டப்பட்டவர்களாய், அவரில் வேர்கொள்ளாதவர்களோ கனியற்றவர்களாகிறார்கள். "அவர்கள் வேர் உலர்ந்துபோயிற்று, கனிகொடுக்கமாட்டார்கள்" என எப்பிராயீமைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது (ஓசியா 9 : 16). இரட்டிப்பாகக் கனிகொடுக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்ட எப்பிராயீம், கர்த்தரில் நிலைத்திராமற் போனபோது, கனியற்றவனானான். நமக்கும் இந்த நிலை வராதிருக்கும்படி நாம் எச்சரிக்கையாயிருப்போமாக. கிறிஸ்துவின் மரணத்தின் சாயலில் அவரோடு இணைக்கப்பட்ட நாம், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையினால் தேவனுக்கென்று கனிகொடுக்கத்தக்கதாக அவருக்கே சொந்தமானவர்களாக என்றென்றும் அவரில் நிலைத்திருப்போமாக.

(iv) ஆவியின் கனி:

பரிசுத்தஆவியின் அபிஷேகம் பெற்ற ஒவ்வொருவரிலும் இக்கனி எதிர்பார்க்கப்படுகிறது. "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்" (கலா. 5 : 22, 23). அருமையானவர்களே ! இந்த நற்சுபாவங்களில் நாம் நாளுக்கு நாள் பெருகிவருகிறோமா? அல்லது குறைந்து கொண்டிருக்கிறோமா? "ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும்" (எபே. 5 : 9).

அன்பு ___ "நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கொப்பாய், நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும்" செய்வாராக என்று அப். பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதுகிறார் (I தெச. 3 : 12; 4 : 10). இந்த அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் (Judgment) அதிகமதிகமாய்ப் பெருக வேண்டும் (பிலி. 1 : 9). பகுத்தறிவோடு கூடிய பரிசுத்தமான அன்பையே தேவன் நம்மில் எதிர்பார்க்கிறார். நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருக்கும்படி உலகத்தோற்றத்துக்கு முன்பே கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மைத் தெரிந்துகொண்டார்.

சந்தோஷம் ___ தெசலோனிக்கேய சபையார் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே கர்த்தரைப் பின்பற்றினார்கள் (I தெச. 1 : 6). "அவர்களுக்குத் தானியமும் திராட்சரசமும் பெருகியிருக்கிற காலத்தின் சந்தோஷத்தைப்பார்க்கிலும், அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர்" என தாவீது கூறுகிறான் (சங். 4 : 7). "அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், ... நான் கர்த்தருக்குள்

மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்" என்று ஆபகூக் கூறுகிறான் (ஆப. 3 : 17, 18). எந்த விபரீதமான, இடுக்கமான சூழ் நிலைகளும், கர்த்தருக்குள் இருக்கிற ஒரு தேவபிள்ளையின் மகிழ்ச்சியைப் பாதிக்க முடியாது. கர்த்தரில் மாத்திரம் நம் சந்தோஷம் தங்கியிருக்குமாயின், எந்தச் சூழ்நிலையிலும் நம் சந்தோஷம் குறையாமல், பெருகிக் கொண்டேயிருக்கும். இதையே அப். பவுல், "எங்களுக்கு உண்டான சகல உபத்திர வத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன்" என்று எழுதுகிறார் (II கொரி. 7 : 4).

ரோமருக்கு எழுதிய நிருபத்தின் விளக்கவுரை

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

"நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (5 : 7, 8).

அநேகர் எத்தனையோ காரியங்களுக்காக, தங்கள் தலைவர்களுக்காகவும், தங்கள் கட்சிக்காகவும், தங்கள் கொள்கைகளுக்காவும் தங்கள் உயிரை மாய்த்துக்கொள்வதை நாம் காணலாம். இவை யாவும் மாம்சீகமான வைராக்கியங்களே. சிலவேளைகளில் நீதிமான்களுக்காகவும், பரிசுத்தவான்களுக்காகவும், ஒருவேளை சபைக்காகவுங் கூட நம் ஜீவனை நாம் பணையம் வைக்கலாம். ஆனால் நாம் பாவிகளாயும், சத்துருக்களாயுமிருக்கையில் கிறிஸ்து நமக்காகத் தம் ஜீவனைக் கொடுத்தார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கல்வாரி மரணத்தின் மூலமாய் தேவன் நம்மேல் வைத்த அளவிட முடியாத தம்முடைய அன்பை வெளிப்படுத்துகிறார். தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் என்று யோவான் 3 : 16 – இல் எழுதப்பட்டிருக்கிறது. 'இவ்வளவாய்' என்று கூறும்போது 'நம்மால் அளவிடமுடியாத அளவுக்கு அவர் நம்மில் அன்புகூர்ந்தார்' என்பதே பொருளாகும்.

"இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" (5 : 9).

இப்படி நாம் கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் என்று எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய மீறுதலினால் நாம் தேவ கோபாக்கினைக்குப் பாத்திரராய் இருந்தோம். நம்முடைய பாவங்களுக்காக நம்மேல் தண்டனை வரவேண்டியது நியாயமானதே. ஆயினும் நம்மேல் வரும் தண்டனையை அவர் ஏற்றுக் கல்வாரி சிலுவையில் மரித்தபடியினால் நாம் அந்தக் கோபாக்கினையினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டாரென்றும், நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டாரென்றும், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது என்றும் ஏசாயா தீர்க்கதரிசி எழுதியிருக்கிறான் (ஏசாயா 53 : 5). ஆனால் ஜனங்கள் கோபாக்கினைக்கு உள்ளாவதின் காரணம், இயேசுகிறிஸ்து தங்களுடைய பாவங்களுக்காகவும், கோபாக்கினையிலிருந்து தங்களை விடுதலையாக்கும் பொருட்டாகவும் மரித்தார் என்ற சத்தியத்தை விசுவாசியாது அவரைப் புறக்கணிப்பதேயாகும். இந்தச் சத்தியத்தை விசுவாசிக்கிற நாமோ கோபாக்கினைக்கு நீங்கலாக்கப்பட்டு நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். இது ஒப்புரவாகுதலின் முதல் படியாகும்.

"நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" (5 : 10).

இவ்வசனத்தில், நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத் தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோம் என்று காண்கிறோம். இந்தச் சத்தியத்தையே கொலோசெயர் 1 : 21 – இல், "முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" என்று எழுதப்பட்டிருக்கிறது. "அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" என்று கூறப்பட்டிருப்பதின் கருத்து, 'அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே அவரோடேகூட நாம் ஒப்புரவாக்கப்படுகிறோம்' என்பதே. நாம் ஞானஸ்நானத்தில் இயேசுகிறிஸ்துவின் மரணத்தோடு ஒப்புரவாக்கப்படுகிறோம். ஆகையால் தான் ரோமர் 6 – ஆம் அதிகாரத்திலுங்கூட, "ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்" என்று எழுதியிருக்கிறது. இதன் கருத்து, அவருடைய அடக்கத்திற்கு ஒப்பனையான ஞானஸ்நானத்தில் அவருடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம் அல்லது ஒப்புரவாக்கப்பட்டோம் என்பதே. இது ஒப்புரவாகுதலின் இரண்டாம் படியாகும்.

"அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் நாம் தேவனைப்பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம்" (5 : 11).

ஆகையினால் இப்படிப்பட்ட ஒப்புரவாகுதலைக் கிறிஸ்து இயேசுவின் மரணத்தினால் அல்லது அதற்கொப்பான ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்வதினால் நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப் பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம். ஏனெனில்

ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவினுடைய மரணத்தோடு நாம் ஒப்புரவாகிக்கொள்ளுகிற சத்தியத்தை, தேவன் சுவிசேஷத்தின் மூலமாய் நமக்கு வெளிப்படுத்தாமலிருந்திருந்தால், இந்த ஒப்புரவாகுதலை நாம் பெற்றுக்கொள்ள ஏதுவிருந்திராது. ஆகவேதான் நாம் தேவனைப் பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம்.

இப்படி நாம் கிறிஸ்துவின் அடக்கத்தில் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டபடியால், அவருடைய உயிர்த்தெழுதலினால் அல்லது ஜீவனால் இரட்சிக்கப்படுவோம் என்று எழுதியிருக்கிறது (வச. 10). இந்த இரட்சிப்பு பாவத்தினின்று உண்டாகும் இரட்சிப்பல்ல. ஆனால் இது இரட்சிப்பின் படிகளிலே மூன்றாவது படியாகிய பரிசுத்தஆவியின் அபிஷேகமாகும். பரிசுத்தஆவியினால் கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நமக்கும் ஒரு உயிர்த்தெழுதலின் அனுபவம் கிடைக்கிறது. ஆனபடியால் இந்த உயிர்த்தெழுதலின் அனுபவத்தில் அல்லது பரிசுத்தஆவியின் அபிஷேகத்தில் நாம் இரட்சிக்கப்படுகிறோம் அல்லது ஒப்புரவாகுதலின் மூன்றாவது படியை அடைகிறோம். 9 - ஆம் வசனத்தில் சொல்லியிருப்பது ஒப்புரவாகுதலின் முதல் படியாகும். இதை நாம் அவருடைய இரத்தத்தினாலே ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறோம் என்று கூறலாம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கும் தேவனுக்கும் நடுவாக வந்து, நம் மீது வரும் கோபாக்கினையைத் தம்மேல் ஏற்று, கோபாக்கினையின் பலனாய் இரத்தஞ்சிந்தி முன்னே சத்துருக்களாயும் தூரமாயும் இருந்த நம்மைத் தேவனுக்குச் சமீபமாய்க் கொண்டு வந்திருக்கிறார் (எபே. 2 : 13). கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் பலியானது அல்லது இரத்தஞ் சிந்தியது என்பது ஒரு பக்கத்தில் தேவனுடைய அன்பை வெளிப்படுத்தினாலும், மறுபக்கத்தில் தேவன் பாவத்திற்கு எந்த அளவுக்கு விரோதமாயிருக்கிறாரென்றும், பாவத்தின் தண்டனையாய் வரும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு எவ்வளவு கொடியதாயிருக்கிறதென்றும் நாம் அதன்மூலம் விளங்கிக்கொள்கிறோம். எனவே மனுஷன் பாவியாயிருக்கும் காலம் வரைக்கும் தேவனைச் சமீபித்து வரமுடியாது. ஆகையினால்தான் இயேசுகிறிஸ்து நமக்காக இரத்தஞ்சிந்தினாரென்றும், அவருடைய இரத்தத்தினால்தான் நாம் தேவனுக்குச் சமீபமாய்க் கொண்டுவரப்பட்டிருக்கிறோம் என்றும் அப். பவுல் கூறுகிறார்.

ஞானஸ்நான சத்தியத்தில் அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் என்ற அனுபவங்களின் சாயலில்தான் நாம் பங்குபெறுகிறோம். இந்தச் சத்தியத்தின்படி நாம் அவருடைய அடக்கத்தின் சாயலில் பங்குபெறுகிறோம். இது ஒப்புரவாகுதலின் இரண்டாவது படியாகும். ஞானஸ்நானத்தில் நம்மை அவருடைய மரணத்தோடு ஒப்புரவாக்கிக்கொள்வதினால் நமக்குக் கிடைக்கும் பல ஆவிக்குரிய அனுபவங்களில் சிலவற்றை நாம் இங்கு காணலாம்.

1. அநீதியின் ஆயுதங்களாயிருந்த நம்முடைய அவயவங்களை ஞானஸ்நானத்தில் நாம் நீதியின் ஆயுதங்களாக ஒப்புக்கொடுக்கிறோம் (ரோமர் 6 : 19).
2. கிறிஸ்து என்னும் வேறொரு புருஷனுக்கு நாம் மணவாட்டியாகும்படி ஞானஸ்நானத்தில் நியாயப்பிரமாணத்திற்கு மரித்து அடக்கம்பண்ணப்படுகிறோம் (ரோமர் 7 : 4) என்றும், ஞானஸ் நானம் தேவனுடைய ஆலோசனை (லூக்கா 7 : 30) என்றும், நல்மனச்சாட்சியின் உடன்படிக்கை (I பேதுரு 3 : 21) என்றும், மாம்சத்திற்குரிய பாவசரீரத்தைக் கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தினால் களைந்து விட்டோம் (கொலோ. 2 : 11, 12) என்றும் இப்படிப் பல அனுபவங்களைக் காண்கிறோம்.

10 - ஆம் வசனத்தில் நாம் அவருடைய ஜீவனாலே அல்லது உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கப்படுகிறோம் அல்லது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் ஒப்புரவாக்கப்படுகிறோம் என்று கூறப்பட்டிருப்பதின் கருத்து, நாம் அபிஷேகத்தினால் தலையாகிய கிறிஸ்துவோடு ஒரே சரீரமாய் இணைக்கப்படுகிறோம் என்பதே (I கொரி. 12 : 13 காண்க).

*******.

DeLs ùYüfNm ©WLô£dLdLPYÕ

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய் யான ஒளியாக இருக்கிறார் (யோவான் 1 : 9). ஆனால் தேவஜனங்கள் பிரகாசிக்கக் கூடாதபடி சத்துரு பல தடைகளைக் கொண்டு வருகிறான். இருப்பினும், அவற்றை மேற்கொண்டு நாம் பிரகாசிக்கும்படி யாகத் தேவன் பல ஏதுக்களையும் வழிமுறைகளையும் ஏற்படுத்தியிருக்கிறார். அவற்றைக் குறித்தும் தேவன் நம்மைப் பிரகாசிக்கச் செய்யும் நோக்கத்தைக் குறித்தும் நாம் இக்கட்டுரையின் மூலம் ஆராயலாம்.

முதலாவதாக, நாம் பிரகாசிக்கக்கூடாதபடி சத்துரு கொண்டுவரும் தடைகள் சிலவற்றைத் தியானிப்போம்:

பாவம்:

“தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை” (I யோவான் 1 : 5). ஒளியாயி ருக்கிற நம் தேவன் பரிசுத்த ஸ்தலத்தில் வாசம்பண்ணுகிறார் (யாத். 25 : 8). ஆகையால் அவர் நம்மிலிருந்து பிரகாசிக்கும்படி நாம் பரிசுத்தத்தில் அனுதினமும் வளர வேண்டும். நமது வாழ்நாட் களெல்லாம் பட்டப்பகலைப் பார்க்கிலும் பிரகாசமாயிருக்கும்படி வேதாகமம் கூறும் நிபந்தனையை நாம் கவனிப்போம்: “உம்முடைய கையிலே அக்கிரமம் இருந்தால், அதைத் தூரத்தில் அகற்றிவிட்டு, அநியாயம் உம்முடைய கூடாரங்களில் வாசமாயிருக்கவொட்டாதிரும். ... அப்பொழுது உம்முடைய ஆயுசுகாலம் பட்டப்பகலைப்பார்க்கிலும் பிரகாசமாயிருக்கும்; இருள் அடைந்த நீர் விடியற்காலத் தைப்போலிருப்பீர்” (யோபு 11 : 14 - 17). நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தினால், நாம் ஒருபுறத்

திலும் இருளடைந்து விடாமல் முழுவதும் வெளிச்சமாயிருக்கும்படி பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள எச்சரிக்கையாயிருக்க வேண்டும் (லூக்கா 11 : 35, 36). அப். பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தில், "அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம். களியாட்டும் வெறியும், வேசித்தனமும் காமவிகாரமும், வாக்குவாதமும் பொறாமையும் உள்ள வர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள்போலச் சீராய் நடக்கக்கடவோம். துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்" என்று எழுதுகிறார் (ரோமர் 13 : 12 - 14). எனவே தேவன் நம்மிலிருந்து பிரகாசிக்கும்படி நாம் பாவத்தை அகற்றிவிட்டு 'ஒளியின் ஆயுதங்களையும்', 'கிறிஸ்துவையும்' தரித்துக்கொள்வோமாக!

நிர்விசாரம்:

பாவத்தைப் போலவே நிர்விசாரமும் நாம் பிரகாசிக்கக் கூடாதபடி தடைசெய்யும் ஒரு வல்லமை யாகும். தவறு என்று அறிந்தும் அதைவிட்டுத் திரும்ப மனதில்லாமல் கவலையீனமாய் ஜீவிப் பதே நிர்விசாரம் ஆகும். "எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது" என்று ஏசாயா தீர்க்கதரிசி கூறுகிறான் (ஏசாயா 60 : 1). இதே கருத்தை அப். பவுலுங்கூட, "முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்" என்று குறிப்பிடுகிறார் (எபே. 5 : 8). நாம் கர்த்தருக்குள் வெளிச்சமாயிருந்தாலும், வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளும்படி அவர் கூறும் ஆலோசனையைக் கவனியுங்கள்: "தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார்" என்று நிர்விசாரத்தை அகற்றும்படி அவர் கூறுகிறார் (வச. 14). பிரியமானவர்களே, நீங்கள் பாவத்தை விட்டு விலகி, வெளிச்சமாக இருக்கலாம். ஆனால் வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடந்துகொள்ளும்படி நிர்விசாரமான சாங்கோபாங்கத்தை அகற்ற வேண்டும். நிர்விசாரமான சாங்கோபாங்கத்தை வேதாகமம் அக்கிரமம் என்று அழைக்கிறது (எசே. 16 : 49). நிர்விசாரமான கிரியைகளைத் தேவன் மரித்த நிலவரம் போலவே காண்கிறார். சர்தை சபையின் தூதனுக்கு எழுதும்போது, "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய். நீ விழித்துக்கொண்டு, சாகிறதற் கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து; உன் கிரியைகள் தேவனுக்குமுன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை" என்று ஆவியானவர் எச்சரிக்கிறார் (வெளி. 3 : 1 - 3). எனவே தேவன் நம்மைப் பிரகாசிப்பிக்கும்படி நம் ஆவிக்குரிய ஜீவியத்தின் வெதுவெதுப்பான தன்மையை நாம் அகற்றிவிட்டு அனலாயிருக்க வேண்டும்.

மனமுறிவு:

பரிசுத்தத்தோடும் ஆவியின் அனலோடும் தேவனுக்காகப் பிரகாசிக்க வேண்டுமென்று எழும்புகிற தேவபிள்ளைகள் சிலர் எதிர்கொள்ளும் மற்றொரு தடை, மனமுறிவு ஆகும். தீர்க்க தரிசியாகிய ஏசாயா இதைக் குறித்து, "கர்த்தர் தமது ஜனத்தின் முறிவைக் கட்டி, அதின் அடிக் காயத்தைக் குணமாக்கும் நாளிலே, சந்திரனுடைய வெளிச்சம் சூரியனுடைய வெளிச்சத்தைப்போலவும், சூரியனுடைய வெளிச்சம் ஏழத்தனையாய் ஏழு பகலின் வெளிச்சத்தைப்போலவும் இருக்கும்" என்று கூறுகிறான் (ஏசாயா 30 : 26). தேவனுக்காக முழுப் பலத்தோடும், முழு மனதோடும் பிரயாசப் படும் தேவபிள்ளைகளின் சரீரத்தையோ, அல்லது அவர்கள் வீட்டாரையோ சத்துரு வாதித்து, அவர்கள் மனதைத் திடனற்றுப் போகப் பண்ணுகிறான். சரீரத்தில் அவர்கள் அடையும் வேதனை யும் மனதின் பாரமும் அவர்களை மனமுறிவடையச் செய்கின்றன. அன்பானவர்களே, மனமுறிவு நீங்கள் பிரகாசிக்கக் கூடாதபடி தடையாக உள்ளதா? நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயி ருக்கும். என்றாலும் கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார் என்று வேதாகமம் கூறுகிறது. அவரை நோக்கிப் பார்த்துப் பிரகாசமடையுங்கள் (சங். 34 : 19, 5).

எபிரெயர் 11 - ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவனுடைய ஜனங்கள் விசுவாசத் தின் நிமித்தம் சகித்த உபத்திரவங்களைத் தியானித்துப் பாருங்கள். நிந்தைகள், அடிகள், கட்டுகள், காவல் போன்ற பலவித இன்னல்களை அவர்கள் அனுபவித்தார்கள்; கல்லெறியுண்டார்கள்; வாளால் அறுப்புண்டார்கள்; பரீட்சைபார்க்கப்பட்டார்கள்; பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள்; குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள் (எபி. 11 : 36, 37). இந்தச் சாட்சி களைத் தியானித்துக்கொண்டு, பாரமான யாவற்றையும் தள்ளிவிட்டு, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத் தில் நாம் பொறுமையோடே ஓடக்கடவோம் (எபி. 12 : 1, 2). நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால் களையும் நாம் திரும்ப நிமிர்த்தக்கடவோம். அப்போது தேவன் நம்மைப் பிரகாசிப்பிப்பார்.

நாம் கர்த்தருக்காகப் பிரகாசிப்பதற்கு உதவும் சில ஏதுக்களைக் கீழே காண்போம்:

பலியாக்கப்படுதல்:

"கர்த்தர் நம்மைப் பிரகாசிப்பிக்கிற தேவனாயிருக்கிறார்; பண்டிகைப் பலியைக் கொண்டு போய்ப் பலிபீடத்தின் கொம்புகளில் கயிறுகளால் கட்டுங்கள்" (சங். 118 : 27). தேவன் நம்மைப் பிர காசிப்பிக்கும்படியாக நாம் நம்மைப் பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டியது அவசியம். நாம் நம்முடைய

சுயநலங்கருதாமல், சுகபோகங்களைத் துறந்து, பிறர் நலனுக்காகப் பலியாக்கப்படும்படி, கிறிஸ்துவின் அன்பினால் கட்டப்பட வேண்டும். இவ்விதம் பலியின் சிந்தையோடு கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டவர்கள் மட்டுமே, தேவனால் பிரகாசிப்பிக்கப்பட முடியும். ஒரு விளக்கு பிரகாசிக்க வேண்டுமாகில், அதிலுள்ள திரியானது எரிந்து சாம்பலாக வேண்டும். கர்த்தராகிய இயேசு யோவான் ஸ்நானனைக் குறித்து, "எரிந்து பிரகாசிக்கிற விளக்கு" எனக் குறிப்பிடுகிறார் (யோவான் 5 : 35). அவனுடைய தியாகமும் பிரதிஷ்டையுமுள்ள சுயநலமற்ற ஜீவியம், அநேகரைக் கர்த்தரண்டைத் திருப்பும் விளக்காக அவனைக் கர்த்தர் உபயோகிக்க ஒரு காரணமாயிருந்தது. அருமையானவர்களே! நாமும் தேவனால் பிரகாசிப்பிக்கப்பட்டு அந்தகாரத்திலிருக்கிற மனுஷருக்கு வெளிச்சம் கொடுக்கிற வர்களாய் விளங்கும்படியாக அன்பினால் நம்மைப் பலியாக்குவோமாக (எபே. 5 : 2).

தேவனுடைய சமுகத்தில் காத்திருத்தல்:

மோசே சாட்சிப் பலகைகள் இரண்டையும், தன் கையில் எடுத்துக்கொண்டு, சீனாய் மலையிலிருந்து இறங்குகிறபோது, அவனுடனே 'தேவன் பேசினதினாலே' அவன் முகம் பிரகாசித்தது (யாத். 34 : 29). தேவனுடைய சமுகத்தில் காத்திருந்து, அவருடைய வார்த்தைகளைக் கேட்டு, அவற்றை ஜனங் களுக்கு அறிவிப்பவர்கள் பிரகாசிக்க முடியும். மோசே தனக்குக் கற்பிக்கப்பட்டதை இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லும்போது இஸ்ரவேல் புத்திரர் அவன் முகம் பிரகாசித்திருப்பதைக் கண்டார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது (வச. 34, 35). இதற்குப் புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் ஓர் உதா ரணம் உண்டு. அன்னாவும் காய்பாவும் பிரதான ஆசாரியராக இருந்தபோதிலுங்கூட வனாந்தரத்திலே சகரியாவின் குமாரனாகிய யோவானுக்கே தேவனுடைய வார்த்தை உண்டாயிற்று. பாவமன்னிப்புக் கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்து அவன் பிரசங்கித்தான் (லூக்கா 3 : 2, 6). எனவே, "அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்; நீங்களும் சிலகாலம் அவன் வெளிச்சத் திலே களிகூர மனதாயிருந்தீர்கள்" என்று இயேசுகிறிஸ்து அவனைக் குறித்துச் சாட்சி கொடுத்தார் (யோவான் 5 : 35). பிரியமானவர்களே, தேவனுடைய சமுகத்தில் அவருடைய வார்த்தை உங்களுக்கு உண்டாகுமட்டும் அமைதியாகக் காத்திருங்கள். அவருடைய வார்த்தையைக் கேட்டு, அதை ஜனங்களுக்கு அறிவியுங்கள். அப்போது தேவன் உங்களைப் பிரகாசிக்கச் செய்வார்.

ஜெபஜீவியம்:

நம்முடைய ஆயுட்காலம் பட்டப்பகலைப்பார்க்கிலும் பிரகாசமாயிருக்கும்படி, அக்கிரமத்தை அகற்ற வேண்டும் என்று முன்பு நாம் கவனித்தோம். அதற்கு முந்தின வசனம், "நீர் உம்முடைய இருதயத்தை ஆயத்தப்படுத்தி, உம்முடைய கைகளை அவருக்கு நேராக விரித்தால் நலமாயி ருக்கும். ... அப்பொழுது உம்முடைய ஆயுசுகாலம் பட்டப்பகலைப்பார்க்கிலும் பிரகாசமாயிருக்கும்; இருள் அடைந்த நீர் விடியற்காலத்தைப்போலிருப்பீர்" என்று ஜெப ஜீவியத்தையும் வலியுறுத்து கிறது (யோபு 11 : 13 - 17). மேலும், "தேவனுக்கு நேராக உம்முடைய முகத்தை ஏறெடுப்பீர். நீர் அவரை நோக்கி விண்ணப்பம்பண்ண, அவர் உமக்குச் செவிகொடுப்பார்; ... உம்முடைய பாதை களில் வெளிச்சம் பிரகாசிக்கும்" என்று வேதாகமம் கூறுகிறது (யோபு 22 : 26 - 28). தானியேலுங்கூட, "இப்போதும் எங்கள் தேவனே, நீர் உமது அடியானுடைய விண்ணப்பத்தையும் அவனுடைய கெஞ்சுதலையும் கேட்டு, பாழாய்க் கிடக்கிற உம்முடைய பரிசுத்த ஸ்தலத்தின்மேல் ஆண்டவரி னிமித்தம் உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும்" என்று வேண்டுதல் செய்கிறான் (தானி. 9 : 17).

நம்முடைய வெளிச்சம் மனுஷர் முன்பாகப் பிரகாசிக்க வேண்டுமாகில், ஜெபஜீவியம் மிகவும் இன்றியமையாதது. "விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்" என்று கர்த்தராகிய இயேசு கூறியிருக்கிறார் (மத். 5 : 15). இங்கு எரிகிற விளக்கு கிறிஸ்துவினால் பிரகாச மாக்கப்பட்ட, நற்கிரியைகளுள்ள நம் ஜீவியத்தையும், விளக்குத் தண்டு ஜெப ஜீவியத்தையும் குறிக்கும். நம்முடைய ஜெப ஜீவியத்திற்குத்தக்கதாக மட்டுமே நாம் பிரகாசமுள்ளவர்களாயிருந்து, மற்றவர்களுக்கு வழிகாட்ட முடியும் (வச. 16). 'மரக்காலால் மூடி வைப்பது' என்பது, கிறிஸ்துவோடு மாத்திரமே நம்மை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய நாம், அதற்குப் பதிலாக நம்மை நாமே அளந்து கொண்டு, அல்லது மற்ற மனுஷரோடு நம்மை ஒப்பிட்டுப் பார்த்து, சுயநீதியுள்ளவர்களாயிருப்பதைக் குறிக்கிறது. 'கட்டிலின் கீழ் வைப்பது' என்பது (மாற்கு 4 : 21), நிர்விசாரமுள்ள சாங்கோபாங்கமான ஜீவியத்தைக் குறிக்கிறது. நாம் இவை இரண்டையும் ஒழித்துவிட்டு, நம் ஜெப ஜீவியத்தைப் புதுப் பித்துக்கொள்வோமாகில் நம்முடைய வெளிச்சம் மனுஷர் முன்பாகப் பிரகாசித்து அவர்களை மெய் யான ஜீவ ஒளியான ஆண்டவராகிய இயேசுவண்டைக்கு வழி நடத்தும். ஆகையால் நம்மைப் பலியாக ஒப்புக்கொடுப்பதின் மூலமாகவும் தேவனுடைய வார்த்தைக்காக அவரை நோக்கிக் காத்திருப்பதின் மூலமாகவும் ஜெப ஜீவியத்தின் மூலமாகவும் நாம் பிரகாசிப்போமாக.

முடிவாக, தேவன் நம்மைப் பிரகாசிக்கச் செய்வதன் நோக்கம் யாது?

பாவமும் அக்கிரமங்களும் நிறைந்த இந்த உலகத்தில் ஜனங்கள் தேவனுடைய இரட்சிப்பைக் குறித்து அறியவும், தங்களுக்குச் செம்மையாகத் தோன்றுகின்ற மரண வழிகளை விட்டு, தேவனுடைய

வழியை அறிந்துகொள்ளவுமே, தம்முடைய பிள்ளைகள் மூலமாகத் தேவன் பிரகாசிக்கிறார். சங்கீதக்காரனின் ஜெபத்திலிருந்து இதை நாம் விளங்கிக்கொள்ளலாம். "தேவனே, பூமியில் உம்முடைய வழியும், எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியமும் விளங்கும்படியாய், தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர்வதித்து, உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்" (சங். 67 : 1, 2).

தேவனுக்காகப் பிரகாசிக்க விரும்பும் யாராயினும், அவர்கள், தங்களையே பிரசங்கியாமல், தேவனை மாத்திரம் பிரசங்கிக்க வேண்டும். தேவனை ஏற்றுக்கொள்ளாத, ஆனால் தொலைக் காட்சியில் கிறிஸ்தவ நிகழ்ச்சிகளைக் கண்ட ஒரு சகோதரன் இவ்வாறு கூறினார்: 'இந்த சகோதரன் எனக்காக ஜெபித்தார். நான் இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டேன். ... வியாதியிலிருந்து விடுதலை பெற்றேன் என்று கூறும் சாட்சிகள் இயேசுகிறிஸ்துவைப் பிரசித்தப்படுத்துகிறார்களா அல்லது அந்த ஊழியரைப் பிரசித்தப்படுத்துகிறார்களா என்றே தெரியவில்லை'. உலகத்தைக் கலக்கின அப்போஸ்தலரின் மாதிரியையும், குறிப்பாக அப். பவுலின் சாட்சிகளையும் வாசித்துப் பாருங்கள். சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளுக்குப் பிரகாசமாயிராதபடி இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் ஜனங்களுடைய மனக்கண்களைக் குருடாக்கியுள்ளான் (II கொரி. 4 : 4). இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன், "இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்" என்று தேவன் தங்களைப் பிரகாசிப்பிக்கச் செய்யும் நோக்கத்தை அப்போஸ்தலர் தெளிவாக விளங்கிக்கொண்டார்கள். எனவே "நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்" என்று அவர்கள் அறிக்கையிட்டனர் (வச. 5, 6). நமக்கு அல்ல, தேவனுக்கே மகிமை வரப்பண்ணும்படியாகவே அவர் நம் மூலமாய் பிரகாசிக்கிறார் என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். "எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உமது கிருபையினிமித்தமும், உமது சத்தியத்தினிமித்தமும், உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும்" (சங். 115 : 1) என்று எப்போதும் நாம் வேண்டிக்கொள்வோமாக.

பிரியமானவர்களே, இருளில் நடக்கிற ஜனங்களுக்குப் பெரிய வெளிச்சத்தைக் காண்பிப்பதும், மரண இருளின் தேசத்தில் குடியிருப்பவர்களை அந்த வெளிச்சத்தினிடத்திற்கு வழிநடத்துவதும் நம்முடைய தலையாய கடமையாயிருக்கட்டும் (ஏசாயா 9 : 2). "ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்" (தானி. 12 : 3). ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவனையே 'ஞானமுள்ளவன்' என்று வேதாகமம் அழைக்கிறது (நீதி. 11 : 30). எனவே தேவன் நம்மைப் பிரகாசிக்கச் செய்யும்படி, பாவம், நிர்விசாரம், மனமுறிவு இவற்றை அகற்றிவிட்டு, தேவனுடைய சமுகத்தில் அவருடைய வார்த்தை உண்டாகும்படி காத்திருந்து, நம் ஜெப ஜீவியத்தைக் கட்டியெழுப்பிக்கொண்டு, நம்மைத் தேவனுக்குள் மறைத்துக்கொண்டு, அவரை மட்டுமே மகிமைப்படுத்தி, சுவிசேஷம் அறிவித்து, ஆத்தும ஆதாயம் செய்வோமாக.

இருளிலும் ஒளியிலும் நீரே!

கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும்போது துக்கமடைவதும், நன்மைகள், ஆசீர்வாதங்களைப் பெறும்போது சந்தோஷப்படுவதும் மனுஷ இயல்பு. எகிப்தின் அடிமைத்தனத்தில் சிக்குண்டு தவித்துப் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்த இஸ்ரவேலரை மீட்கும்பொருட்டாகக் கர்த்தர் அவர்களைச் சந்தித்தார் என்றும் அவர்கள் சகிக்கும் உபத்திரவங்களைக் கண்ணோக்கிப் பார்த்தார் என்றும் கேள்விப்பட்டபோது அவர்கள் தலைகுனிந்து தொழுதுகொண்டார்கள் (யாத். 4 : 31). எனினும் அவர்கள் விடுதலையாக்கப்படும் முன்னதாகப் பார்வோன் மூலம் அவர்களுக்கு மிகுதியான இக்கட்டு வந்தபோது அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள்; நம்பிக்கையற்றுப் போனார்கள் (யாத். 5 : 19 - 21). அவர்களது சந்தோஷமும் நம்பிக்கையும் அவர்களுடைய சூழ்நிலையைச் சார்ந்ததாயிருந்தது. மேலும் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்ட அவர்கள் செங்கடலைக் கடந்தபோது அவர்களைப் பின்தொடர்ந்துவந்த எகிப்தியர் யாவரும் அங்கே மாண்டபடியினால் அதிக சந்தோஷத்தோடு தேவனைத் துதித்துப் பாடினார்கள்: "கர்த்தரைப் பாடுவேன்; அவர் மகிமையாய் வெற்றிசிறந்தார்; குதிரையையும் குதிரைவீரனையும் கடலிலே தள்ளினார்" (யாத். 15 : 1). இவ்விதம் வெற்றி முழக்கமிட்ட இஸ்ரவேலர் மாராவிலே வந்தபோது அங்கே தண்ணீர் கசப்பாயிருந்தபடியால் முறுமுறுத்தார்கள். வனாந்தரத்தில் வழியினிமித்தமும் ஆகாரத்தினிமித்தமும் முறுமுறுத்து அவர்கள் தேவனை விட்டு விலகிப் போனார்கள். இவ்விதம் அவர்கள் தேவனில் மனமகிழ்ச்சியாயிருப்பதும், அவரைத் துதிப்பதும், அவரை விசுவாசிப்பதும் சூழ்நிலைகளைப் பொறுத்ததாகவேயிருந்தது. தேவபிள்ளைகளாகிய நமது நிலவரம் எப்படி இருக்கிறது?

வேதாகமத்தில் சில தேவமனுஷர் முற்றும் விபரீதமான சூழ்நிலைகளில் வைக்கப்பட்டிருந்தபோதும், கஷ்ட நஷ்டங்கள், போராட்டங்கள் மத்தியிலும் எவ்விதம் கர்த்தரை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்து ஜெயத்தைப் பெற்றுக்கொண்டார்கள் என நாம் பார்க்கிறோம்.

உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவன் எனவும், 'என் தாசன்' எனவும் தேவன்தாமே சாட்சி கொடுத்த யோபுக்கு வந்த கொடிய சோதனைகளை நாம் அறிவோம். தன் ஆஸ்திகளையும், தான் அருமையாய் நேசித்த பத்துப் பிள்ளைகளையும் இழந்து, உக்கிரமான நோயினால் அவன் வேதனைப்பட்டான். அவனுக்கு ஆறுதல் சொல்லவும் யாருமில்லை. அக்கொடிய வேதனைகள் மத்தியில் அவன் அங்கலாய்த்தபோதும் அவன் தேவனைப் பற்றிக் குறை சொல்லவில்லை. அவன், "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத் திரம்" ; "தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ" என்றான் (யோபு 1 : 21 ; 2 : 10). "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப் பேன்" (யோபு 13 : 15); "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல்முதலானவை அழுகிப்போன பின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்" (யோபு 19 : 25 - 27) என்பது அவன் அறிக்கையா யிருந்தது. தனக்கு முன்னும் பின்னும் இடதுபுறத்திலும் வலதுபுறத்திலும் தான் அவரைக் காணக் கூடாதிருந்தும், "நான் போகும் வழியை அவர் அறிவார்; அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்" (யோபு 23 : 10) என்று அவன் தன் விசுவாசத்தை அறிக்கை செய்தான். எனவே அவன் அச்சோதனைகளின் பாதையை வெற்றிகரமாகக் கடந்து வர தேவன் அவனுக்கு உதவி செய்தார். மிகுந்த சோதனைகளின் மத்தியில், "நான் அவரைக் காணாதபடிக்கு ஒளித்திருக்கிறார்" என்று சொன்ன அவன், தன் சோதனைகளின் முடிவில், "என் காதினால் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது" என்று அறிக்கை செய்யக் கூடியதாயிருந்தது (யோபு 23 : 9 ; 42 : 5). அவன் முன்னிலைமையைக் காட்டிலும் தேவன் அவன் பின்னிலைமையை எவ்வாறு ஆசீர்வதித்தார் என்று நாம் அறிவோம். மனச்சாட்சி காலத்தில் ஜீவித்த அவனைப் புதிய ஏற்பாட்டின் காலத்தில் ஜீவிக்கிற நமக்குத் தேவன் ஒரு முன்மாதிரியாக நிறுத்தியிருக்கிறார்! (யாக். 5 : 11).

ஆபிரகாமுடைய சரீரமும் சாராளுடைய கர்ப்பமும் செத்துப்போனதாயிருந்த அவர்கள் விருத்தாப்பியத்தில் கர்த்தர் அவர்களுக்கு ஒரு குமாரனைத் தருவதாக வாக்குப்பண்ணினார். ஆபிர காம், "நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்." அவன் தேவனுடைய வாக்குத்தத்தத்தின் பேரில் உறுதியான நம்பிக்கையுள்ளவனாயிருந்தபடியால், "தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான்". அவன் விசுவாசம் அவனுடைய சரீரத்தின் நிலைமையையோ அவனது வயதையோ பொறுத்ததாயி ராமல் மரித்தோரை உயிர்ப்பிக்கிறவரும், இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக் கிறவருமாயிருக்கிற தேவன் மேலேயே இருந்தது. எனவே அவனைக் குறித்து, "அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை" எனவும், "தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாச மாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறா ரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்" (ரோமர் 4 : 19 - 21) என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்விதம் தேவனுடைய வாக்குத்தத்தத்தை விசுவாசித்து அதைப் பெற்றுக்கொண்ட அவனுக்கு அதே குமாரனுடைய விஷயத்தில் மற்றுமொரு சோதனை காத்திருந்தது. அது, நம்புவதற்கு ஒரு ஏதுவுமில்லாத வேளையில் நம்பி, விசுவாசித்துப் பெற்றுக்கொண்ட அதே வாக்குத்தத்தத்தின் குமாரனைப் பலி செலுத்த வேண்டும் என்பதே. அவன் மூலமாக அல்லவா தேவன் ஆபிரகாமுக்கு வானத்து நட்சத்திரங்களைப் போல் திரளான ஜனங்களை வாக்குப் பண்ணியிருந்தார். அந்தச் சோதனையிலும் ஆபிரகாம் மனந்தளரவில்லை. தன் ஏக சுதனைப் பலி செலுத்த அவன் தயங்கவில்லை. "ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று அவனோடே சொல்லப்பட்டிருந்ததே. இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பெற்றவன், மரித்தோரிலிருந்துமெழுப்பத் தேவன் வல்லவரா யிருக்கிறாரென்றெண்ணி, தனக்கு ஒரே பேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்; மரித்தோரி லிருந்து அவனைப் பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான்" (எபி. 11 : 18, 19). ஈசாக்கைப் பலி செலுத்தினாலும் அவன் சுட்டெரிக்கப்பட்ட சாம்பலிலிருந்தும் அவனை மீண்டும் தேவன் உயிர்ப்பித்துத் தரக் கூடும் என்பது அவன் விசுவாசமாயிருந்ததோ! எனவே தேவபிள்ளையே, உன் சூழ்நிலைகளுக்கு அப்பால், அவற்றிற்கு எதிராக உனக்கு விசுவாசிக்க முடியாதிருந்தால், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஜீவித்த ஆபிரகாமோடே உன்னை ஒப்பிட்டுப் பார்த்து, மரித்தோரை உயிர்ப்பிக்கிற தேவன் மேல் - இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைக்கிற அவர்மேல் - உன் விசுவாசத்தைக் கட்டி எழுப்பிக்கொள்வாயாக. விசுவாசம் கட்டி எழுப்பப்பட சுத்த மனச்சாட்சி தேவை. எனவே விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக்கொள்வாயாக.

சங்கீதக்காரனாகிய தாவீது, "கர்த்தர் எனக்கு நன்மைசெய்தபடியால் அவரைப் பாடுவேன்" (சங். 13 : 6) என்றும், "கர்த்தர் என் சத்தத்தையும் என் விண்ணப்பத்தையும் கேட்டதினால், அவரில் அன்பு கூருகிறேன்" (சங். 116 : 1) என்றும் கூறுகிறான். என்றாலும் அவன் சில இக்கட்டான பாதைகளினூடே கடந்து செல்லும்போது, தேவன் அவனுக்காகக் கிரியை செய்யாமல் அமைதியாயிருந்ததாக அங்கலாய்க் கிறான். "என் அரணாகிய தேவன் நீர்; ஏன் என்னைத் தள்ளிவிடுகிறீர்? சத்துருவினால் ஒடுக்கப்பட்டு நான்

ஏன் துக்கத்துடனே திரியவேண்டும்?” என்று தன் ஆத்துமாவில் கலங்கினவனாய் அவன் தேவனை நோக்கி அபயமிடுகிறான் (சங். 43 : 2). அவன் தேவனை, என் கன்மலையாகிய தேவனே என்று குறிப்பிட்டு, “ஏன் என்னை மறந்தீர்?” என்று கதறும் அளவுக்கு இக்கட்டுகள் அவனைச் சூழ்ந்து கொண்டன (சங். 42 : 9). என்றாலும் அவன் தன் தேவனாகிய கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு, “என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு; என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்” (42 : 11; 43 : 5) என்கிறான். நமக்கு அடைக்கலமும் கன்மலையுமாயிருக்கிற தேவனே நம்மை மறந்ததுபோன்ற, நம் விண்ணப்பங்களுக்குச் செவிகொடாதது போன்ற சந்தர்ப்பங்கள் நமக்கு உண்டாகக் கூடும். தேவனை உத்தமமாய் நேசிக்கிறவர்களும் அவருக்குப் பிரியருமாயிருக்கிறவர்களுக்கு அப்படிப்பட்ட பாதைகள் சில சமயங்களில் தேவனால் அனுமதிக்கப்படுகின்றன. நாம் அச்சந்தர்ப்பங்களில் இன்னும் அதிகமான துதியுடன் தேவனுக்கு மாத்திரம் காத்திருக்கிறவர்களாய் இருப்போமாகில், முடிவில் சிறப்பான ஜெயத்தைக் கண்டடையலாம். தாவீது பின் நாட்களில் இதனைச் சாட்சியாக அறிவிக்கிறான். “தேவனே, நீர் எங்களைக் கைவிட்
டீர், எங்களைச் சிதறடித்தீர், ... உமது பிரியர் விடுவிக்கப்படும்படி, ... எனக்குச் செவிகொடுத்த ருளும். ... தேவனாலே பராக்கிரமம் செய்வோம்; அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப்போடு வார்” (சங். 60 : 1, 5, 12). சீரியரின்மேல் ஜெயம் பெற்றுக்கொண்ட அவன், தன் மற்ற சத்துருக் களைக் கர்த்தர் தனக்குக் கீழ்ப்படுத்தும் விஷயத்தில் அவர் செயல்படுமுன்னதாகவே கர்த்தருடைய வார்த்தைகளைப் பிடித்துக்கொண்டு, அவர் வாக்குப்பண்ணியிருந்த ஜெயத்தில் களிகூருகிறான் (வச. 6 - 10). இதினிமித்தம் அவன் தன் அனைத்துச் சத்துருக்கள் மேலும் மகத்தான ஜெயத்தைப் பெற்றுக்கொண்டான். நாமும் தேவன் மேலுள்ள நம் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் உண்மை யையும் அறிக்கை செய்து அவற்றை இன்னும் அதிகம் புதுப்பித்துக்கொண்டு தொடர்ந்து அவ ரையே பற்றிக்கொள்வோமாக.

மேலும் பழைய ஏற்பாட்டின் காலத்தில் சில தீர்க்கதரிசிகளுங்கூட இருளான பாதைகளில் நடத் தப்பட்டதை நாம் அறிவோம். “அவர் என்னை வெளிச்சத்திலே அல்ல, இருளிலே அழைத்து நடத்திவந்தார்” (புல. 3 : 2) என்று எரேமியா கூறுகிறான். எனினும், “ஆண்டவர் கட்டளையிடா திருக்கக் காரியம் சம்பவிக்கும் என்று சொல்லுகிறவன் யார்?” (வச. 37) என்பது அவன் அறைகூவலா யிருந்தது. அப்படியே மீகா தீர்க்கதரிசியும், “நான் இருளிலே உட்கார்ந்தால், கர்த்தர் எனக்கு வெளிச்ச மாயிருப்பார்; ... அவர் என்னை வெளிச்சத்திலே கொண்டுவருவார்” (மீகா 7 : 8, 9) என்று கூறுகிறான். எனவே தேவபிள்ளையே, நீ ஒருவேளை இருள் சூழ்ந்த பாதையிலே நடத்தப்படலாம். உன் குற்றங் கள், குறைகள் அதற்குக் காரணமாயிருந்தால் நீ அவற்றிற்காக மனஸ்தாபப்பட்டு அவரிடத்தில் திரும்புவாயாக. அவர் மன்னிக்கத் தயை பெருத்திருக்கிறார். அவருக்குப் பயப்படும்படிக்கு அவரி டத்தில் மன்னிப்பு உண்டு. அதற்குப் பின் அவருடைய வெளிச்சத்திற்காக நீ நம்பிக்கையோடே காத்திரு.

“உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு, தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்துகொள்ளக்கடவன்” (ஏசாயா 50 : 10) என்று கூறப்பட்டிருப்பது போல கர்த்த ருக்குப் பயந்து அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டும் வெளிச்சமில்லாமல் இருட்டிலே நடக்க வேண்டியதாயிருந்தால், கர்த்தரை நம்பி அவரையே சார்ந்துகொள்வாயாக. ஏற்றவேளையிலே உன் இருளை வெளிச்சமாக அவர் மாற்றுவார். அதுவரை உன் நம்பிக்கை கர்த்தர் மேலேயே இருக்கட்டும். அவரை மாத்திரம் உன் சார்பிடமாக்கிக்கொள்வாயாக.

புதிய ஏற்பாட்டில் புறஜாதியைச் சேர்ந்த ஒரு ஸ்திரீயை நாம் காண்கிறோம். கர்த்தராகிய இயேசு தன் மகளைச் சுகமாக்குவார் என்று விசுவாசித்து அவரிடம் வந்த அவள் பல விபரீதமான தடை களைச் சந்திக்கிறாள். அவளுக்கு முன்னும் பின்னும் தம்மிடம் சுகத்தை நாடி வந்தவர்களிடம், “உன் விசுவாசத்தின்படி உனக்கு ஆகக்கடவது”; “எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு”; “நீ விசுவாசித்தால் கூடும்” என்றெல்லாம் கூறி உடனே சுகமாக்கி வந்தவர், இந்த ஸ்திரீயின் விஷயத்தில் விநோதமாக இடைபட்டது போல் தோன்றுகிறதே! “ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்” என்ற கூப்பிடுதலின் சத்தமும் அதைத் தொடர்ந்து, “என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள்” என்ற வேதனையின் வார்த்தைகளும் அவர் செவியில் எட்டாதது போல் அவர் ஒரு வார்த்தையும் அவளுக்குப் பிரதியுத்தரமாகச் சொல்லவில்லை. சீஷர்களும், ‘இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளுக்கு உதவி செய்யும்’ என்று சொல்லாமல், “இவளை அனுப்பிவிடும்” என்பதே அவர்கள் அவளுக்காக செய்த பரிந்துபேசுதலாயிருந்தது. தம்மிடம் வரும் ஒருவரையும் ஒருக்காலும் புறம்பே தள்ளாத ஆண்டவராகிய இயேசுவும், “காணாமற்போன ஆடு களாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல” என்று கூறி விட்டார். இவையெல்லாவற்றின் மத்தியிலும் அந்தப் புறஜாதி ஸ்திரீ, “ஆண்டவரே, எனக்கு உதவி செய்யும்” என்று அவரைப் பணிந்துகொண்டாள் என்பது நமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. அதற்குப் பின்னும் கர்த்தராகிய இயேசு, “பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடு

கிறது நல்லதல்ல" (மத். 15 : 26) என்று கூறினார். அதற்கு மறுமொழியாக அவள், "மெய்தான் ஆண்டவரே" என்று கூறியது, 'நான் நாய்தான் ஆண்டவரே' என்று கூறுமாப்போலல்லவா இருக்கிறது? விசுவாசத்துடன் அவரிடம் வந்த அவள் தன்னை மென்மேலும் தாழ்த்தி, தடைகள் மத்தியிலும் அவரை விசுவாசித்து, தன் மகளுக்கு சுகத்தையும் "ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது" என்ற சாட்சியையும் ஆண்டவராகிய இயேசுவிடமிருந்து பெற்றுக்கொண்டாள். அருமையான தேவபிள்ளையே, கர்த்தர் உன் ஜெபத்திற்குப் பதில் கொடாதது போல உனக்குத் தோன்றும்போது - அவர் உன் கஷ்டங்களை அறியாதவர் போல உன்னிடம் செயல்படுவதாக உனக்குத் தோன்றும்போது - உன் இக்கட்டான நிலையைத் தேவஊழியருங்கூட விளங்கிக்கொள்ளாதவர்கள் போல, உனக்கு உதவி செய்ய வேண்டிய அளவு உனக்கு உதவி செய்யவில்லை என்று உனக்குத் தோன்றும்போது - நீ சோர்ந்துபோகாது உன் விசுவாசத்தைப் பெரிதான விசுவாசம் ஆக்கும்படி, அதை விலையேறப்பெற்றதாய் மாற்றும்படி அது உனக்குக் கொடுக்கப்படும் பொன்னான தருணம் என்பதை அறிந்துகொள்வாயாக. ஏற்ற வேளையில் அவர், "நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது" என்றுரைத்து, உன் இருதயத்தின் வாஞ்சையை உனக்குக் கட்டளையிடுவார்.

கர்த்தராகிய இயேசு பிதாவின் சித்தத்தைச் சம்பூரணமாய்ச் செய்து முடித்தவராய்க் கல்வாரியில் தொங்கியபோது பிதாவின் முகம் மறைக்கப்பட்ட ஒரு சந்தர்ப்பம் அவருக்குங்கூட உண்டாயிற்று. "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று அவர் கதறியபோதிலும், "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று கூறி, பிதாவுக்குத் தம்மைச் சம்பூரணமாய் அவர் ஒப்புக்கொடுத்தார். முழு உலகத்தின் பாவமும் நேச குமாரன் மேல் வந்த போது பிதா தம் முகத்தை மறைக்கவும் அவரைக் கைவிடவும் நேர்ந்தது. ஆயினும் நேசகுமாரன் பிதாவின் அன்பைச் சந்தேகிக்காதவராய், அவர் தம் பிதா என்று அறிக்கை செய்து அவரிடம் தம்மை ஒப்புவித்தார்.

அப். பவுல் ரோமர் 8 : 28 - இல், "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" என்று கூறி, அதைத் தொடர்ந்து தேவன் தாம் முன்னறிந்தவர்களைத் தம்முடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார் என்றும் அவர்களை அழைத்து, நீதிமான்களாக்கி, மகிமைப்படுத்துகிறார் என்றும் கூறுகிறார். இந்த வேலை அவர்களுக்குள் நடப்பிக்கப்படும்படியாக, தம்மில் அன்புகூருகிற அவர்களுக்கு அவர் செய்வதெல்லாம் நன்மைக்கேதுவாயிருக்கிறது. அந்த நன்மையான நோக்கத்தை மனதிற்கொண்டே சகலத்தையும் அவர் அவர்களுக்குச் செய்கிறார். தேவன் நன்மைக்காக எல்லாம் செய்கிறார் என்ற அறிவுடன் அவர்கள் அப். பவுலைப் போல, "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?" என்ற அறைகூவலுடன் தங்கள் ஓட்டத்தைத் தொடருகிறார்கள். "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே" (ரோமர் 8 : 37) என்பது அவர்களது வெற்றி முழக்கமாகிறது.

எனவே தேவபிள்ளையே, நீ விசுவாசிக்கிறதற்கு ஏதுவில்லாத சூழ்நிலையிலும், கர்த்தருடைய சகாயம் உனக்கு அற்றுப் போனதைப் போன்ற நிலவரத்திலும், உன்னைச் சுற்றிலும் வெளிச்சமில்லாத இருளிலும் நீ வைக்கப்பட்டாலும், சூழ்நிலைகளைப் பாராது, உன் தேவன் மேலுள்ள அன்பையும் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் அதிகரிக்கச் செய்துகொண்டு தொடர்ந்து அவரையே பற்றிக்கொள்வாயாக. அவரே உன் நம்பிக்கையாயிருப்பாராக. அவரே மரித்தோரை உயிர்ப்பிக்கிறவர்; இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைக்கிறவர்; கோணலானவைகளைச் செவ்வையாக்குகிறவர்; உன் அந்தகாரத்தை பட்டப்பகலைப் போல வெளிச்சமாக்குகிறவர்; பள்ளங்களை உயர்த்தி மேடானவைகளைத் தாழ்த்துகிறவர்; ஜெபங்களைக் கேட்கிறவர்; உன் தோல்விகளை ஜெயமாக மாற்றுகிறவர். உன் யுத்தங்களை உனக்காக நடத்துகிறவர்.

எனவே எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அவர் அடிச்சுவடுகளின் வழியிலே அவரைத் தொடர்வோமாக. "ஒளியைப் படைத்து, இருளையும் உண்டாக்கினேன்" (ஏசாயா 45 : 7) என்று கூறியவர் நம்முடன் இருப்பதால்,

இயேசுவே நானும்முடன்
வாழ்விலும் மா தாழ்விலும்
இருளிலும் ஒளியிலும்
ஏகுவேன்
பூவிலும் நீர் மாத்திரம்
வானில் வேறு இல்லையே
இனிமேல் நீரே துணை
என்றைக்கும்

என்று பாடிக்கொண்டு நம் ஆவிக்குரிய பயணத்தை நாம் தொடருவோம்.

உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்து!

மாலுமியும் கப்பற்காரரும் கப்பலிலிருந்தவர்களின் பிராணனைக் காக்கத் தங்களால் இயன்ற வரை முயற்சி செய்தும் பயனின்றி, செய்வதறியாது திகைத்தனர். காரணம், கொந்தளிக்கும் கடலில் கப்பல் அகப்பட்டுக்கொண்டது. கடுங்காற்று கப்பலின்மேல் மோதிற்று. கப்பற்காரரின் பிரயாசங்கள் அனைத்தும் விருதாவாயின. கடுங்காற்றினாலும் கனத்த மழையினாலும் கடலலைகளினாலும் கப்பல் கரை சேர முடியாமல் காற்றின் போக்கிலே இழுத்துச் செல்லப்பட்டது. கப்பற்பயணிகள் அனை வரும் அவரவர் தங்கள்தங்கள் தேவனை நோக்கிக் கூப்பிட்டனர். அக்கப்பலில் இருந்த வாலிபன் ஒருவனும் ஒரு பொருத்தனை செய்து விண்ணப்பம்பண்ணினான். 'தேவரீர் என் பிராணனைக் காத்து சமாதானத்தோடே என் வீட்டில் என்னைக் கொண்டுபோய்ச் சேர்ப்பீரானால் நான் கொழுமையான பத்துக் காளைகளை உமக்குக் காணிக்கையாகச் செலுத்துவேன்' என்று அவன் பொருத்தனை செய்து விண்ணப்பித்தான். உடனே காற்று அமர்ந்தது. கொந்தளிப்பு அடங்கியது. அமைதலுண்டானதினி மித்தம் அவன் ஆனந்தக் களிப்படைந்தான். ஆனால் கப்பல் கரைசேரும் முன்பே அவன் தன் பொருத்தனையைக் குறித்துச் சிந்திக்கலானான். 'நான் ஆபத்து நேரிட்ட சமயத்தில் அவசரமாக, சற்றும் யோசியாமல் சொல்லிவிட்டேன்; ஆண்டவர் பத்துக் காளைகளைத் தமக்குச் செலுத்த வேண்டு மென்று எதிர்பார்க்கமாட்டார்; ஐந்து காளைகளிலேயே திருப்தியடைவார்' என்று அவன் தனக் குள்ளே சொல்லிக்கொண்டான். கப்பல் கரை சேர்ந்தது. வாலிபன் தன் வீட்டை நோக்கி விரைந் தான். போகும் வழியிலேயே 'ஐந்து காளைகள் என்னத்திற்கு? இரண்டு காளைகள் செலுத்தினாலே போதும்' என்று அவன் எண்ணினான். வீடு சென்ற பின்பு அன்று வீட்டாரனைவரோடும் அவன் விருந்துண்டு சந்தோஷமாயிருந்து, தான் செய்திருந்த பொருத்தனையை மறந்துபோனான். அன்றிரவு அவன் படுக்கைக்குச் சென்றபோது அவனுக்கு நித்திரை வரவில்லை. அப்போது அவன் தன் பொருத்தனையை நினைவுகூர்ந்தான். 'ஆபத்திலிருந்து என்னை விடுவித்த ஆண்டவரை மறந்துபோனேனே, காலையில் எழுந்தவுடன் எப்படியாவது மந்தையிலிருந்து ஒரு காளையைக் கொண்டுபோய்க் கர்த்தருக்குக் கொடுத்துவிட வேண்டும்' என்று தன் மனதிலே சொல்லிக் கொண்டு அவன் தூங்கிவிட்டான். நள்ளிரவில் மீண்டும் அவன் விழித்துக்கொண்டான். 'நம்முடைய காளையை எதற்குக் கொடுக்க வேண்டும்? அதற்குப் பதிலாக ஒரு ஆட்டுக்கடாவைச் செலுத்தி விடுவோமே' என்று அவன் மறுபடியும் தன் மனதை மாற்றிக்கொண்டான்.

அவன் அதிகாலையில் எழுந்து ஓர் ஆட்டை ஆண்டவருக்குக் கொடுக்கும்படி ஆலயத்திற்குப் புறப்பட்டான். ஆனால் அவன் வீட்டாரோ, 'அந்த ஆட்டை ஆண்டவருக்குச் செலுத்துவது அவசியமோ வேறு ஏதாயினும் நிலத்தின் பயிரைச் செலுத்தினால் போதாதா?' என்று தங்கள் கருத்தைத் தெரிவித்தனர். உடனே அவன், 'சரி, நான் அதற்குப் பதிலாக ஒரு கூடை நிறைய நிலக்கடலை கொண்டுபோய்க் காணிக்கையாகச் செலுத்திவிட்டு வருகிறேன். காளைகளைப் பார்க்கிலும் இது சாலச் சிறந்ததாகவும் ஆண்டவருக்குப் பிரியமானதாகவுமிருக்கும்' என்று கூறி, ஒரு கூடை நிறைய நிலக்கடலையை எடுத்துக்கொண்டு ஆலயத்திற்குப் புறப்பட்டான். கடலை அவனுக்கு மிகவும் விருப்ப மானதாகையால் போகும் வழியில் ஓரிரு கடலையை எடுத்து வாயில் போட்டான். அதின் ருசியை அவன் விரும்பினபடியால் கூடையிலிருந்த கடலையைத் தின்றுகொண்டே ஆலயத் துக்குச் சென்றான். கடைசியில் அவன் அங்கு சென்று சேர்ந்தபோது காணிக்கையாகச் செலுத்த ஒரு கூடை கடலைத்தோல் அல்லாமல் வேறொன்றும் மீதியாக இருக்கவில்லை.

தேவனுடைய பிள்ளையே, அந்த வாலிபனைக் குறித்து நீ நகைக்க வேண்டாம். நீயே அந்த வாலி பன்! உன்னுடைய நிர்ப்பந்தமான நிலவரத்தைச் சற்று நிதானித்துப் பார். நீயும் ஆண்ட வருக்குப் பொருத்தனைகள் பல செய்து, ஆபத்துக் காலத்தில் அவரை நோக்கிக் கூப்பிட்டாய். அவர் உன்னை விடுவித்தார். ஆனால் அவற்றிற்காக உன் ஆண்டவருக்கு உதடுகளின் காளைகளாகிய ஸ்தோத்திர பலிகளைச் செலுத்தினாயா? அல்லது அந்த வாலிபன் கொண்டுபோன ஒரு கூடை நிறைய கடலைத் தோலைப் போன்ற கருத்தில்லா ஸ்தோத்திரங்களை ஏறெடுத்தாயா? "தன் மந்தையில் கடா இருக்கையில் கெட்டுப்போனதை ஆண்டவருக்கு நேர்ந்துகொண்டு பலியிடுகிற கபடஸ்தன் சபிக்கப் பட்டவன்" (மல். 1 : 14) என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது. ஆபேல் மந்தையின் தலை யீற்றுகளையும் அவைகளில் கொழுமையானவைகளையும் காணிக்கையாகச் செலுத்தினான். கர்த்தர் ஆபேலையும் அவன் காணிக்கையையும் அங்கீகரித்தார். நீயும் உனக்குரியவற்றில் பிரதான மானதை, மிகச் சிறந்தவற்றை எடுத்துத் தேவனுக்குச் செலுத்துவாயாக. அதாவது காளை, வெள்ளாட்டுக் கடா என்பவற்றைத் தேவன் உன்னிடத்தில் எதிர்பார்ப்பதில்லை. பலியையும் காணிக்கையையும் அவர் விரும்புவதில்லை. "உன் வீட்டிலிருந்து காளைகளையும், உன் தொழுவங்களிலிருந்து ஆட்டுக்கடாக்களையும் நான் வாங்கிக்கொள்வதில்லை" ; "நான் எருதுகளின் மாம்சம் புசித்து, ஆட்டுக்கடாக்களின் இரத்தம் குடிப்பேனோ?" என்று அவர் கேட்கிறார் (சங். 50 : 9, 13). தேவ னுடைய நாமத்தைப் பாட்டினால் துதித்து, ஸ்தோத்திரத்தினால் அவரை மகிமைப்படுத்து வாயாக. கொம்பும் விரிகுளம்புமுள்ள காளையெருதைப் பார்க்கிலும், இதுவே கர்த்தருக்குப் பிரியம் (சங். 69 : 30, 31). நீ உன் தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி, ஆபத்துக்காலத்தில் அவரை நோக்கிக் கூப்பிடு. அவர் உன்னை விடுவிப்பார். நீ அவரை

மகிமைப்படுத்துவாய்
(சங். 50 : 14, 15).

தேவன் அம்மோன் புத்திரரைத் தன் கையில் ஒப்புக்கொடுத்தால், தான் அவர்களை முறியடித்துச் சமாதானத்தோடே திரும்பி வரும்போது, "என் வீட்டு வாசற்படியிலிருந்து எனக்கு எதிர்கொண்டு வருவது எதுவோ அது கர்த்தருக்கு உரியதாகும். அதைச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்துவேன்" என்று பொருத்தனைபண்ணினான், நியாயாதிபதியாகிய யெப்தா. அவன் யுத்தத்தில் ஜெயம் பெற்று மகிழ்ச்சியோடு திரும்பிவந்தபோது அவனுக்கு எதிர்கொண்டு வந்ததோ அவனுடைய குமாரத்தியே. அவளையல்லாமல் அவனுக்கு வேறு குமாரனும் இல்லை; குமாரத்தியும் இல்லை. ஆனால் யெப்தாவோ, "நான் கர்த்தரை நோக்கி என் வாயைத் திறந்து சொல்லிவிட்டேன்; அதை நான் மாற்றக்கூடாது" (நியா. 11 : 35) என்று சொல்லி, தான் பண்ணியிருந்த பொருத்தனையின்படியே அவளுக்குச் செய்தான் (வச. 39). ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் அவன் தவறாதிருந்தான். இந்த விஷயத்தில் வாலிபப் பெண்ணான அவனுடைய குமாரத்தியும் ஒத்துழைத்துத் தன்னை ஒப்புக்கொடுத்ததையும் நாம் காணலாம். இதனாலன்றோ அவள் வேதாகமத்தில் நீங்காத இடம்பெற்று, ஒவ்வொரு வருஷமும் இஸ்ரவேலின் குமாரத்திகளால் நினைவுகூரப்படுகிறாள்!

தேவனுடைய பிள்ளையே, நீயும் உன் ஆபத்துக் காலங்களில், வியாதி நேரங்களில், பள்ளிப் பரீட்சை நாட்களில், வருடப் பிறப்புகளில், சுத்திகரிப்புக் கூட்டங்களில், வாலிபர் கூட்டங்களில் எத்தனை எத்தனையோ பொருத்தனைகள் செய்திருக்கிறாய் அல்லவா? 'இவ்வளவு நேரம் ஜெபிப்பேன், வேதம் வாசிப்பேன், சபைகூடுதலை விட்டுவிடமாட்டேன், காலம் தவறாமல் கூட்டங்களுக்குச் செல்வேன், சாட்சி சொல்லி தேவநாமத்தை மகிமைப்படுத்துவேன், பெற்றோருக்கும் பெரியோருக்கும் கீழ்ப்படிவேன், ஆத்துமாக்களுக்குச் சுவிசேஷம் அறிவிப்பேன், சொந்த விருப்பம் செய்ய மாட்டேன், தேவசித்தம் மாத்திரம் செய்வேன், உலகத்தின் வேஷம் தரிக்க மாட்டேன், ஆண்டவராகிய இயேசுவை மாத்திரம் நேசிப்பேன், அவரையே பின்பற்றுவேன், அவருக்காகவே ஜீவிப்பேன்' என்றெல்லாம் உன் வாயைத் திறந்து சொல்லியிருக்கிறாயல்லவா? உன் பொருத்தனைகளை நிறைவேற்றத் தவறிவிட்டாயா அல்லது தாமதித்துக்கொண்டிருக்கிறாயா? அல்லது தடுமாறிக்கொண்டிருக்கிறாயா? நீ பொருத்தனை பண்ணாதிருந்தால் உன்மேல் பாவம் இல்லை. உன் வாயினால் சொன்னதை நீ நிறைவேற்ற வேண்டும் (உபா. 23 : 22, 23). நீ நேர்ந்துகொண்டதைச் செய். நீ நேர்ந்துகொண்டதைச் செய்யாமற் போவதைப்பார்க்கிலும், நேர்ந்துகொள்ளாமலிருப்பது நலம் (பிர. 5 : 4, 5). நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணியிருந்தால் அதைச் செலுத்தத் தாமதியாதே. உன் தேவனாகிய கர்த்தர் அதை நிச்சயமாய் உன் கையில் கேட்பார். அது உனக்குப் பாவமாகும் (உபா. 23 : 21). எனவே பொருத்தனையைச் செலுத்தத் தவறாதே, தாமதியாதே, இப்போதும் ஏதாவது பொருத்தனை செய்திருந்தால் அதை நிறைவேற்றி, ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்.

போட்டி

கீழ்க்காணும் வினாக்களுக்கு 25 - 9 - '00 - க்குள் எம்மொழியிலும் பதில் எழுதி அனுப்பவும்.
வயது, வசன ஆதாரம் குறிப்பிடுக.

வேத வாசிப்புப் பகுதி : **ஏசாயா 36 - 66, எரேமியா 1 - 35, மாற்கு, லூக்கா.**

1. கர்த்தரை மறுதலித்தவர்களைக் குறித்து எழுதப்பட்டிருப்பதெங்கே? கர்த்தராகிய இயேசுவை மறுதலித்து வெளியே வாசல் மண்டபத்துக்குப் போனது யார்?
2. நீங்கள் முள்ளுகளுக்குள்ளே விதையாதிருங்கள் என்று எங்கு எழுதப்பட்டுள்ளது? முள்ளுள்ள இடங்களில் விழுந்த விதைகளுக்கு சம்பவித்தது என்ன?
3. தேவரீரோ என் ஆத்துமாவை நேசித்து அழிவின் குழிக்கு விலக்கினீர் என்றது யார்? என் ஆத்துமாவுக்கு படுகுழியை வெட்டுகிறார்களே என்றது யார்?
4. விழுந்தவர்கள் எழுந்திருக்கிறதில்லையோ?ணி என்று எங்கே எழுதப்பட்டுள்ளது? இருவரும் பள்ளத்தில் விழுவார்கள் அல்லவா என்று எந்த இருவரைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது?
5. வானங்களைப் பார்த்தேன், அவைகளுக்கு ஒளியில்லாதிருந்தது என்று எங்கு எழுதப்பட்டுள்ளது? எப்போது சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும்?
6. அது ... நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்ணி - எது? அவர்கள் காரியம் வாய்க்காமற்
போய்ணி என்று எவர்களைக் குறித்து எழுதப்பட்டுள்ளது?
7. கர்த்தாவே, என்னைக் குணமாக்கும், அப்பொழுது குணமாவேன் என்றது யார்? சொஸ்தமடைய வேண்டுமென்றிருந்தவர்களைக் கர்த்தராகிய இயேசு சொஸ்தப்படுத்தினார் என்று நாம் வாசிப்பதெங்கே?
8. நீ என்னால் மறக்கப்படுவதில்லைணி என்று தேவன் யாரைக் குறித்துக் கூறினார்? அவைகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப்படுகிறதில்லைணி என்று எவைகளைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது?
9. உம்முடைய உடுப்புச் சிவப்பாக இருக்கிறதென்ன என்று யாரைக் குறித்துக் கேட்கப்பட்டது? சிவப்பான மேலங்கி யாருக்கு உடுத்துவிக்கப்பட்டது?
10. யார் வானத்தின் அடையாளங்களாலே கலங்குகிறார்கள்? வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காண்பிக்க வேண்டுமென்று கேட்டவர்கள் யார்?

பதில் அனுப்ப வேண்டிய முகவரி :

பெந்தெகொஸ்தின் பேரொலி (இளைஞர் பகுதி), பெந்தெகொஸ்தே மிஷன்,
45 - A, 5 -ஆம் தெரு, பத்மநாப நகர், அடையாறு, சென்னை - 600 020.
போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குப் பரிசுகள் அனுப்பப்படும்.

1. II நாளா. 9 : 12 ; எஸ்றா 7 : 6
2. ஏசாயா 33 : 1 ; எஸ்தர் 9 : 10, 15
3. ஏசாயா 21 : 2 ; மத். 24 : 15
4. II நாளா. 31 : 10 ; நெகே. 9 : 25
5. ஏசாயா 12 : 4 ; மத். 12 : 15, 16
6. எஸ்றா 7 : 10 ; ஏசாயா 30 : 9
7. II நாளா. 30 : 10 ; எஸ்தர் 3 : 15; 8 : 14
8. II நாளா. 20 : 4 ; ஏசாயா 31 : 1
9. நெகே. 5 : 9 ; ஏசாயா 8 : 13
10. ஏசாயா 14 : 12, 15 ; மத். 11 : 23.
11.

G]e%LÅX"¶ C&Vr&Y! Gß%\ßÝ&U!

நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்டேன். தேவன் என்னைத் தமக்காய் தெரிந்துகொண்டபடியினால் நான் என் சிறு வயது முதல் வேதம் வாசிப்பதிலும் ஜெபம்பண்ணுவதிலும் ஆர்வமுடையவளாய்க் காணப்பட்டேன். ஆனால் நான் வளரவளர உலகம் என்னில் குடிகொண்டது. உலகத்தின் ஆசைகள், உலக சிற்றின்பங்கள் போன்றவற்றிற்கு நான் அடிமையானேன். நான் சினிமா, டி. வி., நாடகங்கள் போன்றவற்றையெல்லாம் பார்க்க ஆரம்பித்தேன். எனவே நான் ஜெபித்தாலும் வேதம் வாசித்தாலும் சரியான ஒரு தேவ சமுகத்தை என்னால் உணர முடியவில்லை. இதினிமித்தம் நான் மனவேதனையோடு அழுது ஜெபித்தபோது I யோவான் 1 : 9; ஏசாயா 45 : 22 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ளவாறு தேவன் எனக்கு இரட்சிப்பின் அனுபவத்தைத் தந்தார்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 2 : 38 - இன்படி நான் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து முழுக்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டேன். என் பள்ளிப் படிப்பில் தேவனே எனக்கு உதவி செய்தார். நான் +2 படிக்கும்போது ஆங்கிலம் கற்றுத் தர ஆசிரியரே இல்லாத சூழ்நிலையில் காணப்பட்டேன். அப் போது தேவனே எனக்கு ஆசிரியராய் இருந்து சொல்லித் தந்தார். என்னுடைய தேர்வு நாட்களில் தேர்வுக்கு வரும் எல்லாக் கேள்விகளையும் சொப்பனத்திலே தேவன் எனக்கு வெளிப்படுத்துவார். செய்முறைத் தேர்வுகளிலும் முதல் மதிப்பெண் பெற அவரே எனக்கு உதவி செய்தார். அதன் பின்னர் B.Sc. படிப்பதற்காக நான் கல்லூரியில் சேர்க்கப்பட்டேன். அந்நாட்களில் தேவனைப் பற்றி அதிகமாக அறிந்துகொள்ள வேண்டும் என்கிறதான வாஞ்சை எனக்கு ஏற்பட்டது. எனவே அதிக நேரம் தேவசமு கத்தில் காணப்பட வேண்டும் என நான் தீர்மானித்தேன். அப்போது தேவன் என்னைப் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்பண்ணினார்.

நான் பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொண்டபோது இந்த உலகத்தில் உள்ள எல்லாவற்றைப் பார்க்கிலும் ஆண்டவராகிய இயேசுவை அதிகமாய் நேசிக்க வேண்டும் என்கிற ஆசை என் உள்ளத்தில் அதிகரித்தது. கர்த்தருக்கு ஊழியஞ்செய்யும்படியான வாஞ்சை என்னில் உண்டாயிற்று. எரேமியா 1 : 5 ; ஓசியா 2 : 19, 20 போன்ற பல்வேறு வசனங்கள் மூலமாகத் தேவன் என்னோடு பேசி என் அழைப்பை உறுதிப்படுத்தினார். எனவே தேவசித்தத்திற்கும் தேவனுடைய மேலான சேவைக்கும் நான் என்னை ஒப்புக்கொடுத்தேன். ஆனால் என் பெற்றோர் இதற்கு அனுமதி கொடுக்கவில்லை. எனவே என் பெற்றோரோடு தேவன் பேசும்படியாய் நான் மூன்று நாட்கள் உபவாசித்து ஜெபம்பண்ணினேன். அப்பொழுது என்னை ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று என் தாயோடும் என் தகப்பனோடும் ஓர் இரவு கர்த்தர் பேசினார். என்ன ஆச்சரியம்! தடைகளை நீக்குகிற தேவன் எல்லாத் தடைகளையும் மாற்றினார்! அதுமாத்திரமல்ல, அவர் எனக்கு ஒரு தரிசனத்தையும் தந்தார்:

ஓட்டப்பந்தயத்தில் ஓடுவதுபோல அநேக ஊழியர்கள் ஓடுகிறார்கள். அவர்களுடன் நானும் ஓடுகிறேன். ஓடி முடியும் இடத்தில் ஒரு பெரிய ஏணி பூமிக்கும் மத்திய ஆகாயத்திற்குமாகப் பொருத்தப்பட்டுள்ளது. அந்த ஏணியில் ஒருவர் எனக்கு முன்னால் ஏறுகிறார். அவருக்குப் பின்னாக நானும் ஏறுகிறேன். ஏறிச் செல்லச் செல்ல அதிகக் கஷ்டமாக உள்ளது. மேல் நோக்கி ஏறவே என்னால் முடியவில்லை. அப்போது நான் எனக்கு முன் செல்கிறவரிடம், 'என்னால் மேல் நோக்கி ஏற முடிய வில்லை, அதிகக் கஷ்டமாய் உள்ளது' என்றேன். அவரோ, 'இவ்வளவு தூரம் ஏறிவிட்டாய்; இனிக் கொஞ்ச தூரம் தான்; சோர்ந்துபோகாதே; சீக்கிரமாய் வா; சீயோனுக்குப் போகலாம்' என்று கூறினார். எப்படியோ மேலே ஏறிச் சென்று விட்டேன். அங்கு ஓர் அழகான மாளிகை காணப்பட்டது. அதின் மகிமையை நான் என் நாவினால் வர்ணிக்க இயலாது.

1997 - ஆம் ஆண்டு இந்தக் கனமான ஊழியத்திற்கு நான் என்னை அர்ப்பணித்தேன். இம் மட்டும் கர்த்தருடைய வீட்டில் வைத்து என்னை அவர் பாதுகாத்து நடத்தி வருகிறார். அவர் எனக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாய் இருக்கிறார். அவரை நான் என் இரட்சகராகவும் போதகராகவும் வைத்தி யராகவும் தகப்பனாகவும் தாயாகவும் ஆத்தும நேசராகவும் அனுபவித்து வருகிறேன். வெகுவிரை

வில் நான் என் ஆத்தும நேசரை நடுவானில் சந்திப்பேன் என்ற நம்பிக்கையுடன் என் ஓட்டத்தை நான் தொடருகிறேன். அவருக்கே சகல கனமும் மகிமையும் உண்டாவதாக.

சகோதரி V. புஷ்பா,
நாகலாபுரம்.

எருசலேமின் அலங்கமும் வாசல்களும்

4. எப்பிராயீம் வாசல் (GATE OF EPHRAIM)

சமாதானம் ___ "உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு" (சங். 119 : 165) என்று சங்கீதக்காரன் கூறுகிறான். "ஆ, என் கற்பனைகளைக் கவனித்தாயானால் நலமாயிருக்கும்; அப்பொழுது உன் சமாதானம் நதியைப் போலும் … இருக்கும்" என்பது தேவனின் வாக்குத்தத்தம் (ஏசாயா 48 : 18). ஆகவே சமாதானத்தில் பெருகும்படி கர்த்தரின் வேதத்தை நேசித்து, அதன்படி ஜீவிப்போமாக. கர்த்தரை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு, அவரையே நம்பியிருத்தல் (ஏசாயா 26 : 3), ஜெப ஜீவியம் (பிலி. 4 : 6, 7), நேர்மையாய் நடத்தல் (ஏசாயா 57 : 2), நன்மை செய்தல் (ரோமர் 2 : 10), ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்ட சிந்தை (ரோமர் 8 : 6) - போன்றவையும் நாம் பூரண சமாதானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இன்றியமையாதவையாகும்.

நீடியபொறுமை ___ உபத்திரவம் பொறுமையை உண்டாக்குகிறது (ரோமர் 5 : 3). எனவே நாம் பொறுமையில் பெருக வாஞ்சிப்போமாயின், கிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவங்களையும் பாடுகளையும் வரவேற்கிறவர்களாயிருக்க வேண்டும். மேலும் கர்த்தராகிய இயேசுவின் வருகையின் நம்பிக்கையினால் நாம் நிறைந்திருப்போமாயின், தற்காலத்துப் பாடுகளில் பொறுமையாயிருக்க இயலும் (I தெச. 1 : 2, 10). அந்த வருகையின் நம்பிக்கையால் நிறைந்து, பாடுகளுக்கு நம்மை ஒப்புக்கொடுப்பதினால் பொறுமை என்னும் ஆவியின் கனி நம்மில் பெருகும்.

தயவு ___ கிறிஸ்து உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், அவர்களைத் தம்மோடு ஒப்புரவாக்கிக் கொண்டது போல, நாமும் நமக்கு விரோதமாய்ப் பிறர் செய்த குற்றங்களை எண்ணாமல், அவர்களை மன்னிப்பதினால் தயவு என்னும் கனியை வெளிப்படுத்துகிறோம். தேவனின் திரளான மன்னிப்பைப் பெற்றுக்கொண்டதின் மூலம் நாம் தேவ தயவை ருசிபார்த்திருக்கிறோம். ஆகவே நாமும் பிறருக்கு மன்னித்து, அவர்களுக்குத் தயை பாராட்டக் கடனாளிகளாயிருக்கிறோம். இதையே அப். பவுல், "ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபே. 4 : 32) என்றும், "நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், … தரித்துக்கொண்டு; ஒருவரையொருவர் தாங்கி, … ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" என்றும் கூறுகிறார் (கொலோ. 3 : 12, 13). மேலும், நன்மை செய்ய மனுஷன் கொண்டிருக்கும் ஆசையே தயை என ஞானி கூறுகிறான் (நீதி. 19 : 22). ஆகவே நன்மை செய்யும்படி நமக்குத் திராணியிருக்கும்போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்து, தயவுள்ளவர்களாய் நம்மை வெளிப்படுத்துவோமாக (நீதி. 3 : 27).

நற்குணம் ___ ரோமாபுரியிலிருந்த விசுவாசிகள் நற்குணத்தால் நிறைந்தவர்களாயிருந்தனர் (ரோமர் 15 : 14). பெரோயா பட்டணத்தார் தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள் (அப். 17 : 10, 11). கர்த்தருடைய வசனங்களைத் தியானிப்பதின் மூலம் நாம் நற்குணத்தில் விருத்தியடையலாம். மேலும், மோவாபிய ஸ்திரீயாகிய ரூத் முடிவுபரியந்தம் நகோமியை உத்தமமாய்ப் பின்பற்றி, அவளுடைய ஆலோசனைப்படியே கீழ்ப்படிந்து நடந்ததினிமித்தம் நற்குணமுள்ளவள் என சாட்சி பெற்றாள் (ரூத் 3 : 10). அவ்வாறே நாமும் பரிசுத்தவான்களுக்குக் கீழ்ப்படிவதின் மூலமும் திருவசனத்தைத் தியானிப்பதின் மூலமும் நற்குணத்தில் வளருவோமாக.

விசுவாசம் ___ தேவனை ஸ்தோத்திரிப்பதின் மூலம் நாம் விசுவாசத்தில் பெருகலாம் (கொலோ. 2 : 7). ஆபிரகாம், நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்த சூழ்நிலைகளிலும், தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழுநிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான் (ரோமர் 4 : 18, 21). இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிற தேவன் மேல் அவன் உறுதியான விசுவாசமுள்ளவனாயிருந்தான். மேலும் அவன் ஈசாக்கைப் பலிபீடத்தின் மேல் செலுத்தினபோது, விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சி செய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டது (யாக். 2 : 22). இவ்வாறு நாம் தேவனைத் துதித்தலினாலும் விசுவாசத்தின் கிரியைகளினாலும் விசுவாசத்தில் பெருகிப் பூரணமடைவோமாக.

சாந்தம் ___ சாந்தம் என்னும் கனி நம்மில் உண்டாகிப் பெருகும்படிக்கு நாம் தேவனுடைய மகிமையான வல்லமையினால் (அபிஷேகத்தினால்) பலப்படுத்தப்பட வேண்டும் (கொலோ. 1 : 11). அத்துடன் நாம் தேவசித்தம் செய்தலாகிய கர்த்தருடைய நுகத்தை ஏற்றுக்கொண்டு, அவரோடு சேர்ந்து அதைச் சுமப்பதின் மூலமும் அவரிடத்திலிருந்து இச்சுபாவத்தைக் கற்றுக்கொள்ளலாம் (மத். 11 : 29).

இச்சையடக்கம் ___ கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் (கலா. 5 : 24). துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப்

பேணாமலிருந்து, கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள் என்று அப். பவுலும், ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகுங்கள் என்று அப். பேதுருவும் நமக்கு அறிவுறுத்துகின்றனர் (ரோமர் 13 : 14 ; I பேதுரு 2 : 11). நாம் பாவத்துக்கு மரித்தவர்களாய் ஆவிக்கேற்றபடி நடந்துகொள்வோமாயின், இச்சையடக்கம் என்னும் ஆவியின் கனியும் நம்மில் பெருகும் (கலா. 5 : 16).

"நீயோ, தேவனுடைய மனுஷனே, ... நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு" என்று அப். பவுல் தீமோத் தேயுவுக்கு எழுதுகிறார் (I தீமோ. 6 : 11). அருமையானவர்களே, இன்று நாம் எதை அடைந்துகொள் ளும்படியாய் நாடி ஓடிக் கொண்டிருக்கிறோம்? மேலானவைகளையே நாம் நாடுவோமாக.

(V) நற்கனிகள்:

"பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்த மும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாத தாயும், மாயமற்றதாயுமிருக்கிறது" (யாக். 3 : 17). நற்கனிகளைக் கொடுக்கும்படி, நாம் பரத்திலிருந்து வருகிற ஞானத்தினால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். இந்தப் பரத்திலிருந்து வருகிற ஞானத்தை அடைந்து கொள்ளும்படி நாம் லௌகீக ஞானத்திற்கும் மனுஷ ஞானத்திற்கும் மரித்தவர்களாயிருக்க வேண்டியது அவசியம். ஏனெனில், "இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது" (வச. 15). இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது (I கொரி. 3 : 19). ஆனால் சிலுவையைப் பற்றிய உபதேசமோ கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது (I கொரி. 1 : 18). ஆம் ! இவை ஒன்றுக்கொன்று முரண்பட்டவையே. ஒருவன் உலக ஞானத்தைக் கொண்டு தெய்வீக ஞானத்தை அடைந்துகொள்ள இயலாது. இப்பிரபஞ்சத்து ஞானிகளுக்கு மறைக்கப்பட்டிருக்கும் இந்த இரகசியமான தேவ ஞானத்தைக் குறித்து, "தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம்; ... அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை" என அப். பவுல் எழுதுகிறார் (I கொரி. 2 : 6 - 8). "கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும். அவர் நீதிமான்களுக் கென்று மெய்ஞ்ஞானத்தை வைத்துவைத்திருக்கிறார்" (நீதி. 2 : 6, 7). அதின் விலை மனுஷனுக்குத் தெரியாது; அது ஜீவனுள்ளோருடைய தேசத்திலே அகப்படுகிறதில்லை. முத்துக்களைப்பார்க்கிலும் அதின் விலை உயர்ந்தது என யோபு கூறுகிறான் (யோபு 28 : 12 - 23). அவன் ஞானத்தின் விலை மதிப்பை அழகாக விவரித்துவிட்டு, "இதோ, ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம்" என்று கூறி முடிக்கிறான் (வச. 28). ஆம் ! கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (நீதி. 1 : 7 ; 15 : 33). பரத்திலிருந்து வருகிற இந்த ஞானத்தினால் நாம் நற்கனிகளைக் கொடுக்கத்தக்கவர்களாகிறோம். உலக ஞானத்தைச் சார்ந்திருக்கிறவர்களோ, பேய்த்தனமான ஜென்ம சுபாவத்தையே வெளிப்படுத்துகிறார்கள்.

(vi) அருமையான கனிகள்:

மேற்கூறப்பட்டுள்ள கனிகள் யாவும் அருமையும் இனிமையுமான கனிகளே. இத்தகைய, நம் நேசருக்கேற்ற அருமையான கனிகளை நம்மில் உருவாக்குவது யாது? தன் இனிய கனிகளால் நேசரை மகிழ்விக்க விரும்பும் மணவாட்டி, "வாடையே ! எழும்பு; தென்றலே ! வா; கந்தப்பிசின்கள் வடிய என் தோட்டத்தில் வீசு; என் நேசர் தம்முடைய தோட்டத்துக்கு வந்து, தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக" (உன். 4 : 16) என்கிறாள். அவளுடைய கனிகள் சுவை மிகுந்ததும், வாசனை பரிமளிப்பதுமாயிருக்கும்படி அவள் வாடையையும் தென்றலையும் வரவேற் கிறாள். வடகாற்று மழையைப் பிறப்பிக்கும் (நீதி. 25 : 23). தென்றல் உஷ்ணத்தை உண்டாக்கும் (லூக்கா 12 : 55). இது பரிசுத்தஆவியானவரின் இரு விதமான கிரியைகளைக் காண்பிக்கிறது. வடகாற்று குளிர்ச்சியாகவும் புத்துணர்வூட்டுவதாகவும் இருப்பதைப் போல, அவர் விடாய்த்த ஆத்துமாவைக் குளிரப்பண்ணி, தொடர்ச்சியான ஆசீர்வாதத்தின் மழையை வருஷிக்கப்பண்ணுகிறார் (எபி. 6 : 7). இது, நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர உறுதுணையாயிருக்கிறது. மறுபக்கத்தில், நாம் வளர்ந்து பக்குவமடைகையில், நம் ஆவிக்குரிய வளர்ச்சிக்கேற்ற சோதனைகளையும் பரீட்சைகளையும், அவர் நம் ஜீவியத்தில் அனுமதிக்கிறார். தென்றலின் உஷ்ணத்தினால் கனிகள் பழுத்துச் சுவை மிகுந் தவையாவது போல, இப்பாதைகளினால் நம்முடைய உள்ளான மனுஷனானது தேவனோடு நெருங்கிச் சஞ்சரிக்கக் கற்றுக்கொண்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நம் நேசருக்கேற்ற அருமையான கனிகளைப் பிறப் பிக்கத்தக்கதாகிறது. இவ்வாறு வாடையும் தென்றலும், நற்சுவையும் சதைப்பற்றும் நற்கந்தமுமுள்ள கனிகள் உருவாகக் காரணமாயிருக்கின்றன. அவ்வாறே ஆவியானவர் நம் ஜீவியத்தில் வித்தி யாசமான விதங்களில் செயல்பட்டு, நம்மைக் கர்த்தருக்கு உகந்தவர்களாக்குகிறார். பூமியின் நற் பலனைச் சேர்க்க அவர் வெளிப்படும் நாளில், நாம் அவருடைய அருமையான கனிகளாக, அவரது ஆத்தும வருத்தத்தின் பலனாக, அவரண்டை சேர்க்கப்படும்படி கனி கொடுத்தலின் ஜீவியத்தில் நாடோறும் வளருவோமாக.

அருமையானவர்களே ! உங்கள் ஜீவியத்தின் 'எப்பிராயீம் வாசல்' எந்நிலையில் உள்ளது? "நீங் கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்" (II கொரி. 9 : 8). மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோ

கத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது (மத். 5 : 16). ஆதியிலிருந்த உங்கள் நற்கனிகளை இழந்திருப்பீர்களாயின், அல்லது அவற்றில் குறைவுபட்டிருப்பீர்களாயின், மீண்டும் உங்கள் ஜீவியத்தைக் கட்டியெழுப்பிக் கொண்டு, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வீர்களாக (வெளி. 2 : 5). உங்கள் கிரியைகள் தேவனுக்கு முன்பாக நிறைவுள்ளவைகளாகக் காணப்படட்டும் (வெளி. 3 : 2). ஆத்தும நேசர் தமது தோட்டத்துக்கு வரும்போது, அருமையான கனிகளைப் புசிக்கத்தக்கதாக, உங்கள் ஜீவியத்தில் ஆவிக்குரிய சகலவிதமான கனிகளும் நிறைந்திருப்பதாக.

ரோமருக்கு எழுதிய நிருபத்தின் விளக்கவுரை

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

“இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று” (5 : 12).

நாம் சென்ற இதழில் கண்டபடி, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்து யாவரும் பாவிகளும் மரணத்திற்குட்பட்டவர்களுமாய் மாற்றப்பட்டது போல, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் மூன்று ஒப்புரவாகுதல்களையும் நாம் அடைந்து நீதிமான்களாய்க் காணப்படுகிறோம்.

நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது ; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது” (5 : 13).

இவ்வசனத்தின் விளக்கத்தை நாம் ஏற்கனவே 2 - ஆம் அதிகாரத்தில் பார்த்தோம்.

“அப்படியிருந்தும், மரணமானது ஆதாம்முதல் மோசேவரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது; அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன்” (5 : 14).

மரணமானது ஆதாம் முதல் மோசே வரைக்கும் பாவம் இன்னதென்று அறியாதிருந்தவர்களையுங்கூட ஆண்டுகொண்டது என்று இவ்வசனத்தில் நாம் காண்கிறோம். ஏனெனில் மோசேயின் காலத்தில்தான் மோசேயினால் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டபோதுதான் பாவம் இன்னதென்று மனுஷருக்கு விளங்கிற்று. இதைப் பற்றி நாம் முன்பே விளக்கியுள்ளோம். “அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன்” என்று எழுதப்பட்டிருப்பதின் கருத்து, முன்பு வந்த ஆதாமின் மூலம் பாவமும் மரணமும் எல்லாரையும் ஆண்டுகொண்டதுபோல, பின்பு வந்த கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் பாவமும் மரணமும் பரிகரிக்கப்பட்டு, அவரை விசுவாசிக்கிற எல்லோரும் நித்திய ஜீவன் கிடைக்கப்பெற்று நீதிமான்களாகிறார்கள் என்பதே.

“ஆனாலும் மீறுதலின் பலன் கிருபை வரத்தின் பலனுக்கு ஒப்பானதல்ல. எப்படியெனில், ஒருவனுடைய மீறுதலினாலே அநேகர் மரித்திருக்க, தேவனுடைய கிருபையும் இயேசுகிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய கிருபையினாலே வரும் ஈவும் அநேகர்மேல் அதிகமாய்ப் பெருகியிருக்கிறது” (5 : 15).

மீறுதலின் பலனாகிய மரணம், கிருபையின் பலனாகிய நித்திய ஜீவனோடு ஒப்பிடத்தக்கதல்ல அல்லது அதை ஒப்பிட முடியாது. ஏனெனில் ஒருவனுடைய மீறுதலினாலே மரணம் எல்லாருக்கும் வந்தது போல தேவனுடைய கிருபையாகிய தேவநீதி இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நித்திய ஜீவனாகிய கிருபையாய் வெளிப்பட்டு நமக்குக் கிடைக்கிறது.

“மேலும் ஒருவன் பாவஞ்செய்ததினால் உண்டான தீர்ப்பு தேவன் அருளும் ஈவுக்கு ஒப்பானதல்ல; அந்தத் தீர்ப்பு ஒரே குற்றத்தினிமித்தம் ஆக்கினைக்கு ஏதுவாயிருந்தது; கிருபைவரமோ அநேக குற்றங்களை நீக்கி நீதிவிளங்கும் தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறது. அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய் மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே” (5 : 16, 17).

ஒருவன் பாவஞ்செய்ததினால் அந்த மனுஷனுக்கு வந்த தீர்ப்பு எல்லார் மேலும் வந்தது. இந்தத் தீர்ப்பு ஒரே மனுஷன் மூலமாய் ஒரே குற்றத்திற்காக வந்த தீர்ப்பாகும். ஆனால் கிருபை வரம் என்பது அநேக குற்றங்களை நீக்கும் தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறது. இந்தத் தீர்ப்பே கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நமக்குண்டாயிருக்கும் நித்திய ஜீவனாகும். அதுமாத்திரமல்ல, ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன் மூலமாய் மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் ஈவாகிய நித்திய ஜீவனையும், பரிசுத்தஆவியின் மூலமாய் உண்டாயிருக்கும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் அல்லது நீதியாகிய ஈவின் பரிபூரண ஜீவனையும் அடைந்துகொள்ளுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஆளுகை செய்வார்கள். “நானோ ... ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்” என்று கர்த்தராகிய இயேசு சொன்னார் (யோவான் 10 : 10). ‘ஜீவன்’ என்பது நித்திய ஜீவனில் நாம் பெற்றுக்கொள்ளும் முதல் படியாகும். ‘பரிபூரண ஜீவன்’ என்பது பரிசுத்தஆவியினால் நமக்கு உண்டாயிருக்கும் நிறைவான ஜீவனைக் காண்பிக்கிறது. ‘ஆளுவார்கள்’ என்பது, இவ்வித ஜீவனைப் பெற்றவர்களுக்குப் பாவத்தின் மேல் ஒரு ஆளுகை உண்டாயிருக்கும் அல்லது இப்போது அவர்கள் ஜெய ஜீவியம் செய்கிறவர்களாய் மாற்றப்படுவார்கள் என்பது கருத்தாகும் (II தீமோ. 1 : 10).

“ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்” (5 : 18, 19).

ஆகவே ஒரே மீறுதலினாலே ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பாகிய மரணம் உண்டானது போல, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்காகச் சம்பாதித்திருக்கும் நீதியினாலே எல்லா மனுஷரும் மரணத்தின் அதிகாரத்திலிருந்து விடுவிக்கப்பட்டு நித்திய ஜீவனை அனுபவிப்பது அல்லது எல்லா மனுஷருக்கும் நித்திய ஜீவனின் பரிபூரண ஜீவனாகிய அழியாமையை அளிக்கும் தேவநீதிக்கேற்ற தீர்ப்பு உண்டாயிற்று.

“மேலும், மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது; அப்படியிருந்தும், பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று. ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது” (5 : 20, 21).

மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்ததுபோல மீறுதலினால் உண்டாகிற பாவம் பெருகின இடத்தில் தேவனுடைய கிருபையும் அதிகமாய்ப் பெருகுகிறது. இக்காரணத்தைக்கொண்டே எந்தப் பாவியையும் தேவன் இரட்சித்து அவனையும் தம்மைப்போல தேவநீதியுடையவனாய் மாற்றக் கூடியவராயிருக்கிறார். இதையே கிருபை பெருகினது என்று நாம் வாசிக்கிறோம்.

ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயிருக்கிற கிருபையினாலே நாம் தேவநீதியை அடைந்துகொள்ளும்படி அந்தக் கிருபை இப்போது நம்மை ஆண்டுகொண்டிருக்கிறது அல்லது நாம் அந்தக் கிருபைக்குட்பட்டவர்களாயிருக்கிறோம் என்பதே 21 - ஆம் வசனத்தின் கருத்தாகும்.

****

Fuû]d L]mTiÔ¡\YoLs

என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம்பண்ணுவேன்; என்னை அசட்டைபண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள்ணி (I சாமு. 2 : 30).

இவை தேவனாகிய கர்த்தர் தமக்கு ஆசாரியராகத் தெரிந்துகொண்ட ஏலியின் குடும்பத்தைக் குறித்துக் கூறிய வார்த்தைகளாகும். அவனுடைய வீட்டாரைக் குறித்துக் கர்த்தர், “என்றைக்கும் என் சந்நிதியில் நடந்துகொள்வார்கள்” என்று அவனுக்குச் சொல்லியிருந்தும் அவ்வாக்குத்தத்தம் நிறை வேற்றப்படாமற் போயிற்று.

தேவன், ஏலியை இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் தமக்கு ஆசாரியனாகத் தெரிந்துகொண் டது போல (வச. 28), நம்மையும் இந்த உலகத்தின் அடிமைத்தனத்தினின்றும், உலக ஜனங்களின் மத்தி யிலிருந்தும் வேறுபிரித்து, ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாய் மாற்றியிருக்கிறார் (I பேதுரு 2 : 9 ; வெளி. 1 : 6). அன்றைக்கு அபிஷேகதைலத்தினால் அபிஷேகம்பண்ணப்படுவதின் மூலம் அவர்கள் ஆசாரியராக்கப்பட்டது போல, இன்றைக்கு இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டு, ஞானஸ் நான சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்ததின் மூலம் தேவனோடு உடன்படிக்கை செய்திருக்கிற நம்மையும் தேவன் தம்முடைய ஆவியினால் அபிஷேகம்பண்ணி, தமக்கு முன்பாக ஆசாரியர்களாக்கியிருக் கிறார்.

“என்றைக்கும் என் சந்நிதியில் நடந்துகொள்வார்கள்” என்று ஏலியின் வீட்டாரைக் குறித்து தேவன் நிச்சயமாய் சொல்லியிருந்த வாக்குத்தத்தம் நிறைவேற்றப்படாமற்போனது ஏன்?

ஒரு ஆசாரியனுடைய கடமையென்னவென்றால், அவன் கர்த்தருடைய சந்நிதியில் நின்று தூபங்காட்டுகிறவனாய், அவருக்கு ஆராதனை செய்கிறவனாய், அவர் கட்டளையிட்ட பலிகளை யும் காணிக்கைகளையும் அவருக்குச் செலுத்துகிறவனாய், அவருடைய பிரமாணங்களைப் போதிக்கிற வனாய் இருக்க வேண்டும் (உபா. 10 : 8 ; 33 : 10). மட்டுமல்லாது, கர்த்தர் அவனுக்குக் கொடுத்த அபிஷேகத்தினிமித்தமும், ஊழியத்தினிமித்தமும், அவன் தன்னைக் கர்த்தருக்குப் பிரதிஷ்டை பண்ணிக்கொண்டு, பரிசுத்த புருஷனாயிருந்து, கர்த்தருடைய வார்த்தைகளைக் கைக்கொண்டு, அவ ருடைய உடன்படிக்கையைக் காக்கிறவனாயிருக்க வேண்டும் (யாத். 32 : 29 ; உபா. 33 : 8 - 10). இவ்விதமாக அவன் கர்த்தரை மதித்து, அல்லது கனம்பண்ணி ஜீவிக்க வேண்டும் (I சாமு. 2 : 29). இந்தக் காரியங்கள் ஏலியின் பிள்ளைகளில் காணப்படாமற் போனபடியினாலேயே அவர்களில் அவ்வாக்குத்தத்தம் நிறைவேறக் கூடாதபடிக்கு அவமாயிற்று.

இந்த நாட்களில் பரிசுத்தஆவியின் அபிஷேகத்தின் மூலம் ஆசாரியராக்கப்பட்டிருக்கிற தேவஜனங்களுக்கும் கர்த்தர் அநேக வாக்குத்தத்தங்களை அருளிச் செய்திருக்கிறார். இந்த வரு

ஷத்தின் துவக்கத்திலும் நாம் கர்த்தரிடத்திலிருந்து வாக்குத்தத்தங்களைப் பெற்றிருக்கக் கூடும். "நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" (யோவான் 14 : 3) என்றும் அவர் நமக்கு உரைத்திருக்கிறார். தேவன் நமக்குப் பூமிக்குரியவைகளைக் குறித்து மட்டுமல்லாது நித்தியத்தைக் குறித்தும் வாக்குத்தத்தம் செய்திருக் கிறார். இப்படிச் சொல்லப்பட்டுள்ள வாக்குத்தத்தங்கள் நமது ஜீவியத்தில் நிறைவேற்றப்பட வேண்டு மாயின், ஆசாரியர்களாக அபிஷேகம்பண்ணப்பட்ட நாம் ஆவிக்குரிய பலிகளையும் காணிக்கை களையும் செலுத்திக் கர்த்தரைக் கனம்பண்ணி ஜீவிக்க வேண்டும் (ஏசாயா 43 : 23).

நாம் செலுத்த வேண்டிய ஆவிக்குரிய பலிகள் யாவை? போஜனபலியும் பானபலியும் கர்த்த ருடைய ஆலயத்தை விட்டு அற்றுப்போயின என தீர்க்கதரிசி சொல்கிறான் (யோவேல் 1 : 9). நம் முடைய ஜீவியத்தில் போஜன பலியாகிய தேவசித்தம் நிறைவேற்றப்பட வேண்டும். இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவியத்தில் எப்போதும் தேவசித்தம் மாத்திரமே செய்து பிதாவைப் பிரியப்படுத்தி வந்தார் (யோவான் 4 : 34 ; 8 : 29). அதுபோல ஆசாரியர்களாக்கப்பட்ட தேவஜனங்கள் எப்போதும் தேவசித்தம் செய்து ஜீவிக்க வேண்டும். ஆகவேதான், அப். பவுலும், "நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்" என எபேசு சபைக்குச் சொல்கிறார் (எபே. 5 : 17). கர்த்தருக்குச் சித்தமானவைகளில் சிலவற்றை நாம் கீழே காணலாம்:

முதலாவதாக, எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார் (I தீமோ. : 4). இயேசுகிறிஸ்துவைக் குறித்து, யோவான்ஸ்நானன், "உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1 : 29) என்றும், அப். பவுல், அவர், 'ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்த்தார்' (எபி. 2 : 9) என்றும் குறிப்பிடுகின்றனர். ஆகவே, எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது தேவசித்தமாயிருக்கிறது. நாம் எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படும்படி ஜெபம்பண்ண வும், அனைவருக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கவும் கடமைப்பட்டிருக்கிறோம். இப்படி நாம் செய்யா விடில் தேவசித்தத்திற்கு அந்நியராய்க் காணப்படுவோம். எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படுவது மட்டுமல்லாது, அவர்கள் சத்தியத்தை அறிகிற அறிவை அடைவதும் தேவசித்தமாய்க் காணப் படுகிறது. ஆகவே, யாவரும் இரட்சிக்கப்படும்படியாகவும், இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் சத்தியத்தை அறிந்து, அப்போஸ்தல உபதேசத்தில் நிலைத்திருந்து (அப். 2 : 42), தலையாகிய கிறிஸ்துவுக்குள் வளரும்படியாகவும் நாம் பிறருக்கு உதவியாயிருக்கத் தீர்மானிப்போமாக.

இரண்டாவதாக, எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்வது தேவசித்தமாயிருக்கிறது (I தெச. 5 : 18). (1) உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்த யோபு, தனக்குண்டான எல்லாவற்றையும் தன் பிள்ளைகளையும் இழந்தபோதும், "கர்த்தர் கொடுத் தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" என்று கூறி, கர்த்தரை ஸ்தோத்தி ரித்தான் (யோபு 1 : 21). தாவீது, தேவன் தனக்குச் செய்த நன்மைகளுக்காக, "என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே" என அவரை ஸ்தோத்தி ரித்தான். ஆம், நாம் அப்படிச் செய்வது நம்முடைய கடமையாகும். இது கர்த்தரை ஸ்தோத்திரிப் பதின் ஒரு பகுதியாகும். அப்படி நமக்குள் நன்றியுள்ள இருதயம் காணப்படாவிட்டால் நம் இருதயம் இருளடைந்துவிடும் (ரோமர் 1 : 21). அதே தாவீது, "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்" என்றும் கூறுகிறான் (சங். 34 : 1). அந்த சங்கீதத்தின் தலைப்பின் மூலம் அவன் அப்போது ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருந்ததை நாம் அறிவோம். மனச்சாட்சியின் காலத்தில் ஜீவித்த யோபும் நியாயப்பிரமாண காலத்தில் ஜீவித்த தாவீதும் கஷ்ட, நஷ்டங்களிலும் கர்த்தரை ஸ்தோத்திரித்திருந்தால், கிருபையின் காலத்தில் ஜீவிக்கிற நாம் எவ்வளவதிகமாய் நம் கஷ்ட நஷ்டங்களில் அவரை ஸ்தோத்திரிக்கக் கடமைப்பட்டுள்ளோம். இதனையே ஆவியானவர் எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்தலே தேவசித்தம் என்று குறிப் பிடுகிறார். ஏனெனில், ரோமர் 8 : 28 - இல், "தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" என நாம் வாசிக்கிறோம். 'நன்மையாக' என்றல்ல, "நன்மைக்கு ஏதுவாக" என்று கூறப்பட்டுள்ளது. அப்படியானால் நமக்கு வருகிற பாடு கள், துன்பங்கள், துக்கங்கள், நிந்தை, அவமானம் போன்றவற்றிலுங்கூட 'எக்காலத்திலும்', 'எப்போதும்' நாம் ஸ்தோத்திரம் செய்து அவரை மகிமைப்படுத்துகிறவர்களாய்க் காணப்பட வேண்டும்.

மூன்றாவதாக, நாம் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது (I தெச. 4 : 3). "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்" (I பேதுரு 1 : 15). இப்படிப் பரிசுத்தத்தைக் குறித்த அநேக வசனங்களை வேதாகமத்தில் நாம் காண்கிறோம். "பரிசுத்த மில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" (எபி. 12 : 14) என்பதின் மூலம் தேவன் பரிசுத்தத்தைக் குறித்து எவ்வளவு வைராக்கியமுள்ளவராக இருக்கிறார் என நாம் விளங்கிக்கொள்கிறோம். எப்படி நாம்

பரிசுத்தத்தைப் பெற்றுக்கொள்கிறோம்? நாம் கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினாலும் (எபி. 13 : 12), தேவ வசனத்தினாலும் (யோவான் 17 : 17), பரிசுத்தஆவியினாலும் (ரோமர் 15 : 15) பரிசுத்தமாக்கப்படுகிறோம். இவை முறையே இரட்சிப்பிலும், ஞானஸ்நானத்திலும், பரிசுத்தஆவியின் அபிஷேகத்திலும் ஆரம்பமாகி, அனுதினமும் தொடர்ந்து நம் ஜீவியத்தில் நடைபெறும் தேவனுடைய பரிசுத்தமாக்குதலின் கிரியைகளாகும். "நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்" (லேவி. 20 : 8) என்று தேவன் வாக்குக் கொடுத்திருந்தாலும், நாம் அவரோடு இசைந்து, அவருக்கு நம்மை ஒப்புக்கொடுக்காவிட்டால், பரிசுத்தத்தில் பூரணப்பட முடியாது. ஏனெனில், பெலவீன மனுஷராகிய நம்மில் கோபம், அசதி, பொறாமை, பெருமை போன்ற அசுசியான காரியங்கள் காணப்படுகின்றன. ஆகவேதான் II கொரிந்தியர் 7 : 1 - இல், "மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்" என சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தில் மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான அசுசி நீங்க நம்மை நாமே சுத்திகரித்துக்கொள்ள வேண்டும் என நாம் காண்கிறோம். அதாவது, நாம் யாரிடமாவது கோபப்பட்டிருந்தால் அவர்களிடம் மன்னிப்பு கேட்பது, ஆடம்பரமான ஜீவியத்தை வெறுத்து விட்டுவிடுவது, மனதில் தீமையான யோசனைகள், பரிசுத்தத்திற்கு அந்நியமான சிந்தைகள் வந்திருந்தால் அவற்றை அறிக்கை செய்து விட்டு விடுவது போன்ற காரியங்களைச் செய்து நம்மை நாமே சுத்திகரித்துக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. இப்படிச் செய்யும்போது, பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்ற நம்மைக் குறித்த தேவசித்தத்தை நாம் நிறைவேற்றுகிறவர்களாயிருப்போம்.

மேற்கூறிய விதங்களில் நாம் தேவசித்தம் செய்வதின் மூலம் தேவனுக்குப் போஜனபலி செலுத்துகிற ஆசாரியர்களாய்க் காணப்படுவோம். இதுவுமல்லாது, எபிரெயர் 13 : 15, 16 - இல் சொல்லப்பட்டுள்ளது போல நாம் ஸ்தோத்திர பலிகளைச் செலுத்துவதின் மூலமாகவும் நன்மை செய்து, தானதர்மம் பண்ணுவதின் மூலமாகவும் தேவனுக்குப் பிரியமான பலிகளைச் செலுத்துகிற ஆசாரியராகவும் காணப்படுவோம்.

மேலும் ஆசாரியன் பானபலி செலுத்துவதின் மூலம் தேவனைக் கனம்பண்ண வேண்டும். பானபலி என்பது, கர்த்தருக்காகப் பாடுபட்டு ஜீவனை ஊற்றி விடுவதாகும். ஆகவேதான், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, "என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான்" (மத். 16 : 25) என்றார். அப். பவுலும், பிலிப்பியர் 2 : 17 - இல், "ஊழியத்தின்மேலும் நான் வார்க்கப்பட்டுப்போனாலும்" என்று கூறி, தன் ஜீவனையும் அருமையாக எண்ணாது (அப். 20 : 24) தன்னை ஒரு பானபலியாக ஒப்புக்கொடுத்தார். "ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" (யோவான் 12 : 26) என்று கர்த்தராகிய இயேசு கூறினார். எனவே கர்த்தர் நம்மை அழைத்த அழைப்பிற்கேற்ப, கர்த்தருக்கு ஊழியஞ் செய்வோமாயின், தம்மைக் கனம்பண்ணுகிறவர்களைக் கனம்பண்ணுவதாகக் கூறியிருப்பவர், இவ்வுலகிலும் வரப்போகும் நித்தியத்திலும் நிச்சயமாகவே நம்மைக் கனம்பண்ணுவார். இப்படியாக, போஜனபலியையும் பானபலியையும் கர்த்தருக்குச் செலுத்துகிற ஆசாரியர்களாக நாம் மாற்றப்படுவோமாக.

ஏலியின் பிள்ளைகளைக் குறித்துக் கர்த்தர், அவர்கள், கர்த்தருக்குச் செலுத்த வேண்டிய காணிக்கைகளினால் தங்களைக் கொழுக்கப்பண்ணினதாகக் கூறுகிறார் (I சாமு. 2 : 29). நம்மிலும் சிலர் தேவனுக்கு உரியவைகளாகிய தசமபாகம், முதற்பலன், உதாரத்துவமான காணிக்கைகள் இவற்றை வஞ்சித்து, கர்த்தருக்குரியவைகளினால் தங்களைக் கொழுக்கப்பண்ணுகிறார்கள். "உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு" (நீதி. 3 : 9) என நாம் வாசிக்கிறோம். பழைய ஏற்பாட்டின் காலத்தில் இஸ்ரவேலருக்கு அது பிரமாணமாய்க் கொடுக்கப்பட்டது (லேவி. 27 : 30). சிலருடைய வாழ்க்கையில் ஆசீர்வாதம் இல்லாமற் போவதற்குக் காரணம், அவர்கள் கர்த்தருக்குரியவைகளில் உண்மையில்லாமற் போவதேயாகும். இந்தக் காரியத்தில் நாம் உண்மையில்லாதவர்களாய் இருப்போமானால், நாம் கர்த்தரைக் கனம்பண்ணுகிறவர்களாய் அல்ல, அவரை அசட்டைபண்ணுகிறவர்களாயிருப்போம் (மல். 1 : 6 - 8). நாம் உண்மையுள்ளவர்களாக இருந்தால் அவர் வானத்தின் பலகணிகளைத் திறந்து நம்மை ஆசீர்வதிப்பார் (மல். 3 : 10). கர்த்தராகிய இயேசு, "தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள்" என்கிறார் (மத். 22 : 21). கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்களாகிய நாம், தேவனுக்கு உடையவைகளாகிய நம் சரீரத்தினாலும் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துவோமாக (I கொரி. 6 : 20). கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நாமும் அன்பிலே நடந்துகொள்வோமாக (எபே. 5 : 2). இப்படியாக நாம் பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்திக் கர்த்தரைக் கனம்பண்ண வேண்டும்.

கர்த்தர் ஏலியிடம், "நீ என்னைப்பார்க்கிலும் உன் குமாரரை மதிப்பானேன்" என்கிறார் (I சாமு. 2 : 29). நாம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும், கர்த்தரையும் அவர் சமுகத்தையும் கனம்பண்ணுகிறவர்களாய்க் காணப்பட வேண்டும். சிலர் கர்த்தரைக் கனம்பண்ணாது, மனுஷரையும் உலகத்திலுள்ளவைகளையும் கனம்பண்ணுகிறார்கள். ஒருசிலர் தேவசமுகத்திற்கு வரவேண்டிய சமயங்களில் தேவசமு

கத்திற்கு வந்து தேவனைக் கனம்பண்ணாமல், மனுஷரைக் கனம்பண்ண அல்லது பிரியப்படுத்த அந்த நேரத்தை எடுத்துக்கொள்கிறார்கள். இது தேவனுக்கு முன்பாகப் பாவமாய்க் காணப்படுகிறது. ஆகவேதான், "அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள்" என சொல்லப்பட்டுள்ளது (I நாளா. 16 : 11). உண்மையாகக் கர்த்தரைக் கனம்பண்ண விரும்புகிறவர்கள், அவர் சமுகத்தை நித்தமும் தேடுவார்கள்.

பாலாக் ராஜா பிலேயாமிடம், "உம்மை மிகவும் கனம்பண்ணுவேன்" (எண். 22 : 17) என்று கூறி அனுப்பியபோது அவன் தேவனையும் அவருடைய சித்தத்தையும் கனம்பண்ண விரும்பாமல் தேவசித்தத்திற்கு மாறாக இஸ்ரவேலரைச் சபிக்கும்படி பாலாக்கின் ஊழியர்களோடு போனான். அவனுக்குள் "நீதிமான் மரிப்பதுபோல் நான் மரிப்பேனாக" (எண். 23 : 10) என்ற வாஞ்சை இருந்தும், அவன் கர்த்தரைக் கனம்பண்ணாமற்போனபடியினால் பட்டயத்தினால் வெட்டப்பட்டு மரித்தான் (யோசுவா 13 : 22). ஆகவே ஆசாரியர்களாக்கப்பட்ட, தேவ ஜனங்களாகிய நாம் எல்லா சந்தர்ப்பங்களிலும் கர்த்தரை மாத்திரம் கனம்பண்ணி, அவர் சித்தம் செய்து ஜீவிப்போமாக!

நாம் இவ்வண்ணமாக பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்தி, கர்த்தரைக் கனம் பண்ணி ஜீவிக்கும்போது, "என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம்பண்ணுவேன்" என்று நம்முடைய கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, இராஜாதி இராஜாவாய் இருக்கிறார் (I தீமோ. 6 : 15). இராஜா கனம் பண்ண விரும்புகிறவனுக்கு என்ன செய்யப்படும்? இதற்கு உதாரண மாக, எஸ்தரின் புத்தகத்தில் ஒரு சம்பவத்தை நாம் காண்கிறோம் (எஸ்தர் 6 : 7 - 9). முதலாவது இராஜ வஸ்திரமும், இரண்டாவது இராஜா ஏறுகிற குதிரையும், மூன்றாவது இராஜ கிரீடமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டு, அவன் அலங்கரிக்கப்பட்டவனாய் நகர வீதியில் வலம் வரும்படி செய்யப்பட்டு, "ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்கு இப்படியே செய்யப்படும்" என அவனுக்கு முன்பாகப் பறை சாற்றுவிக்கப்பட்டது. அவ்வாறே இம்மையில் கர்த்தரைக் கனம்பண்ணுகிறவர்கள், மறுமையில் அவரால் இராஜ வஸ்திரத்தையும் தேவசிங்காசனத்தையும் இராஜ கிரீடத்தையும் பெற்று, புதிய எருச லேமின் நகர வீதியில் உலாவும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள். இப்படியாக, நித்தியத்தில் கர்த்தரால் கனம்பெற்ற தேவஜனமாய் மாற்றப்படும்படி நாம் நம்முடைய ஜீவியத்தினால் கர்த்தரைக் கனம்பண்ணுவோமாக.

தேவனால் ஆசீர்வாதம் பெறும் நிலம்

சாலொமோன் ராஜா தன் பிரயாணத்தில் நேரில் கண்டது போன்ற ஓர் காட்சியை இவ்விதம் விவரிக்கிறான்: "சோம்பேறியின் வயலையும், மதியீனனுடைய திராட்சத்தோட்டத்தையும் கடந்து போனேன். இதோ, அதெல்லாம் முள்ளுக்காடாயிருந்தது; நிலத்தின் முகத்தைக் காஞ்சொறி மூடினது, அதின் கற்சுவர் இடிந்து கிடந்தது. அதைக் கண்டு சிந்தனைபண்ணினேன்; அதை நோக்கிப் புத்தியடைந்தேன்" (நீதி. 24 : 30 - 32).

இங்கே கூறப்பட்டுள்ள சோம்பேறியும் மதியீனனும் யார்? சோம்பேறியைக் குறித்து, "பற்களுக்குக் காடியும், கண்களுக்குப் புகையும் எப்படியிருக்கிறதோ, அப்படியே சோம்பேறியும் தன்னை அனுப்புகிறவர்களுக்கு இருக்கிறான்" (நீதி. 10 : 26) என்று சாலொமோன் கூறுகிறான். சோம்பேறி, தான் செய்ய வேண்டிய கடமைகளைக் குறித்த நேரத்தில் செய்யாமல், தன்னை அனுப்பும் எஜ மானுக்கு உண்மையற்றவனாயிருக்கிறான். மதியீனன் யார்? பிலேயாமைக் குறித்து, "பேசாத மிருகம் மனுஷர்பேச்சைப் பேசித் தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டைத் தடுத்தது" என்று வேதாகமம் கூறுகிறது (II பேதுரு 2 : 16). பிலேயாமின் மதிகேடு யாதெனில் அவன் தீர்க்கதரிசனம் உரைத்தலை ஆதாயத் தொழிலாகக் கொண்டான். அவன் இராஜாவைப் பிரியப்படுத்த விரும்பி, தேவசித்தத்திற்கு மாறாகப் போனான். மற்றொரு மதிகேட்டைக் குறித்து II தீமோத்தேயு 3 : 8, 9 - இல் நாம் வாசிக் கிறோம். யந்நேயும் யம்பிரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றார்கள்; அவர்கள் விசுவாச விஷ யத்தில் பரீட்சைக்கு நிற்கவில்லை. இவ்விருவருடைய மதிகேடு எல்லாருக்கும் வெளிப்பட்டது. மனிதனுக்குள்ளிருக்கிற பொருளாசையும், தேவ சித்தத்தை விட்டு வழிவிலகிச் செல்லுதலும், தேவனுடைய ஒழுங்குகளையும் நியமங்களையும் எதிர்த்துநிற்பதும், விசுவாசப் பரீட்சையில் நிலை நிற்காதிருத்தலும் மதிகேடாயிருக்கிறது. இவ்விதம் சோம்பலுள்ளவர்களும் மதிகேடுள்ளவர்களும் தங் களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தைக் கட்டியெழுப்பாமல் அலட்சியமாக விட்டுவிடுகிறார்கள். தேவ னாகிய கர்த்தர் தமது ஜனமாகிய இஸ்ரவேலரைத் திராட்சத் தோட்டமாகக் கண்டார் (ஏசாயா 5 : 7). தேவனுடைய சபை ஓர் திராட்சத் தோட்டமாக இருக்கிறது. தேவஜனம் கனி கொடுக்கிற ஜீவியம் செய்யும்படி ஏற்படுத்தப்பட்டவர்கள் ஆவர். ஆனால், பலன் கொடுக்கும் வயலைப் போலவும், குறிக்கப்பட்டக் காலத்தில் நற்கனி கொடுக்கும் திராட்சத் தோட்டம் போலவும் இருக்க வேண்டிய அவர்களில் சிலருடைய ஜீவியம் பரிதபிக்கப்படத்தக்க நிலவரத்தில் காணப்படுகிறது.

சோம்பேறித்தனத்தினாலும் மதியீனத்தினாலும், வயலும் திராட்சத்தோட்டமும் முள்ளுக்காடா யிருந்தது என்று ஞானி சொல்லுகிறான். காஞ்சொறி நிலத்தை மூடிற்று. முள்ளும் குருக்கும் சாபத்துக்கு அடையாளமாகும். ஆதிமனிதனின் பாவத்தின் நிமித்தம் தேவனாகிய கர்த்தர், அது, "உனக்கு முள்ளும்

குருக்கும் முளைப்பிக்கும்" என்று கூறி (ஆதி. 3 : 18), பூமியைச் சபித்தார். தீர்க்கதரிசியின் மூலம், "முள்ளுகளுக்குள்ளே விதையாதிருங்கள்" (எரே. 4 : 3) என்று கர்த்தர் கூறியிருக்கிறார். முள்ளுகளுக்குள் விதைத்தால் செடிகளை முள் நெருக்கிப் போடும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து விதைக்கிறவனுடைய உவமையில் முள்ளைக் குறித்து மூன்று காரியங்களைக் குறிப்பிடுகிறார். "முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள்; கேட்டவுடனே போய், பிரபஞ்சத்திற்குரிய கவலைகளினாலும் ஐசுவரியத்தினாலும் சிற்றின்பங்களினாலும் நெருக்கப்பட்டு, பலன்கொடாதிருக்கிறார்கள்" (லூக்கா 8 : 14). இங்கே நிலம் என்பது நம்முடைய இருதயத்தை, அதாவது நமது உள்ளான ஜீவியத்தைக் காண்பிக்கிறது. இரட்சிப்பின் அனுபவத்தில் தேவன் நம்முடைய இருதயமாகிய நிலத்தைச் சுத்திகரித்து, அதை நல்ல நிலமாக்கி, பண்படுத்தி, உன்னதமான வசனத்தை நமக்குள் விதைத்து, பின்பு நல்ல பலனை நம்மில் எதிர்பார்க்கிறார். ஆதலால், பிரபஞ்சத்திற்குரிய கவலைகள், ஐசுவரியம், சிற்றின்பங்கள் ஆகிய முட்கள் நமக்குள் முளைக்காதபடி நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

பிரபஞ்சத்திற்குரிய கவலை :

கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கியிருக்கும் நாம் லௌகீகக் கவலைகளால் பாரமடையக் கூடாது. "உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்" (லூக்கா 21 : 34) என்று கர்த்தராகிய இயேசு கூறியிருக்கிறார். மலைப்பிரசங்கத்திலும் அவர் இவ்வுலக ஜீவனத்திற்கான ஆகாரத்திற்காகவும், சரீரத்திற்கான உடைக்காகவும் கவலைப்படக் கூடாது என்று கூறியிருக்கிறார் (மத். 6 : 25). அப். பவுலும், "நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன்" என்று எழுதுகிறார் (I கொரி. 7 : 32). அப்படியானால் கவலையில்லாமல் ஜீவிக்க முடியுமா? ஒரு தேவனுடைய பிள்ளையைக் கவலை தாக்குகிற நேரத்தில் அது அவனுக்குள், அவனது ஆவிக்குரிய ஜீவியத்தை நெருக்கிப் போடுகிற ஒரு முள்ளாக மாறாதபடிக்கு அவன் என்ன செய்ய வேண்டும்? கவலைப்படக்கூடிய சூழ்நிலைகளில், அவன் ஒன்றுக்குங் கவலைப்படாமல், தேவசமுகத்திற்குச் சென்று எல்லாவற்றையுங் குறித்து தன் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்த வேண்டும் (பிலி. 4 : 6). அப்படியானால், எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் அவனது இருதயத்தையும் சிந்தையையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும். கர்த்தராகிய இயேசு மார்த்தாளிடம், "நீ அநேக காரியங்களைக்குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே" என்றார் (லூக்கா 10 : 41). இங்கே தேவையானது என்பது, தேவனுடைய சமுகத்தில் அமர்ந்திருப்பதேயாகும். இதனைத் தெரிந்தெடுத்தால், நம் ஜீவியத்தில் தேவவசனம் பலன் தரக்கூடாதபடி கவலைகள் அதை நெருக்கிப்போடுகிற முட்களாக மாறாது. இப்படிப்பட்ட வேளைகளில் விண்ணப்பங்களையும் ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்காதவன் ஆவிக்குரிய பிரகாரமாக சோம்பேறி எனக் கணிக்கப்படுகிறான். முட்களை வளர விடுகிறவர்களுக்குள் விதைக்கப்படுகிற வசனம் பலனற்றுப் போகும்; ஜீவியம் முட்கள் நிறைந்ததாக மாறும். ஒரு சமயத்தில், எசேக்கியேல் தீர்க்கதரிசி, நெரிஞ்சில்களும் முள்ளுகளும் போன்ற மனுஷர் மத்தியில் தங்கியிருந்ததாக எசேக்கியேல் 2 : 3, 6 - இல் நாம் வாசிக்கிறோம். அதாவது, அந்த ஜனங்கள் உலகத்திற்குரிய கவலையுள்ளவர்களாகவும், மாம்சத்திற்குரியவர்களாகவும் ஜீவித்தார்கள். அவர்கள் கர்த்தருடைய பார்வையில் நெரிஞ்சில்களும், முள்ளுகளுமாகக் காணப்பட்டார்கள். உலகக் கவலை நம்மை ஆபத்தான இடத்திற்குக் கொண்டு போய் விடும். நம் ஜீவியம் இவ்விதம் மாறிப் போகாதபடிக்குக் கவலைகள், பாரங்கள் சூழும் நேரத்தில், நம் விண்ணப்பங்களை நாம் கர்த்தருக்கு நேராக ஏறெடுத்து, முட்கள் வளருவதற்கு இடமளிக்காமல் இருப்போமாக!

ஐசுவரியம் :

மத்தேயு 13 : 22 - இல், "ஐசுவரியத்தின் மயக்கம்" என கர்த்தராகிய இயேசு குறிப்பிடுகிறார். ஒருவன் ஐசுவரியத்தின் மீது சிந்தை வைக்கும்போது, அது அவனுடைய ஆத்துமாவை உருவக் குத்திச் சேதப்படுத்தும் முள்ளாக மாறி விடுகிறது. ஐசுவரியத்தின் மயக்கத்தினால் தெளிந்த புத்தியை அவன் இழக்கிறான். "ஐசுவரியம் விருத்தியானால் இருதயத்தை அதின்மேல் வைக்காதேயுங்கள்" என்று வேதாகமம் கூறுகிறது (சங். 62 : 10). நம் அன்றாட ஜீவனத்திற்கென்று கடினமாக உழைத்து தேவசித்தமான முறையில் பணம் சம்பாதிப்பது தவறல்ல. அது அவசியமானதே. ஆனால், அதே நேரத்தில் நம் சிந்தை, நோக்கம் எல்லாம் அதின் மேலேயே இருக்குமானால், நம் புத்தி அந்தகாரப்படும். நமக்கு பூமிக்குரிய ஐசுவரியங்கள் எல்லாம் இருந்தாலும் நம்முடைய குடியிருப்பு பரலோகத்தில் இருக்கிறது என்ற சிந்தையோடு மேலானவைகளையே நாம் நாட வேண்டும். அழிந்து போகும் ஐசுவரியம் நம் ஆவிக்குரிய ஜீவியத்தை அழித்துப்போடும் முள்ளாக வளருவதற்கு நாம் இடங்கொடுக்கக் கூடாது. "ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள். நீயோ,

தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு” (I தீமோ. 6 : 9 - 11) என்று அப். பவுல் கூறுகிறார்.

சிற்றின்பங்கள் :

சிற்றின்பங்கள் என்பது ஒரு மனிதன் அனுபவிக்க விரும்பும் சுகபோகங்களாகும். இவ்வுலகத்தின் அனைத்து இன்பங்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள பெயர் சிற்றின்பம் என்பதே. இவை கொஞ்ச நேரத்திற்கு இன்பங் கொடுப்பவையாகும். இதனை ‘மற்றவைகளைப்பற்றி உண்டாகிற இச்சைகள்’ என நாம் மாற்கு 4 : 18 - இல் காண்கிறோம். ஏசா, லோத்து, தேமா போன்றோர் இதையே விரும்பினார்கள். நம்முடைய சரீரத்தின் ஆசை, இச்சைகளின்படி நாம் ஜீவிக்கக் கூடாது. நம் சரீரம் மிகுந்த சுகபோகத்தை நாடும் தன்மையுடையது. நாம் இதற்காக ஜீவிக்க வேண்டியவர்கள் அல்லர். ஜென்ம சுபாவங்களும் மாம்சீகத் தன்மைகளும் நமது ஆவிக்குரிய ஜீவியத்தைப் பாழாக்கிவிடும். இவை முள்ளாக மாறி நம்மை அழித்துப் போடாதபடிக்கு, இதனை சரியான கட்டுப்பாட்டுக்குள் நாம் கொண்டு வர வேண்டும். “ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது” (கலா. 5 : 16, 17) என அப். பவுல் கூறி நம்மை எச்சரிக்கிறார். நாம் சரீரத்தின் செய்கைகளை அழிப்போமானால், ஆண்டவர் நமக்குத் தமது சமுகத்திலுள்ள நித்திய பேரின்பத்தை அளிப்பார்.

மேற்கூறப்பட்டுள்ள மூன்று விதமான முட்களும் நம்மை மேற்கொள்ளாதவாறு நாம் தேவகிருபைக்காக அவரிடத்தில் காத்திருந்து, தேவ வைராக்கியத்துடன் நம் இருதயத்தை நல்ல நிலமாகக் காத்துக்கொள்வோமாக. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் சோம்பலினாலும், மதியீனத்தினாலும் நம்முடைய இருதயமாகிய வயலும், சபையாகிய தோட்டமும் முள்ளுக்காடாய் மாற நாம் இடமளிக்கக் கூடாது.

சூலமித்தியைக் குறித்து, “என் சகோதரியே! என் மணவாளியே! நீ அடைக்கப்பட்ட தோட்டமும், மறைவு கட்டப்பட்ட நீரூற்றும், முத்திரிக்கப்பட்ட கிணறுமாயிருக்கிறாய்” (உன். 4 : 12) என்று சொல்லப்பட்டுள்ளது. இவள் தேவசித்தம் செய்வதினால் ‘சகோதரி’ என்றும் (மத். 12 : 50), மணவாளனாகிய இயேசுவில் மாத்திரம் அன்புகூருவதினால் ‘மணவாளி’ என்றும் அழைக்கப்படுகிறாள். இவளுடைய தோட்டம் மாதளஞ் செடிகளும், அருமையான கனிமரங்களும், மருதோன்றிச் செடிகளும், நளதச் செடிகளும், சகலவித கந்தவர்க்கச் செடிகளுமுள்ள சிங்காரவனமாயிருக்கிறது. இதுவே தேவன் தம்முடைய தோட்டத்தைக் குறித்து எதிர்பார்க்கும் நிலவரமாகும். நம்முடைய நிலவரம் எவ்விதமாயிருக்கிறது? முட்களினால் நமக்கு நாமே வேதனையை உண்டாக்கிக்கொண்டு, மற்றவர்களுக்கும் வேதனை கொடுக்கிறோமா? அல்லது மற்றவர்களுக்கு நாம் ஆசீர்வாதமாயிருக்கிறோமா?

முள்செடியை முளைப்பிக்கும் நிலத்தின் முடிவை அறிந்துகொள்வது நமக்கு நலமாயிருக்கும். “எப்படியெனில், தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு” (எபி. 6 : 7, 8). நற்பலன் கொடுக்கும் நிலம் தேவனால் ஆசீர்வாதம் பெறும். முட்களைப் பிறப்பிக்கும் நிலத்தின் முடிவு சுட்டெரிக்கப்படுதலேயாகும். ஆவிக்குரிய ஜீவியத்தில் உற்சாகமின்றி, ஜெபம்பண்ண வேண்டிய நேரத்தில் ஜெபம்பண்ணாமல், தேவனுக்காகக் கிரியை செய்ய வேண்டிய இந்நாட்களில் கிரியை செய்யாமலிருந்தால், நம்மில் விதைக்கப்படும் உபதேச வசனங்களினாலும் நம்மேல் அடிக்கடி பொழிந்தருளப்படும் அபிஷேகத்தினாலும் பயனின்றி நாம் தகாத நிலமாக, சுட்டெரிக்கப்படுவதற்கேற்ற நிலமாக மாறிப் போவோம். தம் ஜீவனையே விலைக்கிரயமாகக் கொடுத்து நம்மை விலைக்கு வாங்கி, நம்மைப் பண்படுத்தி, வேலி அடைத்து, நல்ல விதையை விதைத்து, நீர்ப்பாய்ச்சி, கற்களைப் பொறுக்கி, மழையையும் அனுப்பிக்கொண்டிருக்கும் நம்முடைய எஜமான், அவர் செலுத்திய கிரயத்தின் பலனுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார். நாம் நற்பலன் ஈந்து, தேவனால் ஆசீர்வாதம் பெறும் நிலமாகக் காணப்படுவோமாக.

பு□ வு□டு’□ஏ’கஏ டு□□சு□

நான் இந்து சமயத்தில் பக்திவைராக்கியமுள்ள பெற்றோருக்கு ஒரே மகனாகப் பிறந்து வளர்க்கப்பட்டேன். என் பெற்றோர் எனக்குக் கற்பித்தபடியே நான் பலவித அர்ச்சனைகளையும் உபவாசங்களையும் தவறாமல் அனுசரித்து ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் உபவாசித்து இறை வழிபாட்டிற்கு முதலிடம் கொடுத்துவந்தேன்.

இவ்வாறாக எனது வாழ்நாட்கள் கழிந்து வருகையில் திடீரென்று நீரிழிவு வியாதி என்னை ஆட்கொண்டது. இவ்வியாதி என்னை ஆட்கொண்டபோது எனக்கு வயது இருபத்துநான்கு. இவ்வயதில்

இவ்வியாதி என்னைப் பீடித்தது எனக்கு ஒரு ஆச்சரியத்தையும், தாங்கொண்ணாத துயரத்தையும் தந்தது. நான் ஏன் இவ்வுலகத்தில் உயிருடன் இருக்க வேண்டும்? நான் உயிருடன் இருப்பதில் என்ன பயன்? நான் இடைவிடாது கடவுளை ஆராதித்ததினால் எனக்கு என்ன பயன்? போன்ற சிந்தனைகள் நாள்தோறும் எனது மனதில் அலைமோதிக் கொண்டிருந்தன. மிகவும் பரிதபிக்கப்பட்ட நிலையில் நாள்தோறும் கண்ணீருடன் எனது வாழ்க் கையை நான் கழித்துவந்தேன். எனக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டதன் காரணமாக விரக்தியடைந்த வனாய் எனது குல தெய்வத்தை வணங்குவதை நான் முழுவதுமாக நிறுத்திவிட்டேன்.

இவ்வாறாக யாருமற்ற நிலையில் நான் எனது வியாதியினால் மிகவும் வேதனைப்பட்டுக் கொண் டிருந்த வேளையில் பெந்தெகொஸ்தே சபையைச் சேர்ந்த விசுவாசி சகோதரன் ஒருவரைச் சந்திக்கக் கர்த்தர் எனக்கு ஒரு வழியைத் திறந்தார். அவர் மெய்யான சத்தியத்தை எனக்கு எடுத்துரைத்து, 'நீர் உண்மையாகவே இயேசுகிறிஸ்துவை உமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வீரேயாயின் அவரே உமது வியாதியை நீக்க வல்ல பரிகாரியாகிய கர்த்தர் என்பதை உம்மால் பூரணமாக அநுபவிக்க முடியும்' என்று கூறினார். தினமும் மருந்தையே நம்பி உயிர் வாழ்ந்துவந்த என் ஜீவிய நாட்கள் எனக்குப் பெரும் கசப்பான அனுபவத்தையே தந்தன. இந்நிலையில் அந்தச் சகோதரன் கூறிய வார்த்தைகள் எனது சிந்தையில் ஆழமாகப் பதிந்தன. அன்றே இயேசு கிறிஸ்துவை நான் என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன். அவரை நான் விசுவாசித்தேன். என் சரீரத்தில் பாதிக்கப்பட்டிருந்த பகுதியை அவர் எனக்குச் சுட்டிக்காட்டி, 'இன்றே நான் அதைத் தொட்டுவிட்டேன். நானே உனது பரிகாரியாகிய கர்த்தர்' என்றார். அவ்வாறு கர்த்தர் பேசியது எனது உள்ளத்தைத் தொட்டது. நான் தாங்கமுடியாத சந்தோஷம் அடைந்தேன். நான் அதுவரை நீரிழிவு நோயினிமித்தம் உபயோகித்துவந்த மருந்துகளை முற்றுமாக விட்டுவிட்டேன். அவரையே எனது பரிகாரியாகிய கர்த்தராக நான் ஏற்றுக்கொண்டேன். என்ன ஆச்சரியம்! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! என்னை ஆட்கொண்டிருந்த அவ்வியாதியிலிருந்து எனக்குப் பூரண சுகம் கிடைத்தது. 1997 - ஆம் ஆண்டு தண்ணீர் ஞானஸ்நான சத்தியத்திற்குக் கீழ்ப்படிய கர்த்தர் எனக்கு உதவி செய்தார். இன்று வரை எவ்வித மருந்தும் உபயோகிக்காமல் ஆரோக்கியத்துடன் அவருக்குச் சாட்சியாக நான் ஜீவித்துவருகிறேன். அவருக்கே எல்லா துதி, கன, மகிமையும் உண்டாவதாக.

சகோதரன் கங்காதரன்,
மாத்தளை, இலங்கை.

TWU ©Rô®u T¬ÑlùTôÚs

ஒரு வாலிபன் தன் கல்லூரிப் படிப்பை முடித்து, பட்டம் வாங்கும் நாளுக்காக ஆயத்த மாகிக்கொண்டிருந்தான். அவனுடைய சிறந்த வெற்றியைக் கண்டு பெருமிதம் கொண்ட தகப்பன் அவ னுக்கு விலையேறப்பெற்ற பரிசு ஒன்றை அளிப்பதாகக் கூறினார். ஒரு காட்சிக்கூடத்திலிருந்த அழ கிய மோட்டார் வண்டி ஒன்று வெகு நாட்களாக அவ்வாலிபனின் மனதைக் கவர்ந்திருந்தது. எனவே, தனது தகப்பனுக்கு அதை வாங்கித் தரத்தக்க தகுதி உண்டென அறிந்த அவன், தன் தகப்பனிடம் போய் அந்த வாகனத்தைத் தனக்குப் பரிசாக அளிக்கும்படி கூறினான். பட்டமளிப்பு நாளும் நெருங்கியது. அவனோ தனது தகப்பன் அந்த வாகனத்தை வாங்கிவிட்டதற்கான அறிகுறிகளை எதிர்நோக்கிய வண்ணமிருந்தான். இறுதியில் அந்தப் பட்டமளிப்பு நாள் காலையில் தகப்பன் அவனைத் தன் பிரத்தியேக அறைக்கு வரும்படி அழைத்தார்.

இப்படிப்பட்ட ஒரு சிறந்த மகனைப் பெற்றெடுத்தமைக்காகத் தான் எவ்வளவோ பெருமிதம் அடைவதாயும், அவனை மிகவும் நேசிப்பதாகவும் அவர் அவனிடம் கூறினார். அத்துடன் அழகான வர்ணக் காகிதத்தில் சுற்றப்பட்ட ஒரு பரிசுப் பொருளையும் அவர் அவனுக்குக் கையளித்தார். அது என்னவென்று அறியும் ஆவலோடும், சிறிது ஏமாற்றத்துடனும் அவன் அதைச் சற்று பிரித்துப் பார்த்தான். அதிலே அழகான தோல் உறையிடப்பட்டு பொன்னிற எழுத்துக்களால் தன் பெயர் பொறிக்கப்பட்டிருந்த ஒரு வேதாகமத்தை அவன் கண்டான். கோபமடைந்தவனாய் அவன் தன் தகப்பனை நோக்கி, 'இவ்வளவு பணம் இருந்தும் எனக்கு ஒரு வேதாகமத்தையா நீர் தந்தீர்?' என உரத்த சத்தமாய்க் கூறிவிட்டு வீட்டை விட்டு மூர்க்கத்துடன் வெளியேறினான். அவன் வேறொரு ஊருக்குச் சென்று தன் திறமையினால் தனியாகத் தொழில் புரிய ஆரம்பித்தான். தொழிலில் ஆழ்ந்து முனைந்து, அதில் முன்னேறவே அவன் தன் குடும்பத்தாரை அறவே மறந்துவிட்டான். தகப்பனும் மகனைப் பல இடங்களில் தேடியும் காணாமல் ஒரு செய்தியுமறியாமல் துக்கத்திலாழ்ந்தார்.

வருடங்கள் பல உருண்டோடின. அந்த வாலிபன் தொழில் துறையில் மிகவும் தேர்ச்சியடைந் தான். காலப் போக்கில் அவன் தன் மூர்க்கத்தை மறந்து, தன் தகப்பனைக் காணும்படி ஆவல்கொண் டான். பட்டமளிப்பு நாளுக்குப் பின் அவரை அவன் காணவேயில்லை. தனது தகப்பன் இப்போது வயோதிபராக இருப்பார் என நினைத்து, அவரைப் போய் பார்க்க வேண்டும் எனப் புறப்பட்டு, அவன் தன் ஊர் வந்து சேர்ந்தான். அங்கே அதிர்ச்சி தரும் செய்தி அவனுக்குக் காத்திருந்தது. தகப்பன் மரித்து விட்டதாகவும், அவருடைய சொத்துக்கள் அனைத்தையும் மகனுக்கே அவர் எழுதி வைத்திருப்ப தாகவும் அவன் கேள்வியுற்றான். தன் தகப்பனின் முக்கிய பத்திரங்களை அவன் ஆராயத் தொடங்

கியபோது, தான் எத்தனையோ வருடங்களுக்கு முன் வைத்து விட்டுப் போன வர்ணக் காகிதத்தில் சுற்றப்பட்ட பரிசுப்பொருளாகிய வேதாகமம் அதே நிலையில் அங்கிருந்ததை அவன் கண்டான். கண்ணீருடன் அந்த வேதாகமத்தைத் திறந்து அதன் பக்கங்களை அவன் புரட்டினான். தகப்பன் கவனமாக அடிக்கோடிட்டிருந்த ஒரு வசனத்தை அவன் கண்டான். "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (மத். 7 : 11) என்பதே அந்த வசனமாகும். அவ்வசனத்தை அவன் வாசித்துக் கொண்டிருந்தபோதே வேதாகமத்தின் பின் பக்கத்திலிருந்து ஒரு சாவி கீழே விழுந்தது. அவன் அதை எடுத்துப் பார்த்தபோது அது ஒரு மோட்டார் வண்டியின் சாவியாக இருந்தது. அதில் அவன் விரும்பிய மோட்டார் வாகனம் இருந்த அதே காட்சிக்கூடத்தின் பெயருடன் சீட்டொன்று காணப் பட்டது. அந்தச் சீட்டில் அவனுடைய பட்டமளிப்பு நாளின் தேதியும் பணம் முழுவதும் செலுத்தப் பட்டதற்கான ரசீதும் இருந்தன. தகப்பன் பரிசு அளித்த நாளில், வேதாகமத்தைக் கண்டு மனங் கொதித்தெழுந்த மகன் அதற்குப் பின்னால் இருந்த ஊர்தியின் சாவியைக் காணத் தவறிவிட்டான். ஆத்திரம் அவன் கண்களை மறைத்தது. அதன் விளைவாகத் தகப்பனின் அன்பைத் துச்சமென மதித்து, அவரின் உள்ளம் நொறுங்கும் விதத்தில் அவன் நடந்துகொண்டான். இப்போது அவன் உள்ளம் உடைந்து யாது பயன்? இருப்பினும், தகப்பனின் மரணம் மகனின் மனந்திரும்புதலுக்கு வழிகோலிற்று.

அருமையான வாலிபரே, இளைஞரே, நம்முடைய விருப்பங்களுக்கு அப்பால் நாம் பார்க்க முடியாமலிருப்பதால், தேவனுடைய ஆசீர்வாதங்களை எத்தனையோ முறைகளில் நாம் இழந்திருக்கிறோம். ஆதலால், உங்களுடைய விருப்பங்களுக்கு மாறாக வீட்டிலும், வெளியிலும் காரியங்கள் சம்பவிக்கும்போது பொறுமையிழந்து, பதறாதீர்கள். நிதானத்தையும் அமைதியையும் கடைபிடியுங்கள். "நிதானமாய் நடக்கிறவன் கர்த்தருக்குப் பயப்படுகிறான்; தன் வழிகளில் தாறுமாறானவனோ அவரை அலட்சியம்பண்ணுகிறான்" (நீதி. 14 : 2) என்று ஞானி கூறுகிறான். அந்த வாலிபன் கர்த்தருடைய வசனத்தை விலையேறப்பெற்ற பொக்கிஷமாகக் கருதி, அதைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டு, நாள்தோறும் அதை வாசித்துத் தியானிக்கத் தீர்மானித்திருந்தால் அவன் இந்த முடிவுக்கு வந்திருக்கமாட்டான். தகப்பன் தன் மன விருப்பத்தை இவ்விதம் நிறைவேற்றியதை அவன் வெகு சீக்கிரம் உணர்ந்திருப்பான்.

உங்கள் விருப்பங்களும் ஜெபங்களும் ஒருவேளை நீங்கள் நினைக்கிறதுபோல நிறைவேற்றப்படாமல் இருக்கலாம். தேவன் உங்களுக்குத் தருவது எதுவோ, அதை அவரிடமிருந்து வந்த நல்ல ஈவாக, பரிசுப் பொருளாக நீங்கள் ஏற்றுக்கொண்டால் அதன் மூலம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், அதைத் தொடர்ந்து சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்களையும் நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" (யாக். 1 : 17).

போட்டி

கீழ்க்காணும் வினாக்களுக்கு 25 - 10 - '00 - க்குள் எம்மொழியிலும் பதில் எழுதி அனுப்பவும். வயது, வசன ஆதாரம் குறிப்பிடுக.

வேத வாசிப்புப் பகுதி : **எரேமியா 36 - 52, புலம்பல், எசேக்கியேல், யோவான், அப்போஸ்தலருடைய நடபடிகள்.**

1. இந்த மனுஷன் கொல்லப்பட உத்தரவாகவேண்டும் என்று யாரைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது? இந்த மனுஷன் கொலைபாதகன் என்று யாரைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது?
2. நான் சொல்லுகிறதை நம்பு என்று யாருக்குக் கூறப்பட்டது? ஆகையால் அவரிடத்தில் நம்பிக்கைக் கொண்டிருப்பேன் என்றது யார்?
3. சண்டை பண்ணிக்கொண்டிருந்த இரண்டுபேரை சமாதானப்படுத்தும்படி பேசினது யார்? ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பது தேவனுடைய கற்பனை என்று எங்கு எழுதப்பட்டுள்ளது?
4. தங்கள் தொழுவத்தை மறந்துவிட்ட மேய்ப்பர்களைக் குறித்து வாசிப்பதெங்கே? எங்கே நல்ல தொழுவத்திலே ஆடுகள் படுத்துக்கொள்ளும்?
5. பிதாக்கள் பிள்ளைகளைத் தின்பார்கள் என்று எங்கு எழுதப்பட்டுள்ளது? எப்படிப்பட்ட ஸ்திரீகளின் கைகள் தங்கள் பிள்ளைகளைச் சமைத்தன?
6. முடிவு வருகிறது, முடிவு வருகிறது, அது உன்மேல் நோக்கமாயிருக்கிறது என்று எங்கு எழுதப்பட்டுள்ளது? தனக்கு வரப்போகும் முடிவை நினையாதிருந்தவன் யார்?
7. ஆண்டவரே, என் ஆத்துமாவின் வழக்கை நடத்தினீர் என்றது யார்? ஒருவர் பேரிலொருவர் வழக்காடிக்கொள்ளட்டும் என்று எங்கே எழுதப்பட்டுள்ளது?
8. எந்த இராஜா யாரை சிறைச்சாலையிலிருந்து வெளிப்படப்பண்ணி அவன் தலையை உயர்த்தினான்? பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்சாலையில் அடைத்தது யார்?

பதில் அனுப்ப வேண்டிய முகவரி :

பெந்தெகொஸ்தின் பேரொலி (இளைஞர் பகுதி), பெந்தெகொஸ்தே மிஷன்,

45 - A, 5 -ஆம் தெரு, பத்மநாப நகர், அடையாறு, சென்னை - 600 020.
போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குப் பரிசுகள் அனுப்பப்படும்.

1. எரே. 5 : 13 ; மாற்கு 14 : 67,68
2. எரே. 4 : 3 ; மாற்கு 4 : 7 ; லூக்கா 8 : 7
3. ஏசாயா 38 : 17 ; எரே. 18 : 20
4. எரே. 8 : 4 ; லூக்கா 6 : 39
5. எரே. 4 : 23 ; மாற்கு 13 : 24
6. ஏசாயா 55 : 11 ; எரே. 10 : 21
7. எரே. 17 : 14 ; லூக்கா 9 : 11
8. ஏசாயா 44 : 21 ; லூக்கா 12 : 6
9. ஏசாயா 63 : 2 ; மாற்கு 15 : 5,17
10. எரே. 10:2 ; மாற்கு 8:11 ; லூக்கா 11:16.

எருசலேமின் அலங்கமும் வாசல்களும்

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

"பள்ளத்தாக்கின் வாசலை ஆனூனும், சானோவாகின் குடிகளும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்; அவர்கள் அதைக் கட்டி, அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்டு, ... அலங்கத்தில் ஆயிரம் முழம் கட்டினார்கள்" (நெகே. 3 : 13).

எருசலேம், நான்கு குன்றுகளின்மேல் கட்டப்பட்ட ஒரு பட்டணமாகும். மிகவும் அண்மையில் நெருங்கி வந்தாலொழிய பிறர் கண்களுக்குப் புலப்படாதவண்ணம் இந்நகரம் மூன்று திசைகளில் மலைகளால் சூழப்பட்டுள்ளது. இதையே சங்கீதக்காரன், "பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாப்போல், கர்த்தர் இதுமுதல் என்றென்றைக்கும் தம்முடைய ஜனத்தைச் சுற்றிலும் இருக்கிறார்" என்கிறான் (சங். 125 : 2). அம்மலைகளுக்கிடையே நகரத்திற்குள்ளும் புறம்பும் பல பள்ளத்தாக்குகள் உள்ளன. நகரத்திற்குப் புறம்பே தென் மேற்குப் பகுதியிலிருக்கும் இன்னோம் பள்ளத்தாக்கு அவைகளில் ஒன்றாகும். 'பள்ளத்தாக்கின் வாசல்,' அலங்கத்தின் தென்மேற்கு முனையில், இன்னோம் பள்ளத்தாக்கிற்குச் செல்லும் வழியாக அமைந்திருந்தது. அலங்கத்தின் கிழக்கே அமையப்பெற்றிருந்த தண்ணீர் வாசலுக்கு எதிரே, அலங்கத்தின் மேற்குப் பகுதியில் இவ்வாசல் அமைந்திருந்தது. மலைகளிலும் அவற்றின் காடுகளிலும் பணிபுரிந்துவந்த மக்கள் இப்பகுதிகளில் குடியிருந்தார்கள். நகரத்தின் தாழ்வான பகுதியில் அமைந்திருந்த இப்பள்ளத்தாக்கின் வாசல், மனத்தாழ்மையைக் குறிக்கிறது.

'மனத்தாழ்மை' என்பது விலையேறப்பெற்ற ஒரு திவ்ய சுபாவமாகும். கர்த்தராகிய இயேசு பெத்லகேமின் ஏழ்மையான பிறப்பு முதல் கல்வாரியின் நீச மரணம் வரை தம்மை அதிகமதிகமாகத் தாழ்த்திக் கொண்டேபோனார். பரலோக மன்னன் இவ்வுலகில் அவதரிக்கும்படி ஒரு தச்சனின் குடும்பத்தைத் தெரிந்துகொண்டார் ! அவர் ஊழியம் செய்துவந்த நாட்களிலும் அவருக்குச் சொந்தமாக ஒரு படவோ, வீடோ இருக்கவில்லை; பேதுருவின் படவில் நின்று பிரசங்கித்தார். வரிப்பணம் செலுத்துவதற்குங்கூட அவரிடம் பணம் இருக்கவில்லை; ஒரு மீனின் வாயினின்று அப்போதைய தேவையை அவர் பெற்றார். தம் சீஷர்களுடன் பஸ்காவை ஆசரிக்கும்படி மற்றொருவனுடைய வீடே அவருக்கு ஆயத்தமாக்கப்பட்டது. இவ்விதம் ஒரு எளிமையான வாழ்க்கையைத் தெரிந்து கொண்ட அவர், "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" (மத். 8 : 20) என்று தம்முடைய தரித்திரமான நிலையைக் குறிப்பிடுகிறார். நம்மைத் தேவனிடத்தில் ஐசுவரியமுள்ளவர்களாக மாற்றும்படி அவர் நம் நிமித்தம் தரித்திரரானார் (II கொரி. 8 : 9). "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, ... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலி. 2 : 6 - 11). நாமும் மனத்தாழ்மையில் வளரும்படியாக அவர் நமக்கு மாதிரியைப் பின்வைத்துப் போயிருக்கிறார்.

"நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" என்று கர்த்தராகிய இயேசு கூறுகிறார் (மத். 11 : 29). "அவர் தம்மைத் தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது" (அப். 8 : 33). "பிதாவானவர் ... நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்" என்று அவர்தாமே உரைத்திருக்க (யோவான் 5 : 22), சர்வலோக நியாயாதிபதியாகிய அவர் தம்முடைய சிருஷ்டியாகிய பிலாத்துவின் முன் மௌனமாக நிற்கிறார் ! (மத். 27 : 13, 14). மனுஷர்

அனைவரும் நியாயந்தீர்க்கப்படும் மகா நியாயத்தீர்ப்பின் நாளிலே, தாம் வெள்ளைச் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்க, பிலாத்துவும் அம்மாந்தர்களில் ஒருவனாய்த் தம் முன் பணிந்து நிற்கப் போவதை அவர் நன்கு அறிந்திருந்தும், வேதவாக்கியங்கள் நிறைவேறத்தக்கதாக தாம் தாழ்த்தப்பட்ட அனைத்துப் பாதைகளுக்கும் தம்மை ஒப்புக்கொடுத்தார். “அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் (தேவனுக்கு) தம்மை ஒப்புவித்தார்” (I பேதுரு 2 : 23). இதினிமித்தம் அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டார்.

“தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்” (லூக்கா 14 : 11). சவுல் இஸ்ரவேலின் முதல் இராஜாவாகத் தெரிந்துகொள்ளப்பட்டபோது, அவன், தான் இஸ்ரவேலின் கோத்திரங்களிலே மிகவும் சிறியதான பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவனென்றும், அதின் குடும்பங்களில் தனது குடும்பம் மிகவும் எளியது என்றும் தன்னைத் தாழ்த்தினான் (I சாமு. 9 : 21). அவனை இராஜாவாக்கும்படி தேடினபோது, தான் அதற்குத் தகுதியற்றவன் என்ற உணர்வினால், தளவாடங்களுக்குள்ளே போய் அவன் தன்னை ஒளித்துக்கொண்டான். இவ்விதம் தன்னைத் தாழ்த்திய அவனைத் தேவன் உயர்த்தி, இஸ்ரவேலின் இராஜாவாக்கினார். எனினும் அவனுடைய இராஜ்யபாரம் ஸ்திரப்பட்ட பின்பு அவன் மனமேட்டிமையுள்ளவனாகி, தன்னை இராஜாவாக அபிஷேகம் செய்த தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல் சுயமாகக் கிரியை செய்தான் (I சாமு. 13 : 9 ; 15 : 9). இதனால் சாமுவேல் மனவேதனையுடன், “நீர் உம்முடைய பார்வைக்குச் சிறியவராயிருந்தபோது அல்லவோ இஸ்ரவேல் கோத்திரங்களுக்குத் தலைவரானீர்; கர்த்தர் உம்மை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணுவித்தாரே” (I சாமு. 15 : 17) என்று கூறினான். அவனுக்குச் சிறிது காலம் கொடுக்கப்பட்டும் அவன் தன்னைத் திருத்திக் கொள்ளாததினிமித்தம் அவனுடைய வாழ்நாளெல்லாம் ஒரு பொல்லாத ஆவி அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. கர்த்தரும் அவனை இராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார்.

ஆனால் தாவீதோ தன்னுடைய தாழ்வின் காலங்களில் மட்டுமல்ல, தான் உயர்த்தப்பட்டு, சமஸ்த இஸ்ரவேலின் மேலும் இராஜாவாயிருந்த நாட்களிலும், கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த தன்னைத் தேவன் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலை மேய்ப்பதற்காகத் தெரிந்துகொண்டதை எப்போதும் நினைவுகூர்ந்தான். “தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்?” என்று அவன் கூறுகிறான் (I நாளா. 17 : 16). கடைசிவரை தாழ்மையில் தன்னைக் காத்துக்கொண்ட அவனைத் தேவன் கனப்படுத்தி, அவனுடைய இராஜ்ய பாரத்தை ஸ்திரப்படுத்தி, ‘என் இருதயத்துக்கு ஏற்றவன்’ என்று அவனைக் குறித்துச் சாட்சியும் கொடுத்தார். தேவகுமாரனாகிய இயேசு, ‘தாவீதின் குமாரன்’ என்றழைக்கப்படும் அளவிற்கு, அற்பமான இடைச்சிறுவனாயிருந்த அவனைத் தேவன் மேன்மைப்படுத்தினார்.

இஸ்ரவேலின் இராஜாக்களில், “தன் மனைவியாகிய யேசபேல் தூண்டிவிட்டபடியே, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய, தன்னை விற்றுப்போட்ட ஆகாபைப்போல ஒருவனுமில்லை” என வேதாகமம் கூறுகிறது (I இராஜா. 21 : 25). என்றாலும் அவனுடைய அக்கிரமங்களினிமித்தம் அவனுக்கு நியமிக்கப்பட்ட தேவநியாயத்தீர்ப்பைக் குறித்து அவன் கேள்விப்பட்டபோது, உபவாசம் பண்ணி, இரட்டிலே படுத்துத் தாழ்மையாய் நடந்து கொண்டான். ஆகவே தேவன் அவனுக்கு வரவிருந்த நியாயத்தீர்ப்பைத் தள்ளி வைத்தார். “ஆகாப் எனக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினதைக் கண்டாயா? அவன் எனக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்துகிறபடியினால், நான் அவன் நாட்களில் அந்தப் பொல்லாப்பை வரப்பண்ணாமல், அவன் குமாரன் நாட்களில் அதை அவன் வீட்டின்மேல் வரப்பண்ணுவேன்” என்று கர்த்தர் தீர்க்கதரிசியை நோக்கிக் கூறுகிறார் (வச. 29). எப்படிப்பட்ட பாவியும் தன்னைத் தாழ்த்தும்போது, தேவனிடத்தில் அவனுக்கு இரக்கம் கிடைக்கிறது. என்றாலும், தன்னைத் தாழ்த்தி தேவனிடத்தில் திரும்பிய அவன், அந்நிலவரத்தில் நிலைத்திராமல், தேவனைவிட்டு விலகி மீண்டும் பாகாலைப் பின்பற்றி, கர்த்தரின் தீர்க்கதரிசியைத் துன்புறுத்தினான். இதனால் தேவன் சொல்லியிருந்த நியாயத்தீர்ப்பு அவன்மேல் வந்தது (I இராஜா. 22 : 27, 38). மாறாக, நினிவே மக்கள் தங்கள் பாவங்களினிமித்தம் தங்களுக்குத் தேவனால் நிர்ணயிக்கப்பட்ட கொடும் நியாயத்தீர்ப்பைக் குறித்து அறிந்தபோது, தங்களைத் தாழ்த்தித் தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினபடியினால் தங்களுக்கு வரவிருந்த கடும் தண்டனைக்குத் தப்பினர் !

ரோமருக்கு எழுதிய நிருபத்தின் விளக்கவுரை

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

“ஆகையால் என்னசொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே” (6 : 1).

முந்தின அதிகாரத்தில் நாம் தேவநீதியை அடைந்துகொள்வதற்காக தேவகிருபைக்குட்பட்டிருக்கிறோம் என்றும், பாவம் பெருகின இடத்தில் தேவனுடைய கிருபையும் பெருகுகிறது என்றும் சொல்லப்பட்டிருப்பதினால் பாவம் பெருகும்போதுதான் கிருபையும் பெருகுகிறது என்பது பொரு

ளல்ல. நியாயப்பிரமாணத்தின்படி பாவம் இன்னதென்று ஜனங்கள் அறிந்திருந்தாலும், நியாயப்பிரமாணம் பாவத்தை மேற்கொள்ள ஒரு வல்லமையை அளிப்பதில்லை. எனவே, அவர்கள் நியாயப்பிரமாணத்தை மீறி, பாவத்திற்குட்பட்டு, ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகின்றனர்; ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பாவ மன்னிப்பும், இனிப் பாவஞ்செய்யக்கூடாதபடிக்கு உள்ளான மனுஷனில் ஒரு வல்லமையும் கிருபையும் பெருகுகிறது என்பதே இதன் பொருள். இதன் சுருக்கமாவது, இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தின் மூலமாய்த்தான் கிருபை நமக்குப் பெருகுகிறது என்பதே. ஆகையால்தான் இதைத் தவறாக விளங்கிக்கொள்ளக் கூடாதென்பதற்காகவே “கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா?” என்ற கேள்வியை அப். பவுல் கேட்கிறார்.

“பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?” (6 : 2, 3).

கிருபையானது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தின் மூலமாய் ஞானஸ்நானத்தில் நம்மைப் பாவத்திற்கு மரித்தவர்களாக்கிவிடுகிறது. இல்லாவிட்டால் பாவத்திற்கு நாம் மரித்து விட்டோம் என்கிற ஒரு விசுவாசத்தை அது நமக்குள் சிருஷ்டிக்கிறது. இந்த விசுவாசம் நமக்குள் வரும்போது நாம் மறுபடியும் பாவங்களைச் செய்யக்கூடாதபடிக்கு மரணத்தைப்போல் ஒரு விசுவாசம் நமக்குள் கிரியை செய்கிறது. உதாரணமாக, பயங்கர குடிப்பழக்கமுடைய ஒருவன் மரித்துப்போனால் அவன் எவ்வளவு கொடிய குடிப்பழக்கமுடையவனாயிருந்தாலும் அவன் ஜீவன் அவனைவிட்டுப் போய்விட்டபடியினால் அவனுக்கு இனிமேல் அந்த மதுபானத்தைப் பற்றிய வாஞ்சையோ, சோதனையோ உண்டாவதில்லை. ஏனெனில் மரணத்தின் மூலமாய் அந்த வாஞ்சையும் சோதனையும் நீக்கப்பட்டாயிற்று. ஆனால் இப்படிப்பட்ட பாவங்களைப் பற்றிய வாஞ்சைகளைத் தன் ஆத்துமாவில் கொண்டிருக்கும் ஒருவன் பாவங்களை விட்டுவிடும்படி எவ்வளவு தான் முயற்சி செய்தாலும், ஒரு ஜெய ஜீவியம் செய்ய முடியாமற்போகிறது. பாவமென்பது ஒருபோதும் மரிப்பதில்லை. ஆனால் இந்தப் பாவத்திற்கு நம்மிலே ஒரு மரணத்தை நாம் உண்டாக்க வேண்டும்.

மரணமென்று நாம் கூறும்போது, ஒரு ஆள் மரித்து, அவரை அடக்கம் செய்தபின்னரே, அவர் மரித்தார் என்ற உண்மை உறுதிப்படுகிறது. இந்த அதிகாரத்தை நாம் வாசிக்கும்போது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய விசுவாசத்தினாலும், நாம் நம்முடைய பாவங்களை மனஸ்தாபத்தோடே அறிக்கை செய்வதினாலும், அதன் பின்னர் அவருடைய அடக்கத்திற்கொப்பனையான ஞானஸ்நானத்தில் நம்மையும் ஒப்பனையாக்கிக் கொள்வதினாலும் பாவத்திற்கு மரித்து அடக்கம்பண்ணப்படுகிற அனுபவத்தை நாம் பெற்றுக்கொள்கிறோம். ஆகவேதான், “கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?” என்று அப். பவுல் கேட்கிறார்; அல்லது அவருடைய அடக்கத்திற்கொப்பனையான ஞானஸ்நானத்தில் நாமும் நம்மை ஒப்பனையாக்கிக்கொண்டிருப்பதை நினைவுகூர வேண்டுமென்பதே இதன் பொருள்.

“மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்” (6 : 4).

ஒருமுறை நாம் இப்படி மரித்து அடக்கம்பண்ணப்பட்ட பிற்பாடு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பப்பட்டதுபோல நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் ஒரு உயிர்த்தெழுதல் உண்டென்பதை இவ்வசனத்திலிருந்து நாம் விளங்கிக்கொள்கிறோம். இவ்விடத்தில் ‘பிதாவின் மகிமை’ என்று கூறப்பட்டிருப்பது, பரிசுத்தஆவியினுடைய அபிஷேகத்தையே குறிக்கும். ஆத்துமாவில் ஓர் உயிர்த்தெழுதலின் அனுபவம் பரிசுத்தஆவியின் அபிஷேகத்தின் மூலமாகவே நமக்குக் கிடைக்கிறது. மரணம், அடக்கம் என்பவைகளினால், நாம் இதுவரை ஜீவித்துவந்த நம்முடைய பழைய ஜீவியம் ஒழிந்துபோனபின்பு, பரிசுத்தஆவியினுடைய அபிஷேகத்தினால் நாம் உயிர்ப்பிக்கப்பட்டு ஒரு புதிய ஜீவியம் செய்யத் தொடங்குகிறோம். ‘நடந்துகொள்ளும்படிக்கு’ என்று கூறப்பட்டிருப்பதின் கருத்து, அபிஷேகத்தில் நாம் இந்தப் புதிய ஜீவியத்தைத் தொடங்கி, இயேசுகிறிஸ்துவின் பூரண சாயலை அடைந்துகொண்டே வருகிறோம் என்பதுதான். இதை ஒரு புதிய சிருஷ்டி என்றும் நாம் சொல்லலாம். நாம் புதிதான சிருஷ்டிகளாகும்படிக்கு முதலாவது நமக்குள்ளிருக்கும் பழைய சிருஷ்டிக்கு ஒரு முடிவுண்டாக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவினுடைய மரணம், அடக்கம்பண்ணப்படுதல் என்பவைகளுக்கு நாம் நம்மை ஒப்பாக்கிக்கொள்வதினால் மாத்திரம் நாம் இந்தப் பழைய சிருஷ்டிக்கு மரிக்கிறோம். பழைய சிருஷ்டி ஒழிந்த பின்னரே பரிசுத்தஆவியின் மூலமாய்ப் புதிய சிருஷ்டியின் வேலை நமக்குள் தொடங்குகிறது. ஆகவேதான் II கொரிந்தியர் 5 : 17 - இல் ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாய் அல்லது புது சிருஷ்டிப்பாயிருக்கிறான் அல்லது பரிசுத்த ஆவியின் மூலமாய்ப் புதிய சிருஷ்டியாகிய இயேசுகிறிஸ்துவின் சுபாவத்திற்குள் கொண்டுவரப்படுகிறான் என்றும், “பழையவைகள் ஒழிந்துபோயின” என்பதினால் விழுந்து போன மனுஷனுக்குரிய எல்லா சுபாவங்களும் ஜீவியமும், அவனுக்குரிய ஞானம், அறிவு என்பவைகள் யாவும் ஒழிக்கப்பட்டாயிற்று என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

“ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்” (6 : 5).

அவருடைய மரணத்திற்கு மறுபகுதியான அடக்கம்பண்ணப்படுதலுக்கு நம்மை ஒப்பனையாக்கிக்கொள்ளும் முறையையே ஞானஸ்நானம் என்ற சத்தியத்தில் நாம் காண்கிறோம். இக்காரணத்தைக்கொண்டே ஞானஸ்நானம் என்பது வெறும் சடங்காச்சாரமல்ல அல்லது வேறொரு மார்க்கத்திலுள்ளவனை நம்முடைய மார்க்கத்தில் சேர்த்துக்கொள்ளும்படியாய்க் கொடுக்கப்படுவதுமல்ல. ஆனால் இது தேவனுடைய ஆலோசனையாய், பழைய சிருஷ்டிக்கு முடிவுண்டாக்கும் ஒரு அனுபவமாய், கிறிஸ்துவின் மரணம், அடக்கம் இவைகளோடு நம்மை ஒப்பனையாக்கும் ஒரு அனுபவமுமாய்க் காணப்படுகிறது. இதற்கு வேறெவ்வித விளக்கமும் கொடுக்க இயலாது. இந்த வசனத்தில் இன்னொரு முக்கியமான விஷயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். “அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால்” என்று எழுதப்பட்டிருக்கிறது. இதன் கருத்து, மரணம், அடக்கம் என்பவைகள் ஒரு சாயலாய் இருக்கிறபடியால் இந்த அனுபவங்களை நம்முடைய ஜீவியத்தில் அடைந்துகொள்ளும்படி அதற்கு நம்மை ஒப்பனையாக்கிக்கொண்டோம் என்று நாம் கண்டோம். அவ்விதமாகவே ‘அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்’ என்றும் இங்கு எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கு எழுதப்பட்டிருக்கும் ‘சாயல்’ என்ற வார்த்தை மூலபாஷையில் இல்லை (ஆங்கில வேதாகமத்தில் அது சாய்வு எழுத்தில் எழுதப்பட்டிருப்பதைக் காண்க). காரணம், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் உள்ளான மனுஷனில் உயிர்த்தெழுதலின் அனுபவத்தை அடைந்துகொள்வது என்பது ஒரு சாயலாயிருக்கும் அனுபவமோ அல்லது அதற்கு ஒப்பனையாக்கிக்கொள்ளும் அனுபவமோ அல்ல, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் உயிர்ப்பிக்கப்படுவது என்பது உயிர்த்தெழுதலின் வல்லமையை நம் உள்ளான மனுஷனில் நாம் பெற்றுக்கொள்ளுகிற ஓர் உண்மையான அனுபவமாகும்.

கிறிஸ்து, அவர்தம் அப்போஸ்தலரின் உபதேசங்கள்
நாங்களும் அதையே விசுவாசிக்கிறோம்

இயேசுகிறிஸ்து , அவரது கன்னிகைப் பிறப்பு, அவரது கிரியைகள், அவரது போதனைகள், அவர் சிலுவையிலறையப்பட்டது , அவரது உயிர்த்தெழுதல், அவர் பரத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது, அவருடைய இரண்டாம் வருகை, ஆயிர வருட அரசாட்சி, வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு, நித்தியம் — இவற்றை நாங்கள் பிரசங்கிக்கிறோம். பின்வருவன கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் உபதேசங்களாகும்.

திரித்துவம் : தேவன் ஒருவரே ; எனினும் அவர் மூன்று ஆள்தத்துவங்களுடையவர் — பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்தஆவியானவராகிய தேவன். அவர்கள் ஒருவருக்கொருவர் சமமானவர்கள் ; நித்தியமாய் நிலைத்திருப்பவர்கள். திரித்துவ தேவன் பேரிலுள்ள விசுவாசம் சபையின் முதுகெலும்பாகும் (ஏசாயா 48 : 16 ; I யோவான் 5 : 7).

மறுபடியும் பிறத்தல் : (1) பாவ உணர்வு (அப். 2 : 37) (2) செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன் பேரில் வைக்கும் விசுவாசம் (அப். 2 : 38 ; எபி. 6 : 1) (3) பாவ அறிக்கை (I யோவான் 1 : 9) (4) தேவனோடும் மனுஷரோடும் ஒப்புரவாகுதல் (II கொரி. 5 : 20 ; மத். 5 : 21-26) (5) திருப்பிக்கொடுத்தல் (லூக்கா 19 : 8) (6) நீதிமான்களாக்கப்படுதல் (ரோமர் 5 : 8, 9) (7) சுத்திகரிக்கப்படுதல் (I யோவான் 1 : 7).

ஞானஸ்நானம் : பரிசுத்தஆவியின் அபிஷேகம் பெற்ற ஊழியர் மூலம் திரித்துவ தேவனுடைய நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டும் (மத். 28 : 19). இது மறுபடியும் பிறந்த ஒரு தேவபிள்ளைக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது (மாற்கு 16 : 16 ; அப். 19 : 5).

தெய்வீக சுகம் : கர்த்தராகிய இயேசு நம் வியாதிகளையும் பெலவீனங்களையும் சிலுவையில் சுமந்தார் (மத். 8 : 17 ; I பேதுரு 2 : 24). அவர், தம் சீஷருக்கு வியாதிகளைக் குணமாக்க அதிகாரங் கொடுத்தார் (மாற்கு 3 : 15). தெய்வீக சுகம் பிள்ளைகளின் அப்பமாகும் (மத். 15 : 26).

பரிசுத்தஆவியின் அபிஷேகம் : இது உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப் படுதலாகும் (லூக்கா 24 : 49). இதில், திரித்துவ தேவன் நமக்குள்ளே வாசம்பண்ண வருகிறார் (யோவான் 14 : 16, 20) ; நம் இருதயம் தேவனுடைய அன்பினால் நிரப்பப்படுகிறது (ரோமர் 5 : 5). ஆவியானவர் தந்தருளும் வரத்தின்படியே அந்நிய பாஷைகளில் பேசுவது இதற்கு அடையாளமாயிருக்கிறது (அப். 2 : 4).

வேறுபிரிதல் : மாறுபாடுள்ள சந்ததியை விட்டு நம்மை நாம் வேறுபிரித்துக் கொள்ள வேண்டும் (அப். 2 : 40).

(1) ஜீவியத்தில் மாறுபாடுள்ளவர்கள் (II கொரி. 6 : 14-18 ; பிலி. 2 : 15).

(2) உபதேசத்தில் மாறுபாடுள்ளவர்கள் (கலா. 1 : 7 ; I தீமோ. 4: 1 -3 ; II யோவான் 10).

பூரண பரிசுத்தமாகுதல் : நாம் நம் ஆவி ஆத்துமா சரீரம் இவற்றில் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (I தெச. 5 : 23).

(1) இயேசுவின் இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல் (எபி. 13 : 12).

(2) தேவனுடைய வசனத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல் (யோவான் 17 : 17).

(3) பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுதல் (ரோமர் 15 : 15).

ஜெய ஜீவியம் : இது நம் ஜீவியத்திலும் ஊழியத்திலும் உலகம், மாம்சம், பிசாசு இவற்றின் மீது பூரண ஜெயமெடுப்பதைக் குறிக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு எல்லாவற்றையும் சுதந்தரிக்கும் வாக்குத்தத்தம் அருளப்படுகிறது (வெளி. 21 : 7).

பிரதிஷ்டையுள்ள ஊழியம் : தேவன் சபையில் கிறிஸ்துவின் ஈவுகள் என அழைக்கப்படும் ஐந்துவித உத்தியோகஸ்தரை ஏற்படுத்தியிருக்கிறார் (எபே. 4 : 11 - 13). அவர்கள் மெல்கிசேதேக்கின் முறைமைக்குட்பட்டவர்கள் (லூக்கா 14 : 26, 27, 33 ; எபி. 7 : 1 - 3). அவர்களுக்குப் பரலோக ராஜ் யத்தின் இரகசியங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன (மத். 13 : 11). அவர்கள் கிறிஸ்துவாகிய பிரதான மூலைக்கல்லின்மீது அஸ்திபாரக் கற்களாய் இருக்கின்றனர் (எபே. 2 : 20 - 22).

பூரணம் : இது மனுஷனைக் குறித்துத் தேவன் கொண்டுள்ள முழுத் திட்டமாகும். இருப்பினும், கிறிஸ்து இயேசுவிலுள்ள இந்தப் பூரணத்தை அடைந்துகொள்ளுவதற்கான சிலாக்கியம் புதிய ஏற்பாட்டு சபைக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது (மத். 5 : 48 ; கொலோ. 1 : 28).

எடுத்துக்கொள்ளப்படுதல் : கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கிறிஸ்துவுக்குள் ஜீவிப்பவர்களுமான பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் திடீரென பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதே எடுத்துக்கொள்ளப்படுதல் என்று அறியப்படுகிறது. இது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையில் நடைபெறும் (I தெச. 4 : 16, 17).

உபத்திரவமும் மகா உபத்திரவமும் : இது, இரு சமமான பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட ஏழு வருட காலமாகும். இதில் அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியின் கீழ், முதல் பகுதியில் சபையில் கைவிடப்பட்டவர்களும், இரண்டாம் பகுதியில் யூதரும் உபத்திரவப்படுத்தப்படுவார்கள் (வெளி. 12 : 6, 13 - 17; தானி. 9 : 27 ; 12 : 7).

உயிர்த்தெழுதல் : உயிர்த்தெழுதலின் பல்வேறு வரிசைகள் கீழே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. முதல் வரிசை கிறிஸ்து. அது ஏற்கனவே நடந்தாயிற்று. அடுத்த நான்கு வரிசைகள் ஆயிர வருட அரசாட்சிக்கு முன்பும், பிந்திய இரு வரிசைகள் ஆயிர வருட அரசாட்சிக்குப் பின்பும் நடைபெறுகின்றன (I கொரி. 15 : 23). உயிர்த்தெழுதலின் முதல் ஐந்து வரிசைகளும் சேர்ந்து முதலாம் உயிர்த்தெழுதல் என்று அழைக்கப்படுகிறது (வெளி. 20 : 6).

(1) முதற்பலனான கிறிஸ்து (I கொரி. 15 : 23) (2) புதிய ஏற்பாட்டின் சபை (I கொரி. 15 : 23) (3) உபத்திரவ கால இரத்தசாட்சிகள் (வெளி. 14 : 15) (4) இரு சாட்சிகள் (வெளி. 11 : 12) (5) பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும் பொதுவான இரத்த சாட்சிகளும் (வெளி. 11 : 18,19) (6) இரட்சிக்கப் பட்டவர்கள் (யோவான் 5: 28, 29) (7) துன்மார்க்கர் அல்லது இரட்சிக்கப்படாதவர்கள் (யோவான் 5 : 28, 29 ; வெளி. 20 : 12 - 15).

ஆயிர வருட அரசாட்சி : இது, முதலாம் உயிர்த்தெழுதலுக்குட்படும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அவருடைய பரிசுத்தவான்களும் இப்பூமியில் ஆளுகை செய்யும் ஆயிர வருட காலமாகும். இந்தக் காலத்தில் பிசாசு கட்டப்பட்டிருப்பான் (வெளி. 20 : 2-4).

பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு : சமுத்திரம், மரணம், பாதாளம் ஆகியவை தங்கள் மரித்தோரை ஒப்புவிக்கும் (வெளி. 20 : 13). மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவன் அவரவர் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயந்தீர்ப்பார் (வெளி. 20 : 11, 12). நீதிமான்கள் (செம்மறியாடுகள்) நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பார்கள். துன்மார்க்கர் (வெள்ளாடுகள்) அவியாத அக்கினியில் தள்ளப்படுவார்கள் (மத். 25 : 34, 41).

நித்தியம் : பல்வேறு நித்திய வாசஸ்தலங்கள் :

(1)	**சீயோன்** (வெளி. 14 : 1)	- ஜெயங்கொண்ட 1,44,000 தேவ ஊழியர்
(2)	**புதிய எருசலேம்** (வெளி. 21 : 2)	- ஜெயங்கொண்ட விசுவாசிகள்
(3)	புதிய வானம் (வெளி. 21 : 1)	- பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும் இரத்தசாட்சிகளும்
(4)	புதிய பூமி (வெளி. 21 : 1)	- இரட்சிக்கப்பட்டவர்கள்
(5)	அக்கினிக்கடல் (வெளி. 20 : 10, 14 ; 21 : 8) (இரண்டாம் மரணம்)	- துன்மார்க்கருடன் மரணமும் பாதாளமும் சாத்தானும் அவனுடைய சகல சேனைகளும்.

****

நீ செலுத்தும் பலி எப்படிப்பட்டது?

தேவன் தம்முடைய ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி, பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்கு அவர்களைக் கொண்டுபோய் சேர்ப்பதாய் அவர்களுக்கு வாக்குப் பண்ணி, வனாந்தர பாதை வழியாய் அவர்களை வழிநடத்திவந்தார். அவர் தம்முடைய ஓங்கிய புயத்

தினாலும் பலத்த கையினாலும் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார்; கடலைப் பிளந்து அவர்களைக் கடக்கப்பண்ணி, ஜலத்தைக் குவியலாக நிற்கும்படி செய்தார்; பகலிலே மேகத்தினாலும், இராமுழுதும் அக்கினி வெளிச்சத்தினாலும் அவர்களை வழிநடத்தினார். வனாந்தரத்திலே கன்மலைகளைப் பிளந்து, மகா ஆழங்களிலிருந்து தண்ணீரை அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தார்; கன்மலையிலிருந்து நீரோட்டங்களைப் புறப்படப்பண்ணி, தண்ணீரை நதிபோல ஓடிவரும்படி செய்தார் (சங். 78 : 13 - 16).

"அவர் உயரத்திலுள்ள மேகங்களுக்குக் கட்டளையிட்டு, வானத்தின் கதவுகளைத் திறந்து, மன்னாவை அவர்களுக்கு ஆகாரமாக வருஷிக்கப்பண்ணி, வானத்தின் தானியத்தை அவர்களுக்குக் கொடுத்தார். தூதர்களின் அப்பத்தை மனுஷன் சாப்பிட்டான்; அவர்களுக்கு ஆகாரத்தைப் பூரணமாய் அனுப்பினார்" (சங். 78 : 23 - 25). எனினும் அவர்கள் வனாந்தரத்தில் இரண்டகம் பண்ணினார்கள் (எசே. 20 : 8, 13). தேவனோ, தம்முடைய ஜனங்களை ஆடுகளைப் போல புறப்படப்பண்ணி அவர்களை வனாந்தரத்திலே மந்தையைப் போல கூட்டிக்கொண்டுபோய், ஜாதிகளைத் துரத்தி, தேசத்தை நூல் போட்டுப் பங்கிட்டு, அவர்களுடைய கூடாரங்களில் இஸ்ரவேலின் கோத்திரங்களைக் குடியேற்றினார் (சங். 78 : 52, 55).

வனாந்தரத்திலே தம்முடைய ஜனத்தின் மத்தியிலே வாசம்பண்ண ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்கும்படி தேவன் மோசேக்குக் கட்டளையிட்டார். மலையில் தனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே இஸ்ரவேலருடைய மனப்பூர்வமான காணிக்கைகளைக் கொண்டு மோசே ஒரு ஆசரிப்புக் கூடாரத்தைச் செய்து முடித்தான். தம்முடைய ஜனங்கள் தமக்கு ஆராதனை செய்யும் படிக்கு எல்லாவிதமான நியமங்களையும் பலிப்பிரமாணங்களையும் தேவனே அவர்களுக்குச் சொல்லிக்கொடுத்தார். நியாயப்பிரமாணத்தின்படி அவர்கள் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தினார்கள் (எபி. 8 : 3, 5). தேவனும் அவர்கள் பலிகளை அங்கீகரித்து அவர்களை ஆசீர்வதித்து வந்தார் (லேவி. 9 : 22 - 24). கானான் தேசத்தில் பிரவேசித்த பிற்பாடும் இப்படியே அவர்கள் தேவனை ஆராதித்துவந்தார்கள்.

சாலொமோன் தன் நாட்களிலே தேவனுக்கென்று ஒரு பெரிய ஆலயத்தைக் கட்டிமுடித்தான். "கர்த்தர் இரவிலே சாலொமோனுக்குத் தரிசனமாகி: நான் உன் விண்ணப்பத்தைக் கேட்டு, இந்த ஸ்தலத்தை எனக்குப் பலியிடும் ஆலயமாகத் தெரிந்துகொண்டேன்" (II நாளா. 7 : 12) என்றார். இந்த ஆலயத்திலும் தேவனுடைய ஜனங்கள் கர்த்தருக்குத் தூபங்காட்டி தகன பலிகளைச் செலுத்தித் தேவனை ஆராதித்துவந்தார்கள் (II நாளா. 2 : 4). பின்னாட்களில் அவர்கள் தேவனுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து அக்கிரமத்தில் ஜீவித்து பொல்லாதவர்களின் சந்ததியாராகவும், கேடு உண்டாக்குகிற புத்திரருமாய் இஸ்ரவேலின் பரிசுத்தருக்கு கோபமுண்டாக்கி, கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போனார்கள் (ஏசாயா 1 : 4). இதைக் குறித்து, "நான் பிள்ளைகளை வளர்த்து ஆதரித்தேன்; அவர்களோ எனக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்கள்" (வச. 2) என்று கர்த்தர் சொல்லி துக்கப்படுவதைக் குறித்து நாம் வாசிக்கிறோம். தேவஜனங்கள் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போயிருந்தாலும் அவருக்குப் பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்தி, தூபங்காட்டி வழக்கம்போல அவரை ஆராதித்துவந்தார்கள். ஆனால் தேவன் அவர்களுடைய ஆராதனையில் பிரியப்படவில்லை. "உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்துக்கு ... இனி வீண் காணிக்கைகளைக் கொண்டுவரவேண்டாம்; தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாயிருக்கிறது" என்று கர்த்தர் சொன்னார் (வச. 11 - 13). ஆகவே, "உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்; ... தீமைசெய்தலை விட்டு ஓயுங்கள்; நன்மைசெய்யப் படியுங்கள்" என்று தேவன் அவர்களை எச்சரிப்பதை நாம் பார்க்கிறோம் (வச. 16, 17). அவர்கள் தங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்பாமலும், தங்களைச் சுத்திகரித்துக்கொள்ளாமலும் தீமை செய்துவந்தனர். அதே சமயத்தில் அவர்கள் பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்தி அவரை ஆராதிப்பது அவருக்குப் பிரியமில்லாமல் இருந்தது. இதை மனதில் வைத்து தேவன், "வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி; நீங்கள் எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டது? நான் தங்கியிருக்கும் ஸ்தலம் எப்படிப்பட்டது?" என்று ஏசாயா 66 - ஆம் அதிகாரம் முதலாம் வசனத்தில் கூறிவிட்டு, மூன்றாம் வசனத்தில், "மாட்டை வெட்டுகிறவன் மனுஷனைக் கொல்லுகிறவனாகவும், ஆட்டைப் பலியிடுகிறவன் நாயைக் கழுத்தறுக்கிறவனாகவும், காணிக்கையைப் படைக்கிறவன் பன்றி இரத்தத்தைப் படைக்கிறவனாகவும், தூபங்காட்டுகிறவன் விக்கிரகத்தை ஸ்தோத்திரிக்கிறவனாகவும் இருக்கிறான்" என்று கூறுகிறார்.

இது ஏசாயாவினால் கி. மு. 698 - இல் தேவனுடைய ஜனங்களுக்கு உரைக்கப்பட்ட தீர்க்கதரிசன வசனமாகும். அந்நாட்களில் எருசலேமிலே தேவனுடைய ஆலயம் இருந்தது. அப்படியானால் "நீங்கள் எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டது" என்று தேவன் ஏன் கேட்கவேண்டும்? எனவே இது புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஜீவிக்கிற நம்மிடம் கேட்கப்படும் கேள்வியாகும். தேவனுடைய ஜனங்கள் தங்கள் பார்வையில் தேவனுக்குப் பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்தி, தூபம் காட்டுவதாக அவர்களுக்குத் தோன்றினாலும் அவைகள் தேவனுடைய பார்வையில் நியாயப்பிரமாணத்தை மீறுவதாகவும், அருவருப்பானவை

களாகவும் தோன்றின. ஏசாயா 66 : 3 - இல் நம்முடைய ஜீவியத்திற்குத் தேவையான சில ஆவிக்குரிய கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன. அவற்றை ஒவ்வொன்றாய் நாம் ஆராய்வோம்.

1. மாட்டை வெட்டுகிறவன் மனுஷனைக் கொல்லுகிறவனாய் இருக்கிறான்:

"கொலை செய்யாதிருப்பாயாக" என்று நியாயப்பிரமாணம் கூறுகிறது. தேவனுக்குப் பிரியமில்லாத ஜீவியம் செய்துகொண்டு மாட்டைப் பலியிடுகிறவன் தேவனுடைய பார்வையில் மனுஷனைக் கொல்லுகிறவனாக இருக்கிறான். தேவனுடைய ஜனங்களின் ஆதி நிலவரத்தைக் குறித்து உண்மையுள்ள நகரம் என்றும், அவர்களுடைய பின்மாற்ற நிலவரத்தைக் குறித்து அதின் குடிகள் கொலை பாதகர் என்றும் தேவன் சொல்லுகிறார் (ஏசாயா 1 : 21). கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தினார். அதாவது, அவருடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே நாம் எழுத்துக்குரிய பலிகளைச் செலுத்த வேண்டிய அவசியமில்லை. நம்முடைய சரீரங்களையே தேவனுக்குப் பிரியமான ஜீவ பலியாய் நாம் ஒப்புக்கொடுக்க வேண்டும் என்றும், "இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" என்றும் அப். பவுல் ரோமர் 12 : 1 - இல் கூறுகிறார். நம்முடைய சரீரங்களை ஜீவபலியாய் ஒப்புக்கொடுத்தால், நம்முடைய இருதயத்தின் நிலவரத்தைக் கர்த்தர் கண்டு அதற்கேற்றாற்போல் நம்மை அங்கீகரிப்பார். நம்முடைய இருதயத்தில் கசப்போ கோபமோ பகையோ வைத்துக்கொண்டு நம்முடைய சரீரங்களைப் பலியாய் ஒப்புக்கொடுத்தாலும் (தேவனை ஆராதித்தாலும்) தேவனுடைய பார்வையில் நாம் மனுஷ கொலைபாதகராய் இருப்போம் (I யோவான் 3 : 15).

இதைக் குறித்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், "கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான். ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து" (மத். 5 : 21 - 24) என்று கூறியிருக்கிறார். இதிலிருந்து காணிக்கை முக்கியமல்ல, சகோதர அன்பே முக்கியம் என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வலியுறுத்துகிறார். நம்முடைய இருதயத்தில் ஒருவர் மேலும் கசப்போ பகையோ வைக்காமல், கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மை மன்னித்ததுபோல நாமும் ஒருவருக்கொருவர் மன்னிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் (எபே. 4 : 32). நம்முடைய சகோதரரிடத்தில் நாம் அன்புகூர்ந்தால் நாம் ஒளியிலே நிலைகொண்டு இடறல் இல்லாத ஒரு ஜீவியம் செய்யலாம். ஆதலால், பிரியமான பிள்ளைகளைப் போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல நாமும் அன்பிலே நடந்துகொள்வோமாக (எபே. 5 : 1, 2).

2. ஆட்டைப் பலியிடுகிறவன் நாயைக் கழுத்தறுக்கிறவனாய் இருக்கிறான்:

நாய் பின்மாற்றத்தின் நிலவரத்தைக் காட்டுகிறது. பொதுவாக நாய்கள் நன்றாய் சாப்பிட்டபிறகு, சாப்பிட்டதைக் கக்கிவிட்டு அதையே தின்னும்படி திரும்புவது வழக்கம். அதுபோல தேவனுடைய பிள்ளைகள் சிலர் இரட்சிக்கப்பட்டபோது, அல்லது அபிஷேகம் பெற்றபோது தாங்கள் முன்பு செய்து வந்த பாவங்களையும், முன்பு அனுபவித்த அநித்தியமான பாவ சந்தோஷங்களையும், சிற்றின்பங்களையும், லௌகீக இச்சைகளையும், மற்றும் உலகப் பிரகாரமான ஆடம்பரங்கள், உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதல் ஆகிய எல்லாவற்றையும் வெறுத்து, 'லோகம் வேண்டாம், ஒன்றும் வேண்டாம், இயேசு போதும்' என்று புதிய தீர்மானங்கள் செய்து ஜீவித்தாலும் சோதனைகள் வரும்போது தாங்கள் விட்டுவிட்ட காரியங்களையே மறுபடியும் எடுக்கிறபடியினால் அப்படிப்பட்டவர்களைக் குறித்தே, "நாயானது தான் கக்கினதைத் தின்னும்படி திரும்புவதுபோல" என்று நாம் வாசிக்கிறோம் (நீதி. 26 : 11; II பேதுரு 2 : 22).

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தை விட்டுக் கானானை நோக்கிப் பிரயாணம் செய்தாலும், அவர்களில் பலர் தாங்கள் எகிப்திலே கிரயம் இல்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும், கொம்மட்டிக் காய்களையும், கீரைகளையும், வெண்காயங்களையும், வெள்ளைப் பூண்டுகளையும் நினைத்தார்கள் (எண். 11 : 5). ஏனென்றால் அவர்களுடைய சரீரங்கள் வனாந்தரத்திலே இருந்தாலும், இருதயம் எகிப்திலே காணப்பட்டது. இன்றைக்கும் அபிஷேகம் பெற்றவர்கள் அபிஷேகத்தினால் உன்னதங்களிலே கிறிஸ்துவுடன்கூட இருந்தாலும், சிலர் பூமிக்குரியவைகளை நாடித்தேடி உலகத்திலும் உலகத்தில் உள்ளவைகளிலும் அன்புகூர்ந்துகொண்டிருக்கிறார்கள். தாங்கள் விட்டுவந்த தேசத்தை மனதிலும் நினையாமல், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளையே நாடிச் சென்று விசுவாசத்தோடே மரித்த முற்பிதாக்களைக் குறித்து நாம் எபிரெயர் 11 : 13 - 16 - இல் வாசிக்கிறோம். நாம் ஒருபோதும் கர்த்தருக்கு என்று வெறுத்துவிட்ட காரியங்களை மறுபடியுமாய் மனதிலும் நினைக்கக் கூடாது. அதற்குப் பதிலாக கிறிஸ்துவின் நிமித்தம் விட்டுவிட்ட காரியங்களை நாம் நஷ்டமென்றும் குப்பையாகவும் எண்ணிக்கொண்டிருக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் தனக்கு இலாபமாக இருந்தவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமாக எண்ணினார். கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, "எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக

எண்ணுகிறேன்" என்று அவர் சொல்லுகிறார் (பிலி. 3 : 7, 11). இந்த அனுபவம் நம்மில் இருக்குமானால் நாம் விட்டுவிட்ட காரியங்களை மறுபடியுமாய் எடுக்கும்படியான எண்ணமே நமக்குத் தோன்றாது.

நம்முடைய இருதயம் பின்மாற்ற நிலவரத்தில் இருக்கும்போது நாம் தேவனை ஆராதித்தாலும், நம் சரீரங்களை ஒப்புக்கொடுத்தாலும், காணிக்கைகளைச் செலுத்தினாலும், தேவனுடைய பார்வையில் நாம் 'நாயைக் கழுத்தறுக்கிறவர்களாய்' (பலி செலுத்துகிறவர்களாய்) காணப்படுவோம்.

3. காணிக்கையைப் படைக்கிறவன் பன்றி இரத்தத்தைப் படைக்கிறவனாய் இருக்கிறான்:

பன்றி அசுத்தமான ஒரு மிருகம். சுத்தமான இடத்தில் வைக்கப்பட்டாலும் வெகு சீக்கிரத்தில் அந்த இடத்தை விட்டுப்போய் அசுத்தமும் துர்நாற்றமுமுள்ள சேற்றில் புரண்டுகொண்டிருப்பதையே அது விரும்பித் தெரிந்துகொள்ளும். அதுபோல இரட்சிக்கப்பட்டவர்கள் மத்தியிலும், அபிஷேகம்பண்ணப்பட்டவர்கள் மத்தியிலும் சிலர் அசுத்த ஜீவியத்தை நாடி தங்களைத் தீட்டுப்படுத்திக்கொண்டு, பரிசுத்தத்திற்கு அந்நியராய்க் காணப்படுகிறார்கள். இவர்களைக் குறித்தே, "கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது" என்று சொல்லப்பட்டிருக்கிறது (II பேதுரு 2 : 22). ஒருகாலத்தில் ஆழமான குழியிலும், உளையான பாவச்சேற்றிலும் ஜீவித்துக் கொண்டிருந்தவர்கள், இரட்சிப்பை அடைந்து இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத் தினால் பாவங்களற கழுவப்பட்டு, பரிசுத்தரை அறிகிற அறிவினால் உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பி பரிசுத்த ஜீவியம் செய்யத் தொடங்குகிறார்கள். எனினும் சிலர் மறுபடியும் பரிசுத்த கற்பனைகளை மீறி பரிசுத்தத்திற்கு அந்நியமான அசுசியான காரியங்களுக்கு இடங்கொடுத்து, பன்றியைப்போல அசுத்தத்திலே உழன்றுகொண்டிருக்கிறார்கள். இவர்களின் பின்னிலைமை, முன்னிலைமையிலும் மோசமாய் இருக்குமென்று அப். பேதுரு கூறுகிறார் (வச. 20). அசுத்த ஜீவியம் செய்துகொண்டு தேவனை ஆராதிக்கிறவர்கள் தேவனுடைய பார்வையில் பன்றியின் இரத்தத்தைக் காணிக்கையாகப் படைக்கிற அருவருப்பானவர்களாய்க் காணப்படுகிறார்கள்.

4. தூபங்காட்டுகிறவன் விக்கிரகத்தை ஸ்தோத்திரிக்கிறவனாக இருக்கிறான்:

"யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ் கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்" என்று நியாயப்பிரமாணம் கூறுகிறது. ஆனால் புதிய ஏற்பாட்டில் ஜீவிக்கிற நாம் எழுத்துக்குரிய விக்கிரகங்களை ஆராதிப்பதோ, நமஸ்கரிப்பதோ கிடையாது. நம் முடைய இருதயத்தில் நாம் பொருளாசைக்கு இடங் கொடுப்போமென்றால் அது தேவனுடைய பார்வை யில் விக்கிரக ஆராதனையாகக் காணப்படுகிறது. அப். பவுல் சபைகளுக்கு நிருபங்களை எழுதும் போது, "விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே" (எபே. 5 : 5) என்றும், "விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்" (கொலோ. 3 : 5) என்றும் கூறியிருக்கிறார். தாவீது ராஜா, "என் இருதயம் பொருளாசையைச் சாராமல், உமது சாட்சிகளைச் சாரும்படி செய்யும்" என்று வேண்டு தல் செய்கிறான் (சங். 119 : 36). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, "பொருளாசையைக்குறித்து எச்சரிக் கையாயிருங்கள்" என்று சொல்லியிருக்கிறார் (லூக்கா 12 : 15). அப். பேதுரு பொருளாசைகளில் பழகின இருதயத்தை உடையவர்களை 'சாபத்தின் பிள்ளைகள்' என்று அழைக்கிறார் (II பேதுரு 2 : 14). பொருளாசை என்னும் பேர் முதலாய் நமக்குள் சொல்லப்படவுங்கூடாது (எபே. 5 : 3). நமக்கும் நம்முடைய தேவனுக்கும் இடையில் ஒரு குறிப்பிட்ட நபரோ, பணமோ, பொருளோ இருக்கு மானால் - தேவனைக் காட்டிலும் எதையாகிலும் நாம் அதிகமாய் நேசிப்போமானால் - அதுவே நமது ஜீவியத்தில் காணப்படுகிற விக்கிரகமாகும். இருதயத்தில் பொருளாசை உள்ளவர்களாய் நாம் எவ்வளவுதான் ஜெபம்பண்ணினாலும் (தூபம் காட்டுதல்) தேவனுடைய பார்வையில் நாம் விக்கிரகங்களை வணங்குகிற அருவருப்பானவர்களாய் இருப்போம்.

தேவன் நம்முடைய இருதயத்தின் நிலவரத்தை அறிந்து அதற்கேற்றபடி நம்மை அங்கீ கரித்து ஆசீர்வதிக்கிறார். ஏசாயா 66 : 2 - இல், "சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத் துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன்" என்று தேவன் சொல்லுகிறபடியால் நம்மை நாம் தாழ்த்தி, நருங்குண்டதும் நொறுங்குண்டதுமான ஆவியுடையவர்களாய்த் தேவனுடைய வசனத்திற்கு நடுங்குகிறவர்களாய் இருப்போமென்றால் தேவன் நமக்குள்ளே வாசம்பண்ணுகிற அவருடைய பரிசுத்த ஆலயமாய், நித்திய வாசஸ்தலமாய் நாம் காணப்படலாம் (ஏசாயா 57 : 15 ; சங். 34 : 18 ; 51 : 17).

கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போன இஸ்ரவேல் ஜனங்களைப்போல் நாம் இராமல், நம்முடைய இருதயத்தைச் சுத்திகரித்துக்கொண்டு, தேவனுடைய வசனத்தின்படி ஜீவித்து, தேவன் வாசம்பண்ணும் ஆலயமாய் - அவர் தங்கியிருக்கிற இளைப்பாறுதலின் ஸ்தலமாய் - கட்டி எழுப்பப்பட கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக!

வாக்குத்தத்தம்

"நான் என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டுவந்து: என் ஜெபவீட்டிலே அவர்களை மகிழப்பண்ணுவேன்; அவர்களுடைய சர்வாங்கதகனங்களும், அவர்களுடைய

பலிகளும், என் பலிபீடத்தின்மேல் அங்கிகரிக்கப்பட்டிருக்கும்; என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்" (ஏசாயா 56 : 7).

புறக்கணிக்கப்பட்ட உன்னைக் கர்த்தர் சேர்த்துக்கொள்ளுகிறார்

இம்மண்ணுலகில் மானிடர் யாவரும் கனம்பண்ணப்படவும், மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப் படவும், சந்தோஷமும் சுகபோகமும் அனுபவிக்கவுமே விரும்புகின்றனர். தங்கள் விருப்பத்திற்கு மாறாக அசட்டைபண்ணப்படுதலும் புறக்கணிக்கப்படுதலும் துக்கமும் பாடுகளும் உண்டாகும்போது அநேகர் தங்கள் வாழ்க்கையில் நிராசையடைந்து சோகக்கடலில் மூழ்கிவிடுகின்றனர். சிலர் தற்கொலை யும் செய்துகொள்ளுகின்றனர். ஆனால் தேவஜனங்கள் இப்படிப்பட்ட பாதைகளினூடாகக் கடந்து செல்லும்போது சிந்திக்க வேண்டிய ஒன்றுண்டு. உண்மையான தேவபிள்ளைகள் மனுஷரால் புறக் கணிக்கப்பட வேண்டியது அவசியமே. தேவனுக்குப் பிரியமான ஜீவியம் செய்துவரும்போது நீங்கள் வீட்டிலோ வேலைஸ்தலத்திலோ மனுஷரால் புறக்கணிக்கப்படுவீர்களாயின் தேவனுடைய பார்வையில் நீங்கள் விலையேறப்பெற்ற ஒருவர் என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். ஏனெனில் உங் களைக் குறித்து ஆண்டவருக்கு ஒரு பெரிய திட்டமும் நோக்கமும் உண்டு.

"கைவிடப்பட்டு மனம்நொந்தவளான ஸ்திரீயைப்போலவும், இளம்பிராயத்தில் விவாகஞ்செய்து தள்ளப்பட்ட மனைவியைப்போலவும் இருக்கிற உன்னைக் கர்த்தர் அழைத்தார் என்று உன் தேவன் சொல்லுகிறார்" என ஏசாயா 54 - ஆம் அதிகாரம், 6 - ஆம் வசனத்தில் நாம் வாசிக்கிறோம். இவ்விதம் மனுஷரால் புறக்கணிக்கப்படும்போது நாம் மகிழ்ந்து களிகூர வேண்டும். அப்போது அவ்வதிகாரத்தின் 11 முதல் 17 வரையுள்ள வசனங்களில் கூறப்பட்டுள்ள ஆசீர்வாதங்களை நாம் சுதந்தரித்துக்கொள்ளலாம். "சிறுமைப்பட்டவளே, பெருங்காற்றில் அடிபட்டவளே, தேற்றரவற்றவளே, இதோ, நான் உன் கல்லு களைப் பிரகாசிக்கும்படி வைத்து, நீலரத்தினங்களை உன் அஸ்திபாரமாக்கி, உன் பலகணிகளைப் பளிங்கும், உன் வாசல்களை மாணிக்கக் கற்களும், உன் மதில்களையெல்லாம் உச்சிதமான கற்களு மாக்குவேன்" (வச. 11, 12) என்பதற்கிணங்க, விலையேறப்பெற்ற தெய்வீக சுபாவங்கள் நம்மில் உரு வாகும்.

மனுஷரால் நாம் புறக்கணித்துத் தள்ளப்படும் சந்தர்ப்பங்களில் நம்முடைய பிரதிக்கிரியை என்ன? நாம் சந்தோஷப்பட்டுக் களிகூருகிறோமா? அல்லது பகை, எரிச்சல், கோபம் இவற்றிற்கு இடங்கொடுத்துமுறுமுறுக்கிறோமா? நாம் முறுமுறுத்து முறையிடுவோமாயின் மேற்கூறப்பட்ட ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்துக்கொள்ள முடியாமல் அவற்றை இழக்க நேரிடும். அகித்தோப்பேல் என்பவன் தாவீது இராஜாவின் காலம் முதல் இராஜாவுக்கு நல்லதொரு ஆலோசனைக்காரனாய் இருந்து வந்தான். அவன் சொல்லும் ஆலோசனை இராஜாவாகிய தாவீதுக்கும், அவனுடைய குமாரனாகிய அப்சலோமுக்கும் தேவனுடைய வாக்கைப் போல் இருந்துவந்தது (II சாமு. 16 : 23). ஆனால் அந்த அகித்தோப்பேலின் ஆலோசனை ஒருமுறை அப்சலோமினால் புறக்கணிக்கப்பட்டது. அதை அவனால் சகித்துக்கொள்ள இயலவில்லை. அதினால் அவன் போய் நான்றுகொண்டு செத்தான் (II சாமு. 17 : 23). மனுஷரால் புறக்கணிக்கப்படும் வேளைகளில் அவற்றை நாம் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளாவிட்டால், நம் ஆவிக்குரிய ஜீவனை நாமே மாய்த்துக்கொள்ளுகிறவர்களாய்க் காணப்படுவோம்.

வேதாகமத்தில் இவ்விதம் மனுஷரால் புறக்கணிக்கப்பட்ட பலரைக் குறித்து நாம் காண்கி றோம். அவ்வேளைகளில், புறக்கணிக்கப்படுதலில் மறைந்திருக்கும் தேவநோக்கத்தை நன்கு விளங்கிக் கொண்டு சரியான விதத்தில் கிரியை செய்தவர்கள் முடிவில் மிகப் பெரிய ஆசீர்வாதங்களைச் சுதந் தரித்துக்கொண்டனர். மாறாக, தேவநோக்கத்தை விளங்கிக்கொள்ளாமல் பகை, கோபம், எரிச்சல் இவற்றிற்கு இடங்கொடுத்தவர்கள் ஆசீர்வாதங்களை இழந்துபோனார்கள். அவர்களுடைய முடிவும் பரிதாபமானதாக இருந்தது. இஸ்ரவேலின் முதல் இராஜாவாகத் தெரிந்துகொள்ளப்பட்ட சவுல் இராஜ்யபாரம் ஏற்ற அன்றையத் தினமே சிலரால் புறக்கணிக்கப்படுகிற ஒரு பாதை அவனுக்கு உண்டாயிற்று. அவனோ ஆரம்பத்தில் தனக்கிருந்த தாழ்மையின் ஆவியினால் அதில் எளிதாக ஜெயம்பெற்றான் (I சாமு. 10 : 27). ஆனால் சிறிது காலத்திற்குப் பின் அதைப் போன்ற மற்றுமொரு சந்தர்ப்பம் உண்டானபோது, அதை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பெலிஸ்திய வீர னான கோலியாத்தைத் தாவீது கொன்றபோது ஸ்திரீகள், "சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று முறைமுறையாகப் பாடினார்கள்". அந்த வார்த்தை சவுலுக்கு விசனமாயிருந்தது. அவன் மிகுந்த எரிச்சலடைந்து, தாவீதுக்குப் பதினாயிரம், எனக்கோ ஆயிரம் கொடுத்தார்கள் என்று சொல்லி, அந்நாள் முதற்கொண்டு தாவீதைக் காய்மகாரமாய்ப் பார்த்தான் (I சாமு. 18 : 7 - 9). அவன் பொறாமைக்கும் கோபத்துக்கும் எரிச்சலுக்கும் இடங்கொடுத்து, தாவீதைக் கொல்லும்படி ஒரு கொலைபாதகனைப் போல அலைந்து திரிந்தான். முடிவில் அவன் கர்த்தருடைய சொல்லைக் கேளாமல் தான் விட்டுவைத்த அமலேக்கியனால் கொல்லப்பட்டான்.

பக்தன் யோபும் எல்லாராலும் புறக்கணிக்கப்படுகிற ஒரு பாதையினூடாகக் கடந்து செல்ல வேண்டியதாயிருந்தது. யோபு 19 : 13 - 19 - இல் யோபின் புறக்கணிக்கப்படுதலை நாம் காணலாம். அவனுக்கு அறிமுகமானவர்கள் அந்நியராய்ப் போனார்கள். சிநேகிதர் அவனை மறந்துவிட்டார் கள். வேலைக்காரிகளின் பார்வைக்கும் அவன் பரதேசியானான். அவனுடைய சுவாசம் அவன் மனைவிக்கு வேறுபட்டது. சிறுபிள்ளைகளும் அவனை அசட்டைபண்ணினார்கள். அவனுடைய சிநேகிதர் அவனுக்கு விரோதிகளானார்கள்; பிராண சிநேகிதர் அவனை வெறுத்தார்கள். அவன் எல்லாராலும்

புறக்கணிக்கப்பட்டான். எங்கு திரும்பினாலும் அவன் கண்டது புறக்கணிப்பு மாத்திரமே. ஆனாலும் யோபு தன் வாயினால் பாவஞ்செய்யவுமில்லை; தேவனைப் பற்றிக் குறை சொல்லவுமில்லை. தனக்கிருந்த உறுதியான நம்பிக்கையை அவன் அறிக்கையிட்டு, கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, அவரை மகிமைப்படுத்தினான். இதினிமித்தம் அவனுக்கு முன்பு இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் முடிவில் இரண்டத்தனையாய்க் கர்த்தர் தந்தருளினார். அவனுடைய முன்னிலைமையைப் பார்க்கிலும் பின்னிலைமை மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டது. அவன் நெடுநாளிருந்து பூரணவயதுள்ளவனாய் மரித்தான்.

யோசேப்பு தன் சகோதரரால் பகைக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டான். குற்றமற்றிருந்தும் அவன் குழியிலிடப்பட்டு, அடிமையாக விலைக்கு விற்கப்பட்டு, போத்திபாரின் வீட்டில் பிழையாக விளங்கிக் கொள்ளப்பட்டு, காவற்கிடங்கில் அடைக்கப்பட்டான். "அவன் கால்களை விலங்குபோட்டு ஒடுக்கினார்கள்; ... கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் அவருடைய வசனம் அவனைப் புடமிட்டது" (சங். 105 : 18, 19). ஆனால் யோசேப்பு தேவனுடைய நோக்கத்தை விளங்கிக்கொண்டு சரியான விதத்தில் கிரியை செய்தான். அவன் தன் சகோதரர்மேல் கசப்பு வைக்கவில்லை. முடிவில் எகிப்து முழுவதற்கும் அவன் தலைவனாக உயர்த்தப்பட்டான். அவர்களைப் பழிவாங்குவதற்குப் பதிலாக, பஞ்ச காலத்தில் அவன் அவர்களைப் போஷித்தான்; அவர்களுக்கும் அவர்கள் பிள்ளைகளுக்கும் மிருக ஜீவன்களுக்கும் அடைக்கலம் தந்து ஆதரித்தான்.

தேவ மனிதனாகிய மோசேயும் புறக்கணிக்கப்பட்டதை நாம் அறிவோம். "உன்னை அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார் என்று சொல்லி" இஸ்ரவேலர் புறக்கணித்த இந்த மோசேயைத்தானே தேவன் தலைவனாகவும் மீட்பனாகவும் ஏற்படுத்தினார் (அப். 7 : 35). தாவீதும் அவ்விதமாகவே புறக்கணிக்கப்பட்டு, வனாந்தரங்களிலும் குகைகளிலும் அலைய வேண்டியதாயிற்று. நிந்தையும் அவமானமும் கலக்கமும் புறக்கணிப்பும் உண்டானபோது தேவனை மாத்திரம் நோக்கிப் பார்த்து, கர்த்தருக்காக அவன் காத்திருந்தான் (சங். 22 : 6 ; 27 : 10). ஏற்ற வேளையில் அவன் இஸ்ரவேலின் இராஜாவாகச் சிங்காசனத்திற்கு உயர்த்தப்பட்டான்.

நமதருமை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் புறக்கணிக்கப்பட்டார். பாவிகளாகிய நம்மை மீட்டு, பரிசுத்தவான்களாக மாற்றும்படி அவர் இவ்வுலகில் அவதரித்து, பல கஷ்டங்களையும் வேதனைகளையும் அனுபவித்து அவற்றை ஜெயித்தார். அதாவது அவரது பிறப்பு முதல் மரணம் வரை 'புறக்கணிக்கப்படுதல்' அவரைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்தது. "அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்" (ஏசாயா 53 : 3). நம்மை நித்திய மகிமைக்குப் பங்குள்ளவர்களாக்கும்படியாகவும், நித்திய காலமாய் தம்மோடு நம்மைச் சேர்த்துக்கொள்ளும்படியாகவுமே அவர் அசட்டைபண்ணப்பட்டார், புறக்கணிக்கப்பட்டார்.

அவர் பிறந்தபோது அவருக்கு இடமளிக்க எவருமில்லாததால் முன்னணையிலே கிடத்தப்பட்டிருந்தார். அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை (யோவான் 1 : 11). ஊராராலும், இனத்தாராலும், வீட்டாராலும் அவர் கனவீனம் பண்ணப்பட்டார், அசட்டைபண்ணப்பட்டார், புறக்கணிக்கப்பட்டார் (மாற்கு 6 : 3, 4). ஜனங்கள் அவரை ஊருக்குப் புறம்பே தள்ளிக் கொன்றுபோடவும் வகை பார்த்தார்கள். கோழி தன் குஞ்சுகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணம் அவர்களைச் சேர்த்துக்கொள்ள அவர் மனதாயிருந்தார். அவர்களோ அவரைத் தள்ளி, அவருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளவில்லை (யோவான் 12 : 48); அவர் ஆகாதவரென்று தள்ளப்பட்டார் (லூக்கா 17 : 25). அவரை முகாந்தரமில்லாமல் பகைத்தார்கள் (யோவான் 15 : 24, 25). முடிவிலே யூதர்கள் கர்த்தரைப் புறக்கணித்துத் தள்ளி, கள்ளனைத் தெரிந்துகொண்டனர் (யோவான் 18 : 40); யூதருக்கு இராஜாவாகப் பிறந்தவரைத் தள்ளி, "இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே ராஜா இல்லை" என்று சத்தமிட்டனர் (மத். 2 : 2 ; யோவான் 19 : 15). தம்மோடு கூடவே இருக்கும்படியாய் அவர் தெரிந்துகொண்ட சீஷர்களாலும் கடைசி வேளையில் அவர் புறக்கணிக்கப்பட்டார். பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் அவரைக் காட்டிக்கொடுத்தான்; பேதுரு மறுதலித்தான். எல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள் (மாற்கு 14 : 50). அவர் சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தபோது அவருடைய ஜீவன் அவரைவிட்டுப் பிரியும் நேரத்திலும் அவரோடு சிலுவையிலறையப்பட்டிருந்த ஒரு கள்ளனுங்கூட அவரை இகழ்ந்தான். வழியே நடந்துபோனவர்களும் தங்கள் தலைகளைத் துலுக்கி, அவரைத் தூஷித்தார்கள். இவையனைத்திற்கும் மேலாக பிதாவும் அவ்வேளையில் அவரைக் கைவிட வேண்டியதாயிருந்தது. எனவேதான், "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று அவர் கதறினார். அவர் மரணம் வரை நிந்திக்கப்பட்டும், தாழ்த்தப்பட்டும், தூஷிக்கப்பட்டும், அசட்டைபண்ணப்பட்டும், புறக்கணிக்கப்பட்டுமிருந்தார். ஆனால் அவர் அனைத்தையும் சகித்து, ஜெயித்து, ஜெயவேந்தராக எல்லா வானங்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டு, எல்லா நாமத்துக்கும் மேலான நாமந்தரிக்கப்பட்டு, தேவசிங்காசனத்தில் சர்வ மகிமையோடு வீற்றிருக்கிறார். வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோர் யாவருடைய முழங்கால்களும் அவருக்கு முன்பாக முடங்கும். நாவுகள் யாவும் அவர் கர்த்தர் என்று அறிக்கை பண்ணும். "வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று, ... இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்" (சங். 118 : 22 - 24).

தேவனுடைய பிள்ளையே! கடந்த நாட்களில் நீயும் பல சந்தர்ப்பங்களில் மனுஷரால் புறக்கணிக் கப்பட்டிருக்கக் கூடும். கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டதினிமித்தம், ஆழமான சத்தியங் களுக்குக் கீழ்ப்படிந்ததினிமித்தம், உன் வீட்டார், ஊரார், சிநேகிதர் அனைவரும் உன்னைப் புறக் கணித்திருக்கக் கூடும். சில சமயங்களில் ஆண்டவரும் உன்னைக் கைவிட்டது போல் நீ உணர்ந் திருக்கக் கூடும். அப்படிப்பட்ட வேளைகளில் உன் பிரதிக்கிரியை என்னவாயிருந்தது? இமைப் பொழுது உன்னைக் கைவிட்டாலும் உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக்கொள்ளு பவரும், இமைப்பொழுது தமது முகத்தை உனக்கு மறைத்தாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங் குகிறவருமான உன் நேசர் உன்னோடே இருக்கிறார் என்பதை நீ மறந்துவிடாதே. மனுஷரால் புறக்கணிக்கப்படும் சமயங்களில் நீ எரிச்சலடைந்து எதிர்த்து நின்றாயா? விசனப்பட்டு, சோர்வுற்று, அதைரியப்பட்டு, முறுமுறுத்து, முறையிட்டாயா? அல்லது சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்தாயா? தேவனுடைய பார்வையில் நீ விலையேறப்பெற்றவன் என்பதையும், உன்னைப் பற்றி தேவனுக்கு ஒரு பெரிய நோக்கம் உண்டு என்பதையும் விளங்கிக்கொண்டு, புறக்க ணிப்பைச் சரியான ஆவியில் ஏற்றுக்கொண்டு, ஸ்தோத்திரம் செலுத்தி தேவனை மகிமைப்படுத்தி, கர்த்தருக்காகக் காத்திருந்தாயா? "மனுஷகுமாரன் நிமித்தமாக ஜனங்கள் உங்களைப் பகைத்து, உங்க ளைப் புறம்பாக்கி, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போது நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள். அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்" (Rejoice ... and leap for joy) (லூக்கா 6 : 22, 23). 'சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்' என்பதற்கு ஆங்கிலத்தில், 'சந்தோஷப்பட்டு, ஆனந்தத்தால் துள்ளிக் குதியுங்கள்' என்று கூறப்பட்டுள்ளது. புறக்கணிக்கப்படும் அந்நாட்களில் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள். "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்" என்று அப். பவுல் கூறுகிறார் (பிலி. 4 : 4).

நமக்குமுன் இப்பாதையில் ஜெயத்துடன் முன்சென்ற யோபு, யோசேப்பு, மோசே, தாவீது போன் றோரின் சரித்திரங்கள் நம்மையும் வெற்றிநடை போடும்படி ஊக்குவிக்கின்றனவே! எல்லாவற்றுக்கும் மேலாக நம் கர்த்தராகிய இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படி அழைக்கப்பட்டிருக்கும் நாம், அவர் வைத்துச் சென்ற மாதிரியின்படி ஜீவித்து ஜெயம்பெறுவோமாக. தேவபிள்ளையே! இப்படிப் பட்ட புறக்கணிப்பின் பாதையில் சந்தோஷத்தோடு கடந்து சென்றால், நீ தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றவனாய் விளங்குவாய். அவர் வருகையில் நீ சேர்த்துக்கொள்ளப்படுவாய். "என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள்" (மல். 3 : 17) என்று கூறி, மனுஷரால் அசட்டைபண்ணப்பட்ட உன்னை அவர் சேர்த்துக்கொண்டு, 'நீ என்னுடையவன்' என்று உன்னைக் குறித்து உரிமைபாராட்டுவார். உன் துக்க நாட்கள் முடிந்துபோம். "சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்."

"வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்"

நான் ஒரு பெந்தெகொஸ்தே குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்டேன். என் பெற்றோர் எங்கள் சிறுவயது முதல் வேதம் வாசிப்பதிலும் ஜெபம்பண்ணுவதிலும் ஆலயத்திற்கு ஒழுங்காய்ச் செல் வதிலும் ஞாயிறுபள்ளியில் பங்கேற்பதிலும் மிகவும் கண்டிப்பாய் எங்களை வளர்த்துவந்தார்கள். சினிமா, நாடகங்கள் போன்றவை பார்ப்பதும், ஆடம்பரமான வாழ்க்கை வாழ்வதும் பாவம் என்று அவர்கள் திட்டமாய் எங்களுக்குப் போதித்து வந்தார்கள்.

நான் சிறுவயதிலேயே கர்த்தராகிய இயேசுவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன். ஏற்ற வயது வந்தபோது நான் முழுக்கு ஞானஸ்நான சத்தியத்திற்குக் கீழ்ப்படியவும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றுக்கொள்ளவும் கர்த்தர் எனக்கு உதவி செய்தார். எனக்குத் திருமணமாகி நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். கர்த்தர் எனக்கு வீட்டிலேயே சுகமான பிரசவம் தந்தார். எங்கள் குடும் பத்தில் எத்தனையோ வியாதிகள், கஷ்டங்கள் நேரிட்டன. கர்த்தர் நல்ல வைத்தியராய், விடுவிக் கிறவராய் இருந்து எங்களை வழிநடத்தினார். என் கணவர் தனது நாற்பத்தைந்தாவது வயதில் விசுவாச வீரனாய்க் கர்த்தருக்குள் மரித்தார். நானும் பிள்ளைகளும் தனிமையிலானோம். திக்கற்ற பிள்ளைகளையும், விதவைகளையும் ஆதரிக்கிற தேவன் எங்களைக் கைவிடாதவராய் இம்மட்டும் நடத்திவருகிறார்.

என்னுடைய ஐம்பத்தேழாவது வயதில் திடீரென்று பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு, நான்கு நாட்கள் சுயநினைவு இல்லாமல் நான் படுக்கையிலானேன். என் உடன் சகோதரிகளும் உறவினர்களும் நான்காவது நாள் இரவு படுக்கையைச் சுற்றி அமர்ந்து பாட்டுப் பாடி அழுது ஜெபம் பண்ணினார்கள். கர்த்தர் கிருபையாய் இரங்கி மீண்டும் எனக்குச் சுய நினைவு தந்து, நானும் அவர்களோடு சேர்ந்து பாட்டு பாடக் கிருபை செய்தார். என் வலது கையும் காலும் செயல் இழந்து விட்டன. நான் ஆறு மாதங்கள் படுக்கையில் இருந்தேன். எனக்காகத் தேவஊழியர்களும் விசுவாசிகளும் உபவாசித்து ஜெபித்ததின் மூலம், கர்த்தர் என் வியாதிப் படுக்கையை மாற்றினார். இப்போது என் கடமைகளை நானே செய்யத்தக்கதாகத் தேவன் எனக்கு அளவற்ற கிருபை அளித்துவருகிறார். அல்லேலூயா!

என் மகன் படிப்பை முடித்துவிட்டு வேலைக்காகக் காத்திருந்தான். எத்தனையோ பேர் வேலைக் காகப் பிரயாசப்பட்டுக் கொண்டிருந்தபோது ஏழைகளாகிய எங்கள் கண்ணீருக்கு இரங்கி கர்த்தர் என் மகனுக்கு அற்புதமான வழியைத் திறந்து வேலை தந்தார். நான்கு வருடங்களுக்குப் பின் அவ

னுடைய இருபத்துமூன்றாவது வயதில் அவனுக்கு டைஃபாய்டு ஜுரம் வந்து அவன் சுய நினைவை இழந்தவனாய்ப் பிதற்றிக்கொண்டிருந்தான். அவன் வீட்டில் மரிப்பதைக் காண விரும்பாமல் நாங்கள் அவனை மில்லர்புரம் விசுவாச வீட்டுக்குக் கொண்டுபோனோம். அங்கு தேவஊழியர்களும் விசுவாசி களும் உபவாசித்து ஜெபம்பண்ணினார்கள். திடீரென்று ஒருநாள் அதிகாலையில் அவன் ஜீவன் அவனை விட்டுப் பிரியும் தருணமானது போலாயிற்று. அருகிலிருந்த ஊழியர்களும் நாங்களும் போராடி ஜெபித்தோம். கர்த்தர் கிருபையாய் இரங்கினார்; அவன் கண் விழித்துப் பேசத் தொடங் கினான். அன்றிலிருந்து படிப்படியாய் அவன் சுகம் பெற்றான். தேவனுடைய பரிசுத்த நாமம் மகிமைப் பட்டது.

எங்கள் குடும்பத்தில் பல வியாதிகளும் போராட்டங்களும் வந்தபோதிலும் அவற்றில் ஒன்றும் கிறிஸ்துவின் அன்பை விட்டு எங்களைப் பிரிக்க முடியவில்லை. கர்த்தர் இந்நாள் வரைக்கும் எங்களுக்குச் சமயத்திற்கு ஏற்ற சகாயராய், பரிகாரியாய், ஆவிக்குரிய சரீர நன்மைகளை அளிப் பவராய் இருந்துவருகிறார். பெந்தெகொஸ்தின் பேரொலிக்கு நான் சாட்சி எழுதுவேன் என்று தீர்மானம் பண்ணினேன். எல்லாக் கனமும் மகிமையும் கர்த்தாதி கர்த்தருக்கே. அல்லேலூயா!

சகோதரி கிறிஸ்டி ஜார்ஜ்,
தூத்துக்குடி.

அவர் கரத்தில் அடங்கிப் பொறுத்துப்பார்

வண்ணத்துப் பூச்சி உருவாகும் ஒரு கூட்டை சிறுவன் ஒருவன் மிகவும் கவனமாகக் கவனித்துக்கொண்டிருந்தான். அதன் அமைப்பு விநோதமானதாயிருந்தது. அக்கூட்டின் முகப்பில் ஒரு சிறிய துவாரம் காணப்பட்டது. அதின் வழியாய் அப்பூச்சியின் உடல் மிகச் சிரமத்தோடு வெளியே வரப் பிரயாசப்பட்டுக்கொண்டிருந்தது. சாதாரணமாக, அப்பூச்சி, அக்கூட்டிலிருந்து வெளியே வரப் பிரயாசப்படும்போது அதின் இறக்கைகள் சரியாக முழு வளர்ச்சி அடைந்திராது. அச்சிறு துவாரத்தின் வழியாக அப்பூச்சி வெளியேறப் பிரயாசப்படும் ஒவ்வொரு முறையும் அதன் உடல் சுருங்கி சுருங்கி, அதன் உடலிலிருந்து இறக்கைகளுக்குச் சத்து அனுப்பப்பட்டு, இவ்விதம் அதன் இறக்கைகள் பூரண வளர்ச்சியடைவது இயற்கை. அதன் இறக்கைகள் பூரண வளர்ச்சியடைந்த பின்னர் அப்பூச்சி முழு வளர்ச்சியடைந்த பருவத்தில், பல வண்ணங்களுடன் கூடிய தன் இறக்கைகளுடன், உடனே பறக்கக் கூடியதாய் வெளியே வரும். அச்சிறுவன் கவனித்துக்கொண்டிருந்த அக்கூட்டிலிருந்து பூச்சி வெளியே வரும்படி ஒரு பகல் முழுவதும் முயன்றுகொண்டிருந்தது. நாள் முழுவதும் சிறிதளவு வெளியே வந்து, பின் வர முடியாமல் அப்பூச்சி தவித்துக்கொண்டிருப்பதை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த சிறுவன் பொறுமையிழந்தான். அதின்மேல் பரிதாபமுற்று, அதின் முகப்பைச் சற்று வெட்டி விட்டு, அந்தத் துவாரத்தை அவன் பெரிதாக்கினான். உடனே பூச்சி எளிதாக வெளியே வந்தது. ஆனால் அந்தோ பரிதாபம்! அது பெருத்த உடலும் சுருங்கிய இறக்கைகளும் உடையதாயி ருந்தது. இறக்கைகளின் நிறங்களும் கோடுகளும் மிக மங்கலாகக் காட்சியளித்தது. அதன் பூரண அழகு பொலிந்து விளங்கவில்லை. அது தன் இயற்கை வனப்பைப் பெறவில்லை. அது அழ காகப் பறந்து செல்லுமென்று ஆசையோடு பார்த்துக்கொண்டிருந்தான் சிறுவன். அப்பூச்சியோ பறக்க முடியாமல் தரையில் ஊர்ந்துகொண்டிருந்தது. சிறுவனின் அனுதாபம் பூச்சியின் பூரண வளர்ச்சியைத் தடுத்துவிட்டது. வானவில் போன்ற பல வர்ணங்களாலான அழகான இறக்கைகளைப் பெற்று, தன் சொற்ப ஆயுளை உல்லாசமாகப் பறந்து கழிக்கவேண்டிய அது, தன் ஆயுட்காலமெல்லாம் காலத்திற்கு முன் பிறந்த அரைகுறை பிறவி போலவே இருந்து வேதனையோடு தரையில் ஊர்ந்துகொண்டிருந்தது. சிறுவன் மிகவும் சோகமடைந்தான்.

இளைஞரே, இதிலிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் ஒன்று உண்டு. நம்மு டைய சிருஷ்டி கர்த்தர் மகா ஞானமுள்ளவர். நம்முடைய அறிவோ குறைவுள்ளது. ஆனால் நாமோ அச்சிறுவனைப் போல நம் சிருஷ்டிகரைப் பார்க்கிலும் நாம் அதிக ஞானமும் இரக்கமும் உள்ளவர் கள் போல நம்மைக் குறித்து எண்ணிக்கொண்டு, சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் (beautiful) செய்கிறவருக்கு (பிர. 3 : 11) முந்திக்கொள்கிறோம். தேவன் நம் ஜீவியத்தில் தற்காலத் தில் அனுமதிக்கும் கஷ்டங்களும் சோதனைகளும் நம்முடைய நன்மைக்காகவே. அவை நமக்கு அவ சியமானவையே. “தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது” (புல. 3 : 27). பின் நாட்களில் நமக்கு நன்மை உண்டாகும் பொருட்டு இப்போது சில சமயங்களில் அவர் நம்மைச் சிறு மைப்படுத்தக் கூடும் (உபா. 8 : 15). சங்கீதக்காரனாகிய தாவீது, “நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது” (சங். 119 : 71) என்று தனக்கு வந்த கஷ்டங்களைப் பற்றிப் பிற்காலங்களில் கூறுகிறான்.

கர்த்தருடைய வருகை தாமதிக்குமாயின், இவ்வுலகத்திலே வாலிபராகிய உங்களுக்கு ஒரு ‘பிந்தின நாட்கள்’ அல்லது ஒரு வருங்காலம் உண்டு. அதில் உங்கள் ஜீவியம் ஆசீர்வதிக்கப் பட்டதாய் இருக்க வேண்டும்; மற்றவர்களுக்கும் நீங்கள் ஆசீர்வாதமாயிருக்க வேண்டும். அப். பவுல், உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், அதாவது, அனுபவத்தையும் (Eng.) உண்டாக்குகிறது என்கிறார் (ரோமர் 5 : 3). பாடுகள், உபத்திரவங்களின் வாயிலாக நீங்கள் பெற்றுக் கொள்ளும் அனுபவங்கள், நீங்கள் இளைஞராயிருந்தாலும் ஆவிக்குரிய ஜீவியத்தில் முதிர்ந்த

வர்களாய் உங்களை மாற்றுகின்றன. அந்த அனுபவங்கள் மூலம் நீங்கள் அநேகருக்கு உதவிசெய்யக் கூடியவர்களாய் விளங்குவீர்கள். மேலும், இப்போது நீங்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் இவ்வுலக வாழ்க்கையிலும் நீங்கள் முன்னேறிச் செல்ல, மேன்மையான நிலைக்குப் பறந்துயர உதவக்கூடிய பலமான சிறகுகளை உங்களில் உருவாக்குபவையாகும். எனவே தற்கால கஷ்டங்கள், பாடுகளுக்குத் தப்பிக்கொள்ள குறுக்கு வழிகளைத் தெரிந்துகொள்ள வேண்டாம். நம்முடைய சோதனை வேளைகளில் மனுஷ உதவியை நாடாமல், நமக்கு ஒத்தாசை வரும் பர்வதமாகிய வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து ஒத்தாசை பெறும்படி நாம் காத்திருப்போமாக. சோதனையைச் சகிக்கவும் ஜெயிக்கவும் தேவையான கிருபையை அவர் நமக்குத் தருவார்.

மேலும், நமக்கு ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு பிற்காலம் உண்டு. அது கர்த்தருடைய இரகசிய வருகையில் நாம் எடுத்துக்கொள்ளப்பட்டு, நித்திய நித்தியமாய் அவரோடு பேரின்பம் பெற்று மகிழும் காலமாகும். மணவாட்டியைக் குறித்து, "அவள் ... வருங்காலத்தைப்பற்றியும் மகிழுகிறாள்" (நீதி. 31 : 25) என்று கூறப்பட்டுள்ளது. "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்" (யாக். 1 : 12). நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் (அப். 14 : 22). "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல" (ரோமர் 8 : 18). அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது (II கொரி. 4 : 17). மேலும் தற்காலப் பாடுகள் கிறிஸ்துவின் வருகைக்கென்று அவருடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்கு வளரும்படி நமக்கு உதவிசெய்யக் கூடியவையாகும். அவை நம்மை உருவாக்கி, கிறிஸ்து மத்திய ஆகாயத்தில் வெளிப்படும்போது அவரைச் சந்திக்கும்படி அவரிடம் பறந்துயரக் கூடிய பலமான சிறகுகளை நமக்கு உண்டுபண்ணிக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் உணர்ந்து, அவர் நம்மில் ஆரம்பித்த நல்ல வேலையைத் தம் சித்தத்தின்படி நேர்த்தியாய் நம்மில் பூரணப்படுத்தும்படியாக அவருடைய கரத்தில் அடங்கிப் பொறுத்திருப்போமாக.

போட்டி

கீழ்க்காணும் வினாக்களுக்கு 25 - 11 - '00 - க்குள் எம்மொழியிலும் பதில் எழுதி அனுப்பவும்.
வயது, வசன ஆதாரம் குறிப்பிடுக.

வேத வாசிப்புப் பகுதி : **தானியேல் - ஆமோஸ், ரோமர் - பிலேமோன்.**

1. தேவன் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் குறித்து அப்போஸ்தலன் கூறியிருப்பது என்ன? அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்ணி லி ஏன்?
2. கீதவாத்தியங்களைத் தனக்கு முன்பாக வரவொட்டாதிருந்த இராஜா யார்? தாவீதைப் போல தங்களுக்கு கீதவாத்தியங்களை உண்டுபண்ணினவர்களைக் குறித்து வாசிப்பதெங்கே?
3. கருகலானவைகளைத் தெளிவிக்கிறதான அறிவும் புத்தியும் விசேஷித்த ஆவியும் யாரிடம் காணப்பட்டது? கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் உனக்குப் புத்தியைத் தந்தருளுவார் என்று யாருக்குக் கூறப்பட்டது?
4. பலவீனன் தன்னை எவ்விதம் சொல்ல வேண்டும்? பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன் என்றது யார்?
5. யார் தேவனிடத்தில் இரக்கம் பெறுகிறான்? கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர் என்று சொன்ன தீர்க்கதரிசி யார்?
6. பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள் என்று எங்கு எழுதப்பட்டுள்ளது? என் குறைச்சலை நீக்கும்படி இரண்டொருதரம் அனுப்பினீர்கள் என்று யாருக்குக் கூறப்பட்டுள்ளது?
7. தன்னிலேதானே ஆக்கினைத்தீர்ப்புடையவனாய்ப் பாவஞ் செய்கிறவன் யார்? யார் தன்னைத் தானே வஞ்சிக்கிறவனாவான்?
8. அது ஆச்சரியமல்லவேணி என்று அப்போஸ்தலன் குறிப்பிடுவது என்ன? எதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்ணி என்று அப்போஸ்தலன் கூறுகிறார்?
9. விக்கிரகங்களை விட்டுத் தேவனிடத்திற்கு திரும்பின சபை எது? ஊமையான விக்கிரகங்களுக்கு மனதைச் செலுத்தினீர்கள் என்று எந்தச் சபைக்குக் கூறப்பட்டது?
10. தேவனுடைய இராஜ்யத்தின் பொருட்டு உடன் வேலையாட்களாயிருந்து அப்போஸ்தலனுக்கு ஆறுதல் செய்தவர்கள் யார்? உம்முடைய அன்பினாலே மிகுந்த சந்தோஷமும் ஆறுதலும் அடைந்திருக்கிறோம் என்றது யார்?

பதில் அனுப்ப வேண்டிய முகவரி :

பெந்தெகொஸ்தின் பேரொலி (இளைஞர் பகுதி), பெந்தெகொஸ்தே மிஷன்,
45 - **A,** 5 -ஆம் தெரு, பத்மநாப நகர், அடையாறு, சென்னை - 600 020.
போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குப் பரிசுகள் அனுப்பப்படும்.

1. எரே. 38 : 3,4 ; அப். 28 : 3, 4
2. யோவான் 4 : 21 ; புல. 3 : 24

3. அப். 7 : 26 ; யோவான் 15 : 12
4. எரே. 50 : 6 ; எசே. 34 : 14
5. எசே. 5 : 10 ; புல. 4 : 10
6. எசே. 7 : 6 ; புல. 1 : 8, 9
7. புல. 3 : 58 ; அப். 19 : 38
8. எரே. 52 : 31 ; அப். 26 : 10.

எருசலேமின் அலங்கமும் வாசல்களும்

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

5. பள்ளத்தாக்கின் வாசல் (VALLEY GATE)

பள்ளத்தாக்கின் வாசல் மனத்தாழ்மையைக் குறிக்கிறது என்றும், தன்னைத்தான் தாழ்த்துகிற எந்த நபருக்கும் தேவனிடத்தில் இரக்கம் கிடைக்கிறது என்றும் சென்ற இதழில் நாம் கண்டோம்.

உசியா தன் பதினாறாவது வயதில் இராஜாவாகி, கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்துவந்தான். அவனுடைய சத்துருக்களைத் தேவன் அவனுக்குக் கீழ்ப்படுத்தினார். அவன் பலப்படுமட்டும் ஆச்சரியமாய் அவனுக்கு அநுகூலமுண்டாயிற்று. ஆனால், "அவன் பலப்பட்டபோது, தனக்குக் கேடுண்டாகுமட்டும், அவனுடைய மனம் மேட்டிமையாகி, தன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்து," பரிசுத்தமாக்கப்பட்டவர்களான கர்த்தருடைய ஆசாரியர் மாத்திரமே செய்ய வேண்டிய தூபங்காட்டும் ஊழியத்தைச் செய்யத் துணிந்தான் (II நாளா. 26 : 16). அவனைத் தடுத்த ஆசாரியர் மேலும் அவன் கோபமடைந்தான். இதினிமித்தம் அவன் தன் மரண நாள் மட்டும் குஷ்டரோகியாயிருந்து, கர்த்தருடைய ஆலயத்துக்கு விலக்கப்பட்டவனாய், ஒரு தனித்த வீட்டிலே வாசம்பண்ணினான். பிதாக்களின் கல்லறைகளில் அவன் வைக்கப்படவில்லை. "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை" (நீதி. 16 : 18).

அருமை நண்பனே ! இவ்விதமாக மனமேட்டிமையினால் அழிந்துபோன எத்தனையோ திருஷ்டாந்தங்கள் வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளன. நம் ஆவிக்குரிய ஜீவியத்தின் ஆரம்பத்தில், 'நான் ஒரு தகுதியற்ற பாவி' என்ற ஆழ்ந்த உணர்வுடன் நாம் கல்வாரியண்டை வந்ததினிமித்தம் தேவன் நம்மை ஏற்றுக்கொண்டு, நம் பாவங்களற நம்மைக் கழுவி, இவ்வளவு பெரிதான இரட்சிப்பை நமக்குக் கட்டளையிட்டார். அபிஷேகத்தினால் அவர் நம்மை இராஜாக்களாக்கி, உன்னதங்களில் அவரோடுகூட உட்காரவும் செய்திருக்கிறார். நாம் எவ்வளவு உயர்த்தப்பட்டாலும் ஆரம்பத்தில் இருந்த அதே தாழ்மையின் சிந்தையில் நாம் தொடர வேண்டும். "நீங்கள் வெட்டி எடுக்கப்பட்ட கன்மலையையும், நீங்கள் தோண்டி எடுக்கப்பட்ட துரவின் குழியையும் நோக்கிப்பாருங்கள்" (ஏசாயா 51 : 1). "பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து, என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தி, நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார்" என்று சங்கீதக்காரன் பாடுகிறான் (சங். 40 : 2, 3). நம்முடைய முந்தின நிலவரத்தை நாம் ஒருபோதும் மறந்துபோகக் கூடாது. தேவனுடைய இரக்கமும் கிருபையும் நம்மைச் சந்தித்திராவிடில், நாம் இன்னும் பாவங்களிலும் சாபங்களிலும் அமிழ்ந்தே இருந்திருப்போம். அப். பவுல் ஒரு பெரிய அப்போஸ்தலனான பின்பும், தான் பாவிகளில் பிரதான பாவி என்று தன்னைக் குறித்துக் கூறுகிறார் (I தீமோ. 1 : 15). ஆபிரகாம், 'தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன்' (ஆதி. 18 : 27) என்றும், தாவீது, தன்னை 'ஒரு தெள்ளுப்பூச்சி' (I சாமு. 24 : 14) என்றும், யோபு, தன்னைக் 'காற்றடித்த சருகு' என்றும், 'நீசன்' என்றும் (யோபு 13 : 25 ; 40 : 4) அறிக்கையிடுகின்றனர். இவ்விதம் தேவனுக்குப் பிரியமான தேவதாசர்கள் தங்கள் தகுதியின்மையை எப்போதும் நினைவுகூர்ந்தபடியினால் தேவனால் கனம் பெற்றார்கள். மனத்தாழ்மையுள்ளவனோ கனமடைவான் (நீதி. 29 : 23).

மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக் குறித்துக் கர்த்தராகிய இயேசு ஒரு உவமையைச் சொன்னார்: ஜெபம்பண்ணும்படி இருவர் தேவாலயத்துக்குப் போனார்கள். அவர்களில் ஒருவன் தன்னுடைய சுயநீதிகளைத் தேவனுக்கு வரிசையாக எடுத்துரைத்தான். மற்றவனைக் காட்டிலும் தான் மேன்மையானவன் என்பதையே அவனுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் சுட்டிக்காட்டின. மற்றவனோ, தூரத்திலே நின்று, வானத்துக்குத் தன் கண்களை ஏறெடுக்கவும் துணியாமல், தன் மார்பில் அடித்துக்கொண்டு, "பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்றான் (லூக்கா 18 : 13). இருவருமே மெய்யான தேவனிடத்திற்கு, அவருடைய பரிசுத்த ஆலயத்திற்கு, ஜெபம்பண்ணுவதற்குத் தான் சென்றார்கள். இருப்பினும் தன்னைத் தாழ்த்தினவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் திரும்பிப் போனான். "மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்" (நீதி. 16 : 5). தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். கர்த்தருக்கு

முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார் (யாக். 4 : 6, 10). "மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக் கடவீர்கள்" (பிலி. 2 : 3).

"மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் (தேவன்) உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ் செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்" (மீகா 6 : 8). தாழ்மையில் ஆவிக்குரிய ஜீவியத்தை ஆரம்பித்த நண்பனே ! நாளடைவில் தேவன் உனக்குத் தானமாய் அளித்த கிருபைகள், தாலந்துகள், ஜெயஜீவியம், பரிசுத்தம், ஜெபஜீவியம் இவற்றைக் குறித்து நீ பெருமையடைந்திருப்பாயானால், அழிவு வருமுன்னே சீக்கிரமாய் உன்னைத் தாழ்த்துவாயாக. உன்னிடத்தில் நன்மையான ஏதாகிலும் உண்டாயிருக்குமானால் அது உன்னுடைய சொந்த நற்பண்போ, தானாக உன்னில் உண்டானதோ அல்லது இயற்கையாய் அமையப்பெற்றதோ அல்ல. அது தேவனுடைய ஈவு. இதையே அப். பவுல், "உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன்போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?" எனக் கேட்கிறார் (I கொரி. 4 : 7). உன் பள்ளத்தாக்கின் வாசல் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்குமாயின் அதைக் குறித்து நீ கவலையீனமாயிராதே ! நெகேமியா பாழாக்கப்பட்டுப் போயிருந்த அலங்கத்தைப் பார்வையிடும்படியாகப் பள்ளத்தாக்கின் வாசல் வழியாகப் புறப்பட்டு, அதன் வழியாகவே திரும்பி வந்தான் (நெகே. 2 : 13, 15). நீயும் மற்ற பல ஆசீர்வாதங்களைத் தேவனிடத்தில் கேட்குமுன்னதாக உன் தாழ்மையின் ஜீவியம் எப்படியிருக்கிறது என்று சீர்தூக்கிப் பார்த்து, கர்த்தரண்டை திரும்பு. தாழ்மை இன்றி, நீ கர்த்தரிடத்திலிருந்து வேறு எந்த ஆசீர்வாதத்தையும், உயர்வையும் பெற்றுக்கொள்ளவே இயலாது. "என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி,... திரும்பினால்,... தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்" என்று கர்த்தர் உரைத்திருக்கிறார் (II நாளா. 7 : 14). இவ்வசனத்தில் தேவன் தாழ்மையையே முதலாவதாக வலியுறுத்துகிறார். உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாகிய இயேசு, நித்தியத்தில் சீயோன் மலையிலும் ஆட்டுக்குட்டியானவராகவே நிற்கிறார் ! நாமும் நம் ஜீவியத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரை தாழ்மையில் வளரக் கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக.

"இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோகராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்" என்று கர்த்தராகிய இயேசு மொழிந்தருளியிருக்கிறார் (மத். 18 : 4). தேவனுக்காக அரும்பெரும் சாதனைகளைப் புரிந்தோரும், மகத்தான ஆலயங்களைக் கட்டினவர்களும், அல்லும் பகலும் தேவனுடைய இராஜ்யத்தினிமித்தம் அயராது உழைத்தவர்களும், அவர் நாமத்தினிமித்தம் இரத்தம் சிந்தி மரித்தோரும் ஏராளம்பேர் இருக்க, அவரோ பரலோக இராஜ்யத்தில் பெரியவர்களாய் முக்கியமான இடத்தில் வைக்கும்படி, சிறுபிள்ளையைப் போல் தங்களைத் தாழ்த்துகிறவர்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்! "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது" என்பதே மலைப்பிரசங்கத்தில் அவர் முதலாவதாக உரைத்த வாக்கியமாகும் (மத். 5 : 2, 3). எனவே, பரலோக இராஜ்யத்தில் மிகவும் மேன்மையான இடத்தைச் சுதந்தரித்துக்கொள்ளப் போகிறோம் என்ற எதிர்பார்ப்புடன் ஜீவித்துக்கொண்டிருக்கிற நாம், மனத்தாழ்மைக்கு முதலிடம் கொடுக்கிறோமா என்பதைச் சற்று சிந்தித்துப் பார்ப்போமாக.

பள்ளத்தாக்கின் வாசலைக் கட்டியவர்கள்:

பள்ளத்தாக்கின் வாசலை ஆனூன் என்பவனும், சானோவாகின் குடிகளும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

ஆனூன் - ஆனூன் என்பதற்கு, 'தயவுள்ளவன்' என்று பொருள். "நன்மைசெய்ய மனுஷன் கொண்டிருக்கும் ஆசையே தயை" (நீதி. 19 : 22). இங்கு கூறப்படும் நன்மை யாது? "மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்" எனக் கூறி, நியாயமும் இரக்கமும் செய்து, மனத்தாழ்மையாய் நடப்பதே தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கும் நன்மை என்று மீகா வலியுறுத்துகிறான். ஆகவே மெய்யான மனத்தாழ்மை தங்களில் உருவாக்கப்படும்படி ஆசித்து, அதற்காகத் தங்களைத் தேவன் நடத்தும் பாதைகளுக்கு ஒப்புக்கொடுக்கிறவர்களே பள்ளத்தாக்கின் வாசலைக் கட்டியெழுப்ப முடியும். அப்படிப்பட்டவர்கள் ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் தங்களை மன்னித்ததுபோல, மற்றவர்களையும் மன்னிப்பார்கள் (எபே. 4 : 32). "நீதிமான்களுக்குள்ளே தயை உண்டு" (நீதி. 14 : 9). இது, நமக்கு விரோதமாய்த் தவறு இழைத்தவர்களை மனப்பூர்வமாக மன்னிக்கும் ஒரு தெய்வீகப் பண்பாகும். "அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்" என்று நாம் தேவனைக் குறித்து வாசிக்கிறோம் (ஏசாயா 55 : 7). இந்த வெளிப்படுத்தல் நம்மையும் அவ்விதம் தயவுள்ளவர்களாக்குகிறது. இதையே "நற்புத்தி தயையை உண்டாக்கும்" என ஞானி கூறுகிறான் (நீதி. 13 : 15). தயவுள்ளவனுக்குத் தய

வுள்ளவராகவும், உத்தமனுக்கு உத்தமராகவும் தம்மை வெளிப்படுத்துகிற கர்த்தர் (சங். 18 : 25), அப்படிப்பட்டவர்கள் மேல் தயவுள்ளவராயிருந்து அவர்கள் தங்கள் ஜீவியத்தில் இழந்துபோன பகுதிகளைச் சீர்ப்படுத்திக்கொள்ளவும், மேலும் பல உன்னத அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளவும் அவர்களுக்கு அனுக்கிரகம் செய்வார்.

சானோவாகின் குடிகள் - சானோவாகு (Zanoah) என்பதற்கு 'நொறுங்குண்ட பட்டணம்' என்று பொருள். இப்பட்டணம் யூதாவின் சமபூமிகளுக்கு மேற்கிலுள்ளது. இக்குடிகள் மனப் பூர்வமாகப் பள்ளத்தாக்கின் வாசலைக் கட்டியெழுப்ப முன்வந்தனர். நொறுங்குண்ட இருதய முள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார் (சங். 34 : 18). "உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங் குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்" (ஏசாயா 57 : 15) என்று கர்த்தர் உரைக்கிறார். "சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிற வனையே நோக்கிப்பார்ப்பேன்" (ஏசாயா 66 : 2) என்பதும் அவரது திருவாய்மொழி. நொறுங்குண்ட இருதயமுள்ளவர்கள் மட்டுமே பிறரால் தாழ்த்தப்படும்போதும், தாழ்வான நிலையில் வைக்கப் படும்போதும் மனதில் இளைப்பாறுதலைப் பாதுகாத்து, தாழ்மையில் வளர்ந்து பூரணப்பட இயலும். ஆகவே நொறுங்குண்ட இருதயத்துடனும், கிறிஸ்துவின் தாழ்மையைத் தரித்துக்கொள்ள வேண்டும் என்ற வாஞ்சையுடனும் நம் ஜீவியத்தில் பள்ளத்தாக்கின் வாசலை நாம் கட்டியெழுப்பி அதைக் காத்துக்கொள்வோமாக !

ரோமருக்கு எழுதிய நிருபத்தின் விளக்கவுரை

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

ரோமர் 6 : 5 - க்கான விளக்கத்தின் தொடர்ச்சி:

இவ்வசனத்தில் இரண்டாவது குறிப்பிடப்பட்டுள்ள 'சாயல்' என்பது தமிழிலும் இன்னும் சில மொழி பெயர்ப்புகளிலும் காணப்பட்டாலும் Beck மொழி பெயர்ப்பில், 'We will also rise with him as he did' என்று எழுதப்பட்டிருக்கிறது. இதன் கருத்து, அவர் உயிரோடு எழுந்தது போல நாமும் எழுந்திருப்போம் என்பதே.

ஞானஸ்நானத்தில் நாம் தண்ணீருக்குள் முழுக்கப்படும்போது கிறிஸ்துவுடனே அடக்கம்பண்ணப்படுகிறோம் என்றும் தண்ணீரிலிருந்து வெளியே வரும்போது உயிரோடு எழுப்பப்படுகிறோம் என்றும் சிலர் போதிப்பதுண்டு. இந்த விளக்கம் தவறானது. ஏனெனில், தண்ணீருக்குள் மூழ்குவது அடக்கம்பண்ணப்படுதலின் சாயலென்றாலும் தண்ணீரிலிருந்து மேலே வருவது மூலபாஷையில் சாயல் என்று குறிப்பிடப்படாததினால் அது உயிர்த்தெழுதலாகாது என்று நாம் விளங்கிக்கொள்கிறோம். ஏனெனில் தண்ணீரிலிருந்து வெளியே வருவது உயிர்த்தெழுதலென்று கூறினால் அது வெறும் சாயலேயன்றி ஆத்துமாவிலுண்டாகும் உண்மையான உயிர்த்தெழுதலின் அனுபவமாயிராது. இக்காரணத்தைக்கொண்டே கொலோசெயர் 2 : 12 - இல், "ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலி ன்மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இதன் கருத்து, விசுவாசத்தினாலே அல்லது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் உயிர்ப்பிக்கப்படும் அந்த அனுபவத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் நாம் தண்ணீரிலிருந்து வெளியே வருகிறோம் என்பதே. இதைக் காண்பிக்கும் படியாகவே கிறிஸ்துவை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின்மேலுள்ள விசுவாசத் தினாலே என்று எழுதப்பட்டுள்ளது. அந்தச் செயல் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்தெழுப்பின பரிசுத்த ஆவியானவருடைய செயலே. பரிசுத்த ஆவியினால் கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, உள்ளான மனுஷனில் அந்த உயிர்த்தெழுதலின் வல்லமையை அடைந்துகொள்வோம் என்ற விசுவாசத்தினாலே நாம் தண்ணீரிலிருந்து வெளியே வருகிறோம். பின்பு பரிசுத்தஆவியின் அபிஷேகத்தினால் உண்மையான உயிர்த்தெழுதலின் அனுபவத்தை நாம் அடைந்துகொள்கிறோம்.

"நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக் றோம்" (6 : 6).

இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் பழைய மனுஷன் என்பது நம்முடைய பழைய ஜீவியத்தைக் காண்பிக்கிறது. இந்தப் பழைய மனுஷனுக்கு, நம்முடைய புறம்பான சரீரத்தைப் போல எல்லா அவயவங்களுமுள்ள காணப்படாத ஒரு சரீரம் உண்டு. பாவ சரீரம் என்பது ஒருவனுடைய பாவக் கிரியைகளினால் அவனுக்குள் சிருஷ்டிக்கப்படும், புறம்பே காணப்படாத ஒரு சரீரமாகும். பாவக்கிரியைகள், அவனுக்குள் வாசம்பண்ணும் பாவ சுபாவத்தின் தூண்டுதலால், அவனுடைய மாம்ச சரீரத்தின் அவயவங்களினால் செயல்படுத்தப்படுபவையாகும். பாவ சுபாவம் அவனுக்குள் ஒரு இராஜாவைப் போல ஆளுகை செய்து, அவனைப் பாவக்கிரியைகளுக்குள்ளாக்கி விடுகிறது. இப்பாவ சுபாவத்தை அப். பவுல், 'அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணம்' (ரோமர் 7 : 23) எனக் குறிப்பிடுகிறார். இந்த அவயவங்களில் வாசஞ்செய்யும் பாவத்தினுடைய தூண்டுதலினால் அவனுடைய கிரியைகளில் பாவம்

வெளிப்படும்போது அது பாவ ஜீவியமாக மாற்றப்படுகிறது. இதையே பழைய மனுஷன் என்று நாம் கண்டோம்.

சிலர் இந்தப் பழைய மனுஷனை ஞானஸ்நானத்தில் அடக்கம் செய்கிறோம் என்று பிரசங்கிப்பதும், போதிப்பதுமுண்டு. பழைய மனுஷனை அடக்கம்பண்ணுகிறோம் என்ற கருத்தை நாம் ஞானஸ்நானத்தில் காண்பதில்லை. ஆனால் ஞானஸ்நானம் பெறும்படி வருகிற ஒருவன் பழைய மனுஷனை சிலுவையில் அறைந்தவனாயிருக்க வேண்டும். கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காகச் சிலுவையில் அறையப்பட்டிருந்தாலும் அவ்வித சிலுவையில் அறையப்பட்டதற்கு இணையான ஒரு காரியம் நம்முடைய ஜீவியத்தில் நிறைவேற்றப்படாவிட்டால் கிறிஸ்து நமக்காக மரித்தார் என்பதினால் யாதொரு பிரயோஜனமுமில்லை. கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதற்கு இணையாக எவ்வாறு நம்முடைய ஜீவியத்தை நாம் மாற்றிக்கொள்ள முடியும்? நாம் முன்பு கூறியது போல பாவ சுபாவம் கிரியைகளின் மூலம் ஒரு சரீரமாக அல்லது பாவசரீரமாக வெளிப்படுகிறது. நமது அவயவங்கள் பாவமுள்ளவைகளா? இல்லை. ஏனெனில் அவயவங்கள் பாவமுள்ளவைகளாயிருந்தால் அவைகள் அழிக்கப்பட்டால்தான் பரிசுத்தமாக ஜீவிக்க முடியும். புத்த மார்க்கத்தினர் இந்த சரீரம் தீமை என்று சொல்லி அதை வதைத்து அழிக்கப் பிரயாசப்படுகின்றனர். வேத வசனத்தின்படி இந்த சரீரம் அற்புதமாகச் சிருஷ்டிக்கப்பட்டது என்று தாவீது கூறுகிறான் (சங். 139 : 14, 15). கர்த்தராகிய இயேசு உலகத்தில் வந்தபோது அவருக்காக ஒரு சரீரம் ஆயத்தப்பண்ணப்பட்டது என்று அப். பவுல் கூறுகிறார் (எபி. 10 : 5).

ஆகவே, நமது பாவசுபாவம், ஒரு வியாதி போல நமது சரீரத்தையும் அவயவங்களையும் மேற் கொண்டு ஆளுகை செய்கிறது. பழைய மனுஷனைச் சிலுவையில் அறைந்த பிறகு எடுக்கும் ஞானஸ் நானமே மெய்யான ஞானஸ்நானம். இது ஆங்கில வேதபுத்தகத்தில், 'knowing that our old man is crucified that the body of sin might be destroyed' என்று எழுதப்பட்டிருக்கிறது. இதன் கருத்து, ஞானஸ்
நானம் பெற்றுக்கொள்வதற்கு முன்னே பழைய மனுஷன் சிலுவையிலறையப்பட்டதென்று அல்லது பாவசரீரம் ஒழிந்து போயிற்றென்று நாம் நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதே. ஆகையால் இப்படிச் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்பனையாக, நாம் நம்முடைய ஒவ்வொரு அவயவத்தையும் கொண்டு செய்த பாவங்களை மனஸ்தாபத்தோடு தேவனிடத்தில் அறிக்கை செய்ய வேண்டியிருக்கிறது. நம்முடைய பாவங்களைத் தேவனிடத்தில் அறிக்கை செய்வதில் தேவனுக்கேற்ற துக்கமும், பாவத்தைப் பற்றிய மனஸ்தாபமும் உண்டாயிருக்க வேண்டும். ஒவ்வொரு அவயவத்தினால் செய்த பாவங்களையும் நாம் அறிக்கையிடும்போது அந்த அவயவம் கிறிஸ்துவோடு சிலுவையிலறையப்பட்டதற்குச் சமமாகிறது; நாம் பாவக்கிரியைகளுக்குச் செத்தவர்களாகிறோம் (I பேதுரு 2 : 24). அதற்குப் பின்னர் ஞானஸ்நானத்தில் நாம் நமக்குள் வாசம்பண்ணின பாவ சுபாவத்திற்கு மரிக்கிறோம் (ரோமர் 6 : 2). இதனையே அப். பவுல் 'கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானம்' என்று குறிப்பிடுகிறார். இது ஞானஸ்நானம் பெற்றது முதல் அனுதினமும் ஒருவனில் நடைபெறும் அனுபவமாகும். மேலும் ஞானஸ்நானத்தில் நாம் தேவனுடைய சித்தம் செய்வதற்கான முதல் அடியெடுத்து வைக்கிறோம் (லூக்கா 7 : 30). அதுவரை மனதும் மாம்சமும் விரும்பினபடி செயல்பட்டு வந்த சரீரம் 'தேவசித்தம்' என்னும் கிறிஸ்துவின் நுகத்தின் கீழ் கொண்டுவரப்படுகிறது (மத். 11 : 29). சுயம், சுயசித்தம் என்பதற்கு ஆங்கிலத்தில் 'ego' (நான் என்ற முனைப்பு) என்று கூறப்பட்டிருக்கிறது. பழைய மனுஷனையும், பாவசரீரத்தையும் நாம் ஒழித்து விடுவதைப்போல இதை எளிதில் ஒழித்துவிட முடியாது. சுய சித்தத்தைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தல் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்படுதலில் ஆரம்பமாகிறது. இதுவே நான்காம் வசனத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

ஞானஸ்நானத்தில் நம்முடைய சரீரத்தோடு நம்முடைய சித்தத்தைத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தல் என்பது ஒரு தேசம் மற்றொரு தேசத்தோடுள்ள யுத்தத்தில் தோல்வியடையும்போது அத்தேசத்திற்கு முற்றிலும் சரணடைந்து விடுவதைப்போன்ற ஒரு அனுபவமாகும். இது, அந்த யுத்தத்தை நடத்தின தளபதி தனக்குரிய தகுதிச் சின்னங்கள், விருதுச் சின்னங்கள், சிறப்புரிமைச் சின்னங்கள் போன்ற எல்லாவற்றையும் கழற்றி, யாருக்கு முன்பாக சரணடைந்தானோ அந்தத் தளபதிக்கு முன் மேஜையின் மேல் வைத்துவிட்டு, தான் சரணடைந்ததாகக் கையொப்பமிடுவதைப் போன்றதே. ஞானஸ்நானத்தில் நம்முடைய சித்தம், வாஞ்சை, விருப்பம், குறிக்கோள்கள், ஜீவியத்தின் நோக்கம் எல்லாவற்றையும் தேவனுக்குச் சரணாக்கி விடுவதையே இது காண்பிக்கிறது. ஆனால் பரிசுத்தஆவியின் அபிஷேகம் பெற்று, பரிசுத்தஆவியானவரின் கிரியைக்கு அனுதினமும் நம்மை ஒப்புக்கொடுப்பதினால் மட்டுமே சுயசித்தம் முற்றிலும் சாம்பலாக்கப்பட்டு, பூரண தேவசித்தம் செய்கிற அனுபவம் நம்மில் உருவாகும்.

ஆகவே பழைய மனுஷன் சிலுவையிலறையப்பட்டு, பாவசரீரம் ஒழிந்து போகுதல் இரட்சிப்பிலும், பாவத்திற்கு மரித்தவனாய் எண்ணிக்கொண்டு, தேவசித்தம் செய்ய ஆரம்பித்தல் ஞானஸ்நானத்திலும் ஒருவன் அடைந்துகொள்ளும் அனுபவங்களாகும்.

கர்த்தராகிய இயேசுவின் பிறப்பும் ஆளுகையும்

எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேம், எருசலேமிலிருந்து ஐந்து மைல் தூரத்திலுள்ள ஒரு சிறிய கிராமம் ஆகும். எப்பிராத்தா என்பது பெத்லகேமின் பூர்வீகப் பெயராகும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இங்கே பிறந்தபடியால் இந்தச் சிறிய இடம் கீர்த்தி பெற்றதாயிருக்கிறது. "பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள

ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு … வருவார்" என்று மீகா தீர்க்கதரிசி உரைத்ததின் நிறைவேறுதலாக (5 : 2), கர்த்தராகிய இயேசு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகக் கன்னிமரியாளிடத்தில் உற்பவித்து, எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமில் பிறந்தார். அவருடைய அதிசயப் பிறப்பை உலகெங்கும் கிறிஸ்துமஸ் என்ற பெயரில் கொண்டாடிவருகிறார்கள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அன்று பெத்லகேமில் சிறிய பாலகனாக அவதரித்திருந்தபோதிலும், அவர் பிறக்கும்போதே அவரைக் குறித்து, யூதருக்கு ராஜாவாகப் பிறந்தவர் என்று சொல்லப்பட்டிருக் கிறது (மத். 2 : 2). அந்த இயேசுவானவர் இன்று நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உருவாக வேண்டியது அவசியமே (கலா. 4 : 19). ஆவிக்குரிய யூதராகிய நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் பிறந்திருக்கிற அந்த ராஜாவாகிய இயேசு நம்மில் வாசஞ்செய்து, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு விரோத மாகப் போராடுகிற எல்லா வல்லமைகளையும் அழித்து, நம்மை ஆளுகை செய்து நடத்துவாரென் றால் அதுவே உண்மையான கிறிஸ்துமஸ் ஆகும்.

கர்த்தராகிய இயேசு ஒருவரது உள்ளத்தில் பிறக்க வேண்டுமென்றால் முதலாவது அந்நபர் தன்னை ஒரு பெத்லகேமாக மாற்றிக்கொள்ள வேண்டும். அவர் ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா, தேவாதிதேவன்! அவர் சகல அதிகாரமும் ஆளுகையும் வல்லமையும் உடையவராயிருந்தும், யூதேயாவின் ஆயிரங்களுக்குள் ஒரு சிறிய கிராமம் அவர் பிறப்புக்காகத் தெரிந்துகொள்ளப்பட்டது. சர்வ வல்லமையும் சர்வ மகிமையும் உடைய தேவாதி தேவனாகிய இயேசு தாம் மனுஷனாக அவதரிக்க மாளிகையையோ, ராஜ அரண்மனையையோ விரும்பவில்லை. "நான் ஆண்டவருக்கு அடிமை" என்று சொல்லிய தாழ்மையான இருதயமுள்ளவளாயிருந்த மரியாளிடத்தில் அவர் உற்பவித்தார் (லூக்கா 1 : 31, 38, 48). அவர் மாட்டுத்தொழுவத்தில் பிறந்து அதின் முன்னணையில் கிடத்தப்பட்டார் (லூக்கா 2 : 7).

சிறிய பெத்லகேமைப் போலவும், எளிய மாட்டுத்தொழுவத்தைப் போலவும், மரியாளுடைய இருதயத்தைப் போலவும் நம்முடைய இருதயம் உண்மையாகவே தாழ்மையானதாய்க் காணப்பட வேண்டும். "கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார்; மேட்டிமையான வனையோ தூரத்திலிருந்து அறிகிறார்" (சங். 138 : 6). மகத்துவமும் உன்னதமுமானவரும் பரிசுத்த ஸ்தலத்தில் வாசம்பண்ணுகிறவருமான தேவன், தாம் நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்தில் வாசம்பண்ணுவதாகக் கூறுகிறார் (ஏசாயா 57 : 15).

அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி என்று அழைக்கப்பட்ட ஒரு தூதன் தன் பெருமை யினாலே தன் ஸ்தானத்தை விட்டுத் தள்ளப்பட்டு, விழுந்துபோனான் (ஏசாயா 14 : 12 - 15). "என் வல்லமையின் பராக்கிரமத்தினால், … நான் கட்டின மகா பாபிலோன்" என்று பெருமையாகப் பேசின ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் மாடுகளைப் போல் புல்லை மேய்ந்தான் (தானி. 4 : 30, 33). நாமும் நம்முடைய ஜீவியத்தில் பேச்சிலும் கிரியையிலும் பார்வையிலும் பல சந்தர்ப்பங்களில் பெருமையாக நடந்துகொள்கிறோம். நம்முடைய நடை உடை பாவனைகளிலும் நாம் பெருமையை வெளிப்படுத்துகிறோம். தேவனுடைய கிருபையை உயர்த்திப் பேசாமல், நம்முடைய சுய பெலத்தையும், சொந்த ஞானத்தையும், கல்வியறிவையும், திறமைகளையும் சில சந்தர்ப்பங்களில் நாம் உயர்த்திப் பேசி, தேவனுடைய கிருபையை இழந்துபோகிறோம். தேவன் தம்முடைய கிருபையையும் வரங்களையும் தாலந்துகளையும் நமக்குத் தந்து நம்மைப் பிரயோஜனப்படுத்தி உயர்த்துகிற வேளையில் நம்மைத் தாழ்த்துவதற்குப் பதிலாக, சிலவேளைகளில் நம்முடைய பெயரை நாம் வெளிப்படுத்துகிறோம். இந்த மேட்டிமையான சுபாவம் நம்மில் காணப்பட்டால் கர்த்தராகிய இயேசு நம்மில் வாசம்பண்ணி, நம்மை ஆளுகை செய்ய முடியாது.

தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் (யாக். 4 : 6). பெருமை குணத்தைத் தேவன் வெறுக்கிறார். ஆகவே பெருமையை நாம் களைந்து போடுவோமாக. தாவீது ஒரு ராஜாவாக உயர்த்தப்பட்டிருந்தபோதிலும் தன்னை ஒரு புழு என்று கூறி தாழ்த்துகிறான் (சங். 22 : 6). ஆமோஸ் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தபோதிலும் தன்னை மந்தை மேய்க்கிறவன் என்றும், காட்டத்திப் பழங்களைப் பொறுக்குகிறவன் என்றும் சொல்லித் தாழ்த்துகிறான் (ஆமோஸ் 7 : 14). அப். பவுல் ஒரு பரிசுத்தவானாய் இருந்தபோதிலும், பாவிகளில் பிரதான பாவி என்றும் (I தீமோ. 1 : 15), தேவன் பல கிருபைகள் கொடுத்து உயர்த்தினாலும், "நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவ கிருபையே" என்றும் கூறி தன்னைத் தாழ்த்துகிறார் (I கொரி. 15 : 10). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பரலோகம் விட்டுப் பூலோகம் வந்து சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்தினார் (பிலி. 2 : 8). ஆகவே நண்பனே! தாழ்மையுள்ள பாலகனாகிய இயேசு உன்னில் பிறந்து வாசம்பண்ணும்படியாக பெத்லகேமைப் போலவும், பாலகனாகிய இயேசு கிடத்தப் பட்டிருந்த எளிமையான முன்னணையைப் போலவும் உன் இருதயத்தைத் தாழ்மையுள்ளதாக மாற்றிக் கொள்வாயாக. 'ஏற்கனவே கிறிஸ்து எங்களில் பிறந்திருக்கிறார்' என்று சொல்லிக்கொள்ளுகிற தேவ ஜனங்களும், தங்கள் வார்த்தையிலும், சகல நடக்கைகளிலும் உடையிலும் சிந்தையிலும் ஊழியத்திலும் தாழ்மையைத் தரித்துக்கொண்டு, அவர் தொடர்ந்து தங்களில் வாசம்பண்ணி, தங்கள் ஜீவியத்தை ஆளுகை செய்து நடத்தும்படி அவருக்கு இடமளிக்க வேண்டும். இதுவே மெய்யான கிறிஸ்துமஸ்.

அடுத்தபடியாக, இயேசுகிறிஸ்துவின் ஆளுகையைப் பற்றி நாம் சிந்திப்போமாக. கர்த்தராகிய இயேசு பெத்லகேமில் இஸ்ரவேலை ஆளுகிற ராஜாவாக அவதரித்தார். இவருடைய ஆளுகையைக் குறித்து கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும் என்றும் (ஏசாயா 9 : 6), ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து

எழும்பும் என்றும் (எண். 24 : 17) பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டிருக்கின்றன. மனுக்குலத்திற்கு விரோதமாகப் போராடுகிற எல்லா வல்லமைகளையும் அழித்து, உண்மையான ஆளுகை செய்யும்படியாகக் கர்த்தராகிய இயேசு மனித அவதாரம் எடுத்து இந்தப் பூமியிலே வந்தார். மனுக்குலத்தோடு போராடுகிற ஏழுவித அந்நிய வல்லமைகளைக் கர்த்தராகிய இயேசு எப்படி அழித்து அவற்றின்மேல் நமக்கு ஆளுகையைத் தருகிறார் என்று நாம் கீழே காண்போமாக:

1. பாவத்தின்மேல் ஆளுகை:

"அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" என்று தேவதூதன் கூறினான் (மத். 1 : 21). எனவே கர்த்தராகிய இயேசுவின் நாமம் பாவத்தின் வல்லமையை அழிக்கிற நாமமாயிருக்கிறது. கர்த்தராகிய இயேசு பிறந்தபோது ஏரோது ராஜா கலங்கிப்போனான் (மத். 2 : 3). ஏரோது பிசாசுக்கு அடையாளமாக இருக்கிறான். பிசாசின் வல்லமையாகிய பாவத்தை அழித்து தேவஜனங்களை ஆளுகை செய்பவர் ஒருவர் தோன்றிவிட்டார் என்று அந்தகார லோகாதிபதியும் அவனது சேனைகளும் கலங்கின. பாவ இருளின் வல்லமையை அழிக்கிற ஒளியாய்க் கர்த்தராகிய இயேசு இந்த உலகத்தில் தோன்றினார் (மத். 4 : 15 ; யோவான் 1 : 9). கர்த்தராகிய இயேசு, ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவித்து ஜனங்களின் பாவங்களை மன்னித்தார். அவர் நம்மைப் போல எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டாலும், பாவமில்லாமல் பரிசுத்தராய் ஜீவித்தார் (எபி. 4 : 15). அவர் பாவிகளை நேசித்தார்; பாவத்தை வெறுத்தார், அவருக்குள் பாவமில்லை, அவர் பாவம் செய்யவில்லை, அவர் பாவத்தை அறியவில்லை. நமக்கும் பாவத்தின்மேல் ஆளுகை அளிக்கும்படியாகவே அவர் பாவமற்றவராய் அவதரித்தார். பாவம் நம்மை ஆளாதபடிக்கு நாம் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருப்போமாக (ரோமர் 6 : 11 - 14).

2. வியாதி, பெலவீனம் இவற்றின்மேல் ஆளுகை:

கர்த்தராகிய இயேசு யூதேயா, கலிலேயா எங்கும் சுற்றி நடந்து ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார். அவருடைய கீர்த்தி எங்கும் பிரசித்தமாயிற்று. அவர் பலவித வியாதிகளையும் வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும் பிசாசு பிடித்திருந்தவர்களையும் சந்திரரோகிகளையும் திமிர்வாதக்காரரையும் சொஸ்தமாக்கினார் (மத். 4 : 23, 24); பத்து குஷ்டரோகிகளைக் குணமாக்கினார் (லூக்கா 17 : 11 - 15); பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ளவளாயிருந்த ஒரு ஸ்திரீயைக் குணமாக்கினார்; பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்டிருந்த ஒரு ஸ்திரீயை, "ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய்" என்று சொல்லி, விடுதலையாக்கினார் (லூக்கா 13 : 11 - 13); முப்பத்தெட்டு வருஷம் வியாதியாய்ப் படுத்திருந்த மனுஷனை சொஸ்தமாக்கினார் (யோவான் 5 : 5 - 9). சகல வியாதிகளையும் குணமாக்கும் அதிகாரத்தையும் வல்லமையையும் அவர் தம் சீஷர்களுக்கும் கொடுத்தார் (லூக்கா 9 : 1). அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு நம்முடைய நோய்களைச் சுமந்தார். அவர் வியாதிப்படவில்லை, பெலவீனப்படவில்லை. வியாதியின் வல்லமையை அழித்து நம்மையும் வியாதிகளின்மேல் அதிகாரமுள்ளவர்களாக்கும்படியாக அவர் பிறந்தார் (மாற்கு 16 : 17, 18 ; ரோமர் 8 : 11).

3. பிசாசின்மேல் ஆளுகை:

பிசாசு பிடித்திருந்த அநேகரைக் கர்த்தராகிய இயேசுவிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தப்படுத்தினார் (மத். 8 : 16). பிசாசு பிடித்த ஊமையான ஒரு மனுஷனை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர் பிசாசைத் துரத்தின பின்பு அந்த ஊமையன் பேசினான் (மத். 9 : 33). சந்திரரோகியாய் அடிக்கடி தீயிலும் ஜலத்திலும் விழுந்துகொண்டிருந்த ஒருவனுக்குள் இருந்த பிசாசைத் துரத்தி அவனை அவர் குணமாக்கினார் (மத். 17 : 18). கர்த்தராகிய இயேசு தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்த அவர்களுக்கு அதிகாரத்தையும் வல்லமையையும் கொடுத்தார் (லூக்கா 9 : 1). "பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்" (I யோவான் 3 : 8). அவர் மூலமாக நாமும் பிசாசை ஜெயிக்கிறோம் (வெளி. 12 : 11).

4. மரணத்தின்மேல் ஆளுகை:

கர்த்தராகிய இயேசு இப்பூமியில் ஊழியம் செய்துகொண்டிருந்த நாட்களில், ஒரு ஜெப ஆலயத்தலைவனுடைய குமாரத்தி மரித்துப் போனாள். யாவரும் அழுது புலம்பிக்கொண்டிருந்தார்கள். கர்த்தராகிய இயேசு மரித்தப் பிள்ளையின் கையைப் பிடித்து, "சிறுபெண்ணே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன்" ("தலீத்தாகூமி") என்றார். அந்தச் சிறுமி உடனே எழுந்து நடந்தாள் (மாற்கு 5 : 41, 42). மரியாள், மார்த்தாள் என்பவர்களுடைய சகோதரனாகிய லாசரு மரித்துப் போய் நான்கு நாளான பின்பு கல்லறையின் அருகே கர்த்தராகிய இயேசு போய், "லாசருவே, வெளியே வா" என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். லாசரு உயிரோடு எழும்பினான் (யோவான் 11 : 43, 44). நாயீனூர் கைம்பெண்ணின் மரித்த ஒரே மகனைக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எழுப்பினார் (லூக்கா 7 : 15). கர்த்தராகிய இயேசு மரித்தோரையும் உயிர்ப்பிக்க வல்லவர் என்பதை உலகிற்கு வெளிப்படுத்தும்படி இந்த அற்புதங்களைத் தேவன் அவரைக் கொண்டு நடப்பித்தார். அவர்கள் தொடர்ந்து இப்பூமியில் ஜீவித்து, பின்பு இயற்கை மரணம் அடைந்தனர். ஆனால் கர்த்தராகிய இயேசு பாவமற்ற பரிசுத்தராய் ஜீவித்தபடியினால், அவர் மரித்து

மூன்று நாட்களான பின்பு, மரணத்தை ஜெயித்தவராய்க் கல்லறையை விட்டு உயிர்த்தெழுந்து இன்றுமென்றும் ஜீவிக்கிறார் (மத். 28 : 6 ; அப். 2 : 27, 31). நாமும் அவருடைய கிருபையினால் பாவத்தை ஜெயித்து, பூரண பரிசுத்தவான்களாய் ஜீவித்து மரிப்போமாகில், மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்ற வார்த்தை நம்மிலும் நிறைவேறும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே மரணத்தின்மேலும் நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (I கொரி. 15 : 54, 57).

5. மாம்சத்தின்மேல் ஆளுகை:

கர்த்தராகிய இயேசு நாற்பது நாள் உபவாசமாயிருந்த பின்பு அவருக்குப் பசி உண்டாயிற்று. சோதனைக்காரனாகிய பிசாசு அவரைச் சோதித்த வேளையில், தேவனுடைய வார்த்தையால் அவர் பிசாசை எதிர்த்து, பசியை ஜெயித்தார் (மத். 4 : 3, 4). அவர் பகற்காலங்களில் ஓய்வின்றி நடந்து திரிந்து ஊழியஞ்செய்தபோதிலும் இராக்காலங்களில் ஜெபத்தில் தரித்திருந்து, சரீரக் களைப்பையும் நித்திரையை யும் ஜெயிக்கிறவராயிருந்தார். அவர் ஜனங்களோடே பேசிக்கொண்டிருக்கையில் அவருடைய தாயாரும் சகோதரரும் அவரோடே பேசக் காத்திருக்கிறார்கள் என்று அறிவிக்கப்பட்ட வேளையில், “பரலோகத் திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோ தரியும் தாயுமாய் இருக்கிறான்” என்று சொல்லி, மாம்சீக பற்றற்றவராய்த் தம்மை வெளிப்படுத்தினார் (மத். 12 : 49, 50). மாம்ச சிந்தை, மாம்சீக ஆசை போன்றவற்றுடன் அவருக்கு எவ்வித சம்பந்தமு மிருக்கவில்லை. நாம் கிறிஸ்துவினுடையவர்களாவதின் மூலம், மாம்சத்தையும் அதின் ஆசை இச்சை களையும் சிலுவையில் அறைந்து அவற்றின் மேல் ஜெயம் பெறுகிறோம் (கலா. 5 : 24). மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல (ரோமர் 8 : 12, 13). இதுவும் கர்த்தராகிய இயேசு வினால் நமக்குக் கிடைத்த ஈவாகும்.

6. உலகத்தின் மேல் ஆளுகை:

பிசாசு கர்த்தராகிய இயேசுவை உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய் உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் தருவதாகக் கூறி, தன்னைப் பணிந்துகொள்ளச் சொன்னபோது அவர் தேவனுடைய வார்த்தையினால் அவன் மீது ஜெயம் பெற்றார் (மத். 4 : 8 - 10). “இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை” என்று அவர் தைரிய மாகக் கூறினார் (யோவான் 14 : 30). “திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்” என்று சொல்லி, அவர் தம் சீஷர்களைத் தைரியப்படுத்தினார் (யோவான் 16 : 33). நாமும் தேவனால் பிறந்தவர்களாவதின் மூலம் உலகத்தை ஜெயிக்கிறோம் (I யோவான் 5 : 4).

7. இயற்கையின்மேல் ஆளுகை:

கர்த்தராகிய இயேசு நாலாம் ஜாமத்தில் கடலின்மேல் நடந்து வந்து சீஷர்களைத் தைரியப் படுத்தினார் (மாற்கு 6 : 48 - 50). மற்றொரு சந்தர்ப்பத்தில் சீஷர்கள் கடலில் பிரயாணம் செய்த வேளையில் பெருங்காற்று உண்டாயிற்று. கர்த்தராகிய இயேசு கடலையும் காற்றையும் அதட்டி அமைதல் உண்டாக்கினார் (மத். 8 : 26). மனுஷனுக்குப் பல இடையூறுகளை விளைவிக்கும் இயற்கையின் வல்லமைகளையும் அவர் ஆளுகை செய்தார். இன்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு மாசற்ற ஜீவியம் செய்யும்படி சாதாரண மனுஷராகிய நமக்கு அவர் அளவில்லாத கிருபையை அளிக்கிறார் (தீத்து 2 : 11 - 14).

இப்படியாக மனுக்குலத்தோடு போராடுகிற எல்லா அந்நிய வல்லமைகளையும் முறிய அடிக்க வும், அவற்றின்மேல் ஆளுகை அளிக்கவும், ராஜாவாகிய இயேசு பெத்லகேமில் பாலகனாக அவ தரித்தார். ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நம்முடைய அனுதின ஜீவியத்தில் போராடுகிற பாவம், வியாதி, பிசாசு, மரணம், மாம்சம், உலகம், இயற்கை இவை எல்லாவற்றின் மேலும் நாம் ஜெயம் பெறும்படி யாகக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மிலே ராஜாவாக ஆளுகை செய்வாராக.

ராஜாதி ராஜாவாகிய இயேசுகிறிஸ்து நம் உள்ளத்திலே பிறந்து வாசம்பண்ணி, நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை ஆளுகை செய்து, அவரைப் போல நம்மைத் தாழ்மையுள்ளவர்களா கவும், அதே சமயத்தில் நம் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு விரோதமாகப் போராடுகிற அனைத்து வல்லமைகளையும் ஜெயித்து ஆளுகை செய்கிறவர்களாகவும் நம்மை மாற்றுவாராக. இதுவே கிறிஸ்துமஸ் ஆகும்.

“இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்”

தேவஜனங்களாகிய நம்மை இவ்வருடத்தின் கடைசி வரை கர்த்தர் நடத்திவந்த வழிகள் அற்புத மானவை. அவர் நமக்குச் செய்திருக்கிற நன்மைகள் எண்ணுக்கடங்காதவை. நமக்கு வந்த கஷ்டங்கள், சோதனைகள், வியாதிகள் எல்லாவற்றிலுமிருந்து அவர் கிருபையாய் நம்மை விடுவித்துப் பாதுகாத்த விதங்கள் ஆச்சரியமானவை. பல சந்தர்ப்பங்களில் நாம் செய்த தீர்மானங்களிலும் பொருத்தனைகளிலும் நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், உண்மையுள்ள மாறாத தேவன் நம்முடைய ஜீவியத்திற்குத் தேவையான கிருபை, அபிஷேகம், ஆலோசனைகள், சரீர சுகம் எல்லாம் தந்து நம்மை நடத்திவந்தார். தாவீதைப் போல, “தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம்?” என்று நாமும் சொல்லலாம் (I நாளா. 17 : 16). இவ்வளவாய் அவர் நம்மைத் தாங்கி, ஏந்தி, சுமந்து வந்திருக்கிறார். இருப்பினும் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் நிலவரம் என்ன என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க

வேண்டியது அவசியமாகும். கர்த்தர் நம்மை இரட்சித்து, அபிஷேகம்பண்ணின ஆரம்ப நாட்களில் நாம் கர்த்தருக்காக வைராக்கியமாக ஜீவித்து, தேவ அன்பினால் நிறைந்து அவருக்காகப் பிரயாசப்பட்டு, அவருடைய நாமத்தினிமித்தம் சந்தோஷமாகப் பாடுகள், கஷ்டங்களைச் சகித்துவந்தோம். ஆனால் நம்மில் சிலர் நாட்கள் செல்லச் செல்ல கர்த்தருக்காகப் பாராட்டிய வைராக்கியத்திலும் உற்சாகத்திலும் குறைவுபட்டு, அன்பு தணிந்தவர்களாய், ஆவியின் அனலை இழந்து, ஒரு சாதாரண வெதுவெதுப்பான நிலவரத்திற்கு வந்துவிட்டதை நாம் உணரலாம். ஒருகாலத்தில், 'கிறிஸ்துவும் நானும், நானும் கிறிஸ்துவும்' என்கிறதான ஐக்கியத்தில் ஜீவித்த சிலர், இப்போது தேவனோடுள்ள ஐக்கியத்தில் பிளவுபட்டு, தேவ சமுகத்திற்கு அந்நியராகி, கிறிஸ்துவை விட்டுத் தூரமாகப் போயிருக்கின்றனர்.

வெளிப்படுத்தின விசேஷம் 3 - ஆம் அதிகாரம் 14 - 22 வசனங்களில் லவோதிக்கேயா சபை யின் நிலவரத்தைக் குறித்து ஆவியானவர் சொல்லுகிறதை நாம் வாசிக்கிறோம். நம்மைக் குறித்து நாமே சொல்லும் சாட்சியைவிட, நம்மைக் குறித்துத் தேவன் சொல்லும் சாட்சியே உண்மையுள்ளதாக இருக்கிறது. எனவே தேவன் அச்சபையின் நிலவரத்தைக் குறித்துக் கூறும் முன்பாக, தம்மை, **'உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சி'** என்று அறிமுகப்படுத்துகிறார் (வெளி. 3 : 14 ; 1 : 5). மேலும், "என் சாட்சி உண்மையாயிருக்கிறது; ... நான் நியாயந்தீர்த்தால், என் தீர்ப்பு சத்தியத்தின்படியிருக்கும்" என்றும் கிறிஸ்து கூறியிருக்கிறார் (யோவான் 8 : 14 - 16). லவோதிக்கேயா சபை தன்னைக் குறித்துக் கூறிக்கொண்ட சாட்சியும், கிறிஸ்து அதைக் குறித்துக் கொடுத்த சாட்சியும் முற்றிலும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாகவே இருந்தன. லவோதிக்கேயா சபை, தன்னை 'ஐசுவரியவான்' என்றும், 'திரவியசம்பன்னனென்றும்', 'எனக்கு ஒரு குறைவுமில்லை' என்றும் கூறிக்கொண்டது. ஆனால் உண்மையும் சத்தியமுமுள்ள தேவன் அதை 'நிர்ப்பாக்கியமுள்ளவன்' என்றும், 'பரிதபிக்கப்படத்தக்கவன்' என்றும், 'தரித்திரன்' என்றும், 'குருடன்' என்றும், 'நிர்வாணி' என்றும் குறிப்பிட்டார் (வெளி. 3 : 17). இவை ஒன்றுக்கொன்று எவ்வளவு முரண்பட்ட பார்வை என்று கவனித்துப் பாருங்கள். எனவே ஏழு குத்துவிளக்குகளின் மத்தியில் உலாவிக்கொண்டிருப்பவர் கூறும் சாட்சியே உண்மையான சாட்சியாக இருப்பதால் நம் நிலவரத்தை ஆராய்ந்து, நம் ஜீவியத்தை அந்தச் சாட்சியுடன் ஒப்பிட்டு, நாம் லவோதிக்கேயா சபையைக் குறித்துச் சொல்லப்பட்ட நிலையில் இருப்போமாகில் அவருடைய சாட்சியைத் திறந்த மனதோடு ஒப்புக்கொண்டு மனந்திரும்புவோமாக.

தேவனற்ற ஆராதனை:

"இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" என்று தேவன் லவோதிக்கேயா சபையிடம் கூறுகிறார் (வச. 20). கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்கள், அவரை ஏற்றுக்கொள்ளும்படி சிலர் இவ்வசனத்தை எடுத்துப் பிரசங்கிக்கிறார்கள். ஆனால், இவ்வார்த்தைகள் மனந்திரும்பி, ஞானஸ்நானமும், பரிசுத்தஆவியின் அபிஷேகமும் பெற்றிருந்த லவோதிக்கேயா சபையாருக்கு எழுதப்பட்டவையாகும். "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்" என்று தேவன் சபையை நோக்கிக் கூறுவாரானால், அவரை ஆராதித்துக்கொண்டிருக்கும் சபைக்கு வெளியில் அவர் நின்றுகொண்டு அதற்குள்ளே பிரவேசிக்கும்படியாக அனுமதி கேட்கிறார் என்றுதான் அர்த்தம். ஆராதிக்கப்படுபவரை வெளியே நிறுத்திவிட்டு, அவர் வெளியே நின்று தட்டிக்கொண்டிருக்கிறதையுங்கூட அறியாத குருட்டாட்டமான நிலவரத்தில் லவோதிக்கேயா சபை காணப்பட்டது!

இப்படிப்பட்ட தேவனற்ற ஆராதனைக்குப் பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் திருஷ்டாந்தம் உள்ளது. தம்மை ஆராதிக்கும்படியாகவும், தமக்குப் பண்டிகை கொண்டாடும்படியாகவும் தேவன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார் (யாத். 10 : 3, 7, 9). இரவும் பகலும் அவர்கள் கர்த்தரால் வழிநடத்தப்பட்டனர் (யாத். 13 : 21, 22). எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம்பண்ணப்பட்டார்கள் (I கொரி. 10 : 2 - 4). சீனாய் மலையில், அவர்கள் கைக்கொள்ள வேண்டிய கற்பனைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. (யாத். 20 : 1 - 17). அங்கே மோசே கர்த்தருடைய வார்த்தைகள் யாவையும் ஜனங்களுக்கு அறிவித்தான். "ஜனங்கள் எல்லாரும் ஏகசத்தமாய்: கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம்" என்று கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணினார்கள் (யாத். 24 : 3, 8). ஆனால் வெகு சீக்கிரத்தில், எந்த மலையில் பிரமாணம் கொடுக்கப்பட்டதோ அதே மலையின் அடிவாரத்திலேயே ஆராதனைக்கடுத்த கற்பனையாகிய, "ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்" என்ற தேவகட்ட ளையை அவர்கள் மீறி, தங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை உண்டாக்க வேண்டும் என்று சொல்லி, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தனர் (யாத். 20 : 4, 5 ; 32 : 6).

எனினும் அவர்கள் தாங்கள் தேவனாகிய கர்த்தரையே ஆராதிப்பதாக எண்ணிக்கொண் டார்கள். ஆகையால் அவர்கள் உற்சாகமாக அதிகாலையில் எழுந்துவிட்டனர்; தாங்கள் கட்டின பலிபீடத்தில் தகனபலிகளையும், சமாதான பலிகளையும் செலுத்தினர் (யாத். 32 : 5, 6). தேவனுடைய கோபம் தங்கள்மேல்

மூண்டிருப்பதை அவர்கள் அறியவில்லை. மாறாக, அவர்கள் வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டியின் முன் ஆடிப் பாடினர். அவ்வாராதனையில், தேவனைத் தவிர, உற்சாகம், பலிகள், பாடல்கள், நடனம் போன்ற யாவும் இருந்தன. இவ்விதம் மெய்த் தேவனை ஆராதிப்பதாக எண்ணிக்கொண்டு, தேவனுக்குக் கீழ்ப்படியாமல் விக்கிரக ஆராதனை செய்த ஜனங்கள் அழிந்துபோனார்கள் (வச. 28). இப்படிப்பட்ட ஒரு நிலவரத்திலேயே லவோதிக்கேயா சபையும் காணப்பட்டது. ஆனால் அச்சபையார் கிருபையின் காலத்திலிருந்தபடியால் அவர்கள் அழிந்துபோகாதவாறு, மனந்திரும்ப வேண்டுமென்று தேவன் அவர்களைக் கடிந்துகொண்டு எச்சரித்தார். பிரியமானவர்களே, நம்முடைய நிலவரம் என்ன என்று நம்மை நாமே ஆராய்ந்து, நம் குறைகளைச் சரி செய்யும்படியாக, தேவன் லவோதிக்கேயா சபைக்கு விளம்பினதை நாம் தியானிக்கலாம்.

வெதுவெதுப்பான ஜீவியம்:

தேவன் லவோதிக்கேயா சபையாரைப் பார்த்து, "நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும்" (வெளி. 3 : 15) என்று கூறினார். அச்சபை குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருந்தபடியால் அதை அவர் தம் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவதாகச் சொன்னார். காரணம், அவர்கள் சுயதிருப்தியுள்ளவர்களாயிருந்து, தங்களுடைய சொந்த ஆவிக்குரிய நிலவரத்தை அறிந்துகொள்ள முடியாதிருந்ததே ஆகும். அவர்கள் ஆவிக்குரிய அனலையும் வைராக்கியத்தையும் இழந்துவிட்டனர். ஆகவே, அவர்களுக்குள் வாசம் பண்ண முடியாமல் கர்த்தர் வெளியே நின்றுகொண்டு, மறுபடியும் அவர்களோடு ஐக்கியங் கொள்ளும்படியாய் வாஞ்சித்து, அவர்களுடைய நிலவரத்தை உணர்த்திக்காட்டி, வாசற்படியிலே நின்று கதவைத் தட்டிக்கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். அதுபோல இன்றைக்கும் தேவ ஜனங்களில் சிலர் கர்த்தரைவிட்டுத் தூரமாய்ப் போயிருப்பினும், அன்புள்ள கர்த்தர் அவர்களை மறுபடியும் தேடிவந்து, அவர்களுடைய இருதயக் கதவைத் தட்டிக்கொண்டிருக்கிறார். கர்த்தராகிய இயேசு கூறிய உவமைகளில் ஒன்றில் மூன்று வருஷமாய் அத்திமரத்திலே கனியைத் தேடி எஜமான் வந்தான். ஒன்றையுங் காணாததால் அது நிலத்தையும் கெடுக்காதவாறு அதை வெட்டிப்போடும்படி அவன் தோட்டக்காரனிடம் கூறினான். ஆனால் கனி கொடாத அந்த மரத்தின்மேல் இரக்கம் வைத்து, "இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலுங் கொத்தி, எருப்போடுவேன், கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம்" என்று தோட்டக்காரன் கூறினான் (லூக்கா 13 : 6 - 9). இவ்வுவமையிலிருந்து, ஒரு கால வரம்பிற்குட்பட்டே தேவன் நம்மேல் பொறுமையாயிருக்கிறார் என்று நாம் அறிந்துகொள்ளலாம். "இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன்" (வெளி. 3 : 16) என்று தேவன் கூறுகிறார். தேவன் நம்மை வெட்டிப்போடும் முன்னமே, அவர் தமது வாயிலிருந்து நம்மை வாந்திபண்ணிப்போடும் முன்னமே நாம் மனந்திரும்புவோமாக.

நிர்ப்பாக்கியமுள்ளவன்:

ஒருவனுடைய ஜீவியத்தில் கிறிஸ்து வாசமாயிராவிட்டால் அவனுடைய நிலவரம் நிர்ப்பாக்கியமே. ரோமர் 7 : 19, 24 - இல் அப். பவுல், "நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன். ... நிர்ப்பந்தமான மனுஷன் நான் ! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்" எனக் கூறுகிறார். தான் விரும்புகிற நன்மையைச் செய்யக் கூடாதபடிக்கு அவரைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணம் ஆளுகை செய்திருந்த ஒரு காலத்தைக் குறித்து அவர் அவ்விதம் கூறினார். இன்றும் சிலர், 'நான் நன்றாக ஜெபம்பண்ண விரும்புகிறேன். ஆனால் ஜெபம்பண்ணும்போது பலவிதமான வீணான சிந்தனைகளும், தூக்கமும் வந்து ஜெபம்பண்ண முடியாமற்போய் விடுகிறதே' என்றும், 'கர்த்தருக்கென்று பரிசுத்தமாய், அவருக்குப் பிரியமாய் ஜீவிக்க வேண்டுமென வாஞ்சித்தும் முடியாமல் கர்த்தரைத் துக்கப்படுத்தி ஜீவிக்கிறேனே' என்றும், 'ஆவிக்குரியவனாக ஜீவிக்க விரும்புகிறேன் ; ஆனால் மாம்சீக சிந்தையுள்ளவனாய், மாம்சீக சுபாவம் உள்ளவனாய், மாம்சீக கிரியைகளை வெளிப்படுத்தி ஜீவிக்கிறேனே' என்றும் அங்கலாய்த்து வேதனைப்படுகின்றனர்.

தேவ பிள்ளையே ! உன்னுடைய சொந்த பெலத்தினாலும் ஞானத்தினாலும் கிறிஸ்தவ ஜீவியம் செய்ய முடியாது என்பதை நீ அறிந்துகொள்ள வேண்டும். "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும்" (சக. 4 : 6) என்ற வசனத்தின்படி தேவ ஆவியின் பெலத்தினால் மாத்திரமே அது சாத்தியமாகும். "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே" என நாம் ரோமர் 8 : 2 - இல் வாசிக்கிறோம். ஆகவே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடந்து, ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்திற்குட்பட்டு ஜீவிப்போமென்றால் கிறிஸ்து நமக்குள்ளே வாசமாயிருந்து, ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தினாலே நம்மை ஆளுகை செய்து, நிர்ப்பந்தமான நிலைமையிலிருந்து நம்மை விடுதலையாக்கி, நாம் கர்த்தருக்கென்று பரிசுத்தமாகவும் அவருக்குப் பிரியமாகவும் ஜெயங்கொண்டவர்களாகவும் ஜீவிக்க நமக்கு உதவி செய்வார்.

பரிதபிக்கப்படத்தக்கவன் :

"இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்" என நாம் I கொரிந்தியர் 15 : 19 - இல் வாசிக்கிறோம். அதாவது, இனி வரப்போகும் நித்திய ராஜ்யத்தின் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காகக் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையாயிராமல் அழிந்துபோகும் இந்த உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்கள், தேவைகளுக்காக மாத்திரம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையாயிருப்பவர்களின் நிலவரம் மிகவும் பரிதாபமே. இன்றைய கிறிஸ்தவ உலகத்திலும் அநேக கிறிஸ்தவர்கள் பூமிக்குரிய சில ஆசீர்வாதங்கள், பணம், பொருள், கல்வி, வேலை, ஸ்தானம், நிலம், வீடு, விவாகம் இவைகளுக்காக மாத்திரமே கவலைப்பட்டு, அவற்றிற்காக மட்டும் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை வைத்து ஜீவிப்பதையும், ஜெபம்பண்ணுவதையும், அவற்றை நாடித் தேடுவதையும் அவற்றிற்காகப் பிரயாசப்படுவதையும் நாம் காண்கிறோம். இவர்களுடைய ஜீவியத்தில் கிறிஸ்து வாசமாயிருப்பதில்லை. ஏனெனில் இவர்களுடைய வாஞ்சைகள், நாட்டங்கள் எல்லாம் இப்பூமிக்குரிய காரியங்களின் மேலேயே உள்ளன. இவர்கள் மகிமையான உயிர்த்தெழுதலைப் பெற்று, இனிவரப்போகும் நித்திய ராஜ்யத்தில் உன்னதமான இடமாகிய புதிய எருசலேமில் காணப்பட வேண்டும் என்ற வாஞ்சை அற்றவர்கள். இவர்கள் பரிதபிக்கப்படத்தக்கவர்களாவர். இந்நிலவரத்திலிருக்கிறவர்கள் அதினின்று விடுதலை பெறும்படி மேலானவைகளாகிய நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாட வேண்டும். விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடி, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படியாகவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (I தீமோ. 6 : 11, 12). ஆகவே நாம் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால் கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளையே நாடித் தேடுவோமாக (கொலோ. 3 : 1, 2).

தரித்திரன் :

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது தரித்திரமுள்ளதாக அல்ல, ஆவிக்குரிய எல்லா ஆசீர்வாதங்களிலும் ஐசுவரியமுள்ளதாக இருக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். ஆனால் லவோதிக்கேயா சபையானது உலகப்பிரகாரமான ஐசுவரியங்கள், திரவியங்கள் ஆகியவற்றால் நிறைந்திருந்தும் ஆவிக்குரிய ஜீவியத்தில் தரித்திரமான நிலவரத்தில் இருந்தது. கிறிஸ்துவே சபையின் ஐசுவரியமாயிருக்கிறார். ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னை வாங்கிக் கொள்ளும்படியாய்க் கர்த்தர் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார். இது, விசுவாசத்தின் சோதனைகளில் ஜெயம் பெற்று, விசுவாசத்தில் வல்லவர்களாகி, விசுவாசத்தில் ஐசுவரியவான்களாவதைக் குறிக்கிறது.

"அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும் ; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" என நாம் வாசிக்கிறோம் (I பேதுரு 1 : 7). சபையானது அக்கினிமயமான சோதனைகளின் வழியாகச் சென்று விலையேறப்பெற்ற விசுவாசத்தை உடையதாயிருக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார். ஆகவே அப். பவுல் தன்னைக் குறித்து, "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவகுமாரனுடைய (Eng.) விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" எனக் கூறுகிறார் (கலா. 2 : 20). ஆகையால் தேவனுடைய பிள்ளையே! நீ அக்கினி பரிசோதனை வழியாய்க் கடந்து செல்ல ஒப்புக்கொடுப்பாயானால் கிறிஸ்து உனக்குள் நிலைத்திருந்து உன்னை விசுவாசத்தில் ஐசுவரியமுள்ளவனாக்குவார் (யாக். 2 : 5). மேலும் அவர் கிருபை (எபே. 1 : 7), மகிமை (எபே. 1 : 18), இரக்கம் (எபே. 2 : 4), தயவு, பொறுமை, நீடிய சாந்தம் (ரோமர் 2 : 4) போன்றவற்றிலும் நம்மை ஐசுவரியமுள்ளவர்களாக்குகிறார்.

குருடன் :

இங்கே 'குருடன்' என்பது ஆவிக்குரிய மனக்கண் குருடாக்கப்பட்டிருப்பவர்களையே காட்டுகிறது. லவோதிக்கேயா சபையில் கிறிஸ்துவைப் பற்றியும், மேலான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பற்றியும், தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியங்களைப் பற்றியும் சரியான வெளிப்படுத்தல், தரிசனம் இல்லாதவர்கள் இருந்தார்கள். கர்த்தராகிய இயேசு தம்முடைய சீஷர்களிடம், "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள்" (மத். 13 : 16) என்று கூறினார். ஜீவனுள்ள தேவனைப் பற்றி அறிவில்லாமல் குருடராய் ஜீவிக்கிற அநேகர் இருப்பதுபோல, கிறிஸ்தவ ஜனங்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற அநேகரின் மனக்கண்களையும் பிசாசானவன் குருடாக்கி வைத்திருக்கிறான். ஆகவேதான் II கொரிந்தியர் 4 : 4 - இல், "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" என நாம் வாசிக்கிறோம். அவர்களுக்கு எவ்வளவுதான் ஆழமான உபதேசங்களையும் மகிமையான சுவிசேஷங்களையும் எடுத்துரைத்தாலும் அவர்களால் அதை விளங்கிக்கொள்ளக்கூடாதபடிக்கு அவர்களுடைய மனக்கண்கள்

குருடாக்கப்பட்டிருக்கின்றன. அந்நாட்களில் வேதபாரகரும் பரிசேயரும் தங்களுடைய பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனைகளை, உபதேசங்களை அவமாக்கியதுபோல இன்றும் மனுஷருடைய பாரம்பரியம், வழக்கம் இவற்றின்படி ஜீவிக்கிற மனக்கண் குருடாக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் பலர் உண்டு (மத். 15 : 3 - 6 ; 23 : 16 - 26). மேலும், தன் சகோதரனிடத்தில் அன்புகூராமல் அவனைப் பகைக்கிறவன் குருடனாயிருக்கிறான் (I யோவான் 2 : 11). அவர்களுடைய ஜீவியத்தில் கிறிஸ்து வாசமாயிருப்பதில்லை. நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருப்பார் (I யோவான் 4 : 12). ஒருவன் தன்னுடைய சொந்த நிலவரத்தையே அறியாமலிருப்பது மிகப் பெரிய வஞ்சனையாகும். அதுவும் ஒரு குருட்டாட்டமாகும். அருமையான நண்பனே ! நீயும் உன் ஆவிக்குரிய கண்கள் குருடாக்கப்பட்ட நிலவரத்தில் ஜீவிப்பாயென்றால் உன் கண்கள் திறக்கப்படும்படியாகவும், பிரகாசமுள்ள மனக்கண்களைப் பெற்றுக்கொள்ளும்படியாகவும் தேவனிடத்தில் வேண்டிக்கொள்வாயாக.

தேவன் இச்சபையைப் பார்த்து, 'நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம் போட வேண்டுமென்று' ஆலோசனை கூறுகிறார். 'கலிக்கம்' மனத் தெளிவை அல்லது தெளிந்த புத்தியைக் குறிக்கிறது. உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசுவை அறியாதவர்களாகவே அவருடைய சீஷர்களில் இருவர் அவருடன் பேசிக்கொண்டும், நடந்துகொண்டும் வந்து, அவரோடு பந்தியிருந்தனர். ஆனால் வேத வாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனக்கண்களை அவர் திறந்தபோதுதான் அவரை அவர்கள் அறிந்துகொண்டனர் (லூக்கா 24 : 31, 32, 45). எபேசு சபையார் அவருடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்று அறியும்படிக்கு அவர்களுக்குப் பிரகாசமான மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்று அவர்களுக்காக அப். பவுல் வேண்டிக்கொண்டார் (எபே. 1 : 17 - 19).

நிர்வாணி :

"உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண் வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், ... உனக்கு ஆலோசனை சொல்லு கிறேன்" என்று தேவன் லவோதிக்கேயா சபைக்குச் சொல்லுகிறார் (வெளி. 3 : 18). வெண்வஸ்திரம் என்பது பரிசுத்தவான்களுடைய நீதிக்கிரியைகளே (வெளி. 19 : 8). ஒருவனுடைய ஜீவியத்தை விட்டுக் கிறிஸ்து வெளியே இருப்பாரென்றால் அவன் நிர்வாணியே. ஏனெனில் கிறிஸ்துவே நம்முடைய நீதியாயிருக்கிறார் (I கொரி. 1 : 31). பாவத்தில் விழுந்து நிர்வாணியாக்கப்பட்ட மனுஷனைத் தூக்கியெடுத்து, தம்முடைய நீதியால் அவனை உடுத்துவித்து, அவனை நீதியின் பூரணத்தை அடையச் செய்து தம்மோடுகூட ஆளச் செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அப். பவுலும், "நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், ... கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்" என்று கூறுகிறார் (பிலி. 3 : 9). ஆகவே, விசுவாசத்தினின்று விசுவாசத்திற்குக் கடந்து சென்று தேவ நீதியின் பூரணத்தை அடைந்து, கிறிஸ்துவை நம்முடைய ஜீவியத்தில் நாம் சொந்தமாக்கிக்கொள்வோமாக!

அருமையானவர்களே ! கர்த்தர் நம்மைத் தம்முடைய வாயினின்று வாந்திபண்ணிப் போடாத படிக்கு நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் உள்ள வெதுவெதுப்பான அனுபவங்களை விட்டு விட்டு, நம்முடைய இருதயக் கதவைத் தட்டிக் கொண்டிருக்கும் நம்முடைய நேசர் இயேசுவின் சத்தத்தைக் கேட்டு, மனந்திரும்பி, கர்த்தருடைய ஆவியானவருக்கு முற்றிலுமாய் நாம் ஒப்புக்கொடுத்துக் கீழ்ப்படிவோமென்றால் கிறிஸ்து மீண்டும் நமக்குள் பிரவேசிப்பார். நம்மை அவர் அனலுள்ளவர்களாகவும், தேவவைராக்கியமுள்ளவர்களாகவும், உன்னதமான ஆவிக்குரிய அனுபவங் களுள்ளவர்களாகவும் மாற்றுவதோடல்லாமல், நம்மை அவரைப்போல மாற்றி, ஜெயங்கொண்டவர்களாய் அவரோடுகூட சிங்காசனத்தில் வீற்றிருக்கவும் செய்வார்.

குர டீ□ர□□லு□ர □ளு□த□ □□ட□வுர

நான் ஒரு இந்துக் குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்டேன். நான் என் பள்ளிப் பருவத்தி லேயே கர்த்தராகிய இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவரே மெய்யான தேவன் என்று என் இருதயத்தில் உணர்த்தப்பட்டேன். எனினும் என் மனதும் மாம்சமும் விரும்பினதுபோல நான் ஜீவித்துவந்தேன். நான் பதினொன்றாம் வகுப்பு (+1) படித்துக்கொண்டிருந்தபோது ஒரு சுவிசேஷக் கூட்டத்தில் பங்கெடுக்கும் வாய்ப்பு எனக்கு உண்டாயிற்று. அக்கூட்டத்தில் என் பாவங்கள் உணர்த்தப்பட்டு, அவற்றை அறிக்கை செய்து, நான் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டேன். என்றாலும் நான் உலகப்பிரகாரமான சிநேகிதிகளுடன் சேர்ந்து, உலகத்தைச் சந்தோஷமாக அனுபவித்துக்கொண்டிருந்தேன். என் பெற்றோரின் அன்பைக் காட்டிலும், என் சிநேகிதிகளின் அன்பு எனக்குப் பெரிதாகத் தோன்றிற்று. அதினிமித்தம் என் படிப்பிலும் நாட்டமில்லாதவளாக நான் அதில் மிகவும் தாழ்ந்த நிலவரத்தில் காணப்பட்டேன். "உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை" (யாக். 4 : 4) என்ற வசனத்தின் மூலம் தேவன் என்னோடு பேசி, அடிக்கடி என்னை எச்சரித்துவந்தும் நான் அவரிடத்தில் திரும்ப மனமற்றவளாயிருந்தேன். பதினொன்றாம் வகுப்பு பரீட்சை முடிந்து தேர்வு முடிவு வெளிவரும் நாட்கள் சமீபித்தபோது நிச்சயமாய் நான் தோல்விதான் அடைவேன் என்று பயந்திருந்தேன். ஆயினும் தேவன்

எனக்கு இரங்கி நான் தேர்ச்சி பெறும்படி உதவி செய்தார். தேவன் எனக்கு இரங்கி, நான் தேர்ச்சி பெற உதவி செய்தபடியால், நான் அவருக்கு என்னை மீண்டும் ஒப்புக்கொடுத்து, 'என் ஜீவியகாலம் முழுவதும் உம்மையே அதிகமாக நேசிப்பேன். உம்மைப் பார்க்கிலும் அதிகமாய் வேறொருவரையும் நான் நேசிக்க மாட்டேன்' என்று தீர்மானித்தேன். மேலும் அந்நாட்களில் பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பற்றி என்னுடைய ஆசிரியை ஒருவர் எனக்குச் சொல்லித் தந்தார்கள். ஒருநாள் என் சகமாணவிகளுடன் சேர்ந்து நான் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தபோது கர்த்தர் என்னைப் பரிசுத்தஆவியின் அபிஷேகத்தால் நிறைத்தார்.அந்நாட்களில் தேவன் என் குடும்பத்திலும் கிரியை செய்ய ஆரம்பித்தார். என் தாயார் இந்து தெய்வங்களின் மேல் அதிக பக்தியுள்ளவர்களாயிருந்தார்கள். என் மூத்த சகோதரன் ஒருவர் திடீரென மரித்துப்போனதினிமித்தம் என் தாயார் இந்து தெய்வங்கள் மீது கொண்டிருந்த நம்பிக்கையை இழந்து போனார்கள். எங்கள் குடும்பத்திற்கு விரோதமாகச் சிலர் பில்லிசூனியம் செய்திருந்தார்கள். நான் சக மாணவிகளுடன் சேர்ந்து குடும்பத்திற்காக ஜெபித்தபோது, "பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது" (சங். 91 : 10) என்ற வசனத்தின் மூலம் கர்த்தர் என்னோடு பேசி, எங்கள் குடும்பத்தைப் பில்லிசூனியக் கட்டுகளிலிருந்து விடுதலையாக்கினார்.

நான் என் பள்ளிப் படிப்பு முடித்து வீட்டிலிருக்கையில் பெந்தெகொஸ்தே சபையைச் சேர்ந்த இருவர் எங்கள் வீட்டிற்கு வந்து எங்களுக்காக ஜெபம்பண்ணினார்கள். தேவன் என் பெற்றோரையும் சகோதரனையும் சந்தித்து, இரட்சித்தார். பல தடைகள் மத்தியிலும் நாங்கள் குடும்பமாகத் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்று இந்தச் சபையில் ஐக்கியப்பட கர்த்தர் எங்களுக்கு உதவிசெய்தார். என் தாயார் தன் சரீரத்தின் ஒரு பக்கம் செயலிழந்து படுக்கையிலானார்கள். எனினும் தேவஊழியர்களின் ஜெபத்தின் மூலம் கர்த்தர் அவர்களுக்குப் பூரண சுகம் தந்தார். நான் இச்சத்தியத்திற்குள் வருவதற்கு முன்பு எனக்கு அடிக்கடி வியாதி வந்தது. ஆனால் இந்த ஐக்கியத்தில் வந்தபின் எனக்கும் கர்த்தர் பூரண சுகம் தந்தார்.

1998 - ஆம் ஆண்டு நான் தேவனுடைய அழைப்பைப் பெற்று, இந்தக் கனமான ஊழியத்திற்கு என்னை அர்ப்பணித்தேன். என்னில் நற்கிரியையை ஆரம்பித்தவர் அதைக் கிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்பி நான் என்னை அவரிடம் ஒப்புவித்திருக்கிறேன். தம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டதை அந்நாள் வரை காக்க வல்லவராகிய அவருக்கே சகல கனமும் மகிமையும் உண்டாவதாக!

சகோதரி மார்கரெட்,
அடையாறு.

'✌⌖❄✂! ✡✂☸❍▪🡐 ❄✠☹⭘⏀⮳☆ ⧫⍓☠❍▪⌖☆!'

யுத்தம் ஓய்ந்தது. தேசத்தில் அமைதி நிலவியது. யார்யார் தங்கள் தேசத்தைப் பாதுகாக்கும்படியாக யுத்தத்தில் தங்கள் குமாரரைப் பறிகொடுத்தார்களோ அவர்களுடைய வீடுகளின் பலகணிகளில் (ஜன்னல்களில்) நட்சத்திரம் ஒன்று அடையாளமாகக் கட்டி வைக்கப்பட வேண்டுமென்று அமெரிக்காவின் பட்டணங்களில் பறைசாற்றப்பட்டது. அதன் காரணமாக பட்டணத்தின் பல வீடுகளின் பலகணிகளில் மின்னிப் பிரகாசிக்கும் வர்ண விளக்குகளுடன் நட்சத்திரங்கள் பல தொங்கவிடப்பட்டிருந்தன. அந்நாட்களில் ஓர் இரவு தகப்பன் ஒருவன் தன்னுடைய இளைய குமாரனை அழைத்துக்கொண்டு தெரு வழியே நடந்து சென்றான். அச்சிறுவன், பல வர்ணங்களில் ஆங்காங்கே பல வீடுகளில் மின்னிக்கொண்டிருந்த நட்சத்திரங்களைக் கண்டு பரவசமடைந்து தன் சிறு கைகளைத் தட்டி, 'ஆஹா! நட்சத்திரம்! அப்பா! நட்சத்திரம்!' என்று சந்தோஷத்தோடு கூறினான். தகப்பனும், ஆங்காங்கே நட்சத்திரங்கள் தொங்கவிடப்பட்டிருந்ததின் காரணத்தைச் சிறுவனுக்கு விளக்கிக் கூறினான். சிறுவன் மீண்டும் பரவசமடைந்து, 'அப்பா! அதோ ஒரு நட்சத்திரம்! இதோ ஒரு நட்சத்திரம்! அதோ அந்த வீட்டிலே இரண்டு நட்சத்திரங்கள்! ஒருவேளை அந்த வீட்டில் இரண்டு பேர் யுத்தத்திற்குப் போய், தேசத்திற்காகத் தங்கள் ஜீவனைக் கொடுத்திருப்பார்கள். அப்பா! இதோ, இந்த வீட்டில் நட்சத்திரமே இல்லை' என்றெல்லாம் சொல்லிக்கொண்டே நடந்து சென்றான். கடைசியாக அவர்கள் ஒரு வீட்டிற்கு வந்து சேர்ந்தனர். அந்த வீடு மிகவும் பழுதடைந்திருந்தபடியால், மேற்கூரையில் பெரிய இடைவெளி ஒன்று காணப்பட்டது. அந்த இடைவெளியின் வழியாக வானத்தில் மின்னிக்கொண்டிருந்த நட்சத்திரத்தைச் சிறுவன் கண்டு, 'அப்பா! அதோ பாருங்கள்! வானத்திலும் நட்சத்திரம்! தேவனும் தம்முடைய குமாரனைக் கொடுத்திருக்க வேண்டும். ஆகையினால்தான் அவருடைய பலகணியிலும் நட்சத்திரம் காணப்படுகிறது' என்றான். அச்சிறுவன் ஒன்றையும் அறியாமல் அப்படிக் கூறினாலும் அவன் கூறியது எவ்வளவு உண்மை!

ஆம். நமக்காகவுங்கூட ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார் (ஏசாயா 9 : 6). எதற்காக? முன்னே தேவனோடு உறவாடிக்கொண்டிருந்து, பின்பு பிசாசின் வஞ்சனையினால் தேவனை விட்டுப் பிரிந்து, தூரமாகப் போய், பாவத்திலும் சாபத்திலும் பிசாசின் பிடியிலும் அகப்பட்டுக்கொண்ட மனிதனை மீட்கும்படியாகவும், மீண்டும் அவனைத் தம்மோடு சேர்த்துக்கொள்ளும்படியாகவுமே அவர் அவரைத் தந்தருளினார். "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3 : 16). பிதாவின் அருகே செல்லப்பிள்ளையாகவும் நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாகவுமிருந்து எப்போதும் அவருடைய சமுகத்தில் களிகூர்ந்துகொண்டிருந்த, தேவாதி

தேவனின் ஏகசுதன், தூதர்களின் துதிகளைத் துறந்து, விண்ணின் மகிமையை விட்டிறங்கி, இயேசு என்னும் நாமத்தில் ஏழ்மையின் கோலமாய், தாழ்மையின் உருவமாய், தாரணிமீது தாவீதின் சுதனாக, யாக்கோபிலிருந்து உதிக்கும் நட்சத்திரமாகத் (எண். 24 : 17) தோன்றினார். இப்படி தம்முடைய ஒரேபேறான குமாரனைத் தேவன் இவ்வுலகத்துக்கு அனுப்பினதினால் அவர் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. வாலிபரே! தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம் (I யோவான் 4 : 11). மேலும் குமாரன் வந்து தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று நாம் அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். நம்முடைய சகோதரர் எத்தனையோ பேர் கிறிஸ்துவையும் கிறிஸ்து பிறந்ததின் நோக்கத்தையும் மேன்மையையும் அறியாமல் பாவத்தில் மூழ்கி மாண்டுகொண்டிருக்கின்றனர்; சிலர் வைத்தியர்களால் கைவிடப்பட்டு, தீரா வியாதியினால் மனவேதனையடைந்து மரணத்தை விரும்பிக்கொண்டிருக்கின்றனர்; பிசாசினால் பீடிக்கப்பட்டு விடுதலையின்றி வருத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். நண்பனே! கிறிஸ்து உன் உள்ளத்தில் பிறந்திருப்பதினால் நீ அனுபவித்துக்கொண்டிருக்கும் இரட்சிப்பை, விடுதலையை, ஆரோக்கியத்தை, சந்தோஷ சமாதானத்தை, இளைப்பாறுதலை, ஜெயத்தை உன் சகோதரருக்கு அறிவிக்கமாட்டாயா? நாம் நம் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோமே!

"தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" (ரோமர் 8 : 32). என்னவோர் நம்பிக்கையூட்டும் வாக்கியம்! தேவன் நம்மேல் வைத்த அன்பினால் தம்முடைய ஏக சுதனை, நேசக்குமாரனை நமக்காகக் கொடுத்தாரே! அப்படியானால் அவரோடுகூட மற்ற எல்லாவற்றையும் அவர் நமக்கு அருளாதிருப்பது எப்படி? என்னவோர் ஆச்சரியமான அன்பு! இணையற்ற இவ்வன்புக்கு ஈடாக நாம் அவருக்கு என்னத்தைச் செலுத்த முடியும்? "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல்" என்பது ஆங்கிலத்தில், தம் சொந்தக் குமாரனையுங்கூட தேவன் தமக்கென்று வைத்துக்கொள்ளாமல் ('spared not') என்று கூறப்பட்டுள்ளது. நாமுங்கூட நாம் மிக அதிகமாக நேசித்து நமக்கென்று சொந்தமாகக் கருதும் யாவையுங்கூட, தமக்கு அருமையான ஒரேபேறான குமாரனையே நமக்காகத் தத்தம் செய்தவருக்கென்று அர்ப்பணிப்போமாக. அந்த ஒரேபேறான குமாரன் தம் ஜீவனையும் நமக்காகத் தந்தபடியினால் நம் ஜீவனையும் அவருடைய சேவைக்கென்று நாம் அர்ப்பணிப்போமாக. அப்படியெனில், நாம் அவருடைய பார்வையில் அருமையானவர்களென கனம்பண்ணப்படுவோம். நம் ஜீவனுக்கு ஈடாக அவர் ஜனங்களைக் கொடுப்பார். இவ்விதம் ஆத்துமாக்களை நாம் இவ்வுலகில் கர்த்தருக்கென்று ஆதாயப்படுத்துவோமாகில், வரப்போகிற நித்தியத்தில் அநேகரை நீதிக்குட்படுத்தினவர்களாக, நட்சத்திரங்களைப் போல் சதாகாலமும் பிரகாசிப்போம் (தானி. 12 : 3).

போட்டி

கீழ்க்காணும் வினாக்களுக்கு 25 - 12 - '00 - க்குள் எம்மொழியிலும் பதில் எழுதி அனுப்பவும்.
வயது, வசன ஆதாரம் குறிப்பிடுக.

வேத வாசிப்புப் பகுதி : **ஒபதியா - மல்கியா, எபிரெயர் - வெளிப்படுத்தின விசேஷம்.**

1. யார் துரும்பாயிருப்பார்கள்? யார் வைக்கோல் துரும்பாயிருப்பார்கள்?
2. பூர்வகாலமுதல் தண்ணீர்த் தடாகமாயிருந்தது எது? தண்ணீரில்லாத கிணறுகளாயிருக்கிறவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கும் இடம் எது?
3. அவனவன் பிறனுடன் உண்மையைப் பேசுங்கள் என்று எங்கு எழுதப்பட்டுள்ளது? உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள் என்று எங்கு எழுதப்பட்டுள்ளது?
4. என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோஷப்படாதே என்று அங்கலாய்த்தது யார்? எவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து, நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்துகொள்வார்கள்?
5. வெளியிலுள்ள திராட்சக்கொடி பழமில்லாமற்போவதுமில்லை என்று சேனைகளின் கர்த்தர் எங்கே சொல்லியிருக்கிறார்? திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும் நாம் செய்ய வேண்டியது என்ன?
6. உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் எங்கே சொல்லியிருக்கிறார்? உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள் என்று எங்கு எழுதப்பட்டுள்ளது?
7. நீ முழு இருதயத்தோடும் மகிழ்ந்து களிகூருணி என்று யாருக்குக் கூறப்பட்டது? நான் துக்கத்தைக் காண்பதில்லை என்று தன் இருதயத்திலே எண்ணினவள் யார்?
8. மந்தையைக் கைவிடுகிற அபத்தமான மேய்ப்பனுக்கு ஐயோ!ணி என்று எங்கு எழுதப்பட்டுள்ளது? மந்தையை எவ்விதம் மேய்க்க வேண்டும் என்று அப்போஸ்தலன் கூறுகிறார்?

பதில் அனுப்ப வேண்டிய முகவரி :

பெந்தெகொஸ்தின் பேரொலி (இளைஞர் பகுதி), பெந்தெகொஸ்தே மிஷன்,
45 - A, 5 -ஆம் தெரு, பத்மநாப நகர், அடையாறு, சென்னை - 600 020.
போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குப் பரிசுகள் அனுப்பப்படும்.

1. I கொரி. 2 : 9,10 ; எபே. 2 : 10
2. தானி. 6 : 9,18 ; ஆமோஸ் 6 : 5
3. தானி. 5 : 12 ; II தீமோ. 2 : 7
4. யோவேல் 3 : 10 ; II கொரி. 12 : 10
5. ஓசியா 14 : 3 ; யோவேல் 2 : 13
6. ரோமர் 12 : 13 ; பிலி. 4 : 15,16
7. தீத்து 3 : 10,11 ; கலா. 6 : 3
8. II கொரி. 11 : 14,15 ; கலா. 1 : 6
9. I தெச. 1 : 9 ; I கொரி. 12 : 2
10. கொலோ. 4 : 10,11 ; பிலே. 7.

எருசலேமின் அலங்கமும் வாசல்களும்

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

குப்பைமேட்டு வாசல், பட்டண அலங்கத்தின் தென்கோடியில் இருந்த ஒரு சிறிய வாசல் ஆகும். நெகேமியாவும் யூத ஜனங்களும் இச்சிறிய வாசலையும் பழுதுபார்த்துக் கட்டினர். ஸீலோவாம் என்னும் குளத்திற்கு அருகிலிருந்த இவ்வாசல், இன்னோம் பள்ளத்தாக்கிற்குச் செல்வதற்கான வழியாக அமைந்திருந்தது. நகரத்தின் குப்பை இன்னோம் பள்ளத்தாக்கிற்கு வண்டிகள் மூலம் அனுப் பப்பட்டு, அங்கே சுட்டெரிக்கப்படுவது வழக்கம். இதனால் இது, ‘சாம்பல் குவியலின் வாசல்’ என்றும் அழைக்கப்பட்டது. இது எப்போதும் திறந்திராமல், சில சமயங்களில் மாத்திரம் அவசியத்திற்கேற்ப திறக்கப்படும்.

இக்குப்பைமேட்டு வாசலும் சத்துருக்களினால் தீக்கிரையாக்கப்பட்டது. ஆவிக்குரிய பிரகாரமாக ‘குப்பை’ என்பது யாது? அப். பவுல், “அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பை யுமாக எண்ணுகிறேன்” என்கிறார் (பிலி. 3 : 11). ‘எல்லாவற்றையும்’ என்பதில் அவர், முன்பு தனக்கு இலாபமாயிருந்தவைகளை, அதாவது 4 முதல் 6 வரையுள்ள வசனங்களில் காணப்படும், முன்பு அவருக்கிருந்த மாம்சீகமான மேன்மைபாராட்டல்களையே குறிப்பிடுகிறார். தன் முற்பிதாக்கள், தன் வம்சம், தன் குலம், தன் கல்வி, மாம்சத்தின் மேலுள்ள நம்பிக்கை, மனுஷரிடையே தனக்கிருந்த புகழ், தன் சன்மார்க்க ஜீவியம் - என்று இப்படியாகப் பல மேன்மைபாராட்டல்களை அவர் ஒருகாலத்தில் தன்னகத்தே கொண்டிருந்தார். ஆனால் கிறிஸ்து அவரைச் சந்தித்தபின், அவர் அவை அனைத்தை யும் நஷ்டமென்றும் குப்பையென்றும் எண்ணிப் புறம்பே தள்ளிவிட்டார்.

அப். பவுலின் சொந்த ஊராகிய தர்சு பட்டணம் சிலிசியாவின் தலைநகரமாகும். அது, வாணிபத்திலும் மற்றும் பல துறைகளிலும் சிறந்து விளங்கியதால், கீர்த்தி பெற்ற அப்பட்டணத்தைக் குறித்த பெருமை அவருக்கிருந்தது (அப். 21 : 39). அவருடைய குடும்பத்தினர் பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த பரிசேயராயிருந்தனர் (அப். 23 : 6). இதினிமித்தம் அவருடைய தகப்பனார், தங்கள் கோத்திரத்தின் மதிப்புக்குரியவனும், இஸ்ரவேலின் முதல் ராஜாவுமாகிய சவுலின் பெயரை அவருக்குச் சூட்டினார். ஒரு பக்திக்குரிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தமையால், நியாயப்பிரமாணத்திலும், எபிரெய மொழியிலும் அவர் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் தன் இளம் வயதில், எருசலேமிலிருந்த பிரசித்தி பெற்ற கமாலியேலின் பாதத்தில் இருந்து வேதப் பிரமாணங்களைக் கற்றுத் தேர்ந்தவர் (அப். 22 : 3). அந்நாட்களில் ரோம வல்லரசு தலையோங்கி நிற் கவே, தன் தகப்பன் வழியாகத் தான் பெற்றிருந்த ரோமப் பிரஜா உரிமையைக் குறித்தும் அதிகப் பெருமை அவருக்கிருந்தது. மேலும் தர்சு பட்டணத்தின் வீதிகளில் சாதாரணமாக வழங்கிவந்த கிரேக்க மொழியும் தனக்கு நன்கு தெரியும் என்ற மேன்மைபாராட்டலும் அவரில் இருந்துவந்தது. ஸ்தேவான் கொலை செய்யப்பட்டபோது அவரைக் கல்லெறிந்தவர்களோடு வாலிபனான அவரும் ஒத்துழைத்து, தன் யூத மார்க்கத்திற்காக வைராக்கியம் காண்பித்தபடியினால் பிரதான ஆசாரியரி டத்திலும் அவருக்கு நன்மதிப்பு உண்டாயிருந்தது. இவ்விதமாக எல்லாப் பக்கங்களிலும் பெருமை ஒரு சரப்பணியைப் போல அவரைச் சுற்றிக்கொண்டிருந்தது.

இவை யாவும் - தமஸ்குவுக்குப் போகும் வழியில் - அந்த மணல் நிறைந்த சாலையில் - நடுப்பகலி ல் - வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப் போன்ற முகத்தையுடைய ஆண்டவராகிய இயேசுவின் நேரடிச் சந்திப்பில் - பரலோகப் பேரொளி அவரைச் சந்தித்த அவ்வேளையில் - தெறிப்புண்டு போயின. சற்று நேர இடைவெளிக்குள் அவை அனைத்தும் அவருக்கு விலையற்ற வையாய் மாறிப் போயின ! அவரது வாழ்க்கையே முற்றிலும் திசை திருப்பப்பட்டு விட்டது. சற்று முன்பு வரை இலாபமாய்த் தோன்றியவைகள் சிறிது நேரத்திற்குள்ளாக பயனற்றவையாய், வெறுமையா னவையாய் அவருக்குத் தோற்றமளித்தன ! அனைவரிடத்திலும் தனக்கிருந்த செல்வாக்கோடும் பெருமிதத்தோடும் மத வைராக்கியத்தோடும், ஒரு பெரிய உத்தரவாதத்தை நிறைவேற்றப்போவதாகத் தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் வீரநடைபோட்டுக் கொண்டிருந்த அவ்வாலிபன், சர்வவல்ல வரின் சந்திப்பில் அவர்முன் நிற்கக் கூடாதவனாய் நடுங்கித் திகைத்துப் போனான். கர்த்தராகிய இயேசு

வின் கல்வாரியின் முன் தன் அனைத்துப் பெருமைகளையும் இறக்கிவைத்து, முற்றிலும் அவர் பாதம் சரணடைந்து விட்டான் சவுல் என்னும் வாலிபன் ! ஆம் ! அதுமுதல் சவுல் பவுலாக மாறினார்.

பவுல் என்னும் பதத்திற்கு 'மிகவும் சிறியவன்' என்று பொருள். அதுவரை தன் பெயரும், ஊரும், கல்வியும், ஸ்தானமும், வம்சமும் தன்னைப் பெரியவன் என்று சுட்டிக் காட்டிக் கொண்டிருக்க, பெருமிதமாய் நடந்துவந்த அவ்வாலிபன் அவற்றையெல்லாம் குப்பையென உதறித் தள்ளிவிட்டு, தனக்காகப் பரலோக மேன்மைகள் யாவையும் துறந்தவரும், தலைசாய்க்க ஸ்தலமில்லாதவராய்த் தரணியில் சஞ்சரித்தவருமான கிறிஸ்துவைப் பின்பற்றலானார். ரோமச்சிறையில் கிறிஸ்துவினிமித்தம் கட்டுண்டவராக இருந்தபோது பிலிப்பிய சபையாருக்கு எழுதிய நிருபத்தில், இதையே அவர், "எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். ... அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்" எனக் குறிப்பிடுகிறார் (பிலி. 3 : 7, 11). 'குப்பையுமாக எண்ணுகிறேன்' என அவர் நிகழ் காலத்தில் கூறுவதைக் கவனிக்கவும். தமஸ்குவின் சாலையில் கர்த்தராகிய இயேசுவோடுள்ள அவர்தம் சந்திப்பு அவரது வாழ்வின் திருப்புமுனையாக அமைந்து விட்டது. அன்றுமுதல் ரோம இராயனின் வாளுக்கு இரையாகும் கடைசி நிமிடம் வரை அவர் அவற்றைக் குப்பையாகவே எண்ணிக்கொண்டிருந்தார். அருமை நண்பனே ! உன் ஜீவியத்தில் நீ கர்த்தரிடத்தில் திரும்பியபோது குப்பையாக எண்ணியவைகளை இன்றும் குப்பையாகவே எண்ணிக்கொண்டிருக்கிறாயா? அல்லது அவற்றை மேன்மையானவைகளாக எண்ணி, அவற்றைத் திரும்பிப் பார்க்கிறாயா? ஆரம்பத்தில் நீ விட்டுவிட்டவைகளைக் குறித்த இப்போதைய உன் மதிப்பீடு என்ன?

"இரத்தாம்பரம் உடுத்தி வளர்ந்தவர்கள் குப்பைமேடுகளை அணைத்துக்கொள்ளுகிறார்கள்" என சிறைப்பட்டுப் போன சீயோன் குமாரத்தியின் நிலவரத்தை எண்ணித் தீர்க்கதரிசி புலம்புகிறான் (புல. 4 : 5). ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இரத்தாம்பர ஆடை அணிவது வழக்கம். ஆகவே ராஜ வஸ்திரமாகிய இரத்தாம்பரம், தேவ நீதியையும் ராஜரீகத்தையும் குறிக்கிறது. தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்குத் தேவன் இரட்சிப்பின் ஒவ்வொரு படியிலும் ராஜரீக வஸ்திரங்களை உடுத்துவிக்கிறார்; அதாவது, தேவ நீதியால் நாம் தரிப்பிக்கப்படுகிறோம். ஆனால் நாமோ நாளடைவில் அந்த மேன்மையான அனுபவங்களை இழந்து, நாம் விட்டுவிட்ட காரியங்களை மீண்டும் பற்றிக்கொள்வோமாகில், குப்பைமேடுகளை அணைத்துக்கொள்ளும் பரிதாப நிலையில் காணப்படுகிறவர்களாயிருப்போம். ஒருகாலத்தில் ராஜ வஸ்திரம் தரித்து, அரமனையில் வாழ்ந்த ஒருவன், இப்போது குப்பைமேடுகளை அணைத்துக்கொண்டு கிடப்பானென்றால் அது எவ்வளவு பரிதாபமான காட்சியாயிருக்கும் !

இரத்தாம்பரம், சிவப்பும் நீலமும் கலந்த ஒரு விலையுயர்ந்த வஸ்திரமாகும். இது, கிறிஸ்துவின் மேலுள்ள அன்பினால் பாடுபடுதலைக் குறிக்கிறது. ராஜகுமாரத்தி அணிந்திருக்கும் சித்திரத்தையலாடையும் இவ்வனுபவத்தையே குறிக்கும் (சங். 45 : 14). நாம் பரிசுத்தஆவியின் அபிஷேகம் பெற்ற ஆதி நாட்களில் நமக்கிருந்த இந்த அனுபவம், இன்றும் நம்மில் நிலைத்திருக்கிறதா என்று சற்று நிதானித்துப் பார்ப்போமாக. அப். பவுல் தன் ஜீவியகாலமெல்லாம், "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே" (ரோமர் 8 : 36, 37) என்று சவால் விடுக்கிறவராயிருந்தார். ஆரம்பத்தில் அவர் எவைகளைக் குப்பையாகக் கணித்தாரோ, அவை யாவும் முடிவுபரியந்தம் அவருடைய பார்வையில் குப்பையாகவே தென்பட்டன. "மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது" (லூக்கா 16 : 15). நண்பரே ! மனுஷரின் மதிப்பீட்டினால் மயங்கிப் போகாதீர் ! தேவனுடைய பார்வையில் மேன்மையாய்க் காணப்படுகிறவைகளையே அணைத்துக்கொள்வீராக ! "உங்கள் பேரை நினைக்கப்பண்ணும் அடையாளங்கள் சாம்பலுக்குச் சரி; உங்கள் மேட்டிமைகள் சேற்றுக் குவியல்களுக்குச் சமானம்" (யோபு 13 : 12). மனுஷரின் புகழ்ச்சியை அணைத்துக்கொள்வீராயின், அது சேற்றுக்குவியல்களை அணைத்துக் கொள்வதற்குச் சமம் ! சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது (I பேதுரு 3 : 4). அதுவே நம்முடைய பார்வையிலும் விலையேறப்பெற்றதாய்க் காணப்படட்டும் !

இரத்தாம்பர நூல், சாலொமோனின் ஆலயத் திரைகளிலும், ராஜ வஸ்திரங்களிலும், ஆசாரியனின் ஏபோத்திலும், விசித்திரமான கச்சையிலும், நியாயவிதி மார்ப்பதக்கத்திலும், ஏபோத்தின் கீழங்கியிலும் உபயோகிக்கப்பட்டது. நண்பனே ! தேவன் உன்னை ஆவிக்குரிய ஜீவியத்தில் மேன்மையான உன்னத நிலவரத்தில் வைக்கச் சித்தங்கொண்டிருக்கும்போது, நீ அற்ப காரியங்களின் மேல் நாட்டங்கொண்டிருப்பதென்ன? நீ மேன்மையாக எண்ணுகிற இப்பூமிக்குரிய அந்தஸ்துகளும் புறம்பான அலங்கரிப்பும் பரலோகத்தின் மேன்மைகளுக்கு ஈடாகுமோ? இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது. பரலோக மேன்மையையும் பூவுலகப் பெருமைகளையும் ஒன்றாக அணைத்துக்கொள்வது சாத்தியமானதல்ல. ஒன்றில், சாலொமோனின் ஆலயத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் மகிமையான திரையாக நீ காணப்பட வேண்டும். அல்லது, குப்பைமேடுகளைத் தெரிந்துகொள்ள வேண்டும் ! ஒன்றில், ராஜ அரண்மனையின் உன்னத அனுபவங்களில் நீ காணப்பட வேண்டும்; இல்லையேல், சேற்றுக் குவியல்களைச் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும் ! தன் தகப்பன் வீட்டில் செல்வாக்காய் வாழ்ந்துவந்த

இளைய குமாரன், உலகச் சிற்றின்பங்களைத் தெரிந்து கொண்டபடியினால் பன்றிகளோடு சுற்றித் திரிய வேண்டியதாயிற்று ! தகப்பன் வீட்டின் மேன்மை களையும், உலக சிற்றின்பங்களையும் ஒருமித்து அனுபவிக்க இயலாதே ! தேவபிள்ளைகளாகிய நாம் நம் மேன்மையான அழைப்பை உணர்ந்து, மேன்மையானவைகளில் நம் கண்களைப் பதிப் போமாக. பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக நாம் இலக்கை நோக்கித் தொடருவோமாக.

ரோமருக்கு எழுதிய நிருபத்தின் விளக்கவுரை

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

"மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே. ஆகையால் கிறிஸ்துவுடனே கூட நாம் மரித்தோமானால், அவருடனே கூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்" (6 : 7, 8).

மரித்த ஒருவன் தான் முன்பு செய்துவந்த எல்லாப் பாவங்களுக்கும் நீங்கலாயிருப்பதுபோல, கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்ட இந்த மூன்று அனுபவங்களோடு நம்முடைய ஜீவியத்தையும் ஒப்பனையாக்கிக்கொள்ளும்போது, நாமுங்கூட பாவ சுபாவத்திற்கு மரித்தவர் களாய், பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம் என்று வேதாகமம் கூறுகிறது. இதை ஜெய ஜீவியத்தின் ஆரம்பம் என்றும் நாம் கூறலாம்.

ஆகையால் கிறிஸ்துவின் பாடு, மரணம், அடக்கம் இம்மூன்றிற்கும் நம்மை ஒப்பனையாக்கிக் கொள்ளும்போது கிறிஸ்து பரிசுத்தஆவியினால் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தது போல நாமும் அதே அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ளும்போது உயிர்த்தெழுதலின் அனுபவத்தை நமக்குள் அடைந்துகொள்கிறோம். 'பிழைத்தும் இருப்போம்' என்று சொல்லியிருப்பதின் கருத்து, விபத்தில் உயிர் பிழைத்த மனுஷன் மறுபடியும் புதிதான ஜீவனை அடைந்து கொஞ்சம் கொஞ்சமாகத் தேறி பூரண சுகதேகியாய் காணப்படுவது போல நாமும் இந்த உயிர்த்தெழுதலின் அனுபவத்தைப் பெற்று அதில் வளர்ந்து நித்திய ஜீவனின் முடிவாகிய அழியாமையை அடைந்துகொள்கிறோம் என்பதே.

"மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை" (6 : 9).

கிறிஸ்து ஒருமுறை உயிர்த்தெழுந்தபின்பு அவர் திரும்ப மரிக்கவில்லை. அவர் எல்லாருக்காகவும் மரணத்தை ருசிபார்க்க வேண்டியதிருந்தபடியால் அவர் ஒருமுறை மரிக்க வேண்டியதாயிற்று. அவர் உயிர்த்தெழுந்தபோதோ மரணத்தை முற்றிலும் பரிகரித்தவராய், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். ஆகையால் மரணத்திற்கு அவர்மேலிருந்த ஆளுகை நீக்கப்பட்டது அல்லது பரிகரிக்கப்பட்டாயிற்று. அதுமாத்திரமல்ல, மரணம் பரிகரிக்கப்பட்டதினால் எக்காரணத்தைக்கொண்டு மரணம் உண்டானதோ அக்காரணமாகிய பாவமும் பரிகரிக்கப்பட்டாயிற்று என்பதையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். ஆனபடியினால் இதை விசுவாசிக்கிற ஒவ்வொருவரும் மரணத்தின் வல்லமையிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்களென்பது மாத்திரமல்ல, மரணத்தைக் கொண்டுவருவதற்கு ஏதுவாயிருந்த பாவத்தின் வல்லமையினின்றும் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதே இதன் கருத்து.

அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக் கென்று பிழைத்திருக்கிறார்" (6 : 10).

கிறிஸ்து நம்மைப் பாவத்தினின்று விடுதலையாக்கும்படி நம்முடைய பாவங்களைத் தம்மேல் சுமந்து ஒரேதரம் மரித்தார். 'தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்' என்பதின் கருத்து, தேவனுடைய நீதி நம்மேல் பூரணமாய் விளங்கும்படி அவர் ஜீவிக்கிறார் என்பதே.

"அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக" (6 : 11, 12).

மேற்கூறிய சத்தியங்கள் உபதேசங்களாகப் பிரசங்கிக்கப்பட்டாலும், இதை முற்றிலும் நாம் விசுவாசித்து இதை ஓர் ஆவிக்குரிய அறிவாக நம்முடைய மனதில் அடைந்துகொள்ளாவிட்டால் இது வெறும் கதையைப் போலவும், ஜீவனற்ற உபதேசமாகவும் காணப்படுமேயன்றி ஆத்துமாவில் யாதொரு பயனையும் உண்டாக்காது. இக்காரணத்தைக்கொண்டே இதை நாம் உபதேசமாகப் பெற்ற பின்னர் விசுவாசத்தினால் அவைகளை நம்முடைய ஆத்துமாவில் ஏற்றுக்கொண்டு, ஆவிக்குரிய அறிவாகவும் நம்முடைய மனதிற்கொள்ள வேண்டும். இதற்காகவே 'எண்ணிக்கொள்ளுங்கள்' என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது.

கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தது போல, நாமும் மேற்கூறிய உபதேசத்தின் மூலமாய் நம்மை அந்தப் பாவங்களுக்கு மரித்தவர்களாகவும் கிறிஸ்து தேவனுக்கென்று பிழைத்திருக்கிறது போல நாமும்கூட தேவனுடைய நீதியை வெளிப்படுத்தும்படியாய் பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுகிற இந்த அறிவை நம்முடைய மனதில் கொண்டு வரவேண்டும். இப்படிப்பட்ட ஒரு அறிவை அடைந்துகொள்வதின் மூலமாகவே, பாவம் நம்முடைய சரீரங்களில் ஆளுகை செய்யாதவாறு தடுத்து நிறுத்தப்படுகிறது. இதையே 'ஆளாதிருப்பதாக' என்று அப். பவுல் எழுதுகிறார். ஏனெனில்

பொதுவாக பாவம், நம்முடைய அவயவங்களில் வாசமாயிருப்பது மாத்திரமல்ல, நம்முடைய அவயவங்கள் பாவத்தைச் செய்யும்படியாய் அது நம்மை நிர்ப்பந்திக்கிறதுமாயிருக்கிறது; அல்லது ஒரு ராஜாவைப் போல சரீரத்தின் அவயவங்களில் ஆளுகை செய்து, முழுச் சரீரத்தையும் பாவத்திற்குக் கீழ்ப்படுத்துகிறது. ஆனால் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறோம் என்ற சிந்தனையினாலேயே மாம்சத்தில் வாசம்பண்ணும் பாவத்திலிருந்து நாம் விடுதலையாக்கப்படுகிறோம்.

******